T D R C 2167
R R No 198 4-1995
vol II
திரிகூடராசப்ப
கவிராயர்

Q6
N05
118939

# WITH CHRIST

## IN THE SCHOOL OF PRAYER

**Thoughts on our Training for the Ministry of Intercession**

198
4.1105

BY

REV. ANDREW MURRAY

TRANSLATED BY

REV. N. DEVASAHAYAM, B.A.

*L. E. L. M.*

OFFICE OF THE REGIST[RAR]
REGISTERED
7 DEC 1905
MADRAS.

*"Lord, teach us to pray"*

MADRAS
THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY
1905

198
4-1905
22-3-2
267

2

# கிறிஸ்துவின் ஜெபப் பாடசாலை

நம்மை ஜெபவூழியத்திற்கு ஆளாக்குகிற தியானங்கள்

இயற்றினவர்
அந்திரேயா மரே போதகர்

மொழிபெயர்த்தவர்
ஞா. தேவசகாயம் போதகர்

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்"

சென்னபட்டணம்
சன்மார்க்க சிறுபுத்தக சங்கத்தாரால்
பதிப்பிக்கப்பட்டது
௧௯௦௫

Q6 NO5

118939



# மொழிபெயர்த்தவர் முகவுரை.

இந்த நூலைத் தமிழில் திருப்புவதற்கு நான் சம்மதித்த காலத்தில் ஆழமறியாமல் ஆழியில் இறங்கினவனைப்போல் இருந்தேன். ஆங்கிலத்தில் நுண்ணிய பொருளைத் திண்ணென அடைந்துச் சுருள மடித்த வாக்கியங்களை தமிழிலாக்கல் எளிதன்று. வச்சிரமலையைக் குச்சியினால் உடைக்கலாமா? நம் தமிழ்த்தேசத்துச் சாஸ்திரமொழிகள் கிறிஸ்தவ ஆழ்ந்த ஜீவியத்தை விளக்கப் போதுமானவையல்ல என்பதை அநுபவத்தால் கண்டேன். சிறிது தூரம் சென்றவுடன் மொழிபெயர்ப்பை நிறுத்திவிட எண்ணினேன். ஆயினும், ஞானஜீவ இரகசியம் முழுமையும் ஜெபமே என்பதைப் பலமுகப்படுத்தித் தெளிவிக்கிற இந்த அருமையான நூலை எப்படியாகிலும் நந்தமிழ் நாட்டிற்குக் கிடைப்பிக்கவேண்டுமென்கிற பேராவல்தூண்ட, எனக்குப் பன்முறை வந்த மனத்தளர்ச்சியைத் தள்ளி, இரண்டா வருஷங்களைப்பிடித்து, ஒருவாற்றால் எடுத்த கருமத்தை முடித்தேன். அதற்குத் தேகபலமும் மனோபலமும் உதவின நம் இயேசுபெருமானுக்கு அநந்தம் துதி சாற்றுகின்றேன்.

"கிறிஸ்துவில் நிலைத்திரு" என்னும் நூல் செய்தவரே இந்நூலும் செய்தவர். ஆங்கிலத்தில் அவர் இவைபோல் இன்னும் பன்னூல்கள் இயற்றியிருக்கின்றார். அவருடைய நூல்கள் மிக ஆழ்ந்தவையாதலால் அவைகளை அவசரத்தில் படிக்கிறதினால் பயனிராது. பதவிய மனதினால் தியானித்து அவைகளைப் படிக்கவேண்டும்.

மாதம் முப்பத்தொரு தேதிக்கும் முப்பத்தொரு ஜெபப் பாடங்கள் இதில் இருக்கின்றன. வாசிக்கிறவர்களே மாணாக்கர். இயேசு பெருமானே உபாத்தியாயர். அந்த மகோபாத்தியாயரிடத்தில் பாடம் கேட்டு நந்தமிழ் நாட்டாரெல்லாரும் ஜெபவல்லவர்களாக வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

ஞானமுத்து தேவசகாயம்.

## நூலாசிரியர் முகவுரை.

'என்னில் நிலைத்திருங்கள்' என்கிற கட்டளையுடன் கூடியிருக்கிற எல்லா வாக்குத்தத்தங்களிலும் "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்பதைவிட உயர்த்தியானது ஒன்றுமில்லை. "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறிவிட்டேன்" என்று எவனும் துணிந்து சொல்லவொட்டாமல் வாயடைப்பதற்கும் அதைப் போல வேறில்லை. தேவனிடத்தில் வல்லமையுடைமையே பரிபூரண நிலைத்திருக்கையுள்ள ஜீவியமானது பெற்றிருக்கிற உச்சிப்பேறு.

கிறிஸ்துவுக்கு ஒத்த ஜீவியத்தின் இலக்ஷணங்களில் எல்லாம் அவர் இப்போது பிதாவின் சந்நிதானத்தில் ஓயாமல் செய்துவருகிற சர்வவல்லமையுள்ள வேண்டுதலில் ஒற்றுமையுடைமையே பெரியது. அதிலும் பெரிதும் மகிமையுமான இலக்ஷணம் வேறில்லை. நாம் எவ்வளவுக்கு அவரில் நிலைத்திருந்து அவருடைய சாயலில் தேறுகிறோமோ அவ்வளவுக்கு அவருடைய ஆசாரிய ஜீவன் நமக்குள் வல்லமையாய் வேலைசெய்வதினால், என்றும் மனிதருக்காக மன்றாடிச் சித்தியடைகிற அவருடைய ஜீவியம்போல் நம்முடைய ஜீவியம் மாறிவிடும்.

"எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களும் ஆக்கினீர்" இராஜா, ஆசாரியன், இவ்விருவருக்கும் முக்கியமாய் இருக்கவேண்டியது வல்லமை, அதிகாரம் செலுத்துகை, நன்மைசெயல், இவை முதலியன. இராஜாவுடைய வல்லமை உயரவிருந்து தாழ இறங்குவது; ஆசாரியனுடைய வல்லமை தாழவிருந்து உயர ஏறி தேவனிடத்தில் பலிப்பது. நமக்குரிய ஆசாரிய ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்கு இருக்கிற இராஜவல்லமை ஆசாரிய வல்லமைமேல் ஊன்றி நிற்கிறது. "வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர், ஆகையால், அவர்களை முற்ற முடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார்." அவர் ஏற்படுத்தியிருக்கிற ஆசாரியர்களும் இராஜாக்களுமாகிய நமக்கு இருக்கவேண்டிய இலக்ஷணமும் அதுவேயொழிய வேறல்ல: வேண்டுதல் செய்வதே திருச்சபைக்கு இருக்கிற அதியுச்சமான வல்லமை; அதைத்தான் அது செலுத்திக்கொண்டிருக்கவேண்டும். அந்த வல்

லமை செலுத்துந் திறமையினாலேயே திருச்சபையின் அவயவமாயிருக்கிற ஒவ்வொருவனும் தான் தேவனோடும் மனுஷரோடும் பிரபுவாய்ப் போராடி மேற்கொண்டவனாகிய இஸ்ரவேலுடைய வமிசத்தானென்று ரூபிக்கவேண்டும். ஜெபத்திற்கு இருக்கிற வல்லமையையும் முக்கியத்தையும் அறியாமையினால் கிறிஸ்தவர்களுடைய ஜீவியம் பாழாகிறதைப் பார்த்துச் சகிக்கமுடியாமல் நான் இந்தப் புஸ்தகத்தை எழுதலானேன். அவரவர் தம் தம் கிறிஸ்தவ ஜீவன் போகாமல் காத்துக்கொள்வதற்கே ஜெபம் உதவும் என்று நினைக்கிறவனாயில் ஜெபம் எதற்காக ஏற்பட்டிருக்கிறது என்பது அவனுக்குப் பூரணமாய் விளங்கவே விளங்காது என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். நமது நம்பிக்கைக்கு விடப்பட்டிருக்கிற கிரியையின் உச்சிப் பாகமே ஜெபம். அதுவே நாம் செய்யவேண்டிய மற்ற வேலைக்கெல்லாம் வேரும் பலமும். நாம் அதை அப்படி மதிக்கக் கற்றுக்கொண்டபின் நாம் படித்துப் பழகவேண்டிய வித்தைகளில் சரியாய் ஜெபிக்கிற வித்தையைப்போல் நமக்கு அவசியமானது வேறில்லையென்று பார்ப்போம். நமதாண்டவர் தாம் பார்த்துப் படிப்படியாய் ஜெபத்தைப்பற்றி சொன்ன உபதேசத்தையும் அவர் கடைசி இரவில் பிரசித்தப்படுத்தின ஆச்சரியமான வாக்குகள் (யோவா. 14. 26.) (அவர் நாமத்தில் நாம் செய்யவேண்டிய கிரியைகளை, அதாவது, அவர் செய்தவைகளைவிடப் பெரிய கிரியைகளை நாம் செய்து வெகு கனிகொடுப்பதை நமக்குத் திட்டமாய்க் காட்டி அதற்கு உதவுகிற வாக்குகள் என்பதையும் இந்நூல் விளக்குகிறது. அது விளங்கிவிட்டால், திருச்சபை தான் செய்யவேண்டிய ஜெபம் என்கிற பரிசுத்த வேலையை மனம்வைத்து ஊக்கமாய்ச் செய்யும்போது மாத்திரம் கிறிஸ்துவின் வல்லமை அதற்கு ஆதாரமாய் வெளிப்படும் என்று நம்பியிருக்கலாம். வல்லமையும் செல்வாக்குமுள்ள அந்த ஆச்சரியமான வேலையை யார் வந்து செய்வார் என்று தேவன் ஆவலாய்க் காத்திருக்கிறார். ஆயாசப்பட்டுத் தளர்ந்திருக்கிற உலகமும் அப்படியே காத்திருக்கிறது. இதைத் தம்முடைய பிள்ளைகளில் சிலருக்காகிலும் விளக்கமாய்க் காட்டுகிற கருவியாக இந்நூலை உபயோகித்துக்கொள்ள நான் தேவனைப் பார்த்து மன்றாடுகிறேன்.

இத்துடன் சம்பந்தமுடைய வேறொரு விசேஷம் இருக்கிறது. இயேசு ஜெபத்தைக் குறித்துச் சொன்ன உபதேசத்தை நான் சிந்தித்து ஆராய்ந்துகொண்டிருந்தகாலத்தில் அது ஆச்சரியமான தெளிவாய் எனக்குத் தெரிந்தது. அதென்னவென்றால், விசுவாசத்துடன் செய்யப்படுகிற ஒவ்வொரு ஜெபத்தையும் தப்பாமல் கேட்க, அதாவது, இயேசுவின் நாமத்தில் நாம் விரும்பிக் கேட்பது எதுவோ அதை



நமக்குத் தரப் பிதா காத்திருக்கிறார் என்பதுதான். நமது தேவனுடைய அதிசயமான அன்பையும் விசாலமான வாக்குத்தத்தங்களையும் நமக்குத் தோன்றினபடி குறுக்கிவிடுகிறது நமது வழக்கமாகையால், நமதாண்டவர் எல்லாவற்றிலும் தெளிவும் சுருக்கமுமாய்ச் சொல்லியிருக்கிறவைகளைக்கூட நாம் இட்ட எல்லைக்குள் வைத்து வியகியானம் பண்ணிக்கொண்டுதான் படிக்கிறோம். ஜெபம் இருந்தால் அதற்கு உத்தரவும் இருக்கவேண்டும் என்கிற கருத்து தேவனுக்கு இருக்கிறது; தன் ஜெபம் கேட்கப்படும் என்று விசுவாசித்துணிந்த தம் பிள்ளைக்காகச் செய்ய தேவன் பூரண இஷ்டங்கொண்டிருப்பது மனிதருள்ளத்திற்குத் தெரியாமலே இருக்கிறது. இது ஒன்றுதான் நான் நினைக்கிறபடி திருச்சபை இன்னம் அறியாமலிருக்கிறதும், படிக்கவேண்டியதுமான விஷயம். தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர்; இது எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிற விஷயம்; ஆகிலும், அதின் அர்த்தம் தெரிந்தவர்களாவது, அதின் வல்லமையை அநுபவிக்கிறவர்களாவது எத்தனைபேர் என்று பார்த்தால் மிகச் சிலரே. நான் எழுதியிருக்கிறவைகள் ஒருவனை ஆண்டவருடைய வார்த்தைகளைக் கவனிக்கவும் அவைகளை அப்பட்டமாய் உள்ளது உள்ளபடி அர்த்தப்படுத்திக்கொள்ளவும் தூண்டினால் என் நோக்கம் சித்தித்ததாயிற்று.

இன்னும் ஒரேயொரு விஷயம் இருக்கிறது. கிறிஸ்துவே சகலத்திற்கும் நமக்கு ஜீவன். நாமெப்படியெப்படி இருக்கத் தேவையோ அப்படியப்படி அவரே நமக்குள் இருக்கவும், நாம் எதெது செய்யத் தேவையோ அதை அவரே நமக்குள் இருந்து செய்யவும் பொறுப்பாளியாய் இருக்கிறார் என்பதை அறிந்தது கடந்த சிலவருஷங்களாய் ஆயிரக்கணக்கானவர்களுக்குச் சொல்லரிய நன்மை விளைத்திருக்கிறது. அது நமது ஜெபஜீவியத்திற்கும் செல்லுகிற உண்மைதான் என்று நாம் அறிந்திருக்கிறதாய் எனக்குத் தெரியவில்லை. விசுவாசமாய் ஜெபிக்க, அதாவது, மிகவும் பலமுள்ளதாயிருக்கிற ஊக்கமான வேண்டுதல்செய்ய, எங்களுக்குச் சக்தியில்லை என்று வெகுபேர் முறையிடுகிறார்கள். அதை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க இயேசு ஆவலாய்க் காத்திருக்கிறார் என்பதே நான் சொல்ல விரும்புகிற செய்தி. கிறிஸ்துவே நமக்கு ஜீவன்; அவர் பரலோகத்தில் ஜெபிப்பதற்கு என்றும் பிழைத்திருக்கிறார்; அவர் சொன்னபடி செய்வார் என நம்பி நாம் நம்மை அவர் வசப்படுத்தும்பொழுது, அவர் நம்முள் வந்து பிழைக்கிற பிழைப்பும் சதா ஜெபப் பிழைப்பாகவே இருக்கிறது. போதனையினாலும் சாதனையினாலும் கட்டளையினாலும் வாக்குகளினாலும் மாத்திரம் அல்ல, சதா ஜெப ஜீவியாகிய தம்மையே நமக்கு ஜீவனாய்க் காண்பிக்கிறதினாலும் ஜெபம்பண்ண அவர் நமக்

குப் போதிக்கிறார். இதை நிஜமென்று நம்பி, நமக்கு ஜெப ஜீவியம் கைக்கூடும்பொருட்டு நாம் போய் அவரில் நிலைத்திருக்கும்போது தான் பலிக்கிற ஜெபம் செய்ய நம்மாலாகாது என்று நினைத்து நாம் பயந்த பயம் போய், நமது ஆண்டவரே நமக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுப்பார், அவரே நமது ஜெபத்திற்கு உயிரும் பலமுமாயிருப்பார் என்று நம்புகிற மகிழ்ச்சியும் கம்பீரமும் நமக்கு வரும்.

பரிசுத்த ஜெபஊழியம் செய்வதற்கே தேவன் நம்மை இராஜரீக ஆசாரியர்களாய் நியமித்திருக்கிறார். அந்த ஊழியத்தின் தன்மையைப் பார்க்க அவரே நம் கண்களைத் திறப்பாராக. நமது ஜெபங்கள் எப்பேர்ப்பட்ட பெரிய வல்லமைசெய்யும் என்று நம்புகிற விசாலமும் உரமுமான நெஞ்சத்தை அவரே நமக்கு அருள்வாராக. என்றும் ஜெபிப்பதற்கு உயிரோடிருக்கிறவரும், ஜெபிப்பதற்கே நம்முன் ஏற்றிருக்கிறவரும், நமக்கு ஜெபஜீவியம் கைக்கூடுவதற்குத் தாமே பொறுப்பாளியாயிருக்கிறவருமாகிய இயேசுவை நோக்கிப் பார்க்கிறதினால் ஜெபஜீவியம் நமக்கு வாய்க்காது என்று நினைக்கிற பயமெல்லாம் பறந்துபோவதாக.

அந்திரேயா மரே.

# பொருள் அட்டவணை.


பாடம். பக்கம்.

1. ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்; அல்லது, நிகரில்லா உபாத்தியாயர். 1
2. ஆவியிலும் உண்மையிலும்; அல்லது, மெய்த்தொண்டர் 11
3. அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அல்லது, தேவனோடு தனித்திருத்தல் 21
4. ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது; அல்லது, மாதிரி ஜெபம் [illegible]
5. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அல்லது, ஜெபத்திற்கு உத்தரவு நிச்சயம் 42
6. அதிக நிச்சயம் அல்லவா? அல்லது, தேவனுடைய அளவில்லாத பிதாத்தன்மை 52
7. பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? அல்லது, சமஸ்தமும் அடங்கிய வரம் 64
8. அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தம்; அல்லது, தேவநேசரின் தைரியம் 74
9. அறுப்புக்கு எஜமானை வேண்டிக்கொள்ளுங்கள்; அல்லது, ஜெபம் வேலையாட்களைத் தரும் 84
10. உனக்கு என்ன செய்யவேண்டும்? அல்லது, வேண்டியது இன்னதென்று வரையறுத்துக் கேட்கவேண்டும் 94
11. பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்; அல்லது, வாங்கிக்கொள்ளுகிற விசுவாசம் 103
12. தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்; அல்லது, விசுவாச ஜெப இரகசியம் 115
13. ஜெபமும் உபவாசமும்; அல்லது, அவிசுவாசத்திற்கு மருந்து 126
14. நீங்கள் ஜெபம்பண்ணும்போது, மன்னியுங்கள்; அல்லது, ஜெபமும் அன்பும் 139
15. இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தால்; அல்லது, ஒருமித்த ஜெபத்தின் வல்லமை 149

பாடம்.

16. நீடிய பொறுமையுள்ளவராயிருந்தும், சீக்கிரத்திலே; அல்லது, தளரா ஜெபத்தின் வல்லமை. 15[illegible]
17. நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; அல்லது, தேவனுடைய தன்மைக்குப் பொருந்தின ஜெபம் 173
18. இந்தச் சுரூபம் யாருடையது? அல்லது, தேவன் மனிதனுக்குக் குறித்திருக்கிற இலக்குக்கு ஏற்ற ஜெபம் 183
19. நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்; அல்லது, ஜெபிக்கவும் உழைக்கவும் வல்லமை 191
20. பிதா மகிமைப்படும்படியாக; அல்லது, ஜெபத்தின் முக்கிய இலக்கு 200
21. நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்; அல்லது, எல்லாம் அடங்கிய நிபந்தனை 210
22. என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்; அல்லது, திரு வசனமும் ஜெபமும் 223
23. நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அதைப் பிதா உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாகக் கனிகொடுங்கள்; அல்லது, கீழ்ப்படிதலே ஜெப வல்லமைக்கு வழி. 233
24. என் நாமத்தினாலே; அல்லது, எல்லாம் வெல்லுகிற நியாயம். 243
25. அந்நாளிலே; அல்லது, பரிசுத்தஆவியும் ஜெபமும் 255
26. உனக்காக வேண்டிக்கொண்டேன்; அல்லது, வேண்டுதல் செய்கிறவராகிய கிறிஸ்து. 265
27. பிதாவே, நான் விரும்புகிறேன்; அல்லது, பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து 277
28. பிதாவே! என் சித்தத்தின்படி அல்ல; அல்லது, பலியாகிய கிறிஸ்து 287
29. நாம் அவருடைய சித்தத்தின்படி கேட்டால்; அல்லது, ஜெபத்தில் நமக்கு இருக்கிற தைரியம் 296
30. பரிசுத்த ஆசாரியக்கூட்டம்; அல்லது, ஜெப ஊழியம்...... 309
31. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்; அல்லது, ஜெப ஜீவியம் 318
விளக்கிக்காட்டியல். 327

WITH CHRIST, IN THE SCHOOL OF PRAYER.

கிறிஸ்துவின்

# ஜெபப் பாடசாலை.

## முதலாம் பாடம்.

### 'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்'

அல்லது,

### நீகரில்லா உபாத்தியாயர்.

"அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்." (லூக். 11. 1.)

சீஷர் கிறிஸ்துவின் தோழமையில் இருந்தகாலமெல்லாம் அவரிடத்தில் ஜெபவழக்கமிருந்ததைக் கண்டார்கள். அவருடைய அந்தரங்க ஜெபஜீவியம் வியப்புக்குரிய அவருடைய பகிரங்க தூய்மைய ஜீவியத்தோடு தொடர்புடையதாகி உதவினதையும் அவர்கள் ஒருவாறு அறிந்திருந்தார்கள். ஜெபம் செய்யும் ஞானவித்தையில் அவர் கரைகண்ட வித்வான்

என்பது அவர்கள் மனதில் பட்டிருந்தது. அவருக்கு நிகராய் ஜெபிக்க வல்லார் எவருமில்லை. ஆதலால், அவர்கள் அவரையடுத்து வந்து: "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குக் கற்றுக்கொடும்" என்று வேண்டினார்கள். பின்னிட்ட காலத்தில் அவர்களைப் பார்த்து: நீங்கள் அவரிடத்தில் கற்றவைகளுள் அருமைக்கருமையான பாடம் எது என்று கேட்டால், அவர் எங்களுக்கு உபதேசித்த ஜெபபாடங்களுக்கு ஒப்பாய் மதிக்கத்தக்க வேறு பாடங்களில்லை என்றே அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

[illegible] காலமாகிய இக்காலத்திலும் அவர் இன்னம் ஒரு [illegible]த்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறார். அவருடைய சீஷர் இக்காலத்திலும் அவருக்கு ஜெபவழக்கம் இருப்பதைப் பார்க்கிறார்கள். அவருடைய இக்காலத்துச் சீஷரும் அவரையடுத்து: "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடும்" என்று வேண்டுவது அவசியம் என்று உணருகிறார்கள். கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் வளரவளர நமது நேச ஆண்டவர் நமக்காகப் பரிந்து பேசுகிற அவருடைய மத்தியஸ்த ஜெபம் ஓய்கிறதுமில்லை, ஒழிகிறதுமில்லை, இடைவிடாமல் நடக்கிறது என்று நாம் நினைக்கும்போதெல்லாம் நமது உள்ளம் தித்திக்கிறது. பரிந்துபேசும் ஜெபம் செய்வதில் நாமும் அவரைப்போல் ஆய்விடலாம் என்னும் நம்பிக்கை நம்முள்ளத்தில் உதிக்கும்போது, அதைப்பற்றி முன் இல்லாத ஆசைப்பெருக்கம் உண்டாகிறது. அவர் ஜெபிப்பதை நாம் பார்க்குந்தோறும், அவருக்கு நிகராய் ஜெபிக்க வல்லாருமில்லை, அவருக்கு நிகராய்ப் போதிக்க வல்லாருமில்லை என்று நாம் நினைக்குந்தோறும், "ஆண்டவரே ஜெபிக்க எங்களுக்குக் கற்றுக்கொடும்" எனச் சீஷர் முன் வேண்டினதுபோல் நாமும் இப்போது வேண்டுவது அவசியம் என்று உணருவோம். அவருக்கு உள்ளது உரியது எல்லாம் நம்முடையது, அவர்தாமே முழுமையும் நமக்குச் சொந்தம், அவரே நமது ஜீவன், என்னும் இவற்றின் உண்மை நமக்குப் புலப்படப் புலப்பட நாம் கேட்டமாத்திரத்தில் அவர் தருவார் என்னும் நிச்சயம் நமக்குள் பிறக்கும்; அவர் நமது ஜெபத்துக்கு பிரியமாய் இணங்கி, நம்மைத் தம்முடனே



முன்னிலும் அதிக நெருங்கின சகவாசம் செய்வித்து, தாம் ஜெபிக்கிற விதம் எதுவோ அதேவிதமாய் நாமும் ஜெபிக்க நமக்குக் கற்றுக்கொடுப்பார் என்னும் துணிவு நமக்கு வரும்.

வாரீர் சகோதரரே! ஸ்தோத்திரத்திற்குப் பாத்திரரான அந்த உபாத்தியாயரிடத்தில் நாமும் போவோம். அவருடைய பள்ளிக்கூட டாப்பிலே நமது பெயரையும் எழுதிக்கொள்ளும்படி கேட்போம். ஜெபித்தல், பரிந்துருகி மன்றாடுதல், ஆகிய இந்த தெய்வீக வித்தையைக் கற்க நாடிவருவோருக்கே அவர் அந்தப் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார். அது மற்றக் கல்விச்சாலைகளைப்போல் ஒருபோதேனும் சாத்தப்படுவதல்ல, எப்போதும் திறந்தேயிருக்கும். ஆலசியம் செய்யாமல் இன்றைக்கே அந்த உபாத்தியாயரிடம் போய் அவருடைய பண்டைக்காலத்துச் சீஷர் கேட்டதுபோல்: "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்" என்று கேட்போம், வாருங்கள். இந்த மன்றாட்டை உற்றுத் தியானிக்கத் தியானிக்க அதின் ஒவ்வொரு பதத்திற்கும் பொருள்பொலிவு உண்டென்று அறிவோம்.

'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.' ஜெபம்பண்ணவா? ஆம், ஜெபம்பண்ண. கற்றுக்கொடுக்கப்பட்டாலொழிய வேறுவிதமாய் நமக்கு இந்தப் பாடம் வராது. ஆரம்பத்தில் பாலகனும்கூட மழலைச் சொல்லால் ஜெபிக்கக்கூடும் என்பது மெய்தான். ஆயினும், மானிடர் படிப்படியாய் ஏறிச் செய்யவேண்டிய உச்சிவேலை, உன்னதவேலை, அதிதூயவேலை ஜெபம். காணற்கரிய பரம்பொருளான மகா பரிசுத்த தேவனோடு மானிடன் ஜீவிக்கும் ஐக்கிய ஜீவியமே ஜெபம். நித்திய உலகத்தின் வல்லமைகள் அதன் வசத்தில் இருக்கின்றன. சுத்த தெய்வபக்தியின் சத்தும் சாரமும் அது. மானிடருக்கு வேண்டிய நன்மைகளெல்லாம் புரண்டு வழிகிற வாய்க்கால் அது. ஞானபலம், ஞானஜீவன், இவற்றின் இரகசியம் அதிலேதான் இருக்கிறது. நமக்காயினும் பிறருக்காயினும், திருச்சபைக்காயினும் உலகத்திற்காயினும் இன்றியமையாமல் வேண்டுவனவற்றிற்குத் தம்மையும் தமது சர்வவல்லமையையும் பிடித்துக்கொள்ளும் உரிமையை

தேவன் ஜெபத்திற்கே அளித்திருக்கிறார். நிறைவேறுவதற்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களும், வருவதற்கு தேவனுடைய இராஜ்யமும், பிரசித்தியாய் வெளிப்படுவதற்கு தேவனுடைய மகிமையும் ஜெபத்தை எதிர்பார்த்திருக்கின்றன. திருவருள் நிறைந்த இந்த வேலை செய்வதற்கு நாம் எவ்வளவோ அசட்டரும் ஆகாதவர்களுமா யிருக்கிறோம். அதைத் திருந்தச்செய்யும் திராணி தேவாவியானவரால் மாத்திரமே நமக்கு வரும். ஜெபத்தில் நாம் வெகுசீக்கிரம் ஏமாந்து, அதின் வேஷத்தை [illegible]த்துக்கொண்டு அதின் வல்லமையை விட்டுவிடுகிறோம். இளமையிற் பயின்ற ஜெபப்பழக்கம், கோவிலில் [illegible] ஜெபக்கல்வி, நாட்பட்ட ஜெபஅநுஷ்டானம், உள்ளத்தில் மூண்டெழும் உணர்ச்சிகள், இவைகளே வழக்கமாய்த் துடித்தெழுந்து நம்மை ஜெபத்துக்குத் தூண்டுகின்றன. அப்படிப் பிறக்கும் ஜெபத்திற்கு ஞானவல்லமை சிறிதும் இராது. அதினால் ஒரு பயனும் வராது. மெய் ஜெபமானது தேவனுடைய சர்வவல்லமையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பெரும்பயன் விளைவிக்கும். அதைக் கண்டமாத்திரத்தில் பரலோகத்தின் கதவுகள் விசாலமாய்த் திறக்கப்படும். அப்பேர்ப்பட்ட ஜெபம் ஜெபிக்க எனக்குப் போதிப்பாரில்லையா என்று ஏங்கிக் கூவ எவனுக்குத்தான் மனம்வராது?

இயேசு ஒரு பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார். அவரால் இரட்சிக்கப்பட்டவருள் யாருக்கு ஆசையுண்டோ அவர்களை அதில் சேர்த்துக்கொண்டு ஜெபத்தில் வல்லவர்களாகும் வித்தையை அவர்களுக்கு அவர் கற்றுக்கொடுக்கிறார். நாமும் அந்தப் பாடசாலையில் சேர்ந்து, ஆண்டவரே, இந்தக் கல்விதான் எங்களுக்கும் தேவை, ஜெபிக்க எங்களுக்கும் கற்றுக்கொடும் என்று மன்றாடத் தேவையில்லையா?

'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.' ஆம், ஆண்டவரே, எங்களுக்கு. பூர்வகாலத்தோராகிய உமது விசுவாசிகள் எவ்வளவு வல்லமையாய் ஜெபித்தார்கள் என்றும், அவர்களுடைய ஜெபத்திற்கு உத்தரவாய் எப்பேர்ப்பட்ட வல்லமையுள்ள அதிசயங்கள் நடப்பிக்கப்பட்டன என்றும், உமது வேதத்திலே நாங்கள் படித்திருக்



கிறோம். ஆயத்தகாலமாகிய பழைய உடன்படிக்கையின் போது இது நடந்ததேயானால், நிறைவேறுதலின் காலமாகிய இப்போது எங்களுடன் நீர் இருப்பதைத் தெரிவிக்கிற குறிப்பாகிய இந்த நிச்சயத்தை எவ்வளவுக்கு அதிகமாய் எங்களுக்குத் தருவீர். உமது நாமத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு எப்பேர்ப்பட்ட வல்லமையுண்டாயிருக்கும் என்று நீர் உமது அப்போஸ்தலருக்குச் சொன்னதை நாங்கள் கேட்டிருக்கிறோம். அதினுண்மையை அவர்கள் சுய அநுபவமாய்ப் பரீக்ஷித்ததில் எப்பேர்ப்பட்ட மகிமையுடன் சித்திபெற்றார்கள் என்று கண்டிருக்கிறோம். அவர்களுக்கு எப்படிச் சித்தியாயிற்றோ, அப்படியே எங்களுக்கும் சித்தியாகும் என்று எங்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். உமது வாய்ச்சொல்லே உறுதி என்று நம்பியிருக்கிறவர்களுக்கு உமது வாக்கை மெய்ப்பிக்கிற வல்லமையை இந்நாட்களிலும் மகத்துவமாய்க் காட்டுகிறீர் என்கிற செய்தி ஓயாமல் எங்கள் காதுக்கு எட்டிக்கொண்டேயிருக்கிறது. ஆண்டவரே! இவர்களெல்லாரும் எங்களைப்போல பாடுள்ள மனுஷரேதவிர வேறல்ல. அவர்களைப்போல நாங்களும் ஜெபிக்க எங்களுக்குப் போதியும். நீர் கொடுத்த வாக்குத்தத்தங்களெல்லாம் எங்களுக்கும் உரியவைகளே. தேவலோகத்திலிருந்து வருகிற பெலன்களும் நன்மைகளும் எங்களுக்கும் சொந்தமே. திரளும் மிகுதியுமாய் வாங்கத்தக்கவர்களாய் ஜெபிக்கும் வித்தையை எங்களுக்குக் கற்றுக்கொடும். உமது வேலையை எங்கள் நம்பிக்கைக்கும் ஒப்புவித்திருக்கிறீர்; உமது இராஜ்யம் வருதல் எங்கள் ஜெபத்தினாலும் ஆகவேண்டிய காரியம்; எங்கள் ஜெபத்தினாலும் நீர் உமது நாமத்தை மகிமைப்படுத்திக் கொள்ளலாம்; ஆதலால் "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்." ஆம், எங்களுக்குப் போதியும், ஆண்டவரே. நாங்கள் எங்களை உமக்கு மாணாக்கராய் ஒப்புவிக்கிறோம். உம்மிடத்திலே பாடங் கேட்கவேண்டுமென்னும் ஆவல் எங்களில் குடிகொண்டிருக்கிறது. "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.' ஜெபம் செய்யக் கற்பது அவசியம் என்று இப்போது உணரு

கிறோம். முதலில் அதைப்போல் லேசாய்ச் செய்யத்தக்க வேலை வேறில்லைபோல் தோன்றுகிறது. காலஞ் செல்லச்செல்ல அதைப்போல் செய்தற்கரியது ஒன்றுமில்லை என்று விளங்குகிறது. செய்து பார்த்தபிறகு இப்படி ஒத்துக்கொள்ள நெருக்கப்படுகிறோம். செய்யவேண்டியபிரகாரம் ஜெபம் செய்ய நமக்குத் தெரியாது. தேவனுடைய வசனம் நமக்கு இருக்கிறது; அதிலே சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்கள் தெளிவும் நிச்சயமுமாய் இருக்கின்றன. இதெல்லாம் மெய்யே. ஆனால், பாவம் நமது மனதைக் குருடாக்கியிருப்பதினால் எந்த அவசரத்திற்கு எந்த வசனத்தை உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்பது எப்போதும் நமக்குச் செம்மையாய்த் தெரிகிறதில்லை. ஞானகாரியங்களில் மிக்க அவசியகமானவைகளை நாம் எப்போதும் கேட்கிறதில்லை; அல்லாவிட்டால், பரிசுத்த ஸ்தலத்தில் எந்தச் சட்டம் செல்லுமோ அந்தச்சட்டத்திற்கு ஒத்தபடி நாம் ஜெபிக்கிறதில்லை. உலக காரியங்களில் அதிலும் அதிகமாய்த் தவறுகிறோம்; நமக்குத் தேவையானது எதுவோ, அதைக் கேட்கலாம் என்று பிதா நமக்குக் கொடுத்திருக்கிற ஆச்சரியமான சுவாதீனத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள நமக்குத் தெரிகிறதில்லை. எதைக் கேட்கவேண்டும் என்று நமக்கு விளங்கிவிட்ட பிறகுகூட, நமது ஜெபத்தை தேவனுக்கு உகந்ததாக்குவதற்கு அவசியம் தேவையானவைகள் இன்னும் வெகுவாய்க் குறையும். நாம் கேட்பது தேவனுக்கு மகிமையுண்டாக்குவதாய் இருக்கவேண்டும், அவருடைய இஷ்டம் எதுவோ அதற்கு மனதார ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கவேண்டும், கிடைக்கும் என்னும் விசுவாச நிச்சயத்துடன் கூடினதாயிருக்கவேண்டும், இயேசுவின் நாமத்தில் கேட்கப்பட்டதாயிருக்கவேண்டும்; அவசியமானால் இல்லை என்னும் சொல்லை தேவனிடத்தில் வாங்க மனமற்று விடாப்பிடியாய் அவரை நெருக்குவதாயிருக்கவேண்டும். இதெல்லாம் படித்தால்மாத்திரம் வரும், மற்றப்படி வாராது. வெகு ஜெபம் செய்கிற பள்ளிக்கூடத்திலே தவிர வேறு பள்ளிக்கூடத்தில் அதைப் படிக்க முடியாது. ஏனெனில், பழக்கத்தினால் மாத்திரமே எந்த வித்தையும் தப்புந் தவறுமாகிய கசடு அற்றுப் பூரணப்படும். இந்த



வித்தையை அறிதற்கு அவசியமான ஞானமாவது தகுந்த யோக்கியமாவது எனக்கு இல்லையே என்று மனம் வாடி வதங்குதல், கேட்டது வருமோ வாராதோ என்னும் சந்தேகத்தை எதிர்த்துப் போரிடுதல், இப்படிப்பட்ட சங்கடங்கள் வழியாய் மாத்திரமே கேட்டது கேட்டபடியே வாங்குகிற தேவலோகத்து ஜெபவித்தை ஒருவனுக்குக் கைவரும். நமக்குள் விசுவாசத்தையும் ஜெபத்தையும் துவக்கி முற்றுப்பெறுவிக்கிறவர் ஒருவர் இருக்கிறார். அவர் நமக்குள் இருப்பது நமக்குத் தெரியாதிருக்கும்போதுகூட அவர் நம்முள்ளத்தில் இருந்துகொண்டு நாம் ஜெபிப்பதைக் கண்ணுற்றுக் கவனிக்கிறார். **ஜெபிக்கும் வித்தையை எங்களுக்குக் கைவரக் கற்றுக்கொடுப்பார் என்று எவர்கள் அவரை நம்பியிருக்கிறார்களோ** அவர்களுக்கு அந்த வித்தை ஜெபப் பாடசாலையில் அனுகூலமாகிச் சித்திப்பதற்கு அவரே பொறுப்பாளி. நம்முள் அறியாமை உண்டு என்னும் உணர்வும் அவருள் கற்பிக்கும் திறமை உண்டு என்னும் விசுவாசமும் நாம் ஜெபம் பண்ணும்போதெல்லாம் நம்முள்ளத்தில் மங்காமல் இருக்கவேண்டும். அதினால், கற்கவேண்டும் என்னும் ஆவல் நமக்குள் மூண்டுகொண்டேயிருக்கும். இந்த ஆவலைக் கைப்பிடியாக வைத்துக்கொண்டு அவர் நமக்கு ஜெபவித்தையைத் தீரத் தெளியப் போதிப்பார் என்று நாம் நிச்சயித்திருக்கலாம். அந்தப் போதகம் நமக்கு ஏற ஏற நாம் வல்லமையாய் ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம். ஜெபிக்க அவர் நமக்குப் போதிக்கிறார் என்பதை நாம் உறுதியாய் நம்பியிருக்கலாம்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்." இயேசுவைப்போல் போதிக்க வல்லார் இயேசுவைத்தவிர வேறு இலர். ஆகையால், அவரையே நோக்கி 'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்' என்று வேண்டுகிறோம். படிக்க ஆவல்கொண்டு மாணாக்கன் போய் அடுத்த ஆசானுக்கு முறைதெரிந்து போதிக்கும் திறமையும், பாடம் கொடுக்கக் கொடுக்க தீவிரபக்குவத்துடன் பாடம்வாங்குகிற தீக்ஷண்ய புத்தியின்மையைக் கண்டு மனங்கோ[illegible] [illegible]மையும், தன்னைத் தஞ்சமாய் நம்பிப் படிப்போன்மீது அன்னைபோல் அன்புடைமையும் இருக்கவேண்டும். தேவ

னுக்கு ஸ்தோத்திரம்! இயேசுவுக்கு இந்த லக்ஷணமெல்லாம் இருக்கிறது. அதற்குமேலும் இருக்கிறது. ஜெபமாவது என்னவென்பது அவருக்குத் திட்பமாய்த் தெரியும். அவர் தாமே ஜெபஞ்செய்துகொண்டேயிருக்கிறார். சுய அநுபவம் முதிர்ந்த இயேசு தாமே நமக்கு ஜெப உபாத்தியாயராய் ஏற்பட்டிருக்கிறார். இப்பூலோக ஜீவியத்தில் அவருக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கும் கண்ணீர்களிலே அவர் ஜெபம் இன்னது என்று கற்றறிந்து தேர்ந்திருக்கிறார். பரலோகத்தில் அவருக்கு இன்னம் ஜெபமே பிரியமான வேலை. அவருக்கு அங்கே ஜெபமே ஜீவியம். ஜெபவித்தையைக் கற்கப் பக்குவமுள்ள மாணாக்கரைக் காண்பதுபோல் அவருக்குப் பிரியமுண்டாக்குவது வேறில்லை. அப்படிப்பட்டவர்களை அவர் கண்டால், அவர்களை அன்பாய்ச் சேர்த்துக்கொண்டு, பிதாவின் சமுகத்தில் அழைத்துப் போய், அவர்களுக்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள்மேல் தேவாசீர்வாதம் இறங்கத்தக்க வல்லமையுடன் ஜெபிக்கும் வரத்தை அவர்களுக்கு அளித்து, அவருடைய இராஜ்யம் பூமியில் வெளிப்படுவதற்கு ஏதுவான வேண்டுதல் செய்வதில் தம்மோடு உடன்வேலையாட்களாயிருக்க அவர்களைப் பழக்குவார். கற்பிக்கும் முறை அவருக்குச் செம்மையாய்த் தெரியும். நம்மை வருத்தும் நெருக்கிடையில் ஒருகால் போதிப்பார்; நமக்குவந்த துயரைக் களைந்து நமது மனதை வசியப்படுத்திக்கொண்டு, இன்னொருகால் போதிப்பார். திருவசனப்பிரசங்கத்தால் ஓரிடத்தில் போதிப்பார்; கேட்ட ஜெபம் வாய்த்ததற்கு கெடிமுழக்கச் சாட்சிதரும் விசுவாசிகளின் வாய்ப்பிறப்பால், இன்னோரிடத்தில் போதிப்பார். நமது பரிசுத்த ஆவியானவர்மூலமாய் அவர் நமது உள்ளத்தில் வந்திருந்துகொண்டு ஜெபிக்க வொட்டாமல் நம்மை வழிமறிக்கிற பாவத்தை எடுத்து உணர்த்தியாவது, நம்மேல் தேவன் பிரியமுடையவராயிருக்கிறார் என்பதற்கு நிச்சயங்காட்டியாவது நமக்கு ஜெபம்பண்ணப் போதிப்பார். எதைக் கேட்கலாம், எப்படிக் கேட்கலாம் என்று நாம் மயங்கும்போது அவர் இன்னதை இப்படிக் கேள் என்று நமக்கு நினைப்பூட்டிப் போதிப்பார். மேலும், அவரே பெரிய ஜெபஜீவியாய் நமக்குள் இருந்துகொண்டு ஜெபத்



தின் ஆவியை நமது ஆத்துமாவில் ஊதுவார். "அவரைப் போல் வேறெவர் போதிப்பார்" என்று நாம் மெய்யாகவே மகிழ்ந்து கூவலாம். போதிக்கும் முறையை அன்றி ஜெபிக்கும் முறையை இரட்சகர் தமது சீஷருக்குக் கற்றுக்கொடுத்தார். சாதுரியமாய் பிரசங்கிப்பதற்கு அவர்களுக்கு அவர் வழிசொல்லித்தராமல் சாதுரியமாய் ஜெபிப்பதற்கு உபாயம் சொல்லித்தந்தார். தேவனோடு பேச வழியறிதல் மனிதனோடு பேச வழியறிதலுக்கு மிக மேல். மனுஷனை வசியப்படுத்தும் வல்லமையல்ல, தேவனை வசியப்படுத்தும் வல்லமையே முதலில் தேவை. ஜெபம் பண்ணப் போதிப்பது இயேசுவுக்குப் பிரியமான வேலை.

என் அருமையான உடன்மாணாக்கரே! ஜெபிக்கும் வித்தையில் நமக்கு ஒரு மாதமளவும் பாடம் கொடுக்க நமது பெரிய உபாத்தியாயரையடுத்து வேண்டிக்கொள்வது உசிதமென்று உங்களுக்குத் தோன்றுகிறதில்லையா? அவர் பூமியிலிருந்த காலத்தில் மொழிந்தவைகளைச் சிந்தித்துப் படிக்கும்போது, அப்பேர்ப்பட்ட உபாத்தியாயர் நமக்கு இருக்கையில் நாம் மெய்யாகவே கற்றுத்தேறுவோம் என்று நம்பி, நமது மனதை அவருடைய உபதேசத்திற்குக் கையளித்துவிடுவோமாக. சிந்தித்துத் தெளிவடைதற்கு எவ்வளவு நேரம் பிடிக்குமோ அவ்வளவு நேரமும் கொடுக்க நமக்கு மனமிருக்கவேண்டும். அதுவுந்தவிர, ஜெபம் பண்ணவும், அவருடைய கிருபாசனத்தின் பாதத்தருகில் தரித்திருக்கவும், பரிந்துபேசவும், திருச்செய்கைக்கு அவரால் பயிற்றுவிக்கப்படவும் எவ்வளவு காலம் கொள்ளுமோ அவ்வளவு காலமும் செலவிட நமக்குப் பிரியமிருக்கவேண்டும். ஜெபம் கற்கும் காலத்தில் நமது ஞானநாவு குளறுகிறதே என்று அஞ்சவேண்டியதில்லை. நமது நாக்குத் திக்கினாலும் அவர் தமது வேலையை அழகுபெறச் செய்தே தீர்ப்பார் என்று நாம் நம்பியிருக்கலாம். அவர் முழுஜீவியமும் ஜெபஜீவியம். அந்த ஜீவியத்தையே அவர் நமக்குள் ஊதி உட்செலுத்துவார். அவருடைய நீதியிலும் அவருடைய ஜீவனிலும் பங்கனுபவிக்க அவர் நமக்கு வரந்தரும்போதே தமது பரிந்துபேசுகையிலும் நாம் பங்கனுபவிக்க நமக்கு வரம் அருளுவார். நாம் அவருடைய சரீரத்தின்

அவயவங்கள். நாம் பரிசுத்தமான ஞான ஆசாரியர். ஆதலால், மனிதருக்கு நன்மை விருவிக்கும்பொருட்டு தேவனிடத்தில் ஜெபித்துச் சித்திபெறுதலாகிய அவருடைய ஆசாரிய வேலையில் நாம் பங்கனுபவிக்க அவர் இடம்பண்ணுவார். நம்மிடத்தில் அறிவீனமும் பலவீனமும் மிக உண்டு என்பது மெய்யே. ஆயினும், "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்" என்று சந்தோஷமாய் நாம் அவரிடத்தில் கேட்கலாம்.

## "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

தோத்திரத்திற்குப் பாத்திரரான ஆண்டவரே! ஜெபித்துப் பிழைப்பதே உமது ஓயா ஜீவியம். ஓயாமல் ஜெபித்துப் பிழைக்க எனக்கும் கற்றுக்கொடுப்பது உம்மாலாகும். ஓயாமல் ஜெபித்து தேவசமுகத்தில் ஆசாரியனாய் இருத்தல் ஆகிய உமது தேவலோகத்து மகிமையில் எனக்கும் பங்கு கொடுக்க உமக்குப் பிரியம் உண்டு.

கர்த்தராகிய இயேசுவே! ஏற்றபடி வேண்டிக்கொள்வது இன்னது என்று அறியாமலிருக்கிற எங்களுக்குக் ஜெபப்பாடம் கொடும் என்று உம்மை வருந்தி வேண்டிக்கொள்வோரின் டாப்பிலே என் பேரை எழுதிக்கொள்ளும். உமது ஜெபப் பாடசாலையில் ஆத்திரப்படாமல் உம்மோடு தரித்திருந்து நீர் என்னை ஆளாக்கித் தேற்றும்வரையில் என்னை உமக்கு ஒப்புக்கொடுத்துக் காத்திருக்கிற மனதை எனக்குத்தாரும். ஜெபவிஷயமாய் எனக்கு இருக்கிற அறியாமை, ஜெபத்திற்குள்ள பெரிய சிலாக்கியம், வல்லமை, ஜெபத்தை உற்பத்திபண்ணுகிற தேவாவியானவரை நான் பெறுவது அவசியம் என்னும் அறிவு, இவையெல்லாம் என் உள்ளத்தில் உறுத்தி, எனக்கு எல்லாம் தெரியும் என்னும் இறுமாப்பை என்னைவிட்டு அகற்றி, மனம்பணிந்து உம்மிடத்தில் கற்றுக்கொள்வதற்காக உமக்குமுன் தாழ்மையாய் முழங்காலிட என்னை ஏவட்டும்.

மேலும், கர்த்தாவே, எனக்கு நீரே உபாத்தியாயராய் ஏற்பட்டிருப்பதினால் ஜெபப்பாடம் எனக்கு வரும் என்கிற உறு



தியை என்னில் உண்டாகப்பண்ணும். பிதாவை நோக்கி சதா ஜெபம் செய்து திருச்சபைச் சரித்திரத்தையும் உலக சரித்திரத்தையும் ஆளுகிறவராகிய இயேசுதாமே எனக்கு ஆசானாயிருக்கிற நிச்சயத்தைக்கண்டு நான் அச்சமற்றிருப்பேன். ஜெப உலகத்தின் இரகசியங்களில் எம்மாத்திரம் நான் அறிவது அவசியமோ அம்மாத்திரம் நீர் எனக்குத் திறந்து காட்டுவீர். அந்த உலகத்தின் இரகசியங்களில் நான் அறியத்தகாதவைகள் வரும்போது, அதைக்குறித்து மனச்சோர்வடையாமல் விசுவாசத்தில் உறுதியாயிருக்கவும் தேவனுக்கு மகிமை செலுத்தவும் நீர் எனக்குக் கற்றுக்கொடுப்பீர்.

தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! உம்மை நம்பியிருக்கிற மாணாக்கனாகிய என்னை நீர் வெட்கமடையச் செய்யீர். உமது கிருபையின் வல்லபத்தால் நானும் உம்மை வெட்கமடையச் செய்யேன். ஆமென்.

# இரண்டாம் பாடம்.

## 'ஆவியிலும் உண்மையிலும்'

அல்லது,

## மெய்த்தொண்டர்.

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அப்படித் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்களையே பிதாவானவர் தேடுகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்." (யோவா. 4. 23, 24.)

வேதத்தில் ஜெபத்தைக் குறித்துப் பதிவாயிருக்கிற இயேசுவின் உபதேசங்களில் அவர் சமாரிய ஸ்திரீக்குச் சொன்ன இந்த வார்த்தைகளே முதல் உபதேசம். அதிலே

ஜெபலோகத்தைப்பற்றிய முதல் காட்சி நமக்குக் கிடைக்கிறது. அதைப் பார்க்கப் பார்க்க நம்முள்ளத்தில் ஆச்சரியானந்தம் உண்டாகிறது. பிதாவானவர் தம்மைத் தொழுகிறவர்களைத் தேடுகிறார். அன்புள்ள அவரது இருதயத்திற்கு நமது ஆராதனை வெகு பிரியம். அவர் மெய்த்தொண்டரைத் தேடிக் கொண்டிருக்கிறார். அவரைத் தொழுவோரும் தொண்டர்களோ பெரும்பாலோர் அவரால் விரும்பத்தக்கவர்களல்ல. ஆவியிலும் உண்மையிலும் வணங்கும் வணக்கமே மெய்வணக்கம். ஆவியிலும் உண்மையிலும் செலுத்தப்படுகிற இவ்வித வணக்கத்துக்கு வழியைத் திறந்து வைத்து அதை நமக்கு உபதேசிப்பதற்கு குமாரன் வந்திருக்கிறார். ஆவியிலும் உண்மையிலும் தொழுகிறதென்றால் என்ன, அதை யடையும் வழி எது, என்று அறிவது நாம் ஜெபப் பாடசாலையில் படிக்கவேண்டிய முதல் பாடங்களில் ஒன்று.

சமாரிய ஸ்திரீக்கு நமது ஆண்டவர் மூவித வணக்கங்களைப் பகுத்துவைத்து உபதேசித்தார். முதலாவது, சமாரியர் செய்த அறிவில்லா வணக்கம்: "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்." இரண்டாவது, தேவனைப்பற்றி மெய்யறிவுடையோராகிய யூதருடைய அறிவுபொருந்திய வணக்கம்: "நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனெனில் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது." மூன்றாவது, அவர் இனி ஏற்படுத்தப்போகிற ஆவிக்குரிய புதிய வணக்கம்: "காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; இந்தக் காலத்தில் பிதாவைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்." 'ஆவியிலும் உண்மையிலும்' என்பது "ஊக்கமாய், உள்ளத்தால், நிஷ்களங்கமாய்" என்னும் பொருள் கொள்ளும் என்று பெரும்பாலார் சொல்வது பொருந்தாது. ஏனெனில், சமாரியருக்கு மோசேயின் பஞ்சாகமம் ஆகிய வேதநூல் இருந்தது. அதன் மூலமாய் அவர்கள் தேவனை ஒருவாறு அறிந்து ஆராதித்தார்கள். அப்படி அறிந்து ஆராதித்தவர்களில் தேவனை நோக்கி உருக்கத்துடன் உள்ளத்தால் ஜெபித்து அவரை நிஷ்களங்கமாய்த் தேடியடையப் பார்த்தவர்கள் இருந்திருக்கமாட்டார்களா? இருந்தி-



ருப்பார்கள். மேலும், யூதருக்கு அக்காலம்வரையில் தேவன் வெளிப்படுத்தின முழு வேதமும் இருந்தது. அதைக்கொண்டு அவர்கள் சமாரியரைவிட அதிகமாய் தேவனை யறிந்து ஆராதித்தார்கள். அந்த ஆராதனைக்காரருள் தேவனை உள்ளத்தால் தேடின எத்தனையோ பரிசுத்தவான்கள் இருந்திருப்பார்கள். இருதொண்டராகிய சமாரியரும் யூதரும் "ஊக்கமாய், உள்ளத்தால், நிஷ்களங்கமாய்" தேவனை நோக்கிக் கூப்பிட்டது உண்மையேயானாலும், அவர்கள் செய்த ஜெபம் "ஆவியிலும் உண்மையிலும்" செய்த ஜெபமல்ல. ஆவி, உண்மை, இந்தச் சொற்களுக்குள்ள சரியான பூரணக் கருத்தைக்கொண்டு சோதித்துப் பார்த்தால் அந்த ஜெபம் ஆவியிலும் உண்மையிலும் செய்த ஜெபமல்ல என்பது உடனே விளங்கும். ஆவியிலும் உண்மையிலும் ஜெபஞ் செய்வதற்கு "காலம் வரும்; அது இப்பொழுதே வந்திருக்கிறது" என்று இயேசு சொல்லுகிறார். இதனால் பெறப்படுங் கருத்து என்னவென்றால், தேவனை ஆவியிலும் உண்மையிலும் தொழுதலானது இயேசுவாலும் இயேசுவின் மூலமாயும் மாத்திரமே கிடைக்கக்கூடியது என்பதே.

இக்காலத்துக் கிறிஸ்தவர்களுள்ளும் இந்த மூவகை வணக்கக்காரரைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கலாம். சிலர் அறிவில்லாமல் ஜெபித்து, தாங்கள் கேட்கிறது இன்னது என்று தெரியாதிருக்கிறார்கள். அவர்கள் ஊக்கமாய் ஜெபித்தும், வாங்குவது மிகச் சொற்பமாயிருக்கும். வேறு சிலர் ஜெபிக்கவேண்டியது இன்னதற்காக என்று சரியாய் அறிந்திருப்பார்கள். இவர்கள் முழு மனதையும் முழு உள்ளத்தையும் கூட்டி ஜெபிக்க முயற்சிக்கிறார்கள் என்பதையும் ஒத்துக்கொள்ளலாம். ஊக்கமும் உருக்கமுமாய் இவர்கள் பல சமயங்களில் ஜெபித்ததும் உண்டு. ஆகிலும், ஆவியிலும் உண்மையிலும் ஜெபிக்கிறதினால் வரும் பரிபூரண நன்மையை இவர்கள் வாங்கமாட்டாதிருக்கிறார்கள். கேட்டது கேட்டபடியே வாங்கக்கூடிய ஜெப வல்லவர்களும் இருக்கிறார்கள். இந்த மூன்றாம் வகுப்பில் நம்மைச் சேர்த்துக் கொள்ளும்படிக்கே நாம் நமது கர்த்தராகிய இயேசுவை மன்றாடவேண்டும். ஆவியிலும் உண்மையிலும் தொழுவ-

தெப்படி என்று அவர் சொல்லித் தந்தாலொழிய மற்றப்படி நாமதைப் படிக்க முடியாது. அதுதான் ஆவிக்குரிய தேவ வணக்கம். பிதா தேடுகிற மாதிரி வணக்கக்காரரை உற்பத்தி செய்வது அதுவே. ஆவியிலும் உண்மையிலும் தொழுதலாகிய வித்தையை தீரத்தெளிய அறிந்து அப்பியாசிக்கப் பழகினால் மாத்திரமே ஜெபத்தினால் வரத்தகும் லாபத்தை யடையலாம்.

“தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும்.” இதிலே நமது உபாத்தியாயர் நமக்கு உணர்த்துகிற முதற் கருத்து தேவனுக்கும் தொண்டருக்கும் பொருத்தம் இருக்கவேண்டும் என்பது; அதாவது, தேவனுடைய தன்மை எதுவோ அதற்கு இசைந்ததாயிருக்கவேண்டும் அவருக்குச் செய்யப்படும் ஊழியமும். இந்த நியாயம் பிரபஞ்சமெங்கும் வழக்கமாயிருக்கிற நியாயமேதவிர வேறல்ல. பிரபஞ்சத்திலிருக்கிற ஒரு பொருள் தன்னை நமக்கு வெளிப்படுத்தும்போது அந்தப் பொருளை கிரகிக்கிறதற்கு இசைவுள்ள பொறி நமக்கு இருக்கவேண்டும். கண், காது முதலிய நமது ஐம்பொறிகளுள் அததற்கு இசைவுள்ள பொருள் தன்னை வெளிப்படுத்துவதினால் நாம் அதனை அறிகிறோம். ஒளியைக் கிரகிக்கிற உள்ளிசைவு கண்ணுள் அமைந்திருக்கிறது; அவ்வாறே ஓசையைக் கிரகிக்கிற உள்ளிசைவு காதுள் அமைந்திருக்கிறது. இதுபோலவே, ஒருவன் உண்மையாய் தேவனைத் தொழுதுகொள்ள விரும்பினால், ஒருவன் தேவனைக் கண்டடைந்து அவரைத் தன் பொருளாய் அநுபவிக்க இஷ்டப்பட்டால், அவனுக்கும் அவருக்கும் பொருத்தமிருக்கவேண்டும். அதாவது, அவரைக் கிரகித்து வாங்கிக்கொள்ளக்கூடிய உள்வல்லமை அவனுக்கு இருக்கவேண்டும். தேவன் ஆவியாயிருப்பதினாலே, நாம் அவரைத் தொழுதுகொள்வதும் ஆவியில் தொழுதுகொள்வதாயிருக்கவேண்டும். தேவன் எத்தன்மையரோ தொண்டனும் அத்தன்மையனாயிருப்பதவசியம்.

இதன் கருத்தென்ன? தேவனைத் தொழுவதற்கு மெய்யான திருஸ்தலம் சமாரியாவா, எருசலேமா, எது என்று



அந்த ஸ்திரீ நமது ஆண்டவரைக் கேட்டாள். அதற்கு அவர் இனிமேல் தேவனைத் தொழுதுகொள்வது வகுத்துக் குறித்த ஒரு திருஸ்தலத்துள் கட்டுப்பட்டிராது என்று மறுமொழி சொல்லுகிறார்: “ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, பிதாவைத் தொழுதுகொள்வதற்கு நீங்கள் இந்த மலையையாகிலும் எருசலேமையாகிலும் வேண்டாத காலம் வருகிறது.” தேவன் சித்துப்பொருள், அதாவது, ஆவி. அதனால் அவர் காலவரை, இடவரை என்ற எல்லைக்குள் அடங்கினவரல்ல. வரையில்லாப் பரிபூரணராகிய அவர் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் தமது தன்மையில் மாறாமல் ஒரு தன்மையராகவே இருக்கிறார். ஆதலால், இனிமேல் அவருக்குச் செலுத்தப்படும் வணக்கம் திருஸ்தலம் என்று சொல்லப்படுகிற ஒரு ஸ்தலத்திலாவது, திருவணக்கமுறை என்னப்படுகிற ஒரு வணக்கமுறையிலாவது கட்டுப்பட்டிராது. தேவன் ஆவியாயிருக்கிறதுபோல அவரை வணங்கும் வணக்கமும் ஆவிக்குரிய வணக்கமாயிருக்கும். இது அவசியம் கற்கவேண்டிய ஆழ்ந்த கருத்துள்ள பாடம். நமது கிறிஸ்தவ ஜெபஜீவியத்தை அப்பியசிப்பதற்கு ஏதேனும் ஒரு வழக்கமான இடத்தையாவது திட்டமான நேரத்தையாவது வகுத்துக்கொள்வதினால் நமது கிறிஸ்துமார்க்கம் எவ்வளவு பழுதாய்ப்போயிற்று, பாருங்கள்!— எந்நேரத்திலும் எவ்விடத்திலும் மாறாமல் ஒரு தன்மையாய் ஜெபஜீவியம் செய்வதே கிறிஸ்தவ ஜீவியம் என்பதை யறியாமல், குறித்த ஒரு நேரத்தில், குறித்த ஒரு இடத்தில் ஊக்கமாய் ஜெபிப்பதே ஜெபமாகும் என்று நினைத்து, அதற்குக் கோவிலாவது அந்தரங்க அறையாவது தகுந்த இடம் என்று கருதி, அந்த இடங்களில் ஜெபித்து வருவோருடைய ஜீவியத்தைக் கவனியுங்கள். அவர்கள் ஊக்கமாய் ஜெபிப்பதற்குக் குறித்த நாள் அல்லது நேரம் போக மற்ற நாட்களிலும் நேரங்களிலும் ஜெபிக்கும்போது அவர்களுக்கு இருந்த ஆவி ஓடிப்போய், வேறொரு ஆவி அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது. இதேன்? அவர்கள் தேவனுக்குச் செலுத்தின வணக்கம் அவர்களுடைய முழு ஜீவனையும் எந்நேரமும் பிடித்துக்கொண்ட வணக்கமாயிராமல்,

அவர்கள் குறித்துக்கொண்ட ஒரு இடத்துள்ளும் நேரத்துள்ளும் அடங்கின வணக்கமாயிருந்ததினாலே. தேவன் ஆவியாயிருக்கிறார். அவர் சதா காலங்களிலும் மாறாமல் இருப்பவர். அவர் தன்மை எதுவோ அது பொழுதுக்குப் பொழுது மாறாமல் எப்பொழுதும் உள்ளபடிக்கே இருக்கும். அதுபோலவே நாமவரை வணங்கும் வணக்கமும் ஆவியிலும் உண்மையிலும் வணங்குதலாயிருக்கவேண்டும். அவரைத் தொழும் தொழுகை நம்முடைய உயிர்நிலையைப் பிடித்து ஆட்டுகிற சக்தியாயிருக்கவேண்டும். தேவன் ஆவியாயிருக்கிறதுபோல, நாம் அவருக்குச் செலுத்தும் வணக்கமும் ஆவியில் செலுத்துகிற வணக்கமாயிருக்கவேண்டும்.

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்." இதிலே நமது உபாத்தியாயர் நமக்கு உணர்த்துகிற இரண்டாவது நினைவு என்னவெனில், ஆவியிலே வணங்குகிற இந்த மாதிரி வணக்கம் நமக்குத் தானாய் வராது, அதைத் தேவனே நமக்குத் தரவேண்டும் என்பது. தேவன் ஆவி; நமக்கு அவர் தந்தாலன்றி மற்றப்படி ஆவி கிடைக்க வழியில்லை. இதற்காக அவர் தமது குமாரனை அனுப்பினார். நமக்குப் பரிசுத்த தேவாவியானவரைக் கொடுத்து நம்மை ஆவிக்குரிய வணக்கத்திற்குப் பக்குவமுள்ளவர்களாக்கும்பொருட்டு தேவன் தமது குமாரனை அனுப்பினார். "காலம் வருகிறது, காலம் வருகிறது" என்று இரண்டுதரம் சொல்லி "அது இப்போதே வந்திருக்கிறது" என்று இயேசு சொன்னதைக் கவனித்தால், அவர் தாம் செய்ய வந்திருக்கிற வேலையைக் குறித்தே பேசுகிறார் என்பது வெளிப்படும். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு அவர் வந்தார். அவர் மகிமைப்படும்மட்டும் தேவாவியானவராகிய ஜீவஆறு பாய்வதற்கு இடமிருந்ததில்லை (யோவா. 1. 33; 7. 37, 38; 16. 7.). நமது ஆண்டவர் நமது பாவத்திற்கு முடிவு உண்டாக்கி, தமது சுய இரத்தத்தால் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, நமக்காக பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபின் மாத்திரமே அவரைப் பிதாவின் ஆவியாக நம்மண்டை இப்பூலோ



கத்தில் அனுப்பக்கூடியவரானார். கிறிஸ்து நம்மை மீட்டபின்னும் நாம் அவருக்குள் பிள்ளைகளின் நிலைமையை அடைந்தபின்னும் மாத்திரம் பிதா தமது குமாரனுடைய ஆவியை நமது உள்ளங்களில் அனுப்பி "அப்பா, பிதாவே" என்று தம்மை நாமும் கூப்பிடும்படி செய்தார். ஆதலால், ஆவியில் தொழுதுகொள்ளுதலாவது என்னவென்றால், நாம் கிறிஸ்துவின் ஆவியை அடைந்துகொண்டு பிள்ளைகளின் நிலைமை நமக்கு உண்டு என்னும் உணர்வை நம்முள் மூட்டுகிற தேவாவியானவரில் பிதாவைத் தொழுதுகொள்ளுதலேயாம்.

இந்தக் காரணத்தைவிட்டே இயேசு இந்த வசனத்தில் பிதா என்னும் பெயரை தேவனுக்கு வழங்குகிறார். பழைய ஏற்பாட்டுத் தொண்டர்களில் எவனும் தன்னை தேவனுடைய பிள்ளையாக உணர்ந்ததாகவேனும் தேவனைத் தன் பிதா என்று சொன்னதாகவேனும் நாம் பார்க்கிறதில்லை. குமாரனுடைய ஆவியைப் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் மாத்திரமே தேவனைப் பிதா என்று சிந்தித்துத் தொழக்கூடும். குமாரன் யாருக்கு தேவனைப் பிதாவாக வெளிப்படுத்தினாரோ, யார் அவருடைய குமாரனின் ஆவியைப் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே தேவனை ஆவியில் தொழுதுகொள்ளக் கூடியவர்கள். கிறிஸ்து ஒருவரே தேவனை ஆவியில் தொழும் தொழுகைக்கு வழி திறக்கிறவர். கிறிஸ்து மாத்திரமே தேவனை ஆவியில் வணங்கும் வணக்கத்தைக் கற்றுக்கொடுக்கிற உபாத்தியாயர்.

மேலும், உண்மையிலும் நாம் தேவனைத் தொழவேண்டும். இது மனவுண்மையாய் என்றாவது தேவவசனத்தின் சத்தியத்துக்குப் பொருந்தினபடி என்றாவது அர்த்தங்கொள்ளாது. 'உண்மையில்' என்னும் சொல்லுக்கு ஆழ்ந்த தெய்வீக கருத்து இருக்கிறது. பிதாவுக்கு ஒரேபேறானவராகிய இயேசு "கிருபையும் உண்மையும் நிறைந்தவர்." "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது; கிருபையும் உண்மையும் இயேசுகிறிஸ்து மூலமாய் உண்டாயின." "நானே சத்தியமும் (உண்மையும்) ஜீவனுமாயிருக்கிறேன்"

என்று இயேசு சொல்லுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில், சகலமும் இனிவரும் உண்மைப்பொருளின் நிழற்சாயையும், அது வரும் என்னும் வாக்குத்தத்தமுமாக மாத்திரம் இருந்தது. அந்த "உண்மைப்பொருளை வாஸ்தவமாய்க் கொண்டுவந்து கொடுக்கிறவர் இயேசு. அவர் கொடுக்கிறது பழைய ஏற்பாட்டார் நம்பி எதிர்பார்த்துக் காத்திருந்த மெய்ப்பொருள்." நித்தியஜீவனின் நன்மைகளையும் பெலன்களையும் உள்ளபடி மெய்யாகவே நமது சொந்த உடைமையாகப் பெற்று அநுபவிக்கிற பதவி நமக்கு அவருக்குள் கிடைக்கிறது. இயேசு கிருபையும் உண்மையும் நிறைந்தவர்; பரிசுத்த தேவாவியானவர் சத்தியத்தின் (உண்மையின்) ஆவி. இயேசுவில் இருக்கிற கிருபையை உண்மையாய் நமக்குச் சொந்தமாக்குகிறவர் தேவாவியானவர். இயேசுவிலிருக்கிற தெய்வீக ஜீவன் மெய்யாகவே நமது உள்ளத்தில் வந்து பாய்வதற்கு அவரே வாய்க்கால். இதன்படி பார்த்தால், தேவனை ஆவியில் தொழும் தொழுகையே உண்மையில் தொழும் தொழுகை என்று வெளிப்படும். அதுவே தேவாவியானவர் மூலமாய் கிறிஸ்துவிலிருந்து தெய்வீக ஜீவனைப் பெற்ற மானிட ஆத்துமா தெய்வீக ஜீவனை இயல்பாயுடைய தேவனோடு செய்கிற ஜீவனுள்ள உண்மையான ஐக்கியம்; அதுவே ஆவியாகிய பிதாவுக்கும் அவரை ஆவியில் தொழுகிற பிள்ளைக்கும் உள்ள உண்மையான ஞான ஜீவ-இசைவும் பொருத்தமும்.

இயேசு சமாரிய ஸ்திரீக்குச் சொன்னதை அவள் அப்போது அறிந்திருக்கமாட்டாள். அதின் பூர்த்தியான அர்த்தம் இன்னது என்று அவிழ்த்துக் காட்டுவதற்கு பெந்தெகொஸ்தே அவசியம். நாம் ஜெபப் பாடசாலைக்கு வருகிற முதன் முதலில் இந்த உபதேசத்தின் கருத்தை பற்றிக்கொள்ளப் போதுமான திராணி நமக்கு இராது. வரவர அதை மேலும் மேலும் தெளிவாய் அறிந்துகொள்வோம். ஆகிலும், தெரியவில்லையே என்று சும்மா இராமல் நாம் உடனே படிக்கத் துவக்கி, அவர் கொடுக்கக் கொடுக்கப் பாடம் வாங்கிக்கொள்ள வேண்டும். நமக்கு இன்னம் மாம்ச சிந்தை இருப்பதினால் தேவன் விரும்புகிற வணக்கத்தை அவருக்குச் செலுத்த இயல்



பற்றவர்களாயிருக்கிறோம். அந்தச் சிந்தையை மேற்கொள்ளுகிற ஆவியை நமக்குத் தர இயேசு வந்தார். அவரை நமக்கு இப்போது தந்திருக்கிறார். ஆனால், ஜெபம் படிப்பதற்கு இயேசு இங்கே குறிப்பித்திருக்கிற குணம் நமக்கு இருக்கிறதா என்று நம்மைச் சோதித்துக்கொள்ளவேண்டும். தேவனுக்கு உவந்தமாதிரியாக அவரைத் தொழ நமக்குச் சுயமாய்ச் சக்தி என்பதே இல்லை என்று மனதார அறிந்து அறிக்கை விடல், சிறுபிள்ளைக்கொத்த டம்பமின்மையுடன் பாடம் கேட்க அவரண்டை வந்து காத்திருத்தல், தேவாவியானவர் நமக்குள் ஜெபநினைவை ஊட்டும்போது அதைத் தட்டாமல் ஏற்றுக்கொள்ளுகிற விசுவாசம், இந்த குணங்களெல்லாம் நமக்கு இருப்பதவசியம். இவையெல்லாவற்றிற்கும் மேலான இலக்ஷணம் ஒன்று நமக்கு அத்தியாவசியம். அதைப்பற்றி நமது ஆண்டவர் நமக்குச் சொல்லப்போகிற வெகு விஷயங்கள் உண்டு என்று வரவர அறிந்துகொள்வோம். அது வருமாறு. தேவன் பிதாத்தன்மையையுடையவர், அளவில்லாத அன்போடுகூடிய தமது பிதாத்தன்மையை அவர் நமது உள்ளத்திற்குத் தெளிவுற வெளிப்படுத்துகிறார், நமக்குள் பிள்ளைத் தன்மையுள்ள இருதயத்தையுண்டாக்கி நம்மைத் தமக்குப் பிள்ளைகளாக்கிக் கொள்வதற்கு அவர் எல்லையில்லாப் பேரன்பினால் தூண்டப்பட்டு தமது குமாரனையும் தமது ஆவியையும் நமக்குத் தந்தார். இவ்வுண்மையை மேலும் மேலும் தெளிவாய் அறிந்துகொள்ளுதலே ஆவியிலும் உண்மையிலும் ஜெபிப்பதனால் வரும் பெரிய லாபம். இந்த இன்பமான உண்மையைக் கண்டுகொண்டு அதை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ளுங்குணமே நமக்கு இருக்கவேண்டிய எல்லாவற்றிலும் மேலானகுணம். இங்கே சொன்னவழியே நாம் தேவனிடம் ஆவலாய்ப் போவதற்கு கிறிஸ்து நமக்குத் திறந்துவைத்திருக்கிற புதிதும் ஜீவனுமான வழி. கிறிஸ்துவாகிய குமாரனும் அந்தக் குமாரனுடைய ஆவியும் நம்முள்ளத்தில் வாசம் பண்ணி, அங்கே தேவனை நமக்குப் பிதாவாக வெளிப்படுத்த நாம் அவர்களிடத்தில் கற்றுக்கொள்ளுதலே நம்மை மெய்யாய் ஆவியில் தொழுகிறவர்களாக்கும்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! உமக்கு ஒரு கலயத் தண்ணீர் தரமாட்டாத ஸ்திரீக்கு தேவனைத் தொழவேண்டிய விதம் இன்னது என்று போதிக்க உம்மைத் தூண்டின உமது பேரன்பை நமஸ்கரிக்கிறேன். ஆவியிலும் உண்மையிலும் ஜெபிக்கக் கற்கவேண்டுமென்று அடங்காத ஆவல் கொண்டு உம்மையடுத்திருக்கிற உமது சீஷனாகிய எனக்கும் இப்போது போதிப்பீர். இந்த நிச்சயமுடையவனாய் நான் மகிழ்ந்திருக்கிறேன். என் பரிசுத்த போதகரே! இந்த இன்பமான இரகசியத்தை எனக்குக் கற்றுக்கொடும்.

ஆவியிலும் உண்மையிலும் ஜெபிக்கிற வித்தை மனுஷனிடத்தில் அல்ல, உம்மிடத்தில் மாத்திரம் கற்கக்கூடிய வித்தை என்பதை எனக்கு உணர்த்தும். மேலும், அது குறிக்கப்பட்ட காலங்களுக்குள்ளும் வேளைகளுக்குள்ளும் கட்டுப்பட்டிருக்கிற ஒரு செய்கையல்ல, உமக்குள் நாட்டப்பட்டிருக்கிற ஜீவனிலிருந்து பாய்கிற ஜீவப்பாய்ச்சல் என்பதையும் எனக்குப் போதியும். ஜெபம்பண்ணுவதற்கு நான் தேவனிடம் வரும்போது நான் ஒன்றுந் தெரியாதவன் என்று என் அறிவின்மையை ஆழ்ந்துணரும் உணர்வோடும், அவருக்குக் கொடுக்க எனதென்ன எதுவுமில்லாத தரித்திரனாயிருக்கிறேன் என்னும் மனத்தாழ்மையோடும் வரப்பண்ணும். ஆகிலும், எனக்கு தைரியம் குன்றிவிடாமலிருக்கும்பொருட்டு, சிறுபிள்ளைக்கொத்த மழலைச்சொல்லால் நான் குளறி ஜெபிக்கும் ஜெபத்தில் உமது ஆவியானவர் கூடஇருந்து அதிலே தமது மூச்சினால் உயிர்மூட்டும்படி செய்திருக்கிறீர் என்பதை நான் மனதில் வைத்திருக்கப்பண்ணும். உமக்குள் நான் தேவனுக்குப் பிள்ளையாயிருக்கிறேன், உமக்குள் நான் பிள்ளைக்குள்ள தாராளமாய் எந்நேரமும் தேவனிடம் வரலாம். உமக்குள் எனக்குப் பிள்ளைத்தன்மையின் ஆவியும் உண்மையில் தேவனைத் தொழுகையும் கிடைத்திருக்கிறது. தேவனை அவருடைய பிதாத்தன்மையில் அறியப் பெறுவதினால் மாத்திரமே என் ஜெபம் கேட்கப்படும் என்னும் நிச்ச-



யம் எனக்கு வரும். பிதாவுக்கு உவந்த குமாரனானவரே! இதை என் மனதில் அழியாமல் பதித்தருளும். ஜெபமே நான் தேவனைத் தொழும் தொழுகை. என் முழு ஜீவியமும் தேவனைத் தொழுகிற ஜெபஜீவியமாயிருப்பதற்கு அவருக்கு என்மேலிருக்கிற பிதாத்தன்மையை நான் உணர்ந்துகொள்ளவும், அதினால் என் ஜெபஜீவியத்திற்குத் தேவையான பலத்தையும் சந்தோஷத்தையும் நான் அடைந்திருக்கவும் நீர் எனக்கு அநுக்கிரகம் செய்தருளும். ஆமென்.

## மூன்றாம் பாடம்.

### 'அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு'

அல்லது,

### தேவனோடு தனித்திருத்தல்.

"நீயோ, ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவைநோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்." (மத். 6. 6.)

இயேசு தமது முந்தின சீஷரை அழைத்தபின்பு, மலைப் பிரசங்கத்தில் முதன்முதல் அவர்களுக்கு வெளியரங்கமாய் உபதேசம் செய்தார். தேவ ராஜ்யம், அதில் செல்லும் சட்டங்கள், அதிலே இருக்கிற ஜீவியம், இவற்றைக்குறித்து அவர் அதில் விரித்துரைத்தார். அதின்படி, தேவ ராஜ்யத்தில் தேவனே இராஜாவாயிருப்பதுந்தவிர, அவரே அதின் குடிகளுக்குப் பிதாவாயும் இருக்கிறார். அதின் குடிகளுக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கிறவர் அவராயிருப்பதுந்தவிர, அவர்களுக்கு வேண்டியதெல்லாம் அவரே. அதில் அநுபவிக்கப்படுகிற இன்ப சுகாநுபவங்கள் எல்லாம் என்னவென்-

றால், அவனை மேலும் மேலும் அறிந்துகொள்வதும் அவருடன் இன்ப சகவாசம் செய்வதுமே. இயேசு ஸ்தாபிக்க வந்த புது இராஜ்யத்தின் தன்மை இதுவாதலால், அதைக் குறித்து அவர் விபரம்சொல்லுகையில் அதின் குடிகளுடைய ஜெபஜீவியத்தைச் சொல்லாமல் விடக்கூடாது. ஏனெனில், அது அவர் எடுத்துக்கொண்ட பிரசங்கப்பொருளோடு சம்பந்தப்பட்ட விஷயம். ஆகையால், அதிலே ஜெபத்தின் தன்மை இன்னது என்று திறந்து காட்டுவது அவருக்கு அவசியமாயிற்று. மோசே ஏற்படுத்தின நியாயப்பிரமாணத்தில், அவன் ஜெபம் செய்யவேண்டும் என்கிற கட்டளை கொடுத்ததுமில்லை, ஒருவன் ஜெபம் செய்ய இஷ்டப்பட்டால் அதை இன்னின்ன முறைப்படி செய்யவேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்ததுமில்லை. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள்கூட ஜெபம் செய்தலைப்பற்றி வெளிப்படையாய் எதுவும் சொல்லுகிறதில்லை. கிறிஸ்து ஒருவர் மாத்திரமே ஜெபம் செய்தலைக் குறித்துப் போதிக்கிறார்.

ஜெபத்தைப்பற்றி ஆண்டவர் தமது சிஷருக்குச் சொன்ன முதல் விஷயம் ஜெபத்திற்கென்று அவர்களுக்கு ஒரு தனியிடம் இருக்கவேண்டும் என்பது. ஒவ்வொருவனுக்கும் அவன் தன் தேவனோடு தனித்து இருக்கத்தக்க ஒரு அந்தரங்க இடம் இருக்கவேண்டும். உபாத்தியாயர் ஒருவர் இருந்தால் அவருக்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கவேண்டும். ஜெபப் பாடசாலையில் இயேசு ஒருவரையே சரியான உபாத்தியாயரென்று அறிந்து அவரிடத்தில் படிக்கச் சம்மதித்துக்கொண்டோம். இனிமேல் தேவனைத் தொழுதலானது குறித்த இடங்கள், காலங்கள், இவற்றுள் அடங்கியிருப்பதல்லவென்று அவர் நமக்குச் சமாரியாளில் கற்றுக்கொடுத்ததை அறிவோம். ஆவிக்குரிய மெய்வணக்கமாகிய தேவவணக்கம் நமது ஜீவியம் முழுமையிலும் ஆவியில் செய்யப்படுவதான ஒரு செய்கை என்று அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார். அதாவது, நமது மானிட சுபாவம் முழுமையும் நமது முழு ஜீவகாலமும், இடையறாமல் தேவனை ஆவியிலும் உண்மையிலும் தொழுதலாயிருக்கவேண்டும். ஆதலால் நாமொவ்வொருவரும் தனக்கொரு தனியிடம் தேடிக்கொண்டு அதி





லே ஒவ்வொருநாளும் அவருடைய வரவுபார்த்திருக்கவேண்டும். அந்தரங்கமான அந்த உள்ளறையே இயேசு பாடம் சொல்லத்தகுந்த பாடசாலை. அந்த இடம் எதுவென்றால், அது எந்த இடமாயிருந்தாலுமிருக்கலாம். தினம் இடத்திற்கிடம் பெயர்ந்து வசிக்கும் தொழில் ஒருவனுக்கிருந்தால் ஜெப இடமும் தினந்தோறும் மாறுவதான இடமாயிருக்கலாம். ஆகிலும், இடம் எந்த இடமானாலும் அதிலே ஒரு அந்தரங்க ஒழிவிடம் இருக்கவேண்டும். அதிலே வேறு சோலி, வேறு சிந்தை ஒன்றும் வரவொட்டாமல் தடுத்து, மாணாக்கன் தான்மாத்திரமே உபாத்தியாயருக்கு முன் வந்திருக்கவேண்டும். அவனுக்கு அவர் பிதாவை அறிந்து தொழுகிற வித்தையைக் கற்றுக்கொடுப்பார். அந்த இடத்தில்மாத்திரமே, இயேசு தப்பாமல் வந்திருந்து நமக்கு ஜெபம்பண்ணப் போதிப்பார்.

தன் பாடசாலை காற்றுலாவி, வெளிச்சம் நிரம்பியிருந்து, மாணாக்கர் பிரியத்தோடு வந்து தரித்திருக்க விரும்புகிற இடமாயிருக்கவேண்டும் என்று ஒவ்வொரு நல்ல உபாத்தியாயனும் கவலைப்படுவான். அவ்வாறே நாம் ஜெபம் கற்கிற அந்தரங்க அறையும் மனதிற்கு இனிய இடமாயிருக்கவேண்டுமென்று இயேசு கவலைப்படுவதை அவர் மலைப்பிரசங்கத்தில் ஜெபத்தைப்பற்றிப் பேசின முதல்வார்த்தைகளினாலேயே அறியலாம். நாம் அந்த இடத்தில் போய்த் தரித்திருப்பதினால் நமக்கு வரும் முக்கிய லாபம் என்ன என்பது அவர் சொல்வதை உற்றுக் கவனித்தால் உடனே தெரியும். மூன்றுமுறை அவர் பிதா என்னும் நாமத்தை எடுத்துக்காட்டி அதின்மேல் நமது கவனத்தை மூட்டுகிறார்: "உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு," "உன் பிதா உனக்குப் பலனளிப்பார்," "உங்கள் பிதா உங்களுக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிறார்." ஆதலால், தனியறைஜெபத்தில் நமக்குக் கிடைக்கிற முதல் லாபம் பிதா தரிசனம். உள்ளறையில் நமக்குப் பிரகாசிக்கிற வெளிச்சம் பிதாவின் முகத்தில் ஜொலிக்கிற ஒளி. நமது அந்தரங்க ஜெபக்கூடத்தில் இயேசு தேவலோகத்திலிருந்து கொண்டுவந்து உலாவச் செய்கிற இனிய தென்றல் காற்று தேவனுள்ளத்திலிருந்து

பாய்கிற பிதாவன்பு, அதாவது, தேவனுக்கு நம்மேலிருக்கிற குறையில்லாப் பேரன்போடுகூடிய பிதாத் தன்மை. அந்த இன்னிளந்தென்றலைச் சுவாசித்துக்கொண்டே நாம் ஜெபிக்க வேண்டும் என்பது நமது ஆண்டவருடைய விருப்பம். அந்த நறுங்காற்றை யுட்கொண்ட நமது மனதில் உதித்து எழும்பும் ஜெபமெல்லாம் பட்சமுள்ள பிதாவை சிறுபிள்ளைக்கொத்த விசுவாசமாய் நம்பியிருக்கிற ஆநந்த நம்பிக்கையாயிருக்கும். நமது உபாத்தியாயர் நமக்கு ஜெபம் போதிக்கிறமாதிரி அவர் நம்மை ஜீவனுள்ள பிதாவின் சமுகத்தில் கொண்டுவிட்டு அவருடைய பேரன்போடுகூடிய தரிசனத்தை நமக்குக் கிடைக்கப்பண்ணுதலே. அந்தப் பிதாவின் சமுகத்தில் நாம் கேட்பதெல்லாம் பலிக்கும். ஆண்டவர் அதைப்பற்றி நமக்குக் கற்றுக்கொடுக்கிறதைக் கவனித்துக் கேட்டுப் படிப்போம், வாருங்கள். முதலாவது, 'அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு.' மாமிச சிந்தையுள்ள ஆத்துமாவின் கண்ணுக்கு தேவன் தம்மைக் காட்டமாட்டார். நாம் தேவனைத் தொழும்போது, எவ்வளவுநேரம் நமது சுயநினைவுகளிலும் சோலிகளிலும் சிந்தனைவைத்திருக்கிறோமோ, அவ்வளவு நேரமும் காணரிய ஆவியாகிய அவரைப் பார்க்கமாட்டாதவர்களாயிருப்போம். ஆனால், தொண்டருள் எவன் தன் சிந்தையை உலகத்தையும் அதின் விவகாரத்தையும் விட்டு இழுத்துவைத்துக்கொண்டு அதை முழுமையும் அவர்மீது செலுத்திக் காத்திருக்கிறானோ அவனுக்குப் பிதா தம்மை வெளிப்படுத்துவார். அவன் உலக சோலிகளையும் கவலைகளையும் தொலைத்து வைத்து அவைகள் உள்ளே வாராமல் கதவடைத்து, தேவன் இருக்கிற இரகசிய இடத்திற்குத் தன்னை அழைத்துப்போக இயேசுவுக்குத்தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, தேவனுடைய பிதாவன்பு அவன் மேல் உதித்துப் பிரகாசிக்கும். எதுவும் எட்டிப்பார்க்கவொட்டாமல் கதவு சாத்திப் பிரத்தியேகப்படுத்தப்பட்டிருக்கிற இப்பேர்ப்பட்ட உள்ளறை, அதாவது, நம்மைச் சூழ்ந்துள்ள எல்லாவற்றிலிருந்தும் நம்மை முற்றும் பிரித்துவைத்துக் கொண்டிருத்தல் திரைக்குள் இருக்கிறதும் காணுதற்கரிதுமான தேவனுடைய கூடாரமாகிய உள்ளுக்குள்ளான ஆவிக்



குரிய தேவாலயத்தைக் காட்டும் படமாயிருக்கிறது. ஆகையால், நாம் நமக்கு உண்டுபண்ணிக்கொள்ளுகிற அந்தரங்கத் திருஸ்தலம் தேவன் வாசம்பண்ணுகிற அந்தரங்கத் திருஸ்தலத்துக்குள் நாம் வருவதற்குப் பேருதவியாயிருக்கும். திரைக்குள் மறைந்து இரகசியமாயிருக்கிற ஆவிக்குரிய இந்த திருஸ்தலத்திலேதான் நமது ஆவி வந்து காணரும் பரம்பொருளாகிய தேவனைச் சந்திக்கிறது. பலிக்கும் ஜெபம் செய்வது எவ்வாறு என்று நாம் விசாரிக்கிற முதலாரம்பத்திலேயே அதைப்பற்றிய உபதேசம் நமக்குக் கிடைக்கிறது. அது என்னவெனில், நாம் தனித்துப் பிதாவோடு இருக்கும் உள்ளறையிலேமாத்திரம் பலிக்கும் ஜெபம் செய்யச் சரியாய்ப் படிப்போம். இதை மறக்கலாகாது. பிதா அந்தரங்கத்தில் இருக்கிறார்; பிதா எங்கே நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார், எங்கே போனால் நாம் அவரைத் தப்பாமல் காணலாம் என்பதை இந்த வார்த்தைகளால் இயேசு நமக்குக் காட்டுகிறார்.

தனிஜெபம் சரியாய்ச் செய்ய எங்களாலாகவில்லையே, என்ன செய்வோம் என்று கிறிஸ்தவர்கள் பலதரம் முறையிடுகிறார்கள். நாங்கள் பாவிகளாச்சே என்னும் நினைவு அவர்களுடைய மனத்திடனை அழித்துவிடுகிறது; ஜெப அனல் அவிந்து அவர்கள் உள்ளம் குளிர்ந்து இருண்டிருக்கிறது. அவர்களுடைய ஜெபம் வெகு சொற்பம்; அந்தச் சொற்ப ஜெபமும் விசுவாசமும் சந்தோஷமும் அஸ்தமித்த ஜெபம். நாங்கள் விரும்புகிறதற்குத் தக்கபிரகாரம் பிதாவண்டை வர எங்களுக்கு இயலவில்லையே என்னும் சிந்தையினால் அவர்கள் தைரியம் குன்றி, ஜெபிக்கத் தடைப்படுகிறார்கள். தேவனுடைய பிள்ளையே! உன் உபாத்தியாயர் சொல்வதைக் கேள். அவர் சொல்வது இது: நீ தனிஜெபம் செய்யப் போம்போது உன் மனதில் இருக்க வேண்டிய முதல் நினைவு பிதா அந்தரங்கத்தில் இருக்கிறார், பிதா அங்கே என் வரவுக்குக் காத்திருக்கிறார் என்பதுதான். உன் உள்ளம் ஜெபத்திற்குக் குளிர்ந்து கிடக்கிறது என்னும் துக்கசிந்தை எழும்புகிறதா? அந்தக் காரணத்தினிமித்தமே நீ உன் பட்சமுள்ள பிதாவின் சமுகத்தில்

போவது அவசியம். ஆதலால், தவறாமல் அவரண்டை போ. தகப்பன் தன் பிள்ளைகள்மேல் உருகி இரங்குவதுபோல கர்த்தர் உன்மேல் உருகி இரங்குகிறார். அவரிடம் போனால் அவருக்குச் சொல்ல எனக்கு அதிக விசேஷங்களில்லையே என்று சிந்திக்காதே. அவர் உனக்குச் சொல்லவும் உனக்குக் கொடுக்கவும் வைத்திருக்கிற அநேகம் அவருக்குண்டு என்பதை நினைத்துக்கொள். நீ முன்பின் யோசியாமல், நேரே அவரிடம் போய், அவருடைய முகத்தை அண்ணாந்து பார். உன் உள்ளத்தில் அவருடைய அன்பை நினைக்கிற நினைவை வைத்துக்கொண்டுபோ. உருகி இரங்குகிற அவருடைய ஆச்சரியமான திருவன்புத் தியானமே உன் மனதில் குடிகொண்டிருக்கட்டும். அவரைப் பார்த்ததும் வெட்கப்பட்டுச் சும்மா இராமல், உன் இருதயம் எவ்வளவு பாவம் பிடித்ததும், குளிர்ந்ததும், இருண்டதுமாயிருக்கிறது என்று வெளியிட்டுச் சொல். அவருடைய திருவுள்ளம் உன்மேல் அன்பு பொங்கி வழிகிற பிதா வுள்ளம். குளிர்ந்து இருண்டிருக்கிற உன் உள்ளத்திற்குள் பிதாவின் உள்ளத்திலிருக்கிற அன்புத் தீ வந்து மூண்டு பற்றி, அனலையும் ஒளியையும் அங்கே உண்டாக்கிவிடும். ஆதலால், இயேசு சொல்லுகிறபடி செய். கதவையடைத்துக்கொண்டு, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அகண்ட சொரூபியாகிய தேவனோடு நீ தனித்திருந்து பேசக் கிடைக்கிற இந்தச் சிலாக்கியம் ஆச்சரியமானதல்லவா? அந்தப் பேச்சில் நீ அவரை என் தகப்பனே! என்று மகிழ்ந்து கூப்பிடப் பெறும் சிலாக்கியம் அதிலும் பெரியது.

இரண்டாவது. "அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்குப் பலனளிப்பார்." தனி ஜெபம் பலனற்ற ஜெபமாயிராது என்று இயேசு இங்கே நமக்கு நிச்சயந்தருகிறார். அதின் பலன் நமது தினஜீவியத்தில் தெரியும். உலகத்திலே நாம் செய்யவேண்டிய தினஜீவியத்தை நாம் தனித்து தேவனோடிருக்கும்போது அவரை நம்பி அவர் கையில் ஒப்புவித்துவிட்டால், நாம் அவ்விடத்தில் கேட்டதற்கு உத்தரவு அவர் நமக்குத் தரும் பலவித ஆசீர்வாதங்களில் வெளிப்படும். நாம் அந்தரங்கத்தில் தேவனண்டை வரும்போது, அவர்



அளவில்லாத பிதா வன்புடையவராயும் தவறாத வாக்குடையவராயும் நம்மைச் சந்திக்கிறார்; அதற்குத் தக்கதாய்ப் பிள்ளைக்கொத்த கபடில்லா விசுவாசம், அதாவது, நாம் ஜெபித்துக் கேட்ட நன்மை கிடைக்கும் என்கிற உறுதி நமக்கு இருக்கவேண்டும். இதுதான் ஆண்டவர் நமக்கு இங்கே கற்றுக்கொடுக்கிற பாடம். "தேவனண்டை வருகிறவன் அவர் தம்மைத் தேடிவருகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்று விசுவாசிக்கவேண்டும்." தனியறையில் ஜெபிக்கையிலே நமக்கு இருந்த உக்கிரம், ஊக்கம், இவற்றிற்குத் தக்கபடி பலன் வரும் என்று நினைக்கப்படாது; நமக்கு பிதாமேலிருக்கிற நம்பிக்கைக்குத் தக்கபடி அவருடைய அன்பும் வல்லமையும் நமக்குப் பலனளிக்கும். ஆதலால், இந்த ஒரு பாடம் நமக்குச் செம்மையாய் வரவேண்டும் என்று நமது உபாத்தியாயர் விரும்புகிறார். அதாவது: உன் பிதா அந்தரங்கத்திலிருக்கிறவர்; அந்தரங்கத்திலே வந்தால் மாத்திரம் அவர் உன்னைப் பார்த்து நீ சொல்வதைக் கேட்பார்; ஆகையால் அங்கே போய் அவரோடு தரித்திரு; அவ்விடத்தை விட்டு வெளியே வரும்போது, அவர் எனக்குப் பலனளிப்பார் என்று உறுதியாய் நம்பியிரு. நீ கேட்டது வரும் என்னும் உறுதியை விடாதே; பிதாவை நோக்கிப் பண்ணின ஜெபம் வீணாகவே மாட்டாது என்று அவரை நம்பியிரு; அவர் உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

தேவன் உன்மேல் வைத்திருக்கிற பிதாவன்பைக் குறித்து உனக்கு இன்னம் அதிக நிச்சயம் வருவிப்பதற்கு கிறிஸ்து மூன்றாவது ஒரு வார்த்தையைச் சொல்லுகிறார்: "உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்வதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்" (மத். 6. 8.). நமக்கு இன்னது தேவை என்று நம்மைவிடச் செம்மையாய் தேவன் அறிந்திருக்கிறார் என்னும் வார்த்தைகளை முதலில் பார்த்தவுடனே, ஜெபமே அவசியமல்ல என்பதுபோல் தோன்றும். ஆயினும், ஜெபமாவது இன்னது என்று ஆழ்ந்தறிகிற அறிவு நமக்கு வரவர, இங்கே சொல்லப்பட்ட விசேஷமானது நமது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கு உதவும். நாம் சொல்வதைக் கேட்க தேவனுக்கு மன

பில்லை; அதைக் கேட்பதற்கு அதிக வசனிப்பினாலும் அலட்டுதலினாலும் அவரை நெருக்கிக் கட்டாயப்படுத்தவேண்டுமென்றிப்படி அஞ்ஞானிகள் நினைப்பதுபோல் தேவனைக் குறித்து நாம் நினைக்கத்தகாது என்பதை இந்த வார்த்தைகள் நமக்கு உணர்த்தும். எனக்கு இதிது தேவை என்று என் பிதாவுக்குத் தெரியுமோ என்னவோ என்னும் கேள்வி நமது சிந்தையில் பிறக்கும்போது அதைக்குறித்து ஆத்திரப்பட்டு நினைவழிந்து அலைப்பாமல், பரிசுத்தமாய் அமர்ந்திருக்கிற சிந்தையில் நினைவு சொருமடங்கி நம்பிக்கையாய் ஜெபிக்கவேண்டுமென்று இந்த வார்த்தைகள் நமக்குப் போதிக்கும். மேலும், நாம் கேட்பது திருவசனத்துக்குச் சம்மதமானதும் தேவனுக்கு மகிமை வருவிப்பதுமானதென்று தேவாவியானவர் நமது உள்ளத்தில் நிச்சயம் பிறப்பிக்கும்போது, இது எனக்குத் தேவையாகையால் எனக்குக் கிடைக்கவேண்டுமென்று என் பிதா அறிவார் என்று நம்பியிருக்க இந்த வார்த்தைகள் நமக்குத் துணிவூட்டும். அதுவுந்தவிர, நமது ஜெபத்திற்கு உத்தரவுவரத் தாமதமுண்டாகும்போது, பிதாவே! இது எனக்குத் தேவை என்று உமக்குத் தெரியும் எனச் சொல்லி ஜெபத்தில் விடாப்பிடியாய் உறுதியாயிருக்க இந்த வார்த்தைகள் நம்மைத் தூண்டும். ஜெபம்பண்ண தேவனிடம் நாம் போம்போது நமக்குள் சிறுபிள்ளைக்கொத்த பசுமையான மனமும் கபடின்மையும் இருக்கவேண்டும் என்பது கிறிஸ்து நமக்கு இங்கே வற்புறுத்திக் கற்றுக்கொடுக்கிற பாடம். இப்பேர்ப்பட்ட மனதை நமக்குள் அவருடைய ஆவியானவர் உண்டாக்கும்வரையில் நாம் பிதாவின் முகத்தைப் பார்க்கிற பார்வையை விடப்படாது. சிலவிசை, நாம் நம்மை மறந்து சிந்தையழுந்தி ஊக்கமாய் மன்றாடும்போது, நமது கருத்தெல்லாம் நமது வைராக்கியத்தில் சென்றிருப்பதினால், நமது மன்றாட்டு இன்னது என்று பிதா அறிவார் என்பதை மறந்துவிடுகிறோம். அப்போது, தீவிரமாய்ச் செல்லும் நமது மனதை அடக்கி அமர்த்திக்கொண்டு: என் பிதா பார்க்கிறார், என் பிதா கேட்கிறார், என் பிதா அறிகிறார் என்று அதற்குச் சொல்லவேண்டும். பதைக்கிற நமது மனதைப் பார்த்து, பிதாவைக் கேட்ட மன்றாட்டுக் கிடைத்திருக்கிறது என்று



அதற்கு நிச்சயம் பிறக்க தேவ உத்தரவை எடுத்துச் சொல்வது நமது விசுவாசத்திற்கு உதவியாயிருக்கும்.

ஜெபம் படிக்க கிறிஸ்துவின் பாடசாலைக்குப் புதிதாய் வந்திருக்கிற மாணாக்கரே! இந்தப் பாடங்களை நீங்களெல்லாரும் படித்து அப்பியாசியுங்கள். அவைகளைப் பூரணமாய் உங்களுக்கு வருவிக்க அவர் சமர்த்தரென்று அவரை நம்புங்கள். அந்தரங்கமான உள்ளறையில் வெகுநேரம் வாசம்பண்ணப் பழகுங்கள். அதிலே மனுஷர் வராமல் கதவைப் பூட்டி தேவனோடு தனித்திருங்கள். அங்கேதான் பிதா உங்கள் வரவு பார்த்துக்கொண்டிருக்கிறார். அங்கேதான் இயேசு உங்களுக்கு ஜெபம்பண்ணப் போதிப்பார். அந்தரங்கத்தில் பிதாவோடு தனித்திருத்தல் உனக்கு எல்லாவற்றிலும் பெரிய சந்தோஷமாயிருக்கட்டும். உன் அந்தரங்க ஜெபத்திற்குப் பிதா வெளியரங்கமாய்ப் பதிற்பலனளிப்பார் என்று நிச்சயித்திரு. அது பலனற்றதாகாது என்னும் துணிவு உனக்கு நாளுக்குநாள் ஞானபல மூட்டிக்கொண்டிருக்கட்டும். நீ கேட்கிறது உனக்குத் தேவையென்று பிதா அறிந்திருக்கிறார் என்று நம்பு. இந்த நம்பிக்கையே உன் தேவன் இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கிற தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படி உனக்கு அநுக்கிரகம் பண்ணுவார் என்று துணிந்து வேண்டியதையெல்லாம் அவரிடம் வந்து தாராளமாய் நீ கேட்பதற்கு அவர் உனக்குக் கொடுத்திருக்கிற அநுமதியாயிருக்கட்டும்.

“ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.”

போற்றுதற்குரிய இரட்சகரே! என் முழு உள்ளத்தாலும் உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில், தேவரீர் உள்ளறையை ஏற்படுத்தி அதிலே வந்து உமது மாணாக்கரைத் தனித்தனியே கண்டு அவர்களுக்குப் பிதாவை வெளிப்படுத்துகிறீர். ஆ என் ஆண்டவரே! பிதாவுக்கு என்மேல் உருக்கமான அன்பும் பட்சமும் இருக்கிறது என்று உணருகிற என் விசுவாசத்தைப் பலப்படுத்தும். அதினால், என்னில் பாவம் உண்டு என்பதைக் கண்டு நான் திடனழியும்போதும், என்னில் மனக்கலக்கம் வரும்போதும், நான் முன்

பின் யோசியாமல் துணிந்து என் பிதா என்னைப் பார்க்கக் காத்திருக்கும் இடத்திற்குப் போகவேண்டும் என்கிற எண்ணம் என் மனதில் எப்போதும் முந்தி வந்துகொண்டிருக்கும். அந்த இடத்திலே செய்யப்படுகிற ஜெபம் ஒருபோதும் பலனற்றதாயிராது. நான் கேட்கும் முன்னேயே அவர் எனக்குத் தேவையானது இன்னது என்று அறிந்திருக்கிறார் என்கிற நினைவு அவர் தமது பிள்ளையாகிய நான் கேட்பதைத் தருவார் என்னும் அமர்ந்த நிச்சயத்தை என்னில் உண்டாக்கப்பண்ணும். அந்தரங்க ஜெபஅறை எனக்கு இந்தப் பிரபஞ்சத்திலிருக்கிற வேறெந்த இடத்தையும்விட அதிக இன்பமான இடமாயிருக்கச் செய்யும்.

மேலும், ஆண்டவரே! உலகமெங்கும் உமது விசுவாசிகள் உம்மைத் தேடுகிற தனியறைகளிலே அவர்களை ஆசீர்வதியும் என்று நான் மன்றாடும்போது என் ஜெபத்தைக் கேட்டருளும். கிறிஸ்தவ ஜீவியத்தில் இளந்தைகளுக்குப் பிதாவின் உருக்கமான அன்பை உள்ளுணர்வாய் உணர்த்தும். அந்த அன்பை ருசித்து அவர்கள் இனிமேல் தனிஜெபமானது சுமத்தற்கரிய பாரமும் கடமையும் என்று நினைப்பதை விட்டு அதைப் பெரியதோர் சிலாக்கியமும் இன்பமும் நன்மையும் என்றுணர்ந்துகொள்ளப் பண்ணும். ஜெபத்திலே எதைக் கேட்கலாமென்று தெரியாமையினால் ஜெபம் பண்ணாமலிருக்கிறவர்களை உற்சாகப்படுத்தி ஜெபத்திற்குத் தூண்டும். அவர்கள் தங்களுக்குள்ள வெறுமையோடே வந்தாலே போதும், பிதா அவர்களுக்கு எது தேவையென்று அறிந்து கொடுப்பார், அப்படிச் செய்வதே அவருக்குப் பிரியம் என்று அவர்களுக்கு உணர்த்தும். பிதாவிடம் அவர்கள் வரும்போதெல்லாம் ஏதேதைச் சொல்லலாம் என்று நினைத்துத் தடுமாறாமல், எங்களுக்கு வேண்டியதையெல்லாம் அவரே நினைத்துப் பார்த்துக் கொடுப்பார் என்று நம்பிவர அவர்களைத் தூண்டும்.

உமக்கு ஊழியஞ்செய்கிற உம்முடைய எல்லா ஊழியரின் தனிஜெப அறைகளை விசேஷமாய் ஆசீர்வதியும். அதிலே அவர்களுக்கு தேவனுடைய உண்மையையும் தேவ



னுடைய கிருபையையும் வெளிப்படுத்தும். அதிலே அவர்களை தினமும் புது எண்ணெயால் அபிஷேகம் செய்யும். அதிலே அவர்களுக்கு நாள்தோறும் புதுப்பலம் அருளும். அதிலே அவர்கள் மற்ற மனுஷருக்குக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டிய நன்மைகளை முந்தி அவர்களுக்குக் கட்டளையிட்டு அவர்க ளநுபவிக்கப் பண்ணும். ஆண்டவரே! எங்களெல்லாரையும் அவரவர் தனியறைகளிலே உம்மோடும் பிதாவோடும் நெருங்கி ஐக்கியம் செய்யப்பண்ணும். ஆமென்.

## நாலாம் பாடம்.

### ‘ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது’

அல்லது,

### மாதிரி ஜெபம்.

*“நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே.”* (மத். 6. 9.)

திருஷ்டாந்தம் காட்டிப் போதிப்பது எவ்வளவு வல்லமையாய் அறிவூட்டும் என்பது ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தெரியும். ஆதலால், ஒரு பிள்ளைக்கு ஒன்றைச் சொல்லிக் கொடுக்கும்போது, அதை ஏது செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்று சொல்வதோடு விடாமல், அதைச் செய்து காட்டி விளக்குவார். ஜெபத்தில் நமக்குள்ள குறைவை அறிந்த நமது பரம உபாத்தியாயரும் அப்படியே செய்கிறார். நமது பிதாவிடம் போம்போது அவருக்கு என்ன சொல்லவேண்டும் என்று நமக்குச் சொல்லத் தெரியாமையை அறிந்து, அவருக்கு நாம் சொல்லவேண்டிய கருத்தை மாத்திரமல்ல, வார்த்தைகளையும் அவர் நமக்குத் தந்திருக்கிறார். நமக்கு ஒருமாதிரி ஜெபத்தை அவரே வகுத்

னுக் கொடுத்திருக்கிறார். அதற்குள் நித்தியஜீவனின் இன்னிளந் தென்றல் வீசுகிறது. அதற்குள் நித்தியஜீவனின் பரிபூரணமெல்லாம் கடுகுக்குள் கடல் அடங்கினாற்போல் அடங்கியிருக்கிறது. அது சிறுபிள்ளை மழலைச்சொல்லால் மிழற்றுதற்கு எளிதாயுமிருக்கிறது, தேவன் நமக்குக் கொடுக்கக்கூடிய எல்லா நன்மைகளையும் ஒன்றும் விடாமல் தன்னுள் அடக்கிக்கொண்டு தெய்வீக செல்வ வளம்பொருந்தினதாயுமிருக்கிறது. இந்த ஜெபத்தில் இருக்கிற அச்சே மற்ற எல்லா ஜெபங்களிலும் பதிந்திருக்கவேண்டும். அந்த ஜெபமே மற்ற எல்லா ஜெபங்களிலும் உடலுள் உயிர்போலிருக்கவேண்டும். தேவனுக்கு முன் நமது உள்ளத்தையெல்லாம் உருக்கி ஊற்ற விரும்பினால் அதற்கு அந்த ஜெபம் உதவுவதுபோல் வேறெந்த ஜெபமும் உதவாது.

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே.—தேவனுக்கு இங்கே எடுத்து ஆளப்பட்ட பெயரின் அருமையைச் சரியாய் அறியவேண்டுமானால், வேதத்தில் எந்தப் பரிசுத்தவானும் தேவனைப் பிதாவே என்று சொல்லித் தொழுதுவந்ததே இல்லை என்பதை மறக்கப்படாது. தேவ குமாரன் தமது பிதாவை நமக்கும் பிதாவாக்கும்பொருட்டு வந்தார். தேவன் தமது குமாரனுக்குள் தம்மை நமக்கு வெளிப்படுத்தின பிரமிக்கத்தக்க வெளிப்படுத்தலைத் தெரிவிக்கும் பெயர் பிதா. நாம் தேவனைப் பிதா என்று தொழும்போது இந்த அதிசயிக்கத்தக்க வெளிப்படுத்தலின் மையத்தில் நிற்கிறோம். அதற்குள் அநேக இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. நாம் தேவனுக்குப் பிள்ளைகளாவதற்கு கிறிஸ்து நமக்குச் சாபநிவிர்த்தி யுண்டாக்கின இரக்ஷண்ணிய இரகசியம் அதில் அடங்கும். தேவாவியானவர் நமக்குப் புதிய பிறப்பிலே புதியஜீவனைக் கொடுத்த மறுஜநந இரகசியம் அதிலிருக்கிறது. விசுவாசத்தின் இரகசியமும் அதிலடங்கியிருக்கிறது. ஏனெனில், இரட்சிப்பு சம்பாதிக்கப் படுவதற்குமுன், இரட்சிப்பு இன்னது என்றே சீஷர்களுக்கு இன்னம் தெரியாதிருக்கையில், இனிமேல் வரப்போகிற இரட்சிப்பை அநுபவிக்கிற அநுபவ வார்த்தைகளை இரட்சகர் அவர்களுடைய வாயிலே போடுகிறார். ஏன்? முன்னாகவே அவர்களை அந்த



இன்பமான அநுபவத்திற்கு ஆயத்தப்படுத்தும்பொருட்டு. பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்னும் வார்த்தைகள் கர்த்தருடைய ஜெபம் முழுமைக்கும், இப்புவியில் செய்யப்படுகிற வேறு எல்லா ஜெபத்திற்கும் திறவுகோல். அந்தப் பதங்களுள் வைத்துச் சுருட்டியிருக்கிற பொருளை நாம் விரித்துப் பார்த்துப் படிக்க வெகுகாலம் பிடிக்கும். அதற்கு நமது ஆயுள்நாளெல்லாம் வேண்டும்; அவைகளின் முழுக் கருத்தையும் சம்பூரணமாய் நாம் தெரிந்துகொள்ள நித்திய காலம் செல்லும். தேவனுக்கு நம்மேலிருக்கிற பிதாவன்பைப் படிப்பது ஜெபப் பாடசாலையில் நாம் படிக்கிற லேசான முதற்பாடமாயுமிருக்கிறது, அதுவே நாமதில் படிக்கிற எல்லாவற்றிலும் உயர்ந்த பாடமாயுமிருக்கிறது. நமக்குள் இருக்கிற நான் என்னும் ஆள் ஜீவனுள்ள தேவனோடு நெருங்கின கூட்டுறவை அடைந்துகொண்டு, அவருடைய அன்பை அநுபவிக்கிற ஞான ஐக்கியத்திலே ஜெபம் பிறக்கும். தேவனுக்குள் இருக்கிற பிதாவன்பை தேவாவியானவர் நமது ஆவிக்கு மேலும் மேலும் எடுத்துக்காட்டி வெளிப்படுத்த வெளிப்படுத்த நமது ஜெபத்திற்கு வல்லமை முளைத்து வளரும். தேவனுக்குள் அளவில்லாத பிதாத்தன்மையும், அந்தப் பிதாத்தன்மைக்குள் அளவில்லாத உருக்கமும் இரக்கமும் பட்சமும் பொறுமையும் இருப்பதை நாம் அறிந்துகொண்டு, நமது ஜெபத்தைக் கேட்டு ஒத்தாசை செய்ய அவருக்கிருக்கிற அன்போடுகூடிய ஆசையை ருசிக்க ருசிக்க, ஜெப ஜீவியம் நமக்கு இன்ப ஜீவியமாய்விடும். பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்கிற வார்த்தைகளை தேவாவியானவர் நமது உள்ளத்திலும் ஜீவியத்திலும் நாட்டி அவைகளை நமக்கு வாஸ்தவமாகவே இன்பமான அநுபவமாக்கும்மட்டும் எவ்வளவுநேரம் பிடித்தாலும் அவ்வளவுநேரமும் அவருக்குக் கொடுக்கத் தவறாதிருப்போமாக. இந்த அநுபவம் நமக்குச் சித்திக்குமானால், நமது ஜெபம் தப்பாமல் பலிக்கிற இரகசிய வல்லமையுள்ள ஸ்தலத்திற்கு வந்துவிட்டோம்.

'உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.' இதில் நமது மனத்தைத் தட்டி யுணர்த்துகிற ஒரு விசேஷமிருக்கிறது.

ஜெபம் செய்ய தேவனிடம் வரும்போது, நமக்குத் தேவையானவைகளையெல்லாம் முந்தி அவருக்குச் சொல்லி எல்லாவற்றிற்கும் கடைசியிலே தேவனுக்குரியவைகளை நினைத்துக் கேட்பது நமது வழக்கம். நாம் நமக்கு வகுத்துக்கொண்ட இந்த வரிசைக்கிரமத்தை நமது உபாத்தியாயர் மாற்றிக் கொடுக்கிறார். முந்தி உமது நாமம், உமது ராஜ்யம், உமது சித்தம்; பிந்தி, எங்களுக்குத் தாரும், எங்களுக்கு மன்னியும், எங்களை நடத்தும், எங்களை ரட்சியும். இந்தப் பாடம் அற்பமென்று நினைக்கலாகாது. இது மிக முக்கியமான பாடம். சரியான தேவவணக்கத்திற்கு பிதாவே நமதுள்ளத்தில் எல்லாவற்றிற்கும் முந்தினவராயிருப்பது அவசியம். நமது இதயம் நாடும் சகலமும் அவரேயாய் இருப்பதே உண்மையான வணக்கம். ஜெபத்தில் அவரை மகிமைப்படுத்திக்கொண்டு என்னை மறந்திருப்பதினாலேயே எனக்கு அதிக நன்மை கிடைக்கும். பிதாவுக்கென்று எதையும் விட்டுவிடுவதினால் ஒருவனும் நஷ்டமடையான்.

நாம் செய்கிற ஜெபமெல்லாவற்றிலும் இந்த நினைவு நம்மை ஆட்கொண்டிருக்கவேண்டும். ஜெபம் இரண்டுவகைப்படும். நமக்கு வேண்டியதை நினைக்கிற சுயோபகார ஜெபம் ஒன்று, பிறருக்கு வேண்டியதை நினைக்கிற பரோபகார ஜெபம் இன்னொன்று. வழக்கமாய் நாம் இந்தப் பிந்தின ஜெபத்திற்கு நேரங்கொடுக்கிறதுமில்லை, அதற்குப் போதுமான முயற்சி செலுத்துகிறதுமில்லை. இது இப்படியிருக்கப்படாது. இயேசுகிறிஸ்து தாம் முடித்திருக்கிற வேலையினாலும் தாம் கொண்டு வந்த அன்பினாலும் உலகத்திற்கு ஆசீர்வாதங்களைச் சம்பாதித்திருக்கிறார். அந்த ஆசீர்வாதங்கள் உலகத்தவர்க்குப் பலிப்பதற்கு அவரைப்போல் பரிந்து பேசுகிறவர்கள் அவசியம். சுற்றிலுமிருக்கிற உலகத்தார்மேல் அவரால் சம்பாதிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் இறங்கி வரத்தக்கதாய் விசுவாசித்து ஜெபிக்கிற பரிந்துபேசுவோரைப் பயிற்றி ஆளாக்குவதற்கே அவர் ஜெபப் பாடசாலை வைத்திருக்கிறார். இந்தச் சிந்தை நமக்குள் குடியிராவிட்டால், நாம் என்னசெய்தாலும் ஜெபத்தில் தேற முடியாது. ஒரு வீட்டிலிருக்கிற குழந்தை வந்து தகப்பனைப் பார்த்து: அப்பா, எனக்கு இன்னது வேண்டும் என்று தனக்கு வேண்டியதைக் கேட்கும் என்பது மெய்தான். ஆனால், அன்பு ஆட்கொள்ளும் வளர்ப்பு உள்ள குடும்பத்தில், ஒரு பிள்ளை தனக்கு வேண்டியதை நினைப்பதோடு திருப்தியடையாது. இன்னும் கொஞ்சம் தங்கைக்கு வேண்டும் என்று கேட்டு வாங்கும். வளர்ந்து ஆளான கைக்குயர்ந்த மகன் ஒரு வீட்டிலிருந்தால், அவன் தன் பட்சமுள்ள தகப்பனோடு உழைத்துப் பழகி, தகப்பனுக்கு யார் யாருடைய நயத்தின்மேல் மனம் கவிந்திருக்கிறதோ அந்த நயத்தின்மேலேயே அவனுடைய மனமும் கவிந்திருக்குமல்லவா? இப்படி அந்த மகன் தன்னை மறந்து பிறர் நயமே கருத்தாய் தகப்பனோடு உழைக்கையில் அவன் தகப்பனை எது கேட்டாலும் அந்தத் தகப்பன் தட்டாமல் கொடுப்பான். நம்முடைய நயத்தைப் பாராமல், நமது பரம தகப்பனுடைய பெயர், அவருடைய இராஜ்யம், அவருடைய சித்தம், இவையே கருத்தாயிருந்து, இவற்றின்பொருட்டு நம்மை தத்தம்பண்ணியுழைக்கிற இன்பமான ஜீவியத்திற்கு நம்மைப் பழக்கி ஆளாக்குவதே இயேசுவின் நோக்கம். இப்போர்ப்பட்ட ஜீவியம் நமக்கு வாய்க்கும்படி பிழைப்போமாக. எங்கள் தகப்பனே! என்று தேவனை உள்ளன்பாய்த் தொழும்போதே, நாம் அதே மூச்சிலேயே, உமது நாமம், உமது இராஜ்யம், உமது சித்தம் என்று நெஞ்சுருகி ஜெபிக்கப் பழகவேண்டும். பெறுதற்கரிய இந்தப் பேறு நமக்குக் கிடைக்கும்படியாகவே நாம் ஆசைப்பட்டுக் காத்திருக்கிறோம்.



உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. எந்த நாமம்? பிதா என்னும் அவருடைய புதிய நாமம். பரிசுத்தர் என்னும் அவருடைய நாமத்தைச் சுற்றிப் பழைய ஏற்பாடு சுழல்கிறது. பிதா என்னும் அவருடைய நாமத்தைச் சுற்றிப் புதிய ஏற்பாடு சுழல்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மைக் குறித்து வெளிப்படுத்தின பரிசுத்தமும் மகிமையும் எல்லாம் அவருடைய அன்பை உணர்த்துகிற இந்தப் புதிய ஏற்பாட்டு நாமத்தின்வழியே இனி உலகத்திற்கு வெளிப்படவேண்டும். அவருடைய நாமம் பரிசுத்தப்படுவது எப்படி? அது தேவனாலேயே பரிசுத்தப்படும்: "நீங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கின என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன்."

அதற்காக நமது ஜெபம் இப்படியிருக்கவேண்டும். எப்படி? உலகத்தின் கண்களுக்கு எதிரேயிருக்கிற நம்மிலும் நம்மோடொன்றான வேறு தேவபுத்திரரிலும், பிதா என்னும் திவ்விய நாமத்திலிருக்கிற பரிசுத்தம், தெய்வீக வல்லமை, இரகசிய மகிமை, இவையெல்லாவற்றையும் வைத்து தேவன்தாமே உலகத்திற்கு வெளிப்படுத்த அவரை மன்றாடுவதாயிருக்கவேண்டும். பிதாவின் ஆவி பரிசுத்தமான ஆவி. பரிசுத்தமான அந்த ஆவியானவர் நமது ஜீவியத்தைப் பிடித்து நடத்தும்படி அதை அவர் கையில் ஒப்புவிக்கும்போது மாத்திரமே தேவனுடைய நாமம் நமது ஜெபங்களிலும் நமது ஜீவியத்திலும் பரிசுத்தப்படும். "எங்கள் பிதாவே! உமது நாமம் பரிசுத்தப்படுவதாக" என்னும் ஜெபத்தைக் கருத்தறிந்து கற்றுக்கொள்வோமாக.

உம்முடைய இராஜ்யம் வருவதாக. பிதா இராஜா; அவருக்கு இராஜ்யம் இருக்கிறது. ஒரு அரசனுக்குக் குமாரனும் சுதந்தரவாளியுமாயிருப்பவனுக்கு தன் தந்தையின் இராஜ்யம் மகிமையடையவேண்டும் என்னும் ஏக ஆசையேதவிர வேறு ஆசையிராது. விசேஷமாய், அந்த இராஜ்யத்திற்கு விரோதமாய் யுத்தமாவது வேறு தீமையாவது எழும்பும்போது இந்த ஒரு சிந்தையே அவனை ஆட்கொண்டிருக்கும்; வேறு சிந்தை நுழையவே நுழையாது. பரமபிதாவின் பிள்ளைகள் இப்பூவுலகிலிருக்கும் காலமெல்லாம் சத்துருவின் நாட்டிலிருக்கிறார்கள். அந்த நாட்டில், பரலோகத்திலிருக்கிற பிதாவின் இராஜ்யம் இன்னம் பூரணமாய் வெளிப்பட்டுத் தோன்றவில்லை. ஆகலால், பிதாவின் நாமத்தைப் பரிசுத்தப்படுத்தப் பழகிக்கொண்டிருக்கிற தேவபிள்ளைகள் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று உள்ளங் கனிந்து கூவும் இயற்கையுடையவர்களாயிருப்பது ஆச்சரியமல்ல. பிதாவின் இராஜ்யம் வருதல் ஆகிய இந்த ஒரு பெரிய சம்பவம் நிகழும் காலத்திலேதான் பிதாவின் மகிமை வெளிப்படும்; அவருடைய பிள்ளைகள் சிரஞ்சீவிகளாகிக் களிப்பார்கள்; உலகம் சாபநிவிர்த்தியடைந்து வாழும். அந்த இராஜ்யத்தின் வருகை நமது ஜெபத்தினாலும் ஆக வேண்டியது. இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாரும் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று ஏங்கிக் கூப்பிடும்



போது, நாமும் அவர்களோடுகூடவே அப்படிக் கூப்பிடவேண்டுமல்லவா? அவ்வாறு கூப்பிடும் விதத்தையை நாம் இயேசுவின் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்வோமாக.

பரலோகத்தில் எப்படியோ அப்படியே பூலோகத்திலும் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக.—தேவனுடைய சித்தத்தைப் பட்டு உத்தரிக்கவேண்டும் என்பதே இந்த வார்த்தைகளுக்கு அர்த்தமாகும் என்று வழக்கமாய் கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். பரலோகத்தில் தேவனுடைய சித்தம் பட்டு உத்தரிக்கப்படுகிறதில்லை, செய்யப்படுகிறது. பரலோகத்திலிருக்கிற தேவபுத்திரர் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவண்ணமே பூலோகத்திலிருக்கிற தேவபுத்திரர் அதைச் செய்யச் சக்தி வேண்டுமென்று கேட்க நமது ஜெப உபாத்தியாயர் அவர்களுக்குப் போதிக்கிறார். அதிவிநய பக்தியுடன் தேவ சித்தத்திற்கு இணங்குகிற நெஞ்சிணக்கமும், அந்தச் சித்தத்திற்கு எதிர்க்காமல் மனமுவந்து கீழ்ப்படிகிற கீழ்ப்படிதலுமே இம்மன்றாட்டில் நாம் கேட்கும் வரங்கள். தேவனுடைய சித்தமே பரலோகத்திற்கு மகிமை; அதைச் செய்தலே பரலோகத்தாருக்குப் பாக்கியம். நாம் எவ்வளவுக்கு தேவ சித்தத்தைச் செய்கிறோமோ அவ்வளவுக்கு தேவனுடைய இராஜ்யம் நமக்குள் வந்திருக்கும். எந்த உள்ளத்தில் விசுவாசமானது இருந்துகொண்டு பிதாவின் அன்பு எனக்கு வேண்டும் என்று விரும்பி வாங்கிக்கொள்ளுகிறதோ, அந்த உள்ளத்தில் கீழ்ப்படிதலும் கூடவே இருந்துகொண்டு பிதாவின் சித்தம் எனக்கு வேண்டும் என்று விரும்பி வாங்கிக்கொள்ளும். தேவலோகத்துக் கீழ்ப்படிதலுக்கு ஒத்த கீழ்ப்படிதலை யாசித்துக் கேட்டு, அப்போர்ப்பட்ட கீழ்ப்படிதலுக்குத் தன் ஜீவியத்தை ஒப்புவித்தலே ஒருவனுக்கு பிள்ளைக்கொத்த ஜெப ஆவி உண்டு என்று காட்டும்.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.—பிதாவின் பெயர், அவருடைய இராஜ்யம், அவருடைய சித்தம், இவைகளைப்பற்றிய உள்ளன்பான அபிமானத்துடன் எந்தப் பிள்ளை தன்னைப் பிதாவின் ஊழியத்

திற்கு ஒப்புக்கொடுத்து விட்டதோ அந்தப் பிள்ளை தன் தினசரி ஆகாரத்தை அவரிடத்தில் கேட்டு வாங்குவதற்கு எல்லா உரிமையும் உண்டு. ஆண்டான் தன் அடிமைக்கு அன்னமிடுவான்; சேனைத்தலைவன் தன் பரிவாரத்திற்கு ஆகாரம் அளிப்பான்; தகப்பன் தன் பிள்ளைக்கு உணவு தேடிக் கொடுப்பான். அப்படியிருக்க, பரமபிதாவின் ஊழியத்திற்குத் தன்னைத் தொண்டனாய் ஒப்புவித்த பிள்ளைக்காக அவர் கவலைப்படாதிருப்பாரா? நாம் அவரைப் பார்த்துத் துணிந்து பின் வருமாறு பேசலாம்: பிதாவே, உமது கனத்திற்காகவும் உமது ஊழியத்திற்காகவுமே பிழைக்கிறேன்; ஆகையால், நீர் எனக்காகக் கவலைப்படுவீர் என்றறிவேன். ஒருவன் தன்னை தேவனுக்குப் பிரதிஷ்டைபண்ணி அவர் மனதின்படி பிழைப்பதற்கு ஒப்புவித்தால், இச்சீவனுக்கு வேண்டியவைகளைக் கேட்பதற்கு ஆச்சரியமான துணிவு அவனுக்குள் பிறக்கும். அவன் தன் முழுப் பிரயாண ஜீவியத்திற்கும் அவரே பொறுப்பாளியென்று துணிந்து, தன்னை அவருடைய அன்புள்ள பராமரிப்புக்கு விட்டுவிடுவான்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்திருக்கிறது போல, நீரும் எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.—உடலுக்கு முதல் அவசியம் ஆகாரம்; அவ்வாறே ஆத்துமாவிற்கு முதல் அவசியம் பாவமன்னிப்பு. அந்த அவசியத்திற்குத் தேவையானதை எவ்வாறு நிச்சயமாகவே பிதா சம்பாதித்துக் கொடுக்கிறாரோ, அவ்வாறு நிச்சயமாகவே இந்த அவசியத்திற்குத் தேவையானதையும் அவர் சம்பாதித்துக் கொடுக்கிறார். நாம் பிள்ளைகள்தான், ஆயினும் பாவிகளாயுமிருக்கிறோம். பிதாவின் முகத்திற்கு எதிரே வரும் சிலாக்கியம் நமக்கு அந்த விலைமதிப்புக்கு எட்டாத இரத்தத்தினாலும் அது நமக்காகச் சம்பாதித்த பாவமன்னிப்பினாலும் கிடைத்திருக்கிறது. தேவனிடத்தில் நாம் பாவமன்னிப்புக்காகச் செய்யும் ஜெபம் வெறும் வழக்க ஜெபமாயிருக்கக்கூடாது. பாவ வாதையிலிருந்து விடுதலையடைய வேண்டும் என்னும் ஆவல் மூண்டெரிகிற உள்ளத்துடன் நாம் பாவ அறிக்கை செய்தாலன்றி நமக்குப் பாவமன்னிப்புக் கிடைக்காது. தேவன் தமது வாக்கினால் பிரசித்-



தப்படுத்தியிருக்கிற பாவ மன்னிப்பை நாம் விசுவாசமாய் நம்பி வாங்கிக்கொள்ளவேண்டும். அப்படி நாம் அதை வாங்கிக்கொள்வது வெறும் மனோதோற்றமாயிராமல் உள்ளபடி நமக்குக் கிடைத்த பொருளாயிருக்கவேண்டும்; அதில் தேவனுக்கும் நமக்கும் நடந்த விவகாரம் நமது உள்ளத்திற்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கவேண்டும். ஏனெனில், பிதாவின் அன்புக்குள் நாம் போய் அங்கே பிள்ளைகளுக்குரிய சொந்தம் பாராட்டிச் சிலாக்கியங்களை அநுபவிப்பதற்கு அதுதான் வாசல். நாம் பெற்ற பாவமன்னிப்பு செத்த அநுபவமாயல்ல நமக்கு உயிருள்ள அநுபவமாயிருக்கவேண்டும். பிறருக்கு மன்னிக்கிற மனது நமக்கு இராவிட்டால் அப்பேர்ப்பட்ட உயிருள்ள பாவமன்னிப்பாகிய அநுபவம் நமக்கு வரவே வராது. தேவனுடைய பிள்ளைக்கும் பரலோகத்திற்குமுள்ள உறவை உணர்த்தும் பெயர் மன்னிப்பு வாங்கினவன்; அவ்வாறே தேவனுடைய பிள்ளைக்கும் பூலோகத்திற்குமுள்ள உறவை உணர்த்தும் பெயர் மன்னிப்புக் கொடுக்கிறவன். ஒவ்வொருவனும் பிதாவினிடம் போய்ச் செய்யும் எந்த ஜெபமும் நான் உள்ளன்பாய் நேசியாத எவனுமில்லை என்று அவருக்குச் சொல்லக்கூடியதாயிருக்கவேண்டும்.

எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீயோனிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்.—தின ஆகாரம், பாவமன்னிப்பு, சகலவித பாவங்களுக்கும் விலக்கமாய்க் காக்கப்பட்டுப் பொல்லாங்கனுடைய வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுதல், இவைகளே ஒவ்வொருவனுக்கும் தனித்தனியே அவசியமாய் வேண்டியவைகள். ஒருவன் ஆகாரத்திற்காகவும் பாவமன்னிப்புக்காகவும் வேண்டிக்கொண்டபின், சகல விஷயத்திலும் பிதாவின் சித்தப்படிக்கே நடப்பேன் என்று அவன் தன்னை அவருக்குப் பிரதிஷ்டை பண்ணிக்கொடுத்து, எனக்குள் வாசம்பண்ணுகிற தேவாவியானவரின் வல்லமையால் துர் ஆவியாகிய பிசாசின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப்படுவேன் என்று விசுவாசிக்கிற ஜெபம் அவனுக்கு அவசியம்.

தேவனுடைய பிள்ளைகளே! பரமபிதாவைப்பார்த்து நாம் இந்த மாதிரியாய் ஜெபிக்கவேண்டுமென்று இயேசு விரும்பு-

கிறார். அவருடைய நாமம், அவருடைய இராஜ்யம், அவருடைய சித்தம், இவைகள் நமது அன்பில் முதலிடத்திலிருக்க வேண்டும்; அப்போது பராமரிக்கிற அன்பு, பாவம் மன்னிக்கிற அன்பு, காக்கிற அன்பு, ஆகிய அவருடைய அன்பு நமக்கு நிச்சயமாய்க் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இந்த ஜெபம் நமக்குப் பிள்ளைக்குரிய ஜீவியம் செய்வதற்கு வழி இது என்று காட்டுகிறது. பிள்ளைக்கு வேண்டியதெல்லாம் பிதா, பிள்ளைக்கு வேண்டியதற்கெல்லாம் பிதா. பிதாவும் பிள்ளையும் ஒன்று, உம்முடையது என்பதும் எங்களுடையது என்பதும் ஒன்று. உம்முடையது என்று ஆரம்பத்தில் ஜெபித்த அந்த உள்ளங்களே விசுவாசத்தில் ஊறி எங்களுடையது என்று சொல்லக் கூடியனவாம் என்பது நமக்கு அநுபவத்திலே வரவர வெளிச்சமாகும். இவ்விதமாய் நாம் ஜெபிக்கப் பழகினபிறகு அது எப்படியிருக்குமென்றால், நாம் தேவனோடு அன்புக் கூட்டுறவில் இருந்துகொண்டு, அவர் நமக்கும் நாம் அவருக்கும் ஓயாமல் அன்பைக் கொடுத்து வாங்கிக் கொண்டேயிருத்தலாயிருக்கும். அவரே துவக்கம், அவரே முடிவு. ஆதலால், நாம் ஓயாமல் அன்புமயமான அவரிலேயே துவக்கி, அவரையே நம்பியிருந்து, உள்ளன்பாய் அவரையே ஆராதித்து, எப்போதும் அவருக்குள் திரும்பி வந்துகொண்டேயிருப்போம். "இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்." பிதாவின் ஏகபுத்திரராயிருக்கிற கர்த்தாவே! "எங்கள் பிதாவே" என்று ஜெபிக்கும் வித்தையை எங்களுக்குக் கற்றுக்கொடும்.

### ஆண்டவரே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.

பிதாவுக்கு ஒரேபேறான குமாரனாயிருக்கிறவரே! 'எங்கள் பிதாவே' என்று ஜெபிக்க எங்களுக்குக் கற்றுக்கொடும். தேவரீர் எங்களுக்குச் சொல்லித் தந்த இந்த ஜீவனுள்ள இனிய வார்த்தைகளுக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். இந்த வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு அவைகள் மூலமாய்ப் பிதாவை அறிந்து ஆராதிக்கக் கற்றுக்கொண்ட லட்சாதி லட்சம் பேருக்காகவும் அந்தப் பாக்கியத்தையே பெற்ற



னுபவிக்கிற எங்களுக்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆண்டவரே! இந்த ஜெபத்திலிருக்கிற ஒவ்வொரு மன்றாட்டையும் கருத்தறிந்து கற்றுக்கொள்வதற்கு நாங்கள் உம்முடைய பள்ளிக்கூடத்தில் அநேக நாட்களும், அநேக வாரங்களும் செலவிட்டாலும் போதாதென்று எங்களுக்குத் தோன்றுகிறது; ஏனெனில், அவைகள் அவ்வளவு ஆழ்ந்த அர்த்த புஷ்டியுள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளின் ஆழ்ந்த அர்த்தங்களையெல்லாம் அறிந்துகொள்ள எங்களை வல்லவர்களாக்குவீர் என்று நாங்கள் உம்மையே நம்பியிருக்கிறோம். உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களுக்கு இந்த தயவு செய்யும்; பிதாவின் குமாரன் என்பது உம்முடையநாமம்.

ஆண்டவரே! நீர் ஒரு முறை "குமாரனும், குமாரன் எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்" என்றீர். வேறொரு முறை: "நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கு உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன்" என்று பிதாவைப் பார்த்துச் சொன்னீர். கர்த்தராகிய இயேசுவே! எங்களுக்குப் பிதாவைத் தெரியப்படுத்தும். அவருடைய நாமம், அதாவது, கரையில்லாத அவருடைய பிதாவன்பு, அவர் உம்மிடத்தில் வைத்த அதே அன்பு, நீர் பண்ணின உம்முடைய ஜெபத்தின் வாக்குப்படியே எங்களிடத்திலும் இருக்கட்டும். அப்போது அவரைப்பார்த்து, "எங்கள் பிதாவே" என்று உள்ளபடிக்குச் சொல்ல எங்களுக்கு வாய் வரும். அப்போது, நீர் எங்களுக்குக் கற்றுக்கொடுத்த உபதேசம் எங்களுக்கு வெளிச்சமாய் விளங்கும். அப்போது, "எங்கள் பிதாவே, உம்முடைய நாமம், உம்முடைய இராஜ்யம், உம்முடைய சித்தம்" என்பது எங்கள் சுபாவத்திலிருந்து தானாகவே ஊறி வழியும்; அப்போது, எங்களுக்கு நேரும் அவசியங்கள், எங்களை உபாதிக்கும் பாவங்கள், எங்களை எதிர்க்கும் சோதனைகள், இவை எல்லாவற்றையும் நம்பிக்கையாய் நாங்கள் அவர் சமுகத்திலே கொண்டுவந்து வைத்து, எங்கள் உள்ளத்திற்கினிய பிதாவின் அன்பு அவை யெல்லாவற்றிற்காகவும் தானே கவலைப்படும் என்று நாங்கள் நம்பி நிச்சயித்திருப்போம்.

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! நாங்கள் உம்மையே நம்பியிருக்கிற உம்முடைய மாணுக்கர். "எங்கள் பிதாவே" என்று ஜெபிக்கும் கல்வியை நீர் எங்களுக்குக் கற்றுக்கொடுப்பீராக. ஆமென்.

## ஐந்தாம் பாடம்.

### "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்"

அல்லது

### ஜெபத்திற்கு உத்தரவு நிச்சயம்.

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்." (மத். 7. 7, 8.)

"நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக். 4. 3.)

மலைப்பிரசங்கத்தில் நமது ஆண்டவர் இரண்டாம் முறை ஜெபத்தைப்பற்றிப் போதித்தது இங்கே யிருக்கிறது. முதல் முறையிலே, அந்தரங்கத்தில் தரிசனம் அளித்து வெளியரங்கத்தில் பலனளிக்கிற பிதாவைக்குறித்துப் பேசினபின்பு, அவர் நமக்கு மாதிரி ஜெபத்தை அருளிச்செய்தார் (மத். 6. 5–15.). ஆனால், இந்த இரண்டாம் முறையிலே, ஜெபத்துக்கு முக்கிய இலக்ஷணம் என்று வேதமெங்கும் பறைசாற்றப்படுகிற ஒரு விசேஷத்தை அவர் நமக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறார். அதென்னவென்றால், நமது ஜெபம் கேட்கப்படுவதும், அதற்கு உத்தரவு வருவதும் நிச்சயம் என்பதுதான். ஏறக்குறைய ஒரே அர்த்தமுள்ள ஜெப பதங்களை அடுக்கி, ஒவ்வொரு விசையும் ஜெபம் கேட்கப்படும்



என்னும் வாக்குத்தத்தத்தையும் கூடவே ஒட்டித் தெளிவாய் அவர் திரும்பத் திரும்பச் சொல்வதைக் கவனி: "உங்களுக்குக் கொடுக்கப்படும், நீங்கள் கண்டடைவீர்கள், உங்களுக்குத் திறக்கப்படும்." இப்படி அவர் நமது ஜெபம் கேட்கப்படும் என்னும், வாக்குத்தத்தத்தைத் திரும்பத்திரும்ப எடுத்துச் சொன்னபின்பு, அப்படிப்பட்ட நிச்சயம் நமது ஜெபத்திற்கு உண்டாயிருப்பதற்குக் காரணம் தேவ இராஜ்யத்துச் சட்டப்பிரமாணமே என்று காட்டுகிறார். "கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்." இவ்வாறு ஆறு விசை அவர் ஒரே விஷயத்தை மடக்கி மடக்கிக் கூறுவதினால், அவர் நமது மனதில் பின்வரும் உண்மையை ஆழமாய்ப் பதிப்பிக்க விரும்புகிறார். எதை யென்றால், நாம் ஜெபம்பண்ணும்போதெல்லாம் அதற்கு உத்தரவு வரும் என்று நம்பி எதிர்பார்த்துக் காத்திருப்பது அவசியம் என்பதையே. நாம் ஜெபப் பாடசாலையில் படிக்கிற எல்லாப் பாடங்களிலும் முக்கியமான பாடங்கள் எவையென்றால், பிதாவின் அன்பை அறிந்துகொள்ளப் படித்தலும், அதற்குப் பின்பு கேட்கிறவன் எவனும் வாங்கிக்கொள்வான் என்னும் நிச்சயத்தை யடையப் படித்தலுந்தான்.

நமது கர்த்தர் சொன்ன வார்த்தைகளாகிய கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்னும் இம்மூன்னுள் ஒன்றுக்கொன்று அர்த்த பேதம் உண்டு என்று பலர் நினைக்கிறார்கள். அவற்றுள் அர்த்தபேதம் வைப்பதே நமது ஆண்டவருடைய கருத்து என்று கொள்வோமானால், அந்த அர்த்த வித்தியாசம் பின் வருமாறு இருக்கவேண்டும். கேளுங்கள் என்பது நாம் கேட்கிற நன்மைகளைச் சுட்டும். ஆனால், ஒருவன் கேட்டு, கேட்டபடி வாங்கிக்கொண்டாலும், கொடுத்தவனை அறியாமலே யிருத்தல்கூடும். தேடுங்கள் என்று வேதம் பேசும்போதெல்லாம் தேவனையே தேடத் தூண்டும். தேடினால் தேவன் அகப்படுவாரா என்றால், தேடுகிறவர்களுக்கு அவர் அகப்படவே அகப்படுவார் என்று கிறிஸ்து நமக்கு நிச்சயம் சொல்லுகிறார். ஆனால், ஒருவன் தனக்குக் குறைவு நேரிட்டபோதெல்லாம் தேவனைத் தேடிக் கண்டுபிடித்து, மற்ற நேரத்

தில் அவரைத் தேடாமல் விட்டால் அதனால் லாபமில்லை. அவரைக் கண்டுகொண்டபின் அவரோடு நிலையான ஐக்கியம் அடைந்துகொள்ளவேண்டும். தட்டுங்கள் என்பது வீட்டுக்குள் பிரவேசித்து அவரோடும் அவருக்குள்ளும் வாசம் பண்ணுதலைக் குறிக்கும். இவ்வாறு, கேட்பதும் கேட்டதை வாங்குவதும் கொடுத்தவரைத் தேடியடையத் தூண்டும். அந்தப்பிரகாரம் அவரைத் தேடியடைதலானது பிதாவின் வீட்டுக் கதவையும் அவருடைய அன்பையும் தட்டி உட்பிரவேசித்து வாசம்பண்ணத் தூண்டும். இந்தப் பதங்களுக்கு அர்த்தம் எப்படிச் சொன்னாலும் சரி, ஒரே விஷயமே அவை யெல்லாவற்றாலும் சந்தேகமற உணர்த்தப்படும். நமதாண்டவர் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லாமல் தெரிவிக்கிற தென்னவென்றால் நாம் கேட்கிறதும், தேடுகிறதும், தட்டுகிறதும் வீணாயிருக்கவே யிராது என்பதே. நாம் பண்ணின ஜெபத்திற்குப் பலன், நாம் கேட்ட விண்ணப்பத்திற்கு உத்தரவு, எவை என்றால், நாம் தேவனைக் கண்டு பிடித்தல், நாம் தேவனுடைய திறந்த வீட்டையும் அன்பையும் அடைந்து அநுபவித்தல், இவைகள்தான். இந்தப் பலன்கள் நமது ஜெபத்திற்கு நிச்சயமாகவே வரும்.

ஜெபத்திற்கு உத்தரம் நிச்சயமாய்க் கிடைக்கும் என்கிற இந்த ஒரே உண்மையைப் பலவகையாய் மடித்து மடித்து நமதாண்டவர் சொல்வதைப் பார்த்தால், அதினால் நாமறிய வேண்டிய விசேஷ மொன்றிருப்பதைக் காண்போம். அதென்னவென்றால், அவருக்கு நமது உள்ளத்தின் இயல்பு வெட்டவெளிச்சமாய்த் தெரிந்திருக்கிறது என்பதுதான். நமது நெஞ்சிலே எப்போதும் சந்தேகமும் தேவனை நம்பாமையும் குடிகொண்டிருப்பதுந்தவிர, நாம் ஜெபம் செய்தபின் அதற்கு உத்தரவு வந்தாலும்சரி, வராவிட்டாலும்சரி, ஏதோ ஒரு ஞானச்செய்கையைச் செய்துவிட்டோம் என்று திருப்தியடைந்து சும்மா இருப்பதும் நமக்கு இயற்கை. இது அவருக்கு நன்றாய்த் தெரியும். அதுவுந்தவிர, தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர் என்கிற விசுவாசம் வந்தபிறகுங்கூட, அவர் சொன்ன வாக்குப்படி என் ஜெபத்தைக் கேட்பார் என்று அவருடைய வாக்கை உறுதியாய்ப் பிடித்து



நான் கேட்டது எனக்கு வரும் என்று நம்பி ஜெபிக்கும் ஜெபம் ஞானஜீவ அநுபவத்தினால் பிறக்குமேயொழிய மற்றப்படி பிறவாது. ஆகையால், அது ஞானஜீவனை அரைவாசிமாத்திரமே அறிந்திருக்கிற கிறிஸ்தவனுக்கு எட்டவுமாட்டாது கிட்டவும் மாட்டாது என்று அவருக்குச் செம்மையாய்த் தெரியும். இதினிமித்தம், ஜெபம் படிக்க விரும்புவோருக்கு அவர் ஜெப உபதேசம் சொல்லப் புகுந்த முதல்துவக்கத்திலேயே ஜெபம் பண்ணுகிறவர்களுக்கு உத்தரவு நிச்சயமாகவே கிடைக்கும் என்னும் உண்மை அவர்களுள்ளத்தில் ஆழமாய்ப் பதியச்செய்யும்படி விரும்புகிறார். ஜெபம் பலிக்காமல் போகாது. கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான். இது தேவ இராஜ்யத்திலிருக்கிற மாறாத நித்திய பிரமாணம். நீ கேட்டும் பெற்றுக்கொள்ளாவிட்டால், நீ பண்ணின ஜெபத்தில் ஏதோ தகுதியில்லாமையாவது குறைவாவது இருக்கிறது. மனம் சோர்ந்து விட்டுவிடாதே. குறைவில்லாமல் சரியாய் ஜெபிக்கிறது எப்படியென்பதை தேவ வசனத்தாலும் தேவ ஆவியானவராலும் கற்றுக்கொள்ளப் பார். ஆனால் உன் தைரியத்தைக் கைசோரவிடாதே. கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்பது உன் அநுபவத்திற்கு எட்டும்படி செய்யவேண்டுமென்பதே அவர் தாமதிப்பதற்குக் காரணம்.

கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்.—தளராமல் ஜெபியுங்கள் என்று தம் மாணாக்கரைத் தூண்டுவதற்கு இதிலும் பலமான ஆசைவார்த்தை கிறிஸ்துவுக்கு இல்லை. ஒரு பள்ளிப்பையன் பார்க்கிற கணக்குச் சரி என்று அதற்கு வரும் உத்தரம் ரூபிக்கும்; அவ்வாறே, நாம் பண்ணின ஜெபம் சரியான ஜெபம் என்று அதற்கு வரும் உத்தரமே ரூபிக்கும். நாம் கேட்டும் வாங்காவிட்டால், அதற்குக் காரணம் நாம் தகுந்த பிரகாரம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளாமையே. கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்து மாணாக்கரெல்லாம் அவர் போதிக்கும் பின்வரும் வார்த்தை எந்த விதத்திலும் பொய்க்கவே பொய்க்காதென்று நம்பவேண்டும்: கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்.

கேட்ட ஜெபம் பலிப்பதற்கு நிபந்தனை எதுவுங் காட்டாமல், கேட்ட ஜெபமெல்லாம் பலிக்கும் என்று அவர் சொல்லுகிறார். ஆதலால், அப்படிச் சொல்வதற்குத் தகுந்த முகாந்தரம் அவர் மனதில் இருந்தது என்பதற்குச் சந்தேகமேயில்லை. இதினிமித்தம், அவர் இதுவிஷயத்தில் சொல்லுகிற வார்த்தையை நாம் நமது மனுஷீக ஞானத்தில் பிறக்கும் நிபந்தனைகளால் பெலன் குறைத்துவிடலாகாது. பரம காரியங்களை அவர் நமக்குச் சொல்லும்போது, அது நமது புத்திக்கு உடனே விளங்காவிட்டாலும் நாமதை நம்பவேண்டும். நம்பி விசுவாசிக்கிறவனுக்கு அவர் சொன்ன வார்த்தை வரவரத் தானே வெட்ட வெளிச்சமாய் விளங்கிவிடும். அவர் எதுவும் நமக்குச் சொல்லும்போது அது விளங்காமல், அதைக் குறித்துச் சந்தேகக் கேள்விகளும் புத்திக்கு மயக்கமுண்டாக்கத்தக்க வருத்தங்களும் உண்டானால், அந்தச் சந்தேகங்களும் வருத்தங்களும் தீருமட்டும் காத்திராமல் நாம் அவர் வார்த்தையை உடனே நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர் சொல்வதில் நமது மனது சிக்கு அடைந்து வருத்தப்பட்டால், நாமாய் அந்தச் சிக்கை அறுத்துக்கொள்ளத் துணியவேகூடாது; அவரே சிக்கறுத்து விளக்குவார் என்று நம்பியிருக்கவேண்டும். ஏனெனில், சிக்கறுத்து விளக்குவது அவரே செய்யவேண்டிய வேலை. நாமப்போது செய்யவேண்டிய வேலை ஒன்றுமாத்திரமே; அதென்னவென்றால், அவர் நமக்கொரு வாக்குக் கொடுக்கும்போது, அதை முன்பின் பாராமல் ஏற்றுக்கொண்டு கெட்டியாய்ப் பிடித்துக்கொள்வதே. கேட்கிறவன் எவனும் வாங்குகிறான்; இந்த வாசகத்தை நாம் பிரகாசமான எழுத்தாய் நமது உள்ளறையில், விசேஷமாய் நமது இதயத்தின் உள்ளறையில், எழுதிவைத்துக்கொள்ளவேண்டும்.

நமது உபாத்தியாயர் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிற இந்தப் பாடத்தைப் பார்த்தால், ஜெபத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பது தெளிவாகும். ஒரு பக்கம் மனுஷ பக்கம், மறுபக்கம் தெய்வ பக்கம். கேட்கிற பக்கம் மனுஷ பக்கம், கொடுக்கிற பக்கம் தெய்வ பக்கம். இப்படிப் பார்க்காமல், இரண்டையும் மனுஷ பக்கமாகவும் பார்க்கலாம்.



அப்போதும் கேட்டல் வாங்கல் என்கிற இரண்டு பக்கமும் அதிலிருக்கவேண்டும். இந்த இரண்டு பாதியும் சேர்ந்தால் மாத்திரமே ஒரு முழுஜெபம் உண்டாகும். இதின்படி, நமது ஜெபத்திற்கு உத்தரவு கிடைத்தாலொழிய நாமதை ஜெபம் என்று நினைக்கலாகாது என்பதை நமது உபாத்தியாயர் போதிக்க விரும்புகிறார். ஜெபத்திற்கு உத்தரவு அளிப்பதே தேவனுடைய சித்தம். அதுவே, பிதாவின் குடும்பத்துச் சட்டப் பிரமாணம். பிள்ளைக்கொத்த நம்பிக்கையாய் விசுவாசத்துடன் செய்யப்படும் ஜெபமெல்லாம் பலிக்கவேண்டும். ஆனாலிருக்கட்டும், நான் ஜெபம்பண்ணியும் பலிக்காவிட்டால் அது தேவனுக்குச் சித்தமல்லவாக்கும் என்று நான் அடங்கிச் சும்மாத்தானே இருக்கவேண்டும் என்று ஒருவன் கேட்டால், அதற்கு உத்தரவு இது. நீ அடங்கிச் சும்மாயிருப்பது சோம்பலேயன்றி வேறல்ல. நீ பண்ணுகிற ஜெபம் பிள்ளைக்கொத்த நம்பிக்கையும் விசுவாசமும் பொருந்தி, தேவனுக்கு உகந்ததாயிருக்கிறதில்லை என்று தோன்றுகிறது. ஆதலால், பலிக்கிற ஜெபம் செய்கிற கிருபை வேண்டுமென்று தேவனைப் பார்த்துக் கேள். ஜெபத்திற்கு உத்தரவு வராமற்போனாலும் போகட்டும் என்று சோம்பியிருக்க நமது மாம்சத்திற்கு மனம் வருமேயல்லாமல், விசுவாசமுள்ள பலிக்கிற ஜெபம் செய்யக் கற்றுக்கொள்ளும்பொருட்டு தேவாவியானவர் வந்து உள்ளிந்திரியங்களையெல்லாம் சோதித்துப் பரிசுத்தம் பண்ணும்படி இடங்கொடுக்க அதற்குப் பிரியமிராது.

கேட்ட ஜெபத்திற்கு உத்தரவு காணாமல், எப்படியானாலும் ஆகட்டுமென்று நிர்விசாரமாய்ப் பிழைக்கிற கிறிஸ்தவர்கள் இப்போது ஏராளமாயிருக்கிறார்கள். இது இக்காலத்து கிறிஸ்தவ ஜீவியம் நோய்கொண்ட ஜீவியம் என்று தெரிவிக்கிற பயங்கர குறிகளில் ஒன்று. கிறிஸ்தவர்கள் தினம் ஜெபிக்கிறார்கள், தினம் வெகு காரியங்களைக் கேட்கிறார்கள்; கேட்டவைகளில் ஏதாவது பலித்தாலும் பலிக்கும் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், இன்னது வேண்டும் என்று குறித்துக் காட்டிக் கேட்டு வாங்குவதே கிறிஸ்தவ தினஜீவியப் பிரமாணம் என்று அவர்களுக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட ஜீவியமே பிதா விரும்புவது. தமது பிள்ளைகள் எது கேட்கிறார்கள் என்று காதுகொடுத்துக் கேட்டு, அவர்கள் கேட்டதைக் கேட்டவாறே அருளி, அவர்களும் தாமும் தினம் நெருங்கி யுறவாட வேண்டுமென்று அவர் பிரியப்படுகிறார். நான் நாள்தோறும் அவரிடம் வந்து, எனக்கு இன்னின்னது வேண்டும் என்று வகுத்துக் குறித்துக் கேட்கவே அவர் இஷ்டப்படுகிறார்; அவரும் நாள்தோறும் என்னிடம் வந்து நான் எதெது கேட்டேனோ அதனைத் தருவதற்கே ஆசையுள்ளவரா யிருக்கிறார். பண்டைக்காலத்து பக்தர்கள் தாங்கள் பண்ணின ஜெபத்திற்கு உடனுக்குடனே உத்தரவை யடைந்துகொண்டதினாலேதான் தேவன் ஜீவனுள்ள தேவன் என்று அறிந்துகொண்டு அவரை ஸ்தோத்திரிக்கவும் அவரில் அன்புகூரவும் தூண்டப்பட்டார்கள் (சங். 34; 66. 19; 116. 1.). ஜெபம் இருந்தால் அதற்கு உத்தரவும் இருக்கவேண்டும்; பிள்ளை கேட்டால் பிதா கொடுக்கவும்வேண்டும்; கேட்கிறது இருக்கிறபோது வாங்குகிறதும் கூடவே இருக்கவேண்டும். இதைத்தான் நமது உபாத்தியாயர் நமது மனதில் அழுத்திவைக்கப் பார்க்கிறார்.

தேவனுடைய வசனத்துக்கு ஒத்திராதபோது, இல்லை என்பதே நமது ஜெபத்திற்கு உத்தரவாயிருக்கும். திருஷ்டாந்தமாக, மோசே கானான் தேசத்திற்குள் போகப் பிரியப்பட்டுக் கேட்டும் தேவன் அதற்கு இல்லையென்று மறுத்துவிட்டார். அப்படி இல்லையென்று சொன்னபோதுகூட ஜெபத்திற்கு உத்தரவில்லாமற் போகவில்லை; ஏனெனில், அப்படிச் சொன்னதே உத்தரவு. தமது ஊழியக்காரன் பண்ணின ஜெபத்திற்கு உத்தரவு கிடைக்குமோ கிடைக்காதோ என்று இருக்கும்படி தேவன் அவனைச் சந்தேகத்தில் விடவில்லை. அஞ்ஞானிகளுடைய தெய்வங்கள் ஊமை விக்கிரகங்கள்; அவைகள் வாயிருந்தும் பேசமாட்டாதவைகள். நம்முடைய பிதாவோ தம் பிள்ளையாகிய ஒருவன் கேட்பதைக் கொடுக்கலாகாது என்று கண்டால், அதைக் குறித்துச் சும்மாயிராமல் அதை அவனுக்குத் தெரியப்படுத்துகிறார். அதை அறிந்து அவன் இனி அந்த ஜெபத்தை அவரிடத்தில் கொண்டுவாராமல் விட்டுவிடுவான். இப்ப



டியே குமாரன் கெத்செமனேயில் செய்தார். ஊழியக்காரனாகிய மோசேயும் குமாரனாகிய கிறிஸ்துவும் தாங்கள் கேட்டது தேவன் ஏற்கனவே வெளிப்படத் தெரிவித்ததற்கு ஒத்திருந்ததில்லை யென்று அறிந்திருந்தார்கள். அப்படியிருக்க, அவர்கள் பண்ணின ஜெபத்தின் கருத்து என்னவென்றால், தேவன் தங்களைக் குறித்துப் பண்ணியிருந்த தீர்மானத்தை மாற்றி வேறு ஒழுங்கு செய்வதற்குக் கூடாதா என்று தாழ்மையாய் வணங்கிப் பிரார்த்தித்ததேயொழிய வேறல்ல. எங்கள் ஜெபத்தைக் குறித்து தேவனுடைய திருவுள்ளத்திலிருக்கிற கருத்தென்ன என்று அறிய மனமுள்ளவர்களுக்கு,—அவர் அதை வெளிப்படுத்துமட்டும் அவர்கள் பொறுத்திருந்தால்,—அந்த ஜெபம் தமது சித்தத்திற்குப் பொருந்தியதோ பொருந்தாததோ என்று தமது வசனத்தையும் தமது ஆவியையும்கொண்டு அவரே வெளிச்சமாக்குவார். அவருடைய திருவுள்ளத்தில் நாம் கேட்டதைக் கொடுக்கலாகாது என்பதிருந்தால் நாமினி அதைக் கேட்காமல் விட்டுவிடவேண்டும்; கொடுக்கவேண்டுமென்பதிருந்தால், நாம் கேட்டது வருமளவும் ஜெபத்தில் விடாப்பிடியா யிருக்கவேண்டும். கேட்டு உத்தரவு வாங்குவதற்கே ஜெபம் நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. பிதாவும் அவருடைய பிள்ளையும் ஒருவருக்கொருவர் அன்புப் பாராட்டிக் கொள்ளுதல் ஜெபித்து உத்தரவு வாங்குதலால் ஓயாமல் நடைபெறும்.

இவ்வகையான வாக்குத்தத்தங்கள் எங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று நம்பிப் பிடித்துக்கொள்ள நமக்குச் சக்தியில்லையானால் அது நமது இருதயம் தேவனை விட்டு வெகுதூரம் பிரிந்து போய்விட்டது என்று காண்பிக்கிறது. தேவன் சொன்ன வாக்குப் பழுதாகாமல் பலிக்கும் என்று நாம் நம்பி யொத்துக்கொண்டும், அது நமக்குப் பலிக்கும் என்று ஐயமறத் தெரிந்து சந்தோஷப்படுகிற இருதய விசுவாசம் நமக்கு வர வெகுகாலம் பிடிக்கிறது. இதேன்? நமது ஞானஜீவன் இன்னம் பலவீன ஜீவனாயிருப்பதினால் தேவனுடைய வாக்குத்தத்தத்திலிருக்கிற கருத்து முழுமையையும் வாங்கிக்கொள்ள அதற்குத்

திராணியில்லை. அப்பேர்ப்பட்ட திராணி வரும்படி போதிக்க வல்லவர் இயேசுவைத்தவிர வேறு யாருமில்லை. ஆதலால், அதற்கு நாம் அவரையே நம்பியிருக்கவேண்டும். அவர் சொன்ன வாக்கைக் கள்ளங்கபடமின்றி வாங்கிக்கொண்டு, அது வெறும் வார்த்தையளவாகவே யிருக்காமல் நமதுள்ளத்திற்குள் ஜீவனும் பெலனுமாயிருக்கும்படி அவரே தமதாவியைக் கொண்டு செய்வார் என்று நாம் நம்பியிருந்தால், அது உள்ளபடி நமது உள்ளான ஜீவனில் வந்து குடியிருக்கும். அப்போது, அவருடைய வாக்கிற்குள்ளே யிருக்கிற தெய்வீக உண்மை நம்மைத் தனக்கு வசப்படுத்திக்கொள்ளும். நாமந்த உண்மையின் வசத்திலிருந்துகொண்டு எந்த ஜெபம் செய்தாலும் அது பலிக்குமோ பலிக்காதோ என்னும் சந்தேகம் கடுகளவுமில்லாமல், கேளுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று இயேசு சொன்னது மெய்தான் என்றறிந்துகொள்வோம்.

இயேசுவின்பள்ளிக்கூடத்திலிருக்கிற என் உடன் மாணாக்கரே! இந்தப் பாடத்தைச் செம்மையாய்ப் படித்துக்கொள்ள முயல்வோமாக. இங்கே சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தம் எந்தப்பிரகாரம் இருக்கிறதோ அந்தப்பிரகாரமே அதை நம்புவோமாக. அதற்குள்ள பலத்தை நமது மனுஷீக புத்தி வந்து குறைத்துவிடவொட்டாதிருப்போமாக. இயேசு அதை எவ்வண்ணம் வெளியிட்டாரோ அவ்வண்ணமே நாமதை ஒப்புக்கொண்டு நம்புவோமாக. அது நமக்கு இப்போது சரியாய்த் தெரியாவிட்டாலும் காலக்கிரமத்தில் அவரே அது நமக்குப் பூரணமாய்த் தெரியும்படி செய்வார். அதைக் கொஞ்சமும் சந்தேகமில்லாமல் நம்பிக்கொண்டு படிக்கத் தொடங்குவோமாக. நாம் ஜெபஞ்செய்யும்போதெல்லாம், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று அவர் சொல்லுகிற சத்தம் நமது காதில் விழும்படி பதறாமல் காத்திருப்போமாக. நமக்கு விசுவாசம் இல்லாதகாலத்துக் கவலைக்கு உதவாத ஞான அநுபவமே இனி நமக்கு விசுவாசம் வரும்போதும் இருக்குமென்று நினைத்து மனங்களைத்துப் போகாதிருப்போமாக. நாம் ஜெபம்பண்ணும் வேளைகளில் மாத்திரமல்ல, மற்ற எல்லா வேளைகளிலும் இந்தச் சந்தோஷ



மான நிச்சயத்தையுடையவர்களா யிருக்கவேண்டும். எந்தச் சந்தோஷமான நிச்சயத்தை? பூமியிலே மனுஷர் செய்கிற ஜெபம், பரலோகத்திலே தேவன் அதற்குக் கொடுக்கிற உத்தரவு, ஆகிய இவ்விரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திராமல் இரண்டுங்கூடியே இருக்கும் என்கிற இந்த நிச்சயத்தைத் தான். ஜெபம்பண்ணினபின் அதற்கு உத்தரவு நிச்சயமாகவே கிடைக்கத்தக்கதாய் நமக்கு இயேசு கற்றுக்கொடுப்பார் என்று நாமவரை நம்பியிருப்போமாக. கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று அவர் இன்று சொன்ன வார்த்தையை நாம் என்றும் உறுதிதான் என்று பிடித்திருந்தால், அவர் நமக்கு ஜெபம் பலிக்கிற வித்தையைத் தப்பாமல் கற்றுக்கொடுப்பார் என்பதற்கு ஐயமில்லை.

"ஆண்டவரே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

இயேசு பெருமானே! நீர் இன்று எனக்குச் சொன்ன வாக்கு எனக்கு விளங்கவும் நான் அதை விசுவாசிக்கவும் எனக்குக் கற்றுக்கொடும். என் ஜெபத்திற்கு உத்தரவு வாராதிருக்கும்போது, அதற்கு என்னென்ன காரணங்களைக் காட்டிச் சும்மா சோம்பலாயிருக்க என் இதயம் தேடுகிறது என்பது உமக்குத் தெரியாததல்ல. பிதாவின் இரகசிய ஆலோசனைக்கு என் ஜெபம் பொருத்தமாயிருக்கிறதில்லையாக்கும் என்று ஒரு நினைவும், நான் கேட்டதிலும் நலமானதொன்றைத் தருவதற்கு எனக்கு உத்தரவு கிடைக்கவில்லையாக்கும் என்று ஒரு நினைவும், ஜெபந்தானே தேவனோடு செய்கிற உறவாதலால், அதற்கு உத்தரவு வாராவிட்டாலும் அதுவே போதுமான நன்மைதானே என்று ஒரு நினைவும், இப்படிப் பலநினைவு எழும்பி நான் பண்ணின ஜெபத்திற்குப் பலன் காணாமல் தடுக்கிறது. ஆகிலும், என் நேச ஆண்டவரே! நீர் ஜெபத்தைப்பற்றிப் போதித்த பாடத்தில் நான் ஜெபம்பண்ணினபின் அதற்கு உத்தரவு எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டும் என்று, தெளிவாய்ப் பார்க்கிறேன். பிள்ளை கேட்டுக்கொண்டேயிருக்க, பிதா கொடுத்துக்கொண்டேயிருப்பதாகிய இதுவே பிள்ளைக்கும் பிதாவுக்கும் இருக்கிற நேச உறவு என்று நீர் எங்களுக்கு நிச்சயஞ்சொல்லுகிறீர்.

அன்புள்ள ஆண்டவரே! உமது வார்த்தை சத்தியமும் உண்மையுமானது. ஆதலால், நான் தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறதினிமித்தமே ஜெபத்திற்கு உத்தரவு வாங்குகிற ஞான அநுபவம் எனக்கு இன்னம் சரியாய் வரவில்லை. நான் ஆவியிலே பிழைக்கிற பிழைப்பு குறைவாயிருப்பதினாலேயே நான் பண்ணும் ஜெபமும் ஆவியிலே செய்யப்படாத குறைவுள்ள ஜெபமாயிருக்கிறது. இந்தக் காரணத்தினாலேதான் விசுவாசமுள்ள ஜெபஞ்செய்கிற வல்லமை எனக்கின்னம் வரவில்லை.

ஆண்டவரே! ஜெபஞ்செய்ய எனக்கும் போதியும். இயேசு ஆண்டவரே! அதற்கு உம்மைத்தான் நம்பியிருக்கிறேன்; விசுவாசமாய் ஜெபிக்க எனக்குப் போதியும். ஆண்டவரே! கேட்கிறவன் எவனும் வாங்குகிறான் என்று நீர் இன்று படிப்பித்த பாடம் எனக்கு வரப்பண்ணும். ஆமென்.

# ஆறாம் பாடம்,

## 'அதிக நிச்சயம் அல்லவா?'

அல்லது,

## தேவனுடைய அளவில்லாத பிதாத்தன்மை.

"உங்களில் எந்த மனுஷனாவது தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத். 7. 9–11.)

ஜெபத்திற்கு உத்தரவு நிச்சயம் என்று நமதாண்டவர் முன்சொன்னதை இந்த வார்த்தைகளினால் பின்னும் உறுதிப்



படுத்துகிறார். நமது மனதில் சந்தேகத்தை அடியோடே நீக்கி, அவர் சொன்ன வாக்கு விழவே விழாது என்று நமக்கு விளக்கும்பொருட்டு, நாமொவ்வொருவனும் இப்பூவுலக வாழ்க்கையில் கண்டநுபவித்த அநுபவத்தை அவர் கைப்பிடியாக எடுத்தகளுகிறார். நாமெல்லாரும் அவரவர் தம்தம் தகப்பனுக்குப் பிறந்த பிள்ளைகள்; நாம் பிள்ளைகளாயிருக்கையில் அவரவர் தம்தம் தகப்பனிடத்தில் எதை எதிர்பார்த்திருந்தோம் என்று அறிவோம். இதுவுமல்லாமல், நாமே இப்போது நாம் பெற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன்மாராயிருக்கிறோம்; அல்லவென்றால், பிள்ளைகளைப் பெற்ற தகப்பன்மாரை எங்கும் பார்க்கிறோம். எங்கும் நாம் அநுபவத்தில் காண்பதென்ன? தகப்பனாயிருக்கிறவன் தன் பிள்ளை கேட்பதை அன்புடனே கொடுப்பான் என்பதைக் கவனிக்கிறோம். இது மானிட இயற்கை. இப்போது பூலோக தகப்பனைப் பார்க்கிற கண்ணை உயர்த்தி பரலோக தகப்பனைப் பாருங்கள் என்று நமதாண்டவர் சொல்லுகிறார். பூலோக தகப்பன்மாருள் எல்லாரிலும் சிறந்தவன்கூட பொல்லாதவனேயொழிய வேறல்ல. அப்படியிருக்க, பொல்லாப்பென்பது கிஞ்சித்துமில்லாமல் நன்மை வடிவாகவேயிருக்கிற பரம தகப்பன் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுப்பார் என்பது எவ்வளவு அதிக நிச்சயம் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். இதனால் இயேசு நமக்கு உணர்த்த விரும்புவது இது: தேவன் பாவமானிடனைவிட அளவு கடந்த பெரியவர்; பூலோக மானிடன் தன் பிள்ளை கேட்பதை மனமுவந்து கொடுப்பான்; அப்படியானால், தேவன் தம் பிள்ளைகள் கேட்பதைக் கொடுப்பார் என்பது அளவு கடந்த நிச்சயம். தேவன் மனிதனிலும் எவ்வளவு பெரியவரோ அவ்வளவு அதிக நிச்சயம் பூலோக தகப்பனைவிட பரலோக தகப்பன் தம் பிள்ளை கேட்பதைக் கொடுப்பார் என்பது.

இந்த உவமை சுளுவும், எளிதாய் அறியக்கூடியதுமாயிருப்ப தெவ்வாறோ அவ்வாறே அதிலுள்ள கருத்து ஆழமும் ஞானார்த்தமுள்ளதுமாயிருக்கிறது. பிள்ளை செய்யும் ஜெபத்திற்குள்ள பெரிய வல்லமை அவனுக்கும் பிதாவுக்குமுள்ள பெரிய உறவினாலேயே உண்டாயிருக்கிறது என்று நமதாண்

டவர் நமக்கு நினைப்பூட்ட விரும்புகிறார். பிள்ளையானவன் பிதாவின் உறவிலேயே பிழைத்து, பிதாவின் வீட்டில், பிதாவின் அன்பிற்குள், பிதாவுக்கு ஊழியஞ்செய்து, வாழ்ந்தால் மாத்திரமே அவனுடைய ஜெபத்திற்கு அப்பேர்ப்பட்ட பெரிய வல்லமையிருக்கும். "கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்னும் வாக்குத்தத்தத்திலிருக்கிற வல்லமை பரமண்டலத்திலிருக்கிற பிதாவுக்கும் நமக்கும் பிதா புத்திரவாத்சல்லிய உறவு நிலைகொண்டால் மாத்திரம் நமக்கு பலிக்கும். நாம் அந்த உறவுக்குள்ளே பிழைத்து அந்த உறவுக்குள்ளே நடந்தால், விசுவாசமாய் ஜெபித்தலும் ஜெபத்திற்கு உத்தரவை நிச்சயமாய் அடைதலும் நமக்குக் கிடைத்துக்கொண்டேயிருக்கும். ஆதலால், நாம் இன்றைக்கு ஜெபப் பாடசாலையில் படிக்கிற பாடம் இது: தேவனுடைய பிள்ளையாய்ப் பிழை, அப்போது பிள்ளையைப் போல் ஜெபிக்கிறவல்லமை உனக்குண்டாகும், பிள்ளையைப் போல் நீ செய்கிற ஜெபம் நிச்சயமாகவே கேட்கப்படும்.

மெய்யான பிள்ளைஜீவியம் எது? இதற்கு உத்தரவு எந்தக் குடும்பத்தை எடுத்துப்பார்த்தாலும் தெரியும். தகப்பன் சமுகத்தில் இருக்கவும், தகப்பன் அன்பை அநுபவிக்கவும் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் பிரியமில்லாமல், தகப்பன் வீட்டை வெறுத்துத் தன் மனம்போனபோக்காய்ப் பிழைக்கிற பிள்ளை அவனிடத்தில் ஏதாகிலும் கேட்டு வாங்கலாம் என்று நினைத்தால் வாய்க்குமா? வாய்க்காது. ஆனால், ஒரு பிள்ளை தகப்பனோடு வாசம்பண்ணி, அவன் மனதின்படி செய்து அவனுக்குக் கௌரவமுண்டாக்கி, அவனை நேசிப்பதே தன் ஜீவியத்தின் இலக்கும் சந்தோஷமுமாகக் கொண்டிருந்தால், அப்பேர்ப்பட்ட பிள்ளைக்கு விருப்பமானதைச் செய்ய அவனுடைய பிதாவுக்குப் பிரியமிருக்கும் என்பது சொல்லவேண்டுவதில்லை. "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" என்று வேதம் சொல்லுகிறது. தேவாவியின் நடத்துதலுக்கு அமைந்து பிள்ளை ஜீவியம் செய்தல் எங்கே இருக்கிறதோ அங்கே வேண்டியதையெல்லாம் கேட்கிற பிள்ளைச்சிலாக்கியமும் இணைபிரியாமல் கூடவே



இருக்கிறது. தன் ஜீவியத்தை நடத்தும்படி எவன் தன்னை தேவாவியானவருக்கு ஒப்புவிக்கிறானோ அவன் தன் ஜெபத்தையும் தேவாவியானவரே நடத்தச் சம்மதிப்பான். தேவன் பிதாவுக்கொத்தமாதிரி கொடுத்துக்கொண்டேயிருக்கை ஒருவன் பிள்ளைக்கொத்தமாதிரி பிழைத்துக்கொண்டேயிருக்கைக்கு வரும் உத்தரவு என்று அவன் அறிந்துகொள்ளுவான்.

மெய்யாகவே பிள்ளைஜீவியம் செய்வது எவ்வாறு? பிள்ளைபோல் கேட்டு, கேட்டது பலிக்கும் என்று நிச்சயத்துடன் இருப்பதற்கு வழி என்ன? என்று கேட்டால், அதை அறிந்துகொள்வதற்குப் பிதாவையும் அவருடைய பிள்ளைகளையும் குறித்து மலைப்பிரசங்கத்தில் நமதாண்டவர் சொல்வதைக் கவனிக்கவேண்டும். அதில் ஜெபத்திற்குச் சொன்ன வாக்குத்தத்தங்கள் ஜீவியத்திற்குச் சொன்ன கட்டளைகளுக்குள் சொருகப்பட்டிருக்கின்றன. அவை இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கவேமாட்டா. அவை ஒரே முழுமைக்குரிய இரண்டு பாதிகள். ஜீவியத்திற்குக் கர்த்தர் சொன்ன கட்டளைகளை ஒப்புக்கொண்டு செய்கிறவன்மாத்திரமே ஜெபத்திற்கு அவர் சொன்ன வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்று நம்பியிருக்கலாம். "கேளுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று அவர் சொன்ன வாக்குத்தத்தம் யாருக்குச் செல்லுமென்றால், அவர் மலைப்பிரசங்கத்தில் வருணித்த பிள்ளைக்கொத்த தரித்திரமும் பரிசுத்தமும் யாருக்குண்டோ அவர்களுக்குமாத்திரம் செல்லும். கேளுங்கள், கேட்டபடி வாங்குவீர்கள், என்னும் வாக்குத்தத்தம் தப்பாமல் யாருக்குப் பலிக்கும் என்று அவரைக் கேட்டால் அவர் சொல்வது இது: நான் யாரை "தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத். 5, 3-9.) என்றேனோ அவர்களுக்கு; "மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று நான் யாரைத் தூண்டினேனோ அந்த தேவ புத்திரருக்கு; "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்

பிர்கள்" (மத். 5. 45.) என்று நான் சொன்ன புத்தியைக் கேட்டு எவர்கள் அன்பில் பிழைக்கிறார்களோ அவர்களுக்கு; "உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத். 5. 48.) என்று நான் சொன்ன கட்டளைக்கு அமைந்து எவர்கள் பூரண சற்குணராகப் பிரயாசப்படுகிறார்களோ அவர்களுக்கு; எவர்கள் மனுஷர்கண் பார்ப்பதற்கல்ல, அந்தரங்கத்தில் பார்க்கிற பிதாவின்கண் மகிழுவதற்கு தர்மம், ஜெபம், உபவாசம் செய்கிறார்களோ அவர்களுக்கு (மத். 6. 1-18.); பிதா தங்களுக்கு மன்னிக்கிறதுபோல, எவர்கள் பிறருக்கு அவர்கள் தப்பிதங்களை மன்னிக்கிறார்களோ அவர்களுக்கு (மத். 6. 15.); முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடி, பூலோக ஜீவியத்துக்குத் தேவையானதையெல்லாம் பரம பிதா கொடுப்பார் என்று எவர்கள் தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு (மத். 6. 24-33.); என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று வெறும் வாய்ச்சொல் சொல்வதோடே விடாமல், பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு (மத். 7. 21.). இப்படியெல்லாம் செய்கிறவர்களே பிதாவின் பிள்ளைகள். பிதாவின் அன்பில் இருந்துகொண்டு அவருக்கு ஊழியம் செய்கிறவர்களுடைய ஜீவியம் இப்படித்தானிருக்கும். எவர்களுக்கு இப்பேர்ப்பட்ட பிள்ளைஜீவியம் உண்டோ, அவர்கள் ஜெபம் கேட்கப்படுவது நிச்சயம். அதற்கு ஏராளமான திருஷ்டாந்தத்தை அவர்கள் தங்கள் சுயஜீவியத்திலேயே காண்பார்கள்.

இதைப் பார்த்தால், பலவீனர்கள் தைரியம் இழந்து போவார்களே; இங்கே காட்டப்பட்டிருக்கிற பிள்ளைச் சுரூபம் நமக்கு இருந்தால்தானே நமது ஜெபம் பலிக்கும்; அப்படியானால், அநேகர் எங்கள் ஜெபம் பலிக்கிறதற்கு வழியேயில்லை யென்று மனங்களைத்துப் போகவேண்டியதில்லையா? பிதா, பிள்ளை, இவ்விரண்டு இன்பமான பெயர்களையும் சிந்தித்துப் பார்த்தால் இந்த மனக்களைப்பு வராது. பிள்ளை என்று நினைக்கும்போதே பலவீனத்தையும் கூடவே நினைக்





கிறோம். மேலும், வயதிலும் வரத்திலும் பிள்ளைக்கும் பிள்ளைக்கும் வித்தியாசம் இருக்கும். இங்கே பிள்ளையிலக்கணம் என்று வகுத்துக் காட்டப்பட்ட பிரமாணத்தை ஒருவன் குறைவேயில்லாமல் பூரணமாய் நிறைவேற்றினால் மட்டும் அவன் ஜெபம் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறதில்லை. அது அவர் கருத்தேயல்ல. உண்மையாகவே தேவனுக்கு பிள்ளைக்குப் பிள்ளையாய் அன்புடன் கீழ்ப்படியவும் அவருடனே பிள்ளையுறவாய்ப் பிழைக்கவும் இஷ்டப்பட்டு, ஒருவன் பிள்ளைபோல் கள்ளங்கபடில்லாமல் முழு உள்ளமும் பொருந்தித் தன்னை அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது மாத்திரமே அவர் கருத்து. ஜெபம் கேட்கப்படுவதற்கு அவசியமானது இதுதான். இதற்குக் குறைவே யிருக்கப்படாது. பிதாவுக்கே முழு உள்ளமும் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஒருவன் இப்படித் தன் உள்ளத்தையெல்லாம் அவருக்குக் கொடுத்து, யதார்த்த மனமும் நிலைவரமான சித்தமுமுடையவனாய் அவருக்கே பிள்ளையாய் இருந்து, பிள்ளையாய்ப் பிழைக்க நாட்டம் வைத்திருக்கிறான் என்பதைக் கண்டால், அப்போது அவர் அவனுடைய ஜெபத்தைப் பிள்ளையின் ஜெபமாக மதிப்பார். மலைப் பிரசங்கத்தைக் கபடில்லாமல் நம்பி அதில் சொல்லப்பட்ட தன்மை உனக்குக் கிடைக்கவேண்டும் என்னும் உட்கருத்து வைத்துப் படி. அந்தப் பாடம் உனக்கு ஏறவேற அதையே உன் ஜீவியத்திற்குப் பிரமாணமாக வைத்துக்கொள். அப்போது, உனக்கு இன்னம் பலவீனமும் தவறுகளும் இருந்தாலும், ஜெபத்திற்குச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்களும் உன் விஷயத்தில் நிறைவேற வேண்டுமென்று கேட்கிற துணிவு உனக்குள் அதிகப்பட்டுக்கொண்டே வரும். உன் மன்றாட்டு உனக்குக் கிடைக்கும் என்பதற்கு உறுதி அவர் பிதா நீ பிள்ளை என்பதிலேயே இருக்கிறது.

இந்த ஒரு முக்கிய எண்ணத்தையே இயேசு இங்கே நமக்கு அறிவுறுத்தப் பார்க்கிறார். அதையே அவருடைய மாணாக்கரெல்லாரும் மனதில் உட்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்புகிறார். தேவனுடைய பிதாவன்பினால் ஒருவன் தன் உள்ளத்தை நிரப்பிக்கொள்ளுவதே அவனுடைய

ஜெபம் பலிப்பதற்கு வழி என்று அவர் காட்டுகிறார். தேவன் பிதாத்தன்மையுடையவர் என்று நாம் அறிந்திருப்பது மாத்திரமே போதாது. அவருடைய பிதாத்தன்மை அதன் பூரண இனிமையுடன் நமது உள்ளத்தில் உறைப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வளவுகாலமும் கொடுத்து அந்த அநுபவத்தை நாம் அடைந்துகொள்ள வேண்டும். இப்புவியில் நாம் கண்ட ஒரு உத்தம தகப்பனை நமக்கு திருஷ்டாந்தமாக எடுத்து அவன் தன் பிள்ளையின் வேண்டுகோளை எவ்வளவு அன்பும் உருக்கமுமாய்க் கேட்கிறான், அந்த வேண்டுகோள் நியாயமானதானால் அதைக் கொடுப்பதற்கு அவன் எவ்வளவு உவப்புடையவனாயிருக்கிறான் என்று கவனித்துக்கொள்ளவேண்டும். அதன்பிறகு, தேவனுடைய அன்பு அளவற்ற அன்பும் அவருடைய பிதாத்தன்மை அளவற்ற பிதாத்தன்மையுமா யிருப்பதை நினைத்து நெஞ்சுருகி அவரை ஸ்தோத்திரிக்கவேண்டும். அப்படி ஸ்தோத்திரித்துக்கொண்டே, நம் வேண்டுகோளைக் கேட்க அவர் எவ்வளவு அதிக ஆசையாயிருக்கிறார் என்றும், அது சரியானதானால் அதைக் கொடுப்பது அவருக்கு எவ்வளவு அதிக உவப்பாய் இருக்கிறது என்றும் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். அந்தக் கணக்கு நமது கிரகிப்புக்கு அகப்படாமலும், தேவன் நமது ஜெபத்தைக் கேட்க அத்தியந்த பிரியமுடையவராயிருப்பது நம் அறிவுக்கு எட்டாமலுமிருந்தால், நாம் செய்யவேண்டியதென்ன? தேவனுடைய அளவில்லாத அன்புத்தன்மையை அறியமாட்டாமல் தவிக்கிற நமது உள்ளத்தைக் கொண்டுபோய் தேவாவியானவருக்குமுன் திறந்து வைத்து, அதில் நமது உணர்வுக்கு அகப்படக்கூடிய விதமாய் தேவனுடைய பிதாவன்பை ஊற்றும்படி கெஞ்சவேண்டும். இப்படி ஜெபவேளைகளில் மாத்திரம் செய்வது போதாது. நமது உள்ளமும் உயிரும் எப்போதுமே அந்தப் பிதாவன்புக்குள்ளே குடியிருக்கவேண்டும். தனக்கு ஏதாவது வேண்டும்போது மாத்திரமே தகப்பனுடைய அன்பைத் தேடி, மற்ற வேளைகளில் அதைச் சட்டைபண்ணாமலிருக்கிற பிள்ளை தான் விரும்புவதைப் பெறுவது வருத்தம். வேளாவேளைகளில் மாத்திரமல்ல, எல்லாவேளைகளிலுமே தேவன்





எனக்குப் பிதாவாயிருக்கவேண்டும். என் ஜீவியத்தின் ஓரொருபாகம் மாத்திரமல்ல, என் முழுஜீவியமுமே தேவனுடைய முகத்துக் கெதிரிலும் அவருடைய அன்புக்குள்ளேயும் இருக்கவேண்டும். தேவனுடைய அளவில்லாத பிதாத்தன்மைக்குள் பிழைக்கிற பிழைப்பும் ஜெபத்திற்குத் தப்பாத உத்தரவும் இணைபிரியாமல் எப்போதும் கூடியே இருக்கும். தமது சகல அன்பு மகத்துவத்துடனும் தேவன் தனக்குப் பிதாவாயிருக்கவேண்டும் என்று விரும்புகிறவன் இதைச் சுய அநுபவத்தில் தீர்க்கமாய் அறிவான்.

என் நேச உடன்மாணாக்கனே! நமது ஜெபத்திற்கு ஏன் தினந்தோறும் உத்தரவு வருகிறதில்லை என்பதற்குக் காரணமும் நமதாண்டவருடைய பாடசாலையில் நாம் படிக்கவேண்டிய முக்கிய பாடமும் இன்னதென்று இப்போது நமக்குத் தெரியும். இரண்டும் பிதா என்னும் நாமத்திற்குள் இருக்கிறது. கிறிஸ்துவின் ஜெபப் பாடசாலை என்று கேட்டதும், அதிலே நாம் படித்தால், ஜெபஉலகத்தின் இரகசியங்கள் சிலவற்றை வரவரப் புதிதாய் அறிந்துகொள்ளலாமாகும் என்று நினைத்தோம். அவரோ அதில் முதற்பாடமே எல்லாவற்றிலும் உயர்ந்த பாடம் என்கிறார். "அப்பா, பிதாவே," "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்னும் இந்தப் பதத்தை வகையறிந்து சொல்லப் படிப்பதே முக்கிய பாடம். இப்படிச் சொல்லக் கற்றவன்கையில் எல்லா ஜெபத்திற்கும் திறவுகோல் அகப்பட்டிருக்கிறது. நோயாளிப் பிள்ளைகள், பெலவீனப் பிள்ளைகள், இவர்களுடைய வாய்ப்பிறப்பைக் கேட்பதற்கு இளகி உருகிக்கொண்டிருக்கும் தகப்பனிருதயம்,—மழலைச்சொல்லால் மனக்கருத்தை வெளியிடுகிற குழந்தையைக் கண்டு களிக்கிற பிதாவுள்ளம்,—தன் பிள்ளையின் புத்தியீனத்தைப் பார்த்துச் சீறாமல் அவனுக்குச் சாந்தமான பொறுமைகாட்டும் தந்தை மனம்,—இவற்றை நமக்குக் கண்ணாடிகளாக வைத்துக்கொண்டு, நாம் நமது பரமதகப்பனுடைய திருவுள்ளத்தைப் படிக்கவேண்டும். "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" என்பது நமது விசுவாச அறு

பவத்திற்கு அகப்பட்டு வழக்கமாகிறவரையில் நாம் இப்ப
டிப் படிப்பதை விட்டுவிடக் கூடாது.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! உம்முடைய பாட
சாலையில் இந்தப் பாடமே முதற் பாடம், சிறு பாடம்,
மகிமையான பாடம். ஆகிலும், இந்தப் பாடமே எங்கள்
உள்ளத்திற்கு விருத்தமான பாடங்களில் ஒன்று என்பது
உமக்குத் தெரியும். ஏனெனில், எங்கள்மேல் பிதாவுக்கு
இருக்கிற அன்பு எங்களுக்கு விளங்குகிறதேயில்லை. எந்தப்
பூலோகபிதாவின் அன்பையும்விட பரமபிதாவின் அன்பு
எங்கள் உள்ளத்திற்கு அதிக நாட்டமும், அதிகத் தெளிவும்,
அதிகப் பிரியமுமாகிறவரையில் நாங்கள் அவருடனேகூட
வாசம் செய்யப் பண்ணும். பூலோக தகப்பன்மேல் நாங்கள்
பெரிய நம்பிக்கை வைப்பது எங்களுக்கு இயற்கை. பூலோ
கத்துக்குப் பரலோகம் எவ்வளவு மேலானதோ, மனிதனுக்
குத் தேவன் எவ்வளவு உயர்த்தியோ, அவ்வளவு அதிக நம்
பிக்கையை எங்கள் பரம பிதாவின்மேல் வைத்து, அவர் எங்
கள் ஜெபத்தைக் கேட்பார் என்று நாங்கள் நிச்சயித்திருக்கப்
பண்ணும். பிள்ளை லக்ஷணத்துக்கு விரோதமாய் நாங்கள்
எங்கள் பிதாமுகம் காணப் பிரியமில்லாமல் அவருக்குத்
தூரமாயிருப்பதே எங்கள் ஜெபத்தைத் தடைப்படுத்துகிறது.
தேவ பிள்ளைகளுக்கு இருக்கவேண்டிய சரியான பிள்ளை
ஜீவியம் எங்களுக்கு வரப்பண்ணும். தகப்பன் அன்பே
பிள்ளைக்கு நம்பிக்கையைப் பிறப்பிக்கும். ஆகையால்,
இயேசு ஆண்டவரே! எங்களுக்குப் பிதாவை வெளிப்படுத்
தும்; அவருடைய உருக்க இரக்கமுள்ள அன்பை எங்
கள் உள்ளங்களுக்குத் தெரியப்பண்ணும். அப்போது, நாங்
கள் பிள்ளை நெஞ்சுடையவர்களாகி, பிள்ளைஜீவியம் செய்து,
எங்கள் சுய அநுபவத்தினால் பிள்ளைஜீவியத்திலேயே ஜெபத்
தின் வல்லமை யிருக்கிறது என்று அறிந்துகொள்வோம்.

பிதாவின் நேசபுத்திரரே! பிதா உம்மை நேசித்து எல்லா
வற்றையும் உமக்குக் கொடுத்திருக்கிறார். நீரும் பிதாவை



நேசித்து அவர் உமக்குக் கற்பித்த எல்லாவற்றையும் செய்
திருக்கிறீர். ஆகையால், எல்லாவற்றையும் கேட்கிற வல்ல
மை உமக்கு இருக்கிறது. ஆண்டவரே! எங்களுக்கு உமது
சொந்த ஆவியைக் கொடும், அதாவது, உமக்கிருக்கிற புத்
திரத்தன ஆவியை எங்களுக்கு அளியும். நீர் இப்புவியி
லிருக்கையில், எப்படிப் பிள்ளைத்தன்மை கெடாமல் நடந்
துகொண்டீரோ அப்படி நாங்களும் பிள்ளைத்தன்மை கெடா
மல் நடந்துகொள்ளப் பண்ணும். பூமியின்மேல் வானம்
இருக்கும் உயரம்போல தேவனுடைய பிதாவன்பு இருக்
கிறது. நாங்கள் கேட்டதைக் கொடுப்பதற்கு அவருக்குள்ள
பிரியம் எங்கள் நினைப்புக்கும் சிந்திப்புக்கும் எட்டாத அள
வற்ற பிரியம் என்று அறிந்து அநுபவிக்கிற விசுவாசத்திலி
ருந்து எங்கள் ஜெபமெல்லாம் புறப்படப்பண்ணும். ஆமென்.

## மேற்கோள்.*

'பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா'—இதை நினைக்
கும்போதே நெருங்கத்தகாத பெரிய கனம் உடையவர் ஒருவரைக்
கருத்தில் அமைத்துக்கொண்டு, தூரத்திலிருந்துகொண்டே வணக்
கத்தை ஒரு கடமைபோல் அவருக்குச் செலுத்தித் தீர்க்கவேண்டு
மென்று எண்ணிக்கொள்ளுகிறோம். தேவன் நம்மேல் உருக்கமும்,
இரக்கமும், பட்சமும் வைத்திருக்கிற நமது சொந்தத் தகப்பன்தான்
என்று நினைக்கப் பயப்படுகிறோம். அவர் நமது நினைப்பில் ஒரு உபாத்
தியாயர்போல ஆவது அதிலும் அந்நியர்போல ஆவது இருக்கிறார்.
அவருக்கு நமது நிலைமை தெரியாதென்றும் நாம் ஒப்புவிக்கிற பாடங்
கள் மூலியமாயல்லாமல் வேறுவிதமாய் நம்மை யறியாத ஒரு பாட
சாலை மேல்விசாரணிகர்போல் அவர் இருக்கிறார் என்றும் நினைத்துக்
கொள்ளுகிறோம். படிக்கிறவன் இன்னான், படிக்காதவன் இன்னான்
என்று அவருக்கு தெரியுமேயொழிய வேறொன்றும் நம்மைப்பற்றித்
தெரியாது என்றும், அவர் கருத்தெல்லாம் குறித்த பாடத் திட்டத்திற்

---

* இது மார்க்கு கை பீயர்ஸ் ஆசிரிய ரியற்றிய "கிறிஸ்தவ புனித
விளக்கம்" என்னும் நூலினின் றெடுத்தது. இதில் தேவனுடைய பிதா
வன்பை அறிவதே நமது பரிசுத்தமாகுதலுக்குத் துவக்கம்" என்று சொல்லி
யிருப்பது நமது ஜெபத்திற்கும் செல்லும்.

கும் பிள்ளைகளெல்லாரும் வந்துவிட்டார்களா இல்லையா என்று பார்ப்பதே என்றும் மனத்தோற்றம் செய்துகொள்ளுகிறோம்.

தேவனுடைய பயங்கொளிப் பிள்ளையே, உன் இருதயத்தின் காதைத் திற. பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா என்கிற சொல் உன் ஆத்துமாவின் உள்ளுக்குள்ளான ஆழத்தில் வந்து விழுந்திருக்கச் செய். உன் பரம பிதாவுக்கு உன்மேல் கிருபையின் பட்சம், பொறுமை, உருக்கம் இருக்கிறது என்று நீ அறிந்திருப்பதிலிருந்தே பரிசுத்தமாகத் துவக்கவேண்டும். பரிசுத்தமாகுதல் தேவனுக்கு நம்மைப்பற்றி நல்லெண்ணம் வரும்படி நாம் பள்ளிக்கூடத்தில் இருந்துகொண்டு வருத்தத்தோடே படிக்கவேண்டிய பாடமல்ல. பிதாவின் வீட்டில் இருந்துகொண்டே, அவர் உதவி செய்யச்செய்ய, நாம் பரிசுத்தமாகப் படிக்கவேண்டும். நீ கெட்டிக்காரன், சமர்த்துள்ளவன், நல்லவன் என்பதினிமித்தம் தேவன் உன்னை நேசிப்பார் என்று நினையாதே. அப்படியல்ல, **உனக்குப் பிதாவாயிருப்பதினிமித்தமே** அவர் உன்னை நேசிக்கிறார். அவர் நம்மேல்அன்புவைக்க கிறிஸ்துவின் சிலுவை அவரைத் தூண்டுகிறதில்லை. அது அவர் நம்மேல் வைத்த அன்பினால் விளைந்த விளைவும் நம்மேல் அவர் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்று நமக்கு அளந்துகாட்டுகிற அளவுகோலுமேதவிர வேறல்ல. அவருக்கு அவருடைய பிள்ளைகள் எல்லார்மேலும் அன்பு உண்டு. அவர்கள் வகையறிந்து செய்யத் தெரியாதவர்களோ, மூடர்களோ, கெட்டவர்களோ, எப்பேர்ப்பட்டவர்களாயிருந்தாலும் சரி, அவர்கள்மேலுள்ள அவருடைய அன்பு கெடாது. நாம் செய்யவேண்டியதற்கெல்லாம் அவருடைய அன்பையே கைப்பிடியாகப் பிடித்திருக்கவேண்டும். நமது ஞானஜீவியம் முழுமையும் அவருடைய அன்பு என்னும் அசையாத அஸ்திபாரத்தின்மேல் நிற்கவேண்டும். நாம் வழக்கமாய் நினைக்கிறபடி, நாம் ஞானஜீவியம் செய்து செய்து அவருடைய அன்பைப் பெறவேண்டும் என்று எண்ணுவது சரியே அல்ல. நாம் அவருடைய அன்பைப் பெற்று அதை ருசித்துக்கொண்டே ஞானஜீவியம் செய்து, ஞானவளர்த்தி வளரவேண்டும். இங்கேதான் ஞானஜீவியம் துவக்கவேண்டும். இதை விட்டு, அது வேறெங்கே துவக்கினாலும் கெடும். இதைப் பலமாய்ப் பிடித்துக்கொள். நமது ஞானஜீவியம் தடையறாமல் நடப்பதற்கு நமக்கு நம்பிக்கை, பலம், நிச்சயம், இதெல்லாம் வேண்டும். இதெல்லாம் நமக்குள்ளேயேயிருந்து நமக்கு வராது, நமக்குப் புறத்திலிருந்தே வரவேண்டும். பரமண்டலங்களிலிருக்கிற **உங்கள் பிதா** என்பதிலிருந்து நமது ஞானஜீவியத்தை ஆரம்பித்துக்கொண்டால், எப்பேர்ப்பட்ட நம்பிக்கை, எப்பேர்ப்பட்ட பலம், எப்பேர்ப்பட்ட நிச்சயம் நமக்கு அதினால் வரும்!



**உங்கள் பிதா.**—இந்த வார்த்தைகளுக்குள் இருக்கிற உருக்கத்தையும், அதை அறிவதனால் நமது ஞானஜீவியத்திற்கு வருகிற பெரிய உதவியையும் பிடித்துக்கொண்டு அதில் சார்ந்திருப்பது நமக்கு மிக அவசியம். அதை உள்ளுணர்ச்சியுடன் சொல்லிச் சொல்லி, அதிலிருக்கிற பேரானந்தம் விளைவிக்கிற உண்மை உன் சுய அநுபவத்திற்கு எட்டும்படி பண்ணிக்கொள். எல்லாவற்றிலும் பெரிய நேச உருக்கம் உண்டாக்கத்தக்க அதி நெருக்கமான உறவு எனக்கும் தேவனுக்கும் உண்டாயிருக்கிறது என்று இந்தச் சொல் உணர்த்துகிறது. அவருடைய அன்பு, அவருடைய வல்லமை, அவருடைய நன்மைகள், இவையெல்லாவற்றிலும் எனக்குப் பங்குண்டு என்று கேட்க எனக்குச் சொந்தம் இருக்கிறது. பிதாவுறவைப்போல் வேறெந்த உறவும் இப்பேர்ப்பட்ட சொந்தம் எனக்குக் கொடுக்க முடியாது. ஆ, எப்பேர்ப்பட்ட துணிவுடன் நாம் இனி தேவனிடத்தில் நெருங்கிப் போகலாம் பார்! ஆ! எப்பேர்ப்பட்ட பெரிய நன்மைகளை நாம் அவரிடத்தில் கேட்டு வாங்க நமக்குச் சொந்தம் இருக்கிறது பார்! **உங்கள் பிதா!** அவருடைய அளவற்ற அன்பு, பொறுமை, ஞானம், இதெல்லாம் எனக்கு உதவிசெய்வதற்கு என்மேல் கவிந்திருக்கிறது என்று இந்த மொழிகள் தெரிவிக்கின்றன. இந்த மொழிகளுக்குள்ளே நாம் பரிசுத்தமாகிவிடலாம் என்பதற்கு உறுதியிருக்கிறது; அதைத்தவிர, வேறநந்தம் உறுதிகளும் அவற்றிலிருக்கிறது.

தேவனுடைய பொறுமைநிறைந்த பிதாவன்பிலேதான் நாம் நமது ஞானஜீவியத்தைத் துவக்கவேண்டும். நம்மில் அவனவனுக்கு என்னென்ன குணங்குறிகள்; என்னென்ன பலவீனங்கள், என்னென்ன வருத்தங்கள் நமது ஞானஜீவியத்திலிருக்கின்றன என்பது அவருக்குச் செம்மையாய்த் தெரியும் என்று நினைத்தாலே ஆனந்தமாயிருக்கிறது. உபாத்தியாயர் நமது முயற்சி சித்தித்ததா இல்லையா என்று பார்த்து அதன்படி நம்மை நிதானிப்பார். நமது தகப்பனோ, சித்தியையும் சித்தியில்லாமையையும் கவனியாமல் நாம் செய்யும் முயற்சியை மாத்திரமே பார்த்து நம்மை நிதானிப்பார். செய்த முயற்சி சித்திக்காமலிருப்பது ஒருவன்மேல் சுமரும் பழுது என்று எப்போதும் சொல்லப்படாது. ஒரு கருமத்தை முடிக்க எவ்வளவோ முயற்சி வேண்டும் என்று அவர் அறிவார். ஆகையால், மற்றவர்கள் ஒருவன் எடுத்த கருமம் முடிந்ததா இல்லையா என்று அளந்து நோட்டம் சொல்லும்போது, அவர் அந்தக் கருமத்திற்குப் போதுமான பலம் அவனுக்கு இருக்கிறதா இல்லையா என்று இரக்கமாய்ச் சீர்தூக்கிப் பார்ப்பார். **உங்கள் பிதா.** அவருடைய சிறுபிள்ளைகள் செய்யும் துவக்க

கள் மற்றவர்கள் கண்ணுக்கு எவ்வளவு அவலட்சணமும் விகாரமுமாயிருந்தாலும், அவருடைய கண்ணுக்கு அவை அருமையும் பெருமையுமாகவேயிருக்கும். இதை நினைத்துப்பார். இந்தப் பேரானந்தமும் வேறு எத்தனையோ நன்மைகளும் நமக்கும் பிதாவுக்கும் இருக்கிற உறவினால் வருகிறது பார். அந்த உறவைப் பிடித்துக்கொண்டு, அது தருகிற நன்மைகளெல்லாம் உன் சொந்தமேயென்று நினைக்கப் பயப்படாதே.

## ஏழாம் பாடம்.

### 'பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?'

அல்லது,

### சமஸ்தமும் அடங்கிய வரம்.

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (லூக். 11. 13.)

அதிக நிச்சயம் அல்லவா என்னும் ஆச்சரியமான வாசகத்தை நமதாண்டவர் மலைப்பிரசங்கத்தில் மொழிந்தார். லூக்கா தெரிவிக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் அந்தக் கேள்வியையே கேட்கும்போது ஒரு வித்தியாசம் இருக்கிறது. மலைப்பிரசங்கத்தின்போது, நல்ல ஈவுகளைக் கொடுப்பதைப்பற்றி அவர் பேசினார். இப்போதோ "பரம பிதாவானவர் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" என்று சொல்லுகிறார். இதனால் அவர் உணர்த்துகிறதென்னவெனில்: தேவன் நமக்கு அருளும் வரங்களில் பெரியது தேவாவி, அந்த ஒரு வரத்துக்குள் மற்ற வரங்களெல்லாம் அடங்கியிருக்கிறது என்பதுதான். பிதா அருளும் வரங்களில் முதல்வரம் தேவாவியானவர். அந்த வரம் கொடுக்கிறது அவருக்கு அத்தியந்த பிரியம். ஆதலால்,



நாம் அடைந்துகொள்ளவேண்டிய முக்கியமான முதல்வரம் தேவாவியானவரே.

இந்த வரத்துக்கு இருக்கிற சொல்லமுடியாத பெருமையை நாம் எளிதாய் அறிந்துகொள்ளலாம். தேவாவியானவருக்கு "பிதாவின் வாக்குத்தத்தம்" என்று இயேசு ஒரு பெயர் சொன்னார். அதாவது, பிதா வாக்களித்திருக்கிற இந்த ஒரு நன்மையை ஒருவன் பெற்றால் அதிலே தேவனாகிய அவருக்கு இருக்கிற பிதாத்தன்மை அவனுக்கு வெளிப்பட்டுவிடும். சற்குணமும் ஞானமுமுடைய ஒரு தகப்பன் தன் பிள்ளைக்குக் கொடுக்கக்கூடிய எல்லாத்திலும் சிறந்த கொடை தன்னுடைய சொந்த ஆவிதான். தன் பிள்ளைக்குச் சிறந்த ஒழுக்கம் வருவிக்கவேண்டும் என்று கருத்தியுழைக்கும்போது அவன் மனதில் இருக்கிற குறிப்பு என்னவெனில்: தனக்கு இருக்கிற குணமும் தான் கொண்டிருக்கிற சீலங்களும் தன் பிள்ளைக்கு அமையவேண்டும் என்பதே. தகப்பனுடைய மனக்கருத்து பிள்ளைக்கு எப்போதும் தெரியவேண்டும். பிள்ளை வளர வளர, என் தகப்பன் இன்னதை விரும்புகிறான், இன்னதைச் செய்ய உத்தேசிக்கிறான் என்று அவன் தானாகவே தெரிந்துகொண்டு அதற்குத்தக்கபடி நடந்துகொள்ளவேண்டும். பிள்ளையின் சந்தோஷமெல்லாம் தகப்பனுக்குள்ளும், தகப்பனின் சந்தோஷமெல்லாம் பிள்ளைக்குள்ளும் இருக்கவேண்டும். இதற்கு வழி தகப்பனுக்கும் பிள்ளைக்கும் ஒரே மனதும் ஒரே ஆவியும் இருப்பதே. இவ்வாறே, தமது சொந்த ஆவியைத் தம் பிள்ளைக்குக் கொடுப்பதைவிடச் சிறந்த கொடை வேறெதுவும் தேவன் கொடுக்கக்கூடும் என்று நினைக்க முடியவில்லை. தேவாவியானவரே தேவனுக்கு இருக்கிற சிறப்பு, தேவாவியானவரே தேவனுடைய உயிர்நிலை என்னலாம். புவியிலிருக்கிற தம் பிள்ளைக்கு தேவன் தமது சொந்த ஆவியைக் கொடுக்கிறார் என்பதைச் சிந்தித்துப்பார்த்து அதனால் என்னென்ன நன்மை கிடைக்கும் என்று அறிந்துகொள்.

இயேசு பூலோகவாசியாயிருந்தபோது பிதாவின் ஆவியே அவருக்குள் குடியிருந்தார் என்பதே அவருக்கிருந்த மேன்மை அல்லவா? அவர் யோர்தானில் ஞானஸ்நானம்

பெற்றபோது, அவரைத் தமது நேசகுமாரன் என்று விளம்பரம்பண்ணின பிதாவின் வார்த்தையும் அவர்மேல் இறங்கின தேவாவியும் ஆகிய இவ்விரண்டும் அவரிடத்தில் ஒன்றிப் பொருந்தியிருந்தது. இதையிட்டே அப்போஸ்தலன் நம்மைக்குறித்தும்: "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" என்கிறான். அரசனாயிருக்கிற தகப்பன் தன் பிள்ளையின் கல்விவிஷயத்தில் சர்வஜாக்கிரதையுடனும் வைத்திருக்கிற இலக்கு அந்தப் பிள்ளைக்குள் இராஜ ஆவியை மூட்டி வளர்ப்பதே. அப்படியே பரலோகத்திலிருக்கிற நமது தகப்பனும் தாம் வாசம்செய்கிற பரலோகத்திற்கு யோக்கியமான பரிசுத்த ஜீவியத்தை நமக்குள் மூட்டி வளர்க்கவேண்டும் என்கிற பிரியம் வைத்திருக்கிறார். இதற்காக அவர் தமது உள்ளத்தில் இருக்கிற தமது சொந்த ஆவியை நமக்குக் கொடுக்கிறார். தமது சுய இரத்தத்தினால் பிராயச்சித்தம் செய்து, நமக்காக இயேசு தேவசமுகத்தில் போனபோது அவர் மனதிலிருந்த இலக்கும் அதுவே. நமக்காகப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு, எப்போதும் நமக்குள் வாசம்பண்ணும்பொருட்டு அவரை அனுப்புவதே அவர் மனதிலிருந்தது. பரிசுத்தாவி பிதாவின் ஆவியும் குமாரனின் ஆவியுமாயிருக்கிறார். அதினாலே, பிதாவின் முழுஜீவனும் முழு அன்பும் குமாரனின் முழுஜீவனும் முழுஅன்பும் அவரில் இருக்கிறது. அவர் நமக்குள் வந்து, நம்மை அவர்களோடு ஐக்கியம் செய்யத் தகுந்தவர்களாய் உயர்த்திவிடுகிறார். அவர் நமக்குள் பிதாவின் ஆவியாயிருந்துகொண்டு, பிதா தமது சொந்தக்குமாரனை எந்த அன்பால் நேசித்தாரோ அந்த அன்பையே நமக்குள் ஊற்றி, அந்த அன்புக்குள்ளேயே நாம் வாசம்பண்ணும்படி செய்கிறார். அவர் நமக்குள் குமாரனுடைய ஆவியாயிருந்துகொண்டு, குமாரன் பூமியில் வசித்தபோது அவருக்குள் இருந்த சுயாதீனம், பிதாபக்தி, கீழ்ப்படிதல், இவற்றை நமக்குள் மூட்டிவிடுகிறார். பிள்ளைத்தன்மையின் ஆவியாகிய தமது சொந்த தேவாவியை நமக்குக் கொடுப்பதைவிட அதிக உயர்வானதும் அதிக வியப்



புக்குரியதுமான நன்மையைப் பிதா நமக்குக் கொடுக்க முடியாது.

இதுவே தேவன் நமக்கு அளிக்கக்கூடிய முக்கியமான முதல் வரமாயிருப்பதினால், நாம் பண்ணும் எல்லா ஜெபங்களிலும் இந்த முக்கியமான முதல் கொடையையே நாமும் கேட்கவேண்டும் என்பது சொல்லவேண்டுவதில்லை. ஞான ஜீவனுக்கு அவசியமானவற்றிற்கெல்லாம் ஒன்றே தேவை: அது பரிசுத்த ஆவி. கிருபை, உண்மை, இவற்றின் நிறைவு எல்லாம் இயேசுவுக்குள் இருக்கிறது. அந்த நிறைவிலிருந்தே நாம் கிருபையின்மேல் கிருபையைப் பெறுகிறோம். இயேசுவுக்குள் இருக்கிற இந்த ஞான ஆஸ்தியை எடுத்து நமக்குச் சொந்தமாய்க் கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறவர் தேவாவியானவர். இயேசுவையும் அவருக்குள் நமக்காக இருக்கிற எல்லா நன்மைகளையும் நம்மில் ஒவ்வொருவனுக்கும் சொந்தமாய்க் கொடுத்து அநுபவிக்கச் செய்வதே அவருக்குரிய முக்கிய வேலை. அவர் கிறிஸ்து இயேசுவுக்குள் ஜீவ ஆவியாயிருக்கிறார். அந்த ஜீவன் ஆச்சரியமான ஜீவன். அந்த ஜீவன் நமக்குக் கிடைக்கும்படி செய்ய இப்பேர்ப்பட்ட காரியநிர்வாகம் ஏற்படுத்தப்பட்டிருப்பது ஆச்சரியமான ஏற்பாடு. நாம் முன்பின் பாராமல் அவரே தஞ்சம் என்று நம்பி நம்மை அவர் வசம் ஒப்புவித்து, அவர் இஷ்டப்படி நமக்குள் வேலை செய்யாவிட்டால், அவர் கிறிஸ்துவின் ஜீவனை நமக்குள் உற்பத்திபண்ணி, வளர்த்து, விளங்கச் செய்வார். அப்படி அவர் நமக்குள் துவக்கின இந்த தெய்வீக ஜீவன் இடையறாமல் எப்போதும் விருத்தியாகிக்கொண்டே வருவதற்கு அவர் தமது தெய்வ வல்லமையினால் நிர்வாகம் பண்ணுவார். நம்மை எப்போதும் பிதாவின் ஆசனத்தண்டை இழுத்துவந்து, அங்கேயே தரித்திருக்கச்செய்வதற்கு வேண்டிய ஒரே முக்கிய ஜெபம் எதுவென்றால் பரிசுத்தாவியை நமக்கு அருளும்படி ஜெபிக்கிற ஜெபமே. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பெற்றிருக்கிற பரிசுத்த ஆவி மேலும் மேலும் பெருக்கெடுக்கிற வெள்ளமாய் தேவனிலிருந்து நம்முள்ளும், நம்மிலிருந்து பிறருள்ளும் ஓயாமல் பாய்ந்துகொண்டேயிருக்கும்படி நாம் ஜெபிக்கவேண்டும்.

தேவாவியானவர் மனிதருக்குப் பகிர்ந்து கொடுக்கும்
நன்மைகள் பல வேறு வகைப்படும். விசுவாசிக்குத் தேவை
யானதெல்லாம் அந்த நன்மைகள்தான். அவர் அளிக்
கும் நன்மைகளுக்குத் தகுந்தாற்போல் அவருக்குப் பல
வேறு நாமங்கள் இருக்கின்றன. அவைகளை நினைத்துப்
பார்த்தால் அவரால் என்னென்ன நமக்குக் கிடைக்கும்
என்று தெரியும். அவர் இயேசுவுக்குள் இருக்கிற கிரு
பையை எல்லாம் நமக்கு வெளிப்படுத்தி அநுபவிக்கச் செய்
கிறவராகையால் அவர் கிருபையின் ஆவி. நாம் விசுவாசிக்
கத் துவக்குவது எப்படி, விசுவாசத்தில் தொடர்ந்து
விடாப்பிடியாய் இருப்பது எப்படி, விசுவாசத்தில் அதிக
ரித்து வளர்வது எப்படி என்று அவர் நமக்கு வகை விபர
மாய்ப் போதித்து, நமக்குள் விசுவாசத்தை உண்டாக்குகிற
வரானதால் அவர் விசுவாசத்தின் ஆவி. நாம் தேவனுடைய
பிள்ளைகள் என்று நமக்குள் சாட்சி கொடுத்து, நாம் தேவ
னைப்பார்த்து அப்பா! பிதாவே! என்று துணிந்து பிள்ளை
நம்பிக்கையுடன் சொல்லப் பழக்குகிறவர் அவராதலால்,
அவர் புத்திரசுவிகாரத்தின் ஆவி, உறுதியான நிச்சயத்
தின் ஆவி, என்னப்படுகிறார். நம்மை எல்லாச் சத்தி
யத்திற்குள்ளும் நடத்தி, தேவன் சொன்ன ஒரு வார்த்தை
யாகிலும் தப்பாமல் எல்லாம் நமது அநுபவத்திற்கு எட்டி
வாய்க்கும்படி செய்து, அதை சத்தியமாகவே நமது சொந்
தமாக்குகிறவர் அவராகையால் அவர் சத்தியத்தின் ஆவி.
அவர் மூலமாகவே நாம் தேவனைப் பிதாவாகப் பார்த்து
அவரோடு பேசி, பலிக்கும்ஜெபம் செய்யக்கூடியவர்களாக்
குகிறவராதலால் அவர் ஜெபத்தின் ஆவி. நமது உள்ளத்தை
ஆராய்ந்து நமக்கு வெளிப்படுத்தி, நமக்குள் பாவ உணர்வு
மூண்டெரியும்படி செய்கிறவர் அவரானதால், அவர் நிதா
னிப்பு, உணர்வுமூளுதல் என்றவைகளின் ஆவி. தமது
அதிதூய பரிசுத்தத்துடன் பிதா நமக்குள் இருப்பதை
நமக்கு விளங்கப்பண்ணி, அந்தப் பரிசுத்தத்தில் நாம் பங்
கடையும்படி செய்கிறவர் அவராகையால், அவர் பரிசுத்தத்
தின் ஆவி. நாம் பிதாவைச் சேவிக்கும் ஞானச்சேவகத்தில்,
நமது ஞானஅநுபவங்களைத் தைரியமாய்ப் பிறருக்கு எடுத்



துக்காட்டிச் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்கவும், பயன்
பட உழைக்கவும் வேண்டிய பலம் எல்லாம் அவரால் நமக்
குக் கிடைப்பதினால் அவர் பலத்தின் ஆவி. இனி நமக்கு
வரும் மகிமைக்கு நம்மைப் பக்குவம்பண்ணி, அதை ஒரு
வாறு இங்கேயே முன்ருசிக்கச்செய்து, அந்த மகிமையான
மோட்ச சுதந்தரம் நமக்குத் தப்பாது என்று நமக்குள் நிச்
சயம் மூட்டுகிறதினால், அவர் மகிமையின் ஆவி. ஆகலால்,
தேவனுடைய பிள்ளையாகிய ஒருவன் பிள்ளைஜீவியம் செய்
வதற்கு வேண்டுவதெல்லாம் ஒன்றே யொன்றுமாத்திரமே:
அதென்னவென்றால், இப்பேர்ப்பட்ட ஆவியினால் நிறைந்
திருத்தல்.

இன்றைக்குத் தமது பாடசாலையில் நாம் படிக்க
வேண்டுமென்று இயேசு விரும்புகிற பாடம் இது: "நீங்கள்
உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்
கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்
ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக
நிச்சயம் அல்லவா" என்னும் உறுதிமொழி. அந்த உறுதிமொ
ழியை சிறுபிள்ளைக்கொத்த நம்பிக்கையாய்ப் பிடித்துக்
கொண்டு, பிதாவைப்பார்த்து: எங்களுக்குப் பரிசுத்தாவியைத்
தாரும் என்று நாம் கேட்கையில், அவர் பரிசுத்தாவியை நமக்
குக் கொடுக்க ஆவலுடையவராய் இருக்கிறார். பரிசுத்தாவியை
தேவன் நமக்கு எவ்வளவு கொடுப்பார் என்று கேட்டால், அது
"என் ஆவியைத் திரளாய் ஊற்றுவேன்" என்று அவர் சொன்ன
வாக்குத்தத்தத்திலும் "ஆவியினால் நிறைந்திருங்கள்" என்று
அவர் சொன்ன கட்டளையிலும் விதித்திருக்கிற அளவுதான்.
அதாவது, அவர் நமக்குத் தமது ஆவியைத் திரளும் நிறைவு
மாய்க் கொடுப்பார். நாம் அவ்வளவையும் கேட்டு வாங்கிக்
கொள்ளலாம். தேவனுக்கு நாம் பிள்ளைகளானபோதே நாம்
தேவாவியைப் பெற்றுக்கொண்டோம் என்பது உண்மையே.
ஆயினும் நமக்கு அந்தந்த அவசரங்களுக்கு வேண்டும் வரங்
களை யளிப்பதற்கும் நமது நிலைமையறிந்து நமக்குள் வேலை
செய்வதற்கும் பரிசுத்த ஆவி நமக்கு வேண்டுமாதலால், நாம்
ஓயாமல் பரிசுத்தாவியை வாங்கிக்கொண்டே யிருக்க
வேண்டும். இதுமாத்திரமேயல்ல, அவர் வந்து நம்மை யாட்

கொண்டு நம்மை முற்றும் தமது வசத்திலேயே வைத்திருக்கவும், இடைவிடாமல் நிமிஷந்தோறும் நமக்குள்ளிருந்துகொண்டு நம்மை ஏவி நடத்தவும் அவர் நமக்கு அவசியம். தாய்ச்செடியின் ஜீவசாரத்தினால் நிறைந்திருக்கிற திராட்சைக் கொடியானது தான் ஈன்ற கனிகள் முற்றிப் பழுக்கும்பொருட்டுத் தன் தாயின் சாரம் ஓயாமல் தனக்குள் வந்து நிறைந்துகொண்டேயிருக்கவேண்டுமென்று விரும்பும். அவ்வாறே, விசுவாசியானவன் தான் பெற்றிருக்கிற தேவாவியைக் குறித்துச் சந்துஷ்டியுடையவனாயிருந்தும், அந்த ஆவியாகிய ஜீவதண்ணீர் இன்னும் வேண்டும் வேண்டும் என்று ஓயாமல் அதின்மேல் தாகமெடுத்து அதை எனக்குத் தாரும் தாரும் என்று இடைவிடாமல் கூவுவான். நமது பெரிய உபாத்தியாயர் நமக்குப் போதிக்க விரும்புகிறது என்னவென்றால், தேவன் நமக்கு எவ்வளவு கொடுக்க வாக்கருளி நாம் கேட்கவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறாரோ, அவ்வளவையும் நாம் பெற்றுக்கொள்ளலாம் என்று உறுதியாய் நம்பிக் கேட்கவேண்டும் என்பதே. நாம் தேவாவியால் பூரணமாய் நிறைந்திருக்கவேண்டும். இவ்வளவு கேட்டால் தேவன் கொடுப்பாரா? கொடுப்பார் என்றால், அதற்கு நிச்சயம் என்ன? "பரம பிதா பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்பதில் குறிப்பித்திருக்கிற பிதாவின் அன்பே அதற்கு நிச்சயம். இந்த நிச்சயத்தைப் பிடித்துக்கொண்டு நாம் கேட்கக் கேட்க வாங்கிக்கொண்டேயிருப்போம். இது உறுதி.

நாம் இதை நம்புவோமாக. ஆவியினால் எங்களை நிரப்பும் என்று நாம் பிதாவை வேண்டிக்கொள்ளும்போது, அதற்கு உத்தரவு நமது உணர்ச்சியிலே பிறக்கும் என்று நினைப்பது தப்பு. ஞான நன்மைகளையெல்லாம் வாங்கிக்கொள்வதற்கு ஏற்பட்டிருக்கிற கருவி ஒன்றே யொன்றுதான்; அது விசுவாசம். பிதா தம்மை வேண்டிக்கொள்ளுகிற பிள்ளையாகிய எனக்குப் பரிசுத்தாவியைக் கொடுக்கிறார் என்று நான் உணர முடியாது, விசுவாசிக்கவேண்டும். நான் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும்போதே, எள்ளளவும் சந்தேகிக்காத விசுவாசத்துடன்: நான் கேட்டது எனக்குக் கிடைத்துவிட்டது, பரிசுத்தாவியின் நிறைவு என் பங்காயிருக்கிறது என்று சொல்லவேண்டும். இந்த விசுவாசத்தில் கொஞ்சமென்கிலும் அசையாமல் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும். நாம் கேட்டது நமக்குக் கிடைத்ததற்கு தேவன் சொன்னவார்த்தையே உறுதி; வேறே உறுதி வேண்டியதில்லை. அந்த உறுதியைக்கொண்டே நாம் கேட்டதைப் பெற்றுக்கொண்டோம் என்று அறிந்துகொள்ளுகிறோம். நமது ஜெபம் பலித்திருக்கிறது என்பதற்காக, அதாவது, நாம் கேட்டதைக் கேட்டபடி வாங்கி நம் பங்காய் வைத்துக்கொண்டு அநுபவிக்கிறதற்காக நன்றியுள்ளவர்களாயிருந்துகொண்டு, நமக்குக் கைமேல் பேருளாய்க் கொடுக்கப்பட்டிருப்பதும் நாம் விசுவாசத்தினால் வாங்கி வைத்திருப்பதுமான அந்த நன்மை ஆவியும் உடலுமாகிய நமது முழு மனுஷீகத்துள்ளும் ஊடுருவி நிறைந்திருக்கும்படி ஜெபிக்க ஓயாதிருப்போமாக. விசுவாசத்தோடு கூடிய இப்பேர்ப்பட்ட நன்றியறிவும் ஜெபமும் இருந்தால்மாத்திரம் நமது உள்ளம் மலர்ந்து விரிந்து தேவாவியானவருக்கு இடம்விட்டு, அவர் வந்து தன்னை முற்றும் ஆட்கொண்டு கைக்கொண்டிருக்கச் சம்மதிக்கும். இப்பேர்ப்பட்ட ஜெபம் மாத்திரமே அந்த நன்மை பூரணமாய்க் கிடைக்கவேண்டுமென்று கேட்டு, கேட்டபடி கிடைக்கும் என்று உறுதியாய் நம்பியிருந்து, நம்பினபடி வாங்கி, அதைத் தன் பங்காய்ச் சுதந்தரித்துப் பத்திரப்படுத்திக்கொள்ளும். பிதா நாம் தமது ஆவியினால் நிறைந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்; தமது ஆவியை நமக்குக் கொடுப்பது அவருக்கு அத்தியந்த பிரியம். உறுதி என்று நாம் நிச்சயித்திருக்கக் கூடியவற்றுளெல்லாம் இதுவே பெரிய உறுதி. இந்தப் பாடத்தையே இரட்சகர் இன்றைக்கு நமக்குக் கற்றுக்கொடுக்க விரும்புகிறார். நாம் ஜெபம்பண்ணும்போதெல்லாம் இந்தப் பாடத்தை மனதில் வைத்திருப்போமாக.



நமக்கான விஷயங்களுக்காக இப்படி விசுவாசிக்கக் கற்றுக்கொண்டு, பரலோகத்தில் நாம் சேர்த்துவைத்திருக்கிற பொக்கிஷத்திலிருந்து தினந்தோறும் எடுத்து உபயோகித்துக்கொள்ளப் பழகிவிட்டோமானால், திருச்சபைமேலும், எல்லா மாமிசத்தின்மேலும், அந்தந்தத் தனிப்பேர்வழிகள்

மேலும், விசேஷ ஞானமுயற்சிகள் விசேஷ கிரியைகள்மேலும் தேவாவியானவர் ஊற்றப்படவேண்டுமென்று ஜெபிக்க நமக்கு மட்டில்லாத துணிவும் வல்லமையுமிருக்கும். தனக்கு ஆன தற்குப் பிதாவை அறிந்து ஜெபிக்கத் தெரிந்தவன் பிறருக்கு ஆனதற்குச் சந்தேகமில்லாத நிச்சயத்துடன் ஜெபிக்க சீக்கிரம் கற்றுக்கொள்வான். பிதா தம்பீடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார். அவர்கள் அந்த நன்மையைப் பிறருக்காகக் கேட்கும்போது அதிகப் பிரியத்துடன் கொடுக்கிறார்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்"

பரமபிதாவே! உம்மையும், உமது பிதாவன்பையும், அந்த அன்பு எங்களுக்காக வைத்திருப்பதெல்லாவற்றையும் எங்களுக்கு வெளிப்படுத்துவதற்கு நீர் உமது குமாரனை அனுப்பினீர். நாங்கள் உம்மிடத்தில் ஜெபித்து வாங்கக் கூடிய வரங்களிலெல்லாம் பெரிய வரம் பரிசுத்த ஆவியானவர்தான் என்று அவர் எங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆ என் தகப்பனே! இந்த ஜெபந்தான் நான் உம்மிடத்தில் வந்து செய்கிறேன். பரிசுத்த ஆவியாகிய உம்முடைய ஆவியினால் நிறைந்திருப்பதையே விரும்புகிறேன். அதைப் பார்க்கிலும் பெரிய விருப்பம் வேறே எனக்கு இல்லை. அவர் எனக்குக் கொண்டுவந்து கொடுக்கிற நன்மைகள் சொல்லுக் கடங்காதவை. எனக்கு அவசியமாய் வேண்டிய நன்மைகள் அவைகள்தான். அவர் வந்து, என் உள்ளத்தில் உமது அன்பை ஊற்றி, உம்மை என் இதயகமலம் முழுமையிலும் நிறைந்த பொருளாக்குகிறார். இதுவே என் மனவாஞ்சை. மேலும், தேவாவியானவர் வந்து, எனக்குக் கிறிஸ்துவின் சிந்தையையும் ஜீவனையும் புகட்டுகிறார். இதினால், நான் அவரைப் போலவே, பிதாவின் அன்பிற்குள்ளேயும் பிதாவின் அன்பிற்காகவும் பிழைக்கக்கூடியவனாகிறேன். இதுவும் என் மனதிற்கினிய வாஞ்சை. நான் இப்புவியில் எப்படி யெப்படிப் பிழைக்கவேண்டுமோ அப்படி யப்படிப் பிழைக்கவும், எதெதைச் செய்யவேண்டுமோ அதைதைச் செய்யவும் எனக்கு





வேண்டிய பலத்தையெல்லாம் அவர் பரலோகத்திலிருந்து கொண்டுவந்து எனக்குக் கொடுக்கிறார். இது என் உள்ளம் நாடும் நாட்டம். ஆ பிதாவே! உமது ஆவியின் நிறைவை எனக்கு இன்றைக்கே கொடும் என்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

"பரம பிதாவானவர் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது
அதிக நிச்சயமல்லவா" என்று என் ஆண்டவர் சொன்ன வாக்
கை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு நான் உம்மிடத்தில் இப்
படிக் கேட்கிறேன், பிதாவே! என் ஜெபத்தை எனக்குக்
கட்டளையிடுவீர் என்று நான் உறுதியாய் விசுவாசிக்கிறேன்;
நான் கேட்டதை இப்போதே வாங்கிக்கொள்ளுகிறேன்.
பிதாவே, ஆவியின் நிறைவை எனக்குக் கொடுக்க நீர் வாக்
களித்தீர், அந்த வாக்கைப் பிடித்துக்கொண்டு அந்த நன்
மையை எனக்குத் தாரும் என்று கேட்டு வாங்கிக்கொள்ளு
கிறேன். அந்த நன்மையை நான் முன் வாங்கினதுபோல
இன்றைக்கும் விசுவாசக் கையால் வாங்கிக்கொள்ளுகிறேன்.
பிதா எனக்குச் சொன்னதையெல்லாம் தமது ஆவியைக்
கொண்டு எனக்கு நிறைவேற்றுகிறார் என்று விசுவாசத்தினால்
நான் உறுதியாய் அறிந்திருக்கிறேன். தமக்குக் காத்திருந்து,
தம்மோடு ஞான ஐக்கியம் செய்வதில் இடைவிடாமல் தரித்
திருக்கிற தமது பிள்ளைக்குள் பிதா தமது ஆவியைப் புகட்
டிக்கொண்டேயிருக்கப் பிரியப்படுகிறார். ஆமென்.

# எட்டாம் பாடம்.

## 'அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தம்'

அல்லது,

## தேவநேசரின் தைரியம்.

"அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதி ராத்திரியிலே போய்: சிநேகிதனே! என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன் முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக: என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக். 11. 5–8.)

மலைப்பிரசங்கத்தில் நம்தாண்டவர் தமது சீஷருக்கு முதலாம் போதகம் செய்தார். இதற்குக் கொஞ்சங்குறைய ஒரு வருஷத்திற்குப்பின் சீஷர் தங்களுக்கு ஜெப உபதேசம் செய்யவேண்டும் என்று இயேசுவைக் கேட்டார்கள். அதற்குச் சம்மதித்து, அவர்களுக்கு அவர் கர்த்தருடைய ஜெபத்தை இரண்டாந்தரம் உபதேசித்தார். ஜெபத்தில் எதைக் கேட்கவேண்டும் என்று அதில் அவர் திரும்பவும் வற்புறுத்தி விளக்கினார். அதற்குப்பின் அவர் எப்படி ஜெபிக்கவேண்டும் என்பதை அவர்களுக்குத் துலக்கிக் காட்டினார். அதைப் பற்றியும் அவர் முந்தினமுறை உபதேசித்ததையே திரும்பவும் உபதேசித்து, தேவனுக்கு நம்மேல் பிதாவாற்சல்லியம் இருப்பதினால் நமது ஜெபம் கேட்கப்படுவது நிச்சயம் என்று



உணர்த்தினார். இந்த இரண்டு உபதேசங்களுக்கு இடையில், நடுராத்திரியில் தன் சிநேகிதனை அலட்டினவனைப் பற்றிய இந்த அழகிய உவமையைச் சொல்லுகிறார். இந்த உவமையினால் அவர் இரண்டு பாடங்களைச் சீஷர் மனதில் அழுத்த விரும்புகிறார். அவை யென்னவெனில், நாம் நம்மை மாத்திரமே பார்த்து நமக்காக ஜெபிப்பதோடே நின்றுவிடாமல், கெட்டழிந்துபோகிற பிறரையும் பார்த்து அவர்களுக் காகவும் ஜெபிக்கவேண்டும்; மேலும், அப்படிப் பிறருக்காகப் பரிந்து ஜெபிக்கையில், கடைப்பிடித்து வருந்திக் கெஞ்சத் துணிவது அவசியம். இது கிரமமாயிருப்பதுந்தவிர தேவனுக்குப் பிரியமாயுமிருக்கிறது.

இந்த உவமையைத் திறந்துபார்த்தால், அது பரோபகார ஜெபம் சரியாய்ச் செய்வதற்கு நாம் அவசியமாய் அறியவேண் டியதெல்லாம் அடங்கிய களஞ்சியமாயிருக்கிறது. அதில், முதலாவது, நமக்கு அக்கம் பக்கத்தில் குறைவை யடைந்து வருந்துவோருக்கு உதவிசெய்ய நாடுகிற அன்பு இருக்கிறது: "என் சிநேகிதன் என்னிடத்தில் வந்திருக்கிறான்." அதின் பிறகு, உதவிசெய்வதற்குத் தனக்கு இல்லாக்குறைவை உணருகிற உணர்ச்சி யிருக்கிறது: "அவன் முன்வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை." அதின்பிறகு, தேடுகிற உதவி நிச்சயமாய்க் கிடைக்கும் என்கிற நம்பிக்கை யிருக் கிறது: "உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவ னிடத்தில் போய், சிநேகிதனே, நீ மூன்று அப்பங்களை எனக் குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்." அதின்பிறகு, அந்தச் சிநேகிதன் வாயிலிருந்து வராது என்று நினைத்ததற்கு மாறாய் இல்லையென்னும் சொல் வருகிறது: "நான் எழுந்திருந்து உனக்குத் தரக்கூடாது." அதின்பிறகு, அந்த இல்லை யென்னும் சொல்லை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்கிற விடாமுயற்சி இருக்கிறது: "தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தம்." கடைசியாய், அப்பேர்ப்பட்ட ஜெபத்திற்குக் கிடைக்கும் பலன் இருக்கிறது: "அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான்." இது ஜெபமும் விசுவாசமும் நடக்கிற பாதையை வெட்ட வெளிச்சமாய் விளக்குகிற விளக்கு. இந்தப் பாதைவழியாய் தேவனுடைய பிள்ளைகள்

எத்தனையோதரம் போய் அவருடைய நன்மைகளைக் கேட்டுத் தப்பாமல் வாங்கியிருக்கிறார்கள்.

நாம் இப்போது இந்த நினைவுகளில் மற்றதையெல்லாம் விட்டு, முக்கியமான நினைவைமாத்திரம் எடுத்துப் பார்ப்போம்: அதாவது, தேவன் நம்மிடத்தில் வைத்திருக்கிற சிநேகத்தை வெளிப்படுத்த அவரைத் தூண்டும் தூண்டுகையே ஜெபம். அதைப் பார்க்கும்போது, இரண்டு பாடங்கள் நமக்கு அதினால் தீர்க்கமாய் உணர்த்தப்படும். ஒன்று இது: நாம் தேவனுக்குச் சிநேகிதர்களாயிருப்பதும் சிநேகிதர்களாகவே அவரிடத்தில் வந்திருப்பதும் மெய்யானால், குறைவுற்றுவருந்துவோருக்கு நாம் சிநேகிதர்கள் என்பதும் மெய்யாயிருக்க வேண்டும். தேவனுக்கு நம்மிடத்திலுள்ள சிநேகமும் நமக்குப் பிறரிடத்திலுள்ள சிநேகமும் ஒன்றைவிட்டு ஒன்று தனியே இராது, இரண்டும் இணைபிரியாமல் இருக்கும். இன்னொரு பாடம் இது: நாம் இப்படி அவரிடம் வரும்போதெல்லாம், நாம் ஜெபம்பண்ணி அவரைக் கேட்டதை அவர் இல்லையென்னாமல் தரும்படி தாராளமாய் அவரை அலட்டலாம்.

ஜெபத்தை நாம் இரண்டுவகையாய் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். நமது சுயஜீவனுக்கு வேண்டிய பலத்தையும் வேறு நன்மைகளையும் அடைந்துகொள்வதற்காக அதை உபயோகிப்பது ஒரு வகை. பிறருக்குப் பரிந்துபேசுவதற்காக அதை உபயோகிப்பது இன்னொரு வகை. இந்த வகையே உயர்ந்த வகை. ஜெபத்தின் மகிமை இதிலே தானிருக்கிறது. இதற்காகவே கிறிஸ்து நம்மைத் தமது கூட்டுறவில் சேர்த்துக்கொண்டு போதிக்கிறார். பிறருக்காகப் பரிந்துபேசும்போது, ஜெபமானது அயலாருக்கும் தேவ இராஜ்யத்திற்கும் நன்மை கிடைக்கும்பொருட்டு தேவ பிள்ளையாயிருப்பவன் கையில் கிடைத்திருக்கிற இராஜவல்லமையாயிருக்கிறது. இதை வேதத்திலும் பார்க்கிறோம். ஆபிரகாமும் மோசேயும், சாமுவேலும் எலியாவும், பூர்வ திருத்தொண்டர் யாவரும், பிறருக்குப் பரிந்துபேசினதிலே தேவனிடத்தில் மிகவும் வல்லமையுள்ளவர்களாயிருந்து சித்தியடைந்தார்கள். பிறருக்கு வாழ்வு வரும் வாய்க்காலாயிருப்



பதற்கு நம்மைக் கையளிக்கும்போதெல்லாம் நாம் கேட்ட நன்மையை தேவன் தட்டமாட்டார் என்று நாம் நம்பியிருக்கலாம். ஏழைகளுக்கும் மடியப்போகிறவர்களுக்கும் பரிந்து இரங்குகிற சிநேகிதராயிருந்துகொண்டு நாம் தேவனிடத்தில் கிட்டி நெருங்கும்போதெல்லாம் அவர் நம்மேலுள்ள தமது சிநேகத் தன்மையைக் காட்டுவார் என்று நாம் துணிந்திருக்கலாம். ஏதுமற்ற அகதிகளுக்குச் சிநேகிதனாயிருக்கிற புண்ணியவானே தேவனுக்கு வெகு முக்கியமான சிநேகிதன். இந்த இலக்ஷணம் ஆருக்கு இருக்கிறதோ அவன் ஆச்சரியமான தாராளத்துடன் பின்வருமாறு துணிந்து ஜெபிக்கலாம்: ஆண்டவரே! வறுமையுள்ள சிநேகிதன் ஒருவன் எனக்கிருக்கிறான். அவனுக்கு நான் உதவி செய்ய வேண்டும். அவனுக்கு நான் சிநேகிதனாயிருப்பதினாலே உதவி புரிய ஏற்பட்டுக்கொண்டேன். நீர் எனக்கொரு சிநேகிதராய் இருக்கிறீர். உம்முடைய பட்சத்திற்கும் செல்வத்திற்கும் அளவேயில்லை. இது எனக்குத் தெரியும். நான் உம்மைக் கேட்பதைத் தட்டாமல் கொடுப்பீர் என்று எனக்கு உறுதியுண்டு. இயற்கையாய்த் தீயோனாகிய நானே என்னால் கூடிய உதவியை என் சிநேகிதனுக்குச் செய்ய வலிய ஏற்பட்டிருக்கும்போது, எத்தனைக்கு அதிகமாய், என் பரம சிநேகிதரே, உமது சிநேகிதனாகிய நான் உம்மைக் கேட்கிறதை நீர் எனக்குச் செய்வீர்!

தேவனுடைய பிதாத்தன்மையை அறிந்துகொள்வதினாலேயே ஒருவன் இப்பேர்ப்பட்ட நிச்சயத்துடன் ஜெபிக்கிறதற்கு அவனுக்குத் துணிவு வருமே; அதற்கும் அதிகமான துணிவு அவருடைய சிநேகத் தன்மையை அறிவதினால் வரும் என்று எப்படி நினைக்கலாம்; சிநேகிதனைவிட பிதா அதிகமல்லவா? என்று யாரேனும் ஒருவன் கேட்பான். இது சரிதானாயினும், இந்த விஷயத்தைப் பதறாமல் யோசித்துப் பார்த்தால், தேவனுடைய சிநேகிதத் தன்மையை எடுத்துக் காட்டி அவருடனே நாம் வழக்காடும்போது புது ஆச்சரியங்களை நாம் காண இடமுண்டாகும். பிள்ளை கேட்பதைத் தகப்பன் கொடுப்பது சர்வ சாதாரணமாயிருப்பதினால், பிள்ளைக்குக் கொடுப்பது தகப்பனுக்குக் கடமை என்று என்

னிக்கொள்ளுகிறோம். ஆனால், சிநேகிதனுக்கும் சிநேகிதனுக்கும் இப்பேர்ப்பட்ட கடமை இருக்கிறதென்று நாம் எண்ணாமல், ஒருவன் தன் சிநேகிதனுக்குப் பட்சங் காட்டுவதில் தன் இஷ்டம்போல் செய்யலாமென்று நினைப்போம். தகப்பனுக்கும் பிள்ளைக்கும் உண்டான அன்பு சுபாவத்தினாலேயே ஏற்பட்டது. சிநேகிதனுக்கும் சிநேகிதனுக்கும் இருக்கிற அன்பு இருவருக்கும் ஒத்த நினைவும், ஒத்த குணங்களும் அமைந்து இருவர் மனமும் ஒத்துப் பொருந்தினதினால் உண்டானது. மேலும், பிள்ளை பிதாவைத் தஞ்சமாக நம்பி அவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பவன். இரண்டு சிநேகிதர்களைப் பார்த்தால், அவர்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்பட்டிராமல், ஏறக்குறைய ஒரு நிலையில் இருக்கிறவர்கள். இதையெல்லாம் பார்த்தே, நமது ஆண்டவர் நமக்கு ஜெபத்தைப்பற்றிய ஞான இரகசியத்தை அவிழ்த்துக் காட்டி, நாம் பிள்ளையுறவைப் பிடித்துக்கொண்டு மாத்திரமல்ல, சிநேகித உறவையும் பிடித்துக்கொண்டு தேவனிடத்தில் வரவேண்டுமென்று ஆசிக்கிறார். நமக்கு தேவனுக்கு ஒத்த மனமும் தேவனுக்கு ஒத்த ஜீவியமும் அமைந்திருப்பதைப் பார்த்து, அவரே நம்மைத் தமக்குச் சிநேகிதர்களாக ஒப்புக்கொண்டிருப்பதினிமித்தம் நாம் துணிந்து அவரிடத்தில் வரவேண்டும்.

ஆனால், நாம் அவருடைய சிநேகிதர் என்று நினைத்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை. நமது ஜீவியம் உள்ளபடிக்கு அவருடைய சிநேகிதரின் ஜீவியமாகவே இருக்கவேண்டும். நான் ஓடுகாலியாய்த் திரியும்போதுகூட நான் அவருக்குப் பிள்ளைதான். நான் அவருக்குச் சிநேகிதனாயிருப்பதற்கு அவர் பிரியப்படுகிற நடக்கை எனக்கு இருக்கவேண்டும். "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்." "விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் **தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டான்." தேவனுக்குள் இருக்**



கிற அந்த ஆவியானவரே நமக்குள்ளும் இருந்துகொண்டு, நாம் நடக்கவேண்டிய வழியில் நம்மை நடத்தி, நமக்கு அவருக்கு ஒத்த ஜீவியம் தந்து, அதனால் நாம் தேவனுக்கு உகந்தவர்கள் என்கிற நிச்சயத்தை நமது நெஞ்சில் உண்டுபண்ணுகிறவர். இந்தப்பிரகாரமே, அந்த ஆவியானவரே நமக்குள் இருந்துகொண்டு ஜெபம்பண்ண நமக்கு உதவிசெய்கிறவர். தேவனுக்குச் சிநேகிதனாய்ப் பிழைக்கிற பிழைப்பே நான் நடு இராத்திரியிலும் போய் அலட்டக்கூடிய சிநேகிதர் எனக்கு இருக்கிறார் என்று சொல்லக்கூடிய தைரியத்தை எனக்குத் தரும். தேவன் எனக்கு உதவவேண்டுமென்று நான் விரும்புகிறபடிக்கே நான் என் சிநேகிதனுக்கு உதவ விரும்பி, தேவன் எனக்குக் காட்டவேண்டுமென்று நான் அவரைக் கேட்கிற அவருடைய பட்சமே வடிவெடுத்தது போல் நானிருந்துகொண்டு, அவருக்கும் எனக்கும் உள்ள சிநேகிதத்தன்மையின் ஆவிபிடித்தவனாகவே நான் அவரிடம் போகும்போது எனக்கு எவ்வளவு அதிக தைரியம் இருக்கும்! நான் தேவனிடத்தில் வந்து ஜெபிக்கும்போது, நான் எதை மனதில் குறித்து வைத்துக்கொண்டு மன்றாடுகிறேன் என்று அவர் எப்போதும் சோதித்துப் பார்க்கிறார். சுகானுபவமும் சந்தோஷமும் எனக்கு வரவேண்டுமென்று விரும்பி, என்னைப்பற்றிமாத்திரமே நான் அவருடைய கிருபையைக் கேட்டால், நான் கேட்டது கிடைக்கிறதில்லை. ஆனால், நான் அவரிடத்தில் நன்மைகளை வாங்கி, அவைகளைக் குறைச்சலுள்ள பிறருக்குக் கொடுத்து, இப்படி அவரை மகிமைப்படுத்த விரும்புகிறேன் என்று மனமுறிய நான் அவருக்குச் சொல்லக்கூடியதானால், அப்போது நான் கேட்டது கிடைக்கவே கிடைக்கும். பிறருக்காகக் கேட்கும்போதுகூட, அவர்களுக்கு உதவிபுரியும் விஷயத்தில் எனக்கு எவ்வளவேனும் கஷ்டநஷ்டம் வராமல் பார்த்துக்கொண்டு, விசுவாசம் எனக்குள் வேலைசெய்யாமல் அடக்கி, தேவன் என் கையில் போதுமானது கொடுத்தபின்பு மாத்திரம் அவர்கள் கஷ்டத்தை நிவிர்த்திக்க முயலுவேன் என்று காத்திருந்தால், நான் கேட்டது கிடைக்காது. ஆனால், என் சிநேகிதனாகிய நீர் உதவிசெய்வீர் என்று உம்மை நம்பிக்கொண்டு, நான் என் வறுமையைப்

பாராமல் துணிந்து இந்தச் சிநேகக் கிரியையைத் தொடங்கி விட்டேன் என்று நான் அவருக்குச் சொல்லக்கூடுமானால், என் ஜெபம் கேட்கப்படுவது நிச்சயம். பூமியில் இருக்கிற சிநேகிதன் தன் வறுமையில், வானத்திலிருக்கிற சிநேகிதரின் கையைப் பார்த்துக்கொண்டு, சிநேகக் கிரியையைத் தொடங்கி, எனக்கு ஒத்தாசைசெய்யும் என்று அவரோடே வழக்காடுதல் எப்பேர்ப்பட்ட வல்லமை செய்யும் என்று நாம் அறியாதிருக்கிறோம். "அவன் எழுந்திருந்து, அவனுக்குத் தேவையான மட்டும் கொடுப்பான்."

ஆனால், கேட்கும்போதெல்லாம் உடனே கொடுக்கப்படுகிறதில்லை. மனுஷராகிய நாம் தேவனைக் கனப்படுத்தி அவரை அனுபவிக்கிறதற்கு ஒரேவழி விசுவாசம். நமது விசுவாசத்தைப் பயிற்றிப் பழக்குகிறதற்கு தேவன் வைத்திருக்கிற பயிற்சிச்சாலைகளில் ஒன்று நாம் பிறருக்காக அவரிடத்தில் பரிந்துபேசுதல். நமக்கு தேவனோடும் மனிதரோடும் உள்ளபடி சிநேகம் இருக்கிறதோ இல்லையோ என்று இந்தப் பயிற்சிச்சாலையிலே பரிசோதித்து அறியப்படும். பலவிதமாய் முட்டுப்பாடடைந்து தவிக்கிறவர்கள் விஷயத்தில் நான் பாராட்டுகிற சிநேகம் வேஷமல்ல, உண்மை; அதினிமித்தம் செல்லும் நேரச்செலவிற்கும் தொந்தரைக்கும் நான் அஞ்சுகிறவனல்ல; நடுராத்திரி என்றும் பாராமல் போய் அவர்களுக்குத் தேவையானதைச் சம்பாதித்துத் தருமளவும் அவர்கள் நிமித்தம் செய்யும் முயற்சியை நான் விடுகிறவனல்ல என்பது அந்தப் பயிற்சிச்சாலையில் பார்க்கப்படும். தேவன் எனக்கு இல்லை, போ என்று சொல்லவேமாட்டார் என்னும் உறுதியுடனே நான் கேட்டதை அவர் கொடுக்கும்வரையில் சலியாமல் ஜெபிக்கக்கூடிய அவ்வளவு தெளிவாய் எனக்கு அவரிடத்திலுள்ள சிநேக வல்லமை தெரிந்திருக்கிறதா இல்லையா என்று அந்தப் பயிற்சிவித்தியாசாலையிலே கண்டறியப்படும்.

தளரா முயற்சியுள்ள ஜெபத்தில் பின்வருவது எப்பேர்ப்பட்ட ஆழமான பரம இரகசியம், பார்த்தாயா! நாம் நாடுகிற நன்மையை நமக்குத் தர வாக்குக்கொடுத்திருக்கிறவர், அதைத் தருவதற்கே முழுப்பிரியத்தினால் உள்ளமெல்லாம்



பொங்கிக்கொண்டிருக்கிறவர், அதைத் தராமலிருக்க மாட்டேன் என்று தம் மனதிற் குறித்து வைத்திருக்கிறவர், அதைத் தராமல் நம்மை காக்க வைக்கிறார். பரலோகத்திலிருக்கிற சர்வாஸ்திக்காரச் சிநேகிதராகிய அவர் பூலோகத்திலிருக்கிற தமது நண்பர்களை ஜெபத்திற்குத் தாமதஉத்தரவு என்கிற பாடசாலையில் வைத்துப் பழக்கி அவர்கள் செய்கிற தளரா முயற்சியுள்ள ஜெபம் தப்பாமல் பலித்து, பரலோகத்தில் பெண்ணம்பெரிய வல்லமை செய்யும் என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதே அவர் அப்படி அவர்களைக் காக்கவைப்பதின் நோக்கம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைக் கண்டு, நம்பி, அணைத்துக்கொண்டும் அதை அடையாமலிருக்கிற விசுவாசம் ஒன்று இருக்கிறது (எபி. 11. 13, 39.). தேவன் தருவேனென்று வாக்குக் கொடுத்தது தப்பாமல் பலிக்கும் என்று உறுதியாய் நம்பியிருந்தும் பலிக்காமற்போய், பண்ணின ஜெபத்திற்கு பதிலுத்தரவே கிடைக்காமலிருக்கும்போதுதான் பொன்னிலும் அருமையான அந்த விசுவாசம் புடமிடப்பட்டுப் பரீட்சிக்கப்படும். இந்தப் பரீட்சையில், தேவனுடைய வாக்குத்தத்தத்தை விடாமல் பிடித்துக்கொண்டேயிருக்கிற அந்த விசுவாசம் மாசு மறுவறத் துப்புரவாக்கப்பட்டு, வலிவடைந்து, ஜீவனுள்ள தேவனோடு ஜீவனுள்ள பரிசுத்த ஐக்கியம் செய்து அவருடைய மகிமையைக் காணப் பக்குவப்படுத்தப்படும். அந்த விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை வலுப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, அதின்படி தனக்குக் கிடைக்கவேண்டுமென்று சாதித்து, அந்த வாக்கு ஜீவனுள்ள தேவனுக்குள்ளே ஜீவனுள்ள உண்மையாய் நிறைவேறும்மட்டும் அதை விடவே விடாது.

பிதாவின் சேவகத்தில் சிநேகஊழியம் செய்ய விரும்பி, அதை இயன்றமட்டும் செய்துகொண்டுவருகிற அவருடைய பிள்ளைகளெல்லாரும் மனச்சடைவு அடையவேண்டியதேயில்லை. அவர்கள் தைரியமாயிருக்கலாம். பிள்ளைக்கு உழைக்கிற பிதா, வகுப்புக்கு உழைக்கிற உபாத்தியாயர், சபை மண்டலத்தில் உழைக்கிற விசாரணை குரு, தனக்கேற்பட்ட எல்லைக்குள் வேதம் வாசித்துழைக்கிற வேதவாசகன், செவிகொடுத்துக் கேட்போருக்குத் திருவசன மாரிபொழிகிற வேதப்

பிரசங்கி, இவர்களெல்லாரும் அவரவர் தம்தம் சிறுசிறு
தொழில் வட்டத்துள் அகப்பட்டிருக்கி, பசித்துவருந்தும்
ஆத்துமாக்களின் பாரத்தைச் சுமக்க மனமொப்பிக் கையிட்
டுக்கொண்டவர்களல்லவா? அவர்களெல்லாரும் மனத்திடனு
யிருப்பார்களாக. • தளராமுயற்சியுள்ளஜெபம் செய்யவேண்டு
மென்று தேவன் கேட்பானேன்? ஞான காரியங்களில் விடாப்
பிடிவாதம் என்று ஒன்றை ஏற்படுத்தின தென்னத்திற்கு?
என்று முதலில் கேட்டுக் கேட்டு மயங்குவோம். இதை
நமக்குத் தெளிய உணர்த்தும்பொருட்டு நமது உபாத்தி
யாயர் கேட்போருக்கு ஏதோ விபரீதம்போல் தோன்றுகிற
இந்த உவமையைச் சொல்லுகிறார். அதன் கருத்து இது.
அலுப்புக்குப் பயந்து தன் நண்பனுக்கு உதவ மனமில்லாம
லிருந்த பூலோக சிநேகிதனுடைய சிநேகமின்மையை அந்த
நண்பனுடைய ஓயா அலட்டு ஜெயித்து மேற்கொண்டது.
அப்படியே, நமது ஞானத் தகுதியின்மையினிமித்தமோ,
நாம் வாங்கியும் காப்பாற்றத் திறமில்லாமையைக் கண்
டோ, நாம் வேண்டுவதைக் கொடுக்கப் பிரியமாயிருந்தும்
கொடாமல் வைத்திருக்கிற நமது பரம சிநேகிதரிடத்தில் நமது
ஓயா அலட்டு எப்போர்ப்பட்ட வல்லமை செய்யும் என்றும்
ஜெபத்தில் நமக்கிருக்கவேண்டிய சரியான மனநிலை எது என்
றும் அந்த நிலையிலே நாம் நமது மனதை நிறுத்தி நமது வல்ல
மையையெல்லாம் தேவனிடத்தில் உபயோகிக்கவேண்டிய
முறை யென்ன என்றும் நமக்குக் கற்றுக்கொடுத்து, சந்தேக
மென்பது கிஞ்சித்தும் இல்லாத விசுவாசத்துடனும் உறுதி
யான மனநிச்சயத்துடனும் நாம் அவரோடு உறவாட நம்
மைப் பழக்கும்பொருட்டு—அதாவது, நாம் ஒப்புக்கல்ல
உண்மையாகவே தேவனுடைய சிநேகிதர்களாயிருக்க நம்
மைப் பக்குவம் செய்வதற்கு,—அவர் நமது ஜெபத்திற்கு
உடனே உத்தரவு கொடாமல் தாமதிக்கிறார். இதற்காக நாம்
மனம்மேலியாமல் அவருக்கு நன்றி செலுத்துவதே நியாயம்.
ஜெபத்தில் அறுத்தற்கரிய முப்புரிநூல் பின்வருவது: உதவி
வேண்டிய சிநேகிதன் ஒருபுரி, அவனுக்கு உதவிதர முயன்று
ஜெபிக்கும் நண்பன் ஒருபுரி, இவன் வேண்டுமளவு கொடுப்
பதற்கு முழு இஷ்டமுடையவராயிருக்கிற பரம சர்வவல்



லப மித்திரர் ஒருபுரி. இந்த அறுத முப்புரிநூலை நாம் எப்
போதும் ஜெபத்தில் கெட்டியாய்ப் பிடித்திருக்கவேண்டும்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆ ஸ்தோத்திரிக்கப்பட்ட என் நேச ஆண்டவராகிய
உபாத்தியாயரே! நான் உம்மைப் பார்த்து ஜெபிக்கிறேன். நீர்
கற்றுக்கொடுக்கிற பாடம் மகிமையான பாடந்தான்; ஆயி
னும் அதை என் மனதால் பற்றி உணர்ந்துகொள்வது எனக்கு
அரும்பாடாயிருக்கிறது. உமது பிதாவை என் சிநேகித
னாகப் பார்த்து, அவரிடம் துணிந்து நெருங்கி, அவரை அலட்
டலாம் என்று நீர் கொடுத்த இந்த நினைவுகளை முற்றும் வாங்
கிக்கொள்ளமாட்டாத சுருங்கின உள்ளமுடையவனு யிருக்
கிறேன் என்று உமக்கு அறிக்கையிடுகிறேன். நீர் எனக்கு
உபதேசித்ததுமாத்திரம் போதாது; அதனோடு உமது ஆவி
யையும் எனக்குத் தரவேண்டும். இதற்கு உம்மைத்தான் நம்
பியிருக்கிறேன். அவர் எனக்குக் கிடைத்தால், நீர் எனக்கு
உபதேசித்த உபதேசத்தை என் உள்ளத்தில் உயிர்ப்பித்து
வல்லமையுள்ளதாக்குவார். "தன்னிடத்தில் அவன் வருந்
திக் கேட்கிறதினிமித்தமாவது அவனுக்குத் தேவையான
தைக் கொடுப்பான்" என்று நீர் இன்றைக்கு உபதேசித்த
உபதேசத்தை அநுசரித்துப் பிழைக்க மனங்கொண்டிருக்
கிறேன்.

ஆண்டவரே! தளராமுயற்சியுள்ள ஜெபத்தின் வல்ல
மையை நான் அதிகமதிகமாய் அறிந்துகொள்ளப்பண்ணும்.
என் உட்சீவன் வளர்ந்து முற்றித் தேறுவதற்குப் போதுமான
நேரம் எனக்கு அவசியமாகையால் அவ்வளவு நேரமும் நான்
அதற்குக் கொடுக்க என்னைப் பழக்கும்பொருட்டே பிதா
அப்போர்ப்பட்ட ஜெபத்தை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறார்.
அவர் எனக்கு அருளுகிற கிருபையானது அதினால் என்
ஞான உயிரோடு ஒத்துக் கலந்து என் பொருளாய்விடும். நானு
அவனை நம்பி ஏமாந்துவிட்டதாகத் தோன்றும்போதுகூட அவ
ரை ஒருக்காலும் விடாமல் கெட்டிப்பிடியாய்ப் பிடித்திருக்கிற
விசுவாசத்தை அப்பியாசிக்க எனக்குக் கற்றுக்கொடுப்பதற்கு
அவர் அந்த ஜெபத்தை எனக்குக் குறித்திருக்கிறார். அவர்

காருக்கு அருளும் நன்மைகளை, என் ஜெபத்தைக் கேட்டு அதற்கு உத்தரவாக அருள விரும்புகிறார். இந்த உண்மையை நான் ஐயமறத் தெளிந்துணர்வதற்கு அவர் அதற்காக எனக்குக் கொடுத்திருக்கிற பிரமிக்கத்தக்க சுவாதீன பதவியை நான் அடைந்தநுபவிக்கவேண்டும். அந்தப் பதவிமட்டும் என்னை மெல்லத் தூக்கிவிடுவதற்கு அவர் தளராமல் முயலும் ஜெபத்தை எனக்கு வகுத்திருக்கிறார். இதெல்லாம் எனக்குத் தெரியும், ஆண்டவரே! ஆனால் இதெல்லாத்தையும் ஆவியிலும் உண்மையிலும் நான் கண்டறிய எனக்குக் கற்றுக்கொடும்.

விடாப்பிடியாய் வருந்திக் கேட்டால் வேண்டுமளவு கொடுத்துக்கொண்டேயிருக்கிற **என் சிநேகிதனை** நான் செம்மையாய் அறிந்துகொண்டு, அவர் இருக்கிறார் என்கிற தைரியத்திலே, இப்புவியில் குறைவை யடைந்து மடிகிறவர்களுக்காகக் கவலைப்பட்டு, நடு இராவென்றும் பாராமல் அவர்களுக்காக உழைத்து, பரலோகத்திலிருக்கும் மாளாச் செல்வமுடையவராகிய என் சிநேகிதரிடத்தில் அவர்களுக்கு வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொடுக்கிற நடுவனாயிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைப்பதாக. இதுவே இனி என் முழு ஜீவகாலச் சந்தோஷமாயிருப்பதாக. ஆமென்.

# ஒன்பதாம் பாடம்.

## 'அறுப்புக்கு எஜமானை வேண்டிக்கொள்ளுங்கள்'

அல்லது,

## ஜெபம் வேலையாட்களைத் தரும்.

"அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்." (மத். 9, 37, 38.)

ஜெபஞ் செய்யவேண்டும் என்றும் எவ்விதமாய் ஜெபம் செய்யவேண்டும் என்றும் நமதாண்டவர் சீஷருக்கு அடிக்கடி



போதித்தும், ஜெபத்தில் எதைக் கேட்கலாம் என்பதை அரிதாய் மாத்திரம் உணர்த்தினார். அவரவர் தம்தம் வறுமை சிறுமைகளை உணர்ந்தும், அவரவர் தம்தம் உள்ளத்தில் தேவாவியானவர் ஏவும் ஏவுதல்களைக் கவனித்தும் ஜெபத்தில் எதைக் கேட்கவேண்டும் என்று எளிதில் அறிந்துகொள்வார்கள். ஆதலால், அதைப் போதிப்பது அவருக்கு அவசியமாய்த் தோன்றவில்லை. ஆயினும், இன்று நாம் தியானிக்கும் திருவசனத்தில் சீஷர்கள் ஒன்றை மறவாமல் நினைத்துக் கேட்கவேண்டும் என்கிறார். அறுப்புக்குப் பக்குவமான மிகுதியான விளைவைக் காணுந்தோறும், அறுப்பதற்கு ஆட்குறைவை யுணருந்தோறும், அவர்கள் அறுப்புக்கு எஜமானை நோக்கி வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளவேண்டும். நள்ளிரவில் அலட்டின சிநேகிதனைப் பற்றிய உவமை ஜெபம் தன்னயம்பார்க்கிறதாய் இருக்கப்படாது என்று போதித்தது. இன்றைய வசனம் ஜெபம் பிறருக்கு நன்மை வரப்பண்ணுகிற வல்லமையாயிருக்கவேண்டும் என்று உணர்த்துகிறது. பிதா அறுப்புக்கு எஜமான். நாம் அவரைப் பார்த்து பரிசுத்தாவியை நமக்குத் தர வேண்டிக்கொள்ளும்போது, அவர் அந்த ஆவியானவரைக்கொண்டு, வேலைக்கு வேண்டிய ஆட்களைப் பக்குவப்படுத்தி அனுப்பும்படிக்கும் வேண்டிக்கொள்ளவேண்டும்.

இதற்காக வேண்டிக்கொள்ள சீஷர்களை நமதாண்டவர் தூண்டுகிறதைப் பார்த்தால், அது என்ன விநோதமாயிருக்கிறது! அவர் தாமே அதற்காக வேண்டிக்கொள்ளப்படாதா? அவர் செய்கிற ஒரே ஒரு ஜெபத்திற்கு அவர்கள் செய்கிற ஆயிரம் ஜெபம் ஈடாகுமா? தேவன் அறுப்புக்கு எஜமானாயிருக்க, அதற்கு என்ன தேவையென்று அவருக்கே தெரியாதா? அவர் ஒருவருடைய ஜெபமும் வேண்டாமலே, தக்க தருணம் பார்த்து, தேவையான வேலையாட்களை அனுப்பமாட்டாரா? இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்டுக்கொண்டு போகப் போக, நமக்கு ஜெபத்தின் ஆழ்ந்த இரகசியங்கள் வெளிப்படுவதுமன்றி தேவனுடைய இராஜ்யத்தில் ஜெபத்திற்கு எப்பேர்ப்பட்ட வல்லமை இருக்கிறது என்பதும் தெரியும். இந்தக் கேள்விகளுக்கு உத்தரவு நமக்கு வெளிச்ச

மானவுடனே, ஜெபம் வெறும் முணுமுணுப்பல்ல, அது மெய்யாகவே பெரிய வல்லமை என்று அறிந்துகொள்வோம். அந்த வல்லமையை உபயோகித்தால் மாத்திரம் அறுப்பு வயலைவிட்டு வீடுவந்து சேரும், தேவனுடைய இராஜ்யம் வரும்.

ஜெபம் வெறும் சடங்குமல்ல, வீண் ஆடம்பரமுமல்ல. கர்த்தராகிய இயேசுதாமே சத்தியம். அவர் சொன்னதெல்லாம் ஆழமான சத்தியமேதவிர, வீணும் வெறுமையுமல்லவேயல்ல. "அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறினவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி" (36. வச.), அவர்கள் நடுவில் வேலையாட்கள் அனுப்பப்படும்படி ஜெபிக்க அவர் தமது சீஷரைத் தூண்டினார். சீஷர்களுடைய ஜெபம் இந்தக் காரியத்திற்கு அவசியம் என்று கண்டபடியினாலும் அது நன்றாய் உதவும் என்று தெரிந்திருந்தபடியாலுமே அவர் அப்படித் தூண்டினார். காணப்படாத உலகத்தை நமது கண்ணுக்கு மறைத்துக்கொண்டிருக்கிற திரை இயேசுவின் நிர்மலமான ஆத்துமாவிற்கு வெட்ட வெளிச்சமாய் ஊடுருவிப் பார்க்கக்கூடிய துலக்கமுள்ளதாயிருந்தது. எந்தெந்தக் காரணம் இருந்தால் எந்தெந்தக் காரியம் விளையும் என்று நமக்குத் தெரியாமலிருக்கிற ஆவியுலகத்தின் இரகசியங்களை அவர் வெகுநாளாய் வெகுதூரம் எட்டிப்பார்த்துச் செம்மையாய் அறிந்திருந்தார். ஆபிரகாம், மோசே, யோசுவா, சாமுவேல், தானியேல் இப்பேர்ப்பட்ட மகாத்துமாக்களை தேவன் அழைத்து, அவர்களுக்குத் தம்முடைய நாமத்தினாலே மனிதர்மேல் அதிகாரம் கொடுத்தபோது, அவசியமுண்டாகும் போதெல்லாம் தேவலோகத்து வல்லமையைத் தங்களுக்கு உதவியாகக் கூப்பிட்டுக் கொள்ளவும் அவர்களுக்கு அதிகாரமும் உரிமையும் கொடுத்திருந்தார். இதை தேவனுடைய வசனத்திலே நமதாண்டவர் ஆராய்ந்து அறிந்திருந்தார். மேலும் தேவனுடைய வேலை அந்தப் பண்டைக்காலத்து மகாத்துமாக்களுக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்த தெவ்வாறோ, அவ்வாறே இப்போது தாம் இப்புவியிலிருக்குந்தனையும்



தமக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்றும், இனி அது தமது சீஷருக்கு ஒப்புவிக்கப்படப் போகிறதென்றும் அறிந்திருந்தார். அந்த வேலை அவர்கள் வசமாக்கப்படும்போது அது வெளிவேஷத்திற்கும் ஒப்புக்கும் மாத்திரமல்ல, உள்ளபடிக்கே அவர்கள் பொறுப்புக்கு விடப்பட்டு, அந்நிலை அவர்கள் காட்டும் உண்மைக்கும் உண்மைத்தாழ்ச்சிக்கும் தக்கபடி அது சித்தியடைந்து ஓங்கும், அல்லது சித்தியடையாமல் தாழும் என்று அவர் அறிந்திருந்தார். தாமெடுத்துக்கொண்ட மானிட உடல், மானிட ஜீவன் என்னும் சிறு வரம்புக்குள் இயேசு ஒண்டியாக இருந்துகொண்டு இப்பூமியைச் சந்தித்த சொற்பக் காலத்திற்குள் அவர் அந்த மேய்ப்பனில்லாத ஆடுகளுக்காக வெகு கொஞ்சம்மாத்திரமே செய்யக்கூடுமாதலால், அவைகளைச் செம்மையாய்ப் பராமரிப்பதற்கு அவசியமான உதவி கிடைக்கவேண்டுமென்று அங்கலாய்க்கிறார். ஆகையால், இப்போதே துவக்கி ஜெபம் பண்ண அவர் தமது சீஷர்களைத் தூண்டி, இனி அவர்வசத்திலிருந்த வேலை அவர்கள்வசமாகும்போது, அறுப்புக்கு எஜமானனவரே தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பவேண்டுமென்று ஜெபிக்கிறதைத் தங்கள் முக்கிய மன்றாட்டுகளில் ஒன்றாக்கிக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் மனதில் பதிவிக்கிறார். அந்த வேலையை அவர்கள்நம்பிக்கைக்கு ஒப்புவித்து, அது சித்தியாவதை அவர்கள் செய்யும் முயற்சியின்மேல் பெரும்பாலும் பொறுக்கவைத்த தேவன், அந்த வேலைக்கு வேண்டிய உதவியாட்களை தம்மிடம் கேட்க அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து, அப்படி அவர்களுக்கு உதவியாட்கள் அருளப்படுவது அவர்கள் செய்யும் ஜெபத்திற்குத் தக்கபடியிருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

அறுப்புக்குப் பக்குவமான விளைச்சலுள்ள வயல்கள் உலகமெங்கும் இருக்கின்றன. அந்த விளைச்சலை யறுக்க ஆளில்லா மிடி அதிகமாயிருந்தும், அதை உள்ளபடிக்கு உணர்ந்து கிலேசிக்கிற கிலேசம் கிறிஸ்தவர்களுக்கு இல்லை. ஜெபம் பண்ணினால்மாத்திரம் இந்த வேலைக்கு ஆள் கிடைக்கும். எத்தனை ஆட்கள் தேவையோ அத்தனை ஆட்களையும் ஜெபம் நமக்குத் தர வல்லமையுள்ளது. ஆகிலும், இதை நம்புகிறவர்

கள் ஆர்? வேலையாட்கள் பஞ்சமாயிருப்பது கிறிஸ்தவர்களுக்குத் தெரியாததல்ல, தெரிந்தேயிருக்கிறது. இந்தப் பஞ்சத்தை நிவிர்த்திசெய்ய அவர்கள் முயற்சி செய்கிறதில்லையென்று சொல்லப்படாது. சிலவிசை முயற்சி செய்கிறார்கள். ஆனால், அறுப்புக்கு எஜமான் நமது ஜெபத்தைக் கேட்டு அதற்கு உத்தரவாக வேலையாட்களை அனுப்பச் சித்தமாயிருக்கிறார் என்று விசுவாசிக்கிற விசுவாசமும், நமது ஜெபம் அவரிடம் போகாவிட்டால், அறுப்புக்குப் பக்குவமாயிருக்கிற வயல்களெல்லாம் பாழாய்ப்போகுமே என்று அறிந்துருகுகிற உருக்கமும் கிறிஸ்தவர்களுக்குள் அஸ்தமித்துவிட்டது. இதனால், மேய்ப்பனில்லாமல் அலைந்து வருந்துகிற ஆடுகளுடைய வருத்தத்தை உணர்ந்து, அவர்களுக்காக ஜெபிக்கவேண்டிய பிரகாரம் ஜெபிக்கிற கிறிஸ்தவர்களை இப்போது எங்கும் காணோம். நமது ஜெபத்தினாலேயே அறுப்புக்கு ஆட்கள் கிடைப்பார்கள், மற்றப்படி வயல்கள் பாழாய்ப்போம் என்பது அதிசயமாய்த் தோன்றும். ஆயினும், அதுவே வாஸ்தவம். கர்த்தர் தமது வேலையைத் தமது திருச்சபையின் கையில் கொடுத்துவிட்டார்; அவருடைய உடலாகிய திருச்சபையே இனி அந்த வேலையைச் செய்யவேண்டும்; அந்த வேலை நடப்பதற்கு அவர் தம்மை அதின் கையைப்பார்த்திருக்கவேண்டியவராக்கிக்கொண்டார். அந்த வேலையின்பொருட்டு அவருடையவர்கள் வானத்திலும் பூமியிலும் வேண்டுமளவு வல்லமையை உபயோகித்துக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். இதெல்லாம் எவ்வளவு விநோதமாகக் காணப்படினும் முழுவதும் உண்மை. ஆதலால், அந்த வேலைக்குக் கிடைக்கிற ஆட்களின் தொகையும், அவர்களால் அறுவிடையாகிற அறுப்பின் அளவும் திருச்சபை அதற்காகச் செய்கிற ஜெபத்திற்கு தக்கபடி இருக்கும்.

இது எவ்வளவு பயபக்தியான நினைவு! ஐயோ, நமது உபாத்தியாயர் நமக்குக் கற்பித்திருக்கிற இந்தக் கட்டளைக்கு நாம் மனமொத்துக் கீழ்ப்படிவதை விட்டு, அதைக் குறித்துக் கவலையில்லாமலும் அவர் நமக்கு ஒப்புவித்திருக்கிறவேலைக்கு ஆட்கள்வேண்டுமென்று மனமுருகிக் கேளாமலும் இருப்பதற்குக் காரணமென்ன? இரண்டு காரணங்



கள் அதற்குண்டு. ஒரு காரணம் இது: நமது ஜெபத்தைத் தமக்குத் துணைவேண்ட இயேசுவைத் தூண்டின அவருடைய பரிதாபம் நமதுள்ளத்தில் பொங்கி எரிகிறதில்லை. இரட்சிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொருவனும் பிறனைத் தன்னைப்போல் நேசிக்கவேண்டும், அதாவது, தான் என்று தன்னை வேறுபிரித்து நினைக்காமல், தானே பிறர் என்று நினைத்துத் தன்னைப் பிறருக்குள் அடக்கி வைத்துக்கொண்டு முற்றும் தேவனுடைய மகிமைக்காகவே பிழைக்கவேண்டும். இதுவே மீட்கப்பட்டிருக்கிற தம்முடையவர்களுக்குப் பிதா இட்டிருக்கிற முதற் கட்டளை. விசுவாசிகளுக்கு இந்தக் கட்டளை செம்மையாய்ப் பாடமேறினால் மாத்திரமே, அவர்கள் கரையேற வழிகாணாமல் மடிகிறவர்களை நினைத்து மனமுருகி, ஆண்டவர் தாமே அவர்களை நம்பிக்கையாய்த் தங்கள் பராமரிப்புக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்று உணர்வார்கள். அவர்களை ஒரு வயல் மாத்திரமாக நினைத்துக்கொண்டிருக்குமளவும், பாடுபட்டால் பலன் அல்லாவிட்டால் இல்லையென்று சும்மா இருப்பார்கள். ஆனால், அவர்களைத் தங்கள் அன்பிற்கினிய தமர்களாக ஆண்டவரிடத்தில் கையேந்தி வாங்கிக்கொண்டால், இரட்சிப்பாரில்லாமல் மடியப்போகிற அவர்கள்மேல் மனதுருகி: ஆண்டவரே! அவர்களிடத்தில் வேலை செய்வதற்கு ஆட்களைத் தாரும் என்று வேண்டுவார்கள். இப்படி நம் உள்ளத்தில் உருக்கச்சிந்தை குடிகொண்டு நம்மை ஆட்கொள்ளும்போது நமதாண்டவருடைய கட்டளையை அலட்சியம் செய்வதற்கு நம்மைத் தூண்டுகிற இரண்டாம் காரணம் ஒழிந்துபோம். அந்த இரண்டாம் காரணம் நமக்கு இருக்கிற விசுவாசக்குறைவே. பிறனை நம்மோடு இரட்சித்துக்கொள்ள முயலும்போது, நாம் இந்தக் குறைவை உணர்ந்துகொள்வோம். நமக்கு உருக்கம் அதிகப்பட அதிகப்பட நாம் பிறருக்காக ஜெபிக்கும் ஜெபத்தினால் நம்முடைய விசுவாசத்தாழ்ச்சி நீங்கிவிடும். வேண்டினதை வேண்டினவாறே சம்பாதித்துத் தர ஜெபத்திற்கு வல்லமையுண்டு என்று நாம் பொதுவாய் நம்புகிறதில்லை. தேவனோடு நெருங்கி அந்நியோந்நியமாய்ப் பிழைக்கவேண்டிய பிரகாரம் நாம் பிழைக்கிறதில்லை. அது

வுந்தவிர, அவருக்கு ஊழியம் செய்யவேண்டுமே, அவருடைய இராஜ்யத்திற்காகக் கவலைப்படவேண்டுமே என்கிற சிந்தை போதுமானபடி நம்மை ஆட்கொள்ளுகிறதில்லை. இதினாலேதான் அவர் நமது ஜெபத்தைப் பிரியமாய்க் கேட்டு அதற்கு ஆம் என்று உத்தரவு சொல்லுவர் என்கிற நிச்சயம் நமக்கு வாராமல்போகிறது. நமது ஜெபம் கிறிஸ்துவின் ஜீவியத்தோடு ஒட்டி அத்னோடு ஒன்றாகும் வரத்தை நாம் ஜெபத்தினால் கேட்டு வாங்கிக்கொள்ளவேண்டும். அப்போது அவருக்குள் இருக்கிற உருக்கம் நமக்குள் வந்து பாயும். மேலும், அதனால் நமது இரட்சகருக்குள் இருக்கிற தேவாவியானவர் நமக்குள் வீற்றிருந்துகொண்டு, நமது ஜெபம் கேட்கப்பட்டுப் பலிக்கிறது என்னும் நிச்சயத்தை நமக்கு உண்டாக்கிக்கொண்டேயிருப்பார்.

இப்பேர்ப்பட்ட ஜெபம் செய்யும் வரம் நமக்குக் கிடைத்துவிட்டால், நாம் இரண்டுவகை நன்மைகளைக் கேட்டு வாங்கிக்கொண்டேயிருப்போம். முதலாவது, முற்றும் தேவ பணிவிடைக்கே தங்களை ஒப்புவித்து அதுவே சிந்தையாயிருக்கிற ஆட்களை நமக்கு அதிகமதிகமாய்த் தரவேண்டுமென்று கேட்டு வாங்குவோம். சபைகளை மேய்க்கக் குருக்களாவதீ, அந்நிய தேசங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க மிஷனரிகளாவது, ஞானபாடசாலைகளில் தேவ வசனத்தைக் கற்பிக்க உபாத்திமார்களாவது வேண்டித் தேடும்போது, தக்க ஆட்கள் அகப்படுவது துர்லபமாயிருக்கிறது. இது இக்காலத்தில் கிறிஸ்துவின் சபையைப் பிடித்திருக்கிற பெரிய பீடை என்றே சொல்லவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் இருக்கிற ...த்தலாவது, சபையிலாவது, இப்பேர்ப்பட்ட குறைவையுணர்ந்து அதை நிவிர்த்திசெய்ய தேவனைக் கேட்டால், அவர்கள் கேட்டபடி அவர்களுக்குக் கிடைக்கும். கர்த்தராகிய இயேசு இப்போது அறுப்புக்கு எஜமானாயிருக்கிறார். வரங்களை நமக்கு அளிப்பதற்கு, விசேஷமாய் ஆவியின் வரங்களை நமக்கு அளிப்பதற்கே அவர் உன்னதங்களுக்கு ஏறிப்போயிருக்கிறார். அவர் அருளும் வரங்களுள் மிக முக்கியமான வரம் தேவாவி நிறைந்த மனுஷரே. சிரசாகிய அவருடன் அவ



யவங்களாகிய விசுவாசிகள் ஒத்துக் கலந்து உழைக்கிற உழைப்புக்குத் தக்கபடிதான் அவர் அருளும் வரங்கள் இருக்கும். ஜெபஜீவியமே நாம் அவருடன் ஒத்துக்கூடி உழைக்கிறதற்கு வழி. விசுவாசிகள் உறுதியுடன் ஜெபிக்கும்போது, வேலைக்கு வேண்டிய ஆளும் பொருளும் கிடைக்கும்.

நாம் ஜெபித்து வாங்கவேண்டிய இரண்டாம் நன்மை முந்தின நன்மைக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததல்ல. ஒவ்வொரு விசுவாசியும் ஒரு வேலையாள். தேவன் இரட்சித்த ஒவ்வொருவனும் வேலை செய்வதற்கே இரட்சிக்கப்பட்டான். அவனவன் வேலை ஜீவனவனுக்குக் காத்திருக்கிறது. இரட்சிக்கப்பட்டவர்களெல்லாருக்கும் அவரவர் வேலைக்கு வைராக்கியம் அளித்து, ஒருவரும் திராட்சத்தோட்டத்தில் வீணராய் நிற்காதிருக்கும் வரத்தை அருள நாம் கர்த்தரைப் பார்த்து ஜெபிக்கவேண்டும். தேவப்பணிவிடைக்குத் தகுந்த ஆட்கள் அகப்படாதபோதும், ஆட்கள் குறைவுபடும்போதும், ஜெபம்பண்ணினால் கிடைக்கும் என்கிற வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறது. ஞாயிற்றுப் பள்ளிக்கூடமா, கிராமச்சபை விசாரிப்பா, கிரமமாய் வேதம் கற்கக்கூடினவர்களுக்கு வேதமுணர்த்துதலா, பாவத்தில் வீழ்கிறவர்களைப் பரிந்து தூக்கி இரட்சித்தலா, எந்தெந்த வேலையுண்டோ அந்தந்த வேலைக்கு ஆகும் ஆட்களைத் தர வல்லவராய் தேவன் முழுப்பிரியத்துடன் காத்திருக்கிறார். உடனே ஆட்கள் கிடைக்காமல், நாம் சிலநாள் வருந்தி ஜெபிக்க நேர்ந்தாலும் நேரும். ஆகிலும், நாம் அறுப்புக்கு எஜமானைப் பார்த்து வேண்டிக்கொள்ளவேண்டும் என்று கிறிஸ்து இட்ட கட்டளைப்படி நாம் கேட்டது கிடைக்கும் என்பதற்கு நமக்கு உறுதி. "அவன் எழுந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இது எவ்வளவு ஆச்சரியமான இன்ப நினைவு! உலகம் தாழ்ச்சியடைந்து வருந்துகையில், அதற்கு உதவும் தேவ பணிவிடை செய்வதற்கு ஆள்தேடித்தரும் வல்லமை நமது ஜெபத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அறுப்புக்கு எஜமான் நமது ஜெபத்தைத் தட்டாமல் கேட்பார். இப்பேர்ப்

பட்ட விசேஷ ஜெபம் செய்வதற்கு நம்மை அழைத்திருக்கிற கிறிஸ்து, அவர் காரியமாய் அவர் நாமத்தில், நாம் செய்யும் ஜெபம் பலிப்பதற்குத் துணை நிற்பார். நாம் செய்யவேண்டிய இந்தப் பரோபகார ஜெபத்திற்கு வேண்டிய நேரம் கிரமமாய்க் குறித்துக்கொண்டு; அதைத் தவறாமல் செய்துவருவோமாக. அதினால், தம்மோடொப்ப ஜெபிப்பதற்கு நம்மைத் தேடின அவருடைய திருவுள்ளத்தின் கருணை நமதுள்ளத்திலும் வந்து குடியிருக்கும். மேலும், தேவனுடைய இராஜ்யம் விர்த்தியடையச் செய்வதில் நம்முடைய பேச்சையும் அவர் ஒரு பொருட்டாய் மதிக்கிறார் என்று நாம் அறியும்போது, நமக்கு அவர் அருளியிருக்கிற இராஜரீக நிலைமையின் பெருமை நமக்கு விளங்கும். அதினால், உள்ளபடிக்கு நாம் இப்புவியில் தேவனோடு உடன் வேலையாட்கள் என்று சிந்தையடைந்து, அவருடையதாகிய வேலையில் அவர் மனப்பூர்வமாய் நம்மை நம்பி நமக்கொரு பங்கு கொடுத்திருக்கிறார் என்று பார்த்துக் களிப்போம். உலகத்திற்கு மற்றப்படி வராத நன்மை நமது ஜெபத்தின்பொருட்டு வருவதை நாம் காணுந்தோறும், இயேசுவின் ஆத்துமாவுக்கு இருந்த பிரசவ நோவு நமது ஆத்துமாவுக்கும் வரும். அவருடைய ஆத்துமா பலனைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சி நமது ஆத்துமாவுக்கும் கிடைக்கும்.

## "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

அன்புள்ள இயேசுவே! இன்றைக்கு வேறொரு ஆச்சரியமான பாடத்தை நாங்கள் கற்கும்படிக்கு எங்களுக்குக் கொடுத்திருக்கிறீர். நீர் இன்று சொல்லியிருக்கிற ஞானவிஷயங்கள் வாஸ்தவந்தான் என்று பார்க்கும் வரத்தை எங்களுக்குத் தாரும். அறுப்பு மிகுதியாயிருக்கிறது. அது அறுக்காவிட்டால் பாழாய்ப்போம். அறுக்கிற ஆட்கள் எப்போது வருவார்கள் என்று அறுப்பெல்லாம் தவித்துக்கொண்டிருக்கிறது. ஆட்களை அழைக்கவேண்டிய சீஷர்களோ உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தாவே! இந்தக் கண்ணிராயைப் பார்க்கும்போதெல்லாம் எங்கள் உள்ளம் பதறி உருகும்படி செய்யும். வேலையாட்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறார்கள். எங்க



ளுக்கு விசுவாசமும் ஜெபமும் பஞ்சமாய்விட்டது என்று இது காட்டுகிறது. ஆண்டவரே! இப்படி விசுவாசமும் ஜெபமும் குறைபட்டுப் பிழைக்கிற பிழைப்பு கொடிய பாவம் என்று எங்கள் உள்ளங்களில்பட உணர்த்தும். அறுப்புக்கு எஜமான் வேண்டியமட்டும் ஆள்தர வல்லவராய்க் காத்திருக்கிறார். ஆனால், அப்படி அவர் ஆள் தருவதை எங்கள் ஜெபத்தை பொறுத்திருக்கச் செய்திருக்கிறார். இதை நாங்கள் மறவாமல் நினைத்திருக்கப்பண்ணும். ஜெபம் பண்ண அதிகாரம்பெற்ற சீஷர் எங்கும் இருக்கிறார்கள். ஆண்டவரே! உம்முடைய ஆவியை அவர்கள்மேல் சொரிந்து, அவர்கள்மேல் நீர் ஊதுவதினால், அவர்களுக்குள் உமதுள்ளத்தில் இருக்கிற இரக்கத்தையும் உமது வாக்குத்தத்தத்தை நம்புகிற விசுவாசத்தையும் உண்டாக்கி, அவர்களை ஓயாமல் பலிக்கும் ஜெபம் செய்விக்க வல்லவராயிருக்கிறீர். இதை நாங்களும் எங்கள் அநுபவத்தில் அறிந்துகொள்ளப்பண்ணும்.

ஆ எங்கள் அருமை ஆண்டவரே! உண்மைகெட்ட சோம்பர்களாகிய எங்கள் நம்பிக்கைக்கு நீர் இப்பேர்ப்பட்ட வேலையையும் இப்பேர்ப்பட்ட வல்லமையையும் ஒப்புவித்தது ஏன் என்று எங்களுக்குத் தெரியவில்லை. வேலையாட்கள் அனுப்பப்படும்படி இரவும் பகலும் வேண்டுகிறவர்களை நீர் இன்னம் பழக்கி ஆளாக்கிவருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே! உமதாவியை உம்முடைய பிள்ளைகள் எல்லார்மேலும் ஊதிச் சொரியும். அதினால், அவர்கள் தங்கள் ஆண்டவருடைய இராஜ்யமும் அவருடைய மகிமையுமே காரியமாயிருந்து, அவர்கள் செய்யும் ஜெபம் எப்பேர்ப்பட்ட வல்லமை செய்யும் என்று அறிந்து நம்புவார்கள். ஜீவனுள்ள தேவன்மேல் அன்புவைத்து, விசுவாசிகள் செய்யும் ஜெபம், அவர்கள் கேட்டதைக் கேட்டபடியே வெகு ஏராளமாய்த் தர வல்லமையுள்ளது என்னும் நிச்சயத்தை எங்கள் நெஞ்சிலே எப்போதுந் தாரும். ஆமென்.

# பத்தாம் பாடம்.

## 'உனக்கு என்ன செய்யவேண்டும்?'

அல்லது,

## வேண்டியது இன்னதென்று வரையறுத்துக் கேட்கவேண்டும்.

"இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார்?" (மாற். 10. 51. லூக். 18. 41.)

இங்கு சொன்ன குருடன் வெகுநேரமாய் "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" என்று உரத்துக் கூவிக் கொண்டேயிருந்தான். அந்தக் கூப்பாடு ஆண்டவருடைய காதுக்கு வந்து எட்டினது. அவனுக்கு என்னவேண்டும் என்று அவருக்குத் தெரியும். அதைக் கொடுக்க அவருக்கு மனமும் இருந்தது. ஆயினும், கொடுக்குமுன் அவனைப் பார்த்து: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறார். இரக்கம் வேண்டும் என்று பொதுப்படக் கேட்பதையொழித்து இன்னமாதிரி இரக்கம் என்று சுட்டிக்காட்டி அவன் கேட்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அப்படிக் கேட்கும்வரையில் அவனுக்குச் சுகம் அகப்படவில்லை.

தற்காலத்திலே ஜெபம் பண்ணுகிற வெகுபேரைப் பார்த்து, ஆண்டவர் அந்தக் கேள்வியையே கேட்கிறார். அதற்கு அவர்கள் திட்டமாய் நிதானித்து உத்தரவு சொன்னாலொழிய அவர்கள் தேடுகிற நன்மையை அடையமாட்டார்கள். ஜெபம் பொத்தாம் பொதுவில் இரக்கம் கேட்டு, நமக்கு வேண்டியது இன்னதென்று வரையறுத்துத் தெரிவிக்காமல் புறப்படுகிற கூச்சலாயிருக்கப்படாது. நமக்கு ஆவசியகம் இன்னது என்பது ஜெபத்தில் வெளிப்படத் தீர்க்கமாய்ச் சொல்லப்படவேண்டும். நமது கூப்பாட்டினால் நாம் அவருக்குச் சொல்ல விரும்புவது எது என்று அவருக்குத் தெரியாதோ என்றால், தெரியும். அப்படியானால், அதைத் தர அவருக்கு விருப்ப



மில்லையோ என்றால், விருப்பமுண்டு. அப்படியிருக்க, நாம் வேண்டுவதை வரையறுத்துக் கேட்கவேண்டும் என்பது அவர் பொருட்டல்ல; நம்பொருட்டே அவசியம். வரையறுத்த ஜெபம் நமது குறைப்பாடுகளைத் தீரத்தெளிய நாம் அறிந்து கொள்ள உதவும். நமக்கு அத்தியாவசியமானதைப் பிரசுதப் பகுத்தறிந்துகொள்வதற்கு வெகு நேரம், வெகு யோசனை, வெகு தற்சோதனை வேண்டியதாகும். நாம் விரும்பிக் கேட்பது உள்ளபடி, யதார்த்தமாய், நமதுள்ளத்தின் விருப்பமா, அது கிடைக்கும்வரையில் விடாப்பிடியாயிருந்து ஜெபிக்கும் உறுதியை அது நமக்கு உண்டாக்க வல்லதா என்று ஆராய்ந்து நமது மனநிலையைப் பரீட்சிப்பதற்கு வரையறுத்த ஜெபத்தைப்போல் வேறில்லை. நமது ஜெபம் திருவசனத்திற்குச் சம்மதமானதா, நாம் கேட்பதை வாங்குவோம் என்னும் விசுவாச உறுதி நமக்குண்டா, என்று யோசித்துத் தெளிவதற்கும் அதுவே சாதனம். மேலும், அது நாம் கேட்டது கேட்டபடி கிடைப்பதற்குக் காத்திருக்கவும் கிடைக்கும்போது அதைக் கவனித்து மனதில் பதிவித்துக்கொள்ளவும் நம்மைத்தூண்டும்.

நமது ஜெபம் பெரும்பாலும் இன்னது வேண்டும் என்று சுட்டிக்காட்டாத இலக்கற்ற ஜெபமாயிருக்கிறது. சிலர் இரக்கம் இரக்கம் என்று கூவுவார்கள். ஆனால், இரக்கம் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறதில்லை. சிலர் பாவத்திலிருந்து விடுபடவேண்டும் என்பார்கள். ஆயினும், தங்களை ஆளும் பாவத்தின் பெயரைச் சொல்லி, இந்தப் பாவத்திலிருந்து எங்களை விடுவியும் என்று கேட்கிறதில்லை. வேறு சிலர் தங்களுடைய அக்கம் பக்கத்தாருக்கு நன்மை வழங்கவேண்டும், தங்கள் தேசத்தின்மேலாவது உலகத்தின்மேலாவது தேவன் தமது ஆவியை ஊற்றவேண்டும் என்று கேட்பார்கள். ஆகிலும், கேட்ட ஜெபத்திற்கு உத்தரவு வந்ததா இல்லையா என்று பார்த்துத் தெளிவதற்கு ஒரு விசேஷித்த இடத்தை அவர்கள் இலக்குவைத்துக் கொள்ளுகிறதில்லை. அப்படி இலக்கில்லாமல் ஜெபிக்கிற எல்லாரையும் பார்த்து: உங்களுக்குத் தேவையானது என்ன என்று நிதானித்துச் சொல்லுங்கள், உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறீர்கள்? என்று கர்த்தர் கேட்

கிறார். ஒவ்வொரு தனிக்கிறிஸ்தவனும் உலகமெல்லாம் வேலைசெய்ய முடியாது. ஏனெனில், அவனவன் பெலன் கொஞ்சம் என்பது பிரத்தியக்ஷம். அந்தக் கொஞ்ச பெலனைக் கொண்டு அவன் வேலைசெய்யும் இடமும் கொஞ்சமாய்த்தா னிருக்கும். ஆதலால், அவன் எல்லாவற்றிற்கும் முந்தித் தான் உழைக்கும் அந்தச் சிறு இடத்தைச் சுட்டிக்காட்டி அதற்கு வேண்டியதைக் கேட்பதே தகுதி. ஒவ்வொரு விசுவாசிக்கும் அவனவனுடைய குடும்பம், அவனவனுடைய சிநேகிதர், அவனவனுடைய அயலார், என்றிப்படி அவனவன் வேலை செய்ய வேண்டிய எல்லைத்திட்டம் இருக்கிறது. அந்த எல்லைக்குட் பட்டவர்களை அவன் பெயர் சொல்லி தேவனுக்குமுன் நிறுத்தி, அவர்களுக்காக ஜெபிக்கப் பழகிக்கொண்டால், அதினால் அவன் விசுவாசப் பயிற்சிச்சாலையில் இருந்து தேறி, தேவனோடு முகமுகமாய் உறவாடி, தனக்கு இன்னின்னது தேவையென்று குறித்துக்காட்டி வாங்கப் படித்துக்கொள்வான். இப்படி ஒருவன் வரையறுத்துக் கேட்டதை வாங்கிப் பழகி, விசுவாச அநுபவம்கண்டவனா யிருந்தால்மாத்திரம், அவன் வரையறுக்காமல் பொதுப்பட ஜெபிக்கிற ஜெபம் விசுவாசமுள்ள ஜெபமும் பலிக்கிற ஜெபமுமாகும்.

போர் பழகிக் கைகண்டிருந்த சேனையைப் போர்ப்பழக்கமில்லாத திரான்சுவால் நாட்டுப் போவர்கள் மஜுபாயுத்தகளத்தில் மடக்கிக்கொண்டு ஜெயித்தார்கள் என்று கேட்டு நாகரீகமோங்கின உலகத்தாரெல்லாரும் அதிசயித்த கதை நம்மெல்லாருக்கும் [illegible] அந்தப்போவர்கள் அப்படிஜெயித்ததற்குக் காரணமென்ன? ஐரோப்பாகண்டத்தாருடைய யுத்தமுறைப்படி, படையாட்கள் போர்முகத்தில் ஆள்திரட்சிக்குள் பொத்தாம்பொதுவில் குண்டுமாரி பொழிவது வழக்கமேதவிர, இந்தக் குண்டுக்கு இந்த ஆள் இலக்கு என்று குறிவைத்துச் சுடுகிற வழக்கமில்லை. வனத்து மிருகங்களை வேட்டையாடி வேட்டையாடி, போவர்க்காரன் இதற்கு முற்றும் எதிரானதோர் பாடம் படித்திருந்தான். வைத்தகுறி தவறாமல் குண்டு செலுத்திப் பழகியிருந்த பழக்கத்தினால், அவன் ஆட்பெரும் படையிலும் பொத்தாம்பொதுவில் குண்டு பொழியாமல், ஒவ்வொரு குண்டும் ஒவ்வொரு எதிரியைத் தேடி அ-



னுபினைக் கொண்டுபோகும்படி செய்தான். இதனால் அவனுக்கு ஜெயம் உண்டாயிற்று. ஞான உலகத்திலும் இப்படி இலக்கு வைத்துப் போரிடுவது ஜெயத்தையே தரும். நாம் செய்யும் ஜெபம் பலிக்கவேண்டும் என்னும் கருத்தும் நம்பிக்கையும் நமதுள்ளங்களில் மூண்டெரியும்மட்டும் காத்திராமல் பதஷ்டமாய் நாம் பல மன்றாட்டுகளுக்குள் நமது இருதயத்தின் ஆசைகளை கொட்டிவிடுகிறோம். இப்படி நாம் செய்யும்போதெல்லாம் நாம் பண்ணின ஜெபங்களில் அநேகம் இலக்குத் தவறிவிடும். ஆனால், நாம் நமது உள்ளத்தைப் பதறாமல் அமர்ந்திருக்கச் செய்துகொண்டு, கர்த்தருக்குமுன் ஜெபம்பண்ணத் தலைகுனியுந்தோறும் பின்வரும் கேள்விகளைக் கேட்டுப் பார்த்துக்கொள்ளவேண்டும். நான் விரும்புவது உள்ளபடிக்கு எது? அது எனக்குக் கிடைக்கவே கிடைக்கும் என்னும் விசுவாச உறுதியுடன் கேட்கிறேனா? அந்த விருப்பத்தை இப்போது பிதாவின் உள்ளத்தில் போட்டுவிட்டு இனி அதைப்பற்றி துக்கவிசாரமில்லாதிருக்க எனக்கு மனமுண்டா? என் விருப்பின்படி தேவன் கொடுப்பார் என்பதற்கு அவருக்கும் எனக்கும் ஒரு நிர்ணயம் ஏற்பட்டுவிட்டதா? இப்படிக் கேட்டுத் தெளிந்து ஜெபித்தால், நாம் விரும்புவது இன்னது என்று வரையறுத்து தேவனுக்குச் சொல்வதும் நமக்குக் கிடைக்கப்போகிறது இன்னது என்று நாமே வரையறுத்து அறிந்திருப்பதும் நமக்கு எளிதாயிருக்கும்.

வெகு வசனிப்பினால் கேட்கப்படுவோம் என்று நினைத்து வீண்வார்த்தைகளை அலப்புகிற அஞ்ஞானிகளைப்போல் நாம் ஜெபம் செய்யப்படாது என்று இரட்சகர் நமக்குச் சொன்ன எச்சரிப்புக்குப் பல காரணங்கள் இருந்தும், நாம் வரையறுத்து ஜெபிக்கவேண்டும் என்பது ஒரு முக்கிய காரணம். ஊக்கமும் அனலும் கூட்டி ஜெபிக்கிற ஜெபங்களை பலமுறை காதாரக் கேட்கிறோம். அவைகளில் அநேகவித நன்மைகள் கேட்டு வேண்டிக்கொள்ளப்படுகின்றன. ஆகிலும், அப்படி ஜெபிக்கிறவர்களைப் பார்த்து நமது இரட்சகர்: நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்றிருக்கிறாய் என்று சொல்லுவார் என்பதற்குச் சந்தேகமேயில்லை. என் தகப்பனுடைய காரிய

மாய் நான் ஒரு அந்நிய தேசத்தில் இருக்க நேர்ந்தால், நான் அவருக்கு இரண்டுவித நிருபங்கள் எழுதுவது அவசியமாகும். நானெழுதும் கடிதங்களுள் ஒரு வகையில் என் அன்பிற்கு இலக்காகிய என் அருமைப் பெற்றோர், சகோதரர் சகோதரிகள், மற்றும் இனத்தார் நண்பர் முதலியோருடைய யோகக்ஷேமங்களை விசாரித்து எழுதுவேன். இன்னொரு வகையில், என் தகப்பனுடைய வியாபாரமோ, தொழிலோ, எந்தக்காரியமாய் நான் அவர் நிமித்தம் அந்நிய தேசம் போயிருக்கிறேனோ, அந்தக் காரியத்திற்கு அவசியமான பண்டம் பாடிகள் சரக்குகள் இவற்றை எனக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டு எழுதுவேன். குடும்ப யோகக்ஷேம விசாரணையும் தொழிலுக்கு அவசியமானவைகளைக் கேட்டலும் கலந்துள்ள கடிதங்களும் சிற்சில வேளை அனுப்புவேன். என் தகப்பன் எனக்கு எழுதும் பதில் நான் அவருக்கு எழுதின கடிதத்தின் தன்மைக்குத் தக்கபடியிருக்கும். குடும்ப யோகக்ஷேமங்களைப்பற்றி நான் எழுதிக் கேட்டதில் ஒரு அம்சமாவது தவறாமல் அவர் பதிலனுப்புவார் என்று நான் நினைத்துக்கொண்டிருக்க நியாயமில்லை. ஆனால், நான் சரக்குக் கேட்டு எழுதின கடிதத்திற்கு, அந்தச் சரக்கு எனக்கு வருமா வராதா என்பதைப்பற்றி திட்டமான பதிலுக்குக் காத்திருப்பேன். இப்படியே, நாம் தேவனோடு செய்யும் கூட்டுறவிலும், இன்னின்ன வேலையாகும்படிக்கு அவர் இன்னின்னது செய்யவேண்டும் என்கிற வரையறுப்பு இருக்கவேண்டும். நமது இல்லாக்குறைவு, நம்மைப் பிடித்து வருத்துகின்ற பாவம், நமக்கு அவர்மேலுள்ள அன்பு, அவரிடத்தில் நாம் வைத்திருக்கிற விசுவாசம், நம்மை அவருக்கு நேர்ந்து ஒப்புவித்தல், இப்பேர்ப்பட்ட விஷயங்களை நாம் அவருக்குச் சொல்லும்போது, அதில் அவர் நமக்கு என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறோம் என்பதைத் திட்டமாய் வரையறுத்துக் கேட்கவேண்டும். நமது ஜெபம் தமக்கு உகந்ததே என்பதைத் தாம் அதற்கு அருளும் உத்தரவினால் காட்டுவது பிதாவுக்கு வெகு பிரியம்.

நமது உபாத்தியாயர் இங்கு நமக்கு எடுத்துக்காட்டி உணர்த்துகிற வார்த்தைக்கு இன்னும் அதிகமான பொருள் இருக்கிறது. நீ விரும்புவது என்ன என்று அவர் கேளாமல்,



"நான் உனக்குச் செய்யவேண்டும் என்று உன் உள்ளம் பிடிப்பு வைத்துக் கேட்கிறது என்ன" என்று விசாரிக்கிறார். ஒருவன் ஏதேனும் ஒன்றை அடைய விரும்பியும் அதை அடையாமல் விடப்படாது என்று விடாகண்டகமா யிருக்கமாட்டான். நானொரு பண்டத்தை விரும்புகிறேன் என்று கவை; அதை விலை விசாரிக்கையில் அதிர்விலை கூறப்படுகிறது; அதைக் கேட்டதும், அதை வாங்கப்படாது என்று விட்டுவிடுவேன். அந்தப் பண்டம் வேண்டும் என்னும் விருப்பம் எனக்கு இருந்தும், அதை வாங்காமல் விடப்படாது என்னும் விடாகண்டகம் எனக்கில்லை. வேலைக்குச் சோம்புவோன் தான் ஐசுவரிய மடையவேண்டும் என்னும் விருப்பம் உள்ளவனா யிருந்தும், அதை அடையாமல் விடப்படாது என்னும் விடாகண்டக முடையவனா யிருக்கிறதில்லை. இவ்வாறே வெகு பேர் இரட்சிப்பு வேண்டும் என்னும் விருப்பமுள்ளவர்களா யிருந்தும், இரட்சிப்படையாமல் விடப்படாது என்னும் விடாகண்டகச் சித்தம் இல்லாமையினால் வீணாய் மடிகிறார்கள். ஒருவனுடைய சித்தவலிமையே அவனுள்ளத்தையும் ஜீவியத்தையும் ஆளும். நான் அடையக்கூடிய ஒன்றைப் பார்த்து அதை அடையவேண்டும் என்கிற சித்தவலிமை எனக்குள் மூண்டுவிட்டால், நான் அதை அடையும் வரையில் சும்மா இரேன். இவ்வாறே இயேசு நம்மைப் பார்த்து: "உனக்கு என்ன வேண்டும்?" என்று விசாரிக்கும்போதெல்லாம்: "நீ கேட்கிறதை அடைவதில் என்ன நஷ்டம் வந்தாலும் பொருட்டல்ல என்று துணிகிற துணிவு, அதை அடையாமல் விடப்படாது என்னும் விடாகண்டகம், உனக்குண்டா?" என்று விசாரிக்கிறாரேதவிர வேறல்ல. நீ கேட்டதைக் கொடுக்காமல் அவர் வெகுநாள் தாமதம் பண்ணிக்கொண்டிருந்தாலும் "நீ அலுத்துச் சலித்துப் போகாமல் அவர் உனக்குச் செவிகொடுக்கும்வரையில் விடாப்பிடியாய் ஜெபிக்கிற வல்லமை உன் சித்தத்திற்கு இருக்கிறதா? ஐயோ! எத்தனை ஜெபங்கள் கொஞ்சக்காலம் அவருடைய சமுகத்திற்கு அனுப்பப்படுகிற விருப்பங்களாய்மாத்திரம் இருந்து ஒழிந்துபோகின்றன! எத்தனை ஜெபங்கள் வருஷத்திற்கு ஒருமுறை கடமைக்கு அவரெதிரில் வந்து

மறைந்துவிடுகின்றன! இதேன்? நமது ஜெபத்திற்கு உத்தரவு கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, என்கிற அசதி நமக்கு இருப்பதினாலே.

நமது விருப்பத்தைமாத்திரம் தேவனுக்குத் தெரிவித்து, எது நலமோ அதை நமக்குச் செய்ய அவர் சித்தத்திற்கு நமது சித்தத்தை ஒப்புவித்துச் சும்மா இருப்பது சரியல்லவா என்றால், சரியல்ல. நமது கருத்திலிருப்பதை தேவனுக்குச் சொல்லி அதற்கு அவர் தமது இஷ்டம்போல் உத்தரவு சொல்லட்டும் என்றிருப்பது விசுவாசமுள்ள ஜெபமல்ல என்பதை இயேசு தமது சீஷருக்கு உணர்த்தப்பார்க்கிறார். அப்படி ஜெபிக்கவேண்டியது எப்போதென்றால், நாம் விரும்பிக் கேட்கிற விஷயத்தைக் குறித்துத் தேவனுடைய சித்தம் என்னவென்று நமக்குத் திட்டமாய்த் தெரியாதபோது. அதற்குக் 'கீழ்ப்படிந்த ஜெபம்' என்று பெயர். ஆனால், நாம் இங்கே படிக்கிற ஜெபம் விசுவாச ஜெபம். விசுவாச ஜெபத்திற்கு தேவனுடைய சித்தம் இன்னின்ன விஷயத்தில் இதிது என்று திருவசனத்தில் அவர் மொழிந்திருக்கிற வாக்குத்தத்தத்தினால் திட்டமாய்த் தெரியும். ஆதலால், அது அந்த வாக்குப் பலிக்குமட்டும் அவரை விடாமல் கேட்டு அலட்டிக்கொண்டேயிருக்கும். மத்தேயுசுவிசேஷத்தின் ஓரிடத்தில் (9. 28.), இயேசு தம்மைத் தேடிவந்த குருடரைப் பார்த்து "இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா" என்று கேட்டார். இங்கே, மற்று சுவிசேஷத்தில் அவர் தம்மிடத்தில் இரக்கம் கேட்ட குருடனைப் பார்த்து: "நானுனக்கு என்ன செய்யவேண்டும் என்று உன் சித்தத்தில் அபிமானித்திருக்கிறாய்?" என்கிறார். இரண்டிடத்திலும், அவர் தம்மால் நன்மை பெற்றவர்களைப் பார்த்து அவர்களுடைய விசுவாசம் அவர்களை இரட்சித்தது என்றார். இப்படித்தான் அவர் அந்த சீரோபெனிக்கேய ஸ்திரீக்கும் சொன்னார்: "உன் விசுவாசம் பெரிது; நீ உன் சித்தத்தில் அபிமானித்திருக்கிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார்." தேவன் சொன்ன வாக்கைப் பிடித்து அதின்மேல் சார்ந்துகொண்டு: "இதின்படி எனக்குச்செய்யும்" என்று அவரைக் கேட்கிற விடாகண்டகச் சித்தமே





விசுவாசம்: உண்மையாய் விசுவாசிப்பது ஒருவனுக்கிருந்தால் உறுதியாய்ச் சாதிப்புதாம் அவனுக்கு இருக்கும்.

இப்படி, அடம்பிடிக்கிற சித்தம் தேவனை அண்டிக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டிய மனத்தாழ்மைக்கு மாறுபடாதோ என்றால், மாறுபடாது. அப்பேர்ப்பட்ட சித்தத்திற்குச் சரியான பெயர் தேவனைக் கனப்படுத்துகிற உண்மையான கீழ்ப்படிதல். ஒருவன் தன் சுய சித்தம் என்பதை ஒட்டுப்பற்று அற முழுமையும் பிடித்து பிதாவுக்குக் கொடுத்துவிட்டபிறகு மாத்திரமே, அவன் தன் சித்தப்படி ஒன்றை விரும்பிக் கேட்க அவர் அவனுக்கு உத்தரவும் அதிகாரமும் கொடுப்பார். திருவசனத்தினாலும் தேவாவியானவராலும் வெளிப்படுத்தப்படுகிற தேவனுடைய சித்தத்தை விசுவாசி தன் சித்தமாக ஆக்கிக்கொண்டபின் இப்படிப் புதுப்பிக்கப்பட்டிருக்கிற சித்தத்தை அவன் தமக்கு ஊழியம் செய்வதில் உபயோகிக்க வேண்டும் என்பதே தேவனுடைய பிரியம். அது ஆத்துமாவில் இருக்கிற தத்துவங்களிலெல்லாம் பெரிய தத்துவம் சித்தம். அதுவே நமக்குள் இருக்கிற தேவசாயலின் முக்கிய அம்சம். ஆகையால், நமக்குள் வேலைசெய்கிற தேவகிருபை, எல்லாவற்றையும் பார்க்க, நமது சித்தத்தைப் பிடித்து, அதைச் சுத்திகரித்துச் சீரான நிலைமையில் வைத்து, அதை இனித் தடையில்லாமல் தாராளமாய் உபயோகிக்க நமக்கு உத்தரவு கொடுக்கிறது. தன்காரியம் என்று ஒரு காரியத்தை தனக்குப் பிரத்தியேகமாய் வைத்துக்கொள்ளாமல், தன் தகப்பன்காரியமே தன்காரியமாய்ச் சிந்தையில் வைத்துக்கொண்டு, தன் இஷ்டமென்பதில்லாமல் தன் தகப்பன் இஷ்டமே தன் இஷ்டமாகக்கொண்டு நடக்கிற மகனுக்கு அவனுடைய தகப்பன் தன்காரியத்தை நம்பி ஒப்புவிப்பானல்லவா? அதுபோலவே, தேவனும் தமக்கு நம்பிக்கையான பிள்ளையைப் பார்த்து: "உன் சித்தத்தில் நீ அபிமானித்திருக்கிறது என்ன?" என்று கேட்கிறார். என் சித்தம் என்றொரு சித்தம் எனக்கில்லை என்று சொல்வது பெரும்பாலும் ஞானச் சோம்பலேதவிர வேறல்ல. இது ஞானத்தாழ்மை என்கிற வேஷம் போட்டுக்கொண்டிருக்கும். அது அந்த வேஷம்

போட்டுக்கொண்டிருப்பது என்னத்தினால் என்றால், தேவனுடைய சித்தம் என்னவென்று திருவசனத்தில் தேடியறியச் சோம்புவதினாலே; அல்லவென்று அதைத் தேடி யறிந்திருந்தால், அதின்படி செய்ய தேவனை உரிமை பாராட்டிக் கேட்கிற அலுப்புக்கு அஞ்சுவதினாலே. உண்மையான தாழ்மை உறுதியான விசுவாசத்தை விட்டு இணைபிரிந்திருக்கவேயிருக்காது. உறுதியான விசுவாசம் எப்போதும் தேவனுடைய சித்தத்திற்குப் பொருந்தினது எது என்று அறிந்துகொள்ளப் பார்க்கும்; அப்படி அறிந்துகொண்டபின்: "நீங்கள் உங்கள் சித்தப்படி கேட்டுக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று சொன்னவரை நோக்கி, அந்த வாக்கை நிறைவேற்றும் என்று துணிந்து கேட்கும்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

கர்த்தராகிய இயேசுவே! நான் கேட்டது இன்னது என்பது உமக்கும் எனக்கும் சந்தேகமறத் தெரிந்திருக்கும்பொருட்டு, நான் பண்ணும் ஜெபத்தில் என் முழுக்கருத்தையும் பலத்தையும் கூட்டி, ஜெபிக்க எனக்குப் போதியும். இன்னின்னது எனக்கு வேண்டும் என்று நானே திட்டமாய் அறிந்திருக்கப்பண்ணும். அதனால் என் மன்றாட்டுகள் பரமண்டலத்தில் குறித்துவைக்கப்படுகிற பிரகாரமே பூமியிலே நானும் அவைகளை குறித்து வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மன்றாட்டிற்கும் வரும் உத்தரவைக் கூர்ந்து கவனித்துக்கொள்ளக் கூடியவனாவேன். உமது திருவசனம் எதெதைத் தர வாக்களித்திருக்கிறதோ அததைக் குறித்து அற்பச் சந்தேகமும் வராமல் தடுக்கிற தெளிந்த விசுவாசத்தை எனக்கு அருளும். அதினால், தேவாவியானவர் உமது திருவசன வாக்குப்படி எனக்குக் கிடைக்கத்தான் வேண்டும் என்று உரிமை பாராட்டிக் கேட்கிற உறுதியான சித்தத்தை எனக்குள் மூட்டிவிடுவார். ஆண்டவரே! தப்பாமல் பலிக்கும் ஜெபம் செய்ய வல்லதாகும்படி நீர் என் சித்தத்தை முற்றிலும் புதுப்பித்து, பலப்படுத்திப் பரிசுத்தமாக்கும்.

இன்பமான இரட்சகரே! எங்கள் சித்தம் என்ன என்று எங்களைக் கேட்டு, எங்கள் சித்தப்படி நாங்கள் எதைக்



கேட்டாலும் செய்ய வாக்களித்திருக்கிறீரே! இது எப்பேர்ப்பட்ட தயவு! இந்த அற்புதமான தயவை நான் தெளிவாய்ப் பகுத்துணரப்பண்ணும். தேவ குமாரா! இந்த இரகசியம் எனக்கு விளங்கவில்லை. எனக்குத் தெரிவதெல்லாம் இதுமாத்திரமே. என்னவெனில், எங்களை முழுமையும் உமக்கென்று இரட்சித்து வைத்திருக்கிறீர்; எங்களுக்கு இருக்கிற எல்லாவற்றிலும் சிறந்த கருவி எங்கள் சித்தம்; இந்தச் சித்தத்தைப் பிடித்து எங்களை உமக்காகத் திறமையாய் உழைக்கிற ஊழியக்காரராக்கிக்கொள்ளப் பார்க்கிறீர். ஆண்டவரே! என் சித்தத்தில் எதையும் எனக்கென்று வைத்துக்கொள்ளாமல் அதை முழுமையும் உமக்கே கொடுக்கிறேன். என் ஆவி தேகம் யாவையும் தம் வசத்தில் வைத்துக்கொண்டு ஆளுவதற்கு என் சித்தமே உமது ஆவியானவருக்கு அகப்படும் வல்லமை. ஆதலால், அதை அவரே முற்றிலும் ஒப்புக்கொண்டு, உமது வாக்குத்தத்தங்கள் சத்தியம் என்கிற அநுபவ அறிவு அதற்கு வரப்பண்ணி, அதை ஜெபத்தில் வல்லமையுள்ளதாக்குவாராக. அது ஜெபவல்லமையுள்ளதாவதினால் நான் எப்போதும்: "உன் விசுவாசம் பெரிது; உன் சித்தப்படிக்கே ஆகக்கடவது" என்னும் உமது திருச்சித்தத்தை என் காதாரக் கேட்டுக்கொண்டிருப்பேனாக.

## பதினோராம் பாடம்.

### 'பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்'
### அல்லது,
### வாங்கிக்கொள்ளுகிற விசுவாசம்.

"ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டாலும், அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்; அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்." (மாற். 11. 24.)

இது எப்பேர்ப்பட்ட வாக்கு! இது மகா பெரியதும் மகா திவ்வியமானதுமாகிய வாக்காயிருப்பதினாலே நமது கிஞ்

சித்தான உள்ளம் அதைக் கொள்ள முடியவில்லை. ஆகையால், அது எந்த எல்லைமட்டும் உண்மையாயிருக்கும் என்று நாம் நினைக்கிறோமோ, எவ்வளவுக்கு அதை நம்பினால் மோசம் போகோம் என்று நிதானிக்கிறோமோ, அவ்வளவுக்குள்ளேயே நமது உள்ளம் அதற்கு எல்லை குறித்து மட்டுக்கட்டி விடுகிறது. அந்த வாக்கை நமக்கு அளித்தவர், அதற்கு எவ்வளவு விசாலம் கொடுத்திருக்கிறாரோ, அவ்வளவு விசாலத்துடன் அது நமக்குள் பிரவேசிக்க நாம் விடுகிறதில்லை. அப்படி அது நமக்குள் பிரவேசிக்க விடுவோமாகில், அது தனக்குள்ள உயர்ப்பிக்கிற வல்லமையுடன் வந்து, சுருங்கிக் கிடக்கிற நமது உள்ளத்தை விசாலமாக்கி, வாக்காளியானவர் தமது வல்லமையாலும் அன்பாலும் நமக்கு எவ்வளவு செய்ய முழுப்பிரியமாய்க் காத்திருக்கிறாரோ, அவ்வளவையும் நம்பி வாங்கிக்கொள்ள நமக்குச் சக்தியுண்டாக்கும். விசுவாசம் என்பது தேவன் சொன்ன வாக்குத் தவறாது என்று நமக்குள் பிறக்கும் நிச்சயம் மாத்திரமேயல்ல, அல்லது அது இன்னின்ன நியாயங்களினிமித்தம் இன்னின்ன நியாயம் சரி என்று அனுமானிக்கிற அனுமானமுமல்ல. விசுவாசம் என்பது பின் என்னவெனில், தேவன் நம்மைப் பார்த்து இன்னின்னது உங்களுக்குச் செய்வேன் என்று சொல்லக்கேட்கிற காது, அவருடைய வாய் சொன்னபடிக்கே அவருடைய கை செய்யத் தொடங்கிவிட்டதைப் பார்க்கிற கண். ஆதலால், மெய் விசுவாசம் எங்கேயோ அங்கே ஜெபத்திற்கு உத்தரவு வராமலிருக்க முடியாது. நாம் ஜெபம் செய்யும்போதெல்லாம் அவர் நமக்குக் குறித்த ஒரே காரியத்தின்மேலே கண்ணிருக்க வேண்டும்; அதாவது: "கிடைத்துவிட்டது என்று விசுவாசியுங்கள்." இதற்குமேல் அவர் தமக்குக் குறித்துக்கொண்ட காரியத்தின்மேலே கண்ணாயிருப்பார்; அதாவது, "அப்பொழுது உங்களுக்கு உண்டாகும்." சாலொமோன் ஜெபித்தபோது அவனுடைய உள்ளமாகிய வீணையில் மீட்டியிருந்த சுருதியே ஒவ்வொரு மெய் ஜெபத்திற்கும் இருக்கவேண்டிய சுருதி (2 நாளா. 6. 4.). "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தமது வாக்கினால் சொன்னதை



தமது கரத்தினால் நிறைவேற்றினார்." இந்த ஜெபத்தில் தொனிக்கிற சுருதி என்னவென்றால், தமது வாயால் சொன்னதைத் தவறாமல் எப்போதும் தமது கையால் நிறைவேற்றுகிற தேவனைப் பார்த்து மகிழ்ந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துதல். இதை மனதில் வைத்துக்கொண்டு, இயேசு நமக்குக் கொடுக்கிற வாக்கைச் சிந்திப்போமாக. அதின் ஒவ்வொரு அங்கமும் தனித்தனியே நமக்குச் சொல்லுகிற தெய்வீக சங்கதி யிருக்கிறது.

"எவைகளைக் கேட்டாலும்." இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நமது மனுஷீக ஞானம் உடனே சந்தேகிக்கத் துவக்கி: இது உள்ளபடி நிஜமாயிருக்குமா? என்று கேட்கிறது. அப்படியல்லவென்றால், நமது உபாத்தியாயர் அதை ஏன் சொன்னார்? "எவைகளைக் கேட்டாலும்" என்று வலுவான வார்த்தைகளை ஏன் உபயோகித்தார்? மேலும், அவர் இப்படிப் பேசினது இந்த ஒருவிசை மாத்திரமல்லவே. "நீ விசுவாசிக்கக் கூடுமானால், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்;" "உங்களுக்கு விசுவாசமிருந்தால், உங்களால் கூடாதகாரியம் ஒன்று மிராது" என்றவர் அவர்தானே. விசுவாசம் கிறிஸ்துவுக்குச் சீஷனாயிருக்கிறவனுடைய பக்குவமான உள்ளத்திலே வசனத்தின் மூலியமாய்த் தேவாவியானவர் தாமே உண்டாக்குவதாகையால், அது நம்பியிருக்கிற காரியம் பலிக்காமலிருக்க முடியாது. ஜெபம் பலிக்கும் என்பதற்கு விசுவாசமே பிணை, விசுவாசமே முன்னறிகுறி. "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்டாலும் அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" என்பது உள்ளபடிக்கு மெய். இப்படியிருக்க, இதற்குக் குறுக்கே நமது மனுஷபுத்தி வந்து கலந்துகொண்டு, "தகுதியாயிருக்குமானால்," "தேவனுடைய சித்தத்திற்குப் பொருந்தியிருந்தால்" என்று இப்படி எல்லைகட்டி மறித்து, அந்த எல்லைக்கு அப்பால் போவது மோசமாகும் என்பதுபோல் நமக்குத் தோற்றுவித்து, ஆண்டவர் நமக்கு அருளியிருக்கிற திருவாக்கின் பலத்தை முறித்துவிடப் பார்க்கிறது. நமது ஆண்டவருடைய வார்த்தைகளை இப்படி மட்டுக்கட்டிப் பலங்குறைக்கிறதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக. அவருடைய வாக்கு

உள்ளது உள்ளபடிக்கு உண்மை. அவர், "எவைகளைக் கேட்டாலும்" என்பதை மடக்கிமடக்கி நமக்குப் பலதரம் சொல்லுகிறார். ஆனால் அந்தச் சொல் நமது உள்ளங்களில் உறைக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அந்தச் சொல் நமது உள்ளங்களில் உறைக்கும்போது, விசுவாசத்திற்கு எப்பேர்ப்பட்ட வல்லமையிருக்கிறது என்பதையும், நமது சிரசானவர் தமக்குள்ள வல்லமையில் அவயவங்களாகிய நமக்குப் பங்கு கொடுக்க முழுப்பிரியம் வைத்துக் கூப்பிடுகிறார் என்பதையும், தம்மைக் கள்ளமில்லா மனதினால் நம்புகிற தமது பிள்ளைக்குப் பிதா தமது வல்லமையையெல்லாம் கொடுத்து உதவக் காத்திருக்கிறார் என்பதையும் நாம் வெட்டவெளிச்சமாய் அறிந்துகொள்வோம். "எவைகளைக் கேட்டாலும்" என்னும் திருவாக்கு விசுவாசத்திற்குப் போஜனமாயிருந்து, அதற்குப் பலம் ஊட்டிக்கொண்டேயிருக்கவேண்டும். இந்தத் திருவாக்கைப் பலங்குறைத்துவிட்டால் அது விசுவாசத்தையே பலங்குறைத்துவிடுதலாகும். "எவைகளைக் கேட்டாலும்" என்பது இன்னின்ன அளவுக்குள் எவைகளைக் கேட்டாலும் என்று வரையறுத்து எல்லையேற்படுத்தப்படாத திருவாக்கு. வரையறை எள்ளளவும் அந்தத் திருவாக்குக்கு இல்லை. கேட்கவேண்டிய முறையை விதித்துக் காட்டுகிற ஒரே வரையறைமாத்திரமே தெரிவிக்கப்படுகிறது. அது என்னவெனில்: நாம் அந்தத் திருவாக்கை நம்பி விசுவாசிக்கவேண்டும் என்பது. நாம் கேட்கும் விஷயத்தைப்பற்றி தேவனுடைய சித்தம் எதுவென்று நாம் முன்பே திட்டமாய் விசாரித்து அறிந்திருக்கவேண்டும்; அப்படி அறிந்திருந்தால்மாத்திரம் கேட்டபடி பலிக்கும் என்று நாம் விசுவாசிக்கக்கூடும். நாம் திட்டமாய் அறிந்திருக்கிற வசனத்தின் வல்லமைக்கும் தேவாவியின் வல்லமைக்கும் நமது ஆத்துமாவைக் கையளித்துவிடவேண்டும். அப்படி கையளித்துவிட்ட நமது ஆத்துமாவை உபயோகிப்பதே விசுவாசித்தல் என்னப்படும். இவ்வாறு நாம் விசுவாசிக்கத் தொடங்கிவிட்டோமானால், அதன்பிறகு நமக்குக் கூடாதகாரியம் ஒன்றுமிராது. தேவன் தமது திருவாக்கினால் "நீங்கள் எவைகளைக் கேட்டாலும் பலிக்கும்" என்று சொல்-



லியிருக்க, நாம் அது இம்மட்டுந்தான் பலிக்கும், இதற்கப்பால் பலிக்காது என்று மட்டுக்கட்டுவது சரியே அல்ல. எவைகளைக் கேட்டாலும் என்று கிறிஸ்து நமக்குச் சொன்னவாக்கை உள்ளது உள்ளபடிக்கே பிடித்துக்கொண்டு, இந்த வாக்கில் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவையும் நாம் கேட்கலாம் என்று விசுவாசித்து, அவ்வளவும் நமக்குக் கிடைக்கும் என்று நிச்சயமாய் நம்பியிருப்பது நமது கடமை. அந்த வாக்கு ஒரு விதை. அந்த விதையை ஊனப்படுத்தாமல் அதை அவர் நமக்குத் தந்தபிரகாரமே நமது உள்ளத்தில் போட்டு முளைக்கவிட்டால், அது வேரூன்றிக் கிளம்பி, நமது ஜீவியம் முழுமையிலும் விசாலித்து வளர்ந்து, ஏராளமாய்க் கனிகொடுக்கும்.

"நீங்கள் ஜெபம்பண்ணிக் கேட்கிறது எல்லாம்." நாம் "கேட்கிறதை எல்லாம்" ஜெபத்திலேதான் தேவனுக்கு முன் கொண்டுவந்து வைக்கவேண்டும். அப்படி வைத்து, அவைகளை அவரிடத்தில் கேட்டு வாங்கவேண்டும். அவைகளை வாங்கிக்கொள்ளுகிற விசுவாசம் ஜெபத்திலிருந்து பிறக்கும். ஒரு பட்சம் பார்த்தால், ஜெபம் பிறக்கிறதற்கு விசுவாசம் முந்தி இருக்கவேண்டும். இன்னொரு பட்சம் பார்த்தால், ஜெபத்திலிருந்து விசுவாசம் பிறந்து வளரும். இரட்சகரை நேர்நேரே பார்த்து, அவரோடு நெருங்கி உறவாடும்போது மாத்திரமே, நமது விசுவாசம் முன் தனக்கு எட்டவில்லை என்று விட்டுவிட்டதை இப்போது எட்டுகிறதாகப் பார்த்துப் பிடித்துக்கொள்ளும். நாம் ஜெபம் பண்ணும்போதுதான் நமது ஆசாபாசங்களை தேவனுடைய சித்தம் என்னும் விளக்குக்கு எதிரே தூக்கிப் பிடித்துப் பார்ப்போம். அப்போதுதான் நாம் கருதிவேண்டுவது சரியோ பிசகோ என்று பரீட்சித்து அறிந்துகொள்வோம். அப்போதுதான் நாம் கேட்பதை உள்ளபடிக்கு இயேசுவின் நாமத்திலும் தேவனுக்கு மகிமையாகவும் கேட்கிறோமா இல்லையா என்பது வெட்டவெளிச்சமாய் நமக்குத் தெரியும். கேட்கத்தகுந்ததைக் கேட்கிறோமா? அதைக் கேட்கவேண்டிய மாதிரியாய்க் கேட்கிறோமா? இப்பேர்ப்பட்ட கேள்வியெல்லாம் நாம் ஜெபம்பண்ணி தேவாவியானவருக்குக் காத்திருக்கும்போது, அவரே வந்து நமக்குத்

வெளிப்படுத்த நமக்கு வெளிச்சமாகும். நாம் ஜெபம் பண்ணும் போதுதான் நமக்கு இருக்கிற விசுவாசக் குறைவு நமக்குத் தெரியும். அந்தக் குறைவை அறிந்தபின் நாம் நம்மை தேவாவியானவருக்கு ஒப்புக்கொடுத்து அவரால் விசுவாசத்தை அடைந்துகொண்டு, பிதாவினிடத்தில் போய் நாம் விசுவாசிக்கிறோம் என்பதை அவருக்குச் சொல்லி, அது உண்மை என்பதற்கு நாங்கள் உம்மைக் கேட்டது எங்களுக்குத் தப்பாமல் கிடைக்கும் என்கிற நிச்சயத்துடனே மனஞ்சலித்துத் தளராமல் விடாப்பிடியாய் ஜெபிப்பதே ரூபகாரம் என்று அவருக்குக் காண்பிப்போம்.

நாம் ஜெபம்பண்ணும்போதுதான் இயேசு வந்து விசுவாசிப்பது எப்படி என்று நமக்குக் கற்றுக்கொடுத்து, அப்படி விசுவாசிக்க நமக்குப் பலம் ஊட்டுவார். கேட்டது பலிக்கப் பண்ணுகிற விசுவாசம் இன்னம் எனக்கு வரவில்லையே என்று ஜெபம் பண்ணாமல் தாமதிக்கிறவனும் ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில் அப்படி நினைத்து தைரிய மிழந்துவிடுகிறவனும் விசுவாசிக்கப் படிக்கவேமாட்டார்கள். ஜெபம் பண்ணிக் கேட்க துவக்கிவிட்டவன் கிருபாசனத்தின் பாதத்தண்டை முழங்காலூன்றி யிருக்கும்போது விசுவாசத்தை யுண்டாக்குகிற தேவாவி தனக்கு அருளப்படுகிற நிச்சயத்தை அறிந்துகொள்வான்.

"பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்." எதை விசுவாசிக்கவேண்டும்? நாம் கேட்டதே நமக்குக் கிடைக்கும் என்று விசுவாசிக்கவேண்டும். நமக்கு எது ஆகும் எது ஆகாது என்பது பிதாவுக்குத் தெரியுமாகையால், நாம் கேட்டதை விட்டு அதற்குப் பதிலாய் வேறெதையாகிலும் அவர் கொடுத்தாலும் கொடுப்பார் என்று நமது இரட்சகர் குறிப்பாய்க்கூட எதுவும் இங்கே சொல்லவில்லை. நமது விசுவாசம் எந்த மலையைப் பார்த்துப் பெயர்ந்துபோகக் கற்பிக்கிறதோ அந்த மலையே கடலில் தள்ளப்படும். எல்லாவற்றையும் குறித்து நமது விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டிய ஜெபம் வேறொன்று இருக்கிறது. அதற்குப் பலிக்கும் பலன் என்னவென்றால், இன



மான தேவசமாதானம் வந்து நமது இருதயங்களையும் சிந்தனைகளையும் கலங்காமல் காத்துக்கொள்வது. அந்த ஜெபத்திற்கு தேவனே நமக்குத் தஞ்சம் என்று அடைக்கலம் தேடுகிற அடைக்கலஜெபம் என்று பெயர். அந்த ஜெபம் செய்கிறது எப்போதென்றால், எந்தக் காரியத்தையாகிலும் குறித்து, அதை தேவன் நமக்குக் கொடுப்பாரோ கொடுக்கமாட்டாரோ என்று நிச்சயம்தெரியாதபோது. நமது தினசரி ஜீவியத்தில் எண்ணிமுடியாத காரியங்கள் நமக்குத் திடீர் திடீரெனக் குறுக்கிடும். அவைகளைப்பற்றி நமக்குண்டாகிற விருப்பங்களை நாம் பிள்ளைக்கொத்த நம்பிக்கையாய்ப் பிதாவுக்குத் தெரிவித்து, அவர் தமக்கு உசிதமாய்த் தோன்றுகிறபடி அவைகளை நமக்குக் கொடுக்கவாவது கொடாமலிருக்கவாவது அவர் பொறுப்பாய் விட்டுவிடவேண்டும். ஆனால் இன்றையப்பாடத்தில் இயேசு விசுவாசஜெபத்தைப்பற்றிப் பேசுகிறார். இது வேறே, முன்சொன்ன அடைக்கலஜெபம் வேறே. விசுவாச ஜெபம் அடைக்கலஜெபத்தைவிட உயர்ந்த ஜெபம். நாம் நமது ஆண்டவர் காரியமாய்ப் பெரிய வேலை செய்யும்போதாவது, நமது காரியமாய் அனுதினமும் சிறிய வேலை செய்யும்போதாவது, நாம் எவைகளைக் கேட்டாலும் தருவதாய் வாக்களித்திருக்கிறபிரகாரமே பிதா நமக்குச் செய்யவேண்டும் என்று உறுதியாய்ப் பிடிக்கிற விசுவாசத்தினால் நாம் அவரை மகிமைப்படுத்துவதுபோல் வேறெவ்விதமும் நாம் அவரை மகிமைப்படுத்த முடியாது என்று நம்முடைய ஆத்துமாவுக்கு வெளிச்சமாய்த் தெரியும். அப்போது, நாம் கேட்டது கேட்டபடிக்கே பலிக்கும் என்கிற நிச்சயத்தை தேவாவியானவர் நமது உள்ளத்தில் மூட்டுவார். இப்படிப் பக்குவப்பட்டிருக்கிற நிலைமையை அடைந்திருக்கிற நமது ஆத்துமா தேவனுடைய வாக்குத்தத்தத்தை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு அதிலேயே நிற்கும். அப்படி நிற்கும்போது, அது கேட்டதே அதற்குக் கிடைக்கிறது என்பதை சுய அநுபவத்தால் மயக்கமறத் தீர்க்கமாய் அறிந்துகொள்ளும். இந்த உண்மையை எவ்வளவு தெளிவாய் 23-ம் வசனத்தில் நமதாண்டவர் நமக்கு விளங்கவைக்கிறார், பார்: "எவனாகிலும் தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில்

சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே
ஆகும்." இதுதான் விசுவாச ஜெபத்திற்குக் கிடைக்கிற பலன்.
இதைப்பற்றியே இரட்சகர் நமக்கு இங்கே போதிக்கிறார்.

"பெற்றுக்கொண்டோம் (எங்களுக்குக் கிடைத்துவிட்
டது) என்று விசுவாசியுங்கள்." இதுவே இந்தப் பாடத்தில்
அதிமுக்கியமான சொல். இதன் பொருள் பெரும்பாலும்
தப்பாய் உணரப்படுகிறது. ஜெபம் பண்ணிக்கொண்டிருக்
கும்போதே, நீ எந்தப் பொருள் வேண்டும் என்று குறித்து
ஜெபிக்கிறையோ அந்தப் பொருளே உனக்குக் கிடைத்து
விட்டது என்று விசுவாசி! அந்தப் பொருள் உன் அநுபவத்
திற்குக் கிடைக்க, அதாவது, உனக்கு அகப்பட்டுவிட்டது
என்று விசுவாசத்தின் மூலமாய் நீ நிச்சயமறிந்துகொண்ட
பொருள் உள்ளபடிக்கு உன் கண்ணுக்கு அகப்பட ஒரு
வேளை இன்னும் சிறிதுநேரம் பிடிக்கும். ஆயினும்,
நீ அதைக் கண்ணாரக் காணாதிருந்தும், அது பரலோகத்
தில் இருக்கிற உன் பிதாவினால் உனக்குக் கொடுக்கப்பட்
டாயிற்று என்று நீ விசுவாசிக்கவேண்டும். ஜெபம்பண்ணி
அதற்கு உத்தரவு வாங்கிக்கொள்ளுதல் எதுபோலிருக்கிற
தென்றால், நாம் இயேசுவையும் பாவமன்னிப்பையும் வாங்கிக்
கொள்ளுதல்போலிருக்கிறது. அதாவது, ஆவிக்குரிய பொ
ருளாகிய ஏதேனும் ஞானநன்மையை எப்படி வாங்கிக்கொள்
வோமோ அப்படித்தான் அதையும் வாங்கிக்கொள்வோம்.
ஆவிக்குரிய ஒரு ஞானநன்மையை நாம் எப்படி வாங்கிக்
கொள்ளுகிறோமென்றால், அதை நாம் வாங்கிக்கொண்டதைக்
குறித்து நமது கண் காது முதலிய உறுப்புகள் நமக்கு உணர்
வூட்டி நிச்சயமுண்டாக்காதிருந்தும், அது நமக்குக் கிடைத்
தேயிருக்கிறதென்று நாம் விசுவாசித்து நிச்சயமடைகிறோம்.
எனக்குப் பாவமன்னிப்பு வேண்டுமென்று நான் மன்றாடும்
போது, பரலோகத்திலிருக்கிற இயேசு எனக்கென்று இருக்
கிறார் என்று விசுவாசிக்கிறேன். அப்படி விசுவாசிக்கிற
செய்கையினாலேயே நான் அவரை என்பொருளாக வாங்
கிக்கொள்ளுகிறேன். அதுபோலவே, திருவசனத்திற்குப்
பொருந்தினபிரகாரம் நான் ஒரு பொருளைக்குறித்து ஜெபிக்
கும்போது நான் கருதின பொருள் எனக்குக் கிடைத்து



விட்டது என்று விசுவாசிக்கிறேன். அது இனி என்
பொருளே யென்று விசுவாசிக்கிறேன்; அதை இப்போது என்
மாமிசக்கையால் தொட்டு வாங்கிக்கொள்ளாவிட்டாலும்,
என் விசுவாசக்கையால் தொட்டு வாங்கிக்கொண்டேன் என்
பது நிச்சயம். அது இனி என் பொருளே என்கிற நிச்ச
யத்தை மனதில் வைத்துக்கொண்டு, அது எனக்குக் கிடைத்
திருப்பதற்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். "நாம்
எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று
நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்ட
வைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்."

அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். அதா
வது, நாம் விசுவாசத்தினால் தேவலோகத்தில் வாங்கிவைத்
திருக்கிற பொருள் இனி இப்பூவுலகில் அநுபவிக்கக்கிடைக்
கிற பொருளாகும். நமது ஜெபம் பலித்திருக்கிறது, நாம்
கேட்டது கிடைத்துவிட்டது என்னும் நிச்சயம் நம்முள்ளத்
தில் பிறந்தபிற்பாடும் நாம் இன்னும் அதற்காக ஜெபிப்பது
அவசியமா? அப்படி ஜெபிப்பது அவசியமல்லாத திருஷ்
டாந்தங்கள் இருக்கின்றன. அந்தத் திருஷ்டாந்தங்களில்
என்ன பார்க்கிறோமென்றால், விசுவாசத்தின் கையில் கிடைத்
திருக்கிற பொருள் இன்னும் அநுபவத்தின் கைக்கு எட்டாம
லிருந்தாலும், அது கிடைத்தே யிருக்கிறதென்கிற நிச்சயத்
துடன் ஸ்தோத்திரம் செலுத்திக்கொண்டிருந்தால், அப்படி
ஸ்தோத்திரம் செலுத்திக்கொண்டிருக்கும்போதே அது தேவ
லோகத்திலிருந்து புவிக்கு இறங்கி வந்துவிட்டதைப் பார்க்
கிறோம். கேட்டதை வாங்கிக்கொண்ட விசுவாசமானது
ஊக்கமும் விடாமுயற்சியுமுள்ள ஜெபத்தினால் இன்னும் புட
மிடப்பட்டுத் தேறவேண்டியதாயிருந்த வேறு திருஷ்டாந்தங்
களும் இருக்கின்றன. நமது விசுவாசத்திற்கு அருளப்
பட்ட பொருள் நமது அநுபவத்திற்கு அருளப்படும் முன்
இன்னும் என்னென்ன பக்குவங்கள் நமது அக்கம்பக்கத்
திலும் நம்முள்ளத்திலும் நடக்கவேண்டுமென்பது தேவன்
ஒருவருக்கே தெரியும். மழை அருளப்படும் என்று எலி
யாவுக்குச் சந்தேகமறத் தெரிந்திருந்தது. மழையைக்
கொடுப்பேன் என்று தேவன் தாமே அவருக்குத் திருவாக்

கருளியிருந்தார். அப்படியிருந்தும் அவர் அதற்காக இன்னம் ஏழுவிசை ஜெபிக்க நேர்ந்தது. அவர் அவ்விதம் ஜெபித்தது வேஷமும் விளையாட்டும் அல்ல. புழுதியில் கிடந்து வேண்டின அவருள்ளத்திலே சொல்வதற்கரிய ஜெபாக்கினி மூண்டு எரிந்தது. அப்பேர்ப்பட்ட ஜெபம் உள்வீடில்லாத வெறும் போலிஜெபமாகுமா? அந்த ஜெபத்திலே இருந்த பேரனல்கூடிய உள்வீடு என்னவென்று அவருள்ளத்திற்குத் தெரியும், அது போய் வீரியத்தோடு வேலை செய்த தேவலோகத்திற்கும் தெரியும். தேவன் நமக்குத் தர "வாக்குத்தத்தம் செய்திருக்கிற நன்மைகளை நாம் விசுவாசத்தினாலும் நீடியபொறுமையினாலும், சுதந்தரித்துக் கொள்ளுகிறோம்." நான் கேட்டது எனக்குக் கிடைத்திருக்கிறது என்று நம்புகிற விசுவாசம் முழு நிச்சயமுள்ளதாய்ப் பேசும். நீடியபொறுமை தேவலோகத்தில் கொடுக்கப்பட்ட பொருளை பூமியிலே கண்ணாரக் காணுமட்டும் விடாப்பிடியாய் ஜெபிக்கும். "பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள், அப்போது அவைகள் உங்களுக்கு உண்டாகும்." தேவலோகத்தில் பெற்றுக்கொண்டதற்கும் பூமியிலே அநுபவிக்கப் பெறுவதற்கும் இடையில் விசுவாசித்துக்கொண்டேயிருங்கள். விசுவாசம்பொருந்திய ஸ்தோத்திர ஜெபமே நாம் அங்கே பெற்றுக்கொண்டதை இங்கே பெறுகிறதற்கு இடையில் கிடக்கிற சங்கிலி.

இன்னும் ஒன்று நம்மனதில் இருக்கவேண்டும். ஏதுவென்றால், இதைச் சொன்னவர் இயேசு என்பதே. தேவலோகம் நமக்கு இப்படித் திறந்திருப்பதையும், அங்கே தெய்வாசனத்தில் வீற்றிருக்கிற பிதா நாம் விசுவாசித்துக் கேட்பதையெல்லாம் தர மனமுள்ளவராய்க் காத்திருப்பதையும் நாம் பார்க்கும்போது, நமக்கிருக்கிற இப்பேர்ப்பட்ட உரிமையை இதுவரையில் அநுபவிக்காமல் விட்டதற்காக வெட்கமும், நமது கைக்கு எட்டக்கூடியதாயிருக்கிற அந்தச் சிலாக்கியத்தை விசுவாச பலம் போதாமையால் இனியும் அநுபவிக்காமல் இழந்துவிடுவோமோ என்னும் அச்சமும் நமது உள்ளத்தைப் பிடிக்கும். ஆயினும் இதுவிஷயத்தில் நாம் தொய்ந்துபோகாமல் உறுதியும் நல்ல நம்பிக்கையுமுள்ளவர்



களாயிருப்பதற்கு ஒரு காரணமிருக்கிறது. ஏதுவென்றால், பிதாவிடத்திலிருந்து நமக்கு இந்த நற்செய்தியைக் கொண்டுவந்திருக்கிறவர் இயேசு என்று நினைக்கும் நினைப்பு. அவர் தாமே பூலோகவாசியாய் இருந்தகாலத்தில் விசுவாச ஜீவியமாகிய ஜெபஜீவியம் செய்தவர். அவர் அத்திமரத்திற்குச் செய்ததைக் கண்டு அவருடைய சீஷர்கள் பிரமித்தவேளையில், தாம் செய்த அதேமாதிரி ஜீவியம் அவர்களும் செய்யலாகும் என்றும், அத்திமரத்திற்கு மாத்திரமேயல்ல அசலமாகிய மலைக்குக் கற்பித்தாலும் அது அவர்கள் ஆணைக்குக் கீழ்ப்படியவேண்டும் என்றும் உபதேசித்தார். அவரே நமக்கு ஜீவன். அவர் பூலோகவாசியாயிருந்த காலத்தில் அவருக்கிருந்த பெருமைகளெல்லாம் இப்போது அவர் நமக்குள் வாசஞ்செய்யும் காலத்திலும் அவருக்கு இருக்கிறது. அவர் நமக்கு எது கிடைக்கும் என்று போதிக்கிறாரோ அதையெல்லாம் தப்பாமல் அவரே நமக்குக் கொடுப்பார். அவரே நமக்கு விசுவாசத்தை உற்பத்தி பண்ணுகிறவர். அவரே அதைப் பூரண பக்குவமுள்ளதாக்குகிறவர். விசுவாச காரணராகிய தேவாவியை நமக்கு அருளுகிறவர் அவரே. ஆதலால், இங்கே நாம் படித்த இப்பேர்ப்பட்ட விசுவாசம் நமக்குக் கிடைக்கக்கூடியதல்ல என்னும் அச்சத்தை ஒழித்துவிடுவோமாக. அது பிதாவினுடைய பிள்ளைகள் யாவரோ அவர்களுக்கெல்லாம் கிடைக்கக்கூடியது. பிள்ளைக்கடுத்த சிந்தைபூண்டு, பிதாவின் வாய்ச்சொல்லையும் வல்லபத்தையும் நம்பி, எவனெவன் தன்னைப் பிதாவின் இஷ்டத்திற்கும் அன்பிற்கும் கையளித்துவிடுகிறானோ அவனவன் அதைத் தப்பாமல் அடைந்துகொள்வான். நேசமுள்ள உடன்கிறிஸ்தவனே! இந்த வாக்கை நமக்குத் தந்தவர் பிதாவுக்குக் குமாரனும் நமக்குச் சகோதரனுமாயிருக்கிற இயேசு என்னும் நினைப்பு நமக்குத் துணிவு உண்டாக்கக்கடவது. நாம் அவரைப் பார்த்து: "இன்பமான ஆண்டவரே! நீர் சொன்ன வாக்கை நாங்கள் நம்பி விசுவாசமாயிருக்கிறோம், நாங்கள் கேட்டது எங்களுக்குக் கிடைக்கிறது என்று விசுவாசிக்கிறோம்" என்று சொல்வோமாக.

### "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! நீர் பிதாவினிடத்திலிருந்து எங்களுக்கு அவருடைய அன்பையும் அவருடைய அன்பு எங்களுக்குக் கொடுக்க வைத்திருக்கும் சகல ஆஸ்திகளையும் வெளிப்படுத்தப் புறப்பட்டு வந்தீர். தேவரீர் இன்றைக்கு மறுபடியும் ஜெபஉலகத்தின் கதவுகளை எங்களுக்கு விரிவாய்த் திறந்து, ஜெபத்தில் நாங்கள் எதையும் தங்குதடையில்லாமல் கேட்கலாம் என்று வாக்கருளியிருக்கிறீர். ஆயினும், எங்கள் ஏழை உள்ளங்கள் அதை உள்ளபடிக்கு உட்கொள்ளவில்லையென்று வெட்கப்படுகிறோம். அது மகா பெரிய வாக்காயிருப்பதினால், அதை விசுவாசிப்பது எங்கள் சக்திக்கு மிஞ்சினதாயிருக்கிறது.

கர்த்தாவே, "நீங்கள் எவைகளைக் கேட்டாலும் அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்" என்று உமது திருவாய் மொழிந்த அருமை வாக்கை நாங்கள் ஏற்றுக்கொண்டு, காப்பாற்றி, உபயோகிக்க நீரே வழிகாட்டுவீர் என்று நாங்கள் உம்மைத்தான் நம்பியிருக்கிறோம். இன்பமான இயேசுவே! எங்கள் விசுவாசம் வளர்வதற்கு அது உம்மிலே முளைத்து உம்மிலே வேர்பற்றியிருக்கவேண்டியது. நீர் எங்கள்நிமித்தம் செய்த கிரியை எங்களைப் பாவத்தின் வல்லமையிலிருந்து முழுமையும் விடுதலையாக்கி, பிதாவினிடத்தில் நாங்கள் நெருங்கிச்சேர எங்களுக்கு வழிதிறந்து வைத்திருக்கிறது. பூரண விசுவாசமும் பூரண தைரியமுமுள்ள ஜீவியத்திற்குள் நாங்கள் வந்து பிழைக்க உமது ஆவியானவர் ஓயாமல் எங்கள் உள்ளங்களை உயர இழுத்துப் பரவசமாக்கிக்கொண்டேயிருக்கிறார். நீர் எங்களைப் போதிக்கப் போதிக்க நாங்கள் விசுவாச ஜெபம் செய்யக் கற்றுக்கொள்வோம். இந்த நிச்சயம் எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் கேட்டது கிடைக்கும் என்று விசுவாசித்து ஜெபிக்கவும், நாங்கள் கேட்டது எதுவோ அது எங்களுக்கு வாஸ்தவமாகவே கிடைத்திருக்கிறது என்று விசுவாசிக்கவும் நீர் எங்களை வரவரப் பழக்கிவிடுவீர். ஆண்டவரே! என் ஜெபங்களெல்லாம் உமக்குள்ளே உற்பத்தியாகி உமக்குள்ளே தேவ



சமுகத்திற்கு வரவும், என் ஜெபம் பலித்தது என்னும் நிச்சயம் உமக்குள்ளேயே என் ஆத்துமாவிற்குக் கிடைக்கவும் தக்கதாய் நான் உம்மை அறிந்து, நம்பி, நேசித்து, உமக்குள் பிழைத்து நிலைத்திருக்க எனக்குக் கற்றுக்கொடுப்பீராக. ஆமென்.

## பன்னிரண்டாம் பாடம்.

### 'தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்'

அல்லது,

### விசுவாச ஜெப இரகசியம்.

"இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்; எவனாகிலும் தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணி எவைகளைக் கேட்டாலும் அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்." (மாற். 11. 22–24.)

நமது ஜெபம் நாம் கேட்டபடி பலிக்கும் என்று நேற்றைப்பாடத்தில் படித்தது வேதத்திலிருக்கிற மகா ஆச்சரியமான திருவாக்குத்தத்தங்களுள் ஒன்று. இது செவியில் விழுந்தவுடன் கேட்டதெல்லாம் கிடைக்கிறது என்று அறிகிற விசுவாசம் எனக்கு வருவதற்கு வழி என்ன? என்று அநேகருடைய உள்ளத்தில் கேள்வி பிறக்கும்.

இந்தக் கேள்விக்குத்தான் நமதாண்டவர் இன்றைக்கு உத்தரவு சொல்ல விரும்புகிறார். சீஷருக்கு அவர் அந்த ஆச்சரியமான வாக்குக் கொடுக்குமுன் அவர் வேறொரு வார்த்தை சொன்னார். அதிலே ஜெபம் பலிக்கும் என்று நம்புகிற விசுவாசத்திற்கு உற்பத்தியையும் ஓயாபலத்தையும் தருகிற இடத்தை அவர் காட்டுகிறார். தேவனிடத்

தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள்: இந்த வார்த்தை ஜெபத்திற்கு உத்தரவு நிச்சயம் என்று விசுவாசியுங்கள் என்கிற வார்த்தைக்குமுன் வருகிறது. வாக்குக் கொடுக்கிறவர் நம்பத்தக்கவர் என்று கண்டால்மாத்திரமே அவர் வாக்கை நம்ப நமக்கு உறுதிவரும். ஆளை நம்புகிற நம்பிக்கைமாத்திரமே அந்தஆள் கொடுத்த வாக்கை நம்புகிற நம்பிக்கையைப் பிறப்பிக்கும்: தேவனோடு நேர் நேரே உறவாடி, நேசித்துப் பழகிப் பிழைக்கும் ஜீவியம் நமக்குக் கைவரக் கைவர—அவருடைய திருச்சந்நிதானம் வெளிப்படும் இடத்திற்குப் போய் அங்கே நடைபெறுகிற அவருடைய பெரிய வல்லமைகளுக்கு நமது உள்ளத்தை யெல்லாம் ஓயாமல் திறந்துவைத்துப் பழகப்பழக—நமக்கு வேண்டும் பொருள் தேவனேதவிர வேறில்லையென்று உணர்ந்து, அவரைமாத்திரமே நமக்கு இன்பபொருளாய்த் தேடுந் தேட்டம் நமக்குச் சித்திக்கச் சித்திக்க—அவரை நாம் எதுகேட்டாலும் கொடுப்பார் என்று விசுவாசிக்கிற சக்தி நமக்குண்டாகும்.

தேவனிடத்தில் நம்பிக்கை யுண்டானால்மாத்திரமே அவருடைய வாக்கில் நம்பிக்கை யுண்டாகும். நாம் தேவனில் வைக்கிற விசுவாசத்திற்கும் அவருடைய வாக்கில் வைக்கிற விசுவாசத்திற்கும் உள்ள சம்பந்தம் இலேசாய் விளங்குவதற்கு விசுவாசத்தின் இலக்ஷணம் நமக்குத் தெரியவேண்டும். தேவன் நமக்குக் கொடுக்கிற நன்மையை வாங்கிக்கொள்ளுகிற கை, ஏற்றுப்புசிக்கிற வாய், என்று விசுவாசத்தை கைக்கும் வாய்க்கும் உவமிப்பது பெரும்பாலும் நமக்கு வழக்கம். தேவன் சொன்ன வாக்கை நேரில் கேட்கிற காது, அவர் கைநீட்டிக் கொடுக்கிற நன்மையை நேரில் பார்க்கிற கண் விசுவாசம் என்று நாம் அறிந்திருப்பது இன்னும் அதிகப் பிரயோஜனமாயிருக்கும். இப்படி அறிந்திருந்தால்மாத்திரம் வாங்கிக்கொள்ள நமக்குத் திராணி வரும். எனக்கு வாக்குக் கொடுக்கிறவர் பேச்சை நானே நேரில் கேட்கவேண்டும்; அவர் வாய்ச்சத்தம் கேட்பதே அவர் சொல்லில் விசுவாசம் வைக்க எனக்குத் தைரியம் உண்டாக்கும். மேலும், அவரை என் கண்ணால் பார்க்க



வும் வேண்டும்; அவருடைய கண்ணிலும் முகத்திலும் இலங்குகிற அருள் அவர் சொன்னபடி எனக்குத்தர நான் அவரைக் கேட்கலாமோ கேட்கலாகாதோ என்கிற அச்சத்தை முழுவதும் ஓட்டிவிடும். வாக்குக் கொடுக்கிறவரை மதிக்கிற மதிப்பினால் அவருடைய வாக்கை மதிக்கிற மதிப்பு வரும். வாக்குக் கொடுக்கிறவர் எப்பேர்ப்பட்டவர் என்று எனக்குத் தெரிந்தால், அவர் வாக்கு எப்பேர்ப்பட்டது என்று எனக்குத் தெரியும்; அதற்குத் தக்கபடி நான் அதில் வைக்கிற விசுவாசமும் இருக்கும்.

இதையிட்டே இயேசு ஜெபத்தைப்பற்றிய அந்த ஆச்சரியமான வாக்கைத் தெரிவிக்குமுன், **தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள்** என்கிற சொல்லை முந்திச் சொல்லுகிறார். அதாவது, ஜீவனுள்ள தேவனைப் பார்ப்பதற்கு உன் கண்ணை திறந்துவைத்துக்கொண்டு, காணரிய பரம்பொருளாகிய அவரையே கண்கொள்ளாத காட்சியாய் ஓயாமல் பார்த்துக்கொண்டிரு. எதிரேயிருக்கிற இனிய காட்சியைக் கண்மாறாமல் பார்த்து ஆநந்திப்பதினாலேதான் ஒருவன் அதன் மயக்கத்தில் சிக்கி அகப்பட்டுப் போவான். கண்ணுக்கினிய அந்தப் பொருள் மனதை மயக்குகிற தன் சக்தியால் அவனுடைய உள்ளத்திற்குள் புகுந்து அதிலே தன் அழகிய ரூபத்தைப் பதித்து வைப்பதற்கு அவன் பிரியத்துடன் சம்மதிக்கிறான். நாம் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருப்பதும் அதுபோன்றதே. தேவனுடைய சமூகம் நமக்கு அகப்படுவதற்கு எவ்வளவு நேரமானாலும் சலிக்காமல் காத்திருந்து, அது அகப்பட்டபின் அதன் திவ்விய இலட்சணங்களெல்லாம் பதிவதற்கு நம்முள்ளத்தை அதின் வசப்படுத்திவிட்டு, நாம் நமக்குக் காட்சியருளின தேவன்மேல் கசிந்த அன்புடைய நெஞ்சத்தினராய் அவரை அவருடைய சுயரூப மகத்துவத்தில் தரிசித்துக்கொண்டிருப்பதே நாம் அவரில் விசுவாசமுள்ளவர்களா யிருப்பதாம். அதாவது, தேவனுடைய அன்பாகிய தேனருவி ஓயாமல் பாய்ந்துகொண்டேயிருக்க அதை வாங்கி உண்பதற்குத் திறந்திருக்கிற உள்ளத்தின் இயல்பே விசுவாசமாம். தேவன் தமது சுயரூபமகத்துவத்தையும் தமது கிரியையையும் காட்

டுவதற்கு நம்முள்ளத்தில் முளைத்த நேத்திரமே விசுவாசம். இந்த விசுவாசக்கண்மூலியமாய் தேவனுடைய சமுகத்தின் வெளிச்சமும் அவருடைய சர்வவல்லமை செய்கிற செயல்களும் நம்முள்ளத்திற்குள் பட்டு அதற்குப் புலப்படும். ஒருவன் கண்ணால் கண்டு உள்ளத்தால் உணர்ந்துகொண்டது இனி அவனுக்குள் இருக்கிறதென்னலாம். அதுபோலவே, ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகும்போது இனி அவர் அவனுக்குள் இருக்கிறார்.

விசுவாசம் நமது ஆத்துமாவின் காதாயும் இருக்கிறது. அதன் மூலமாய் தேவனுடைய சத்தம் நமது ஆத்துமாவில் விழுந்துகொண்டேயிருக்கும். அந்தச் சத்தம் கேட்டு நாமும் அவருடன் பேசிக்கொண்டேயிருப்போம். பிதா தமது பரிசுத்த ஆவியால் நம்முடன் பேசுவார். தேவஆவியே தேவனுடைய ஜீவனுள்ள சப்தம். தேவனுடைய பிள்ளைக்கு வழிகாட்டி அழைத்துக்கொண்டு போவதற்கு இந்த ஜீவசப்தம் அவசியம். எது பேசலாம், எது செய்யலாம் என்று இயேசுவுக்குப் போதித்ததாகிய இந்த தேவலோகத்து இரகசிய சப்தமே இப்போதுகூட தேவனுடைய பிள்ளைக்குப் போதிக்க வேண்டும். தேவனுடைய சப்தம் கேட்பதற்குத் திறந்திருக்கிற காது, அதாவது, தேவன் சொல்வதைக் கேட்க ஆவல் கொண்டு காத்திருக்கிற விசுவாசமுள்ள இருதயம், தப்பாமல் தேவன் பேசுகிற பேச்சைக் கேட்கும். அப்போது, தேவன் சொல்லுகிற சொல் ஒரு புஸ்தகத்திலிருந்து வாசிக்கப்படுகிற வார்த்தை மாத்திரமாக நின்றுவிடாமல், தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு ஆவியும் உண்மையும் ஜீவனும் வல்லமையுமா யிருக்கும். புஸ்தகத்தில் படித்து ஞாபகத்தில் நினைவாகுமாத்திரமிருந்த அந்தச் சொல் இனிச் செய்கையும் ஜீவ அநுபவமுமாய் இருக்கும். இப்படித் திறக்கப்பட்டிருக்கிற காது நமக்கு இருந்தால், நமது ஆத்துமா தேவனுடைய ஜீவனும் தேவனுடைய வல்லமையும் கிடைக்கிற இடத்திலேயே ஆசையாய்த் தரித்திருக்கும். உலகத்தில் ஒருவன் எனக்குச் சொன்ன சொல் என் மனதிற்குள் பிரவேசித்து, அங்கேயே இருந்துகொண்டு வேலைசெய்யுமல்லவா? அதுபோலவே விசு



வாசத்தின் மூலமாய் தேவன் நமது இருதயத்திற்குள் வந்திருந்துகொண்டு அங்கே வேலைசெய்வார்.

விசுவாசம் நமக்குக் கண்ணும் காதுமாயிருந்து, தேவனுடைய திருமுகத்தைப் பார்க்கவும் அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும் நமக்கு ஒரு உட்பொறிபோல் உதவத் துவக்கின பிற்பாடு, அது இனி தேவனையும் அவர் தரும் நன்மைகளையும் வாங்கிப் புசிப்பதற்கு ஏதுவாகிய கையாயும் வாயாயும் நமக்குச் செம்மையாய் உபயோகப்படும். ஞானக்கண்ணால் கண்டு ஞானக்காதால் கேட்டு ஞானகாரியங்களை நாம் அறிந்துகொள்ளுகிற அளவுக்குத் தக்கபடியே நாம் ஞான நன்மைகளை வாங்கி அநுபவிக்கிற சக்தியும் நமக்கிருக்கும். விசுவாசமுள்ள ஜெபத்தைத் தேவன் கேட்பார் என்னும் வாக்கைப் பிரசித்தப்படுத்துமுன் "தேவனில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள்" என்னும் செவிலே இயேசு சொன்னதற்குக் காரணம் இதுதான். ஒருவன் தன்னைப் பிடித்து தேவனுக்கு வசப்படுத்திவிடுதலே விசுவாசம். நான் ஓயாமல் காதாரக் கேட்டுக்கொண்டேயிருக்கிற தெய்விக இன்சொல்லின் வல்லமைக்கு என்னைப் பிடித்து ஒப்புவித்தலே விசுவாசம். விசுவாசத்தினால் நான் என்னையே ஜீவனுள்ள தேவனுக்குக் கொடுத்துவிடுகிறேன். அவருடைய திவ்விய மகத்துவமும் அவருடைய இனிய அன்பும் என்னுள்ளத்தில் வந்து நிறைந்து, இனி என்னை என் வசத்திலிருந்து பிரித்து, தம் வசப்படுத்திக்கொள்ளுகின்றது. விசுவாசம் அன்புள்ள இருவருள்ளத்திற்கிருக்கிற நேச உறவு: என்மேல் அன்புடைய நண்பன் எனக்கு ஒரு வாக்குக்கொடுத்தால் அவன் அதைச் செய்வான் என்று நம்பி அவனோடு உறவாடுவேன். அந்த வாக்கு அவனையும் என்னையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டுகிற நேசக்கட்டாயிருக்கும். தேவனை எப்போதும் கண்ணால் கண்டு காதால் கேட்டுக்கொண்டேயிருக்கிற விசுவாசத்தி னுதவியால் இந்தமாதிரி ஜீவனுள்ள நேச உறவு நமக்கும் தேவனுக்கும் ஏற்பட்டால்மாத்திரம் அவர் நமது ஜெபத்திற்குக் கொடுத்திருக்கிற வாக்கை நம்புவது நமக்கு இயற்கையும் லேசுமாகும். வாக்குக்கொடுத்தவரை நம்பினாலன்றி அவருடைய வாக்கை நம்ப மனம்வராது. விசு

வாசமுள்ள ஜெபம் விசுவாசமுள்ள ஜீவியத்திலே முளைக்கும்.
ஆகையால் பலிக்கும் ஜெபம்செய்கிற விசுவாசம் தேவனே நம
க்குக் கொடுக்கும் கொடை என்பது தெளிவு. அவர் நமக்கு
விசுவாசம் அளிப்பது ஒரு பண்டத்தை நமது கையில்
கொடுப்பதுபோலவாகிலும் ஒரு பதார்த்தத்தை நாம் நீட்டு
கிற பாத்திரத்தில் வைப்பதுபோலவாகிலும் இருக்கிறதில்லை.
நாம் அவருடனே செய்கிற இன்பஜீவிய ஐக்கியத்தினால் விசு
வாசம் நமது ஆத்துமாவுக்குள் ஒரு இன்பமான சுபாவம்
போலவும் ஒரு உவப்பான பழக்கம்போலவும் உற்பத்தி
யாக்கப்படும். இதுதான் தேவன் நமக்கு விசுவாசம் கொடுக்
கிற உண்மையான வழி. இப்படித்தான் விசுவாசம் நமக்குள்
பிறந்து வளரும்.

பரமபிதா தம்முடன் இடைவிடாமல் ஐக்கியம் செய்து
கொண்டிருக்கிற தமது பிள்ளைகளின் இஷ்டப்படி செய்ய
வாக்களித்திருப்பதை நம்புவது அவருடன் சதா நேச உற
வாடி அவருடைய இன்பமான குணத்தைச் செம்மை
யாய் அறிந்திருக்கிறவனுக்குக் கொஞ்சமேனும் வருத்தமா
யிராது.

விசுவாசஜீவியம் இருந்தால்மாத்திரம் விசுவாசஜெபம்
பிறக்கும் என்று அநேகருக்குத் தெரிகிறதில்லை. இதினால்,
ஜெபத்திற்கு இருக்கிற வல்லமையை அநுபவிப்பது அவர்
களுக்கு வெகு மட்டாயிருக்கிறது. தேவனிடத்திலிருந்து
உத்தரவு வரவேண்டுமென்று உட்கருத்தான ஆவல் அவர்
களுக்குள் பிறக்கும்போது, அவர்கள் தங்கள் உள்ளத்தை
யெல்லாம் அவருடைய வாக்குத்தத்தத்தின்மேல் கூட்டி,
தங்கள் முழு விசுவாசத்தாலும் அந்த வாக்குத்தத்தத்தைப்
பிடித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆகிலும் அதைப் பிடித்
துக்கொள்ள அவர்களுக்குச் சக்தியிருக்கிறதில்லை. எப்படி
யாகிலும் அதைப் பிடித்துக்கொள்ள வருந்தி வருந்தி யுழைத்
தும், வீணாய்ப்போனவிட்டால் இனிக் காரியமில்லையென்று நம்
பிக்கையை இழந்துவிடுகிறார்கள். தேவ வாக்குத்தத்தம்
பொய்யாயிற்றா? இல்லவேயில்லை. நடந்ததென்னவென்றால்,
அதை எட்டிப் பிடித்துக்கொள்வதற்கு அவர்களுடைய விசு
வாசத்திற்கு உயரம் போதவில்லை. இயேசு இன்றைக்குச்

67



சொல்லித்தருகிற பாடத்தைக் காதுகொடுத்துக் கேள்:
"தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள்." ஜீவ
னுள்ள தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள்.
உங்கள் விசுவாசம் தேவன் வாக்குத்தத்த பொருளையல்ல,
தேவனையே பிடித்துக்கொண்டு உறுதியாயிருக்கட்டும். அப்
போது அவருடைய அன்பும் அவருடைய வல்லமையும்
அவருடைய ஜீவனுள்ள முகதரிசனமும் அவர் வாக்குத்தத்தம்
பண்ணினதைப் பெற்றுக்கொள்ளுகிற விசுவாசத்தை உங்க
ளுக்குள் உண்டாக்கிவிடும். ஒருவன் ஒரு வயித்தியனிடத்
தில் போய் ஐயா, என் கையால் எதை எடுத்தாலும் அதைப்
பிடித்துக்கொள்ளமாட்டாமல் கை நடுங்குகிறது, இந்தக் கைப்
பலவீனம்தீர எனக்கு ஒரு மருந்துகொடும் என்று கேட்டால்,
அதற்கு அந்த வயித்தியன்: உன் முழு உடம்பும் துர்ப்பலமா
யிருக்கிறது. ஆகலால், உன் கையைமாத்திரமல்ல, உன்
முழு தேகத்தையும் வலுப்படுத்துகிற மருந்து நீ சாப்பிட
வேண்டும். அப்போது உன் கைப் பலவீனம் தானாய் நீங்கும்
என்று சொல்வானல்லவா? இதுபோலவே, ஒருவனுக்கு விசு
வாசப் பலவீனம் இருந்தால், அது தீர்வதற்கு மருந்து அவன்
தேவனோடு நேச உறவாடி தன் முழு ஞானஜீவனையும் பலப்
படுத்திக்கொள்வதேதவிர வேறில்லை. தேவனிடத்தில் விசு
வாசமாயிருக்கக் கற்றுக்கொள், தேவனையே விடாப்பிடியாய்ப்
பிடிக்கப் படி, உன் ஜீவனை தேவன் ஆட்கொள்ளும்படி பழகு.
அப்போது, அவருடைய வாக்குத்தத்தத்தைப் பிடித்துக்
கொள்ள உனக்குச் சக்திவரும். தேவனோடு முகப்பழக்க
மாகி அவரை நம்பக் கற்றுக்கொண்டவனுக்கு அவர் தந்த
வாக்கை நம்புவது எளிதாயிருக்கும்.

இந்த விஷயம் பண்டைக்காலத்துப் பரிசுத்தர்களின்
சரித்திரத்தில் தெளிவாய் அறியக் கிடைக்கும். தடவை
தோறும் தடவைதோறும் அவர்களுடைய விசுவாசம் புதுப்
புது பலத்துடன் பளிரிட்டு விளங்கின தெப்போதென்றால்,
தடவைதோறும் தடவைதோறும் அவர்கள் தேவனைப் புதுப்
புதுத் தெளிவுடன் அறிந்துகொண்டபோது. அதை ஆபிரகா
முடைய சரித்திரத்தில் பார்க்கலாம். கர்த்தருடைய வார்த்தை
ஆபிரகாமுக்கு உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே;

நான் உனக்குக் கேடகமாயிருக்கிறேன் என்றார். அவர் அவனை வெளியே அழைத்து......... உன் சந்ததி இவ்வண்ணமாயிருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான். பின்பு மறுபடியும், "கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வ வல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு.........என்றார். அப்பொழுது ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான். தேவன் அவனோடே பேசி நான் உன்னோடே பண்ணுகிற உடன்படிக்கை இது:........." என்றார். தேவன் அருளின வாக்கு இருதயத்திற்குள் பிரவேசித்து அங்கே விசுவாசத்தை உண்டுபண்ணுகிறதற்கு அதற்கு ஜீவபெலன் ஊட்டினது எதுவென்றால், தேவன் தம்மை மேலும் மேலும் தெளிவாய் வெளிப்படுத்தின வெளிப்படுத்தலே. பண்டைக் காலத்து விசுவாசிகள் தேவன் எப்பேர்ப்பட்டவர் என்று தீர்க்கமா யறிந்திருந்ததினாலே, அவர் சொன்ன வாக்கை நம்பாமலிருப்பது அவர்களுக்குக் கூடாமையாயிருந்தது. தேவனை எவ்வளவுக்கு மதிக்கிறோமோ அவ்வளவுக்குத்தான் அவர் வாக்கையும் மதிப்போம். தேவனுக்கு முன்பாக நடந்துகொண்டு, ஜீவனுள்ள தேவன் தன்னோடே பேசும்போது அவர் சொல் கேட்பதற்கு முகங்குப்புற விழுகிறவன் எவனோ அவனே அவர் திருவாக்கை நம்பி ஏற்றுக்கொள்வான். திருவசனத்தில் தேவன் நமக்கு அருளியிருக்கிற திருவாக்குகள் இருக்கின்றன; அவைகளை நாம் நமக்குத்தான் என்று எடுத்து உபயோகித்துக்கொள்ள நமக்குச் சகல உரிமையும் உண்டு; ஆகிலும், அவைகளை தேவன்தாமே முகமுகமாய் நம்முடைய ஆத்துமாவோடே தமது திருவாயால் பேசினாலன்றி மற்றப்படி அவைகளை எடுத்து நமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு அநுபவிக்க நமக்குச் சக்தி வரவேவராது. அவர் அப்படி முகமுகமாய் யாரோடு பேசுவாரென்றால், யார் அவருக்கு முன்பாக நடந்துகொண்டு அவரோடே சஞ்சரிக்கிறார்களோ அவர்களோடு என்பது சொல்லவேண்டுவதில்லை. ஆதலால், தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். விசுவாசமே உங்களுக்கு ஞானக்கண்ணும் ஞானக்காதுமாயிருக்கவேண்டும்; நீங்கள் உங்கள் ஆத்துமாவை தேவன்



வசம் ஒப்புவிக்கவேண்டும். அவர் அதிலே தமது குணாதிசயங்களின் அச்சைப் பதித்துத் தம்மைப் பூரண தெளிவாய் அதிலே வெளிப்படுத்தி விடவேண்டும். "தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்ற" ஆசையாய்க் காத்திருக்கிற ஜீவனும் சர்வவல்லமையுமுள்ள தேவனாக நீங்கள் தேவனைப் பார்க்கவும், அவர்மேல் நம்பிக்கைவைக்கவும் உங்களைப் பழக்குவதே ஜெபம் உங்களுக்குச் செய்கிற நன்மைகளில் முக்கியமானது என்று எண்ணுங்கள்.

தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை வழங்குவதையும் தம்மையே நமக்குத் தருவதையும் தமக்கு மகிழ்ச்சியாகவுடைய அன்புவடிவமானவர். அப்படியே அவரை நோக்கிப் பாருங்கள். தேவனை நீங்கள் அப்படி விசுவாசித்து அவருக்கு ஆராதனை செய்யக் கற்றுக்கொண்டால்: "நீங்கள் எவைகளைக் கேட்டாலும் அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்" என்னும் திருவாக்கை நம்பிப் பிடித்துக்கொள்ளுகிற வல்லமை சீக்கிரத்தில் தானாய் உங்களுக்கு வந்துவிடும். விசுவாசத்தினால் தேவனையே உங்கள் சொந்தப் பொருளாக்கிக்கொள்ளப் பாருங்கள். அப்போது அவர் திருவாக்கருளினதும் உங்களுக்குச் சொந்தமாய்விடும்.

இயேசு இன்று நமக்குச் சொல்லும் பாடம் வெகு அருமையான பாடம். நாம் தேவனையொதுக்கி அவர் தரும் நன்மைகளைமாத்திரம் அடைந்துகொள்ளப் பார்க்கிறோம். தேவனோ எதையும் நமக்குத் தருவதற்குமுன் தம்மையே நமக்குத் தர விரும்புகிறார். ஜெபத்தைப்பற்றி நம்முள்ளத்திலிருக்கிற நினைப்பு என்னவெனில், அது தேவலோகத்துக்குப் போய் அங்கிருந்து பலபல நன்மைகளை நமக்குக் கொண்டுவருகிற வல்லமை என்பது. இயேசு ஜெபத்தைப்பற்றி நமக்குத் தருகிற நினைவு என்னவெனில், அது நம்மைத் தூக்கி தேவலோகத்துக்குக் கொண்டுபோய்த் தேவசமுகத்தில் விடுகிற வல்லமை என்பது. வாசலுக்கு வெளியே நின்று கூப்பிடுவதே ஜெபம் என்று நாம் நினைத்துக்கொள்ளுகிறோம். இயேசு நம்மைப் பார்த்து: 'அப்படியல்ல, நீங்கள் உட்பிர

வேசித்து, நீங்கள் தேவனுக்குப் பிரியமுள்ள நேசரும் அன்பான பிள்ளைகளுமா யிருக்கிறதை அறிந்துகொள்ளுங்கள்' என்கிறார். இந்தப் பாடத்தை ஏற்றுக்கொண்டு படிப்போமாக. நாம் எத்தனையோதரம் ஜெபிப்பதற்குப் போதுமான விசுவாசபலம் இல்லாமல் தவித்தோம்! இதெல்லாம் நம்மை எதற்குத் தூண்டவேண்டுமென்றால், நாம் முந்தி தேவன்மேலேயே விசுவாசம் வைக்கவும், அப்படி அவர்மேல் விசுவாசம் வைத்து வைத்துப் பழகி அவர் எப்பேர்ப்பட்டவர் என்று அறிந்துகொண்டு, நம்மையே மனமுவந்து அவர் வசமாய்க் கொடுத்துவிடவும் தூண்டவேண்டும். தேவன் வந்து நிறைந்திருக்கிற உள்ளம் எதுவோ அதுவே விசுவாச ஜெபம் செய்கிற வல்லமையால் நிறைந்திருக்கும். தேவன்மேல் நமக்கு நம்பிக்கையிருந்தால் அவர் கொடுத்திருக்கிற திருவாக்கின்மேல் நமக்கு நம்பிக்கை பிறந்து நமது ஜெபம் பலிக்கும் என்கிற உறுதி வரும்.

ஆகையால், தேவனுடைய பிள்ளையே, ஆத்திரப்படாதே, அவசரப்படாதே. அவருடைய முகதரிசனை உனக்குக் கிடைத்து அவருக்குமுன் நீ தலைகுனிந்து வணங்குவதற்கும், பிறகு படிப்படியாய் அவர் தாம் எப்பேர்ப்பட்டவர் என்று தம்மையே உனக்கு வெளிப்படுத்துவதற்கும் எவ்வளவுநேரம் பிடித்தாலும் அதற்குச் சலிக்காமல் அவரண்டையிலேயே பொறுமையாய்க் காத்திரு. உன் ஆத்துமா அளவில்லாத நன்மைச் சொரூபியாகிய அவருடைய சந்நிதானத்தில் பரிசுத்த பக்திவிநயத்துடன் இருந்து இருந்து பழகி, அவரை உள்ளன்பாய்த் தொழுது தொழுது ருசிகண்டு, அவர்மேல் விசுவாசம் வைக்கக் கற்றுக்கொள்வதற்கு எவ்வளவுகாலம் வேண்டுமோ அவ்வளவு காலமும் கொடு. அவர் தம்மையே உன் ஆத்துமாவுக்குத் தித்திப்புள்ள தெள்ளமுதமாகக் கொடுத்து, உன்னை ஆட்கொள்ள ஆட்கொள்ள, உனக்கு அவர்மேலே அத்தியந்த விசுவாசம் உண்டாய்விடும். அதன்பிறகு அந்த விசுவாசத்தின் உச்சியணியாகிய பலிக்கும் ஜெபம் செய்கிற விசுவாசம் தானே உனக்குள் வந்து ஜொலிக்கும்.



“ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.”

ஆ என் தேவனே, நான் உம்மிலே விசுவாசம் வைத்திருக்கிறேன். பிதாவாகிய தேவனே, எல்லையில்லாப் பேரன்பும் எல்லையில்லா வல்லமையும் உடைய பிதாவாக உம்மேல் நான் விசுவாசம் கொண்டிருக்கிறேன். குமாரனாகிய தேவனே, உம்மை என் மீட்பரும் என் ஜீவனுமாகப் பார்த்து உம்மேல் விசுவாசப் பற்றுடையவனாயிருக்கிறேன். பரிசுத்த ஆவியானவரே, உம்மை என் தேற்றரவாளரும், என் வழிகாட்டியும், என் பலமுமாக நம்பி உம்மேல் விசுவாசமுடையவனாயிருக்கிறேன். திரியேக தேவனே, நான் உம்மிலேயே விசுவாசம் வைத்திருக்கிறேன். உமக்கு என்னென்ன குணாதிசயங்களுண்டோ அவையெல்லாம் எனக்கென்றே இருக்கின்றன; நீர் எனக்கு எதெதைத் தர வாக்களித்திருக்கிறீரோ அதை நிச்சயமாகவே எனக்குத் தந்து உமது வாக்கை நிறைவேற்றுவீர். இது எனக்கு உறுதியாய்த் தெரியும்.

கர்த்தராகிய இயேசுவே, இந்த விசுவாசத்தை அதிகரிப்பியும். என் தேவனுக்குள் எனக்காக என்னென்ன இருக்கிறதோ அதையெல்லாம் என் விசுவாசம் எடுத்து அநுபவிக்கக் கற்றுக்கொள்ளும் வரையில் எவ்வளவு காலம் பிடித்தாலும் சலிக்காமல், நான் தேவனுடைய பரிசுத்த சந்நிதானத்தில் காத்திருந்து அவரை ஆராதனைசெய்ய எனக்குப் போதியும். அவரையே என் விசுவாசம் சகல ஜீவனுக்கும் உற்பத்தியும் ஊற்றுமாகப் பார்க்கப்பண்ணும். தமது சித்தத்தில் அவர் யோசித்திருக்கிறதையெல்லாம் உலகத்திலும் என்னிலும் நிறைவேற்றுவிக்க அவர் தமது சர்வவல்லப சக்தியுடன் கிரியை செய்கிறதை என் விசுவாசம் கண்ணுக் [illegible] என் ஆசையைத் தள்ளாமல் அதைத் திருப்திசெய்து கைகூடுவிக்கப் பேராவல்கொண்டு காத்திருக்கிற அவரை அவருடைய அன்புச் சொரூபத்திலே பார்த்து மகிழ என் விசுவாசத்திற்கு அருள்புரியும். அவருடைய அன்பே என் முழு உள்ளத்தையும் என் ஜீவனையும் தனக்கு ஆட்படுத்திக்கொள்ளச்செய்யும். என் விசுவாசத்தினால்

தேவன் எனக்கு ஜீவனும் கதியும் பேறுமாகி, என் உள்ளத்தைத் தமக்குத் திருக்கோயிலாக்கிக்கொண்டு அதிலே வாசம் செய்வாராக. கர்த்தராகிய இயேசுவே, எனக்கு ஒத்தாசை செய்யும்! என் முழு உள்ளத்தாலும் நான் தேவன்மேல் விசுவாசம் வைக்க வாஞ்சிக்கிறேன். தேவன்மேல் வைக்கிற விசுவாசம் என்னில் நிமிஷந்தோறும் நிறைந்திருப்பதாக.

ஆ இன்பமான இரட்சகரே! எங்கள் முழுஜீவியமும் தேவன்மேல் வைக்கிற விசுவாசமா யிருந்தாலொழிய உம்முடைய திருச்சபை உம்மை மகிமைப்படுத்தி, உம்முடைய இராஜ்யம் வருவதற்கு அது அவசியமாய்ச் செய்யவேண்டிய பரிந்துபேசும் வேலையை எப்படிச் செய்யும்? ஆ அன்புள்ள ஆண்டவரே! தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களா யிருங்கள் என்று உமது திருவாய் உரைத்த சொல்லை எங்கள் ஆத்துமங்களின் ஆழத்திலே உமது திருவாயால் எப்போதும் பேசும். ஆமென்.

# பதின்மூன்றாம் பாடம்.

## ‘ஜெபமும் உபவாசமும்’

அல்லது,

## அவிசுவாசத்திற்கு மருந்து.

*“அப்பொழுது சீஷர்கள் இயேசுவினிடத்திற்குத் தனித்து வந்து: அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள். அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், உங்களால் கூடாதகாரியம் ஒன்று மிரா [illegible] யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும், இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே யன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.”* (மத். 17. 19–21.)

சீஷர்கள் தங்களால் சொஸ்தமாக்க முடியாதிருந்த சந்திரரோகியைப் பிடித்த பிசாசை இயேசு துரத்தினதைக் கண்டு, 



தங்கள் அருமைப்போதகரை யடுத்து, தாங்கள் சித்தியடையாமற் போனதற்குக் காரணம் கேட்டார்கள். அவர் “சகல பிசாசுகளைத் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும், அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும்” கொடுத்திருந்தார். இந்த வல்லமையை அவர்கள் பலமுறை கையாடி அநுபவங்கண்டு, பிசாசுகள் தங்களுக்குக் கீழ்ப்படிந்ததைப் பற்றிச் சந்தோஷப்பட்டு அவருக்குச் சொல்லியிருந்தார்கள். ஆகிலும், இப்போது அவர் மலைமேலிருந்தகாலத்தில் அவர்கள் கொஞ்சமாகிலும் இதுவிஷயத்தில் சித்தியடையாமல் தோற்றார்கள். பிசாசின் வல்லமையிலிருந்து அந்த ரோகியை விடுதலைசெய்வதற்கு தேவனுடைய சித்தத்திலாகிலும், ரோகியின் விஷயத்திலாகிலும் எவ்விதத் தடையும் அசாத்தியமும் இருந்ததில்லை. ஏனெனில் கிறிஸ்து கட்டளையிட்டமாத்திரத்தில் பிசாசு ஓடிப்போயிற்று. “எங்களால் ஏன் கூடாமற்போயிற்று?” என்று அவர்களே சொல்வதைப் பார்த்தால், அவர்கள் அந்தப் பிசாசை ஓட்ட மனமொப்பிப் பிரயாசப்பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் ஆண்டவருடைய பேரைச் சொல்லி அந்தப் பிசாசை ஓடும்படி கற்பித்திருப்பார்கள். அவர்கள் செய்த பிரயத்தனம் பலிக்காமல், பெரிய ஜனக்கூட்டத்திற்குமுன் அவர்கள் வெட்கமடைந்தார்கள். “எங்களால் ஏன் கூடாமற்போயிற்று?”

கிறிஸ்து அவர்களுக்குச் சொன்ன உத்தரவு தீர்க்கமும் தெளிவுமாயிருந்தது: “உங்கள் அவிசுவாசத்தினாலேதான்.” அவருடைய பிரயத்தனம் பலித்ததற்கும் இவர்களுடைய பிரயத்தனம் பலிக்காமலிருந்ததற்கும் காரணம் இவர்களுக்கு ஒளித்து அவர் தமக்குமாத்திரம் வைத்திருந்த ஒரு விசேஷித்த வல்லமை அல்ல. காரணம் அது அல்லவே யல்ல. அதற்குக் காரணம் பார்க்க வெகுதூரம் போகத் தேவையில்லை. இருட்டின் இராஜ்யத்திலானாலும் சரி, தேவ இராஜ்யத்திலானாலும் சரி, ஒரு வல்லமைக்கு சகலமும் தலைவணங்கவேண்டும், அந்த வல்லமை விசுவாசத்தின் வல்லமைதான் என்று அவர் பலமுறையும் அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லியிருந்தார். தேவ இராஜ்யத்தில் அபஜெயம் உண்டாக்குகிற ஒரே காரணமாத்திரம் இருக்கிறது.

அது விசுவாசமில்லாமையே. தேவனுடைய வல்லமையெல்லாம் புறப்பட்டு மனுஷனுக்குள் பாய்ந்து அவன்மூலமாய்க் கிரியை செய்வதற்கு ஒரே வழிமாத்திரமுண்டு, அது விசுவாசந்தான். அது அதர்சியமானவரால் சாரமேற்றப்படுதல்; அதாவது, மானிட மனது தேவனுடைய மனதிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, தேவமனதின் அச்சும் உருவும் பதியப்பெறுதல். பிசாசுகளைத் துரத்துவதற்குச் சீஷர் பெற்றிருந்த வல்லமை ஏதேனும் ஒரு பண்டத்தை ஒருவர் தம் கையை விட்டுக் கொடுக்க இன்னொருவர் அதைத் தம் கைப்பொருளாய் ஏற்றுச் சுதந்தரமாய் வைத்து அநுபவிக்கிறது போலிருந்ததில்லை. அந்த வல்லமை கிறிஸ்துவைவிட்டுப் போகாமல் அவரிலேயே இருந்தது; வேண்டும்போதெல்லாம் அவர்கள் அவர்மேல் வைத்த உயிருள்ள விசுவாசத்தின் பலத்தால் அதை அவரிடத்தில் வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆவியுலகத்தின் அதிபதியும் வெற்றிக்குரியவரும் அவரே என்று அவர்மேல் வைக்கிற விசுவாசம் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருந்தால், தமது நாமத்தில் பிசாசுகளைத் துரத்த அதிகாரம் கொடுத்தவராகிய அவரையே பார்த்து அவர்மேலேயே உறுதியான விசுவாசம் வைத்திருந்தால், இந்தமாதிரி விசுவாசம் தப்பாமல் அவர்களுக்கு வெற்றி கொடுத்திருக்கும். "உங்கள் அவிசுவாசத்தினாலே தான்" என்று அக்காலத்துச் சீஷருடைய வீரியமில்லாமைக்கும் தோல்விக்கும் ஆண்டவர் சொன்ன காரணமும் கண்டனமொழியும் அவருடைய திருச்சபைக்கு எந்நாளும் செல்லும்.

ஆயினும், அப்படி அவர்களுக்கு விசுவாசம் குன்றிப் போனதற்கு ஒரு காரணம் இருந்திருக்குமே, அதென்ன? சீஷர்கள் அவரை நோக்கி: "நாங்கள் ஏன் விசுவாசிக்கக் கூடாமற்போயிற்று? இதற்குமுன்னெல்லாம் பிசாசுகளைத் துரத்துவதற்கு எங்களுக்கு விசுவாசமிருந்ததென்ன, இப்போது அதற்கு எங்கள் விசுவாசம் குறைந்ததென்ன?" என்று கேட்கமாட்டார்களா? அவர்கள் அப்படிக் கேட்கிறதற்கு முன் ஆண்டவரே அதற்கு முகாந்தரம் சொல்லுகிறார்: "இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி



மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது." ஒருவனுக்குள் உதித்திருக்கிற ஞான ஜீவனுக்கு இயல்பாகவே மூளுகிற முயற்சி விசுவாசம்; அவனுடைய ஞானஜீவனின் உயர்ந்த உச்சி முயற்சியும் விசுவாசமே. அந்த முயற்சியின் தன்மை எப்படியிருக்குமென்றால், தேவாவி ஊட்ட ஊட்ட, தள்ளாமல் ஏற்றுக்கொள்ளுகிற ஞானப்பசி யுடையதாய் நமது ஆவி தன்னை தேவனுடைய ஆவியின் வசப்படுத்திக்கொண்டேயிருத்தலாயிருக்கும். இதனால், நமது ஆவி படிப்படியாய் ஞான வலுவேறிப் பின்னும்பெரிய கிரியையைச் செய்யக்கூடியதாய்விடும். இந்த விசுவாசம் நமது ஞானஜீவனிலிருந்து உற்பத்தியாவதாகையால், அதற்குள்ள லக்ஷணம் நமது ஞான ஜீவனுக்குள்ள லக்ஷணத்திற்குத் தக்கபடியிருக்கும். நமது ஞானஜீவன் சுகம்நிறைந்து உரமாயிருந்தால் மாத்திரமே, அதாவது, நமது முழுஜீவியத்தையும் நம் இஷ்டம்போல் அல்ல தேவாவி தம் இஷ்டம்போல் ஆண்டு நடத்தினால் மாத்திரமே, நமது விசுவாசத்திற்குப் பராக்கிரமங்களைச் செய்யும் சக்தி கைகூடியிருக்கும். இதையிட்டே இயேசு: "ஆகிலும், இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது" என்றும் சொல்லைக் கூட்டிச் சொன்னார். இயேசு இதினால் தமது சீஷருக்கு உணர்த்துவது இது: இந்தத் துர்ஆவி உங்களுக்குக் காட்டின இப்பேர்ப்பட்ட வணங்காத எதிர்ப்பை மேற்கொண்டு வெல்லுகிற விசுவாசம் ஜெபத்தையும் உபவாசத்தையும் கைப்பிடியாகக்கொண்டு தேவனோடு வெகு நெருங்கி உறவாடியும் உலகத்தோடு விவகாரம்செய்தலை வெகு விசேஷித்தபிரகாரம் விட்டுவிட்டும் பிழைப்பவர்களுக்கே சித்தியாகும் என்பதாம். ஆகவே ஜெபத்தைப்பற்றி நாம் மிகக் கவனிக்கத்தக்க இரண்டு முக்கியமான பாடங்களை அவர் இதிலே நமக்குப் போதிக்கிறார். நாம் விசுவாசத்தில் வளர்ந்து பலசாலிகளாயிருக்க விரும்பினால் அதற்கு ஜெபஜீவியமே முக்கியமாய் வேண்டுமென்பது ஒரு பாடம். நமது ஜெபஜீவியம் பூரண வளர்த்தியடைந்து தேறவேண்டுமென்று நாம் விரும்பினால் அதற்கு உபவாசம் அவசியம் என்பது இன்னொரு பாடம்.

**விசுவாசம் ஓங்குவதற்கு ஜெபஜீவியம் ஓங்கவேண்டும்.** — ஞானஜீவனில் எந்தப் பாகத்தை எடுத்துப்பார்த்தாலும் ஒன்றாகிலும் தனித்துப் பிரத்தியேகப்பட்டதாயிருக்கிறதில்லை. அதின் ஒவ்வொரு பாகமும் அதின் மற்றப்பாகங்களுக்குள் ஓயாமல் பாய்ந்து அங்கும் தன் அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும். ஏனெனில் ஞானஜீவனின் பாகங்களெல்லாம் பிரிக்கமுடியாமல் ஒன்றோடொன்று மிக நெருங்கிப் பின்னியிருக்கின்றன. ஆதலால், இதற்கு இது காரணம், இது இதன் காரியம் என்று காரணம் வேறே அந்தக் காரணத்தினால் ஆனகாரியம் வேறேயாய் அவைகளுள் ஏதையும் பகுத்துக்காட்ட முடியாது. ஒன்றிற்கொன்று மாறி மாறிக் காரணகாரியமாகலாம். இந்தப் பிரமாணம் விசுவாசத்திற்கும் பொருந்தும். விசுவாசமில்லாமல் மெய்யான ஜெபம் பிறக்க முடியாது. எவ்வளவேனும் விசுவாசம் முந்தியிருந்தால் மாத்திரமே யதார்த்தமான ஜெபம் ஜனிக்கும். ஆயினும், இதுவும் உண்மை. எதுவெனில், ஜெபம் முந்தினால்மாத்திரமே அதின் வழியாய் அதிக விசுவாசம் பிறக்கும். வெகு ஜெபம் இல்லாவிட்டால் விசுவாசம் மேலும் மேலும் ஓங்க முடியாது. இங்கே இயேசு விளக்குகிற பாடம் இதுதான். நமது ஞானஜீவியத்தில் விசுவாசத்தைப்போல் வளரவேண்டியது வேறேதுமில்லை. "உங்கள் விசுவாசம் மிகவும் வளருகிறது" என்று ஒரு சபையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 'உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது' என்று இயேசு சொன்னபொழுது அவர் தேவராஜ்யத்தின் சட்டத்தையே எடுத்துச் சொன்னார். அது நமக்கு உணர்த்துகிறதென்னவென்றால்: யாரைச் சோதித்துப் பார்த்தாலும், எல்லாருக்கும் ஒரே அளவான விசுவாசம் இருக்கிறதில்லை; ஒருவனையே எடுத்துச் சோதித்தால், அவனுக்கு ஒருநேரம் இருக்கிற விசுவாசம் இன்னொருநேரம் இராது; அவனவனுக்கு எவ்வளவு விசுவாசம் இருக்கிறதோ அவ்வளவே ஞானவல்லமை அவனுக்கு இருக்கும், அவ்வளவே ஞானதன்மைகளை அவன் பெற்றுக்கொள்ளக்கூடும். நமது விசுவாசம் வளர்வதற்கு வழி என்ன, இடம் எது, என்று விசாரித்தால், நமது உபாத்தியாயர் தேவனுடைய ஆச



னத்தை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார். ஜெபமே, எனக்கு இருக்கிற விசுவாசத்தை ஓயாமல் அப்பியாசிப்பதே, ஜீவனுள்ள தேவனோடு நேச உறவாடிக்கொண்டிருப்பதே, விசுவாசம் அதிகரிக்கிறதற்கு வழி. தெய்வீகமாயிருப்பதை, அதாவது, தேவனையே புசித்துப் புசித்து விசுவாசம் பிழைத்திருக்குமேயொழிய மற்றப்படி அது பிழைக்காது.

உள்ளக் கனிவுடன் தேவனை வணங்கி, அவரை விட்டுப் பிரிய மனம்பொறாமல், அவருடைய திருமுக தரிசனத்திற்குக் காத்திருந்து, எந்த ஆரவாரமுமில்லாமல் ஆத்துமாவை அமைதியாக்கி, அதிலே அவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு அதை அவருக்குக் கொடுத்துக் காத்திருப்பதினாலேயே தேவன் எப்பேர்ப்பட்டவர் என்று அறிகிற சக்தியும் அவரை உறுதியாய் நம்புகிற நம்பிக்கையும் நமக்கு வரும். பொய்யாவிளக்காகிய வேதத்திலிருக்கிற அவர் திருவசனத்தை எடுத்து, அதை அவரிடம் கொடுத்து, ஆண்டவரே! இதை உமது அன்பொழுகும் திருவாயால் என் காது கேட்க எனக்குச் சொல்லும் என்று வருந்தி, அதை அவரே நம்முடன் நேர் நேரே பேசக் கேட்பதினாலேயே அது தேவன் நமக்கே யருளிய திருவாக்கு என்று பூரணமாய் நம்பி ஏற்றுக்கொள்ளுகிற சக்தி நமக்கு உண்டாகும். ஜெபத்தினாலேயே, ஜீவனுள்ள விசுவாசத்துடன் ஜீவனுள்ள தேவனோடு நெருங்கி உறவாடுவதினாலேயே, தேவனை மனமார நம்புகிற சக்தியாகிய விசுவாசம் நமக்குள் உறுதிப்படும். இந்த நம்பிக்கை உறுதிப்பட்டால், அவர் சொல்வதெல்லாம் பலிக்கும், அவர் நமது விசுவாசத்திற்கு எதெது கைகூடும் என்றாரோ அதெல்லாம் தப்பாமல் கைகூடும் என்கிற நிச்சயம் நமக்கு ஸ்திரப்படும். அநேக கிறிஸ்தவர்கள் வெகு ஜெபம் செய்வதவசியம் என்று சொல்லக் கேட்டிருப்பார்கள், ஆகிலும் அதென்னவென்றே அவர்களுக்குத் தெரியாது. தேவனைவிட்டுப் பிரியாமல் அவரோடேயே வெகு மணிநேரமிருந்து பேசிப் பழகி உறவாடவேண்டுமென்பதின் பொருள் அவர்கள் அறிவுக்கு எட்டுகிறதுமில்லை, அப்படிச்செய்வது அவசியம் என்று அவர்கள் உணருகிறதுமில்லை. வெகு ஜெபம் செய்கிறவர்களே பலத்த விசுவாசிகளாவார்கள் என்று நமது உபாத்தியாயர் சொல்வதை அநுபவித்துப்

பார்த்தவர்களெல்லாரும் அது சரிதான் என்று மேற்சாக்ஷி சொல்லியிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தை ஆராயும்போது நாம் முன்னமேயே ஆராய்ந்துவிட்ட ஒரு விஷயத்தைத் திரும்பவும் ஆராயத் தூண்டப்படுகிறோம். நீங்கள் கேட்டது கிடைத்துவிட்டது என்று விசுவாசியுங்கள் என்கிற பாடம் நமக்குச் சொல்லுமுன் "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்" என்று இயேசு முந்தி நம்மை எச்சரித்ததே அந்த விஷயம். நமது விசுவாசமாகிய மரத்தின் அச்சுவேர் ஆணிவேரெல்லாம் தேவனுக்குள், அதாவது, நம்முடன் முகமுகமாய் உறவாடுகிற ஜீவனுள்ள தேவனுக்குள், ஆழமாய் ஓடியிருக்கவேண்டும். அப்போதுமாத்திரமே பர்வதங்களைப் பெயர்க்கவும் பிசாசுகளை ஓட்டவும் போதுமான பலம் அதற்கு இருக்கும். "விசுவாசம் உங்களுக்கு இருந்தால் உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது." தேவன் நமக்கு உலகத்திலே செய்யக் கொடுத்திருக்கிற வேலையைச் செய்யவேண்டும் என்கிற ஊக்கமும் அக்கறையும் மாத்திரம் நமக்கு இருந்தால், நாம் பெயர்க்கவேண்டிய மலைகளும் ஓட்டவேண்டிய பிசாசுகளும் நமக்குத் தென்படும். அப்போது, வெகு விசுவாசம் நமது வேலைக்கு அவசியம் என்பதைச் சீக்கிரத்திலேயே உணர்ந்துகொண்டு, அப்பேர்ப்பட்ட விசுவாசம் பயிராகிற பூமியாகிய வெகு ஜெபம் நமக்குத் தேவையென்றும் கண்டுகொள்வோம். கிறிஸ்து இயேசுவே நமக்கும் ஜீவன், நமது விசுவாசத்திற்கும் ஜீவன். அவர் நமக்குள் பிழைப்பதினாலேயே நாம் பலமுள்ளவர்களாவோம். அதினாலேயே நாம் விசுவாசிப்பதற்கு அவசியமான கபடமின்மை நமக்குள் முளைக்கும். வெகு ஜெபம் என்பதற்குள் வைத்துச் சுருட்டியிருப்பது என்னவென்று விரித்துப்பார்த்தால், நமக்குள்ளிருக்கிற நானென்பவனுடைய சேஷ்டை அடங்கி யொடுங்கி மடிதல்தான் அது என்று வெளிப்படும். நாம் இயேசுவுடன் நெருங்கியுறவாடி அவரோடு அந்நியோந்நியமா யிருந்துகொண்டு, நான் என்பவனுடைய சேஷ்டைகளுக்குச் செத்துப்போனால் மாத்திரம் விசுவாசஆவி வல்லமையாய் நமக்குள் வந்து உதிக்க ஏது



வாகும். நமது விசுவாசத்தின் பூரணவளர்த்திக்கு ஜெபம் இன்றியமையாத அவசியம் என்று இப்போது காட்டியாயிற்று.

மேலும், ஜெபம் ஓங்குவதற்கு உபவாசம் ஓங்கவேண்டும். இதுவே நாமின்று படிக்கிற இரண்டாம் பாடம். ஜெபம் காணாததைக் கெட்டியாய்ப் பிடிக்கிற ஒரு கை; உபவாசம் காண்பதைப் பிடிநழுவச் செய்கிற மறு கை. உணவுதேடும் அவசியமும், தேடின உணவை இன்பமுற அநுபவித்தலும் மனுஷனை இப்பிரபஞ்ச உலகத்துடன் ஒட்டிக்கொள்ளச் செய்வதுபோல் வேறெதுவும் செய்கிறதில்லை. மனிதன் பரதீசில் இருந்தகாலத்தில் உணவுக்கு இனிய பழமே அவனைச் சோதனைக்குட்படுத்திற்று. இயேசு வனாந்தரத்தில் பசித்திருந்தகாலத்தில் கற்களை ஆகாரமாக்கி உண்ணும் என்றல்லவா சோதனைக்காரன் அவரைச் சோதித்தான்? அவரோ தமது உபவாசத்தினால் அவனை ஜயித்தார். நமது சரீரம் தேவாவியானவருக்கு திருக்கோவிலாயிருப்பதற்கு மீட்கப்பட்டிருக்கிறது. நாம் நமது ஆவியில்மாத்திரமல்ல, நமது சரீரத்திலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். நாம் உண்ணும் உணவினாலும் பருகும் பானத்தினாலும் மிக விசேஷித்தபிரகாரமாக தேவனுக்கு மகிமை வரப் பண்ணவேண்டும் என்று வேதம் விளம்புகிறது. தேவனுக்கு மகிமை வருவிக்கிற மாதிரியாய் உண்ணுகிற ஞான அநுபவம் வெகு கிறிஸ்தவர்களுக்கு இன்னம் தெரியாதென்று முறையிடவேண்டியதாயிருக்கிறது. ஜெபத்தையும் உபவாசத்தையும்பற்றி இயேசு சொல்வதைக் கேட்டதும் நம்மனதில் எழும்புகிற முதல் நினைவு இது: மிதபோஜனம், மதுவெறியில்லாப் பானம், இச்சைக்கு இசையாமை, இவற்றுடன் கூடிய ஜீவியம் நமக்கு இருந்தால்மாத்திரமே வெகு ஜெபம் செய்வதற்கு மனமும் பலமும் நமக்கு ஒத்துக் கூடியிருக்கும்.

உபவாசம் என்பதற்கு நாமிப்போது சொன்ன அர்த்தத்தைத்தவிர, அந்தச் சொல்லுக்கு இயல்பாயுள்ள அர்த்தத்தையும் நாம் எடுத்துக்கொள்ளலாம். துக்கம் ஒருவனைச் சாப்பிடவொட்டாது; சந்தோஷம் புசிப்பினாலும் இனிய பானம் பருகுவதினாலும் திருவிழாக் கொண்டாடும். பசி, தாகம் முதலிய சரீர அவஸ்தைகளைத் திருப்தி பண்ணுவது

நமது கடமையாயிருக்கிற காலத்திலுங்கூட, அவற்றிற்கு உதவும் பண்டங்களை மாமிசத்திற்கு இதமாயும் அமிதமாகவும் அநுபவிக்கவேண்டும் என்கிற ஆவல் வந்து, அடங்காமல் துள்ளி, நம்மைத் தொந்தரைசெய்கிறதை நாம் அறிந்திருக்கிறோம். இவ்வாறு நமது சரீரம் தன் ஆசாபாசங்களுடன் வந்து நம்மை வழிமறித்து, நாம் இருட்டின் வல்லமைகளோடு செய்துகொண்டிருக்கிற போருக்கு இடையூறு உண்டாக்குவதினால், அதை அடக்கிக் கீழ்ப்படுத்திக்கொள்வது அவசியமென்கிற தெளிவும், அப்படியே செய்யவேண்டும் என்கிற தீர்மானமும் நமக்குள் ஊறுகிற வேளைகள் வரும். நாம் மனம், புத்தி முதலிய அந்தக்கரணங்கள் மாத்திரமாயிருக்கிற அசரீரிகள் அல்ல, ஐம்புல அநுபவங்கட்கு உட்பட்ட சரீரப்பிராணிகள். ஆதலால், நமது கண், காது முதலிய ஐம்புலன்களாலும் கிரகித்து உணரக்கூடியதும் நமது ஞானஜீவனுக்கு உதவியானதுமாகிய ஒரு அநுகூலவல்லமையைக் கண்டால், நமது ஆத்துமாவிற்கு தைரியம் வரும். உபவாசம் ஆத்துமாவிற்கு அப்படி தைரியம் உண்டாக்குகிற ஒரு அநுகூல வல்லமை. தேவராஜ்யத்திற்கு உபயோகமாய் நாம் அடைந்துகொள்ளப்பார்க்கிறவை நமக்குச் சித்திக்கும் விஷயத்தில் எந்தக் கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் நம்மையே பலியாய்க் கொடுக்க நேர்ந்தாலும் அதையெல்லாம் பாராட்டோம் என்கிற நமது மனவுறுதியை வெளிப்படுத்தவும் அதிகரிப்பிக்கவும் ஸ்திரப்படுத்தவும் உபவாசம் நமக்கு மிக உதவும். இப்படி எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காகவும் அவருடைய இராஜ்யத்தின் பொருட்டும் தத்தம்செய்யத் துணிந்திருக்கிற ஆத்துமாவைக் கண்டால், தமது குமாரனுடைய உபவாசத்தையும் சுயபலித்தியாகத்தையும் பிரியமாய் ஏற்றுக்கொண்ட பிதாவானவர் இந்த ஆத்துமாவின் உபவாசத்தையும் பிரியமாய் ஏற்றுக்கொண்டு, அதற்கு வேண்டிய ஞானஜீவ வல்லமையை இனிய கொடையாய் அளிப்பார்.

உபவாசம் என்பதற்கு இன்னம் விரிவான ஒரு அர்த்தமிருக்கிறது. அந்த அர்த்தத்திலும் நாமதைப் பிரயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஜெபம் தேவனையும் காணப்படாத நன்மைகளையும் வாங்கிக்கொள்ள கையெடுத்தல்;



உபவாசம் காணப்படுகிறவைகளையும் இம்மைக்குரியவைகளையும் கைவிடுதல். சாதாரண கிறிஸ்தவர்கள் நேராய் விலக்கப்படாததும் பாவமல்லாததுமான எதுவும் அநுபவித்தால் தோஷமல்லவென்று நினைத்து, இந்தப் பிரபஞ்சத்துக்குரிய கைப்பொருள், கலைநூற்பரப்பு, இன்ப சுகாநுபவம், இவற்றுள் தங்கள் மனது வேண்டுமளவு வைத்துக்கொண்டு அநுபவிப்பார்கள். ஆனால், தன்னாத்துமா தன்னதல்ல தேவனுடையது என்று நினைத்து, அதை அவருக்கு நேர்த்திக்கடனாய் ஒப்புவித்துவிட்ட கிறிஸ்தவன் யுத்தத்திற்கு எது அவசியமோ அதைமாத்திரம் வைத்துக்கொண்டு மற்றதையெல்லாம் ஒழித்து நடமாடுகிற போராள்போலிருப்பான். அவன் தன்னாத்துமாவை நிமிரவொட்டாமல் தடுக்கிற எல்லா பாரத்தையும், ஓட்ட ஓட்டப் போகாமல் வந்து மொய்க்கிற வழக்கமான பாவத்தையும் தொலைத்துவிட்டு, இந்த உலகத்து விவகாரங்களிலே சிக்கிக்கொள்ளப் பயந்து, தேவனுக்காகவும் அவருடைய திருச்சேவைக்காகவுமே தன்னைப் பிரித்து வைத்துக்கொண்டு, நசரேய ஜீவியம் செய்யப் பார்ப்பான். தோஷமில்லாமல் கிரமமாய் அநுபவிக்கத்தக்கதையும் ஒருவன் தன் சுய இஷ்டமாய் விட்டுவிடானாகில், அவன் ஜெபத்தில் வல்லவனாதல் கூடாது: இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது.

இயேசுவின் மாணாக்கரே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும் என்று நீங்கள் நமது உபாத்தியாயரைக் கேட்டீர்களே, இப்போது வந்து அவர் போதித்த பாடங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். பிசாசுகளைத் துரத்த வல்லமையுள்ள பலத்த விசுவாசம் வரும் வழி ஜெபமே என்று அவர் உங்களுக்குச் சொல்லுகிறார். அவர் "உங்களுக்கு விசுவாசமிருந்தால் உங்களால் கூடாதது ஒன்றுமிராது" என்கிறார். இந்த மகத்துவமானவருக்கு வெகு ஜெபம்பண்ண உங்களைத் தூண்டுவதாக. அப்பேர்ப்பட்ட பொருளுக்கு இப்பேர்ப்பட்ட விலை கொடுப்பது தகாதோ? இயேசு இங்கே நமக்குத் திறந்து காட்டியிருக்கிற வழியிலே அவருக்குப் பின்னே போவதற்காக நாம் எதைக் கொடுத்தால்தான் தகாது? அவசியமானால்

உபவாசிப்பதற்கு நமக்குத் தடையென்ன? நமது ஜீவகாலத்திற்குக் குறிக்கப்பட்டிருக்கிற பெரிய வேலையில் நமது சரீரமாவது இந்தப் பிரபஞ்சமாவது நமக்குக் குறுக்கிட்டுத் தடைபண்ணாதபடி நாம் செய்யவேண்டியதையெல்லாம் செய்ய வேண்டாமா? தேவன் நமக்குக் குறித்திருக்கிற பெரிய வேலை மன்னுயிரை அழிவுக்கு விலக்கி இரக்ஷித்தலே. இந்த வேலைக்கு தக்கவர்களாயிருப்பதற்கு நாம் விசுவாசிகளாக வேண்டும். நாம் பலத்த விசுவாசிகளாவதற்கு ஜெபத்தினால் தேவனோடேயே இடைவிடாமல் சஞ்சரிக்கவேண்டும். இப்படிச் செய்ய மனமில்லை என்று நாம் சொல்லலாமா?

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆ இயேசு கர்த்தரே! எங்கள் அவிசுவாசத்தினிமித்தியம் நீர் எங்களை ஓயாமல் கண்டிக்கவேண்டியதாயிருக்கிறதே யென்று விசனப்படுகிறோம். எங்கள் பிதாவையும் அவர் எங்களுக்குச் சொன்ன வாக்கையும் நம்பச் சக்தியின்மையை எங்களிடத்தில் காண்பது உமக்கு எவ்வளவோ திகைப்பையுண்டாக்கும்! ஆண்டவரே! நீர் எங்களை ஆராய்ந்துபார்த்துச் சொல்லும் காரணமாகிய "உங்கள் அவிசுவாசத்தினாலே தான்" என்கிற அதட்டுமொழி எங்கள் உள்ளத்தைத் துளைத்துக்கொண்டு அடியில் இறங்கி, எங்களைச் சூழ இருக்கிறவர்களைப் பிடித்திருக்கும் வெகுவான பாவங்களும் துன்பங்களும் தொலையாமைக்கு எங்கள் அசட்டையே காரணமென்று எங்கள் குற்றத்தை எங்களுக்கு வெளிப்படுத்துவதாக. மேலும், போற்றுதற்குரிய எம்பெருமானே! நாங்கள் விசுவாசத்தைப் படிக்கவும் அடைந்துகொள்ளவும் நீர் ஒரு இடம் ஆயத்தப்படுத்தியிருக்கிறதையும் எங்களுக்குப் போதியும்; அது உம்முடனும் பிதாவுடனும் நாங்கள் தரித்திருந்து நேர்நேரே, முகமுகமாய் உறவாடிப் பிழைக்க எங்களைப் பயிற்றுகிற ஜெபமும் உபவாசமும்தான். இதை எங்களுக்கு வெளிப்படுத்தும்.

ஆ இரட்சகரே! எங்களுக்குள் விசுவாசத்தை உற்பத்தியாக்குகிறவரும் அதைப் பூரணவளர்த்தியடைவிக்கிறவரும் நீரேயாகையால் உமது பரிசுத்தாவியால் நீர் எங்களுக்குள்



ஆவேசித்து இருக்கச் செய்துகொள்ளுதலை எங்களுக்குக் கற்றுக்கொடும். எம்பெருமானே! விசுவாசிக்கிற கிருபை எங்களுக்கு வேண்டுமென்று நாங்கள் பட்ட பிரயாசையும் பண்ணின ஜெபமும் எல்லாம் பலிக்கவேயில்லை. இதற்குக் காரணம் இப்பொழுது எங்களுக்குத் தெரியும்; நீர் உம்மிலிருந்து எடுத்துப் பிரத்தியேகப்படுத்தி எங்களுக்குள் விட்டுவைக்கிற ஒரு வல்லமை இருக்கிறதாக்கும் என்று நினைத்து ஏமாந்தோம். பரிசுத்த இயேசுவே! மானிடஜீவிகளாகிய எங்களுடைய ஜீவனுக்குள் ஜீவனாய் நீரே வந்திருந்து வாழுகிற இரகசியத்தை எங்களுக்கு உணர்த்தும்; உமதாவியால் நீரே எங்கள் ஆவிக்குள் அந்தர்யாமியாய் இருந்துகொண்டு, எங்கள் மூலமாய் விசுவாசஜீவியம் செய்து, எங்களுக்கு விசுவாசத்தாழ்ச்சி நேரிடாமல் காக்க நீரே பொறுப்பாளியாயிருப்பதை எங்களுக்கு விளங்கச்செய்யும். உமது சுய ஜீவனிலிருந்து வழிகிற பரம வெள்ளமாகிய தேவாவிப் பாய்ச்சலை ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவனுக்குள் பெறுதலே அவனுக்கு நீர் தரும் பரம அபிஷேகமாகும். இந்த அபிஷேகம் பெற்றவனே பிறருக்காகப் பரிந்து ஜெபிக்கும் ஜெபவூழியம் செய்யத்தக்கவனாவான். அவன்மாத்திரமே அந்த ஜெபவூழியம் வெறும் வாய்ச்சொல்லூழியம், உள்ளத்தின் நினைவூழியம், என்று நினைக்காமல் நீர் கொடுக்கும் பரம அபிஷேகத்தின் பலத்தால் செய்யும் வல்லமையூழியம் என்று அறிவான். இப்பேர்ப்பட்ட ஊழியம் செய்யத் தனக்குச் சுயமே சக்தியில்லையாகையால், அதற்கென்று பயிற்றுப்படுதல் தனக்கு அவசியம் என்று தெரிந்துகொள்ளக்கூடியவன் அவனே. அப்படிப் பயிற்றப்படுவதற்காக யார் யார் தங்களை உமக்கு ஒப்புவிக்கிறார்களோ அவர்களுடைய உள்ளங்களிலேதான் நீர் அதிசயமான ஜெப ஜீவனை உற்பத்தி பண்ணுவீர். எங்கள் விசுவாசம் இந்த அதிசய ஜெபஜீவனில் ஒரு அம்சமாயிருக்குமேதவிர தானே தனித்திராது. இதை நாங்கள் நன்றாய் உணரப்பண்ணும். தன்னால் கூடாத காரியம் எதுவுமில்லை என்னத்தக்க விசுவாசம் எங்களுக்குள் ஓங்குவதற்கு உபவாசமும் ஜெபமும் வழியாகும்விதத்தை எங்களுக்குப் போதிப்பீராக. ஆமென்.

## புறனடை.

பிசாசு பிடித்தவர்களிலிருந்து அந்தத் துராவிகளை ஜெபத்தினால் துரத்துவதற்கு அவைகளுடனே புளுமாதுப் போதகர் வெகு கடும் போரிட்டுக்கொண்டிருந்த காலத்தில், அவருடைய ஜெபம் ஆரம்பத்தில் பலிக்காமலிருக்கவே, இதற்குக் காரணமேதோ வென்று திகைத்திருந்தார். இதைக்குறித்து அவர் தம்மை யொருநாள் பார்க்க வந்திருந்த நண்பருடனே பேசினதில் அவர் நமதாண்டவர் உபவாசத்தைக் குறித்துச் சொன்னதை அவருக்கு நினைப்பூட்டினார். அதன்மேல் புளுமாது உபவாசிக்கத் தீர்மானித்து, வேளாவேளைகளில் நாற்பது நாழிகைகாலம் அப்படிச் செய்தார். அநுபவத்தினாலும், ஆலோசனையினாலும் அவர் கண்டதென்னவெனில், பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் நினைப்பதற்கு மாறாய் உபவாசம் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு வெகு அவசியம் என்பது. அவர் வாய்ப்பிறப்பைக் கேட்போம்: "உபவாசம் நாம் தேவனிடத்தில் மன்றாடிக் கேட்டது நமக்குக் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி என்று உபேட்சையாயிருப்பதல்ல, கிடைப்பது பேரவசியம் என்று தேவசமூகத்தில் கிரியையால் ரூபிக்கிற ரூபகாரம்; அது நாம் செய்யும் ஜெபத்தினுள் இருக்கிற அனலையும் பெலனையும் வெகுமடங்கு அதிகரிப்பிக்கிறதற்கு ஏற்ற உபாயம்; அது வார்த்தையை யொழித்துக் கிரியையால் ஜெபிக்கிற ஜெபம். ஆதலால், அது காரியவாய்ப்புக்கு அநுகூலமானது. நான் தலையிட்டுக்கொண்ட கிரியைக்கொத்த ஒரு கிரியையைக் குறித்து உபவாசத்தை நமதாண்டவர் உபதேசித்ததால், என் கிரியைக்கும் அது விசேஷித்தபிரகாரம் உதவும் என்பதற்கு எனக்குள் ஐயம் இருந்ததில்லை. ஒருவருடனும் சொல்லாமல் நான் அதைப் பரீட்சை பண்ணிப் பார்த்தேன். நான் போராடின போராட்டம் பிற்பட்ட காலத்தில் அதினால் உள்ளபடிக்கு அதிசயிக்கத்தக்கவிதமாய் இலகுவாக்கப்பட்டது. என் நெஞ்சில் எவ்விதப் படபடப்பும் எழும்பாமல் அமர்ந்து நிதானித்துப் பேசுஞ் சக்தி எனக்கு அதினால் வந்தது. துராவியால் நோவடைந்தவர்களிடத்தில் அப்புறம் முன்போல் நெடுநேரம் நான் இருப்பது அவசியமாயிருந்ததில்லை. அப்படிப்பட்டவர்களுடைய அருகில் வராமலே அவர்களிடத்தில் வல்லமை செய்ய எனக்குச் சக்தியிருந்ததை உணர்ந்தேன்."



## பதினாலாம் பாடம்.

### 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது, மன்னியுங்கள்'

அல்லது,

### ஜெபமும் அன்பும்.

"நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறையுண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்." (மாற். 11. 25.)

இந்த வார்த்தைகள் "நீங்கள் ஜெபம்பண்ணும்போது, எவைகளைக் கேட்டாலும் அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்; அப்போது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" என்கிற பெரிய ஜெபவாக்குத்தத்தத்திற்கு உடனே பிந்தி வருகின்றன. இந்த வாக்குத்தத்தத்திற்குமுன் வருகிற "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்" என்கிற சொல் நமக்கும் தேவனுக்குமுள்ள உறவு களங்கமற்றுத் துலாம்பரமாயிருந்தால்மாத்திரம் நமது ஜெபம் பலிக்கும் என்பதை நமக்கு விளங்க உணர்த்தினதை முன்பே பார்த்திருக்கிறோம். அவ்வாறே, அந்தச் சொல்லை யடுத்து வருகிற சொல்லாகிய இன்றைய வாக்கியம் நமக்கும் பிறருக்கும் உள்ள உறவு மலினமில்லாமல் தெளிவாயிருந்தால்மாத்திரமே நமது ஜெபம் பலிக்கும் என்பதை நமக்கு உணர்த்துகிறது. தேவனிடத்தில் நாம் பாராட்டுகிற அன்புடைமையும் பிறரிடத்தில் நாம் பாராட்டுகிற அன்புடைமையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கக்கூடியதல்ல. ஒருபக்கத்தில் தேவனிடத்திலும் மறுபக்கத்தில் பிறரிடத்திலும் செம்மையாயிராத உள்ளத்திலிருந்து எழும்பும் ஜெபம் பலிக்கவே பலிக்காது.

இந்த நினைவை நமதாண்டவர் பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறார். கொலைவிலக்குக் கற்பனையை அவர் மலைப்பிரசங்கத்தில் விஸ்தரித்தபோது (மத். 5. 23, 24.), ஒருவன்

தன் சகோதரனுடன் நல்மனமற்றிருந்தால் அவன் பிதாவுக்குப் பிரியமான ஆராதனை செய்யவே முடியாது என்று தமது சீஷருக்குப் போதித்தார். "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறையுண்டு என்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." அவ்வாறே, அதற்குப்பின் ஒருமுறையும் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டிய விதத்தைப்பற்றிப் பேசினபோது: "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்திருக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபிக்கக் கற்பித்தபின் அந்த ஜெபத்தின் முடிவில்: "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" என்று எச்சரிக்கிறார். இரக்கங்கெட்ட ஊழியக்காரனைப்பற்றிய உவமையின் முடிவில் அவர் அந்த உவமையின் கருத்தைச் சுருக்கி: "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." அவ்வாறே, பட்டுப்போன அத்திமரத்தண்டை நின்றுகொண்டு நமது விசுவாசத்திற்கும் விசுவாசம் நிறைந்த ஜெபத்திற்கும் எப்பேர்ப்பட்ட அதிசய வல்லமையுண்டு என்று விளக்கின இந்தத் தருவாயிலும், அவர்: "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறையுண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" என்கிறார். இந்த நினைவை இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் வெளியிட்டதற்கு நிமித்தமில்லாததுபோல நமக்குத் தோன்றும். ஆயினும் அதற்கு நிமித்தமிருப்பதைப் பார்க்கலாம். அவர் நாசரேத்தில் வசித்த காலத்திலும் அதற்குப் பின்னிட்டும், அயலாருக்கு அன்புபாராட்டல் என்னும் தேவ நியாயப்பிரமாணம் ஜெபஜீவிகளாயிருப்போராலும் மீறப்படுவதையும், அந்தப் பெரிய பாவ



தோஷத்தினிமித்தம் அவர்கள் ஜெபம் பலங்குறைந்து பலிக்காமற்போனதையும் அவர் கண்டிருந்தார் என்பதை அவர் நிர்நிமித்தமாய்ச் சொன்னதுபோல் தோன்றுகிற இந்த வாய்பிறப்பு நமக்கு வெளிப்படுத்துகிறது. தேவன் எவர்கள்மேல் அன்புவைத்திருக்கிறாரோ அவர்கள்மேல் நாமும் அன்புவைத்து உருகுகிறோம் என்பது நமக்கு நெஞ்சறிந்த நிச்சயமாயிருந்தால், நாம் தேவசமுகத்தில் அச்சமின்றி தாராளமாய் நெருங்கவும் நமது விசுவாசத்தைப் பலப்படுத்தவும் நமக்கு அதைப்போல் உதவுவது வேறில்லை என்று, அவர் தாம் கண்ட அநுபவத்தை நமக்கும் வாய்க்கப்பண்ண மனங்கொண்டிருந்ததாகவும் அவருடைய அந்த வாய்ப்பிறப்பு தெரிவிக்கிறது.

இங்கே போதிக்கப்படுகிற முதலாம் பாடம்: நமக்கு எப்போதும் மன்னிக்கிற மனது இருக்கவேண்டும் என்பது. "நாங்கள் மன்னித்திருக்கிறதுபோல எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபிக்கிறோம். "கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்று திருவேதம் கூறுகிறது. தேவன் மனதாரப் பூரணமாய் நமக்கு மன்னிக்கிற மன்னிப்பே நாம் பிறருக்கு மன்னிக்கிற மன்னிப்புக்கு அளவும் சட்டமுமாயிருக்கவேண்டும். அல்லாவிடின், மன்னிப்பு என்கிற பெயருக்கே யோக்கியமற்ற, அறைகுறையான, மனப்பூர்வங்கெட்ட நமது மன்னிப்பு தேவன் நமக்கு மன்னிக்கிற மன்னிப்புக்கு அளவும் சட்டமுமாயிருக்கும். தேவன் நமக்கு மன்னிப்புப்பாராட்டுகிற அவருடைய கிருபையை விசுவாசிக்கிற விசுவாசமே நாம் செய்கிற எந்த ஜெபத்திற்கும் வேர். நம்முடைய பாவங்களுக்குத் தக்கபடி தேவன் நமக்குச் செய்வாராகில் நாம் செய்கிற ஒரு ஜெபமும் கேட்கப்பட நீதியில்லை. தேவன் நமக்கு அன்பு வழங்கவும் ஆசீர்வாதம் அளிக்கவும் அவருக்கு வழிதிறந்துவைப்பது பாவமன்னிப்பு: தேவன் நமது பாவத்தையெல்லாம் மன்னித்துவிட்டாலேதான் நமக்கு வேண்டியதையெல்லாம் சம்பாதித்துத் தருகிற சக்தி நமது ஜெபத்திற்கு இருக்கிறது. தேவன் நமக்குப் பாவத்தை மன்னிக்கிற அன்பே நமது ஜெபம் பலிப்பதற்கு உறுதியான காரணம். அது நமது உள்ளத்

தைக் கைக்கொண்டால்மாத்திரம் நமக்கு விசுவாசஜெபம் கைகூடும். இதுவுந்தவிர, அது நமது உள்ளத்தைப் பிடித்துக்கொண்டது முதற்கொண்டு நாம் அன்புஜீவியம் செய்வோம். தேவன் நமக்கு வழங்கின அன்பினால் நமக்குத் தெரியவந்திருக்கிற அவருடைய மன்னிக்கிற குணம் நமக்குள்ளும் மன்னிக்கிற குணமாய்த் தங்கியிருக்கும். நம்முள்ளத்திலே வார்க்கப்பட்டு அங்கேயே தங்கியிருக்கிற தேவனுடைய மன்னிக்கிற அன்பின் பலத்தாலேயே அவர் மன்னிக்கிறதுபோல நாமும் மன்னிக்கக் கூடியவர்களாவோம். எவரேனும் நமக்குத் தாங்கமுடியாத பெரிய நிஷ்டூரமாகிலும் அநியாயமாகிலும் செய்தால், நாம் எல்லாவற்றிற்கும் முந்தி நமக்குள் தேவனுடைய மனதுக்கு ஒத்த மனது வந்திருக்கப் பார்க்கவேண்டும். அது இன்றேல் மானக்கேடு வந்ததே என்று நாம் மனமெரியாமலும், எதிரிக்குள்ள நியாயம் எனக்கும் உண்டு என்று நாம் எதிர்வழக்குப் பாராட்டாமலும், நமக்குத் தீமை செய்தவர்களுக்கு நாம் தீமைசெய்வது சரியே என்று பழிவாங்காமலும் நம்மை அடக்கித் தடுத்துவிடும். நமது தினஜீவியத்தில் நமக்குப் பிறர் மனமடிவும் தொந்தரையும் உண்டாக்கும்போது, முன்கோபம், கடுஞ்சொல், பதற்ட நிதானிப்பு, இப்பேர்ப்பட்ட தோஷங்கள் நம்மிடத்தில் உண்டாகாதபடி நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அதெல்லாம் எங்களுக்கு இயற்கையேதவிர அதினால் எங்கள் உள்ளங்களில் நாங்கள் எவ்விதக்கேடும் யாருக்கும் நினைக்கிறதில்லை என்றும், எங்களுக்கு கோபம் வருகிறதும் ஒரு கணப்பொழுதுதான், அது போகிறதும் ஒரு கணப்பொழுதுதான் என்றும், தேவனும் கிறிஸ்துவும் மன்னிக்கிறதுபோல நாங்களும் மன்னிக்கவேண்டும் என்று கேட்பது மானிட இயற்கைக்கு மிஞ்சினதைக் கேட்பதாகும் என்றும் சாக்குச்சொல்லி நாம் அந்த தோஷங்களைப் பேணிவைத்துக்கொள்ளலாகாது. "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்னும் கட்டளையை எழுத்தால் உள்ளபடிக்கு நாம் கைக்கொள்ளவேண்டும். செத்த கிரியைகளற நமது மனச்சாட்சியைச் சுத்திகரிக்கிற திரு இரத்தம் தன்னையே தேடுதல் அறவும் நம்மைச் சுத்திகரிக்கிறது; அந்தத் திரு இரத்-



தம் நமக்கு விளங்கவைப்பது மன்னிக்கிற அன்பு; இந்த மன்னிக்கிற அன்பு நமது உள்ளத்தைத் தனக்குச் சொந்தமாக்கி அங்கேயே இருந்துகொண்டு, நம்மூலமாய்ப் பிறருக்குப் பாயும். தேவன் நமக்கு மன்னிக்கிற அன்பு நமக்குள் இருக்கிறது என்பதற்கு நாம் பிறருக்கு மன்னிக்கிற அன்பே சாட்சி. ஆதலால் நாம் பிறருக்கு மன்னிக்கிற அன்பே நமக்குள் விசுவாச ஜெபம் பிறக்கும் வழி.

இதில் நாம் படிக்கவேண்டிய பொதுவான இரண்டாம் பாடம் ஒன்றிருக்கிறது; அது நாம் தேவனோடு சஞ்சரிக்கிறோமா இல்லையா என்பதை நமது தினசரி பிரபஞ்ச ஜீவியம் காட்டிவிடும் என்பது. ஜெப வேளைக்கென்று தேவனுக்குப் பிரியமான ஒரு மனநிலை தேவையென்று நினைத்து கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் ஜெபமனநிலை என்னப்பட்ட சில மனநிலைகளை தங்களுக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நமது ஜீவியம் அநேக உதிரித் துண்டுகள் ஒன்றுகூடிச் சேர்ந்ததல்ல. அப்படியிருந்தால்மாத்திரம், ஒருவேளைக்கு ஆனது இன்னொரு வேளைக்கு ஆகாது என்று சொல்லி, வேளைவேளைக்கு எது ஆனதோ அதை வைத்துக்கொண்டு மற்றதை நீக்கிவைக்கலாம். இது சில கிறிஸ்தவர்களுக்குத் தெரிகிறதில்லை; சிலருக்குத் தெரிந்திருந்தாலும் மறந்துவிடுகிறார்கள். நமது ஜீவியம் துண்டுதுண்டாய் உதிர்க்கமுடியாத முழுமை. நமது ஜெபவேளை நமது தினஜீவிய வேளையோடு சேர்ந்த ஒரு சிறுபாகம். தேவன் ஜெபவேளையில் நமது மனநிலை எப்படியிருக்கிறது என்று பாராமல், நாள் முழுமையும் நமது மனநிலை எப்படியிருந்திருக்கிறது என்று சோதிப்பார். ஜெபமனநிலை என்பது, உள்ளபடி பார்த்தால், வேறு நாட்டங்களில் திரிகிற மனவுணர்ச்சியைக் கட்டாயமாய்ப் பிடித்து ஜெபத்திற்கென்று அடக்கி வைத்துக்கொள்ளுதலே தவிர வேறல்ல. ஆகையால், இதன்படி தேவன் ஒருவனை நிதானிக்கமாட்டார். உள்ளபடிக்கே அவன் மனதின் நிலை என்ன, அவன் ஆத்துமா விரும்பித் தேடுவது எது என்பது நாள் முழுமையும் அவனுடைய ஜீவியத்திற்கு இருந்த தன்மையினால் வெளிப்படும். ஆகையால், இதைப் பார்த்தே தேவன் நமது மனநிலையை நிதானிப்பார். நான் தேவனோடு

சஞ்சரிப்பதற்கு தேவசமுகத்தில் வரும்நேரம் நான் மனுஷ சங்காத்தத்திலும் பிரபஞ்ச விவகாரங்களிலும் சஞ்சரித்த நேரத்திலிருந்து பிரிந்த பிரத்தியேகமான ஒரு துண்டல்ல, இரண்டும் ஒரே துண்டு; இந்த நேரத்தில் தேவசமுக தரிசனை எனக்கு இல்லாதிருந்தால், அந்த நேரத்திலும் அது எனக்கு இராது. என் அயலானைப்பற்றி எனக்கு இருக்கிற என் நெஞ்சறிந்த மனத்தாங்கல் மாத்திரமல்ல, பிறருடன் நான் விவகரிக்கும் வேளையெல்லாம் என் நினைவும் நிதானிப்பும் நடக்கிற நடை, அவர்களைப்பற்றி என் உள்ளத்தில் எழும்புகிற பட்சமற்ற நினைவுகள் என் வாயில் பிறக்கிற அன்பில்லாச் சொற்கள், இவைகளும், நான் அவைகளைக் கவனியாமற் போனால், என் ஜெபத்திற்குத் தடையுண்டுபண்ணும். தேவனுடைய சித்தத்திற்கும் அன்பிற்கும் ஒத்த ஜீவியஞ்செய்கிற சுபாவம் நமக்கு உண்டாயிருந்தால்மாத்திரம், அதிலிருந்து பலிக்கிற ஜெபம் பிறக்கும். ஜெபவேளையில் நான் என் மனநிலையை எப்படி வைத்துக்கொள்ளப் பார்க்கிறேனோ அதின்படியல்ல, மற்ற வேளைகளிலெல்லாம் என் மனநிலை எப்படியிருக்கிறதோ அதின்படி தேவன் என் ஜெபத்திற்குச் செய்வார்.

மேலே சொன்ன நினைவுகளையெல்லாம் திரட்டி மூன்றும் பாடத்திற்குள் அடக்கிவிடலாம். நாம் இப்பூவுலகில் மனுஷருடன் சஞ்சரிக்கிற சஞ்சரிப்பில் நமது உள்ளத்தில் இருக்க வேண்டிய முதன்மையான ஒரே குணம் அன்பு. அன்பு ஒன்று நமக்கு இருந்தால் மற்றதெல்லாம் அதிலிருந்தே தானாய் உண்டாய்விடும். மன்னிக்கிற தன்மை அன்புத்தன்மைதான். தேவன் அன்புச்சொரூபமாயிருப்பதினாலேயே அவர் மன்னிக்கிற இயல்புடையவராயிருக்கிறார். நாம் போய் அன்பிற்குள்ளேயே குடியிருந்தால் மாத்திரம் தேவன் நமக்கு மன்னிக்கிறதுபோல் நாம் பிறருக்கு மன்னிக்கக் கூடியவர்களாவோம். சகோதரருக்கு அன்புப் பாராட்டுதல் நமக்கு இருந்தால், அதுவே தேவனிடத்தில் நாம் அன்புடையவர்கள் என்பதற்குச் சாட்சி, தேவசமுகத்தில் நாம் தைரியமுள்ளவர்களாயிருப்பதற்கு ஆதாரம், நமது ஜெபம் பலிக்கும் என்பதற்கு நிச்சயம் (1 யோவா. 4. 20; 3. 18–21, 23.)



"கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்; இதினாலே நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, நாம் வேண்டிக்கொள்ளுகிறது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்." அன்பு நமக்கு இல்லாதிருந்தால் விசுவாசமும் நமக்கு உதவாது, நற்கிரியையும் நமக்கு உதவாது. அன்பே நம்மை தேவனிடத்தில் கிட்டிச் சேர்க்கும், அன்பே நமக்கு உண்மையாகவே விசுவாசம் இருக்கிறது என்று ரூபிக்கும். மாற். 11. 24ல் இருக்கிற பெரிய ஜெபவாக்குத்தத்தத்திற்கு முன்வரும் "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்" என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அதற்குப் பின்வரும் "பிறரிடத்தில் அன்பாயிருங்கள்" என்பதும். எனக்கு மேலேயிருக்கிற ஜீவனுள்ள தேவனிடத்திலும் என்னைச் சூழவிருக்கிற ஜீவனுள்ள மனுஷரிடத்திலும் என் இருதய நிலை சரியாய் இருந்தால்மாத்திரமே என் ஜெபம் பலிக்கும்.

நாம் பிறருக்காக உழைப்பதற்கும் பிறருக்காக ஜெபிப்பதற்கும் இப்பேர்ப்பட்ட அன்பு வெகு முக்கியம். நாம் பிறருடைய ஆத்துமாக்களை இரட்சிக்கத்தக்க வேலையை ஆரம்பிப்பதற்குமுன் அவர்கள்பொருட்டு நம்மையே தியாகம்செய்கிற அன்பின் வசத்தில் நம்மை ஒப்புவித்திருக்க வேண்டும். இப்படிச் செய்யாமல், நாம் பலமுறை கிறிஸ்துவின் நிமித்தம் நமக்கு வைராக்கியம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டும், நமது சுய ஆத்துமாவுக்குச் சுகந்தேடுகிறோம் என்று பிதற்றிக்கொண்டும் கிறிஸ்துவுக்காக உழைக்கும் வேலையில் தலையிட்டுக்கொள்ளுகிறோம். இதினால் நமது விசுவாசம் பலமற்றுப் போகும்; ஆகையால் நாம் செய்கிற வேலையில் சித்தியடையாமலிருப்பது ஆச்சரியமல்ல. நேசிக்கப்படுவதற்கு எவ்வளவேனும் தகுதியற்று நிர்ப்பாக்கியமான ஈனஸ்திதியிலிருக்கிற எவனையும் அலட்சியம் செய்யாமல், இழந்துபோனதைத் தேடிக்கொண்டிருக்கிற மேய்ப்பனாகிய இயேசுவின் உருக்கமான அன்பின் வெளிச்சத்திலே நாம்

அவனைப் பார்க்கவேண்டும்; அவனைப் பார்க்கும்போது இயேசு கிறிஸ்துவையே நாம் பார்க்கிறதாக எண்ணி அவனை இயேசுவின் நிமித்தம் மெய்யாகவே சிநேகிக்கிற நமது உள்ளத்திற்குள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதுதான் விசுவாசமுள்ள ஜெபம் செய்வதற்கும் சித்தியடைகிற வேலை செய்வதற்கும் வழி, வேறில்லை. நாம் பிறருக்கு மன்னிக்கவேண்டுமென்று இயேசு சொன்னபோது, அதற்கு வேர் அன்பே என்று தெரிவிக்கிறார். மலைப்பிரசங்கத்தில் அவர் ஜெபத்தைப்பற்றிய உபதேசத்தையும் வாக்குத்தத்தங்களையும் சொல்லும்போது, பரலோகத்திலிருக்கிற பிதா இரக்கமுள்ளவரா யிருக்கிறதுபோல நாமும் இரக்கமுள்ளவர்களா யிருக்கவேண்டும் என்பதை அவற்றுடன் சேர்த்துச் சொல்லுகிறார் (மத். 5. 7, 9, 22, 38–48.). அப்படியே இங்கேயும் பார்க்கிறோம்: விசுவாசமுள்ள ஜெபம் செய்வதற்கு அன்புஜீவியமே வழி.

விசுவாசமுள்ள ஜெபம் செய்கிற பழக்கத்தைப்போல, அல்லது, அப்பேர்ப்பட்ட ஜெபம் செய்யவேண்டுமென்று கபடில்லாமல் முயற்சிக்கிற முயற்சியைப்போல, நமது உள்ளத்தை ஆராய்ந்து சோதிக்கக்கூடியது வேறில்லையென்று அநுபவமுள்ளவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சுய இருதயச் சோதனை இல்லாவிட்டால் பலிக்கும் ஜெபம் செய்வது கூடாது. ஆனால், அது இருதயத்தை வாள்போல் அறுக்கும். அதற்குப் பயந்து, தேவன் நமது ஜெபத்தைக் கேளாமைக்கு அவர் நமக்குச் சொல்லாததும் அவருக்குமாத்திரமே தெரிந்ததுமான காரணம் வேறே இருக்கும் என்று நினைத்து இருதயச் சோதனை செய்யாமல் விட்டுவிடக்கூடாது. "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாம லிருக்கிறீர்கள்." இந்த தேவவசனம் நமது உள்ளங்களைச் சோதிப்பதாக. நாம் செய்யும் ஜெபம் தேவனுடைய மனதின்படியும் பிறருக்கு அன்பு பாராட்டியும் பிழைக்கிற பிழைப்பு நமக்குக் கைவசமாய் விட்டது என்று வெளிப்படுத்துகிற வெளிப்படுத்தலாய் இருக்கிறதா என்று நம்மைக் கேட்போமாக. விசுவாசம் ஆழ வேர்விட்டுத் தழைத்தோங்குவதற்குத் தகுதியான நிலம் அன்பேதவிர வேறில்லை. நமது அன்பு பரலோகத்திற்கு



நேராய் நமது இருதயத்தை மலரச்செய்து தன் கைகளை வானத்தைநோக்கி விரிக்கும்போது, நமது உள்ளம் பொல்லாதவர்களுக்கும் அபாத்திரருக்குங்கூட மலர்ந்திருக்கிறதா என்று பரமபிதா எப்போதும் பார்க்கிறார். அந்த அன்பு பரிபூரணம் அடைந்த அன்பல்ல என்பது மெய்யே; ஆயினும், அது பரிபூரணம் அடையவேண்டுமென்று குறிவைத்திருக்கிற அன்பாயிருப்பதுந்தவிர தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்புகிற அன்பாயுமிருக்கிறது. அப்பேர்ப்பட்ட அன்பு மாத்திரமே தான் நாடிய நன்மையைத் தப்பாமல் பெற்றுக்கொள்ளும். தேவனுடைய அன்பு வந்து தனக்குள் குடியிருக்கச் செய்துகொண்டு; தேவன் அன்புகாட்டுவதுபோல் தன் தினஜீவியத்தில் தானும் அன்புகாட்டப் பழகுகிறவன்மாத்திரமே தான் செய்கிற ஜெபமெல்லாம் தப்பாமல் பலிக்கச்செய்கிற அன்பு ஒன்று இருக்கிறது என்று நம்புகிறதற்குச் சக்தியுள்ளவனாயிருப்பான். சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டிமாத்திரமே, அதாவது, தீமைக்குத் தீமை செய்யாமல் பிறர் உண்டாக்குகிற சகல இடர்களையும் சகித்து உத்தரிக்கிற அன்பே, தான் தேவனிடத்தில் செய்கிற ஜெபத்தில் சித்தியடையும். இரக்கமுள்ளவர்கள் இரக்கம்பெறுவார்கள்; சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

### "ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஸ்தோத்திரிக்கப்பட்ட பிதாவே! தேவரீர் அன்புமயமானவர்; அன்பில் நிலைத்திருப்பவன் மாத்திரமே உம்மிலும் உமது ஐக்கியத்திலும் நிலைத்திருப்பான். ஜெபத்தில் உம்மோடு நான் செய்யும் ஐக்கியத்திற்கும் இது செல்லும் என்று உமது நேசகுமாரன் இன்று எனக்கு மறுபடியும் போதித்திருக்கிறார். ஆ என் தேவனே! உமது பரிசுத்த ஆவியால் உமது அன்பை என் உள்ளத்திலே சொரிவீராக. அது எனக்குள் அன்பு ஊற்றாய் இருந்துகொண்டு என்னைச் சூழ இருப்பவர்கள்மேல் பெருகி வழியப்பண்ணும். இப்படி என் அன்புஜீவியத்திலிருந்து விசுவாசமுள்ள ஜெபம் செய்கிற வல்லமை எனக்குள் உதிக்கச்செய்யும். ஆ என் பிதாவே! என்னைச் சூழ இருப்பவர்களெல்லாருக்கும் அன்புவழங்குகிற ஜீவியம்

நான் செய்வதே என் தேவனுடைய அன்பு எனக்கு வழங்கப்படுகிற ஜீவியத்திற்கு வழி என்று உமது ஆவியைக்கொண்டு என் அநுபவத்திலே நான் கண்டறியப்பண்ணும். விசேஷமாய், எனக்கு யார் விசனமுண்டாக்கினாலும் அதை மன்னிக்கிறதிலே நாளுக்குநாள் என் பிரியம் அதிகப்படுகிற குறியைக்கொண்டு நீர் எனக்கு மன்னித்திருக்கிற மன்னிப்பு எனக்கு உயிரும் பலமுமாயிருக்கிறது என்று நான் கண்டுணரச் செய்வீராக.

கர்த்தராகிய இயேசுவே! என் இன்பமான உபாத்தியாயரே! மன்னிக்கவும் அன்புகூரவும் நீரே எனக்குக் கற்றுக்கொடும். உமது திரு இரத்தத்திற்கு இருக்கிற வல்லமை என் பாவங்கள் எனக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது என்பதை என் நெஞ்சறிந்த சத்தியமாய் எனக்குக் காட்டப்பண்ணும். இப்படி நீர் எனக்குப் பாராட்டுகிற மன்னிப்பையும் நான் பிறருக்குப் பாராட்டுகிற மன்னிப்பையும் பார்த்து தேவலோகத்தாரெல்லாம் சந்தோஷிப்பார்களாக. நான் பிறரோடு செய்கிற சகவாசத்தில் எதேது நான் தேவனோடு சகவாசம் செய்வதற்குத் தடையாயிருக்குமென்று எனக்கு உணர்த்தியருளும். இவ்வாறு, என் சொந்த வீட்டிலும் பிறர் நடுவிலும் நான் செய்கிற என் தினஜீவியமே விசுவாசமுள்ள ஜெபம் செய்வதற்கு எனக்கு அவசியமான பலமும் நிச்சயமும் அடைந்துகொள்ளுகிற பள்ளிக்கூடமாய் இருப்பதாக. ஆமென்.

---



# பதினைந்தாம் பாடம்.

## 'இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தால்'

அல்லது,

## ஒருமித்த ஜெபத்தின் வல்லமை.

"அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே நான் இருக்கிறேன்." (மத். 18. 19, 20.)

நமது ஆண்டவர் தமது ஜெபப் பாடசாலையில் சொன்ன முதற்பாடங்களில் ஒன்று: மனிதரால் காணப்பட நாம் ஜெபிக்கலாகாது என்பது. உன் அந்தரங்க அறைக்குள் பிரவேசித்து பிதாவோடு தனித்திரு. இதினால் ஜெபம் என்பதற்குள்ள அர்த்தத்தை நமக்குச் சொன்னார். நாம் ஒவ்வொருவரும் தனித்து பிதாவைச் சந்தித்து அவருடன் நேச உறவாடுதலே ஜெபமாகும். இதை நமக்குச் சொன்னபின் இப்போது இரண்டாம் பாடம் சொல்லுகிறார். அது அந்தரங்கத்தில் தனித்து ஜெபிப்பதைத்தவிர வெளியரங்கத்தில் ஒருமித்து ஜெபிப்பதும் நமக்கு அவசியம் என்பது. எதையாகிலும் குறித்து இருவராவது மூவராவது ஒருமனமுடையவர்களாய்க் கேட்கும் ஜெபத்திற்கு அவர் ஒரு விசேஷித்த வாக்குத்தத்தம் கொடுக்கிறார். ஒரு மரத்தைப் பார்த்தால், அதினொருபாகமாகிய வேர் பூமிக்குள் மறைந்திருக்கும்; அதின் மறுபாகமாகிய முதலும் கிளைகளும் சூரிய வெளிச்சத்திலே விரிந்திருக்கும். அதுபோலவே, நமது ஜெபம் பூரணவளர்ச்சியடைவதற்கு நமது ஆத்துமா தனித்து தேவனைச் சந்திக்கிற அந்தரங்கமும் வேண்டும், இயேசுவின் நாமத்திலே ஒருமித்துக் கூடுகிறவர்களுடைய கூட்டுறவாகிய வெளியரங்கமும் வேண்டும்.

இதேன் வேண்டும் என்று தெளிவாய்ச் சொல்லலாம். ஒருவனுக்கு தேவனோடு சம்பந்தம் இருப்பது எப்படி மெய்யோ அப்படியே அவனுக்குத் தன்னோடொத்த மற்ற மனுஷரோடு சம்பந்தம் இருப்பதும் மெய்; அவனும் அவர்களும் ஒன்று. கிருபை நமக்கும் தேவனுக்கும் உள்ள சம்பந்தத்தைப் புதுப்பிக்கிறதுபோலவே, நமக்கும் பிறருக்கும் உள்ள சம்பந்தத்தையும் புதுப்பிக்கிறது. அதினால், நாம் "என் பிதாவே" என்று மாத்திரமல்ல; "எங்கள் பிதாவே" என்றும் சொல்லப் படிக்கிறோம். ஒரு குடும்பத்திலிருக்கிற பிள்ளைகள் தங்கள் தகப்பனை எந்நேரம் பார்த்தாலும் தனித்தே தவிர ஒன்றுகூடி தங்கள் விருப்பங்களையும் அன்பையும் அவனுக்குத் தெரிவிக்கிறதில்லையென்றால், அதைப்போல் இயல்பிற்கு விரோதமானது வேறிராது. விசுவாசிகள் ஒரே குடும்பத்து அவயவங்களாய் மாத்திரமல்ல, ஒரே சரீரத்து அவயவங்களாயுமிருக்கிறார்கள். சரீரத்திலே ஒவ்வொரு அவயவமும் பிற அவயவங்களுடன் சம்பந்தப்பட்டு அவைகளுடைய உதவி தேடும் அவசியமுடையது. உறுப்புகளெல்லாம் ஒன்றுக்கொன்று இனம் பாராட்டி ஒத்து வேலைசெய்தால்மட்டும், உடம்பிலிருக்கிற உயிர் தன் முழு வேலையையும் சரியாய்ச் செய்யக் கூடியதாயிருக்கும். அவ்வாறே, கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் இனம் பாராட்டி ஒத்திருந்தாலொழிய, தேவன் தமது ஆவியைக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிற முழு நன்மையையும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது. விசுவாசிகள் மனமொத்து ஒருவருடனொருவர் நேச ஐக்கியமாயிருக்கும்போதுதான், தேவ ஆவியானவர் தமது முழு வல்லமையையும் வெளிப்படுத்துவார். நூற்றிருபதின்மர் ஒரே இடத்தில் தரித்திருந்து ஒருமனப்பட்டு ஜெபித்தபோதுதான் மகிமைப்பட்ட ஆண்டவருடைய ஆசனத்திலிருந்து தேவாவியானவர் வந்தார்.

நாமின்று தியானிக்கும் திருவசனத்தில், ஒருமனப்பட்ட ஜெபத்திற்கு இன்னின்ன குறிகள் இருக்கும் என்று நமது ஆண்டவர் தெரிவிக்கிறார். நாம் வேண்டுமென்று கேட்கிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும், நமக்கு ஒருமித்த மனம்





இருக்கவேண்டும். இதுவே முதல் குறி. ஒருவன் இஷ்டப்பட்டுக் கேட்கிறதை அவனுடன் சேர்ந்துகொண்டு நாமும் கேட்கச் சம்மதிப்பது போதாது. திட்டவட்டமாய் வரையறுத்து நாமெல்லாருமே ஒருமித்து விரும்புகிற ஓரே காரியம் இருக்கவேண்டும். நமது ஜெபமெல்லாம் ஆவியோடும் உண்மையோடும் கூடியிருக்க வேண்டியதுபோலவே, நமது ஒருமிப்பும் ஆவியோடும் உண்மையோடும் கூடியிருக்கவேண்டும். அப்போர்ப்பட்ட ஒருமிப்பு நமக்கு இருக்குமானால், நாம் கேட்கும் காரியம் இன்னது என்பது நமக்கே திட்டமாய்த் தெரிவதுந்தவிர, அது தேவனுடைய சித்தத்திற்குப் பொருந்தினதா, கிடைக்கும் என்கிற நிச்சயத்துடன் நாம் அதைக் கேட்கலாமா, நாம் கேட்டதைக் கேட்டபடியே பெற்றுக்கொண்டாயிற்று என்று நம்ப நமக்கு மனம் எழும்புமா, என்னும் சந்தேகங்களும் தீர்ந்துவிடும்.

ஒருமித்த ஜெபத்தின் இரண்டாம் இலட்சணம் நாம் இயேசுவின் நாமத்தில் அல்லது இயேசுவின் நாமத்திற்குள் கூடியிருப்பது. இயேசுவின் நாமம் ஏன் நமது ஜெபத்திற்கு அவசியம், அதற்கு இருக்கிற வல்லமை எப்போர்ப்பட்டது, இவைகளைப்பற்றி இனியொரு பாடத்தில் விஸ்தாரமாய்ப் படிப்போம். விசுவாசிகள் ஒருமித்துக் கூடுகிற பொதுவான நடுஸ்தலம், அவர்களை ஒன்றுக்குகிற ஒருமைக் கயிறு இயேசுவின் நாமமாயிருக்கவேண்டும் என்று நமதாண்டவர் இந்தப் பாடத்தில் நமக்கு உணர்த்துகிறார். ஒரு குடும்பத்தில் இருப்பவர்களையெல்லாம் தன்னுள் அடக்கி வைத்திருப்பதும் அவர்களைப் பிரதிதினமும் ஓரிடத்தில் கூட்டுவிப்பதும் அவர்கள் குடியிருக்கும் வீடு. அதுபோலவே, விசுவாசிகள் குடியிருக்கும் வீடு, அவர்கள் ஒருமித்திருக்கும் இடம், இயேசுவின் நாமம். "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்." அந்த நாமத்தை அறிந்து அதின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு அது நிஜமான இடமேதவிர வேறல்ல. ஆதலால், அதற்குள் அவர்கள் ஒன்றுகூடியிருக்கையில் அது அவரையே தங்களுடன்கூட இருக்கிறவராய் அநுபவிப்பதாகும். தமது சீஷர்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்புபாராட்டி ஒருவருக்

கொருவர் மனமொத்து ஒற்றுமையாய் இருப்பது இயேசுவுக்கு அளவில்லாத பூரிப்பு. "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்திற்குள் எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே நான் இருக்கிறேன்." ஒருவர் மேலொருவர் அன்புபூத்த உள்ளமுடையவர்களாய்த் தமது சீஷர்கள் ஒருமித்துக்கூடி ஜெபிக்கும் கூட்டத்திலே, ஜீவனுள்ள இயேசுதாமே அவர்களுள் ஒருவராய் எழுந்தருளியிருப்பதினாலேயே ஒருமித்த ஜெபத்திற்கு அப்பேர்ப்பட்ட வல்லமை உண்டாயிருக்கிறது.

ஒருமித்த ஜெபத்திற்கிருக்கிற மூன்றும் இலக்ஷணம், கேட்டது கேட்டபடி பலிப்பது: "பூலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்." ஒருமித்த தேவாராதனை, ஒருவரையொருவர், ஞானஜீவனுக்கு எழுப்பி ஒருவரையொருவர் ஊன்றக் கட்டும்பொருட்டு ஒருமித்துக் கூடுகிற கூட்டம், இவைகளுக்குத் தனித்தனியே வெவ்வேறே பிரயோஜனம் உண்டு என்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், நமது இரட்சகர் இங்கே சொல்லுகிறதும் கற்பிக்கிறதுமான ஒருமிப்பு இவைகளல்ல. அவர் இங்கே குறிப்பிக்கிற ஒருமிப்பு ஒரு விசேஷித்த ஜெபத்திற்கு விசேஷித்த உத்தரவு வாங்குகிறதற்குக் கருவியாய் உதவுகிற ஒருமிப்பு. யாவர்க்கும் வெளிப்படத் தெரிந்த உத்தரவு கிடைக்காத ஒருமித்த ஜெபக்கூட்டம் விபரீத ஜெபக்கூட்டம். நம்மில் எவருக்காயினும் இன்னின்னது வேண்டும் என்னும் அவசியம் தோன்றி, அதை தேவனிடத்தில் கேட்க ஆவலுமுண்டு ஜெபிக்கும்போது, அதைப் பெறுவதற்குத் தேவையான விசுவாச பலம் போதாமலிருந்தால், பிறருதவியால் நமக்குப் பலம் தேடிக்கொள்ளவேண்டும். விசுவாசமும், அன்பு, ஆவி இம்மூன்றும் ஒத்துப்பொருந்தி நாம் ஒருமித்து ஜெபிக்கும்போது, இயேசுவின் நாம வல்லமையும் இயேசுவின் சமுக வல்லமையும் தவக்கமும் தடையுமின்றி வளமாய் வேலைசெய்வதினால் நமது ஜெபத்திற்கு நிச்சயமாய் உத்தரவு அகப்படும். நிஜமாகவே நாம் ஒருமித்த ஜெபம் செய்தோம் என்பதற்கு நமக்கு உறுதியான அடையாளம் என்னவென்றால், கைம்மேல் கனி, கேட்டது பலித்தல். "பர



லோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்."

ஒருமித்த ஜெபம் செய்ய நமக்குக் கிடைத்திருப்பது எப்பேர்ப்பட்ட சிலாக்கியம்! அது எப்பேர்ப்பட்ட வல்லமையெல்லாம் செய்யும்! ஒருமித்த ஜெபத்தில் கிடைக்கிற இயேசுவின் பிரசன்னத்தையும் வல்லமையையும் அநுபவிப்பதற்கே நாங்கள் அவர் நாமத்தில் புருடபாரியாக இணைக்கப்பட்டோம் என்று விசுவாசிகளான புருஷனும் பெண்ஜாதியும் அறிந்திருக்கட்டும் (1 பேது.); இரண்டு மூன்றுபேர் ஒத்து மனங்கலந்து ஜெபிக்கிறதினால் ஒருவருக்கொருவர் எப்பேர்ப்பட்ட வல்லமையாய் உதவிசெய்துகொள்ளலாம் என்று இஷ்டமித்திரர்களாயிருப்பவர்களுடைய உள்ளங்களில் நிச்சயம் பிறக்கட்டும்; ஜெபக்கூட்டம் நடக்குந்தோறும், இயேசுவின் நாமத்திற்குள் நாங்கள் கூடவேண்டும் என்னும் ஆவலும், அவர் எங்களுடன் எங்கள் நடுவில் இருக்கிறார் என்கிற நிச்சயமும், நாங்கள் கேட்கிற விண்ணப்பம் எங்களுக்கு அருளப்படும் என்று நம்பிக் காத்திருக்கிற உறுதியும், நம் முள்ளத்தில் கரைபுரண்டு பெருகியிருக்கட்டும்; கிறிஸ்தவ சபை எங்கெங்கே யிருக்கிறதோ அங்கங்கேயெல்லாம் பலிக்கும் ஜெபம் செய்வதே அது ஒருமித்துக்கூடுகிற முக்கிய நோக்கம். அது தனக்கு இருக்கிற வல்லமையைக் காட்டக் கூடிய உச்சிதமாதிரி அதுவே என்பது அதற்குத் தெரிந்திருக்கட்டும்; உலகமெங்குமிருக்கிற பொதுவான திருச்சபையில், தேவனுடைய இராஜ்யம் வரவேண்டும், அதின் இராஜாவானவர் தாமே முந்தித் தமது பரிசுத்தஆவியை வல்லமையாய் ஊற்றுவதினாலும் அதன்பிறகு தாமே மகிமையாய்ப் பிரசன்னமாவதினாலும் வரவேண்டும் என்று ஏங்கி, தேவனைப்பார்த்து ஓயாமல் ஜெபிக்கிற ஒருமித்த ஜெபக்கூச்சலோசை எழும்பிக்கொண்டேயிருக்கட்டும்; அப்போது, தேவனுடைய வாக்கு பலித்து நிறைவேறுவதைப் பார்க்க ஆவலாய் ஒருமித்துக் காத்திருக்கிற இவர்களெல்லாருக்கும் கிடைக்கிற பிரபலமான நன்மையையும், இவர்கள் மூலமாய்ப் பிறருக்குக் கிடைக்கிற பெரும்பேறுகளையும் விவரித்துச் சொல்ல யாராலாகும்.

ஒருமித்த ஜெபத்திற்குப் பெரிய வல்லமையுண்டு என்பதை பவுல் அப்போஸ்தலர் உள்ளபடிக்கு நம்பினார். "நீங்கள் தேவனை நோக்கி எனக்காகச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல, நீங்களும் என்னோடேகூடப் போராட வேண்டுமென்று ஆவியானவருடைய அன்பினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோ. 15. 32.) என்று அவர் ரோமருக்கு எழுதுகிறார். அவர்களுடைய ஜெபம் பலித்து தாம் சத்துருக்களுக்குத் தப்புவிக்கப்படுவார் என்றும், தாம் செய்துவந்த கிரியை வாய்க்கும் என்றும் அவர் நம்பியிருந்தார். "தேவன் இன்னும் எங்களைத் தப்புவிப்பாரென்று அவரை நம்பியிருக்கிறோம். நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள்" (2 கொரி. 1. 10, 11.) என்று அவர் கொரிந்தியருக்குச் சொல்லுகிறார். அவர்கள் செய்த விண்ணப்பம் தாம் தப்புவிக்கப்படுவதற்கு வாஸ்தவமாகவே உதவும் என்பது அவர் நம்பிக்கை. "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். நான் தைரியமாய் என் வாயைத் திறந்து, சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்" என்று அவர் எபேசியரைக் கேட்டுக்கொள்ளுகிறார். அப்போஸ்தல ஊழியத்திற்குத் தேவையான தைரியமும் அந்த ஊழியத்திலே போதுமான சித்தியும் எபேசியருடைய ஜெபத்தினால் தமக்குக் கிடைக்கும் என்று அவர் தெரிவிக்கிறார். "நான் அனுபவிக்கிற துன்பம் உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு ரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்" (பிலி. 1. 19.) என்று பிலிப்பியருக்குச் சொல்லுகிறார். கொலோசெயருக்கு (கொலோ. 4. 4.) அவர்கள் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டுமென்று அவர் கற்பித்தபின்: "திருவசனம் சொல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்" என்கிறார். அவர் தெசலோனிக்கேயருக்கு: "கடைசியாக சகோதரரே, கர்த்தருடைய வசனம் எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும், துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" (1 தெச. 3. 1, 2.) என்று எழுதுகிறார். இதினால் பவுல் அப்போஸ்தலர் தாம் ஒரு உடம்பில் அவயவம்போலிருப்பதை உணர்ந்து, அந்த உடம்பின் மற்ற அவயவங்களும் தம்மோடு ஒத்துக் கிரியை நடப்பித்தாலொழிய தமது கிரியை வாய்க்காது என்று கண்டு, இப்போது சொன்ன சபைகள்தோறும் செய்யப்படும் ஜெபங்களினால் தமக்கு மற்றப்படி கிடைக்காத நன்மைகள் கிடைக்கும் என்று நம்பியிருந்தார் என்பது பிரத்தியக்ஷமாய் விளங்குகிறது. அவர் தேவ இராஜ்யத்தின்பொருட்டு செய்த கிரியைக்கு தேவனுடைய வல்லமை எப்படி உதவுமோ, அப்படியே திருச்சபையின் ஜெபங்களும் உதவும் என்கிறார்.



தேவ இராஜ்யம் வருவதற்கும், தேவ ஊழியர்மேலும் திருவசனத்தின்மேலும் தேவனுடைய வல்லமை சொரியப்படுவதற்கும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதினால் தேவநாமம் மகிமைப்படுவதற்கும் இரவும் பகலும் ஜெபிக்கிற வேலையை திருச்சபையானது சலிக்காமல் செய்யுமானால், அதினால் எப்பேர்ப்பட்ட வல்லமை விளைந்து பலிக்கும் என்று யார் சொல்லலாம்? சபையார் ஓரிடத்தில் ஒருமித்துக் கூடுவது ஒருவரையொருவர் பரிபாலித்து ஊன்றக் கட்டுவதற்கேயொழிய வேறெதற்குமல்ல என்று இப்புவியிலிருக்கிற சபைகள் பெரும்பாலும் நினைத்திருக்கின்றன. தேவன் தமது பரிசுத்தவான்களின் ஜெபத்தைப் பார்த்து உலகத்தை ஆளுகிறார் என்பது அவர்களுக்குத் தெரியாது; சாத்தான் ஜெயிக்கப்பட்டு ஒடுங்கிப்போவது அவர்களுடைய ஜெபத்தினாலாக வேண்டுமென்றும் அவர்கள் அறியார்கள்; தேவலோகத்து பெலன்களை எல்லாம் திருச்சபையானது ஜெபத்தினால் தன் இஷ்டம்போல எடுத்தாளலாம் என்று அவர்கள் உணருகிறதேயில்லை. இயேசு தமது நாமத்திற்குள் கூடியிருக்கிற ஒவ்வொரு திருக்கூட்டத்தையும் தேவலோகத்துக்கு வாசலாயிருக்கும்படி தமது வாக்குத்தத்தத்தினால் பிரதிஷ்டை செய்திருக்கிறார் என்று அவர்கள் நினைவுகூரார்கள். அவ்வகைத்

திருக்கூட்டங்களிலே இயேசுதாமே கூட இருந்து, தமது வல்லமையை அநுபவசித்தியாய்க் கண்டறியச் செய்கிறார். இது எப்படித் தெரியுமென்றால், அந்தக் கூட்டங்களிலே ஒருமித்திருப்பவர்களுடைய விருப்பங்களை பிதா நிறைவேற்றிவைக்கிறதினால் தெரியும்.

இக்காலத்தில் கிறிஸ்தவ தேசங்களிலே வருஷாரம்பத்தில் ஒருமித்த ஜெபவாரம் ஒன்று நியமித்திருப்பதற்காக நாம் தேவனைத் தோத்திரிக்கவேண்டும். பல நாமங்கள் கொண்டு வேறுபட்டிருக்கிற கிறிஸ்தவ சபைகளெல்லாம் அடியில் பார்த்தால் ஒன்றுதான் என்று வெளிப்படுத்தவும், ஒருமித்த ஜெபத்தினால் பலன் விளையும் என்று நாம் நம்புகிறோம் என்று தெரிவிக்கவும், சுயசபை யபிமானம் பாராட்டி பொதுவான திருச்சபையின் அவசியங்களைக் குறித்து நாம் பாராமுகமாயிராமல் அதற்காகவும் நமது இருதயங்களை விசாலமாய்த் திறக்கிறதற்கு நம்மைப் பழக்கவும், கேட்டது கிடைக்குமட்டும் விடாப்பிடியாய் ஒருமித்து ஜெபிக்கிற வழக்கத்தை நமக்கு உண்டாக்கவும், அந்த ஒருமித்த ஜெபவாரம் மிகப் பிரயோசனமானதென்றே சொல்லவேண்டும். மேலும் அதினால் உண்டான விசேஷித்த பெரிய லாபமென்னவென்றால், அங்கங்கேயுள்ள சிறுசிறு ஜெபக்கூட்டங்களிலே கூடுகிறவர்களுக்குள் நிலையான ஒருமையுண்டாகி அவர்கள் ஜெபத்தில் ஒருமனப்பட்டிருக்க தூண்டப்பட்டதுதான். இன்னும் பெரிய லாபம் அதினால் வரவும் இடமுண்டு. அதற்காக தேவனுடைய ஜனங்கள் எல்லாரும் பேதமற்று ஒருவாக்காய் இயேசுவின் நாமத்திற்குள் ஒருமித்துக்கூடி, பரிசுத்தாவியானவருக்குள் ஒரே சரீரமாக இணைக்கப்பட்டிருக்கிற தங்கள் திருக்கூட்டத்தின் நடுவில் இயேசுதாமே கூட இருந்து உலாவப்பெற்று, தாங்கள் பிதாவினிடத்தில் ஒருமனப்பட்டுக் கேட்கிற நன்மை கிடைக்கும் என்கிற அவருடைய திருவாக்கை நிறைவேற்றச்சொல்லி உரிமைபாராட்டிக் கேட்கவேண்டும்.

**"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."**

புகழுக்குரிய கர்த்தாவே! நீர் பண்ணின பிரதான ஆசாரிய ஜெபத்தில் உம்முடையவர்கள் ஒன்றாயிருக்கவேண்டுமென்று



உருக்கமாய் விரும்பிக் கேட்டீர். ஒருமித்த ஜெபத்திற்கு நீர் கொடுத்திருக்கிற வாக்கு நீர் விரும்புகிற ஒருமைக்குள் நாங்கள் வரத் தூண்டுவதற்கே என்று நாங்கள் உணரப் பண்ணும். அன்பிலும் ஆசையிலும் எங்கள் மனம் பேதமற்று ஒன்றாகி, நாங்கள் ஒருமித்திருந்தால் மாத்திரமே நாங்கள் விசுவாசித்து ஜெபிக்கிற ஜெபத்திலே நீர் கூட இருப்பீர், அதற்கு பிதா உத்தரவும் அருளுவார்.

ஆ, பிதாவே! உம்முடைய ஜனங்களெல்லாரும், அங்கங்கே சிறு சிறு கூட்டமாய்க் கூடி ஜெபிக்கிறவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும் என்று உம்மைப் பிரார்த்திக்கிறோம். அவர்களுடைய ஒருமையைக் கெடுக்கிற எல்லாத் தற்சிந்தையையும், தற்சிநேகத்தையும், அன்புச்சுருக்கத்தையும், பிரிவினையையும் நீக்கிவிடும்படி உம்மை வேண்டுகிறோம். உம்முடைய திருவாக்கு எங்களுக்குப் பலிக்காமல் தடுக்கிற உலக சிந்தையையும் மாம்ச சிந்தையையும் எங்களைவிட்டு அகற்றும். நீர் கூட இருக்கிறீர் என்கிற நினைப்பும் பிதாவாகிய உமக்குப் பிரியமாய் நடக்கவேண்டுமென்கிற ஆசையும் நாங்கள் ஒருவரையொருவர் நெருங்கி நேசிக்க தூண்டுவதாக.

துதிக்குரிய கர்த்தாவே! ஒருமித்த ஜெபத்தினாலேயே உமது திருச்சபை தேவலோகத்தில் கட்டவும் அவிழ்க்கவும் சக்தியுடையதாகும், சாத்தான் துரத்தப்படுவான், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள், மலைகள் பெயர்க்கப்படும், உம்முடைய இராஜ்யம் சீக்கிரம் வரும்; இதை உமது திருச்சபை விசுவாசிக்கப்பண்ணும். நல்ல ஆண்டவரே! உமது திருநாமமும் திருவசனமும் மகிமைப்படச் செய்கிற வல்லமை திருச்சபையின் ஜெபமே. இதை நான் கூடி ஜெபிக்கிற சிறு ஜெபக்கூட்டத்திலேயும் விளங்கப்பண்ணியருள்வீராக. ஆமென்.

# பதினாறாம் பாடம்.

## 'நீடிய பொறுமையுள்ளவராயிருந்தும், சீக்கிரத்திலே'

அல்லது,

## தளரா ஜெபத்தின் வல்லமை.

"சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்............கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்தும், அவர்களுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக். 18. 1-8.)

ஜெப உலகத்தின் இரகசியங்களிலே நாம் தளரா ஜெபம் செய்யவேண்டும் என்பது பெரிய இரகசியங்களில் ஒன்று. அன்பருக்கு அன்பராய், தம்மை யடுத்திருக்கிற தீனருக்கு உபகாரம் செய்யவேண்டுமென்கிற எண்ணமே குடிகொண்டிருக்கிற தயாளுவாய் இருக்கிற நமதாண்டவர் நாம் தம்மை அடுத்தடுத்து விண்ணப்பஞ்செய்து, சில வேளைகளில் வருஷா வருஷமாய் அலட்டினாலன்றி நமது ஜெபத்திற்கு உத்தரவு அருளார் என்றால், அதேன் என்று நமது புத்தியினால் ஆராய்ந்து அறிவது எளிதல்ல. நாம் விசுவாசமுள்ள ஜெபம் செய்வதில் பெருந்தடையாய் வந்து குறுக்கிடுகிறவைகளில் அது ஒன்று. நாம் தளரா முயற்சியுடன் ஜெபித்தபின்பும் நமது ஜெபத்திற்கு உத்தரவு வராவிட்டால், நமக்கு உத்தரவு கொடாமலிருப்பதற்குத் தகுந்த இரகசியமான காரணம் தேவனுக்கு இருக்கும் என்று நினைத்து நாம் எடுத்த ஜெபத்தைச் சோரவிடுகிறோம். சோம்பலுக்கு இணக்கமுள்ள நமது மாமிசத்திற்கு இது வெகு பொருத்தமாயிருப்பதுந்தவிர, தேவசித்தத்திற்கு அடங்கிப்போகிறோம் என்னும் தேவபக்தியின் வேஷமும் அதற்குப் போதுமானமட்டுமிருக்கிறது.



விசுவாசத்தினால் மாத்திரமே அந்தத் தடையை நாம் மேற்கொள்ளலாம். நமது விசுவாசம் தேவனுடைய வசனத்திலும் இயேசுவின் நாமத்திலும் ஊன்றி நின்றுகொண்டு, தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றதையும் அவருக்குக் கனமுண்டாக்கத்தக்கதையும் மாத்திரமே கேட்பதற்கு தன்னைத் தூண்டி நடத்தும்படி தேவாவியின் வசத்தில் தன்னை ஒப்புவித்து ஜெபிக்கும்போது உத்தரவு வரத் தாமதித்தால் அது துணிவு இழந்துபோக நிமித்தியமில்லை. திடநம்பிக்கையுடன் செய்யும் ஜெபத்திற்கு இருக்கிற வல்லமையைத் தடுக்க எவராலும் ஆகாது என்பது திருவசனத்தினால் விசுவாசிக்குத் தெரியும்; விசுவாசம் உள்ளபடிக்கு இருந்தால் அது ஒருபோதும் ஏமாந்துபோகவே முடியாது. நீரானது ஒரு நிலையில் குவிந்து தேக்குண்டால், மேல்வெள்ளம் ஒன்றின்மேல் ஒன்று வந்து விழவிழ, அதைத் தடுத்து நிறுத்தக்கூடியது எதுவுமிராது; அதன் வல்லமை தடுக்கமுடியாத வல்லமையாய்விடும். அதுபோலவே, விசுவாசமானது செய்யும் ஜெபம் தடுக்கமுடியாத வல்லமையாவதற்கு, ஜெபம் ஒன்றின்மேலொன்று வந்து குவிந்துகொண்டேயிருக்கவேண்டுமென்பது விசுவாசிக்குத் தெரியும். ஒருவனுடைய ஜெபம் பூரண அளவையடைந்து குவிந்துவிட்டது என்று தேவனுக்குத் தெரிந்தவுடனே அதற்கு உத்தரவு தப்பாமல் உடனே வரும். உழுகிறவன் பதறாமல் இலக்ஷாதி இலக்ஷம் அடி வைத்து உழுது, இலக்ஷாதி இலக்ஷம் விதைகளைப் பதஷ்டமில்லாமல் விதைத்து, செய்யவேண்டிய பக்குவங்களையெல்லாம் ஒன்றிற்குப்பின் ஒன்றாய்ச் செய்து காத்திருந்தால் மட்டும் கடைசியிலே தகுந்த அறுப்பைக் கண்டுபிடிப்பான்; அதுபோலவே, மடித்து மடித்துப் பலமுறை தளரா முயற்சியுடன் ஜெபித்துப் பொறுமையுடன் காத்திருந்தால்மட்டும் கருதிய நன்மை கிடைக்கும் என்பது விசுவாசிக்குத் தெரியும். நம்பிக்கையுடன் செய்கிற ஒரு ஜெபமாவது பரலோகத்திலே தன் வல்லமையை இழந்துபோகவேமாட்டாது, அது தப்பாமல் பலிக்கும், கடைசிமட்டும் தளராமல் உறுதியாய் இருந்து ஜெபித்தால் தகுந்த காலத்தில் எனக்கு உத்தரவு வாங்கித் தரும்பொருட்டு என் ஜெபமெல்லாம் ஒரு திரவிய குவி

யலாய் குவிக்கப்படுகிறதென்று விசுவாசி அறிவான். இன்னின்ன ஜெபம் பலிக்கும் இன்னின்ன ஜெபம் பலிக்காது என்று மனுஷர் நினைத்துச் சொல்லுகிறதைத் விசுவாசி ஒருபோதும் கவனிக்கமாட்டான். ஜீவனுள்ள தேவன் தமது திருவாயால் சொல்லியிருக்கிறது என்ன என்று மாத்திரமே அவன் கவனித்துக்கொள்வான். ஆபிரகாம் அநேக வருஷங்களாய் "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், நம்பிக்கையோடே விசுவாசித்து, கடைசியாய் விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் வாக்குத்தத்தமான ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொண்டான்" என்பதை அறிந்திருக்கிற விசுவாசி, கர்த்தருடைய நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணி, தன் கர்த்தர் தனக்கு அளித்திருக்கிற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத் துரிதமாய் வருவார் என்று நம்பிக் காத்திருப்பான்.

நமது ஜெபம் உடனே பலிக்காமலிருக்கும்போது, பதருத பொறுமையும் சந்தோஷமுள்ள நிச்சயமும் நமக்கு அற்றுப்போகக்கூடாது. இவ்விரண்டும் நமக்கு அற்றுப்போகாமலிருப்பதற்கு நமதாண்டவர் எடுத்துச் சொல்லுகிற இரண்டு வார்த்தைகளை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அந்த வார்த்தைகளில் அவர் அநீத நியாயாதிபதியின் இலக்ஷணத்தையல்ல, தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிற தமது பிள்ளைகள் விஷயத்தில் நமது தேவனும் பிதாவுமானவர் நடந்துகொள்ளுகிற விதத்தை வெளிப்படுத்துகிறார். அந்த வார்த்தைகளாவன: அவர்கள் விஷயத்தில் அவர் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்; சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார்.

சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று நமது உபாத்தியாயர் சொல்லுகிறார். ஆகவே, அவர்கள் கேட்ட நன்மை முழுமையும் ஆயத்தமாக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் கேட்டதைக் கொடுப்பதற்கு அவருக்கு மனப்பூர்வம் இருப்பதுந்தவிர, அதுவிஷயத்தில் அவர் பராமுகமாயிராமல் அக்கறையுள்ளவராயுமிருக்கிறார். நித்திய பேரன்புமூர்த்தியானவர் தம்மால் நேசிக்கப்பட்டவர்களுக்குத் தம்மை எவ்வளவேனும் ஒளிக்காமல் முழுமையும்



வெளிப்படுத்தி அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்க தமது திருவருள் அக்கினியில் உருகிக்கொண்டிருக்கிறார். அவசியத்திற்கு மிஞ்சி அரைநிமிஷமாவது அவர் தாமதிக்கவேமாட்டார். நமது விண்ணப்பத்திற்குத் தாமதமில்லாமல் துரிதமாய் உத்தரவு அருளப்படும்விஷயத்தில் அவர் தம்மால் ஆனதையெல்லாம் தப்பாமல் செய்வார்.

அப்படியே யாகட்டும். அது வாஸ்தவமானால் அவருக்கு அளவில்லாத வல்லமையிருக்கக்கொள்ள, நமது ஜெபத்திற்கு உத்தரவு அருளுவது அவருக்கு மிக எளிதாயிருக்குமே; பின்னை ஏன் அவர் பலதருணங்களில் வெகுநாள் தாமதம் செய்கிறார்? தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு அவருக்குச் சொந்தமாயிருப்பவர்கள் உபத்திரவங்களிலும் சங்கடங்களிலும் இருந்துகொண்டு எத்தனையோமுறை அவரை நோக்கி இரவும் பகலும் கூப்பிட நேருகிறது; இதேன்? அவர்கள் விஷயத்தில் அவர் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். "இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்." பூமியின் பலனைச் சம்போகமாய் அறுக்கவேண்டுமென்பது பயிரிடுகிறவன் உள்ளத்தின் அபிலாசையேயானாலும், இட்ட பயிருக்கு வெயிலும் மழையும் போதுமான காலம்வரையில் கிடைப்பது அவசியம் என்று அவனுக்குத் தெரியுமாகையால், அவன் பதறாமல் நீடிய பொறுமையுடனிருப்பான். காய்த்த காய் பழுக்குமுன் பறித்து உண்ணவேண்டுமென்று துடிப்பது புத்திபூர்வமற்ற பிள்ளைகளின் இயற்கை; சரியான பக்குவம் வரும்வரையில் காத்திருக்கவேண்டும் என்பது பயிரிடுகிறவனுக்குத் தெரிந்த சாதனை. சிருஷ்டிகளான பிராணிகள், தாவரங்கள், இவற்றின் ஜீவனுக்கு தேவன் வகுத்திருக்கிற பிரமாணம் ஒருபெட்டாய் அல்ல, படிப்படியாய் வளரும் வளர்ச்சிதான். இதேபிரமாணம் மானிடருடைய ஆவிக்குரிய ஜீவனுக்கும் உண்டு. மானிடருக்கு தேவன் குறித்திருக்கிற இலக்கை அவர்கள் அடைந்துகொள்ள விரும்பினால், அவர்கள் படிப்படியான வளர்ச்சி என்னும் பாட்டையிலேதான் நடக்கவேண்டும். ஒரு விசுவாசியாவது ஒரு சபையாவது

ஏதேனும் ஒரு நன்மையை அடைய விரும்பினால், அதை வாங்கிக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தகுதியான விசுவாசம் அவர்களுக்குள் முதிர்ந்து தேறியிருக்கிற பக்குவமான தருணம் இது என்று அவர்களுக்கே தெரியாது. காலங்களையும் வேளைகளையும் தமது கரத்தில் வைத்திருக்கிற பிதா ஒருவருக்கே அது தெரியும். ஒரே பிள்ளையைப் பெற்று அருமையாய் வளர்க்கிற தகப்பனுக்கு, அந்தப் பிள்ளையை வித்தையாளனுக்கும்பொருட்டுத் தூரத்திலிருக்கிற சிறந்த வித்தியாசாலையில் விட்டுவைத்திருக்கும் காலமெல்லாம், அந்தப் பிள்ளை பாடசாலையை விட்டுத் தன்னோடேயே எப்போதும் இருக்கவேண்டும் என்கிற ஏக்கம் இருக்கும்; ஆயினும், தன் பிள்ளையின் கல்வி முற்றுப்பெறும் காலம்வரையில் அவன் பதறாமல் பொறுமையாய்க் காத்திருப்பான். தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இருக்கிற மரபு இதுவே: அவர் நீடிய பொறுமையுள்ளவரும் சீக்கிரத்திலே உத்தரவு சொல்லுகிறவருமாயிருக்கிறார்.

இந்த உண்மையை உள்ளிட்டறிந்த விசுவாசி, அதற்குத் தகுந்தபடி பழகிக்கொள்ளவேண்டிய மனநிலை எதுவென்று இப்போது அவனுக்கு வெளிப்படும். பொறுமையுடன் கூடிய விசுவாசம், காத்திருத்தலுடன் பொருந்தியிருக்கிற துரிதப்படுதல், இவைதான் அவன் தளராமல் ஜெபிக்கிறதற்கு அவனுக்கு உதவும். தேவனுடைய வாக்குத்தத்தத்தில் வைக்கிற விசுவாசத்தினால் நாம் அவரிடத்தில் கேட்டது கிடைத்திருக்கிறது என்கிற நிச்சயம் நமது அறிவுக்கு அகப்படும். தேவன் நமக்குத் தந்திருக்கிற வாக்குத்தத்தத்திலேயே நமது ஜெபத்திற்கு உத்தரவும் நிச்சயமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நமது விசுவாசம் அந்த வாக்குத்தத்தத்தில் இருக்கிற உத்தரவையே தான் அடைந்துவிட்ட உத்தரவாகப் பிடித்து வைத்துக்கொண்டு, அதினால் சந்தோஷப்பட்டு, அதற்காக ஸ்தோத்திரம் செலுத்தும். ஆனால், தான் கேட்டதற்கு உத்தரவை தேவனுடைய வாக்குக்குள்ளேயே இருக்கக்கண்டு அதைப் பிடித்துக்கொள்ளுகிற இந்த விசுவாசத்திற்கும், அந்த உத்தரவு தேவனுடைய வாக்குக்குள்மாத்திரம் அடங்கியிராமல் நாம் அநுப-



விக்கிறதற்குக் கிடைக்கும்படி செய்கிற விசுவாசத்திற்கும் வித்தியாசம் உண்டு. கேட்டதற்கு உத்தரவு நமது சுய அநுபவத்திற்கு எட்டும்படி பலிக்கச்செய்கிற இந்த விசுவாசம் அந்த விசுவாசத்தைவிட அதிகத் தெளிவும், அதிக பூரணமும், அதிக முதிர்ச்சியும் உடைய விசுவாசம். ஆகிலும் அந்த விசுவாசத்தில் தொடங்கித்தான் நாம் இந்த விசுவாசத்திற்குள் வரவேண்டும். சிறிதேனும் ஐயப்படாமல் நாம் கேட்டது கிடைத்திருக்கிறது என்று நிச்சயமாய் நம்பி, அதற்காக தேவனை ஸ்தோத்திரித்து, விடாப்பிடியாய் ஜெபித்துக்கொண்டேயிருப்பதினால்மாத்திரம் நமது ஆத்துமாவுக்கும் ஆண்டவருக்கும் இருக்கிற ஞானஐக்கியம் பூரணமாய் நெருங்கி உரப்பாகும். இந்த ஐக்கியத்தினால் நமது ஆத்துமா அவருக்குள் இருந்துகொண்டு தான் விரும்பின நன்மையை அடைந்து அநுபவிக்கும். நமது அண்டை அயல், இந்தப் பெரிய பூமண்டலம், தேவனுடைய ஆளுகை செல்லும் இடம், இவற்றுள் நாம் அடங்கினவர்களேதவிர நாம் ஏகாங்கிகள் அல்ல. நாம் செய்வதாகிய ஜெபத்தினால் திருந்திச் செவ்வையாகவேண்டிய ஏதேனும் இவ்விடங்களில் எங்காவது இருக்கும். அது நமது ஜெபத்தினால் செவ்வையாவதற்குமுன் நமது ஜெபம் பூரணமாய்ப் பலிக்காது. ஆகிலும், கர்த்தர் நமக்குச் சொன்ன சொல்லை நம்பி நாம் வேண்டினதை அடைந்துவிட்டோமென்று விசுவாசிக்கிற விசுவாசம் நமக்கு இருந்தால், நாம் கேட்டதைத் தருவதற்குத் தேவன் எவ்வளவு தாமதஞ்செய்தாலும் காத்துப் பொறுமையாய் இருப்பதற்கு அஞ்சமாட்டோம். நாம் கேட்டது பலித்துவிட்டது, அது பலிக்காமலிருக்க முடியாது என்கிற உறுதி நமக்கு இருக்குமானால், நாம் சற்றேனும் சலிக்காமல், தளரா முயற்சியுடன், கேட்ட நன்மை கைக்கு மெய்யாய்க் கிடைக்கும்வரையில், ஜெபத்திலும் ஸ்தோத்திரத்திலும் தரித்திருப்போம். காட்சிக்கெட்டாத தேவன் நமது ஜெபத்திற்குத் தற்சமயத்திலேயே உத்தரவருளிவிட்டார் என்று நம்பிக் களிக்கிற விசுவாசமும் அந்த உத்தரவு காட்சிக்கு வெளிப்படும்வரையில் தளராமல் இரவும் பகலும் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிற பொறுமையும், முதற்பார்வையில், ஒன்றுக்கொன்று பொருத்தமில்லா

தனவாகத் தோன்றினாலும், அவை இரண்டும் செவ்வையாய்ப் பொருந்தும்வகை இதுதான். தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்தும் சீக்கிரத்திலே உத்தரவு அருளுவார் என்பதை எங்கே பார்க்கலாமென்றால், பொறுமையுடன் காத்திருந்து ஜெபிக்கிற விசுவாசியாகிய அவருடைய பிள்ளையினிடத்திலே பார்க்கலாம்.

ஜெபத்திற்கு உத்தரவு உடனே கிடைக்காமல் தாமதப்படுகிறபோது நமக்கு வரக்கூடிய பெரிய மோசம் எதுவெனில், நாம் கேட்டதைத் தருவதற்கு தேவன் இஷ்டப்படவில்லையாக்கும் என்கிற நினைப்பு. நாம் செய்த ஜெபம் திருவசனத்திற்குப் பொருந்தினதும் தேவாவியானவருடைய தூண்டுதலினால் பிறந்ததுமாயிருந்தால், நாம் இப்படி நினைக்கத் தேவையில்லை, தேவனுக்கு வேண்டிய நேரம் கொடுத்துக் காத்திருக்க நாம் பழகவேண்டும். நமது விஷயத்தில் தேவனுக்கு நேரம் அவசியம் வேண்டியதே. எதற்கு? நாம் அவருடன் தினமும் செய்யும் நேசஉறவிலே அவர் நம்முடன் இருந்துகொண்டு தமது அன்பு வல்லமையால் நம்மை முழுவதும் ஆட்கொள்வதற்கும் நேரம் அவசியம், நாள்தோறும் நாம் செய்த ஜெபத்திற்கு உத்தரவு வருமட்டும் நாம் பதறாமல் காத்திருக்கும்போது நமது விசுவாசம் போலி விசுவாசமல்ல மெய் விசுவாசமே என்று துலங்கி அது நமது உள்ளிந்திரியங்களிலெல்லாம் பற்றி எரிவதற்கும் நேரம் அவசியம். இப்படி அவசியமான நேரத்திற்கு உலோபாமல், அதை வேண்டுமளவு தேவனுக்கு நாம் கொடுப்போமானால், அவரே வந்து நாம் நிற்கிற விசுவாசம் என்னும் இடத்திலிருந்து நம்மை அழைத்துக்கொண்டு போய், காட்சி என்னும் இடத்தில் நம்மை நிறுத்துவார்; அங்கே நாம் தேவனுடைய மகிமையைக் கண்ணாரக் காண்போம். ஆதலால், ஜெபத்திற்கு உத்தரவு தாமதிக்கும்போது நாம் நமது விசுவாச உறுதியில் தளரவேகூடாது. முன்பு முளை, பின்பு கதிர், அதின்பிறகு கதிரிலே நிறைந்த தானியம் என்பது விசுவாசத்திற்கு நன்றாய்ப் பொருந்தும். விசுவாச உறுதியுடன் செய்கிற ஒவ்வொரு ஜெபமும் இறுதியில் கிடைக்கிற ஜெயத்திற்குக் கிட்டக் கொண்டுபோகிற ஒரு படியாம். விசுவாச உறுதியுள்ள ஜெபமொவ்வொன்றும் கதிர் முற்று



வதற்கு உதவியாகி நாம் அறுக்கப்போகிற பலனுக்குக் கிட்ட நம்மைக் கொண்டுபோகும். ஜெபம் பலிப்பதற்கு எவ்வளவுநேரம் ஜெபிக்கவேண்டும், எவ்வளவு விசுவாசம் இருக்கவேண்டும் என்பது நமக்கல்ல, தேவனுக்குமாத்திரம் தெரியும். ஆயினும், விசுவாச உள்ளீடுள்ள ஜெபம் ஒவ்வொன்றும் அந்த அளவு நிரம்புவதற்கு உதவி என்பதை நாம் மறக்கப்படாது. அப்பேர்ப்பட்ட ஜெபம் ஒவ்வொன்றும் நமது காட்சிக்கு அகப்படாத உலகத்திலிருக்கிற தடைகளையெல்லாம் வென்று ஒதுக்கி, நாம் காத்திருக்கிற நோக்கம் சீக்கிரம் வாய்க்கச்செய்யும். தேவனுடைய பிள்ளையே! நீ பதறாமல் உன் பிதாவுக்கு வேண்டிய நேரம் அவருக்குக் கொடு. அவர் உன்மேல் நீடிய பொறுமை (தாமதம்) காட்டுவது எதற்கு என்றால், அவர் உன் ஜெபத்திற்கு அருளப்போகிற நன்மை அற்பசொற்பமாயல்ல சிறப்பாயும், அறைகுறையாயல்ல பூரணமாயும், கைநழுவிப் போகிறதாயல்ல உறுதியாய்க் கிடைத்ததாயும் இருப்பதற்கே. நீ இரவும் பகலும் அவரை நோக்கிக் கூப்பிடுவதில் இளக்கரியாமல் அவருக்கு நேரம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் கொடு. அப்படி நீ செய்யும்போது: "சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்னும் வாக்கை மறவாமல் மனதில் வைத்திரு.

இவ்விதமாய்த் தளரா முயற்சியுடன் செய்யும் ஜெபத்திற்கு வரும் அநுகூலம் இவ்வளவென்று சொல்லமுடியாது. நமது உள்ளத்தில் இருப்பது என்னவென்று சோதித்து ஆராய்வதற்கு விசுவாச உறுதியுள்ள இந்த ஜெபத்தைப்போல் உதவுவது வேறில்லை. நீ கேட்ட நன்மை உனக்கு வராமல் வழியடைத்து மறிக்கிற கேடுகள் உனக்குள் இன்னின்ன இருக்கின்றன என்று கண்டுபிடித்து அறிக்கையிடவும், அவைகளை விட்டுத் தொலைக்கவும், அது உன்னைப் பழக்கும். பிதாவின் சித்தத்திற்குப் பொருந்தாமல் உன்னுள்ளத்தில் இருப்பதெல்லாம் அப்பேர்ப்பட்ட கேடென்றே சொல்லவேண்டும். மேலும், அது உன்னை ஆண்டவருடன் அதிகமதிகமாய் நெருங்கி உறவாடத் தூண்டும். ஜெபிக்கக் கற்றுக்கொடுப்பவர் அவராதலால், நீ ஜெபவித்தையில் தேறுவதற்கு அவருடன் நெருங்கி

நேசஞ்செய்வது உனக்கு அவசியம். மேலும், உன்னை மூடுகிற இரத்தத்தையும் தேவாவியையும் நம்பித் துணிந்து, நீ பிதாவின் சமுகத்தில் முன்னிலும் அதிகமாய்க் கிட்டி நெருங்கிவர அந்த ஜெபம் உனக்கு நல்ல உதவியாகும். இதுவுந்தவிர, அதினால் நீ கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் ஜீவியம் வரவர அதிக உறுதியாகி, முன்போல் கஷ்டமுள்ளதாயிராமல் வரவர எளிதாய்விடும். கிறிஸ்தவனே! தேவனுக்கு நேரம் கொடு. அப்படிச் செய்வாயானால், அவர் உனக்கு அநுகூலமாயிருப்பதையெல்லாம் அளைகுறைகள் நீக்கிப் பூரண உத்தமமானதாக்குவார். நீ ஜெபம் என்னும் வாயில்வழியாய் தேவனண்டை பிரவேசிக்கும்பொழுது அவர் உனக்குத் தம்மைக்குறித்துச் சொல்லும் சொல் "நீடிய பொறுமை (தாமதம்)—சீக்கிரத்திலே" என்பது. அதுவே உனக்கும் நீ விரும்புகிற ஜெபவாசகமாய் இருக்கவேண்டும்.

நீ உனக்காக ஜெபித்தாலும் சரி, பிறருக்காக ஜெபித்தாலும் சரி, அந்த வாசகத்தை மறவாதே. பயனைக் கருதியுழைக்கும் உழைப்பு, சரீரத்திற்குரிய பயனைப்பற்றியதானாலும் மனதிற்குரிய பயனைப்பற்றியதானாலும், செம்மையாய் வாய்ப்பதற்குப் போதுமான நேரமும் போதுமான முயற்சியும் வேண்டியதாகும் என்பது பிரத்தியக்ஷம். நாம் பலனுக்குப் பாடுபடும்போது நமது சிந்தையைச் சிதறவிடாமல் அதின்பொருட்டு நம்மையே முற்றும் கொடுக்கவேண்டியது. முன் ஒருவருக்கும் தெரியாதிருந்த வித்தைகளைப் புதிதாய் அறிந்து வெளிப்படுத்த விருப்பமுள்ளவர்களும், இப்பூவுலகில் மறைந்திருக்கும் திரவியங்களைக் கண்டெடுக்க ஆவல்கொண்டவர்களும் தீரத்தெளிய யோசித்து வருந்தி உழைத்தாலன்றி அவர்கள் நாடினது கிட்டாது. அதுபோலவே, ஞானநன்மைகளை அடையக் கருதுகிறவர்களும் தக்கபடி உழைத்தாலன்றிப் பலனடையார்கள். தேவலோகம் என்கிற வயலில் நாம் விதைக்கும் விதை, அதில் பயிர் ஏறிப் பலனுண்டாகும்படி நாம் முயலும் முயற்சி, மேலுலக ராஜ்யத்திலே நமது வல்லமை பலிக்கும்படி நாம் படும் பிரயாசம், இவை பாழாகாமல் பயன்பட விரும்பினால் நாம் அவற்றின்பொருட்டு நம்மை முழுமையும் தத்தம் செய்யவேண்டும்; அதாவது, நமது ஜெபம்



பலிக்க விரும்பினால், நாம் அதற்கே நம்மையே முழுமையும் கொடுத்துவிடவேண்டும். தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் பலனறுப்போம் என்கிற நிச்சயம் நமது மனதைவிட்டு ஒருநாளும் போகலாகாது.

விசேஷமாய்க் கிறிஸ்துவின் சபைக்காகப் பரிந்துருகி ஜெபிக்கும்போது நாம் இந்தப் பாடத்தை மனதில் வைத்திருக்கவேண்டும். அதின் நாயகராகிய இயேசுவை அது காணாதிருக்கிற இக்காலத்தில் அது எதிரிகையிலகப்பட்டு தவித்து தனக்கு நியாயம் செய்வாரைக் காணாத அந்த ஏழை விதவைக்கு ஒத்திருக்கிறது (லூக். 18. 3.). உலகசிந்தையில் அடிபட்டுக் கெடுகிற திருச்சபைக்காவது ஏதேனும் தனிச்சபைக்காவது நாம் ஜெபம்பண்ணி, அவர் தமது ஆவியின் வல்லமையான கிரியைகளை அதில் நடப்பித்து அதைத் தம் வருகைக்கு ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சும்போது: நாம் வேண்டினதைச்செய்ய நமது ஜெபத்திற்கு வல்லமை உண்டு—"சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபம் பண்ணினால் அதற்கு நிச்சயமாகவே உத்தரவு கிடைக்கும்."—என்று விசுவாசிக்கிற நிச்சயம் நமக்கு இருக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது, நாம் ஆத்திரப்படாமல் தேவனுக்கு நேரம்கொடுத்துக் காத்திருந்து, இரவும் பகலும் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். "அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மைநோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடியபொறுமையுள்ளவராயிருந்தும், அவர்களுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆ என் தேவனே! உமது நேசகுமாரன் உமது வழியை அறிந்து: "சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார்" என்று சொன்னதின் கருத்தை விசுவாசவாயிலால் நான் செம்மையாய் உணர்ந்துகொள்ள எனக்குப் போதியும். எங்

களுக்குக் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறது நிச்சயமாகவே எங்களுக்குக் கிடைத்திருக்கிறது, நாங்கள் கேட்ட விண்ணப்பம் பலித்திருக்கிறது, எங்கள் ஜெபத்திற்குக் கிடைத்திருக்கிற பலன் தகுந்த காலத்திலே வெளிப்பட்டுத் தெரியும் என்று இப்படி நீர் வாக்கருளியிருக்கிறீர். உமக்கு எங்கள்மேலிருக்கிற கரிசனமான அன்பையும் உமது பிள்ளைகள் சொல்லைக் கேட்கவும் அவர்கள் கேட்டதைக் கொடுக்கவும் உமக்கு இருக்கிற பிரியத்தையும் நாங்கள் கவனித்து, நீர் அருளியிருக்கிற இந்த வாக்கை நாங்கள் கொஞ்சமேனும் சந்தேகிக்காமல் ஏற்றுக்கொள்ளப்பண்ணும். ஆ[illegible]வரே! இவ்வுலகியலில் நீர் அமைத்திருக்கிற பருவங்களில் காலங்களையும் நாங்கள் பகுத்தறிந்து, நாங்கள் இட்ட பயிர் விளைந்து கனிதருங் காலத்திற்கு ஆத்திரப்படாமல் காத்திருக்கிறோம். அதுபோலவே, எங்கள் ஜெபத்திற்கு உத்தரவு வரும் என்பதைக் குறித்து நாங்கள் ஆத்திரப்படாமல், உமக்குத் தேவையான நேரத்திற்கு அதிகமாய் ஒரு நிமிஷமேனும் தாமதியாமல் நீர் உத்தரவருளுவீர், உறுதியாயிருந்து சோர்ந்துபோகாத விசுவாசம் உம்மிடத்திலிருந்து சீக்கிரமாய் எங்களுக்கு உத்தரவு கொண்டுவந்து தரும், என்று திடமாய் நம்பும் நம்பிக்கையை எங்களுக்குத் தாரும்.

புகழ்ச்சிக்குரிய உபாத்தியாயரே! இரவும் பகலும் கூப்பிடுதல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு இருக்கிற இலக்ஷணம் என்று நீர் சொன்னீர். இதின் கருத்தை நாங்கள் அறிந்துணரப்பண்ணும். நாங்கள் சீக்கிரம் இளைத்துக் களைத்துப் போகிறவர்கள் என்பது உமக்குத் தெரியும். தேவன் எல்லாமறியும் மகத்துவமுடையவராதலால் நாங்கள் இடைவிடாமல் ஜெபிப்பது அவசியமல்ல என்பதுபோலவும், ஓயாமல் அவரை அலட்டுவது தகாதசெய்கை என்பதுபோலவும் எங்கள் மனதில் படுகிறது. ஓயாமல் ஜெபிப்பது உள்ளபடிக்கே அவசியமாய்த் தேவையான முயற்சிதான் என்று எனக்குத் தெரியப்பண்ணும். இவ்வுலக ஜீவியத்தில், நான் ஒரு முயற்சிசெய்து அது பலிக்காவிட்டால், நான் களைத்துப்போகாமல் தீரத்தெளிய யோசித்து, அதை மறுபடியும் தொடுத்து முயன்று சித்தியடைவது எனக்குத் தெரியும்.



அதுபோலவே, நான் ஜெபத்திலேயே என் சிந்தையையெல்லாம் செலுத்தி, ஜெபத்திலேயே பிழைக்கிறதினால் நான் கேட்டது எனக்குப் பலிக்கும் என்பதை எனக்குத் தெரிய உணர்த்தும். என் பிரியமான உபாத்தியாயரே! விசுவாசத்தைத் துவக்கி முடிக்கிறவரே! என்னை நேசித்து எனக்காகத் தம்மையே தந்த தேவ குமாரனில் வைக்கும் விசுவாசத்திலே பிழைக்கிற பிழைப்பே என் முழு ஜீவிய பிழைப்பாயிருக்கும் வரத்தை நீர் எனக்குக் கிருபையாய் அருளும். அவருக்குள்ளிருந்தால் நான் செய்யும் ஜெபமெல்லாம் கேட்கப்படும், அவருக்குள்ளிருக்கும்போது என் ஜெபம் பலிக்கும் என்கிற உறுதி என்னைவிட்டுப் போகாது; அவரில் இருக்கும்போது நான் கேட்டது என் கைக்கு எட்டி நான் அதை வெளிப்படையாய் அநுபவிப்பேன். கர்த்தராகிய இயேசுவே! இந்த விசுவாசமுடையவனாய் நான் எப்போதும் ஜெபித்துச் சோர்ந்துபோகாதிருப்பேனாக. ஆமென்.

## புறனடை.

நாம் கேட்டது கிடைத்துவிட்டது என்பது நமது விசுவாசத்திற்குத் தெரிந்த பின்பும் (மாற். 11. 24.) நாம் இன்னம் விடாமல் ஜெபிப்பது அவசியம் என்பது அநேகருக்குத் தெரியாமல் அவர்கள் அதைக்குறித்து இடர்ப்படுகிறார்கள். நாம் அநுபவிக்கும் தெய்வீக ஜீவனில் சடுதியும் காலக்கிரமமும், நிறைவும் குறைவும், ஒன்றிற்கொன்று விரோதமில்லாமல் இசைந்து பொருந்தியிருப்பதாகிய இரகசியம் ஒன்றுண்டு. அந்த ஜீவன் ஒருபக்ஷத்தில் தக்ஷணமே சடுதியாய் முழுமையும் நமக்குக் கிடைத்த பொருளாயிருக்கும்; இன்னொருபக்ஷத்தில், அது படிப்படியாய்ச் சிறுகச் சிறுக நமது அநுபவத்திற்கு எட்டும் பொருளாயிருக்கும். நாம் இவ்வதிகாரத்தில் விளக்கின தளரா ஜெபமும் இப்பேர்ப்பட்ட ஒரு இரகசியமே. அது ஒரு பள்ளிக்கூடம். அதில் படித்துத் தேறி நமது ஆத்துமா பலமடைந்து வரவர விசுவாச தைரியமுள்ளதாகும். தேவாவியானவர் மானிட உள்ளங்களில் செய்யும் வேலை பலவிதமாயிருக்கும்: அவர் சிலர் உள்ளங்களில் உண்டாக்கும் விசுவாசம் விடாமுயற்சியுடன் சோர்ந்துபோகாமல் காத்திருத்தல் என்னும் உருவமுடையதாயிருக்க, வேறு உள்ளங்களில் அது தான் செய்த ஜெபம் பலித்துவிட்டது என்னும் நிச்சயத்துடன் ஸ்தோத்திரம் செய்தல் என்னும் உருவமுடையதாயிருக்கும்.

தளராஜெபம் அவசியமே என்பதும், ஒருவன் தளராஜெபம் செய்து பழகிப் பழகிப் பிறகு வெகுநேரம் காத்திராமல் சீக்கிரத்திலேயே ஜெபத்திற்கு உத்தரவு வாங்கப் படித்துவிடலாம் என்பதும் புளூம்ஹார்து என்பவர் ஜீவியத்தில் காணக்கிடைக்கும். அவர் தமது குருத்தொழிலுக்குரிய கடமைகளை நழுவவிட்டு நோயாளிகளைச் சொஸ்தமாக்கும் வேலையில் பிரவேசித்திருந்ததாக அவர்மேல் குற்றச்சாட்டுக் கிளம்பிற்று. அதுவுந்தவிர, அவர் தமது சபையிலுள்ள வியாதியஸ்தரைக் குணமாக்குவதோடே நின்றுவிடாமல், வேறு சபைகளிலுள்ள நோயாளிகளையும் சுகமாக்குவதில் சோலியாயிருந்ததாகப் பிரியாது செய்யப்பட்டது. அதைக்குறித்து விசாரிக்கப்பட்டபோது, தாம் செய்தது தப்பல்ல சரியே என்று ரூபிக்க அவர் சொன்ன நியாயம் வருமாறு:—

“ஆத்துமாக்களுடைய பொறுப்பைத் தன்மேல் சுமந்திருக்கிற ஒருவன் செய்யத்தக்கதையே நானும் செய்யத்துணிந்து, யாக். 1. 6, 7 ல் கர்த்தர் கொடுத்திருக்கிற கட்டளையை அநுசரித்து ஜெபித்தேன். நான் என் பலத்தை நம்பினதுமில்லை, பிறருக்கு இல்லாத ஒரு வரம் எனக்குமாத்திரம் கிடைத்துவிட்டதாக நான் நினைத்ததுமில்லை. ஆனால், இது உண்மை—எதுவென்றால், சுவிசேஷ ஊழியனுக்கு ஜெபிக்கிற சிலாக்கியம் உண்டு எனத் துணிந்து, நிச்சயத்துடன் ஜெபித்தேன். அப்போது, சீக்கிரத்திலே எதைக் கண்டுகொண்டேனென்றால், தேவலோகத்தின் கதவு எனக்குப் பூரணமாய்த் திறக்கப்படவில்லை என்பதையே. பலமுறை நம்பிக்கையிழந்து இனி முடியாது என்று திரும்பிவிட யோசித்தேன். ஆனால், நோயால் வருந்தி அது தீரும் வழி எங்குங் காணாமல் தவித்த அகதிகளைப் பார்த்து நான் சும்மா இருக்க முடியவில்லை. மேலும் “கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்” (லூக். 11. 9, 10.) என்று இரட்சகர் சொன்னதும் என் ஞாபகத்திலிருந்தது. மேலும், அவிசுவாசம், சோம்பல், கீழ்ப்படியாமை, இவை காரணமாக திருச்சபையும் அதின் ஊழியர்களும் சாத்தானின் வல்லமையை மேற்கொள்ளும் வதுவை இழந்துவிட்டார்களாதலால், மெலிவும் பஞ்சப்பீடையுமுள்ள அப்பேர்ப்பட்ட காலத்திற்கு உதவும்பொருட்டே நள்ளிரவில் வந்து மூன்று அப்பங்களுக்கு அலட்டின சிநேகனைக் குறித்த உவமையைக் கர்த்தர் சொன்னார் என்று நினைத்தேன். என் சபையில் துன்புற்றுத் துயரடைந்திருந்தவனுக்காக தேவனிடத்தில் பரிந்துபேசி, அவனுக்கு வேண்டியதை அவரிடத்தில் ஒரு சிநேகிதனிடத்தில் போவதுபோல் நான் துணிந்து போய், எங்கும் இருள் பரந்து மூடியிருக்கிற இந்த நள்ளிரவுகாலத்தில் கேட்க எனக்கென்ன யோக்கியதையுண்டு என்று நினைத்து நினைத்து மனங்குன்றினேன். என்றாலும், அவனை ஆதரவு செய்து, போய்



விடு, என்று சொல்லவும் எனக்கு மனம் வரவில்லை. ஆகவே, உவமையிற் சொல்லியவாறு நான் தட்டி அலட்டிக்கொண்டேயிருந்தேன். இது சிலருக்குப் பெரிய துணிகரம்போலவும், வேறு சிலருக்கு தேவனைப் பரீட்சைபார்ப்பதுபோலவும் தோன்றிற்று. யாருக்கு எப்படித் தோன்றினாலும் என்னண்டை வந்த விருந்தாளியைச் சும்மா அனுப்பக்கூடாது என்றே எனக்கு தோன்றிக்கொண்டிருந்தது. இப்படி இருக்கும்போது, அகதியாகிய விதவையைப்பற்றிய உவமை வந்து எனக்குப் பேருதவி செய்தது. திருச்சபையே அந்த விதவை யென்பதும், நான் அதின் ஊழியக்காரன் என்பதும் பட்டப்பகல் வெளிச்சம்போல் என் மனதில் உதித்தது. அதை வருத்தித் துன்பம் செய்கிற எதிரியைக் கண்டு அதின் ஊழியக்காரனாகிய நான் வாயை மூடிக்கொண்டு சும்மா இருப்பது சரியா? அநியாயப்படுகிற திருச்சபைக்காக என் வாயைத் திறக்க எனக்கு உரிமையுண்டு என்று தேறித் தெளிந்தேன். ஆகிலும், வெகுகாலம் [illegible] என் அலட்டுக்குச் செவிசாய்க்க மனமில்லாதவர்போல் இருந்தார். நானும் அவரை அதிகம் நெருக்கினதில்லை; என்னிடம் விருந்தாய் வந்தவனுக்கு அவசியமாகிய மூன்று அப்பத்தைமாத்திரமே கொடும் என்று கெஞ்சினேன். கடைசியாய், தேவன் அவரை விடாமல் அலட்டின வறிஞனாகிய எனக்குச் செவிசாய்த்து உதவிசெய்தார். இப்படி ஜெபித்தது என்மேல் தப்பாகுமா? இந்த இரண்டு உவமைகளும் உபயோகப்படுகிற ஒரு சமயமிருக்கவேண்டுமே. அது நான் பட்ட அவதியைப்போலொத்த அவதியேதவிர வேறென்னவாகும்?

இப்படி நான் ஜெபித்துவந்தது என்னவாயிற்று? என் ஜெபத்திற்கு உத்தரவு அருள முதலில் மனமில்லாதவர்போல் காட்டின என் பரம சிநேகரானவர் என்னைப் பார்த்து: நீ போய்விடு; உன் சிநேகிதனுக்கு ஏது தேவையோ அதை நானே அவனுக்குக் கொடுப்பேன்; நீ எனக்கு அவசியமில்லை என்று இப்படிச் சொன்னாரா? இப்படிச் சொல்லவேயில்லை. அவர் என்னைத் தமது சிநேகிதனாகவே மதித்து, நான் கேட்டதை எனக்குத் தந்து, என்னிடம் வந்த விருந்தாளிக்குக் கொடுக்கச்சொன்னார். அவர் எனக்குத் தந்த மூன்று அப்பங்களும் விருந்துவந்தவனுக்கும் கண்டு மீந்துமிருந்தது. இப்படியிருக்க புது விருந்தினர் வரத் தலைப்பட்டார்கள், அப்போது என் கையிருப்பிலிருந்தது போதாதாயிற்று. புதிய விருந்தினர் என்னிடம் ஏன் வந்தார்களென்றால், அவர்களுக்கு எப்படியாகிலும் உதவவேண்டுமென்கிற மனப்பூர்வம் என்னிலிருப்பது அவர்களுக்குத் தெரிந்தபடியாலும், என் சிநேகிதரிடத்தில் நள்ளிரவிலும் அவர்கள் நிமித்தம் போய் அலட்ட அஞ்சேன் என்பது வெளிப்பட்டிருந்ததினாலுமே.

அவர்களுக்காகக் கேட்டபோதும் எனக்கு வேண்டியது கிடைத்து மீதியிருந்தது. இதைப்பார்த்து, குறைபாடுகளும் இடர்களும் அடைந்தவர்கள் என்னிடம் ஓயாமல் வந்துகொண்டிருக்கத் தலைப்பட்டார்கள். அவர்களைத் தடுக்க முடியுமா? நான் என் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு: போங்கள், என்னிடம் வராதேயுங்கள் என்று சொல்லலாமா? இந்தப் பட்டணத்திலே என் வீடுதானா நீங்கள் கண்டது, இன்னம் பெரிய வீடுகள், நல்ல வீடுகள் இல்லையா, அங்கே போங்கள் என்று நான் சொன்னபோது அவர்கள்: ஐயா, அங்கே போய்ப் பார்த்தோம், பலனில்லை. அங்குள்ளோர் எங்களைப் பட்டினியாய் அனுப்பினதற்கு விசனப்பட்டும், எங்களுக்கு வேண்டியதைத் தங்கள் சிநேகிதரிடம் போய்க் கேட்டு வாங்கத் துணியவில்லை. தயவுசெய்து நீரே போய் எங்களுக்கு அப்பம் கேட்டு வாங்கும், நாங்கள் கடும் வாதைப்படுகிறோமே என்றார்கள். அவர்கள் சொன்னது உண்மையென்று தெரிந்து, அவர்கள் பட்ட நோவைக் கண்ணாரக் கண்டு, என் இருதயம் இளகாமல் இருப்பது சரியா? அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றிவைப்பதில் எனக்கு எப்பேர்ப்பட்ட கஷ்டமுண்டானாலும் பாராட்டாமல், நான் தடவைதோறும் அவர்களுக்காகத் துணிந்துபோய், அவர்களுக்கு வேண்டிய மூன்று அப்பங்களையும் கேட்டு வாங்கிவந்தேன். சிலதடவைகளில் நான் கேட்டது வெகு சுறுக்காய்க் கிடைத்தது, வேறுதடவைகளில் சற்று மெதுவாய்க் கிடைத்தது; சிலபோழ்துகளில் நான் கேட்டதிலும் அதிகமே கிடைத்தது. ஆகிலும், எல்லாருமே இந்த அப்பத்திற்கு ஆசைப்பட்டுக் காத்திருக்கவில்லை; ஆதலால், என் வீட்டுக்கு வந்த சிலர் பசியடங்காமலே திரும்பிவிட்டார்கள்."*

அவர் அசுத்த ஆவிகளுடன் போராடின முதற்காலத்தில், ஜெயம் கிடைப்பதற்காகப் பதினெட்டு மாதங்களுக்கு அதிகமாகவே ஜெபித்து, விடாமல் உழைக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் வரவர அவர் தேவ ஆசனத்தருகில் வந்து பரிந்துபேசுவதும் காணற்கரிய உலகத்தில் ஞானப் போக்குவரத்துச் செய்வதும் வெகு லேசாய்விட்டது. அதனால், நோயாளிகளுக்காகப் பரிந்து ஜெபிக்கவேண்டுகிற கடிதங்கள் எங்கிருந்தாவது வரும்போது, அவர் ஒரே நிமிஷம் மாத்திரம் வானத்தை நோக்கிப் பார்த்து விண்ணப்பதாரனுக்குச் சுகம் கிடைக்கும் கிடைக்காது என்பதை உடனே சொல்லக்கூடியவராயிருந்தார்.

---

* சின்டல் ஆசிரியர் இயற்றிய "யோவான் கிறிஸ்தோபர் புளூம்ஹார்ட ஜீவிய சரித்திரம்" பார்க்க.



# பதினேழாம் பாடம்.

## 'நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்'

அல்லது,

## தேவனுடைய தன்மைக்குப் பொருந்தின ஜெபம்.

"பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருந்தேன்." (யோவா. 11. 41, 42.)

"நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜனிப்பித்தேன். என்னைக் கேளும், அப்பொழுது உமக்குக் கொடுப்பேன்." (சங். 2. 7, 8.)

புதிய ஏற்பாட்டில் விசுவாசம், அறிவு, இவற்றை வேறுபடுத்தி வரையறுத்திருப்பதைக் காணலாம். "ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும் அளிக்கப்படுகிறது." பிள்ளைகள், பேதைமையான கிறிஸ்தவர்கள், இவர்களிடத்தில் அறிவு கொஞ்சமாயும் விசுவாசம் அதிகமாயும் இருக்கும். பிள்ளைக்குரிய கபடில்லாமை கொஞ்சமேனும் மலைவின்றி திருவாக்கை நம்பும். இதை யிதை ஏன் நம்புகிறாய் என்று ஒரு பிள்ளையைக் கேட்டால்; தேவன் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்கிற ஒரே காரணத்தைத் தவிர வேறு சொல்ல அதற்குத் தெரியாது. தேவனை நாம் இப்படி முழு இருதயத்தினாலும் நம்பி, அவரை நேசித்து அவருக்கு ஊழியம் செய்வது அவருக்குப் பிரியமேயானாலும், நாம் அவரை நமது முழுமனதினாலுங்கூட நேசித்து அவருக்குத் தொண்டராயிருக்கவேண்டும் என்பதும் அவருக்கு

விருப்பம். அவருடைய எல்லா வழிகளிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் ஜொலிக்கிற அழகையும் தெய்வ ஞானத்தையும் நாம் கொஞ்சம் கொஞ்சமாய் அறிந்துகொள்ளப் பழகவேண்டுமென்று அவர் திருவுளங்கொண்டிருக்கிறார். தேவகிருபையின் மகத்துவத்தை விசுவாசி பூரணமாய் அறிந்து தகுந்தபடி தோத்திரம்பண்ண இதுவே வழி. நமக்குக் கிடைத்திருக்கிற இரட்சிப்புக்குள்ளிருக்கிற ஞானம், அறிவு இவைகளின் செல்வ வளங்களை அறிவால் கிரகித்து, ஆசைப்பெருக்குடன் பிடித்துக்கொள்ள நமக்கு உதவுவது இதுவே. இரக்ஷண்ணிய ஞானம் நமக்கு மேலும் மேலும் விளங்க விளங்க; "ஆ தேவனுடைய ஞான ஐசுவரியம், அறிவு ஐசுவரியம், இவை எப்பேர்ப்பட்ட ஆழம்!" என்று தேவாசனத்திற்கு முன்பாக முழங்குகிற உன்னத கீதத்தை நாமும் உள்ளங் கனிந்து பாடத்தக்கவர்களாவோம்.

தேவனுடைய ஞானம், அறிவு, இவற்றின் ஐசுவரியத்தை நாம் கற்றறிவதற்கு நமது ஜெப ஜீவியம் செம்மையாய் உதவும். ஜெபம், விசுவாசம், இவை என்ன என்று ஒருவனுக்கு நாம் சிக்கறுத்துச் சொல்லவேண்டியதில்லை. புதிதாய்க் கிறிஸ்தவனானவனுங்கூட அவற்றைத் தெளிவாய் அறிந்து, வல்லமையாய் ஜெபிக்கக்கூடும். இப்படியிருந்தும், கிறிஸ்தவ தத்துவசாஸ்திரத்திலே உதிக்கிற நிலையாத ஆழமுள்ள நெருடான சில கேள்விகளுக்குத் தகுந்த உத்தரம் ஜெபத்தைப் பற்றிய உபதேசத்திலேதான் அகப்படும். ஜெபத்திற்கு வல்லமையுண்டு என்பது எவ்வளவுக்கு உண்மை? அது உண்மையேயானால், ஜெபத்திற்கு அப்பேர்ப்பட்ட வல்லமையைக் கொடுப்பது தேவனுக்கு எவ்வாறு கூடும்? ஜெபத்திற்கு அப்பேர்ப்பட்ட வல்லமை உண்டேயானால் அது தேவனுடைய திருவுள்ளத்தில் முன் தீர்ந்ததும் இனித் தீரப்போகிறதுமான அவருடைய யோசனைகளோடு முரணாமல் பொருந்தியிருப்பது எப்படி? தேவன் எல்லாவற்றின்மேலும் இராஜாவாயிருந்து எல்லாவற்றையும் தம் மனதின்படி ஆளுவதும் ஜெபத்தில் நாம் தெரிவிக்கிற நம் மனதின்படியும் இருக்க முடியுமா? இவையும் இவைபோன்ற வேறு கேள்விகளும் கிறிஸ்தவர்கள் விசாரித்தறியத் தக்கவைகளே. ஆனால், அவைகளைத் தகுந்த பக்தியின



யத்துடன் ஆராயவேண்டும். அப்படி ஆராய ஆராய அந்த இரகசியங்கள் நமக்கு வெளிச்சமாகும். அப்படி வெளிச்சமாகும்போது நாம் அதிசயத்தினால் நிறைந்து; தேவனுக்கு முன்பாகச் சாஷ்டாங்கமாக விழுந்து, ஜெபத்திலே மனுஷனுக்கு எப்பேர்ப்பட்ட வல்லமையைக் கொடுத்திருக்கிறீர்! என்று அவரைத் துதிப்போம்.

தேவன் எவ்வித சார்பும் துணையும் கிஞ்சித்தும் வேண்டாத பரிபூரணர். அவர் இன்னின்னது செய்வேன் என்று தம்மனதில் குறிகொண்டதை மாற்றி வேறொன்றைப் பண்ணத் தக்கதாகிய அவருக்குப் பிரத்தியேகமும் அந்நியமுமான எந்த வல்லமையும் இல்லவேயில்லை. அப்படியிருக்க, நான் செய்யும் ஜெபம் வீண்தான், அது என்னசெய்யும்? என்றிப்படி நினைத்து, ஜெபம் செய்யாமல் சிலர் தடைபட்டிருப்பார்கள். அவருக்கு இருக்கிற அவருடைய தன்மையும் தத்துவமும் அவருடையது; அதை ஆட்கொண்டு ஆட்டத்தக்க வல்லமை எங்குமில்லை. அவருடைய மனமும், வாக்கும், செய்கையும் அவர் இஷ்டம்போல ஆடுமேதவிர, பிறிதோர் இஷ்டத்தின்படி ஆட வழியே இல்லை. எதெது எப்படியெப்படி ஆகவேண்டுமென்பதை அவர் ஞானமும் பரிசுத்தமுமுள்ள தமது சுபயோசனைப்படி வகுத்துக் குறித்தபிறகு அதது அப்படியப்படித்தான் ஆகுமேயொழிய வேறாகாது. இப்படியிருக்க நமது ஜெபம் அவரை என்னபண்ணும்? அவர் மற்றப்படி செய்ய விரும்பாததை நமது ஜெபத்திற்கு இரங்கிச் செய்ய அவரைத் தூண்டுவதற்கு என்ன இருக்கிறது? ஜெபத்திற்கு உத்தரவு அருளுவேன் என்று அவர் நமக்குச் சொன்னால், அது அவர் நமது பலவீனத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்டு வெறுந் தாக்ஷண்ணியத்திற்குச் சொன்ன சொல்லேதவிர வேறென்ன? அவருக்கு அந்நியமாய் அவருக்குப் புறத்தில் முளைத்ததோர் வல்லமை வந்து அவருடைய சிந்தனைகள், செய்கைகளில் கலந்துகொள்வதற்கிடமில்லையே. அப்படியிருக்க, பெரிய வல்லமையுள்ள ஜெபம் என்று குறிப்பிட்ட ஜெபமுங்கூட என்னசெய்யும்? மானிடராகிய நாம் ஒருவர்மேலொருவர் வல்லமை செல்லுவித்துக்கொள்ளுகிற வழக்கத்தையொட்டி நம்முடைய வல்லமை ஜெபத்திலே தம்மேல் செல்லும்

என்று அவர்சொன்னது உபசாரத்திற்குச்சொன்னதே. ஜெபத்திற்குப் பலனில்லாமல் போகாது என்பதிலும் ஒரு உண்மையிருக்கிறது. ஜெபிக்கிறதினால் நம்மனதிற்கு ஆறுதலும் சந்துஷ்டியும் வரும். இதுவே பலனல்லவா? வெகுபேர் ஜெபத்தைப்பற்றி இப்படி நினைத்துப் பேசுவார்கள்.

இந்தக் கேள்விகளுக்குத் தகுந்த சமாதானம் சொல்வது அவசியமே. அப்படிச் சமாதானம் சொல்வதற்கு எங்கே போவோம்? அவைகளைச் சிக்கறுத்து விளக்கத்தக்க கருவி தேவனுடைய தத்துவத்திற்குள்ளேயே அவருடைய திரித்துவ இரகசியத்தில் இருக்கிறது. தேவன் ஒரே ஆளாய்மாத்திரம் இருந்து, தமது நினைவு வாக்குச்செய்கைகளுக்குள் ஒருவரும் வரவொட்டாமல் கதவைச் சாத்திக்கொண்டிருப்பாரானால், அப்போது அவரிடம் நெருங்குவதற்கும் வல்லமை செலுத்திக்கொள்வதற்கும் வழியில்லை என்பது மெய்யாகும். ஆனால், தேவனுக்குள் மூன்று ஆட்கள் இருக்கிறார்கள். தேவனுக்குள் பிதாவும், குமாரனும், அவ்விருவருடைய ஒருமைக்கும் ஐக்கியத்திற்கும் சாதனமான ஜீவதளையாகிய பரிசுத்த ஆவியும் இருக்கிறார்கள். நித்திய அன்பானவர் குமாரனைப் பெற்றபோதே, பிதா குமாரனைத் தமக்கு நிகரான ஆலோசனைக்காரராகிய இரண்டாம் ஆளாய்த் தம்மிடத்தில் இருப்பித்தபோதே, தெய்வீகத்தின் உள்ளுக்குள்ளான ஜீவனிலேயே ஜெபத்திற்கும் அதின் வல்லமைக்கும் வழிதிறக்கப்பட்டது. பூமியிலே மாத்திரமல்ல, வானத்திலுங்கூட பிதாவுக்கும் குமாரனுக்கும் ஏற்பட்டிருக்கிற சம்பந்தம் முழுமையும் கொடுக்கிறதும் வாங்கிக்கொள்ளுகிறதுமான சம்பந்தந்தான். புறக்கட்டாயம் ஏதுவுமின்றி சுய உள்ளத்து இஷ்டத்திலேயே அந்தக் கொடைத்தொழில் பிறந்தது; அந்த வாங்குதலும் அவ்வாறே பிறந்தது. இப்படிக் கொடுத்தலும் இப்படி வாங்குதலுமே பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள ஜீவியசம்பந்தமானால், கேட்டலும் வாங்கலும் குமாரனுக்கு இருக்கவேண்டியதே என்பது பிரத்தியக்ஷம். புகழ்தங்கிய அநாதி நித்திய மூவாட்கள் ஒருவருடன் ஒருவர் அளவளாவி அநுபவித்த பரிசுத்த தேவஜீவியத்திலே சதா நடைபெற்றுவந்த பெருஞ்செயல்களுள் குமாரன் இப்படிக் கேட்டு வாங்குதல்



ஒன்று. இரண்டாம் சங்கீதத்தில்: "இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்; என்னைக் கேளும், அப்பொழுது உமக்குக் கொடுப்பேன்" என்னும் திருவாசகம் இந்த இரகசியத்தையே உணர்த்துகிறது. பிதாவின்மேல் குமாரன் செல்வாக்குச் செலுத்துவதற்கு உரிமையும் அதிகாரமும் பிதாவே ஏற்படுத்தித்தந்திருக்கிறார். பிதாவிடத்தில் குமாரன் கேட்டுவாங்கினார் என்பது வெறும் புகலும் வேஷமும் அல்ல; பிதாவின் அன்பும் குமாரனின் அன்பும் ஒன்றையொன்று தழுவி, ஒன்றையொன்று பூர்த்திசெய்வித்த தேவஜீவ அசைவுகளில் அது ஒன்று. தமது ஆலோசனைகளில் தாம் தனித்து ஏகாந்தமாய் இருக்கலாகாது என்று பிதா தமது சுய இஷ்டமாய்த் தீர்மானித்தார்; அதின்பிரகாரம் அவருக்கு ஒரு குமாரன் இருக்கிறார்; இந்தக் குமாரன் கேட்டு வாங்கிக்கொள்வதினாலேயே அந்த ஆலோசனைகள் நிறைவேறும். இப்படி, தேவனுடைய இயல்பிற்குள்ளும் ஜீவனுக்குள்ளுமே ஒரு ஓயாத கேட்டு வாங்குதல் நடைபெற்றுவருகிறது. பூலோகத்தில் செய்யப்படுகிற ஜெபமெல்லாம் அந்தக் கேட்டு வாங்குதலைக் காட்டுகிற படமும் அதின் வெளிப்பாய்ச்சலுமே யொழிய வேறல்ல. "நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருந்தேன்" என்று இயேசு சொன்னபோது, அந்தக் கேட்டுவாங்குதலை உள்ளடக்கியே பேசினார். இயேசு பூமியில் நடமாடினகாலத்தில் அவருக்கிருந்த குமாரத்தன்மை தேவலோகத்தில் அவருக்கு இருந்த குமாரத்தன்மைக்குப் பேதப்பட்டதல்ல; இரண்டும் ஒன்றே. அவ்வாறே, அவர் பூவுலகில் செய்த ஜெபம் அவர் தேவலோகத்தில் செய்த ஜெபத்திற்குப் பேதப்பட்டதல்ல. அவருடைய பூலோக ஜெபம் அவருடைய பரலோக ஜெபத்தின் தொடர்ச்சியும் அதற்குச் சரியொத்த பிரதியுமாயிருந்தது. பிதாவின் மடியிலிருக்கிற அவருடைய ஒரேபேறான குமாரன் சதா ஜெபிக்கிற ஜெபத்தையும் பூமியிலிருக்கிற மனுஷர் ஜெபிக்கிற ஜெபத்தையும் இணைக்கிற சங்கிலி வளையம் மனுஷனான கிறிஸ்து இயேசு செய்கிற ஜெபம். ஜெபத்திற்கு உற்பத்தியும் ஊற்றும் தேவனுடைய தன்மைக்குள்ளேயே இருக்கிறது. தேவதிருவுள்ளத்திற்குள் ஜெபமின்றி, அதாவது,

குமாரன் கேட்டலும் பிதா கொடுத்தலும் இன்றி, எச்செயலும் நடக்கிறதில்லை.*

இந்த விஷயம் விளங்கினால், குமாரன் மூலமாய் வருகிற மனுஷ ஜெபம் தேவனிடத்தில் செல்வாக்குள்ளதாவது எப்படி என்பது ஒருவாறு விளங்கும். குமாரன் அறியாமல், அதாவது, அவரால் நேர் நேரிலாவது அவர் மூலமாயாவது செய்யப்படும் மன்றாட்டை அநுசரிக்காமல், தேவன் எதுவும் செய்யத் தீர்மானிக்கிறதில்லை. கர்த்தராகிய இயேசு முதற்பேறானவர்; சகலத்திற்கும் தலையும் சுதந்தரவாளியுமாயிருப்பவர் அவர்; சகலமும் அவர் மூலமாயும் அவருக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது; எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. சிருஷ்டியாவுக்கும் பிரதிநிதியாயிருக்கிற குமாரனுடைய வாக்கு பிதாவின் ஆலோசனைகளிலெல்லாம் எப்போதுமே சென்றுகொண்டிருந்தது. தேவன் செய்ய நிருணயித்த நிருணயங்களிலெல்லாம் மத்தியஸ்தரும் பரிந்து பேசுபவருமாகிய குமாரனுக்குத் தாராளமாய்ப் பேசுவதற்கு எப்போதுமே இடமிருந்தது; ஆகவே, குமாரனுக்குள் பிதாவண்டைக்கு வருகிற எல்லாருடைய விண்ணப்பங்களுக்கும் இடமிருந்தது என்பது சொல்லவேண்டுவதில்லை.

பிதாவிடத்தில் குமாரனுக்கு இருக்கிற இந்தத் தடையில்லாத, தாராளமான செல்வாக்கும் வல்லமையும் தேவன் விதித்த விதிகள் மாறமாட்டா என்னும் பிரமாணத்திற்கு விரோதிக்காதோ என்றால், விரோதிக்காது. ஏனெனில், மானிடருக்குரிய பிரகாரம், மனதில் முன்தீர்ந்த தீர்ப்பைப் பின்மாற்றித் திருப்பக்கூடாதவிதமாய் தேவனைக் கட்டுப்படுத்துகிற ஒரு இறந்தகாலம் அவருக்கு இல்லை. இறந்தகாலம், எதிர்காலம், என்று முன்பின் வரையறுத்த காலத்திற்குள் தேவன் பிழைக்கிறதில்லை; சதா நித்தியம் என்பதினுள் இருக்கிறவருக்கு வரையறுத்த காலமே கிடையாது. சதா நித்தியம் என்பது என்னவென்றால் என்றும் மாறாத நிகழ்காலம். நமக்கு இறந்தகாலமாயிருப்பது அந்தச் சதா நித்தியத்திற்குள் இறந்தகாலமாயிருக்கிறதேயில்லை; நமக்கு எதிர்காலமாயிருப்பது அதற்குள் எப்போதும் நிகழ்காலமாகவே இருக்கும். காலவரையறைக்குட்பட்டவர்களாகிய நமது பலவீன நிலைமைக்கேற்ப, வேதம் முற்காலத்து தேவ தீர்மானங்கள், இனிவருங்காலத்துத் தீர்மானங்கள் என்று இப்படிப் பேசுவது அவசியமாயிற்று. உள்ளபடிக்கு, தேவ ஆலோசனைக்கு இருக்கிற மாறாமை நினைத்ததெல்லாம் செய்கிற தேவசுவாதீனத்திற்குக் கொஞ்சமேனும் விரோதமல்ல; இரண்டும் எக்காலத்திலும் ஒன்றுடனொன்று இசைந்து பொருந்தியே இருக்கும். குமாரனும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்கிற ஜெபங்களை தேவன் தமது சாஸ்வதமான தீர்மானங்களுக்குள் ஏற்றுக்கொண்டு உத்தரவு அருளுகிறார் என்பது வெறும் போலி நடிப்பல்ல; உண்மையாகவே பிதாவின் உள்ளம் குமாரனுக்குள் தம்மண்டைவருகிற ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்பதற்குத் திறந்தேயிருக்கிறது; உண்மையாகவே தேவன் தமது ஆலோசனைகளை நமது ஜெபத்திற்கேற்றபடி திருப்பி, நமக்கு மற்றப்படி அவர் செய்ய விரும்பாததை நமது ஜெபத்தினிமித்தம் செய்கிறார்.

* இலேயர் ஆசிரியர் இயற்றிய "ஜெப போதகம்" என்னும் நூலில் இந்த விஷயம் இன்னும் விரிவாய் அகப்படும்.



தேவன் காலவரையில்லாத நித்தியமுடையவராதலால் அவரை நமது நினைவால் அளந்தறிய முடியாது. ஆதலால், தெய்வீக ஆளுகையுடன் மானிட ஜெபவாக்குச் சுவாதீனம் சற்றேனும் மாறாமல் ஒத்துப் பொருந்தியிருக்கும் விதம் எப்படி என்று விசாரிக்கப்புகுந்தால், அது நமக்கு ஆழங்காணமுடியாத இரகசியமாகவே இருக்கும். ஆயினும், நமது ஜெபம் பலிக்கும் என்பதற்குக் காரணமும் நிச்சயமும் பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள நித்திய ஐக்கியத்திலேயே இருக்கிறது. அதுவுந்தவிர, நமக்குக் குமாரனோடுள்ள ஐக்கியத்தினால் நமது ஜெபம் புகழோங்கிய கிறிஸ்துவத்தின் உள்ளுக்குள்ளான ஜீவனுக்குள் ஏறி அங்கே வல்லமைசெய்யும் என்கிற உறுதியும் இருக்கிறது. இது நமக்கு ஆறுதலும் தைரியமும் உண்டாக்கப் போதும். தேவன் செய்வதற்கு ஆலோசித்துத் தீர்த்த தீர்மானங்களை ஒரு காந்தக்கல்கோட்டைக்குள் அடைத்துவைத்திருப்பதுபோல் நமது மனதில் தோற்றம்பண்ணிக்கொண்டு, அதற்குள் பிரவேசிக்க எங்களுக்கு

உத்தரவிருப்பது மெய்தானாயினும் உள்ளே போக எங்களால் ஒருநாளும் முடியவே முடியாது என்று மலைவதற்கு நமக்கு நியாயமேயில்லை. தேவன் தமது இயல்பின்படியே ஜீவனுள்ள அன்பானவர். அவர் தமது குமாரனுடைய மனுஷீகத்தில் தமக்கும் முழுமானிட இயற்கைக்கும் அதிக நெருக்கமான உறவை ஏற்படுத்தியிருக்கிறார்; அவர் தமது பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு மானிட இயல்பு முழுமையையும் தமது அன்புமயமான தேவ ஜீவனுக்குள் ஏற்றுக்கொண்டு, அவர் இப்பூவுலகை ஆளும் ஆளுகையில் மானிடர் செய்யும் ஒவ்வொரு ஜெபத்திற்கும் ஒவ்வொரு இடம் தடையில்லாமல் தரத்தக்க சுயாதீனத்தில் தம்மை வைத்திருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட ஞானம் பகல் வெளிச்சம்போல் நமக்கு உதிக்கும்போது, போற்றுதற்குரிய திரித்துவத்தைப்பற்றிய உபதேசம் நமக்கு இனி வெறும் தத்துவவிஷயமாய்மாத்திரமிராமல், தேவனோடு ஐக்கியம் செய்வதற்கு மனுஷனுக்கு இருக்கிற வழியையும் தேவன் பூவுலகை ஆளுகிறதில் மனித ஜெபம் சென்று வல்லமை செலுத்துகிற விதத்தையும் வெளிப்படுத்துகிற ஜீவனுள்ள வெளிப்படுத்தலாயுமிருக்கிறது. அப்போது: "நாம் அவர் மூலமாய் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்" என்னும் திருவாக்கியத்தைத் துலக்குகிற நித்திய உலகத்துப் பிரகாசம் தூரக்காட்சிபோல் நமது கண்ணிற்கு அகப்படும்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

நித்திய தேவா! திரியேகா! பரிசுத்த திரிவஸ்துவே! உமது தெய்வீக சுபாவத்தைக் குறித்த பரம இரகசியத்தின்முன் அதிசயப் பயபக்தியுடன் என் முகத்தை மூடிக்கொண்டு தொழுவதே என் பிரியம். அந்த உன்னத இரகசியத்தில் எவ்வளவேனும் எனக்குத் திறந்துகாட்ட உமக்குச் சித்தமாகும்போது, உமது மகத்துவத்தை தியானிக்கையில் எவ்விதமாயாவது நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடி உமக்கு முன்பாக பயந்து, நடுங்கி, தலைகுனிந்திருப்பேன்.



பிதாவே! உமக்கு இந்த நாமம் இருப்பதற்காக உம்மைத் துதிக்கிறேன். பூலோகத்தில் இருக்கிற உமது பிள்ளைகளுக்குமாத்திரமல்ல, நித்தியகாலமாய் உமது ஒரே பேறான குமாரனுக்கும் நீர் பிதாவாக இருந்திருக்கிறீர். நித்தியகாலமாய் நீர் செய்துவருகிற உமது ஆலோசனைகளில் உமது குமாரன் உம்மைக் கேட்டு வாங்கும்படி இடம்பண்ணியிருக்கிறீராதலால், பிதாவாக நீர் எங்கள் ஜெபத்தைக் கேட்கக்கூடும் என்று உம்மைத் துதிக்கிறேன். அவருக்கும் உமக்கும் தேவலோகத்தில் எப்பேர்ப்பட்ட நேச ஐக்கியம் இருந்தது என்பதையும் நீடூழிகாலம் முதற்கொண்டு நீர் செய்துவருகிற சகல ஆலோசனைகளிலும் தீர்மானங்களிலும் அவருடைய மன்றாட்டிற்கும் அதற்கு உத்தரவுக்கும் எப்போதும் இடமிருந்துகொண்டேயிருந்தது என்பதையும் அவர் பூமியிலிருந்தகாலத்தில் நாங்கள் பார்க்கச் செய்திருக்கிறீர் என்று உம்மைத் துதிக்கிறேன். பரலோகத்திலே உமது ஆசனத்தில் வீற்றிருக்கிற அவருடைய மெய்யான மனுஷ சுபாவத்தினாலும் பூலோகத்திலே எங்கள் மனுஷ சுபாவத்தில் வீற்றிருக்கிற உமது பரிசுத்த ஆவியானவராலும் எங்களுக்கும் உமக்கும் ஒரு வழி திறக்கப்பட்டிருக்கிறது. இந்த வழியாய் ஏறிப்போய், மிடிப்பட்டுக் கூப்பிடுகிற ஒவ்வொரு மனுஷ கூப்பாடும் தேவனுடைய ஜீவனையும் அன்பையும் தொட்டு அணைத்து, தனக்கு வேண்டியதையெல்லாம் பெற்றுக்கொள்ளக்கூடும் என்பதற்காக அத்தியந்த உருக்கமாய் உம்மைத் துதிக்கிறேன்.

துதிக்குரிய இயேசுவே! நீர் குமாரனாயிருப்பதால் உமக்குள்ளே எங்கள் ஜெபத்திற்கு வழி திறந்திருக்கிறது. எங்கள் ஜெபம் பலிக்கும் என்று நீரே எங்களுக்கு உறுதிசொல்லியிருக்கிறீர். உமது ஜனமாகிய எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதிக்கும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். பிதா உமக்கு எப்போதும் செவிகொடுக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர். அதுவே அவர் உமக்குப் பிதா என்பதற்குப் போதுமான அடையாளம். அப்படியே, பிதா எங்களுக்கு எப்போதும் செவிகொடுப்பதை நாங்கள் அறிந்திருப்பதே பிள்ளைப்பாத்தியம் எங்களுக்கும் உண்டு என்று உணர்த்துகிற அடையாளமாய்த் தினந்தோறும் எங்களுக்கு இருப்பதாக. ஆமென்.

## மேற்கோள்.

"தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர்." எவ்வித மயக்கமுமில்லாமல் எளிதில் விளங்குகிற இந்த நினைவு வேதம் முழுமையிலும் அகப்படும். வாயின் செயலாகிய ஜெபத்திற்கும் இருதயத்தின் தியானமாகிய ஜெபத்திற்கும் உள்ள சம்பந்தத்தை வேதம் மிக எடுத்துக் காட்டுகிறது உண்மையானாலும், ஜெபம் நம் பக்கமாய் மடங்கித் திரும்பி நம் உள்ளத்தையும் ஜீவியத்தையும் வசப்படுத்தி வல்லமை செய்வதைப்பற்றி அது அவ்வளவாய் விஸ்தரித்துப் பேசாது. அதைப்பார்க்கிலும் தேவனிடத்தில் நன்மைகள், வரங்கள், ஆபத்து மீட்சிகள், இப்படிப் பற்பல பலன்களை அடையக் கருதுகிற ஜெப நிமித்தியங்களை வகுத்துக் குறித்துச் சொல்லவே அது நடக்கும் நடை. "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று இயேசு சொல்லுகிறார்.

"சமஸ்தத்தையும் முன்னுறப் பார்த்து முன்னுறத் திட்டவட்டம் செய்கிற தேவன் நமது ஜெபங்களையும் முன்னுறப் பார்த்து அவைகளைக் காரண காரிய நிகழ்வுகளாகிய பிரபஞ்ச விவகாரம் என்னும் சங்கிலியில் முன்னுற இசைத்துப் பொருத்தியிருக்கிறார் என்று நினைப்பது நம்மை ஜெபத்திற்குத் தூண்ட உதவுகிற வல்லமைதான் என்பது எவ்வளவு நிஜமும் பிரயோஜனமுமாயிருந்தபோதிலும்—ஜெபவிஷயமாய், இந்தச் சிந்தனை நம்முள்ளத்திற்கு ஆறுதல் தராது என்றும், நம் மனதை ஜெபத்திற்கு வசியப்படுத்துகிற வல்லமை அதி வல்ல என்றும் நமக்கு நிச்சயமாய்த் தெரியும். இந்தச் சிந்தனை நமக்கு ஜெபவுற்சாகமும், ஜெபஜீவனும், ஜெபபலமும் ஊட்டிக்கொண்டு இருக்கிற பொருளை விட்டு நம் கவனத்தை விலக்கிச் சிதைத்துவிடுகிறதை நாம் உணர்ந்திருக்கிறோம். சதாகால ஜீவியாய் மாத்திரமல்ல, நம்மோடு ஏககால ஜீவியாயும் இருக்கிற தேவன், ஜீவனும் இரக்கமும் பரிசுத்தமுமுள்ள தேவன், நம்மாத்துமாவுக்குத் தம் திருமுக தரிசனம் அருளுகிற தேவன், "என் முகத்தைத் தேடுங்கள்" என்று திருவாய்மலர்ந்த தேவன், இவரே, நம்மைக் கவருகிற காந்தம்; இவரே நம்முள்ளமும் உதடும் திறந்து பேசப்பண்ணுகிறவர்.

"தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் நமக்குச் சர்வ சந்தேகத் தெளிதலும் அகப்படும். அவர் புவிவாசியாயிருந்தபோது ஜெபித்தார். அப்போது அவர், மனுஷனாய் மாத்திரமல்ல, அவதாரம் செய்திருந்த தேவகுமாரனாகவும் ஜெபித்தார். அவர் புவியில் செய்த ஜெபம் அவர் பரத்தில் தெய்வாலோசனையினால் கிறிஸ்துவாக நியமிக்கப்பட்டதுமுதல் சதா செய்துவந்த ஜெபத்தை வெளிப்படுத்திக்



காட்டின காட்சியேதவிர வேறல்ல. குமாரன் சகலத்திற்கும் சுதந்தரவாளியாய் ஏற்படுத்தப்பட்டார். சதாநித்தியமாய் தேவகுமாரனே வழியும் மத்தியஸ்தருமாயிருந்தார். சதாநித்தியமாய் உலகத்திற்கு ஆதரவாய்ப் பிதாவினிடத்தில் பேசினவர் அவர்தான்." — சபீர் ஆசிரியர் இயற்றின "அந்தரங்க ஜீவன்" என்னும் நூல், 6-ம் அதி.

# பதினெட்டாம் பாடம்.

## 'இந்தச் சுரூபம் யாருடையது?'

அல்லது,

## தேவன் மனிதனுக்குக் குறித்திருக்கிற இலக்குக்கு ஏற்ற ஜெபம்.

"அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று அவர்களைக் கேட்டார்." (மத். 22. 20.)

"தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக என்றார்." (ஆதி. 1. 26.)

"இந்தச் சுரூபம் யாருடையது?" சத்துருக்கள் இயேசுவைப் பிடிக்கலாமென்று எண்ணியிருந்தகாலத்தில், இந்தக் கேள்வி கேட்டு அவர்களை அவர் தோற்பித்து, வரிகொடுத்தற் கடமையைப்பற்றி அவர்கள் மனதிலிருந்த சிக்கை அறுத்துவிட்டார். இந்தக் கேள்வியும் அதிலிருக்கிற உட்கருத்தும் அகிலலோகத்திற்கும் பொருந்தும்; விசேஷமாய் மானிட ஜன்மிக்குப் பொருந்தும். அவன் பூண்டிருக்கிற சுரூபம் அவனுக்கு தேவன் குறித்த இலக்கு இன்னது என்று அளவறுத்துக் காட்டும். அவன் தேவனுடைய சுரூபத்தைப் பூண்டிருப்பதினாலே அவன் தேவனுடையவன். தேவனை நோக்கி ஜெபிப்பதற்கே அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். தேவனாகிய அசல் படத்திற்கு ஒத்த பிரதிப்படமே மனுஷன் என்று காட்டுகிற குறிகளில் ஜெபம் ஒன்று. ஒரே தெய்வீகத்தில் மூவாட்கள் இருந்துகொண்டு, அம்மூவரும் தம்முள் அன்புறவாடுகிற ஆழ்ந்த இரகசியத்தை ஜெபமானது இப்பூவுலகில் தெரிய வெளிப்படுத்துகிறது.

ஜெபம் இன்னது, அது தேவனிடத்தில் செய்கிற பிரமிக்கத்தக்க வல்லமை இன்னது என்று சிந்தித்து அறிய அறிய, தேவனுடைய மந்திராலோசனைகளில் இப்போப்பட்ட கனத்தைப் பெற்றிருக்கிறதற்கு மனுஷனுக்குள்ள குணவிசயம் என்ன என்று விசாரிக்கத் தூண்டப்படுகிறோம். பாவம் அவனை மிகப் பங்கப்படுத்தியிருப்பதினால் அவன் இப்போதிருக்கிற நிலைமையைக்கொண்டு அவன் எந்த நிலைமையில் இருப்பதற்கு தேவன் குறித்திருந்தார் என்று நிதானிக்க முடியாது. அவனைப்பற்றி தேவன் என்ன கருத்து வைத்திருந்தார், அந்தக் கருத்து வாய்ப்பதற்கு அவனுக்கு என்னென்ன கிராணிகளைக் கொடுத்திருந்தார் என்று அறிவதற்கு தேவன் அவனைச் சிருஷ்டித்த மாதிரியை விளக்குகிற திருவார்த்தைச் சோதித்துப் பார்க்கவேண்டும்.

மானிடனுக்கு தேவன் வைத்த இலக்கு அவனைச் சிருஷ்டித்தபோது அவர் சொன்ன சொல்லால் தெரியும். பூமியை நிரப்பவும், அதையும் அதிலுள்ள எல்லாவற்றையும் தனக்குக் கீழ்ப்படுத்தவும், ஆளவும் தேவன் அவனைச் சிருஷ்டித்தார். இந்த மூன்று மொழிகளும் என்ன காட்டுகிறதென்றால் மானிடன் இப்பூவுலகில் தேவனுக்குப் பிரதிநிதியாயிருந்து கொண்டு, அதை ஆள்வதற்குக் குறிக்கப்பட்டிருந்தான் என்று காட்டுகிறது. அவன் தேவனுக்குப் பதிலியாதலால் இப்பூவுலகில் அவன் தேவனுடைய ஸ்தானத்திலே இருந்துகொண்டு, தானும் அவருக்குக் கீழ்ப்படிந்து, மற்ற யாவையும் அவருக்குக் கீழ்ப்படுத்தி வைத்திருக்கக் கடமைப்பட்டவன். மண்ணுலகில் செய்யவேண்டுவதையெல்லாம் அவனைக் கொண்டு செய்வதே தேவனுடைய உள்ளக்கருத்தாயிருந்தது: அவர் இந்த நிலவுலகத்துச் சரித்திரம் முழுமையையும் அவன் கையிலேயே விட்டுவிடத் தீர்மானித்திருந்தார்.

அவனுக்குக் குறிக்கப்பட்டிருந்த அப்போப்பட்ட இலக்குக்கு ஏற்றவண்ணமே அவனுக்குப் பதவியும் அதிகாரமும் அருளப்பட்டிருந்தது. மண்டலேஸ்வரனாகிய பூலோக அரசன் ஒருவன் தன் ஆட்சிக்கு உட்பட்ட தூர சீமைக்கு ஒரு பிரதியரசனை நியமித்து அனுப்பும்போது, அவ்விடத்தில் அநுசரிக்கவேண்டிய அரசுமுறையை அவனுக்கு உபதேசித்து அனுப்புவான் என்பதும் அந்த முறையை அந்தப் பிரதியரசன் கைக்கொண்டொழுகுவான் என்பதும் பிரத்தியக்ஷம். தனக்கு உபதேசிக்கப்பட்ட அரசுமுறையை அந்தத் தூரசீமையில் கொண்டுசெலுத்துவதற்கும் தன்னரசனுடைய இராஜ்யத்தின் கௌரவம் குலையாமல் நிறுத்துவதற்கும் சேனைகளாவது வேறு சாதனங்களாவது வேண்டியதானால், அவற்றைக் கேட்டனுப்ப அந்தப் பதிலரசனுக்குச் சகல உரிமையுமுண்டு. அந்தச் சீமைக்கு அதிகாரியாய்ப் போனவன் அநுசரிக்கிற அரசுமுறை திருப்திகரமாயிராவிட்டால், அதிகாரத்திலிருந்து அவன் நீக்கப்பட்டுத் தன்னரசனுடைய கருத்தை அவனிலும் தீர்க்கமாயறிந்த வேறொருவன் அனுப்பப்படுவான். இவன் தன்னரசனுடைய அதிகாரத்தை நிர்வகிப்பதில் சமர்த்தனும் நம்பிக்கைக்குரியவனுமானால், அவன் சொல்லுகிற ஆலோசனைக்கு அவனரசன் இணங்குவான். இவ்வாறே, தேவனுக்குப் பதிலரசனாய் ஆள மனிதன் நியமிக்கப்பட்டான்; பூவுலகில் நடக்கவேண்டியதெல்லாம் அவனுடைய சித்தத்திற்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டே நடப்பதற்குக் குறிக்கப்பட்டிருந்தது. அவன் சொல்லுகிற ஆலோசனைக்கும் அவனுடைய மன்றாட்டிற்கும் இணங்கி தேவலோகத்து நன்மை பூலோகத்திற்குக் கிடைக்கவேண்டியதாயிருந்தது. தேவலோகத்திலிருக்கிற இராஜாவுக்கும் அவரிடத்தில் இராஜபக்தியுள்ள ஊழியக்காரனாய்ப் பூலோக அரசாட்சிசெய்த மானிடனுக்கும் வியவகாரப் போக்குவரத்து நடப்பதற்கு ஏற்பட்டிருந்த வழி அவன் அவரை நோக்கிச் செய்த ஜெபம்தான். அது ஆச்சரியமான வழியாய்த் தோன்றினாலும் அதுவே மிகவும் சுளுவும் இயல்புமான வழி. நிலவுலகத்திற்கு ஆகவேண்டியதெல்லாம் மனிதனுடைய இஷ்டம், சித்தம், ஜெபம், இவற்றின் வல்லமைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தது.



பாவம் தொடங்கினபோது இதெல்லாம் பயங்கரமாக மாறிவிட்டது: மனிதனுடைய பாவம் சிருஷ்டிவர்க்கத்தையெல்லாம் சாபத்திற்கு உட்படுத்திற்று. மீட்பு ஆரம்பித்தபோது, சிருஷ்டிவர்க்கமெல்லாம் தத்தம் பூர்வ நிலைமையை மகிமையாய் அடைந்துகொள்ளுதலும் ஆரம்பித்தது. தேவன்

தமக்கென்று ஒரு ஜனத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் அந்த ஜனத்திலிருந்து இராஜாக்களை, விசேஷமாய்த் தாம் முன் தெரிவித்திருந்த மகா இராஜாவை எழுப்பவும் சித்தமாகி, ஆபிரகாமில் அந்த ஜனத்தை ஆரம்பிக்கத் துவக்கினபோதே, தன்னோடு சம்பந்தப்பட்டவர்களுடைய ஆக்கம் கேடு, இவற்றை அறுதிசெய்கிற வல்லமை தேவனுக்கு உகந்த ஊழியனுடைய ஜெபத்திற்கு இருக்கிறது என்று பார்க்கிறோம். ஜெபம் நமக்கு வேண்டிய நன்மைகளைச் சம்பூரித்துக்கொள்வதற்கு முக்கிய சாதனமாய்மாத்திரமிருக்கிறதில்லை. அது மற்ற மனுஷருடைய வாழ்வு தாழ்வுகளையும் இந்த வாழ்வு தாழ்வுகள்மேல் அதிகாரம் செலுத்துகிற தேவசித்தத்தையும் நம் வசப்படுத்திக்கொள்வதாகிய நமது இராஜரீக உரிமையைக் கையாளும் கையாட்சியாயும் இருக்கிறது என்று நாம் ஆபிரகாமில் திருஷ்டாந்தமாய்ப் பார்க்கிறோம். ஒருமுறையாகிலும் ஆபிரகாம் தனக்காக ஜெபித்ததை நாம் காண்கிறதில்லை. அவன் சோதோமுக்காகவும் லோத்துக்காகவும், அபிமெலேக்குக்காகவும், இஸ்மவேலுக்காகவும் பண்ணின ஜெபம் அக்கம்பக்கத்தியாருடைய வாழ்வு தாழ்வுகளை ஆக்குவதில் தேவனுடைய அன்பன் எப்பேர்ப்பட்ட வல்லமை காட்டக்கூடும் என்று ரூபிக்கிறது.

இதுவே மானிடனுக்கு ஆதிமுதற்கொண்டு வைக்கப்பட்டிருந்த இலக்கு. திருவசனம் இதைமாத்திரம் நமக்குச் சொல்லி அத்தோடே விட்டுவிடாமல், அப்பேர்ப்பட்ட உயர்ந்த உத்தியோகத்தை மனுஷனுக்குக் கொடுக்க தேவனைத் தூண்டின காரணத்தையும் நமக்குத் தெரிவிக்கிறது. அவர் அவனை தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்ததே அந்தக் காரணம். உள்ளே தகுதியில்லாமல் புறம்பே அவனுக்கு ஆட்சி அருளப்பட்டதில்லை: அவனுக்குள்ளேயிருந்த, அதாவது, அவனுடைய சுபாவத்திலே பதிந்திருந்த தேவ சாயலிலிருந்து அவன் சகலத்திற்கும் இராஜாவாய் ஆளுகிற ஆட்சியாகிய புறம்பான தேவசாயல் முளைத்திருந்தது. மானிடனுடைய உள்ளத்திற்கும் தேவனுக்கும் குணவொற்றுமையும் குணப்பொருத்தமும் இருந்தது. இதுதான் ஆரம்பத்தில் அவனில் பதிந்திருந்த தேவசுரூபம். அதினால்



அவன் தேவனுக்கும் இந்தப் பூவுலகிற்கும் மத்தியஸ்தனு
யிருக்கத் தகுதியுடையவனாயிருந்தான். எவ்வாறெனில்,
தேவனுடைய மனக்கருத்தை உலகிற்கு வெளிப்படுத்துகிற
தீர்க்கதரிசியாகவும், உலகிற்கு ஆவசியகமானதை தேவ
னுக்குத் தெரிவிக்கிற ஆசாரியனாகவும், தேவனருளுகிற
நன்மைகளை வாங்கி உலகிற்குப் பகிர்ந்துகொடுக்கிற இராஜா
வாகவும் அவன் நியமிக்கப்பட்டிருந்தான். இவ்வாறு செய்து,
தேவனுக்குப் பதிலாய் உலகத்தைச் சீருடன் ஆள்வதற்கு
தேவசாயல் அவனுக்கு இருந்தாலன்றிக் கூடாது என்பது
பிரத்தியக்ஷம். தேவ திருவுள்ளத்தில் உலகத்தைப்பற்றி
யிருந்த அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளவும் அதற்கு
அவர் செய்யக் கருதியிருந்தவைகளை பிசகில்லாமல் செய்ய
வும் தக்க சாமர்த்தியமும் போதுமான தேவசாயலும் அவ
னுக்கு இருந்ததினாலேயே உலகிற்கு அவசியமானதைக்
கேட்டு வாங்குவதாகிய உயர்ந்த உரிமையை தேவன் அவ
னுக்குக் கொடுத்தார். மானிடன் விஷயமாய் தேவன் எண்ணி
யிருந்த எண்ணத்தைப் பாவம் புகுந்து தடுத்துவிட்டது
மெய்யேயானாலும், ஜெபமானது அவன் பாவத்தில் விழாம
லிருந்தாலெப்படியோ அப்படியே இன்னம் இருக்கிறது:
அது அவனுக்கு தேவசாயல் இருந்ததை ரூபிக்கிற ரூபகார
மாயும், காணரிய பரம்பொருளுடன் அவன் செய்யும் விவ
காரத்திற்கு வாயிலாயும், சர்வாண்டங்களையும் ஆட்டுகிற
கையைத் தான் ஆட்ட இடம்பெற்ற வல்லமையாயும் இப்
போது மிருக்கிறது. ஜெபம் இரக்கத்திற்காகக் கெஞ்சுகிற
கெஞ்சுதலாய்மாத்திரமிருக்கிறதில்லை: அது இராஜரீக சுய
அபீஷ்டனாய் தேவனுடைய ஆலோசனைகளை நிறைவேற்றத்
தக்க சாமர்த்தியத்துடன் சிருஷ்டிக்கப்பட்ட தனது தெய்
வீக உற்பத்தியை அறிந்திருந்து, மானிடன் தன் சித்தத்
தில் இருப்பதை தேவனுக்குத் தெரிவிக்கிற தெரிவிப்பாயு
மிருக்கிறது.

பாவம் கெடுத்ததை கிருபை திருப்பிக்கொடுத்தது. முதல் ஆதாம் இழந்ததை இரண்டாம் ஆதாம் கெலித்துத் தந்திருக்கிறார். மானிடன் தன் பூர்வநிலைமையை கிறிஸ்துவில் மறுபடியும் அடைந்துகொள்ளுகிறான். கிறிஸ்து

வில் நிலைத்திருக்கிற திருச்சபை: "உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள், அது உங்களுக்குச் செய்யப்படும்" என்கிற வாக்குத்தத்தத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறது. இந்த வாக்குத்தத்தம் நமக்கே வேண்டிய ஏதேனும் ஒரு நன்மையை நாம் கேட்டு வாங்கவேண்டும் என்று பிரதமமாய்க் குறிக்கிறது என்று நாம் நினைக்கவேகூடாது. பரம திராக்ஷையானவரில் கனிதரும் கொடிகளா யிருக்கவேண்டியவர்களாகிய நமது நிலைமையை அது குறிக்கிறது. அவரைப்போல நாமும் பிதாவின் வேலை வாய்க்கவும் பிதாவுக்கு மகிமை வரவுமே பிழைக்கவேண்டியவர்கள். அந்த வாக்குத்தத்தம் யாருக்கு என்றால், அவரில் நிலைத்திருந்து, கீழ்ப்படிதலும் சுயபரித்தியாகமுமே தமது நடக்கைப்பிரமாணமாய்க் கொண்டொழுகிய அவருக்குள் போய்க் குடியிருந்துகொண்டு, உயிர்வாழ்க்கையைத் தங்களுக்குள் அல்ல அவருக்குள் வைத்துக்கொண்டு, பிதாவின் காரியமும் அவருடைய இராஜ்யத்தின் காரியமுமே கண்ணாயிருப்பவர்களுக்கு. புதுப்பிறப்பு வாய்த்தபோதே பூர்வ இலக்கும் வாய்த்தது என்பது, அதாவது, புதுப் பிறப்பு தேவசுரூபத்தையும் சாயலையும் மீட்டுக்கொடுத்ததினாலே பூமியாளும் திராணியையும் தங்களுக்கு மீட்டுக்கொடுத்தது என்பது இவர்களுக்குத்தான் தெரியும். அவரவர் தாம் தாம் வேலைசெய்கிற இடத்திற்குத் தக்கபடி பூமிக்குத் தேவையான தேவலோகத்து வல்லமைகளை வருவித்துத் தர இவர்களுக்கு உண்மையாகவே சக்தியிருக்கும். இவர்கள் பரிசுத்த துணிவுடன் தங்கள் சித்தத்திலிருப்பதை தேவனுக்குத் தெரிவிப்பார்கள்; தேவசமுகத்தில் இவர்கள் ஆசாரியராய் விளங்குவார்கள்; இவர்கள் இராஜாக்களுமா யிருப்பதினால், இனி வரும் உலகத்தின் வல்லமைகளெல்லாம் இவர்களுடைய கைவசத்திலிருக்கும்.* "நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவாயிருந்தாலும் அது உங்களுக்குச் செய்யப்படும்" என்கிற வாக்குத்தத்தம் இவர்களுக்குப் பலிக்கத் துவக்கும்.

* "மனுப்புத்திரரில் தேவன் ஆசாரியனைத் தேடுகிறார். அவர் தமது கருத்தில் வைத்திருந்த சதாகால சிருஷ்டிமுறையின் முக்கிய அம்சங்களில் மானிட ஆசாரித்துவம் ஒன்று. தாம் படைத்த படைப்பை மானிடனைக்



ஜீவாகர தேவனுடைய திருச்சபையே! உனக்கிருக்கிற உத்தியோகம் நீ நினைக்கிறதைவிட அதிக மேன்மையும் பரிசுத்தமுமான உத்தியோகம். தேவனுக்கு இராஜாக்களும் ஆசாரியருமாகிய உன் அவயவங்களைக்கொண்டு தேவன் உலகத்தை ஆள விரும்புகிறார். தேவலோகத்து நன்மைகளை வருவிக்கவும் அவைகள் வராமல் வழியடைக்கவும் அவர்களுடைய ஜெபத்திற்கு வல்லமையுண்டு. தாங்கள் மாத்திரம் இரட்சிக்கப்பட்டால் போதுமென்றிராமல் குமாரன் மூலமாய் பிதா தமது மகிமையான ஆலோசனையை நிறைவேற்றிக்கொண்டதுபோல தங்கள் மூலமாயும் அவரதை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தங்களை முழுமையும் அவருக்குக் கையளிக்கிறவர்களும் அவரை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களுமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட அவருடையவர்களில் மானிடனுடைய பூர்வ இலக்கு எப்பேர்ப்பட்ட ஆச்சரியமானது என்று தேவன் ரூபிப்பார். அவன் புவியில் தேவசாயலை யணிந்தவனாதலால் இந்தப் பூவுலகம் மெய்யாகவே அவனுடைய கையாட்சிக்கு விடப்பட்டிருந்தது. அவன் விழுந்தபோது அவனுடன் எல்லாம் விழுந்தது; சர்வசிருஷ்டியும் அவனுடன் தவித்து அவனுடன் பிரசவவே

கொண்டு ஆளவேண்டுமென்பது அவர் மனதில் குறித்திருக்கிற எண்ணம்; அதுபோலவே, சிருஷ்டிகள் தமக்குச் செலுத்தும் தெ[illegible]மானிடனைக்கொண்டே செலுத்துவிக்கவேண்டுமென்பதும் அவர் மனக்கருத்து. பாவிக்கும் தேவனுக்கும் விவகாரப் போக்குவரத்துக்கு வாயிலாகவும், தேவலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கிற சங்கிலியாகவும் நியமிக்கப்பட்டிருப்பது ஆசாரித்துவம். அவ்வித ஆசாரித்துவம் பாவப்பிராயச்சித்தம் செய்தல் என்கிற எல்லையரியந்தம் தேவகுமாரனுடைய பொறுப்பு; சிருஷ்டிகரும் சிருஷ்டிகளும் [illegible] போக்குவரத்துச் செய்து கொள்ளுவதற்கு வாயிலாயிருத்தல் என்கிற எல்லையரியந்தம் அது இரட்சிக்கப்பட்ட மனுஷருடைய பொறுப்பு, அதாவது, தேவனுடைய திருச்சபையின் பொறுப்பு.

தேவன் இராஜாக்களையும் தேடுகிறார். ஆனால் தேவதூதருடைய குழுவில் அல்ல. அவருடைய சமஸ்த உலகங்களையும் ஆளவேண்டிய இராஜாக்கள் பாவத்தில் விழுந்து மீண்ட மானிடரிலிருந்து எழும்பவேண்டும். [illegible]தின் செங்கோல் மானிடர் கைகளிலும் அவற்றின் [illegible] சிங்காசனங்களிலும் இருப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது."—போனர் வேத பண்டிதரியற்றிய "கிழிந்த திரை" என்னும் நூலிற் காண்க.

118939

தனைப்படுகிறது. ஆனால், இப்போது அவன் மீட்பு அடைந்திருக்கிறான்; அவன் தன்னுடைய பூர்வ அந்தஸ்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளத் துவக்கிவிட்டான். இப்படி தேவனுக்கு உகந்தவர்களானவர்கள் உன்னதமான ஆசாரிய இராஜாவும் தங்கள் தலைவருமான கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவருக்குள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் நிலைமையில் பிரியப்பட்டு, தேவன் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதை யவருக்குத் துணிந்து தங்கள் ஜெபத்திலே சொல்லுவார்கள். இவர்களைக்கொண்டே தமது நித்திய ஆலோசனை நிறைவேறவும் தமது இராஜ்யம் வரவும் வேண்டுமென்பது தேவன் வைத்திருக்கிற நோக்கம். மீட்கப்பட்ட மனுஷன் புவியில் தேவசாயலணிந்தவனும் தேவனுக்குப் பதிலாளியுமா யிருந்துகொண்டு, தனது ஜெபத்தினாலே இப்பூவுலகின் சரித்திரம் நடப்பதற்கு வழியேற்படுத்த வேண்டியவன். மனுஷன் அக்காலத்தில் சிருஷ்டிக்கப்பட்டதும் இக்காலத்தில் மீட்கப்பட்டதும் ஜெபிக்கவும் தனது ஜெபத்தினால் ஆளுகை செய்யவுமே.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆண்டவரே! மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே! உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது.

தேவனாகிய கர்த்தாவே! பாவம் மனிதனை எவ்வளவு தாழ்வாய் கீழ்மைப்படுத்தியிருக்கிறது! உமக்கு ஊழியனும் பதிலாளியுமாயிருக்க நீர் அவனுக்குக் குறித்த தெய்வீக இலக்கைக்கூட அறிதற்குக் கூடாதவண்ணம் அது அவனுடைய புத்தியை அந்தகாரப்படுத்திவிட்டது. ஐயோ! உமது ஜனங்கள்கூட, அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்ட பிற்பாடும்,



நீர் அவர்களுக்குக் குறித்திருக்கிற உத்தியோகத்தைச் செய்யப் பிரியப்படுகிறதில்லை; ஏனெனில், அவர்கள் உம்மிடத்திலே வல்லமையுடையவர்களாகிப் பிறகு மனிதரிடத்திலும் அவர்களுக்கு நன்மையுண்டாக வல்லமையுடையவர்களாகாதிருக்கிறார்கள்.

கர்த்தராகிய இயேசுவே! உமக்குள்ளேயே பிதா மனிதனைத் திரும்பவும் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டியிருக்கிறார்; அவர் எங்களுக்கு நியமித்த நோக்கம் வாய்ப்பதற்கு உமக்குள்ளேயே வழிதிறந்திருக்கிறீர். ஆ கர்த்தாவே! உமது ஜனத்திற்கு இரங்கி, உமது சுதந்தரத்தைச் சந்தித்தருளும்! நீர் உமது திருச்சபையில் வல்லமையாய் வேலைசெய்தருளும்; உம்மை விசுவாசிக்கிற உமது சீஷர்கள் தங்களுக்கு அருளப்பட்டிருக்கிற இராஜரீக ஆசாரிய ஊழியத்தை உணர்ந்து, நீரநேக உயர்ந்த திருவாக்குகள் அளித்திருக்கிற ஜெபத்தின் வல்லமையைப் பூண்டவர்களாய் எழுந்துபோய் உமது இராஜ்யத்திற்குப் பயன்பட உழைக்கவும், ஜாதிகள்மேல் ஆளுகை செலுத்தவும், நிலவுலகில் தேவநாமத்தை மகிமைப்படுத்தவும் அவர்களுக்குப் போதியும். ஆமென்.

# பத்தொன்பதாம் பாடம்.

'நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்'

அல்லது,

## ஜெபிக்கவும் உழைக்கவும் வல்லமை.

"மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்; இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோவா. 14. 12, 14.)

நமது இரட்சகர் தமது சீஷர் விஷயமாய்ச் செய்த திருவூழியத்தை மலைப்பிரசங்கத்தோடு ஆரம்பித்தார்; அவ்வூழி

யத்தை முடிக்கும்போது யோவான் நமக்கு அழியாமல் காத்துத் தந்திருக்கிற விடைபெற்றுப்பிரசங்கத்தினால் முடித்தார். இரண்டிலும் அவர் ஒருதரத்திற்குமேல் அதிகமாய் ஜெபத்தைப்பற்றிப் பேசுகிறார். ஆயினும், இரண்டிற்கும் ஒரு வித்தியாசமுண்டு. மலைப்பிரசங்கத்திலே, இப்போதுதான் புதிதாய் தமது பள்ளிக்கூடத்திற்கு வந்து, தேவன் தங்களுக்குப் பிதா என்பதைக்கூட அறியாமல், ஜெபத்தில் தங்களுக்கு வேண்டியதை மாத்திரம் கேட்கவேண்டும் என்று நினைத்திருந்த சீஷருக்கு அவர் உபதேசித்தார். விடைபெற்றுப்பிரசங்கத்திலோ, தம்மிடத்தில் கற்றுப் பழகவேண்டியதைக் கற்றுப் பழகி, தாம் செய்த ஊழியத்தையும் வேலையையும் தாங்களும் செய்யத் தயாராகி, தம்மால் சுவிசேஷ தூதர்களாய் அனுப்பப்படப்போகிற சீஷருக்கு அவர் உபதேசித்தார். அந்த முந்தின உபதேசத்தின் முக்கிய பாடங்கள் எவையென்றால்: பிள்ளைகளை யொத்திருங்கள், விசுவாசத்துடன் ஜெபியுங்கள், உங்களுக்குத் தேவையான நன்மையையெல்லாம் பிதாவே தருவார் என்று அவரை நம்புங்கள் என்பது. இந்தப் பிந்தின உபதேசத்திலே, இன்னம் உயர்ந்த பாடங்களை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்: அவர்கள் இப்போது அவருக்கு ஆப்தசிநேகிதரா யிருக்கிறார்கள்; அவர்களுக்குப் பிதாவிடத்தில் தாம் செவியாரக் கேட்டதையெல்லாம் தெரிவித்துவிட்டார்; அவர் செய்யத் தம் மனதில் குறித்ததையெல்லாம் அவர்கள் வகை விபரமாய் அறிந்துகொண்டார்கள்; அவர் இதுவரையில் செய்த வேலையும் புவியில் இருக்கிற அவருடைய இராஜ்யமும் இனி அவர்கள் நம்பிக்கைக்கு ஒப்புவிக்கப்படும்; அவர்கள் இனி தம்மால் அனுப்பப்படுகிற சுவிசேஷகர்களா யிருப்பார்கள். அவர் செய்த கிரியைகளைத் தாங்கள் செய்ய அவர்கள் இனிப் புறப்படவேண்டும்; சீக்கிரத்திலேயே அவருக்கு மகிமைப்பேறு கிடைக்குமாதலால், அதின் பலத்தால் அவர்கள் அவர் செய்ததிலும் பெரிய கிரியைகளைக்கூடச் செய்வார்கள். அவர்கள் செய்யப்போகிற வேலைக்கு அவசியமாகிய அந்த பலம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு அவர்கள் இனி ஜெபத்தையே வாயிலாக்கிக் கொள்ளவேண்டும். அவர் பிதாவினிடத்திற்கு எழுந்



தருளினதுமுதல் அவர்களுடைய உழைப்புக்கும் ஜெபிப்புக்கும் ஒரு புதுக்காலம் ஆரம்பிக்கிறது.

அவருக்கும் அவர்களுக்குமுள்ள இந்தப் பொருத்தம் இன்றைய வாக்கியத்தில் தெளிவாய்க் காட்டப்படுகிறது. அவர்கள் இந்த பூலோகத்தில் அவருடைய சரீரமாயும் பரலோகத்தில் அவரோடு ஒன்றித்தவர்களாயும் இருந்துகொண்டு, அவர் இதுவரையில் செய்தவைகளைவிடப் பெரிய கிரியைகளை அவர்கள் இனிச் செய்யவேண்டும். அவருக்குக் கிடைத்தவைகளைவிடப் பெரிய காரியசித்திகளும் ஜெயங்களும் அவர்களுக்குக் கிடைக்கும். இதற்கு இரண்டு காரணங்கள் அவர்களுக்குச் சொல்லுகிறார். சகல வல்லமையையும் பெற்றுக்கொள்ள அவர் பிதாவினிடத்திற்குப் போவது ஒரு காரணம்; அவர்கள் இதுமுதல் வேண்டியதையெல்லாம் அவர் நாமத்தில் கேட்டு வாங்கிக்கொள்ளக் கூடியதாயிருப்பது இன்னொரு காரணம்: "நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலும், நீங்கள் எதைக் கேட்டாலும் நான் செய்வேனபடியினாலும்." அவர் பிதாவினிடத்திற்குப் போவது இரட்டை நன்மையைத் தரும்: அவர்கள் எல்லாவற்றையும் அவர் நாமத்தில் கேட்டு வாங்கிக்கொள்வார்கள், அதினால் அவரைவிடப் பெரிய கிரியைகளைச் செய்வார்கள். நமது இரட்சகர் சீஷரிடத்தில் விடைபெற்றுக்கொண்ட இந்த வார்த்தைகளில் ஜெபத்தைப்பற்றி இரண்டு மிக முக்கியமான பாடங்கள் இருக்கின்றன: இயேசு செய்த வேலையைச் செய்கிறவன் அவர் நாமத்திலே ஜெபம்பண்ணவேண்டும்; அவர் நாமத்திலே ஜெபம்பண்ணுகிறவன் அவர் நாமத்திலே வேலைசெய்ய வேண்டும்.

வேலைசெய்கிறவன் ஜெபம்பண்ணவேண்டும். ஜெபத்திலே தான் வேலைக்கு வேண்டிய பலம் அகப்படும். இயேசு செய்த வேலையை விசுவாசத்துடன் தானும் செய்யப் புகுந்தவன் அவர் நாமத்திலே ஜெபம்பண்ணுவது அவசியம். இயேசு புவியில் இருந்த காலமெல்லாம் அவரே எல்லாவற்றிலும் பெரிய வேலைகளையெல்லாம் செய்தார்; சீஷர் துரத்தமாட்டாதிருந்த பிசாசுகள் அவருடைய வார்த்தைக்கு அஞ்சி ஓடின. அவர் பிதாவினிடத்திற்குப் போனபோது, தாமே நேராய்

இப்பூவுலகில் வேலை செய்வதற்கு அவர் உலகில் காணக்கூடிய சரீர சகிதமாய் இருந்ததில்லை. இனிச் சீஷர்களே அவருக்குச் சரீரம்போல் இருந்தார்கள். அவர் தேவலோக சிம்மாசனத்திலிருந்துகொண்டு புவியில் செய்யும் வேலையை எல்லாம் அவர்களைக்கொண்டே செய்யவேண்டியதும் கூடியதுமாயிருந்தது. அவர் இருந்த இடத்தைவிட்டு அப்புறப்பட்டு, தமது காரியக்காரர்களைக்கொண்டு தாமிருந்த இடத்து வேலைகளைச் செய்யத் துவக்கினபிற்பாடு அந்த வேலைகள் சொற்பமாகி பலங் குறைந்துபோகும் என்று நினைக்க ஏது உண்டாகலாம். ஆனால் அது அப்படியல்ல என்று அவரே நமக்கு உறுதி சொல்லுகிறார்: "மெய்யாகவே மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்; இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." சமீபகாலத்தில் சம்பவிக்கப்போகிற அவருடைய மரணம் பாவத்தின் வல்லமையை உள்ளபடிக்கு முறித்து அதற்கு முடிவு உண்டாக்குவதாயிருந்தது; அவருடைய உயிர்த்தெழுதலோடே நித்திய ஜீவனின் பெலன்கள் இனி மானிட சரீரத்தை ஆட்கொண்டு, மானிட ஜீவனில் முதன்மையாயிருந்து நடத்தும். அவருடைய பரமேறுதலினால் அவர் தம்முடையவர்களுக்கு தேவ ஆவியைப் பரிபூரணமாய்க் கொடுக்கக்கூடிய அதிகாரத்தை வாங்கவிருந்தார். பரலோக சிம்மாசனத்திலே வீற்றிருக்கப்போகிற அவருக்கும் பூலோகத்திலிருந்த அவர்களுக்கும் உண்டாயிருக்கப்போகிற ஐக்கியம் அதிநெருக்கமான தெய்வீக பூரணத்தையுடையதா யிருப்பதைப்பார்த்தே: "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, என்னை விசுவாசிக்கிறவன் இவைகளிலும் பெரிய கிரியைகளைச் செய்வான்" என்று சொன்னார். இப்படி அவர் சொன்னது உவமையல்ல, உள்ளபடிக்கு உண்மை. பின்னிட்டகாலத்தில் நடந்த சரித்திரம் இது அவ்வளவும் உண்மையென்று ரூபித்தது. இயேசு இப்புவியில் தாம் நேர் நேராய் மூன்று வருஷம் வேலைசெய்தபோது சற்றேறத்தாழ ஐஞ்ஞூறு சீஷரைச் சேர்த்தார். இவர்களில் பெரும்பான்மையோர் பலவீனராயிருந்து அவர் காரியத்துக்குச் சரியாய் உதவமாட்டா



திருந்தார்கள். ஆனால், பவுல், பேதுரு முதலியோரைப் போன்ற மனிதர் அவர் செய்ததிலும் பெரியவைகளைச் செய்வதற்கு அருளைப் பெற்றிருந்தார்கள் என்பது பிரத்தியக்ஷம். அவர் தமது தாழ்ந்த நிலைமையிலிருந்தகாலத்தில் செய்வதற்கு இசையாதிருந்ததை இப்போது அவர் தேவாசனத்திலிருக்கையில் அவர்களைக்கொண்டு செய்யக்கூடியவரா யிருக்கிறார்.

ஆகிலும், இதற்கு ஒரு நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, என்னை விசுவாசிக்கிறவன் இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்; என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." பிதாவினிடத்திற்குப் போவது நமது ஜெபத்தைக் கேட்க அவருக்கு ஒரு புதுவல்லமையைக் கொடுக்கும். அவர் செய்ததிலும் பெரிய கிரியைகளைச் செய்வதற்கு இரண்டு காரியங்கள் அவசியம்; எவையென்றால், சகல வல்லமையையும் வாங்கிக்கொள்ள அவர் பிதாவினிடத்திற்குப் போவதும், சகல வல்லமையையும் நாம் அவரிடத்தில் வாங்கிக்கொள்ள அவர் நாமத்தினாலே நாம் ஜெபிப்பதும். அவர் பிதாவினிடத்தில் கேட்கக் கேட்க அவர் செய்ததிலும் பெரிய கிரியைகளைச் செய்வதற்கு அவசியமான புதுக்காலத்து வல்லமை அவருக்குக் கிடைத்துக்கொண்டேயிருக்கும், அவரதை நமக்குக் கொடுத்துக்கொண்டேயிருப்பார்; நாம் விசுவாசத்துடன் அவர் நாமத்தினாலே கேட்கக் கேட்க, நாம் செய்யவேண்டிய அந்தப் பெரிய கிரியைகளுக்குத் தேவையான வல்லமை நம்மேல் வந்து நம்மை ஆட்கொள்ளும்.

ஐயோ! புவியில் நடப்பிக்கப்படுகிற தேவனுடைய வேலையில், கிறிஸ்து செய்ததற்கு ஒத்த கிரியைகளைச் செய்வதற்கே வல்லமையைக் காணோம்; அப்படியிருக்க, அதிலும் பெரிய கிரியைகளைச் செய்வதற்கு வல்லமையை இனி எங்கே காணப்போகிறோம்! இதற்கு ஒரேகாரணம் இருக்கிறது; என்னவென்றால், அவரை நம்பும் நம்பிக்கை, அதாவது, அவர் நாமத்தினாலே விசுவாசத்துடன் ஜெபிக்கும் ஜெபம், இது வெகுவாய் அஸ்தமித்துவிட்டது. இயேசு தமது ஜனத்திற்காக பிதாவி

னிடத்தில் மகா பெரிய வல்லமையை வாங்கி வைத்திருக்கிறார். இதை நாம் வாங்கிக்கொள்வதற்கு வழி இயேசுவின் நாமத்தினாலே செய்யும் ஜெபம். இந்த வல்லமையைக் கொண்டே விசுவாசி அவர் செய்ததிலும் பெரிய கிரியைகளைச் செய்யக்கூடுமொழிய மற்றப்படி கூடாது. சபை, பள்ளிக்கூடம், சுதேசத்தில் அன்பு வழங்கும் வேலை, பரதேசத்தில் மிசியோன் வேலை, இவற்றில் தலையிட்டு உழைக்கும் உழைப்பாளிகளும், தலைமையாய் இருந்து நடத்தும் தலைவர்களும் இந்தப் பாடத்தைச் செம்மையாய்ப் படித்துக்கொண்டால் நலம். இதைச் செய்வதற்கு எனக்குப் பலமில்லை, எனக்குத் தகுந்த திராணியில்லை, எனக்குத் தடைகள் வந்து குறுக்கிடுகின்றன என்று சொல்லியும், எதுசெய்தாலும் எனக்குப் பலன் சித்திக்கிறதில்லை என்று சொல்லியும், முறையிடுகிறவனைப் பார்த்து இயேசு ஒரே உத்தரவையே எப்போதும் சொல்லுகிறார். அது என்ன? "என்னை விசுவாசிக்கிறவன் நான் பிதாவினிடத்திற்குப் போகிற காரணத்தினால் பெரிய கிரியைகளைச் செய்வான்; என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." இயேசு செய்த வேலையைத் தானும் செய்யப் பிரியப்படுகிறவன் சர்வ வல்லமைசாலியாகிய அவரை விசுவாசிக்கிற விசுவாசத்தினால் அவருடன் ஒன்றித்துப் போகவேண்டும்; இதுவே அவன் செய்யவேண்டிய முக்கியமான முதல் வேலை; அதன்பிறகு நம்பிக்கையுடன் அவர் நாமத்தினாலே ஜெபிக்கவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால், நாம் செய்கிற வேலை வெறும் மனுஷவேலையும், மாமிசவேலையுமாக மாத்திரமிருக்கும். இந்த வேலையினால் பாவத்தைத் தடுத்து அடக்கலாம், அல்லது, தேவலோகத்து நன்மை புவியில் கிடைப்பதற்கு வழியை ஆயத்தம் பண்ணலாம். ஆகிலும், இந்த வேலையில் தேவலோகத்து வல்லமை இருக்கவே இருக்காது. சித்தியுள்ள உழைப்பு உழைக்க சித்தியுள்ள ஜெபம் முந்திச் செய்யவேண்டும்.

இப்போது இரண்டாம் பாடத்தைப் பார்ப்போம்: ஜெபிக்கிறவன் உழைக்கவேண்டும். உழைக்கிற வல்லமை கிடைப்பதற்காகவே ஜெபத்திற்கு அப்பேர்ப்பட்ட பெரிய வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது: விசுவாசத்தினால் சித்தி



யுள்ள ஜெபம் செய்கிற வல்லமை உழைக்கும்போதுமாத்திரமே கிடைக்கும். நமது அருள்நிறை இரட்சகர் விடைபெறுங் காலத்தில் பேசின இந்த வார்த்தைகளில் அவர் ஆறுவிசைக்குக் குறையாமல் எல்லை விதிக்கப்படாத ஜெபவாக்குத்தத்தங்களை அருளுகிறார் (யோவா. 14. 13, 14; 15. 7, 16; 16. 23, 24.). இந்த வாக்குத்தத்தங்களில்: "நீங்கள் எதைக் கேட்டாலும்," "நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவாயிருந்தாலும்," "உங்களுக்குப் பிரியமானதை," "கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள்" என்கிற வாசகங்களைப் பார்த்து, இவற்றிற்கு உள்ளபடிக்கு என்ன கருத்திருக்கும் என்று ஆவலுடன் விசாரிக்கிறோம். அநேக விசுவாசிகள் இந்த வாசகங்களை வாசித்து சந்தோஷமும் நம்பிக்கையும் பூண்டு தங்களுக்கு வேண்டியவைகளை உட்கருத்துடன் கேட்டார்கள். ஆகிலும், கேட்டது கிடைக்காமல் ஏமாந்தார்கள். ஏன் அப்படி யென்றால், காரணம் லேசாய்ச் சொல்லலாம். அவர்கள் அந்த வாக்குத்தத்தம் எதை யொட்டிச் சொல்லியிருக்கிறதோ அதை விட்டு அதைப் பெயர்த்து எடுத்துக்கொண்டார்கள். அவர் செய்த கிரியைகளை நாமும் செய்வதை யொட்டி அவர் இந்த ஆச்சரியமான வாக்குத்தத்தம் கொடுத்து, அதற்காக நாம் தாராளமாய் அவருடைய நாமத்தைப் பிதாவினிடத்தில் உபயோகித்துச் சித்தி பெறலாம் என்கிறார். இயேசுவின் வேலைக்கும் இராஜ்யத்திற்கும் தன்னை முற்றும் கையளித்து, அவருடைய மனதிற்கு இசையவும் அவருக்கு மகிமையுண்டாகவும் பிழைக்கிற சிஷன்மாத்திரமே அவருடைய வாக்குத்தத்தம் தனக்குப் பலிக்கச்செய்து கொள்ளக்கூடியவனாயிருப்பான். ஏதோ ஒரு விசேஷித்த நன்மையைத் தனக்கு வருவித்துக்கொள்வதற்கு அந்த வாக்குத்தத்தத்தை உபயோகிக்கிறவன் ஏமாந்துபோவான். ஏன்? அவன் தன் சுய சுகானுபவத்திற்கு இயேசுவை ஊழியக்காரனாக்கிக்கொள்ளப் பார்க்கிறதினாலே. ஆனால், எஜமானுடைய வேலைக்கு அவசியமென்று கண்டு விசுவாசத்தினால் சித்தியுள்ள ஜெபம் செய்யப் பிரியப்படுகிறவனுக்கு அதைச் சுளுவாய்க் கற்றுக்கொள்ள வரம் அருளப்படும். ஏன்? அவன் தன் ஆண்டவருடைய காரியம் வாய்ப்பதற்குத்

தன்னை அவருக்கு ஊழியனாய் ஒப்புவிப்பதினாலே. ஜெபம் ஒருவனை உழைக்கப் பயிற்றி அதில் அவனைப் பலப்படுத்தும்; உழைப்பு ஒருவனை ஜெபிக்கப் பழக்கி அதில் அவனை உறுதிப்படுத்தும்.

இந்த நியாயம் *பிரபஞ்ச உலகத்திலும் ஞான உலகத்திலும் நடைபெறுகிற உண்மைக்கு எல்லாவிதத்திலும் இசைந்து பொருந்தியிருக்கிறது. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; அல்லது, கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். இதுவரையில் நமக்குக் கிடைத்திருக்கிற கொஞ்சக் கிருபையுடன் எஜமானுடைய வேலையைச் செய்ய அவருக்கு நம்மைக் கையளித்தால், நாம் செய்கிற அந்த வேலையே நமக்கு ஜெபப் பாடசாலையாய்விடும். அடங்காமைமிகுந்த ஜனத்தின் தலைவனாயிருக்கத் துவக்கின பின்புதான் மோசே தேவனிடத்தில் தைரியமாய்ப் பேசுவது அவசியம் என்று கண்டு துணிவடைந்தான். அதுமுதற்கொண்டு அவன் தேவனிடத்தில் பெரிய பெரிய காரியங்களைக் கேட்கத் தலைப்பட்டான் (யாத். 33. 12, 15, 18.). நீ தேவனுடைய வேலை செய்வதற்கு உன்னை முழுமையும் அவருக்குக் கையளிக்கக் கையளிக்க, இப்பேர்ப்பட்ட பெரிய வாக்குத்தத்தங்கள் உனக்கு செல்லும் என்பதை அறிந்துகொண்டு அவைகளைக் கேட்டால் நிச்சயமாய்க் கிடைக்கும் என்று சந்தேகப்படாமல் துணிந்து கேட்பாய்.

இயேசுவை விசுவாசிக்கிற விசுவாசியே! இயேசு செய்த வேலையைச் செய்வதற்கு, அதிலும் பெரிய வேலையையும் செய்வதற்கு, நீ அழைக்கப்பட்டிருக்கிறாய்; ஏனென்றால், அந்த வேலையை உன்னாலும் உன் மூலமாயும் செய்வதற்குத் தேவையான வல்லமையை வாங்கிக்கொள்ள அவர் பிதாவினிடத்திற்குப் போயிருக்கிறார். "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." கிறிஸ்துவின் வேலையைச் செய்ய உன்னை ஒப்புக்கொடுத்து, அதற்காகவே பிழை; அப்போது, ஜெபத்திற்கு ஆச்சரியமான உத்தரவைப் பெற்றுக்கொள்ளக்கூடியவிதமாய் ஜெபிக்கப் படித்துக்கொள்வாய். ஜெபத்திற்கு உன்னை ஒப்புக்கொடுத்து





ஜெபஜீவியம் செய்; அப்போது, அவர் செய்த வேலையையும் அதிலும் பெரிய வேலையையும் செய்யக் கற்றுக்கொள்வாய். தம்மை விசுவாசித்து, பெரிய காரியங்களை ஜெபத்திலே கேட்கத் துணிவுள்ளவர்கள் கிறிஸ்துவுக்கு இருந்தால் அவர் இவ்வுலகத்தை ஜெயிக்கக்கூடியவராயிருப்பார்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆ என் ஆண்டவரே! நான் இன்று உம்மிடத்தில் கேட்ட வசனமும் என் அறிவிற்கு எட்டக்கூடியதல்ல. ஆகிலும் அதை நீர் எனக்குக் கொடுத்த நன்கொடையாக மதித்து சிறுபிள்ளைக்கொத்த விசுவாசமாய் வாங்கிப் பத்திரம்பண்ணிக்கொள்வேன். நீர் பிதாவினிடத்திற்குப் போவதினால், உம்மை விசுவாசிக்கிறவன் நீர் செய்த கிரியைகளைத் தானும் செய்வான், அவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் என்று சொல்லியிருக்கிறீர். ஆண்டவரே! மகிமைப்பட்டிருக்கிறவராகிய உம்மை வணங்கி, நீர் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர் என்று நம்பிக் காத்திருக்கிறேன். என் முழுஜீவியமும் உம்மை ஓயாமல் நம்பிக்கொண்டேயிருக்கிற ஜீவியமாயிருக்கப்பண்ணும். என் உள்ளத்தைச் சுத்திசெய்து பரிசுத்தமாக்கி, அது உமக்கும் உமது அன்பிற்கும் கசிந்து இளகியிருக்கச்செய்து, உம்மை விசுவாசிப்பதே அது விடுகிற ஜீவமூச்சாயிருக்கப்பண்ணும்.

நீர் பிதாவினிடத்திற்குப் போவதினால், நாங்கள் எதைக் கேட்டாலும் அதை நீர் செய்வீர் என்று வாக்களித்திருக்கிறீர். நீர் உமது வல்லமையாசனத்திலிருந்துகொண்டு, உமக்குக் கிடைத்திருக்கிற வல்லமையில் உம்முடையவர்களுக்குப் பங்கு கொடுத்து, அவர்கள் உம்முடைய நாமத்தினாலே செய்கிற விசுவாசமுள்ள ஜெபங்கள் பலிக்கச்செய்து, இப்படி உம்முடைய சரீரத்தின் அவயவங்களாகிய அவர்கள் மூலமாய் நீரே கிரியை செய்வீர். ஜெபத்திலே உம்மிடத்தில் வல்லமையுள்ளவர்களாயிருப்பதும், கிரியையிலே மனுஷரிடத்தில் வல்லமையுள்ளவர்களாயிருப்பதும் ஆகிய இதுவே நீர் உம்முடையவர்களுக்கும் எனக்கும் அருளியிருக்கிற திருவாக்கு.

நேசமுள்ள ஆண்டவரே! நாங்கள் இந்த உமது திருவாக்கை நம்புவதில் வெகு குறைவுள்ளவர்கள். உமது வாக்கை நிறைவேற்றுவதில் நீர் காட்டுகிற உண்மையை எங்கள் சுய அநுபவத்தில் பரீட்சித்து அறிவதிலும் நாங்கள் வெகு அசடர். இந்தக் குற்றத்தை எங்களெல்லாருக்கும் மன்னியும். பரத்திலும் புவியிலும் எல்லாவற்றையும் சாதிக்க வல்லமையுடையதாகிய உமது திருநாமத்தை மகிமைப்படுத்துவதிலே நாங்கள் வெகு தாழ்ச்சியுள்ளவர்களாயிருந்த பாதகத்தை எங்களுக்கு மன்னித்தருளும்.

ஆண்டவரே! உமது திருநாமம் தேவனிடத்திலும், மனிதரிடத்திலும், பிசாசுகளிடத்திலும் எப்பேர்ப்பட்ட வெற்றியை அடையக்கூடும் என்பதை என் சுய அநுபவத்தில் நான் கண்டறிய என்னைப் பழக்கும். நீர் சர்வ வல்லவர் என்கிற மகிமை என்றும் உமக்கு வரத்தக்கவிதமாய் நான் உழைக்கவும் ஜெபிக்கவும் நீர் எனக்குப் போதித்து, உமது பெரிய கிரியைகளை என் மூலமாயும் செய்தருளும். ஆமென்.

## இருபதாம் பாடம்.

'பிதா மகிமைப்படும்படியாக'

அல்லது,

## ஜெபத்தின் முக்கிய இலக்கு.

"நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன். நீங்கள் என் நாமத்திலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்." (யோவா. 14. 13.)

குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக: இந்த இலக்கு வாய்ப்பதற்கே இயேசு மகிமையாசனத்தில் வீற்றிருக்கிறார்; ஆகையால், அவர் தமது நாமத்தினாலே நாம் கேட்பதையெல்லாம் செய்வார். ஜெபத்திற்கு அவர் அருளும் ஒவ்வொரு



உத்தரவிற்கும் இதே நோக்கம் இருக்கும். இந்த நோக்கம் வாய்ப்பதற்கு வழியில்லாவிட்டால், அவர் உத்தரவு அருளமாட்டார். அவருக்கு எப்படியோ அப்படியே நமக்கும், நாம் செய்யும் மன்றாட்டுகளிலெல்லாம் முக்கிய உள்ளீடாய் இருக்கவேண்டியது எதுவென்றால் பிதாவின் மகிமையே. அதுவே நமது ஜெபத்தின் இலக்கும் நோக்கமும், அதின் ஆவியும் உயிருமாயிருக்கவேண்டும்.

இயேசு புவியில் இருந்தபோது அவருக்கும் அது அப்படித்தான் இருந்தது. "நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; என்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறேன்" இந்த வார்த்தைகளில் அவர் எதைத் தமது ஜீவியத்தின் முக்கிய இலக்காக வைத்துப் பிழைத்தார் என்பது நமக்கு வெளிப்படும். அவர் பண்ணின பிரதான ஆசாரிய ஜெபத்தின் ஆரம்பத்திலேயே தமது ஜீவிய இலக்கை பகிரங்கமாய்த் தெரிவிக்கிறார். "பிதாவே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்." "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்." அவர் தமக்குப் பிதாவினிடத்தில் உண்டாயிருந்த மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குச் சொல்லுகிற காரணம் இரண்டு: அவர் பிதாவை பூமியிலே மகிமைப்படுத்தினார்; அவரைப் பரத்திலும் மகிமைப்படுத்தப் பிரியப்படுகிறார். பிதாவை இன்னும் அதிகமாய் மகிமைப்படுத்தத் தகுந்த பதவி தமக்குக் கிடைக்கவேண்டுமென்பதே அவர் இப்போது விரும்பிக்கேட்பது. நாம் இயேசுவோடு ஒத்த உணர்வினர் ஆக ஆக, அதாவது, பிதாவின் மகிமையையே நமது ஜெபத்தின் முக்கிய நாட்டமாக்கிக் கொண்டு நாம் இயேசுவின் மனதிற்கிசைந்தவர்கள் ஆக ஆக, நமது ஜெபம் தப்பாமல் பலிக்கும். பிதாவுக்கு மகிமையுண்டாக்குவது எது என்று அவருடைய நேச குமாரனவர் நமக்கு வெகு தெளிவாய்த் தெரிவித்திருக்கிறார்; எதுவென்றால், நாம் கேட்பதை அவர் செய்வது. இந்த நோக்கம் வாய்ப்பதற்குத் தருணம் வாய்க்கும்போதெல்லாம் அதை அவர் நழுவவிடமாட்டார். அவருக்கிருக்கிற இலக்கையே நாம்

நமது இலக்காக்கிக்கொள்ளவேண்டும். பிதாவுக்கு உண்டாகும் மகிமையே நாம் கேட்பதையும் அவர் செய்வதையும் இணைக்கிற சங்கிலியாயிருக்கவேண்டும். *அப்பேர்ப்பட்ட ஜெபம் தப்பாமல் பலிக்கும்.*

இயேசு சொல்லுகிற இந்தச் சொல் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப்போல வந்து, ஆத்துமாவையும் ஆவியையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. இயேசு புவியில் செய்த ஜெபங்களிலும், அவர் தேவலோகத்தில் நமக்குச் சார்பாய்ச் செய்யும் ஜெபத்திலும், அவர் அங்கேயிருந்துகொண்டு நாம் இங்கே செய்யும் ஜெபத்திற்கு உத்தரவருள வாக்களித்திருப்பதிலும், அவர் ஒரே பிரதான இலக்கு வைத்திருக்கிறார்: எதுவென்றால், அவருடைய பிதாவின் மகிமை. இதுவே நமக்கும் இலக்காயிருக்கிறதா? சுயநயத்துக்கு ஆசைப்பட்டும் நமது இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவும் நாம் பெரும்பாலும் பலமாய்த் தூண்டப்பட்டு ஜெபிக்கிறதில்லையா? அப்படிக்கேயில்லாவிட்டாலும், பிதாவுக்கு மகிமையுண்டாகவேண்டும் என்கிற ஆசை என்னில் மூண்டு எரிகிறதை உணர்ந்தே ஜெபிக்கிறேன் என்று நம்மில் யாராகிலும் சொல்லமுடியுமா? நம்முள்ளத்தில் இப்படியிருந்தாலன்றி நமது ஜெபம் பலிக்காது.

விசுவாசியின் உள்ளத்தில் இந்த ஆசை உண்டாகிறதேயில்லை என்று நான் இதினால் சொல்லுகிறதில்லை. ஆனால், வேளாவேளைகளில் அது அவனுள்ளத்தில் உதிக்கிறது மெய்யேயானாலும், அது நிலைவரமாய் அங்கே இருக்கிறதில்லையென்று அவன்தானே முறையிடுவான். அதற்குக் காரணமும் அவனுக்குத் தெரியும். அவனுடைய தினசரி ஜீவியமும் அவனுடைய ஜெபவேளை ஜீவியமும் ஒன்றைவிட்டு ஒன்று எட்டாத்தொலையாய்ப் பிரிந்துபோனதே அதற்குக் காரணம். பிதாவுக்கு மகிமையுண்டாக்கவேண்டும் என்கிற ஆவலை ஜெபவேளையில் நம்முள் மூட்டிக்கொண்டு அது நம்

* இந்நூலிறுதியிலுள்ள விளக்கக்காட்டியலில் ஜார்ஜ் மில்லர் தேவ மகிமையையே தமது முக்கிய இலக்காக்கிக்கொள்ளத் தூண்டப்பட்ட சரித்திரத்தைப் பார்க்க.



முள் இருக்கிறதை ஜெபநேரத்தில் ஆண்டவருக்குக் காட்டலாம் என்று நாம் நினைக்கிறோம். இது தப்பு என்பது சீக்கிரத்திலேயே விளங்கும். நமது முழுதின ஜீவியமும், அதினொரு பங்காகிலும் தப்பாமல், தேவமகிமைக்குக் கையளிக்கப்பட்டிருந்தாலன்றி, ஜெபவேளையில் நாம் அவருடைய மகிமைக்கென்று ஜெபிப்பது நம்மாலாகவேயாகாது. "எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்," "எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று கேளுங்கள்." இந்த இரட்டைக் கட்டளைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கக்கூடிய கட்டளைகள் அல்ல. இவற்றுள், முந்தின கட்டளையைக் கைக்கொண்டால் மாத்திரமே பிந்தின கட்டளையைக் கைக்கொள்ளுகிற கிருபை நமக்குக் கிடைக்கும். தேவமகிமைக்கென்று பிழைக்கிற பிழைப்பு ஒருவனுக்கு இருந்தாலன்றி "பிதா மகிமைப்படுவதற்காக" பலிக்கிற ஜெபம் பண்ணும் வரம் அவனுக்குக் கிடைக்காது.

ஜெபம் வெல்லும் சக்தியுடையதாயிருப்பதற்கு அது தேவ மகிமைக்கென்று செய்யப்பட வேண்டுமென்று கேட்பது நியாயத்திற்கும் இயற்கைக்கும் செவ்வையாய் ஒத்துப் பொருந்தியிருக்கிறது. மகிமைக் களஞ்சியமாயிருப்பவர் தேவனேதவிர வேறொருவருமில்லை. அகிலாண்டமெங்கும் அவருடைய மகிமையைத்தவிர வேறு காணோம். சிருஷ்டிகளிடத்தில் விளங்கும் மகிமையெல்லாம் அவர் ஈந்த ஈகையேதவிரச் சுயமல்ல. படைக்கப்பட்டிருக்கும் படைப்பெல்லாம் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபப்படுத்துவதற்கே படைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய மகிமைக்கென்றிராத எந்தச் சிருஷ்டியைப் பார்த்தாலும் அது பாவமலமும், இருளும், மரணமும் பொருந்தியதாயிருக்கும். தேவனை மகிமைப்படுத்துவதினாலேயே சிருஷ்டிகளுக்கு மகிமை வரும். மனுஷகுமாரனானவர் தம்மையும் தமது ஜீவியத்தையும் முற்றும் பிதாவின் மகிமைக்காகவே கொடுத்துவிட்டார். இதுவே மீட்கப்பட்ட ஒவ்வொருவனும் செய்யவேண்டிய தெளிவான கடமை. அவன் அப்படிச் செய்தால் கிறிஸ்துவுக்குக் கிடைத்த பலன் அவனுக்கும் கிடைக்கும். அவர் தம்மை முற்றும் உள்ளன்பாய்ப் பிதாவின் மகிமைக்குத் தத்தம்

செய்தபடியினாலே, பிதா அவரை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டினார். எவ்வாறெனில், பிதா அவர் கரங்களில் இராஜ்யத்தை ஒப்புவித்து, அதற்கு வேண்டியதைத் தம் இஷ்டம்போல் கேட்கவும், நமது மத்தியஸ்தராயிருந்துகொண்டு நமது ஜெபங்களுக்குத் தம் இஷ்டம்போல் உத்தரவு அருளவும் அவருக்கு அதிகாரம் கொடுத்தார். இதில் நாம் எவ்வளவுக்கு கிறிஸ்துவையொத்திருக்கிறோமோ, நமது ஜெபம் எவ்வளவுக்கு தேவமகிமைக்குத் தத்தம் செய்த நமது ஜீவியத்திலிருந்து உற்பத்தியாகுமோ, அவ்வளவுக்கு நமது இரட்சகர் பிதாவை நமக்கு மகிமைப்படுத்தி, "நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்கிற தமது திருவாக்கை நிறைவேற்றக் கூடியவராயிருப்பார்.

பிதாவின் மகிமையை ஒரே இலக்காய் வைத்துக்கொண்டு பிழைப்பது நமக்குத் தானாய்ச் சித்திக்காது. அப்பேர்ப்பட்ட ஜீவியம் செய்தவர் கிறிஸ்து இயேசு ஒருவரே; நமக்கு அது அவரிலேமாத்திரம் அகப்படும். இன்னும் சொல்லப்போனால், அவருடைய ஜீவியமே நமக்குச் சொந்தமாகிறது; அவர் தம்மை நமக்காகக் கொடுத்தார்; இப்போது அவரே நமக்கு ஜீவன். இதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். நமக்குள் "நான்" என்பவன் தேவனுடைய ஆசனத்தை அபகரித்துக்கொண்டிருக்கிறான்; நாம் சுயபொழிவைத் தேடுகிறவர்கள்; சுயவல்லமையை நம்புகிற ஆணவம் நமக்குள் இருக்கிறது. இப்படி நமக்குள் இருக்கிற ஆணவத்தைத் தேடிப்பிடித்து, அதை தேவனுக்கு அறிக்கையிட்டுக் கருவறுத்துவிடவேண்டியது நமக்கு அத்தியாவசியம். இதுவோ நமது சுயபலத்தால் ஆகத்தக்கதல்ல. பின் அது யாராலாகும் என்றால், நமது ஆண்டவராகிய இயேசுவினால் ஆகும். அவர் பூமியில் பிதாவை மகிமைப்படுத்தினவர். அவர் இப்போது பிதாவோடு மகிமைப்பட்டிருக்கிறார். பிதாவை மகிமைப்படுத்துவதற்கு அவர் நமக்குள் வந்து, நமக்குள்ளேயே வாசம் செய்து நமது ஆத்துமாவை ஆண்டால், நமது சுயகர்வம் அடங்கும். அவர் நமக்குள்ளே வந்தால், நமது சுயமகிமை நாட்டத்தை அடியோடே தொலைத்து, அதற்குப் பதிலாக, தேவனை மகிமைப்படுத்துகிற தமது சுயஜீவனையும் ஆவியை-



யும் நமக்குக் கொடுப்பார். பிதாவை மகிமைப்படுத்த ஆவலுள்ளவராகிய இயேசுதாமே நமது ஜெபத்தைக் கேட்டு பலிக்கச்செய்வதினால் நாம் தேவ மகிமைக்காகப் பிழைக்கவும் ஜெபிக்கவும் நமக்குக் கற்றுக்கொடுப்பார்.

ஆண்டவரிடத்தில் போய் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள அசதிநிறைந்த நம்முள்ளங்களைத் தட்டி எழுப்பித் தூண்டுகிற வல்லமை எது? பிதாவுக்குள்ள பிரதாபமான மகிமையை,—மகிமை அவரொருவருக்கே தகும் என்பதைக்—கண்ணாரக் காண்பதே அந்த வல்லமை. அவரைக் கண்ணுக்கு இனிய ஆநந்தக் காட்சியாய்க் கண்டு, தலைகுனிந்து வணங்கவும், இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் அவருக்கே உரியது என்று அறிந்து புகழவும், என்றுந் துதிக்கத்தக்க சதா அன்புடைய பரம்பொருளாகிய அவருடைய திருவருள் பிரகாசத்திலேயே மகிழ்ச்சியுடன் தங்கியிருக்க நம்மைத் தூண்டவும் நமது விசுவாசம் படித்துக்கொள்ளவேண்டும். அப்படி அது படித்துக்கொண்டால், "அவரொருவருக்கே மகிமையுண்டாவதாக" என்று சொல்ல நமக்கே ஆவல் மூண்டுவிடும். வரவர, தேவனுடைய மகிமையைத் தவிர வேறெதையும் பார்க்கவும் விரும்பவும் ஆசையில்லாத ஜீவியமே எங்களுக்குத் தேவை, இதை எப்படியாகிலும் எங்களுக்கு வாய்க்கப்பண்ணும் ஆண்டவரே, என்று இயேசுவை நோக்கி அடங்காப்பிரியத்துடனே நாம் கேட்போம். பலிக்கிற ஜெபம் பிறக்காத இடத்திலே பிதா மகிமைப்படுவதற்கு வழியில்லை. ஆதலால், தேவன் மகிமைப்படுவதற்கு, நமது ஜெபம் தப்பாமல் பலிக்கத்தக்கவிதமாய்ப் பிழைப்பதும் ஜெபிப்பதும் நமது கடமை. தேவனுக்கு மகிமை வரவேண்டுமே என்பதை மனதில் வைத்துக்கொண்டு, செம்மையாய் ஜெபம்பண்ணக் கற்போமாக.

எத்தனையோமுறை தேவனுடைய மகிமையைப் பிரியமாய்த் தேடாமல் நமது அன்பையும் ஆசையையும் பிள்ளை, சிநேகிதன், உத்தியோகம், இப்படிப்பட்ட வேறு விஷயங்கள் மேல் செலுத்தி, அவற்றிற்காகக் கனிவாய் ஜெபித்துவருகிறோம்! இதை நினைக்கும்போது நமக்கு வெட்கம் உண்டாகிறதல்லவா? நமது ஜெபங்களில் அநேகம் பலிக்காமல் இருக்-

த்து ஆச்சரியமல்ல; ஏனெனில், அதற்குக் காரணம் இங்கே அகப்படும். தேவனுடைய மகிமை நமக்கு இலக்காயிராதிருந்தபோது தேவன் தம்மை மகிமைப்படுத்தாதிருந்தார். பலிக்கிற விசுவாச ஜெபம் செய்ய ஒருவன் பிரியப்பட்டால், அதற்கு அவன் எள்ளளவும் பிசகாமல் பிதா எல்லாவற்றிலும் தன்னில் மகிமைப்படுமாறு பிழைக்கவேண்டும். இதுவே அவனுக்கு இலக்காயிருந்தாலொழிய அவனுடைய ஜெபம் பலிக்கிற விசுவாச ஜெபமாயிராது. "தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என்று இயேசு சொன்னார். மனிதரிடத்தில் நமக்கு மகிமையைத்தேடும்போதெல்லாம் நமக்குள் விசுவாசம் உண்டாகாமல் தடுத்துவிடுவோம். சுய மகிமை நாட்டத்தைக் கட்டோடே ஒழித்து தேவமகிமையைமாத்திரமே கண்ணுங் கருத்துமாய்த் தேடுகிறதும், தெய்வீகத்திற்குரியதை வாங்கிக்கொள்ளுகிற வல்லமையை நமது மனித ஆவிக்குள் உற்பத்திபண்ணுகிறதும் எதுவென்றால் நமக்குள் தன்மானப்பற்று என்பது வேரற்று விழுந்து தொலைதலேயாம். இதுவே விசுவாசம் என்னப்படும். தேவனுடைய மகிமையைத் தேடும் தேட்டத்தையே நமக்குத் தனியிலக்காய் வைத்துக்கொள்வதும் நமது ஜெபத்தைப் பலிக்கப்பண்ணி தேவன் தமது மகிமையை வெளிப்படுத்துவார் என்று நம்பி எதிர்ப்பார்த்திருப்பதும், உள்ளபடிக்கு இரண்டும் ஒன்றேதான். எவன் தேவனுடைய மகிமையை மனப்பற்றுடன் தேடுகிறானோ அவன் அந்த மகிமை தன் ஜெபம் பலிக்கிறதில் வெளிப்படுவதைப் பார்ப்பான். அவனுக்கேதவிர வேறொருவனுக்கும் அந்த மகிமை தெரியாது.

இப்போ்பட்ட இருதய நிலை நமக்கு வாய்க்கவேண்டுமே, அதற்கு வழியென்ன? அதற்கு உண்மையை ஒத்துக்கொள்வதோடே நாம் ஆரம்பிக்கவேண்டும். தேவனுடைய மகிமை நமது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நாட்டமாயிருந்ததில்லையென்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். இந்த நாட்டமே நமது ஜீவியத்திலும் ஜெபத்திலும் நிறைந்திருந்ததில்லை. தேவகுமாரனானவர் தேவனுக்கென்றும் அவருடைய மகிமைக்கென்றுமே பிழைத்தார். இந்த இலக்ஷணம் நமக்கு



இருந்திருக்கிறதா? அல்லது இந்த இலக்ஷணம் நமக்கு வரவேண்டும் என்கிற ஆசையாவது நமக்குள் எழும்பிற்றா? இல்லையென்றே நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் நாம் மிகக் குறைவுள்ளவர்கள் என்பதை தேவாவி வந்து நமக்குப் பட உணர்த்தும்வரையில் பொறுத்திருந்து கற்றுக்கொள்வது நமது கடமை. மெய்யறிவும் பாவஅறிக்கையும் நாம் தன்மானப்பற்று என்பதிலிருந்து விடுதலையாவதற்குத் தப்பாத வழி.

இதுவுந்தவிர, நாம் இயேசுவையும் நம்பிப் பிடித்துக்கொள்ளவேண்டும். நாம் எதற்கு மரித்தால் தேவனுக்கு மகிமையுண்டாகும் என்று அவரைப் பார்த்தால் நமக்குத் தெரியும். தமது மரணத்திலே அவர் தேவனை மகிமைப்படுத்தினார்; தமது மரணத்தின் மூலமாய் அவர் தேவனோடு மகிமைப்படுத்தப்பட்டார். நமது மரணத்தினாலே, அதாவது, நாம் நமது சுயாபிமானத்திற்குச் செத்து தேவனுக்குப் பிழைப்பதினாலே நாம் தேவனை மகிமைப்படுத்தக்கூடும். எனக்கு இயேசுவே தஞ்சம் என்று யார் யார் அவரை நம்பிப் பிடித்துக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்குள் இயேசுதாமே வந்திருந்து, அவர்களுக்குள்ளேயே வாசம்பண்ணி, இந்தச் சிந்தையை—அதாவது, சுயாபிமானத்திற்குச் செத்து தேவ மகிமைக்குப் பிழைக்கும் சிந்தையை—அவரே அவர்களுக்குக் கொடுப்பார். கிறிஸ்து செய்ததுபோல நானும் பிதாவின் மகிமைக்காகமாத்திரம் பிழைப்பேன் என்கிற தீர்மானமான ஆசை; இந்த ஆசையை எனக்கு வாய்க்கப்பண்ணுவதற்கு தமது ஜீவனோடும் பலத்தோடும் எனக்குள் வருகிற இயேசுவை விரும்பி அழைத்து ஏற்றுக்கொள்ளுதல்; கிறிஸ்து எனக்குள் வந்து பிழைக்கிறதினாலே நான் தேவனுடைய மகிமைக்கென்று பிழைப்பது எனக்குக் கைக்கூடிய காரியந்தான் என்று நிச்சயம் அடைந்து மகிழ்தல்;—இதுவே நம்மை நமது தினஜீவியத்தில் ஆட்கொண்டு நடத்துகிற ஆவியாயிருக்கவேண்டும். நாம் இப்படிப் பிழைப்பதற்கு இயேசுதாமே நமக்குப் பொறுப்பாளி; இவ்வித ஜீவியம் நமக்கு அநுபவிக்கக் கிடைக்கும்பொருட்டு தேவாவியானவர் கொடுக்கப்படுகிறார்; அவரை நம்பி அவர் நமக்குள் வேலைசெய்ய

இடங்கொடுத்தால் அது நமக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். ஆ! இந்த ஜீவியம் எங்களுக்குச் சித்திக்குமா! என்றிப்படி அவநம்பிக்கைப்பட்டு அதை அடையத் தவறிப்போகாதிருப்போமாக. "என்ன செய்தாலும் தேவனுடைய மகிமைக்காகவே செய்வோம்;" என்பது நாம் உறுதியாய் நம்பி வழங்குகிற வழக்கச்சொல்லாய் இருக்கவேண்டும். இப்படி ஜீவியம் செய்ய நமக்கு மனதிருந்தால், அந்த மனதையே பிதா தமக்கு இஷ்டமான காணிக்கையாக ஏற்றுக்கொள்வார்; அந்த பலி அவருக்கு வெகு பிரியம். வரவர, நாம் தேவனுக்காகவும் அவருடைய மகிமைக்காகவுமே பிழைக்கிறோம் என்கிற அநுபவசித்தியான அறிவை தேவாவியானவர் நமதுள்ளத்தில் மூட்டி அதை அங்கே பதிந்திருக்கச் செய்வார்.

இது வாய்த்தபின், நாம் செய்யும் ஜெபமெல்லாம் மன அமைதி நிறைந்ததும் வல்லமையுள்ளதுமாயிருக்கும். ஏனெனில், "பிதா குமாரனில் மகிமைப்படும்படியாக" நாம்கேட்பதைச் செய்ய வாக்கருளினவருடைய உள்ளமும் நமது உள்ளமும் வேறுபாடின்றி ஒத்துப் பொருந்தியிருக்கும். திருவசனமும் தேவாவியும் நமது மனம் வாக்குக் காயமாகிய சர்வத்தையும் ஆட்கொள்ள நாம் மனதார ஒப்புக்கொடுத்தபின், நமது ஆசாபாசங்கள் இனி நம் வசத்தில் அல்ல தேவாவி வசத்திலேயே இருக்கும். அதினால், அவைகள் இச்சித்துத்தேடும் தேட்டமெல்லாம் தேவ மகிமையேதவிர வேறல்லவாகும். அதன்பிறகு நமக்கு அதிகமதிகமாய்த் துணிவு பிறந்து, நாம் தேவனைப் பார்த்து: பிதாவே! இதையிதை உமது மகிமைக்கென்றே கேட்கிறோம் என்பதை நீர் அறிவீர் என்று சொல்லக்கூடியவர்களாவோம். நமது ஜெபம் பலிப்பதற்கு வைக்கப்பட்டிருக்கிற இந்த நிபந்தனை இனி நாம் ஏறமாட்டாத மலைபோல் இராது. நாம் கேட்பதெல்லாம் வாய்க்கும் என்கிற நிச்சயமே நமக்குள் உண்டாயிருக்கும். ஏனெனில், ஜெபத்திற்கிருக்கிற அழகும் ஆனந்தமுமெல்லாம் பிதாவை மகிமைப்படுத்துவதேயொழிய வேறில்லை என்பது நமதுள்ளத்திற்குத் தெரிந்திருக்கும். மேலும், நமக்கு இருக்கிற ஜெப சிலாக்கியம் முன்னிலும் இப்போது அதிக அருமையும்



உச்சிதமுமான சிலாக்கியமாய்விடும். ஏனெனில், "நீங்கள் கேளுங்கள், அதை பிதா குமாரனில் மகிமைப்படும்படியாக நான் செய்வேன்" என்று நம்முடன் ஆச்சரியமான கூட்டுவேலை செய்யும்படி நம்மை அழைக்கிற தேவகுமாரனுடைய உள்ளத்தைப்போல் நம்முள்ளம் மேலும் மேலும் மாறிப்போகும்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

அன்புள்ள இயேசையா! நான் மறுபடியும் உம்மிடம் வருகிறேன். நீர் எனக்குக் கொடுக்கிற ஒவ்வொரு பாடமும் தகுந்தபிரகாரம் ஜெபிக்கிற வித்தையில் நான் அறிந்தது எவ்வளவு கொஞ்சம் என்று எனக்கு உணர்த்துகிறது. ஆயினும், ஒவ்வொரு பாடமும் நான் ஜெபம் பண்ணவேண்டிய விதத்தை மாத்திரமல்ல, அந்த விதத்திற்கொத்தபடி ஜெபிக்கிறதையும் நீர் கற்றுக்கொடுத்துக்கொண்டே வருகிறீர் என்கிற நம்பிக்கையை எனக்குள் மூட்டிக்கொண்டிருக்கிறது. ஆ என் ஆண்டவரே! பிதா மகிமைப்படுவதாகிய ஒரே இலக்குவைத்துக்கொண்டு நீர் ஜெபித்தீர், அந்த இலக்குவைத்து ஜெபித்தவர்களுடைய ஜெபத்தையும் நீர் கேட்டருளினீர்; தேவனுக்கு மகிமையாகப் பிழைக்கவும் ஜெபிக்கவும் நானும் கற்றுக்கொள்ள பெரிய மத்தியஸ்தராகிய உம்மைத்தான் நம்பியிருக்கிறேன்.

இரட்சகரே! இதற்காக நான் மறுபடியும் என்னைப் பிடித்து உம்வசம் கொடுக்கிறேன். நான் இனி ஒன்றுமற்ற பொருளாயிருக்கச் சம்மதிக்கிறேன். நான் என் சுயேஷ்டத்தை வெகுகாலத்திற்கு முன்னேயே உம்முடன் சிலுவையிலறையப்பட்டதாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டேன். தேவாவியினால் அதின் கிரியாசக்தி ஒடுக்கப்பட்டுச் செத்துவருகிறது. உமக்குள் இருக்கிற ஜீவனும் பிதாநேசமும் என்னை ஆட்கொள்ளுகின்றன. ஒரு புது ஆசை என் உள்ளத்தை நிரப்பத் தொடங்கிவிட்டது; அதென்னவென்றால், நாள்தப்பாமல், நாழிகைதோறும், பிதாவின் மகிமையே என் உள்ளத்திற்கினிய விருப்பமாய் நான் செய்யும் ஜெபங்களிலெல்லாம் நிறைந்திருக்க வேண்டுமென்பது. ஆ என் ஆண்டவரே!

இதைப் படிக்க நான் உமது பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்கிறேன்; நீரே அதை எனக்குப் போதிப்பீராக.

மகிமைப்பரனே! மகிமைப்பிதாவே, என் தேவனும் பிதாவுமானவரே! உமது மகிமை யொன்றையே நாடிப் பிழைப்பதை விட இன்பஜீவியம் வேறில்லையென்று கண்டுகொண்ட உமது பிள்ளையாகிய என் விருப்பத்தை அங்கிகரித்தருளும். ஆண்டவரே! உமது மகிமையை எனக்கு வெளிப்படுத்தும். அதுவே என்மேல் நிழலிட்டு மூடிக்கொண்டிருக்கப்பண்ணும். அதுவே என் உள்ளத்தைத் தனக்கு திருக்கோயிலாக்கிக்கொண்டு வீற்றிருக்கச்செய்யும். கிறிஸ்துவுக்குள் எனக்கு வெளிப்படத் தெரிந்த அதற்குள்ளேயே நான் வந்திருந்து குடியிருக்கச் செய்யும். பிதாவாகிய உமது மகிமையைத் தேடுவதே உமது பிள்ளைக்கு மகிமை; அதுவே உமக்குப் பிரியம்; இந்த உமது பிரியம் எனக்குக் கைகூடச்செய்ய உம்மையே பார்த்திருக்கிறேன். ஆமென்.

# இருபத்தோராம் பாடம்.

## "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்"

அல்லது,

## எல்லாம் அடங்கிய நிபந்தனை.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (யோவா. 15. 7.)

தேவன் நம்முடன் செய்யும் சகல வியவகாரங்களிலும் அவர் நமக்கு அருளியிருக்கிற வாக்குத்தத்தமும் அதற்கு அவர் சொல்லியிருக்கிற நிபந்தனைகளும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திரா. நமக்குச் சொன்ன நிபந்தனைகளை நாம் சரிவர



நிறைவேற்றினால், நமக்குச் சொன்ன வாக்கை அவரும் சரிவர நிறைவேற்றுவார். நாம் அவருக்கு எப்படியிருப்போமோ அதற்குத் தகுந்தபடி அவர் நமக்கும் இருப்பார். "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." "உங்களுக்கு எது வேண்டுமோ அதைக் கேளுங்கள்." இது இரட்சகர் நமது ஜெபத்திற்குக் கொடுத்திருக்கிற வரம்பிடப்படாத வாக்கு. இந்த வாக்கு நமக்குப் பலிக்க அவர் நமக்குச் சொன்ன இயல்பான தெளிந்த நிபந்தனை: "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்" என்பது. கிறிஸ்து கேட்பதையாத்திரமே பிதா ஒருபோதும் தப்பாமல் செய்வார்; தேவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார்; நாமும் கிறிஸ்துவுக்குள் இருந்தால்மட்டுமே நாம் அவரிடத்தில் கிட்டிவரலாம்; கிறிஸ்துவுக்குள் நாம் இருப்பதே நமது ஜெபம் பலிக்கிறதற்கு வழி; நாம் கிறிஸ்துவுக்குள் போய் தீர்க்கமாய் முழுமையும் அவரிலேயே நிலைத்திருந்தால் மாத்திரமே எது வேண்டுமோ அதை நாம் கேட்கவும், அப்படி நாம் கேட்பதை தேவன் நமக்குச் செய்வார் என்று நிச்சயித்திருக்கவும் நமக்கு உரிமையுண்டு.

இந்த வாக்கையும் கிறிஸ்தவர்களுக்குள் பெரும்பாலாருடைய அநுபவத்தையும் ஒத்துப்பார்த்தால், இரண்டிற்கும் பயங்கரமான ஒவ்வாமை யிருப்பதைக் கண்டு திடுக்கிடுவோம். கணக்கில்லாத ஜெபங்கள் தேவனிடத்திற்கு ஏறிப் போயும் அவை அவரிடத்திலிருந்து உத்தரவு வாங்கிவாராதிருக்கின்றன. இதற்குக் காரணம் இரண்டில் ஒன்றாய்த்தான் இருக்கவேண்டும் என்பது திண்ணம்; ஒன்று நமக்குக் குறித்திருக்கிற நிபந்தனைப்படி நாம் செய்யவில்லை, அல்லது தேவன் நமக்குச் சொன்ன வாக்கை நிறைவேற்றவில்லை. கிறிஸ்தவர்களைக் கேட்டால், அவர்கள் இதில் எதையும் காரணமென்று ஒத்துக்கொள்ளப் பிரியப்படுகிறதில்லை. அவர்கள் இந்த தர்மசங்கடத்திற்குத் தப்ப வேறு புகல் தேடி வைத்திருக்கிறார்கள். அவர்கள் இரட்சகர் சொன்ன வாக்கில் அவர் சொல்லாத ஒரு சொல்லைக் கூட்டிவைத்துக் கொள்ளுகிறார்கள், அதென்னவென்றால்: தேவனுக்குச் சம்மதியிருந்தால் என்பது. இதினால் அவர்கள் தேவனும் உண்

மையுள்ளவர், தாங்களும் உண்மையுள்ளவர்கள் என்று சாதிக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யாமல், இரட்சகருடைய வாக்குத்தத்தத்தை உள்ளபடிக்கே அர்த்தப்படுத்தி அதை அப்படிக்கே பிடித்துக்கொண்டால் சரியாயிருக்கும். கிறிஸ்து சொன்ன சொல்லை அவரே நமக்கு மெய்ப்பித்துக் காட்டுவார் என்று துணிந்து, அதை உள்ளபடிக்கே உறுதியாய்ப் பிடித்துக்கொண்டால், அவரில் யார் யார் மெய்யாய் நிலைத்திருக்கிறார்களோ அவர்களெல்லாருக்கும் அவர் என்ன கருத்துடன் அந்தச் சொல்லைச் சொன்னாரோ அந்தக் கருத்துப்படிக்கே தேவன் வழுவிப்போகவில்லையென்று தேவாவியானவர் விளக்கிக் காட்டுவதுமல்லாமல், கிறிஸ்தவர்களுடைய ஜெபம் பலிக்காமைக்குக் காரணம் அவர்களுக்குக் குறித்த நிபந்தனையை அவர்கள் கைக்கொள்ளாமைதான் என்று அவர்கள் ஒத்துக்கொண்டு அறிக்கையிடவும் பண்ணுவார். அப்போது, ஜெபத்தில் நாம் பலவீனராயிருக்கிறோம் என்று நாம் காணும்போதெல்லாம், அதை நிவிர்த்திக்கிறதற்கு வழி கிறிஸ்துவில் பூரணமாய் நிலைத்திருப்பதேயென்று நமக்கு உணர்த்துவதும் இந்த நிலைத்திருப்பை அடைந்துகொள்ள நம்மை வலித்துத் தூண்டுவதும் தேவாவியானவருக்கு எளிதாயிருக்கும்.

நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்: கிருபையிலும் கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவிலும் ஒரு கிறிஸ்தவன் வளரவளர, திருவாக்குகளும் வளர்ந்து விசாலிக்கிறதைப் பார்த்து அதிசயிப்பான். இவைகள் எப்படி வளர்ந்து விசாலிக்குமென்றால், புதிது புதிதாய் ஆழ்ந்த பொருளுடன் அவனுடைய அநுபவத்திற்கு அகப்பட்டுக்கொண்டிருப்பதினாலே. ஏதேனும் ஒரு திருவசனம் அவனுடைய அறிவுக்கு எட்டுமாறு திறந்து காட்டப்பட்ட ஒரு காலமும் அதினால் அவனடைந்த ஞான நன்மையைக்குறித்து அவனுக்குண்டான சந்தோஷமும் அவன் ஞாபகத்திலிருக்கும். அதற்குச் சிலகாலம் பொறுத்து, அவனுடைய ஞான அனுபவம் முன்னிலும் அதிக ஆழமாய்விட்டபடியால் அதே வசனத்தில் இதற்குமுன் காணாத புதிய பொருள் அவனுக்கு அகப்படும். அதைப் பார்த்து, இந்த வசனத்திற்கு இவ்வளவு கருத்தி



உண்டு என்று எனக்குப் படாமலிருந்ததே என்று நினைப்பான். இன்னும் சிலகாலமானபின், கிறிஸ்தவ ஜீவியத்தில் அவன் பின்னுமதிகமாய்த் தேறிவிட்டபடியால், அந்த வசனமே அவன் இதற்குமுன் அறியாதிருந்த புதைபொருளுடன் அவனுக்கு எதிர்ப்படும். இவ்வாறு, தேவாவியானவர் அந்த வசனத்தின் உள்ளுக்குள்ளான தெய்வீக ஆழத்திற்குள் அவனைப் படிப்படியாய் அழைத்துக்கொண்டே போவார். இப்படிப் போகப் போக வளர்ந்துகொண்டேயிருக்கிறதும், எவ்வளவு போனாலும் வற்றாமல் ஊறுகிறதுமான திருவசனங்களில் "என்னில் நிலைத்திருங்கள்" என்பது ஒன்று. இது நமது உபாத்தியாயர் சொன்ன சொற்களில் வெகு அருமையான சொல். இதைப் பிடித்துக்கொண்டே போனால், தெய்வீக ஜீவ நிறைவையெல்லாம் நமக்கு படிப்படியாய்த் திறந்துவிட்டுக்கொண்டேயிருக்கும். திராக்ஷச்செடியோடு அதின் கிளைக்குள்ள ஐக்கியம் ஓயாவளர்த்தியுண்டாக்குகிற ஐக்கியம். அதுபோலவே, நாம் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது அவருக்கும் நமக்கும் நடக்கிற ஒரு ஜீவ வியவகாரம். இந்த வியவகாரத்தில் அவருக்குள் இருக்கிற தெய்வீக ஜீவன் அதிகமதிகமாய் நமக்குள் பாய்ந்து, வரவர நம்மை முழுதும் தன் வசப்படுத்திக்கொள்ளும். இளம்பிஞ்சாயிருக்கிற பலவீன விசுவாசத்துடன் இயேசுவைப் பிடித்துக்கொண்டவன், அவனுக்கு அப்போதிருக்கிற அறிவினளவுக்குத் தக்கபடி, மெய்யாகவே கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறவன்தான். ஆகிலும் அவன் இன்னம் நமது ஆண்டவர் கருத்திலிருந்த அளவுக்கு அவரில் நிலைத்திருக்கிறதில்லை. அவன் வரவரத் தேறி, அந்த அளவுக்கு வந்து எட்டி, அவரில் நிலைத்திருந்துகொண்டு, அப்படி நிலைத்திருக்கைக்கு அவர் சொன்ன வாக்குத்தத்தங்களெல்லாம் கைக்கு மெய்யாய்ப் பலிக்கப் பெற்றுக்கொள்ளவேண்டியவன்.

கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற ஜீவியம் பருவம் பருவமாய் வளருகிற ஜீவியம். அதில் முதலாம் பருவம் விசுவாச பருவம். என் பலவீனத்தை அறிந்தும், என்னைத் தம்மில் நிலைத்திருக்கும்படி கிறிஸ்து கற்பித்திருக்கிறார்கையால், முன்பின் பாராமல் நான் உடனே அவரில் நிலைத்திருப்பது

என் கடமை; நான் கிறிஸ்துவுக்குள் வந்திருப்பது எனக்குத் தெரியும்; ஆயினும் அவரிலேயே நிலைத்திருப்பதில் நான் உண்மை தப்பித் தவறியிருக்கிறேன்; இதினால் நான் மனங் குன்றிப்போகாமல், கிறிஸ்துவிலேயே தவறாமல் நிலைத்திருக்கிற பாக்கியம் எப்படியும் எனக்கு நிச்சயமாய் வாய்க்கும் என்று உறுதியாய் நம்பியிருப்பேன்; இப்படிச் சொல்லி விசுவாசியானவன் விசுவாசத்தின்மேலேயே மாறாமல் கண்வைத்துக்கொண்டிருப்பான். அவன் தன்னை நம்பாமல், இரட்சகருடைய அன்பையும் வல்லமையையும் சொல்லுண்மையையுமே நம்பியிருப்பான். இந்தத் தறுவாயில் அவன் தனக்கு வேண்டியதெல்லாம் விசுவாசிப்பது ஒன்றுதான் என்று நினைத்துக்கொண்டிருப்பான்.

விசுவாசிப்பதைத் தவிர, வேறு தனக்கு வேண்டியது இன்னம் இருக்கிறது என்று அவன் சீக்கிரத்திலேயே அறிந்துகொள்வான். விசுவாசம் இருக்கிற இடத்திலே கீழ்ப்படிதலும் இணைபிரியா ஜோடியாய்க் கூடவே இருக்கவேண்டும். விசுவாசம் முந்தி முளைத்தபிற்பாடு கீழ்ப்படிதல் பிந்தி முளைத்து அதனோடு சேர்ந்திருக்கவேண்டும் என்பது இதன் தாற்பரியமல்ல. உள்ளே முளைத்திருக்கிற விசுவாசம் கீழ்ப்படிதல் ரூபமாய் வெளிப்பட்டுத் தெரியவேண்டும். விசுவாசம் வீட்டுக்குள்ளே இருக்கிற கீழ்ப்படிதல்; அது அங்கே எஜமான் முகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்து அவர் என்ன ஏவுகிறார் என்று கவனித்துக்கொண்டிருக்கும். கீழ்ப்படிதல் எஜமானுடைய ஏவலைக் கேட்டு அதைச் செய்ய வெளிப்புறப்படுகிற விசுவாசம். இயேசுவில் நிலைத்திருக்கையினால் வரும் ஆதாயமென்ன, அநுபவங்களென்ன, என்று கண்டறிவதிலேயே பொழுது போக்கினவன் அப்படி நிலைத்திருக்கைக்கு உரிய கடமைகளையும் கனியையும்பற்றி இதுவரையில் தான் சிந்தையற்றிருந்தது சரியல்ல என்று அறிந்துகொள்வான். தான் அறிந்தும் அறியாமலும் இடங்கொடுத்து வைத்திருக்கிற தற்சிநேகம், தானென்கிற அகந்தை, இவை இன்னம் தனக்குள் மிகுதியாயிருப்பது அவனுக்கு இப்போது தெரியும். அவன் பலமில்லாத பாலச்சிஷனாய் இருந்தபொழுது, விசுவாசிப்பது ஒன்றே தனக்குப் போதும் என்றிருந்தும், இப்பொழுது அது போதா



தென்று காண்பான். இனித் தன் விசுவாசத்தைக் கீழ்ப்படிதல் ரூபமாய் அப்பியாசித்துப் பழகினால் மாத்திரமே தான் கிறிஸ்துவில் நிலைத்திருக்க முடியும் என்று வெளிச்சமாய் அறிவான். "நீங்கள் என் கற்பனைகளைக் கைக்கொண்டால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்." முன்னே அவன் தன் புத்தியை விவகரிக்கச்செய்து அதற்கு அகப்பட்ட சத்தியத்தின் மூலியமாய்த் தன் இருதயம் கிறிஸ்துவையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் நம்பியிருக்கப் பண்ணவேண்டுமென்கிற ஒரே இலக்கு வைத்திருந்தான். அதுபோலவே, இப்போது அதிலும் தேறின நிலையை அடைந்துகொண்டபின்பு, அவன் தன் சித்தத்தைத் தன் ஆண்டவருடைய சித்தத்திலே கட்டிவைத்து, தன் சிந்தையும் ஜீவியமும் இனி அவருடைய ஆளுகைக்கே முற்றும் கீழ்ப்பட்டிருக்கப் பண்ணவேண்டிய பிரயத்தனமெல்லாம் பண்ணுவான்.

ஆகிலும், இன்னம் என்னமோ குறைகிறதுபோல் அவனுக்குத் தோன்றும். என்னுடைய சிந்தையையும் உள்ளத்தையும் கிறிஸ்துவுக்கு வசப்படுத்திவிட்டேனே; ஆண்டவருடைய இஷ்டத்திற்கே என்னைக் கொடுத்து அவர்மேல் அன்புவைத்திருக்கிறேனே. அப்படியிருக்க, எனது மாம்சசுபாவத்திற்கு இன்னம் இவ்வளவு வலுவிருப்பானேன்? எனது உள்ளுக்கு உள்ளான இடத்திலிருந்து புறப்படுகிற எண்ணங்களும் ஆசாபாசங்களும் இருக்கவேண்டியபடி இன்னம் இருக்கவில்லையே. இது ஏன்? அந்த எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் என் சித்தம் சம்மதிக்கிறதுமில்லை இடங்கொடுக்கிறதுமில்லை என்பது மெய்தான்; ஆயினும் என் சித்தத்திற்கு அடங்காத ஒரு இடம் என்னுள்ளத்தில் இருப்பானேன்? செய்யத் தகாதவற்றைச் செய்த குற்றம் மிகுதியாய் என்னிடத்தில் இராவிட்டாலும் செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் விட்டபழி எனக்கு அதிகம் இருக்கிறதே. என் புண்ணிய ஜீவியத்திற்கு இருக்கவேண்டிய அலங்காரம், என் அன்பிற்கு இருக்கவேண்டிய அனல், இயேசுவுக்கும் அவருடைய மரணத்திற்கும் என் ஜீவியம் ஒத்திருக்கவேண்டிய ஒத்திருக்கை, இவற்றிலெல்லாம் எனக்கு அத்தனை பழு

தும் குறைபாடும் இருப்பானேன்? இயேசுவின் ஜீவியத்திற்கும் மரணத்திற்கும் ஒத்திருப்பதற்கு, என் ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பதினால்தானே என் சுயஜீவியம் என்பது சாகும்; அவரில் நான் நிலைத்திருக்கவேண்டும் என்பதற்கு இதுதானே ஆண்டவர் சொன்ன முக்கிய கருத்து? அப்படியிருக்க இது எனக்குக் குறைவானேன்? இவ்விதமாய் நினைத்து நினைத்து அவனுடைய மனம் வாடும். கிறிஸ்துவில் தானும் தன்னில் கிறிஸ்துவும் நிலைத்திருக்கிற ஜீவியத்தில் அவனுக்கு இன்னம் அகப்படாத ஒரு அநுபவம் ஏதோ இருக்கிறது நிச்சயம்.

ஆம், இது மெய்தான். விசுவாசமும் கீழ்ப்படிதலும் நமக்கு வேண்டிய நன்மை வருவதற்கு வழியேதவிர வேறல்ல. திராக்ஷையையும் அதின் கிளைகளையும்பற்றிய உவமையை நமக்குச் சொல்லுமுன் நமது விசுவாசமும் கீழ்ப்படிதலும் நமக்குச் சம்பாதித்துத் தரவேண்டிய குறையற்ற பூரண நன்மை எதுவென்று இயேசு வெகுதிட்டமாய்த் தெரிவித்திருக்கிறார். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று மூன்று முறைக்கு அதிகமாய்ச் சொல்லி, அவ்வாறு தமக்குக் கீழ்ப்படிகிற அன்புக்கு அவர் தருகிற மும்மடங்கு நன்மை இவையென்றும் ஏற்கனவே அறிவித்திருந்தார். அவையாவன: தெய்வாவி பிதாவினிடத்திலிருந்து வருவார்; குமாரன் தம்மை வெளிப்படுத்துவார்; பிதாவும் குமாரனும் வந்து வாசம்பண்ணுவார்கள். நமது விசுவாசம் வளர்ந்து கீழ்ப்படிதலாய் மாறமாற, கீழ்ப்படிதலும் அன்பும் பற்றி மூண்டு நமது உள்ளமெல்லாம் போய் கிறிஸ்துவையே தஞ்சமாய்ப் பிடித்துக்கொள்ளப் பிடித்துக்கொள்ள, நமது உள்ளுக்குள்ளான ஜீவன் திறவுண்டு, கிறிஸ்துவோடும் பிதாவோடும் நெஞ்சறிந்த ஐக்கியம் செய்வதற்கு மகிமைப்பட்டிருக்கிற இயேசுவின் ஜீவனையும் ஆவியையும் வாங்கிக்கொள்ளுகிற திராணி நமக்கு வரும். "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" என்கிற சொல் அப்போதுதான் நமக்குக் கைக்கு மெய்யாய்ப் பலிக்கும். பிதாவும் குமாரனும் ஒருவருக்குள் ஒருவர் இருப்பதினாலே இருவருக்கும் ஒரே மனதும் ஒரே அன்பும் மாத்திரமல்ல, ஒரே சுபாவமும் ஒரே



ஜீவனும் இருப்பதினால் கிறிஸ்து தேவனிலும் தேவன் கிறிஸ்துவிலும் நிலைத்திருப்பதுபோலவே, நாமும் கிறிஸ்துவும் ஒரே மனமும் ஒரே அன்பும் உடையவர்களாய் மாத்திரமல்ல, ஒரே ஜீவனும் ஒரே தன்மையும் உடையவர்களாயும் ஒருவருக்குள் ஒருவர் நிலைத்திருக்கக் கூடியது எப்படி என்பது நமக்கு விளங்கும்.

இயேசுவில் நாமும் நம்மில் இயேசுவும் இருக்கும் இருக்கை அவர் பிதாவிலும் பிதா அவரிலும் இருக்கும் இருக்கை போன்றது என்பதைப் பரிசுத்தஆவியின் உதவியால் நாமறிவோம் என்று சொன்னபின்புதான் அவர்: "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்று நமக்குக் கற்பித்தார். "என்னோடு உங்களை ஒன்றாக்குகிற தேவஜீவனை நீங்கள் மனதார வாங்கிக்கொள்ளுங்கள். அதின் வல்லபத்தால் நீங்கள் எவ்வளவுக்கு என்னில் நிலைத்திருப்பீர்களோ அவ்வளவுக்கு நான் பிதாவில் நிலைத்திருப்பதுபோல் உங்களிலும் நிலைத்திருப்பேன். அதினால் உங்கள் ஜீவன் என் ஜீவனும் என் ஜீவன் உங்கள் ஜீவனுமாய் இருக்கும்." இதுவே உண்மையான நிலைத்திருக்கை, அதாவது, இதுவே கிறிஸ்து நமக்குக் குறித்துக் காட்டின இடத்தில் நாம் போயிருப்பதாகும். நமது ஆத்துமா சுயாங்காரங்கொண்டு இருந்த இடத்தை அவர் கைப்பற்றிக்கொண்டு நமக்கு ஜீவனாய்விட்டார் என்று காணத்தக்கதாய் நாம் அவரில் நிலைத்திருத்தல் இதுவேயாம். தங்கள் மனதில் கவலையொன்றும் வைத்துக்கொள்ளாமல், தங்களுக்கு ஆகவேண்டியதையெல்லாம் செய்கிற அன்பிலே நம்பிக்கை வைத்து, அதற்குக் கீழ்ப்படிகிற சிறுபிள்ளைகளைப்போல் ஆவது இதுதான்.

இவ்வாறு நிலைத்திருக்கிறவர்களுக்குத்தான் உங்களுக்குப் பிரியமானது எதுவோ அதைக் கேளுங்கள் என்கிற வாக்குத்தத்தம் உரிமையுடையதாயிருந்து பலிக்கும். அது பலிக்காமலிருக்கவே முடியாது. ஏனெனில், கிறிஸ்து அவர்களைச் சர்வமும் ஆட்கொண்டிருக்கிறார். கிறிஸ்து அவர்களுடைய அன்பிலும், அவர்களுடைய மனதிலும், அவர்களுடைய ஜீவனிலும் வந்து நிறைந்திருக்கிறார். அவர்கள் தங்கள் சுயசித்தம் என்பதைக் கட்டோடே பிடித்துக் கொ

டுத்துவிட்டார்கள்; அது இருந்த இடம் வெறுமையாய் இருக்கிறதில்லை; கிறிஸ்து அந்த இடத்தில் வந்து குடியிருந்துகொண்டு, தமது ஆவிமூலமாய் அதிலே மூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறார். பிதா அயராமல் எப்போதும் கேட்கிறவர்; அவர்களிலிருந்துகொண்டு ஜெபிக்கிறார். அவர்களும் அவரிலிருந்துகொண்டு ஜெபிக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது அவர்களுக்குச் செய்யப்படும்.

என் நேசமுள்ள உடன் விசுவாசியே! நாம் கிறிஸ்துவில் எந்தவிதமாய் நிலைத்திருக்கவேண்டுமோ அந்தவிதமாய் நிலைத்திராமையினாலேயே திருச்சபையானது அதற்கு எதிரேயிருக்கிற நாஸ்திகமார்க்கம், உலகசித்தை, அஞ்ஞானமார்க்கம், இவற்றிற்கு முன்னே ஒன்றும் செய்யமாட்டாமல் பலங் கெட்டிருக்கிறது. நாம்மாத்திரம் சரியாயிருந்தால், திருச்சபை இவற்றின் நடுவிலிருந்துகொண்டு ஜெயத்தின்மேல் ஜெயமடையப்பண்ண ஆண்டவருக்கு வல்லமையுண்டு. இதுவிஷயத்தில் நாம் தாழ்ந்துவிட்டோமென்று அவருக்கு அறிக்கையிடுவோமாக. அவர் நமக்குச் சொன்ன வாக்கைத் தப்பாமல் செய்ய மனமுடையவர். இந்த நிச்சயத்தை மனதில் வைத்துக்கொண்டு, குற்றம் நம்முடையதே என்று ஒத்துக்கொள்வோமாக.

ஆயினும், நாம் அதைரியப்படலாகாது. ஜய வளர்த்தியுள்ள ஜீவனிருந்தால் மாத்திரம் திராக்ஷக்கொடி செடியில் நிலைத்திருக்கக்கூடும். நமதாண்டவருடைய மனதிலுள்ளபடி நாம் அவரில் நிலைத்திருப்பது நமக்குக் கிடைக்கக் கூடியதே. ஏனென்றால், நமக்கு அதைத் தருவதற்கே அவர் இருக்கிறார். நாம்மாத்திரம் நமது என்புணர்வெல்லாம் நஷ்டமேயென்று நினைக்கவும் "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்" என்று சொல்லவும் கூடிய நிலையிலிருக்கவேண்டும். அவரில் நிலைத்திருக்கவேண்டுமே அதற்கு என்னசெய்யலாம் என்கிறதிலேயே மனதை ஓட்டி அதில் நமக்குள்ள குறைவைப் பார்த்து மனஞ்சலிக்காமல், நாம் எவரில் நிலைத்திருக்க வேண்டியதோ அவரை





யும் அவரிலிருக்கிற நிறைவையும் பார்த்து மனந்தேறவேண்டும். கீழ்ப்படிதலும் தாழ்ந்த நிலைமையுமுடையவராய்ப் புவியில் சஞ்சரித்தவரைப் பார்க்கிற அரைப்பார்வையிலே பொழுது போக்காமல், உன்னதபதவி யடைந்திருக்கிற வல்லவரைப் பார்க்கிற முழுப்பார்வை யுடையவர்களாய் நாம் கிறிஸ்துவைக் கண்ணோக்கி, நமது ஆத்துமாவை அவரிலேயே நிறுத்தி, அது அவரிலேயே நடமாடி வேலை செய்விக்கவேண்டும். அப்போது, அவர் நமக்குச் சொன்ன வாக்கை அவரே நம்மில் நிறைவேற்றுவிப்பார்.

நாம் அவரில் நிலைத்திருந்து, நாளுக்குநாள் இந்த நிலைத்திருக்கையில் அதிகமதிகமாய் வளர்த்தி யடைந்துகொண்டு, தேவனுடைய சித்தத்தில் எதெது இருக்கிறதோ அதனையெல்லாம் உள்ளிட்டறிந்து, அதற்கு இணங்கி நடக்க நமது சித்தத்தைப் பழக்குவிப்போமாக. இப்படிச் செய்ய நமக்கு உரிமையுண்டு. அவருடைய சித்தம் நமக்குக் கற்பிப்பதைக் கைக்கொண்டு நடக்கிற கீழ்ப்படிதலுடையவர்களாயிருந்துகொண்டு அது நமக்குச் சொன்ன வாக்கை நிறைவேற்றும்படி கேட்கத் துணிவோமாக. அவரில் நிலைத்திருக்கை நம்மில் அவனவனுக்கு எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ, அந்த வளர்த்திக்குத் தக்கபடி, எந்தெந்த தேவசித்தம் நமது இஷ்டப்படி பலிக்கவேண்டுமென்று நாம் கேட்கலாம் என்பதை நமக்குக் காட்டுகிற தேவ ஆவியானவருடைய போதிப்புக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக. இயேசு: "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று சொன்ன வாக்கு நமது சுய அநுபவத்தில் கைக்கு மெய்யாய்ப் பலிப்பதற்கு முன்னே போதும் என்று சும்மா இராதிருப்போமாக.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

நேசமுள்ள ஆண்டவரே! உள்ளபடிக்கு இந்த வாக்கில் புதிதாய் நம்பிக்கை வைக்க எனக்குக் கற்றுக்கொடும். வாங்கிக்கொள்ள எங்களுக்கு மனது எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவும் கொடுக்கிறதற்கு உமக்கு மனது இருக்கிறது என்று எங்களுக்கு நிச்சயமுண்டாக்கும். ஆண்டவ

ரே! நீர் திருவாய் மலர்ந்திருக்கிற இந்த வாக்கில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் நீர் புதிதாய் என் உள்ளத்தில் உயிர்ப்பித்து வல்லமையுள்ளதாக்கும்.

என்னில் நிலைத்திருங்கள் என்று தேவரீர் சொல்லுகிறீர். ஆ என் உபாத்தியாயரே, என் உயிரே, என் சமஸ்தமே, நான் உம்மில் நிலைத்திருக்கிறேன். உமக்குள் இருக்கிற நிறைவின் அளவு எதுவோ அவ்வளவு நானும் வளர்ந்து தேற எனக்கு வரமளியும். உம்மையே கதியாகப் பிடித்துக்கொள்ளுகிற விசுவாச முயற்சி எனக்கு இருந்தால் போதுமா, என்னை நீரே காத்துக்கொள்வீர் என்று நம்புகிற விசுவாச அமைதி எனக்கிருந்தால் போதுமா, உமது சித்தத்திற்கு அடங்கி உமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற கீழ்ப்படிதல் எனக்கு இருந்தால் போதுமா, இதெல்லாம் எனக்குப் போதவே போதாது. நீர் பிதாவுக்குள் எவ்வாறு குடியிருக்கிறீரோ அவ்வாறு எனக்குள்ளும் குடியிருந்தால், அதுமாத்திரமே எனக்கு ஆசையடங்கப் போதுமானதாயிருக்கும். எனக்குமுன் இருப்பவராயேனும், எனக்குமேல் இருப்பவராயேனும் உம்மை நான் காண்பதல்ல, என்னோடு ஒன்றாகி எனக்குள்ளேயே நிலைத்திருக்கிறவராக உம்மை நான் பார்ப்பதே எனக்குத் தேவை. இதைத்தான் நான் விரும்பித் தேடுகிறேன். இதைத்தான் நீர் எனக்குத் தருவீரென்று உம்மை நம்பியிருக்கிறேன்.

“நீங்கள் எது வேண்டுமோ அதைக் கேட்டுக்கொள்ளுங்கள்” என்று சொல்லுகிறீர். ஆண்டவரே! உம்மில் நான் நிலைத்திருக்கிற நிலைத்திருப்பு பூரணமும் ஆழமும் ஆக ஆக, என் சித்தம் அதினால் புதிதாகிப் பரிசுத்தமடைந்து, வல்லமையுடையதாகுமாதலால், பெரிய பெரிய நன்மைகளை உம்மிடத்தில் கேட்கிறதற்கு மனத்தெளிவும் துணிவும் எனக்கு வரும் என்று எனக்குத் தெரியும். ஆண்டவரே! என் சித்தம் உமது சாவில் செத்துப்போய் உமது ஜீவனில் பிழைத்திருந்து, உம்மிடத்தில் மிக மிகத் துணிவடைந்தவீரவும் பெரிய பெரிய நன்மைகளைக் கேட்கவும் செய்யும்.



“அது உங்களுக்குச் செய்யப்படும்” என்று வாக்களிக்கிறீர். ஆமென் என்பவரே, உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியானவரே! தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தமாயிருக்கிறவைகளை உள்ளிட்டறிவது எந்த மானிட புத்திக்கும் எட்டாததாதலால், நீர் சொல்லுகிற இந்த வாக்கு உண்மைதான் என்பதை முன்னிலும் அதிக ஆச்சரியமான பிரகாரம் எனக்கு நீரே மெய்ப்பித்துக் காட்டுவீர் என்று நான் உறுதியாய் நம்பிச் சந்தோஷிக்கச் செய்யும். ஆமென்.

## புறனடை.

ஜெபத்தைப்பற்றிய நூல்களையும் பிரசங்கங்களையும் நமது உபாத்தியாயருடைய ஜெபப்போதகத்துடன் ஒத்துப்பார்த்தால் இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் இருப்பதைக் காண்போம். அதென்னவெனில், அவைகள் ஜெபத்திற்கு உத்தரவு அகப்பட வேண்டுமென்பதை முக்கியப்படுத்திப் பேசாதிருக்க, இவர் அதையே முக்கியம் என்று தெரிவிக்கிறார். அவைகள் சொல்லுகிறபடி, ஜெபத்திற்கு உத்தரவு கிடைக்காவிட்டாலும் ஜெபிப்பது தன்னில்தானே நல்ல ஞான அப்பியாசமாகையால், இந்த அப்பியாசமே ஒரு பிரயோஜனமென்று நாம் நினைக்கவேண்டுமாம். மேலும், ஜெபம் பலிக்காதபோது அதற்குப் பலவிதமாய்க் காரணம் காட்டி தங்கள் மனதிற்குத் திருப்தி யுண்டாக்கிக்கொள்ளப் பார்க்கிறார்கள்: திருஷ்டாந்தமாக, நாம் கேட்ட நன்மை நமக்குக் கிடைப்பதைவிட தேவனுடைய கூட்டுறவு நமக்குக் கிடைப்பதே மேல் என்று நாம் நினைக்கவேண்டுமாம்; நமக்கு எது கொடுப்பது தகுதி என்பது தேவனுடைய ஞானத்திற்கு நம்மிலும் அதிகமாய்த் தெரியுமாம்; தேவன் நாம் கேட்டதைக் கொடாவிட்டாலும் அதிலும் நலமானதைக் கொடுப்பாராம். இந்த உபதேசம் மேல்பார்வைக்குச் சிறப்பாயும் நல்ல ஞானம்போலும் தோன்றினாலும் அதைப்பற்றி நமதாண்டவர் ஒன்றுமே சொல்லவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர் ஜெபத்தைக் குறித்துச் சொல்லியிருப்பதையெல்லாம் ஜாக்கிரதையாய்த் திரட்டிச் சிந்தித்துப் பார்த்தால் நமக்கு வெள்ளென விளங்குவது என்னவெனில்: ஜெபம் நாம் விரும்புகிறதை வாங்கித் தருகிற எத்தனமேயொழிய வேறல்ல: நமது ஜெபம் பலிப்பதே நாமும் நமது ஜெபமும் பிதாவுக்குப் பிரியம் என்பதற்கு ரூபகாரம். பிதாவுக்கும் நமக்கும் உண்டாயிருக்கிற நேச உறவையும் அவர் நமக்குப் பாராட்டுகிற பிரீதியையும்விட நாம் அவரிடத்தில் வாங்கிக்கொள்ளு

கிற நன்மைகளை அதிக உயர்த்தியாய் மதிக்கவேண்டுமென்று கிறிஸ்து இதினால் நமக்குச் சொல்லுகிறதில்லை. அப்படி அவர் சொல்லுகிறதேயில்லை. நம்மேல் பிதாவுக்குப் பிரியம் உண்டு என்கிறதற்கும் நமக்கு அவருடனே நேசஉறவு இருப்பது பொய்யல்ல மெய்யே என்கிறதற்கும் நமது ஜெபம் பலிப்பதே நமக்கு அறிகுறியாய் இருக்கவேண்டுமென்று அவர் தெரிவிக்கிறார். “ராஜா தமது அடியாளுடைய வார்த்தையின்படி செய்ததினால் என் ஆண்டவனாகிய ராஜாவின் கண்களில் எனக்குத் தயைகிடைத்தது என்று இன்று உமது அடியானுக்குத் தெரியவந்தது.”

நாம் பண்ணும் ஜெபமெல்லாம் தப்பாமல் பலித்துக்கொண்டேயிருக்கிற ஜீவியம் நமக்குச் சித்தித்தால்: நாம் ஞானஜீவனில் தேறிவிட்டோம்; கிறிஸ்துவில் உண்மையாய் நிலைக்கிற நிலைப்பு நமக்கு அகப்பட்டுவிட்டது; நமது சித்தம் தேவசித்தத்திற்கு எள்ளளவும் பேதமில்லாமல் ஒத்திருக்கப்பெற்றுவிட்டது; தேவன் நமக்கு ஆயத்தம் பண்ணியிருப்பதைப் பார்க்கவும் எடுத்து அநுபவிக்கவும் நமது விசுவாசத்திற்குச் சக்தியுண்டாய்விட்டது; கிறிஸ்துவின் நாமமும் அவருடைய சுபாவமும் நம்மைப் பூரணமாய் ஆட்கொண்டிருக்கிறது; தேவன் எவர்களைத் தமக்கு ஆலோசனைக்காரராக்கிக்கொண்டு எவர்களுடைய ஜெபத்தின்படியே உலகை ஆளுகிறாரோ அவர்களுடைய அந்தஸ்தை யடைந்திருக்க நமக்கு யோக்கியம் பிறந்துவிட்டது, என்பதற்கு அதுவே நமக்கு ரூபகாரம். மனிதனுக்கு ஆரம்பத்திலிருந்த மேன்மை இவர்களுக்குத்தான் ஒருவாறு திரும்பக் கிடைத்திருக்கிறது; கேட்டதெல்லாம் கிடைக்கும்வண்ணம் ஜெபிக்கிறவராகிய கிறிஸ்துவின் வல்லமை இவர்கள் அவரில் நிலைத்திருக்கிறதற்குத் தக்கபடி இவர்களிலேயே குடிகொண்டிருந்து ஜொலிக்கும்; அவருடைய நாமத்திற்கு இருக்கிற மகிமை இவர்களிலே இருந்துகொண்டு யாவருக்கும் பிரசித்தமாய் வெளிப்படும். ஜெபம் தன்னிலேயே ஒரு நன்மைதான்; ஜெபம் பலிப்பதோ அதிலும் பெரிய நன்மை. ஏனெனில், அது நமது ஜெபம், நமது விசுவாசம், நமது சித்தம், இவை எப்படி யெப்படி இருக்கவேண்டுமென்று பிதா விரும்புகிறாரோ அப்படி யப்படி இருக்கிறதா என்று நாம் கேட்கிற கேள்விக்கு அவர் ஆம் என்று நமக்கு உத்தரம் சொல்வதாகும்.

இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேனென்றால், இந்நூலைப் படிக்கிறவர்கள் கிறிஸ்து ஜெபத்தைக்குறித்துச் சொன்னதையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து, செய்யவேண்டிய மாதிரி ஜெபம் செய்தால், அதாவது, நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்துகொண்டு ஜெபித்தால், அதற்கு உத்தரவு அவசியம் வருமென்று நாம் நம்பி காத்திருக்கலாம் என்கிற சத்தியத்தை யாவரும் செம்மையாய் அறிந்துகொண்டு



அநுஷ்டிக்கவேண்டும் என்கிற ஆசை எனக்கிருப்பதினாலேதான். அப்படிச் செய்தால், பலிக்காத ஜெபங்களுக்கு எத்தேந்த நிமித்தியங்கள் சொல்லிக்கொண்டு முன் நாம் சும்மா இருந்தோமோ அப்படி இனி இருக்கமாட்டோம். அதினால், கிறிஸ்து தமது திருச்சபைக்கு எந்த இடத்தைக் காட்டி, அதிலேயிருந்துகொண்டு அது வல்லமை செய்யவேண்டுமென்று கற்பித்தாரோ அந்த இடத்தில் அது இருக்கத் தவறிவிட்டாலும் நாமாவது அந்த இடத்தில் போயிருக்க மனமுண்டாகும். கிறிஸ்துவின் நாமத்திலே நாம் எதற்கும் துணிந்து ஜெபிக்கத் தெரியாதிருப்பதற்குக் காரணம் நமது ஞான ஜீவன் பயங்கரமாய்ப் பலவீனப்பட்டிருப்பதே யென்பது நமக்கு அதினால் விளங்கும். கிறிஸ்துவில் பூரண ஐக்கியமுள்ளதும் தேவாவியின் நிறைவையுடையதுமான ஜீவியத்தை அடைந்துகொள்வதே பலிக்கிற ஜெபம் செய்கிறதற்கு வழி என்கிறது நமக்கு அதினால் தெரியுமாதலால் அவ்வித ஜீவியத்தை அடைந்துகொள்ள நாம் முழு பலத்தாலும் முயலுவோம். அதினால் நமக்கு தேவன் வைத்திருக்கிற இலக்கு வரவர வாய்க்கும்: அதாவது—“அந்த நாளிலே: மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.” உள்ளபடி இயேசுவின் ஐக்கியத்திலிருந்துகொண்டு செய்கிற ஆத்மார்த்தமான ஜெபமெல்லாம் எப்போதும் தப்பாமல் பலிக்கும்.

## இருபத்திரண்டாம் பாடம்.

### ‘என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்’
அல்லது,
### திருவசனமும் ஜெபமும்.

“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.” (யோவா. 15, 7.)

திருவசனத்திற்கும் ஜெபத்திற்கும் உயிருள்ள ஐக்கியம் இருக்கிறது. இது கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்திலேயே

லேசாய்க் கற்றுக்கொள்ளப்படுகிற பாடங்களில் ஒன்று. அஞ்ஞானத்திலிருந்து திரும்பின ஒரு புதுக்கிறிஸ்தவன் பின்வருமாறு சொன்னான்: "நான் ஜெபம் பண்ணுகிறபோது என் தகப்பனுடனே பேசுகிறேன்; நான் வேதம் படிக்கிறபோது என் தகப்பன் என்னுடனே பேசுகிறார்." ஜெபம் தொடங்குமுன் திருவசனம் என்னை அதற்குப் பக்குவப்படுத்தும். எப்படி? பிதாவை நான் எதெது கேட்கலாம் என்று எனக்குத் தெரிவிப்பதினால். ஜெபிக்கும்போது திருவசனம் என்னைப் பலப்படுத்தும். எவ்வாறு? நான் வேண்டுகிறதை பிதா தரத்தான் வேண்டும் என்பதற்கு ஆதாரங்களையும் நியாயங்களையும் எனக்கு எடுத்துக்கொடுத்து என் விசுவாசம் சோர்ந்து போகாமல் காப்பதினால். ஜெபித்தபின் திருவசனம் எனக்கு உத்தரவு கொண்டுவரும். எவ்வண்ணம்? அதிலே எனக்கு உத்தரவு சொல்லுகிற பிதாவின் குரலை தேவாவியானவர் என் செவிக்கு அகப்படப்பண்ணுவதினால். ஜெபம் ஒருபக்ஷப் பேச்சல்ல, இருபக்ஷப் பேச்சு; என் குரலுக்கு தேவன் எதிர்க்குரல் கொடுப்பதே அதின் முக்கிய சாராம்சம். நான் தேவனுடைய குரலுக்குச் செவிகொடுப்பது அவர் என் குரலுக்குச் செவிகொடுப்பார் என்கிற நிச்சயத்தை எனக்குத் தரும். "உமது செவியைச் சாய்த்துக் கேளும்." "எனக்குச் செவிகொடும்." "என் சத்தத்தைக் கேளும்." இது மனுஷன் தேவனைப் பார்த்துச் சொல்லுகிற சொல். அவ்வாறே, "செவிசாய்த்துக் கேள்." "எனக்குச் செவிகொடு." "என் சத்தத்தைக் கேள்" என்று அவரும் அவனைப் பார்த்துச் சொல்லுகிறார். அவர் நமக்குச் செவிகொடுக்கிறது நாம் அவருக்குச் செவிகொடுக்கிறதற்குத் தக்கபடி இருக்கும். அவர் சொல் என் செவிக்குள் எவ்வளவு நுழையுமோ அவ்வளவே என் சொல் அவரிடத்தில் வல்லமை செய்யும். தேவனை நான் எவ்வளவு மதிக்கிறேன் என்பது நான் அவருடைய வசனத்தை மதிக்கிற மதிப்பினால் விளங்கும். ஜெபத்திலே நான் அவர் முகத்தைப்பார்க்க வாஞ்சிப்பது உண்மையா அல்லவா என்பது வசனத்திலே நான் அவர் சொல்லைக்கேட்க வாஞ்சிக்கிற வாஞ்சையினால் தெரியும்.



வசனத்திற்கும் ஜெபத்திற்குமுள்ள ஐக்கியத்தை "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்ற சொல்லால் இயேசு நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். இது நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்பது இந்தச் சொல்லுக்குப் பதிலாய் அவர் சொல்லுகிற இன்னொரு சொல்லை எடுத்துப்பார்த்தால் தெரியும். அந்தச் சொல் "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்பது. இதை அவர் ஒருவிசைக்குமேல் சொல்லியிருக்கிறார். அதினால் அவர் நமக்குச் சொல்ல விரும்புகிற தென்னவென்றால்: நாம் அவரில் நிலைத்திருப்பது அரைகுறையாயிருக்கக் கண்டு மனஞ்சோர்ந்துபோகாமல் அவர் வந்து நம்மில் நிலைத்திருந்து அரைகுறையை நீக்கிப் பூரணமாக்குவார் என்று நாம் நம்பியிருக்கவேண்டும் என்பது. ஆனால், இங்கே "நீங்கள் என்னிலும் நான் உங்களிலும்" என்னும் சொல்லுக்குப் பதிலாய் "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும்" என்னும் சொல்லைச் சொல்லுகிறார். இதைப் பார்த்தால், அவர் வார்த்தைகள் நம்மில் நிலைத்திருப்பதும் அவரே நம்மில் நிலைத்திருப்பதும் ஒன்றுதான் என்று வெளியாகும்.

நமது ஞான ஜீவியத்திலும் முக்கியமாய் நமது ஜெப ஜீவியத்திலும் கிறிஸ்துவுக்குள் தேவன் பேசியிருக்கிற திருவசனத்தை நாம் எப்பேர்ப்பட்ட மதிப்பாய் மதிக்கவேண்டும் என்று இது நமக்குத் தெளிவாய்க் காட்டுகிறது. மானிடன் ஒருவன் பேசுகையில் அவன் உட்குணம் இன்னதென்று அவன் பேச்சினாலேயே அறிந்துகொள்ளுகிறோம். அவன் ஒருவனுக்கு வாக்களிக்கையில், தன்னையே அவனுக்குக் கொடுத்துவிடுகிறான். அதாவது, தன் வாக்கை ஏற்றவனுக்கு அவன் தன்னையே கட்டுப்படுத்திவிடுகிறான். அவன் ஒருவனுக்குக் கட்டளையிடும்போது, தன் சித்தத்தை அவன் மேல் செலுத்தப்பார்க்கிறான், அதாவது, சரீரத்தின் அவயவங்கள் சித்தத்திற்கு எப்படி அடங்குமோ, அப்படி அவன் தன் சித்தத்திற்கு அடங்கும்படி செய்துகொள்ளப் பார்க்கிறான். நமக்குள் ஒருவருள்ளம் இன்னொருவர் உள்

ளத்தோடு பொருந்தி உறவாடுவதற்கு நமது வாய்ச்சொல்லே கருவியாய் உதவுகிறது; வாய்ச்சொல்லைக்கொண்டே ஒருவன் உள்ளம் அவனை விட்டுப் புறப்பட்டு இன்னொருவனுள்ளத்திற்குள் புகுந்து அதினோடு ஒட்டிக்கொள்ளுகிறது. ஒருவன் தன்சொல்லை இன்னொருவனுடைய செவிக்கு ஏற்பித்து, அதை அவனுடைய மனதிற்கு இணக்கமாக்கி, அதற்கு அவன் சம்மதிக்கும்படி செய்தால் மாத்திரமே அவனைத் தன் மனம்போல் நடக்கப்பண்ணலாம். இது ஒருவன் இன்னொருவனுக்குத் தன்னையே கொடுத்தலாகும். ஆயினும், கிஞ்சித்துப்-பிராணிகளாகிய நமக்கு எல்லை எவ்வளவோ அவ்வளவுக்குள்ளேயே இதெல்லாம் நடக்கும்.

தேவனோ அளவுக்குட்படாதவர். அவருள் இருப்பதெல்லாம் இன்னவிதம் என்று நிலைகாணமுடியாத ஜீவனும் வல்லமையும் ஆவியும் உண்மையுமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர் சொல்லால் ஒன்றை வெளிப்படுத்தினால் அது அவர் தம்மையே வெளிப்படுத்தலாகும். அவர் தமது சொல்லை ஏற்றுக்கொள்வோருக்குத் தமது அன்பையும் ஜீவனையும், தமது சித்தத்தையும் வல்லமையையும், உண்மையாகவே கொடுக்கிறார். அவர் அப்படித் தம் அன்பருக்குத் தம்மைக் கொடுக்கும் விதத்தை அறிய வல்லாரில்லை. அவர் நமக்கு அருளியிருக்கிற ஒவ்வொரு வாக்கும் அவர் தம்மையே பிடித்து நமது கையில் கொடுத்து எடுத்துக்கொள்ளச் சொன்னதே தவிர வேறல்ல. அவர் நமக்கு இட்டிருக்கிற ஒவ்வொரு கட்டளையும் அவர் தம்மையே நமது வசத்தில் ஒப்புவித்து, தமது சித்தத்தை நமது சித்தமாகவும், தமது பரிசுத்தத்தை நமது பரிசுத்தமாகவும், தமது பரிபூரணத்தை நமது பரிபூரணமாகவும், எடுத்து உபயோகித்துக் கொள்ளச்சொன்னதேயன்றி மற்றல்ல. திருவசனத்தில் தேவன் தம்மையே நமக்குக் கொடுக்கிறார். அவருடைய நித்திய புத்திரராகிய இயேசுகிறிஸ்துவே அவருடைய திருவசனம். ஆகவே, இயேசுகிறிஸ்து பேசின வார்த்தைகளெல்லாம் தேவனே பேசின வார்த்தைகள். அவைகள் உயிர்ப்பிக்கிற தேவ ஜீவனும் தேவ வல்லமையும் நிறைந்த வார்த்தைகள். "நான்



உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."

செவிடும் ஊமையுமாயிருப்பவர்களை ஆராய்ந்து அறிந்தவர்கள் ஒருவனுக்கு வாய் பேசும் சக்தி காது கேட்கும் சக்திக்குத் தக்கபடி இருக்கும் எனவும், சிறு குழந்தைகள் செவி கேட்கும் சக்தியை இழந்தால் வாய் பேசும் வல்லமையையும் இழந்துவிடுகின்றன எனவும் தெரிவிக்கிறார்கள். செவிக்கேள்விக்குத் தக்கபடி வாய்ப்பேச்சு இருக்கும் என்பது ஞானவிஷயத்திற்கும் பொருந்தும். நாம் தேவனோடு செய்யும் ஞானச் சம்பாஷணையில்கூட இது உண்மையென்று பார்ப்போம். ஜெபிப்பது, அதாவது, தேவனருளிய வாக்குத்தத்தங்களையெடுத்துக்காட்டி நமது மனதிலிருக்கிற விருப்பங்களை அவர் நமக்கு வாய்க்கப்பண்ண வேண்டுமென்று சொல்வது வெகு லேசு. ஆனால், ஆவியிலிருந்துகொண்டு ஜெபிப்பது; அதாவது, தேவனுடைய செவிக்கு எட்டி, அவருடைய உள்ளத்தைத் தொட்டு, கட்புலனுக்கு அகப்படாத உலகத்துக்குள் போய், அங்கிருக்கிற வல்லமைகளைக் கைவசப்படுத்திக்கொள்ளுகிற வார்த்தைகளைப் பேசுவது தேவனுடைய குரலை நேர் நேரே நமது செவியாரக் கேட்டால்மாத்திரம் கைகூடும். தேவனுடைய வாய்க்குரலும் வாய்ச்சொல்லும் எவ்வளவுக்கு நமது செவிக்குள் விழுகிறதோ, அவருடைய வாய்ச்சொல்மூலியத்தில் அவருடைய நினைவையும் அவருடைய மனதையும் அவருடைய ஜீவனையும் எவ்வளவுக்கு நமது இருதயம் உட்கொள்ளுகிறதோ, அவ்வளவுக்கு தேவன் பிரியமாய்ச் செவிகொடுக்கிற குரலும் சொல்லும் நமக்கு அமையும். காலைதோறும் தேவனே வந்து எழுப்பிக் கற்றுக்கொடுக்கும்போது அவரிடத்தில் செவியாரக் கற்றுக்கொண்ட காது ஒருவனுக்கு இருந்தால் மாத்திரமே தேவனிடத்தில் பேசவேண்டிய மாதிரி பேசுகிற கல்விமானின் நாவு அவனுக்கு வரும். (ஏசா. 50. 4.)

திருவசனத்தில் தேவனுடைய குரலை இப்படியொருவன் கேட்பது வேறு, அந்த வசனத்தை அவன் சிந்தை செலுத்திப் படிப்பது வேறு; இரண்டும் ஒன்றல்ல. ஜீவனுள்ள தேவனுடன் நேருக்கு நேராய் ஐக்கியம்செய்வதில்லாமலே ஒரு

வன் திருவசனத்தைப் படிக்கவும் அறியவும் கூடும். ஆனால், திருவசனத்தைப் படிக்கிற வேறொருவிதம் இருக்கிறது. ஒருவன் பிதாவின் முகத்துக்கு எதிரேயிருந்துகொண்டு, தேவாவியானவர் விளக்கிச் சொல்லச் சொல்ல அந்த அருள்வாக்கைப் படிக்கலாம். அப்படிப் படிக்கும்போது, நாம் படிக்கிற வசனம் நேரே தேவனுடைய திருவாயிலிருந்து புறப்பட்டு உயிருள்ள வல்லமையுடன் நமதுள்ளத்தில் வந்து பாயும். அப்போது அது நமக்கு பிதாவின் வாய்க்குரலாகவே இருக்கும்; அது பிதாவும் நாமும் நேர் நேராய்ச் செய்கிற சம்பாஷணையாயிருக்கும். தேவனுடைய வாய்க்குரல் உயிர்க்குரலாய் நமது உள்ளத்தில் வந்து புகுந்தால்மாத்திரமே நமக்கு அதினால் நன்மையும் பலமும் உண்டாகும்; தேவனுடைய உயிர்க்குரலுக்கு மாத்திரமே நமது உயிருள்ள விசுவாசம் எதிர்க்குரல் கொடுக்கும். இந்தக் குரல் கேட்பதே தேவனுடைய உள்ளத்திற்குப் பிரியம்.

இப்படி அவருடைய குரலைக் கேட்டால்மாத்திரமே அவருடையசொல்லை நம்பவும், நம்பினபடி கீழ்ப்படிந்து நடக்கவும் நமக்குத் திராணிவரும். தேவன் நம்மை எது செய்யச்சொன்னார் என்றறிவது முக்கியமல்ல, தேவன்தாமே நேரில் வந்து நமக்கு அதைச் சொல்லுகிறதை அறிவதே முக்கியம். கீழ்ப்படிதலுக்கு நம்மைத் தூண்டுவது நாம் படித்த நியாயப்பிரமாணமுமல்ல, நாம் கற்ற நூலுமல்ல, தர்ம அதர்மங்களை அறியும் அறிவுமல்ல; தேவன்தாமே நம்முடன் நேருக்கு நேராயிருந்து நம்மை வசப்படுத்திக்கொண்டு நேச உறவாடுவதே அதற்கு நம்மைத் தூண்டும். அவ்வாறே, தேவன் நமக்கு எதை வாக்களித்திருக்கிறார் என்பதையறியும் அறிவல்ல, நமக்கு வாக்களித்த அவர்தாமே நேருக்கு நேராய் நம்முடன் இருக்கிறார் என்பதை அறிவதே நமக்குள் நம்பிக்கையை எழுப்பி நமது ஜெபம் பலிக்கும் என்கிற உறுதியுண்டாக்கும். தேவன் தாமே நம்முடன் இருப்பதைக் கலக்கமில்லாமல் பூரணமாயறிந்துகொள்வதினாலேயே கீழ்ப்படியாமையும் அவநம்பிக்கையும் கட்டோடே நம்மைவிட்டுத் தொலையும்.

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்



களுக்குச் செய்யப்படும்." இதற்கு அர்த்தம் இப்போது நமக்குத் தெரியும். நமது வார்த்தைகளில் இரட்சகர் தம்மையே தருகிறார். அவருடைய வார்த்தைகள் நமக்குள் வந்து நமது சித்தத்திலும் ஜீவியத்திலும் இருந்துகொண்டு நமது நாட்டங்களாயும் நடக்கையாயும் புறப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். அவர் வார்த்தைகள் நமக்குள் வந்தபின் போகாமல் நிலைத்திருக்கவேண்டும். நமது ஜீவியம் முழுமையும் நமக்குள் நிலைத்திருக்கிற அந்த வார்த்தைகளை பகிரங்கப்படுத்துகிற உதாரணமாயிருக்கவேண்டும். அவர் வார்த்தைகள் உள்ளே வந்து கிறிஸ்துவை நமக்குள் பிரசித்தப்படுத்தவேண்டும்; நமது ஜீவியம் வெளியே போய் அவரைப் பிரசித்தப்படுத்தவேண்டும். கிறிஸ்துவின் வார்த்தைகள் நமது உள்ளத்திற்குள் புகுந்து, நமக்கு உயிருக்குயிராகி, நமது ஜீவியத்தை ஆட்கொள்ள ஆட்கொள்ள, நமது வார்த்தைகள் அவருள்ளத்திற்குள் புகுந்து அவரை வசியப்படுத்திக்கொள்ளும். என் ஜெபம் பலிப்பது நான் செய்யும் ஜீவியத்திற்குத் தக்கபடியிருக்கும். தேவன் எனக்குச் சொன்னதை நான் செய்தால் நான் அவருக்குச் சொன்னதை அவர் செய்வார்.

தேவனுடைய வார்த்தைகளை நான் எப்படி மதிக்கிறேனே அப்படித்தான் அவர் என் வார்த்தைகளை மதிப்பார்; அவருடைய வார்த்தைகள் எனக்குள் என்ன வல்லமை செய்யுமோ அதே வல்லமைதான் என் வார்த்தைகள் அவருக்குள் செய்யும். அவர் எனக்குச் சொன்னதை நான் செய்தால் நான் அவருக்குச் சொன்னதை அவர் செய்வார்.

தேவனுடைய வார்த்தைகளுக்கும் நம்முடைய வார்த்தைகளுக்குமுள்ள இந்தப் பரஸ்பர சம்பந்தம் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு வெகு செம்மையாய்த் தெரிந்திருந்தது. அவர்கள் ஜெபம்பண்ணினபோதெல்லாம் அது உள்ளபடிக்கு தேவன் அவர்களுக்குக் கொடுத்த குரலுக்கு அவர்கள் அன்புடனே அவருக்கு எதிர்க்குரல் கொடுத்ததாகவேயிருந்தது. தேவன் அவர்களுக்குச் சொன்னது ஒரு வாக்குத்தத்தமாயிருந்தால், அவர் சொன்னதைச் செய்யும்படி அவர் வார்த்தையை அவர்கள் பிடித்துக்கொண்டார்கள். "நீர்

சொன்னதைச் செய்யும்." "ஏனெனில், கர்த்தாவே, தேவரீர் அதைச் சொன்னீர்." "நீர் சொன்னபடியே." "உமது வார்த்தையின்படியே." இப்படி எடுத்துக்காட்டி, அவர்கள் தேவனிடத்தில் பேசின பேச்சுக்கு அவர் தங்களுக்குச் சொன்ன வாக்கே வேரும் உயிரும் என்று தெரிவித்தார்கள். அவர் சொன்னது ஒரு கட்டளையாயிருந்தால், முன்பின் யோசியாமல் அவர் சொன்னபடிக்கே செய்தார்கள்: "கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்." அவர்களுடைய ஜீவியம் தேவனோடு அவர்கள் செய்த கூட்டுறவாகவே யிருந்தது; அவரும் அவர்களும் ஒருவருடன் ஒருவர் வார்த்தையாடி, ஒருவர் மனதிலிருந்ததை யொருவருக்குச் சொல்லிக்கொண்டார்கள். தேவன் அவர்களுடன் பேசினதை அவர்கள் செவிசாய்த்துக் கேட்டுச் செய்தார்கள்; அவர்கள் பேசினதை தேவன் செவிசாய்த்துக் கேட்டுச் செய்தார். கிறிஸ்து நமக்குச் சொன்னதை நமக்கு நிறைவேற்றுவதற்கு தம் ஒவ்வொரு வாக்கிலும் தம்மையே முற்றும் கொடுக்கிறார். அவ்வாறே நாமவருக்குச் சொன்னதை அவருக்கு நிறைவேற்றுவதற்கு, நம் ஒவ்வொரு சொல்லிலும் நம்மையே முற்றும் அவருக்குக் கொடுக்கவேண்டும்.

"என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்." இது அறிதற்கு எளிதும் தெளிவுமான நிபந்தனை. அவருடைய வார்த்தைகளில் அவருடைய சித்தம் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, அவருடைய வார்த்தைகள் எனக்குள் நிலைத்திருக்கிறதற்குத் தக்கபடி அவருடைய சித்தம் எனக்குள் இருந்துகொண்டு, என்னை ஆளும். என் சித்தம் வெறுங் குடமாயிருக்கச் சம்மதிக்கும், அந்த வெறுங் குடத்தில் அவர் சித்தம் வந்து நிறைந்திருக்கும். என் சித்தம் அவர் சித்தத்தின் கையில் தன்னை ஒரு ஆயுதமாகப் பிடித்து ஒப்புவித்துவிடும். என் உள்ளிந்திரியங்களெல்லாம் அவர் குடியிருக்கும் கோவிலாய்விடும். அவர் சொற்படி செய்யவும் அவர் சொல்லை நம்பவும் பழகிப் பழகி என் சித்தம் மேலும் மேலும் வலுவடைவதுமல்லாமல், அது அதிகமதிகமாய் அவர் சித்தம்போல ஆய்விடும். இனி அவர் விருப்பம்போலவே அதின் விருப்பமும் கொஞ்சமாவது வேறுபாடின்றி இருக்



கும். அப்போது, அதின்மேல் அவருக்கு நம்பிக்கை உண்டாய்விடும். இனி: "என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்" என்கிற வாக்கை அதற்குக் கொடுக்க அவர் கொஞ்சமும் அஞ்சார். அந்த வாக்கை நம்பிச் செய்கிறவர்களுக்கு அதை எழுத்தால் உள்ளபடிக்கு அவர் நிறைவேற்றிக் காட்டுவார்.

கிறிஸ்துவின் மாணாக்கரே! தேவ சித்தமும் தேவ ஞானமும் நமக்கு வகுத்தது எதுவோ அதற்கு நாம் கீழடங்கி இருக்கவேண்டும் என்று சாக்குச்சொல்லி நமது ஜெபம் பலிக்காமைக்கும் ஜெபத்தில் நாம் வல்லமை செய்யமாட்டாமைக்கும் நம் மனதில் தோன்றினவாறு நியாயம்காட்டுவது சரியல்ல. நமது ஜெபத்திற்கு வல்லமை குன்றியிருந்ததுக்கு உண்மையான காரணம் நமது ஜீவியத்திற்கு வல்லமை குன்றியிருந்ததேயொழிய வேறல்ல. இது மேலும் மேலும் நமக்குத் தெளிவாகிறதல்லவா? நேரே தேவனுடைய வாயிலிருந்து வந்து நம்முள்ளத்தில் விழுகிற வார்த்தையே தவிர வேறொன்றும் நம்மைப் பலசாலிகளாக்கமாட்டாது. அதினாலேயே நாம் பிழைக்கவேண்டும். கிறிஸ்துவின் வார்த்தை நமக்கு இன்பமாகவேண்டும்; நாம் போய் அதில் குடியிருக்கவேண்டும்; அது வந்து நம்மில் நிலைத்திருக்கவேண்டும்; அதின்படி நாம் செய்து செய்து அது நமது சுபாவத்தோடு சுபாவமாய்விடவேண்டும்; அப்போது அது நம்மையும் கிறிஸ்துவையும் ஒன்றாக்கி, நாம் ஆவிக்குரியபிரகாரம் போய் தேவனைத் தொட்டுப் பிடித்துக்கொள்ளப்பண்ணும். உலகத்தினால் உண்டானதெல்லாம் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். நமது உள்ளத்தையும் உயிரையும் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு ஒப்புக்கொடுப்போமாக. அவர் தமது வார்த்தைகளிலே தம்மையே ஓயாமல் நமக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஜீவனுள்ள நமது அருமை இரட்சகர் தம்மையே நமக்கு நேரில் தருகிறார். அப்படி தம்மைத் தருகிறவருக்கு நாம் நம்மைக் கொடுத்தால்: "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்,

நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்கிற அவரது வாக்கு நமது அநுபவத்தில் புஷ்டியாய்ப் பலிக்கும்.

"ஆண்டவரே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

அன்புள்ள ஆண்டவரே! நீர் இன்றைக்குச் சொன்ன பாடம் மறுபடியும் என் மதியீனத்தை எனக்குத் தெரியக் காட்டிற்று. இதுவரையில் என் ஜெபம் நம்பிக்கையுடன் செய்யப்பட்டதுமில்லை, பலிக்கிற ஜெபமாயிருந்ததுமில்லை. இதேன் என்று எனக்கு இப்போது தெரியும். நான் உம்முடன் பேசுவதற்கு துடித்துக்கொண்டிருந்து நீர் என்னுடன் பேசுவதற்கு இடங்கொடாதிருந்தேன். என் உள்ளத்தில் உமது ஜீவனுள்ள வார்த்தை வந்து எவ்வளவு தங்கியிருக்குமோ அவ்வளவே நம்பிக்கையுடன் ஜெபிக்கிற விசுவாசம் எனக்கிருக்கும் என்கிற இரகசியம் எனக்கு இதுவரையில் தெரியாதிருந்தது. யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும் இருக்கக்கடவர்கள்; தேவ சமுகத்தில் நீ மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலிரு; என்ற உமது திருவசனம் எனக்குத் தெளிவாய்ப் போதித்திருக்கிறது. ஆண்டவரே! உமது வார்த்தையை என் ஜீவியத்திற்குள் ஏற்றுக்கொள்வதினாலேயே என் வார்த்தைகள் உமது இருதயத்தில் ஏறச்செய்யலாம். உமது வார்த்தை எனக்குள் ஜீவனுள்ள வல்லமையாய்விட்டால் அது உம்மிடத்திலும் ஜீவனுள்ள வல்லமையாயிருக்கும்; உமது வாய் பேசினதையே உமது கை செய்யும். இதை எனக்குக் கற்றுக்கொடும்.

ஆண்டவரே! விருத்தசேதனமில்லாத காதுக்கு என்னை விடுதலையாக்கும். காலைதோறும் பிதாவின் குரலைக் கேட்பதற்கு எழுப்பப்படுகிற மாணாக்கனுக்கு இருக்கத்தகுந்த திறந்த காதை எனக்குத் தாரும். நீர் செவியாரக் கேட்டதையே வாயாரப் பேசினீர். அதுபோலவே, நான் உம்மிடத்தில் பேசும் பேச்சு நீர் என்னிடத்தில் பேசும் பேச்சின் எதிரொலியாயிருப்பதாக. "அவரோடு பேசுவதற்கு மோசே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசித்தபோது,



கிருபாசனத்திலிருந்து தன்னோடே பேசுகிறவருடைய சத்தத்தைக் கேட்டான்." ஆண்டவரே, இப்படியே எனக்குமாகக்கடவது. என் ஜீவியத்திலும் என் நடக்கையிலும் உமது வார்த்தைகள் நிலைத்திருந்து சகலர் கண்ணுக்கும் தெரிவதாக. இந்த ஒரு அடையாளமே என் ஜீவியத்தில் பதிந்திருந்து "நீங்கள் வேண்டிக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்" என்னும் உமது திருவாக்கு எனக்குப் பரிபூரணமாய்ப் பலிப்பதற்கு என்னை ஆயத்தப்படுத்துவதாக. ஆமென்.

## இருபத்துமூன்றும் பாடம்.

**'நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அதைப் பிதா உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாகக் கனிகொடுங்கள்.'**

அல்லது,

## கீழ்ப்படிதலே ஜெப வல்லமைக்கு வழி.

"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்." (யோவா. 15. 16.)

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக். 5. 16.)

பிதா நாம் கேட்பதெல்லாம் கொடுப்பார் என்கிற வாக்கு இங்கே ஒரு புதுச் சந்தர்ப்பத்தில் சொல்லப்படுகிறது. உன்னதமானவருடைய கொலுக்கூடத்திலே அப்பேர்ப்பட்ட செல்வாக்கு யாருக்குக் கிடைக்கும் என்று இந்தப் புதுச் சந்தர்ப்பம் நமக்குக் காட்டுகிறது. "நீங்கள் போய்க் கனி

கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களைத் தெரிந்துகொண்டு ஏற்படுத்தினேன்" என்று நமது உபாத்தியாயர் சொல்லுகிறார். எந்தப் பிரயோஜனம் வாய்ப்பதற்கு? கனி கொடுக்கிற "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பதற்கு." இது அவர் இதற்குமுன் "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்" என்னும் சொல்லால் உரைத்ததையே இப்போது அதிகத் தெளிவும் விரிவுமாய் உரைத்ததொழிய வேறல்ல. "கனி கொடுப்பது." "அதிக கனி கொடுப்பது." "வெகு கனி கொடுப்பது." இதுவே நாம் அவரில் நிலைத்திருப்பதற்கு வரும் பலனென்று அவர் முன்னேயே சொல்லியிருக்கிறார். இதினால் தேவனுக்கு மகிமையும் வரும், நமக்கு கிறிஸ்துவின் சீஷருக்குரிய அடையாளமுமிருக்கும். ஒருவன் நிலைத்திருக்கிற திரளான கனி கொடுப்பதினால் அவன் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது உண்மைதானென்பது யாவருக்கும் பிரத்தியக்ஷமாய் விளங்கும். இப்படிப்பட்ட உண்மையான நிலைத்திருக்கை எவனுக்கு உண்டோ அவனுக்குக் கேட்டதெல்லாம் கிடைக்கும்வண்ணம் ஜெபிக்கிற தகுதியுடைமையும் உண்டு என்று அவர் சொல்வது ஆச்சரியமல்ல. நமக்கு நியமிக்கப்பட்ட வேலையைச் சரிவரச் செய்வதற்கு நம்மை ஒப்புவிப்பதே நமது ஜெபம் பலிப்பதற்கு வழி; அதுவே கிறிஸ்து சொல்லியிருக்கிற ஆச்சரியமான ஜெப வாக்குத்தத்தங்கள் தரத்தக்க நன்மைகளையெல்லாம் நமக்குத் திறந்துவிடுகிற திறவுகோல்.

இப்படிச் சொல்வது இலவசமான கிருபையைப்பற்றிய திருவசனப் போதகத்திற்கு விரோதம் என்று சில கிறிஸ்தவர்கள் அஞ்சுவார்கள். இலவசமான கிருபையைப்பற்றிய போதகத்தைச் சரியாய் அறிந்துகொண்டால், அந்தப் போதகத்திற்கு இது உள்ளபடிக்கு விரோதமேயல்ல. மேலும், வாழ்த்துதற்குரிய திருவசனத்தில் வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிற சுருதிவாக்குகளுக்கும் இது மாறுபடாது. பரி. யோவான் சொல்வதைக் கேள் (1 யோவா. 3. 18, 22.): "கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்; இதினாலே நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்ச



யப்படுத்திக்கொள்ளலாம். அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினாலே நாம் வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்." அடிக்கடி எடுத்துச் சொல்லப்படுகிற யாக்கோபின் வார்த்தைகளைக் கேள்: "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." அதாவது, தேவாவியானவர் யாரை நீதிமானென்று சொல்லுகிறாரோ அவன் செய்கிற வேண்டுதல் பெலனுள்ளதாயிருக்கிறது. அவர் சொல்லுகிறதாவது: "நீதியைச் செய்கிறவன், அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோல தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்." அநேக சங்கீதங்களில் பேசுகிற மனிதருடைய உள்ளங்களின் நிலையைப் பார். அவர்களுடைய உள்ளங்களில் மனவுண்மையும் நீதியும் இருந்தது அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருந்தது. 18-ம் சங்கீதத்தில் தாவீது சொல்லுகிறதாவது:—"கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.....அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன். ஆகையால், கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பலனளித்தார்" (சங். 18. 20–26. ஒத்துப்பார்: சங். 7. 3–5; 15. 1, 2; 17. 3, 6; 26. 1–6; 119. 121, 153.). இங்கே வசனித்திருப்பவைகளை யெடுத்து புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்திலே வைத்துச் செம்மையாய்ச் சிந்தித்துப் பார்த்தால், இரட்சகர் மொழிந்த விடைபெற்று மொழிகளின் வெளிப்படையான உபதேசத்துடன் அவைகள் முழுமையும் ஒத்துப் பொருந்தியிருப்பது தெரியும்: "நீங்கள் என் கற்பனைகளைக் கைக்கொண்டால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்," "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்." "நீங்கள் என் நாமத்திலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கு நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்கிற திருவாய்மொழிக்குக் கருத்து எழுத்தால் உள்ளபடிக்கே கொள்ளவேண்டும்.

இரட்சகர் இங்கே நமக்கு உபதேசிப்பதின் மர்மத்தை உள்ளிட்டறிந்து பார்ப்போம். சுவிசேஷ கிறிஸ்தவர்களுக்குள் ஒரு தீமை ஊடாடுகிறது. அதென்னவெனில், ஜெபத்திலும் விசுவாசத்திலும் நாமடைந்துகொள்ளக்கூடிய ஞான அநுபவங்களை மாத்திரம் பார்ப்பது. இந்த ஒருபக்கத்தைமாத்திரமே மட்டுக்கு மிஞ்சிப் பார்த்துக்கொண்டிருப்பது சரியல்ல. நாம் பார்க்கவேண்டிய வேறொரு பக்கமும் இருக்கிறது. இந்தப் பக்கத்தையே திருவசனம் நமதுகண்ணுக்கு முக்கியமாய் எடுத்துக் காட்டுகிறது. அதென்னவெனில், ஞான நன்மைகள் நமக்கு வேண்டுமானால் அதற்குக் கீழ்ப்படிதல் ஒன்றே வழியென்பது. நம்மைச் சிருஷ்டித்தவரும் மீட்டவருமாகிய தேவனாகிய அளவில்லாதவருடன் நாம் செய்யும் விவகாரத்தில் நாம் அநுபவ பூர்வமாயறிந்து அநுஷ்டிக்கவேண்டியது எதுவெனில், நாம் அவருக்கு அதீனமாயிருக்கவேண்டும் என்கிற சிந்தை. இதுவே நம்முள்ளத்தில் முந்தி முளைத்து அதை ஆட்கொண்டிருக்கவேண்டும். அவருடைய ஆளுகை, அவருடைய மகிமை, அவருடைய சித்தம், அவருடைய மனப்பிரியம், இவற்றிற்கு நம்மைக் கையளித்துவிடுதலே ஜீவகாலமெல்லாம் நமக்கு முதல் நினைவும் உச்சிநினைவுமாயிருக்கவேண்டும். அவருடைய தயவை எப்படிச் சம்பாதிக்கலாம் எப்படி அநுபவிக்கலாம் என்பது நாம் கேட்கவேண்டிய கேள்வியல்ல. ஏனெனில், இதில் தற்பொழிவை நாடும் நாட்டமே இன்னும் மிகுந்திருக்கும். அவருக்கு மகிமையும் பிரியமும் உண்டாகப் பிழைப்பது எப்படி என்பதே நாம் கேட்கவேண்டிய கேள்வி. இந்த ஒரு இலக்கே நமக்கு எப்போதும் இருக்கவேண்டியது. இதுவே அவர் நியாயமாய் நம்மிடத்தில் கேட்கிற கடமை. இந்தக் கடமையை நாம் அவருக்குச் செலுத்துவதற்கு அவர் சொல்லற்கரிய சுதந்தரமுடையவர். பூரண நற்சித்தமாகிய அவருடைய திருவருட்சித்தத்திற்கு எள்ளளவும் கோணாமல் இணங்கி, அவரது திருவுளம் கேட்டுப் பிழைப்பதே தேவலோகத்தை ஆனந்தமும் அழகும் பொருந்திய உலகமாக்குகிறது. திருத்தொண்டு செய்வதும் திருவுளம் கேட்பதுமே தேவகுமாரன் பூலோகவாசியாயிருந்தபோது அவருள்ளத்தி



விருந்த உச்சிநினைவு. இளைப்பாறுதல், வெளிச்சம், சந்தோஷம், பலம், இப்பேர்ப்பட்ட நன்மைகளைவிட அதிகமாய்த் திருத்தொண்டு செய்வதும் திருவுளம் கேட்பதுமே நாம் நமக்கு வைத்துக்கொள்ளுகிற இலக்கும் நாட்டமுமாயிருக்க வேண்டும். இந்த இரண்டும் நமக்கு இருந்தால், நமக்கு அவர் தர வைத்திருக்கிற பெரிய நன்மைகளெல்லாம் இவை மூலியத்திலேயே கிடைத்துவிடும்.

நமது உபாத்தியாயர் இந்த 15-ம் அதிகாரத்தில் நாம் அவரில் நிலைத்திருப்பதைப்பற்றிப் பேசினபோது மாத்திரமல்ல, 14-ம் அதிகாரத்தில் திரியேகர் வந்து நமக்குள் வாசஞ்செய்வதைப்பற்றிப் பேசின சமயத்திலும், நாம் திருவுளம் கேட்டுத் திருத்தொண்டு செய்வதை முக்கியப்படுத்தியே பேசுகிறார். 14-ம் அதிகாரம் 15-ம் வசனத்தில் அவரதைப் பற்றிச் சொல்வது வருமாறு: "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள், அப்பொழுது பிதா ஆவியானவரை உங்களுக்குத் தந்தருளுவார்." அப்பால் 21-ம் வசனத்தில்: "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்;" அவனுக்கே என் பிதாவின் விசேஷித்த அன்பு கிடைக்கும், அவனுக்கே நானும் என்னை விசேஷித்து வெளிப்படுத்துவேன் என்று சொல்லி, பிறகு 23-ம் வசனத்தில் அதியுன்னதமும் அருமையுமான வாக்குத்தத்தங்களில் ஒன்றை விளம்பரஞ் செய்கிறார்: அதாவது, "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், என் பிதாவும் நானும் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." தேவாவியானவர் வந்து நமக்குள் வாசம்பண்ணுவதற்கும், அவர் நமக்குள் குமாரனை வெளிப்படுத்துவதற்கும், பிறகு அவர் நம்மைப் பிதா குடியிருக்கும் கோவிலாகப் பக்குவம்பண்ணுவதற்கும் கீழ்ப்படிதலே வழியென்பதை இதிலும் தெளிவாய்ச் சொல்லமுடியுமா? திரியேக தேவன் வந்து உள்ளத்தில் வாசஞ்செய்யப் பெறும் உரிமை கீழ்ப்படிவோருக்கே கிடைக்கும். கீழ்ப்படிதலும் விசுவாசமும் ஓரே செயலாயிருந்தும் இரண்டு செயல்கள்போல் தோன்றுவது வெறும் தோற்றமேதவிர வேறல்ல.

அந்தச் செயல் என்னவெனில், ஒருவன் தன்னை தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் ஆதீனப்படுத்திவிடுதல். நமக்கு விசுவாசம் இருந்தால் அது கீழ்ப்படிவதற்கு நமக்குச் சக்தி தரும்; அவ்வாறே நமக்குக் கீழ்ப்படிதல் இருந்தால் அது விசுவாசிப்பதற்குப் பெலன்தரும். விசுவாசம் கிரியைகளினால் முற்றுவிக்கப்படும். பெரிய விசுவாசம் வேண்டுமென்று கேட்பதற்கு நாம் அந்த விசுவாசம் கிடைக்கத்தகுந்த இடத்தில் போயிருக்கவேண்டும். அந்த இடத்தில்மாத்திரமே அந்த விசுவாசம் கிடைக்கும். நாம் அந்த இடத்தில் போயிராமையால் அடிக்கடி நாம் என்னபாடுபட்டும் நமக்குத் தேவையான அளவு விசுவாசிக்க நம்மாலாகாமலிருந்தது. தேவனுக்குக் கனம் உண்டாகும்பொருட்டும் அவரிஷ்டம் நிறைவேறும்பொருட்டும் நம்மை அவர் [illegible]படுத்திவிடுதலே அந்த இடம். தேவனுக்கும் அவரிஷ்டத்துக்கும் தன்னைச் சுவாதீனப்படுத்திவிட்டவனுக்கே அவர் தனக்குச் சொன்னவாறு செய்யவேண்டுமென்று கேட்கத் துணிவு பிறக்கும்.

ஜெபப்பாடசாலையில் இவ்விஷயத்தைப் பயபக்தியாய் அநுசரிக்கிறவர்களுக்கு அது நடைபெறும்விதம் வெகு எளிது. "நான் உங்களைத் தெரிந்துகொண்டு ஏற்படுத்தினேன்" என்று நமது உபாத்தியாயர் சொல்லுகிறார். எதற்கு? "நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும்" வெகு கனி கொடுக்கும் படிக்கும் (5-ம், 8-ம் வச.), "உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும்." அதாவது, உங்கள் ஜீவியம் ஓயாக் கனிகள் நிறைந்து ஓயாச் செழிப்புள்ள ஜீவியமாயிருக்கும்படிக்கு. அதினால் வரும் லாபமென்ன? நீங்கள் இவ்வாறு என்னில் கனிதரும் கிளைகளாய் நிலைத்திருந்துகொண்டு "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பதே" அதினால் விளையும் லாபம். கனி கொடுக்கச்செய்கிற கிருபை அதிகமாய் வேண்டுமென்று விரும்பி அது நமக்குக் கிடைப்பதற்கு எத்தனையோதரம் வருந்தி ஜெபித்தோம்! ஆயினும் நாம் கேட்டது கிடைக்காமல் இதேனென்று ஆச்சரியப்பட்டோம்! நமது உபாத்தியாயர் சொன்ன வரிசையைப் புரட்டி மாற்றி வைத்துக்கொண்டதே இதற்குக் காரணம். நமக்கு வருத்திருக்கிற வேலையை சோவும்



பாடமில்லாமல், தன்னை வெறுக்கும் வெறுப்பில்லாமல், எளி
தாய்ச் செய்யும்பொருட்டு, அதற்கு வேண்டிய சந்தோஷமும்
ஆறுதலும் பெலனும் முதல் முதலிலேயே நமக்கு அகப்
படவேண்டுமென்று விரும்பினோம். அவரோ, நாம் அவர்
சொல்லை நம்பி விசுவாசித்து, நமக்கு பலம் உண்டா இல்லையா
என்று கேளாமலும், நமக்கு இட்ட வேலை சங்கடமானதா
சுளுவானதா என்று பாராமலும், விசுவாசித்து இருக்கவேண்
டிய கீழ்ப்படிதலுடனே அவர் சொற்படி செய்யவேண்டு
மென்று விரும்பினார். கனிதருதல் என்னும் பாதைவழியே
நடந்திருந்தோமானால், ஜெபம் பலிக்குதல் என்னும் இடத்
திற்கு வந்து சேர்ந்து ஜெப வல்லமையைப் பெற்றிருந்தி
ருப்போம். தேவனுடைய வல்லமையைக் கைக்கு மெய்யாய்க்
காண, கீழ்ப்படிதல் ஒன்றே வழி. இதினால், விசுவாசத்திற்குப்
பதிலாய்க் கீழ்ப்படிதல் இருக்கவேண்டும் என்றாவது, விசு
வாசத்திற்குள்ள குறைவுகளை நிவிர்த்திக்கக் கீழ்ப்படிதல்
இருக்கவேண்டும் என்றாவது, நான் சொல்லுகிறதேயில்லை;
விசுவாசத்திற்குக் கீழ்ப்படிதல் இருக்கவேண்டும் என்கிறேன்.
நமது தேவன் நமக்குக் கொடுக்க வைத்திருக்கிற நன்மைகளை
யெல்லாம் விசுவாசத்திற்குள்ள கீழ்ப்படிதல் போய் வாங்கிக்
கொள்ளும். தேவாவியில் முழுகுதல் (14. 16.); குமார
னுடைய வெளிப்படையைப் பெறுதல் (14. 21.), பிதா வந்து
உள்ளத்தில் திருக்கோயில் கொண்டிருத்தல் (14. 23.),
குமாரனுடைய அன்பில் நிலைத்திருத்தல் (15. 10.), குமார
னுடைய பரிசுத்த சிநேக உறவை யடைந்திருத்தல் (15. 14.),
தப்பாமல் பலிக்கிற ஜெபம் செய்கிற வல்லமை (15. 16.),
இவையெல்லாம் யாருக்குக் கிடைக்குமென்றால், கீழ்ப்படி
கிறவர்களுக்கே கிடைக்கும்.

இனி இங்கே நாம் படித்த பாடங்களை மனதில் வைப்போ
மாக. பலிக்கிற ஜெபம் செய்ய நமது விசுவாசம் வலியற்றிருந்
ததற்கு முக்கிய காரணம் இப்போது நமக்குத் தெரியும்.
நமது ஜீவியம் இருக்கவேண்டிய மாதிரி இருந்ததில்லை. முன்
பின் பாராமல் கீழ்ப்படிந்து கனிதருதலில் நிலைத்திருக்கை
அதில் விளங்கின முக்கியகுறியாயிருந்ததில்லை. இப்பூ
வுலகை ஆளும் ஆளுகையில் எவர்களுடைய மன்றாட்டு

வந்தாலொழிய மற்றப்படி தேவன் ஏதேனும் ஒன்றைச் செய்
யாரோ, எவர்களுடைய வாக்கு தம்மிடத்தில் செல்லும்படி
அவர் அதிகாரங் கொடுத்திருக்கிறாரோ, எவர்களுடைய
சித்தத்தின் வழியேபோய் வேலைசெய்ய அவர் தம்முடைய
சித்தத்தை ஒப்புக்கொடுக்கிறாரோ, அவர்கள் தாங்களே கீழ்ப்
படிதலை முந்திக் கரைகாணக் கற்றவர்களா யிருக்கவேண்டும்;
அவர்கள் தேவன்மேல் வைத்திருக்கிற இராஜபக்தியும் அவ
ருக்குக் கீழ்ப்படிகிற கீழ்ப்படிதலும் எவ்வித சந்தேகமுமற
ஜொலிக்கவேண்டும். இது தேவன் ஜெபத்திற்கு ஏற்படுத்தி
யிருக்கிற ஏற்பாடு. இந்த ஏற்பாடு நியாயந்தான் என்று
நமது முழு உள்ளமும் ஒத்துக்கொள்ளும். பலிக்கிற ஜெபம்
செய்வதற்குக் கீழ்ப்படிந்து கனிதருதல் என்னும் பாட்டை
வழியே ஒருவன் நடக்கவேண்டும் என்பது தேவன் விதித்
திருக்கிற விதி. இந்த விதி சரிதானென்று நமது முழுப்
புத்தியும் ஒப்பும். நமது ஜீவியத்திற்கு இந்த அடையாளம்
கொஞ்சமும் இருந்ததில்லை என்று நாம் வெட்கத்துடன்
அறிக்கையிடுகிறோம்.

நமது இரட்சகர் நமக்குக் கொடுக்கும் ஊழியத்தை ஒப்
புக்கொள்ளச் சம்மதிப்போமாக. அவர் நமக்கு எஜமான்,
நாம் அவருக்கு ஊழியக்காரர்; அவருக்கும் நமக்குமுள்ள
இந்தச் சம்பந்தத்தைத் திட்டமா யறிந்துகொள்வோமாக.
ஒவ்வொரு புதுநாள் பிறக்கும்போது, அதில் நமக்கு வரும்
ஆறுதலென்ன, சந்தோஷமென்ன, நன்மை என்ன, என்று
முன்போல். இனி முந்தி நினையாதிருப்போமாக. நான் எஜ
மானுக்குரியவன் என்னும் நினைப்பே நமக்குள் முந்தி எழும்
புவதாக. எந்த நேரத்திலும் எதுசெய்தாலும் நான் அவர்
கைப்பொருள், நான் அவர் கையாயுதம், நான் அவர் மனப்
பிரிய மறிந்து செய்யவேண்டியவன், என்பதை மனதில்
வைத்துச் செய்யவேண்டும். நான் கிறிஸ்துவின் ஊழியக்
காரன், நான் கிறிஸ்துவின் அடிமை, என்கிற சிந்தையே
என்னில் குடிகொண்டிருக்கவேண்டும். அவர் நம்மைப்
பார்த்து "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்
லுகிறதில்லை; நான் உங்களைச் சிநேகிதர் என்கிறேன்" என்று
சொல்லும்போது, "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும்



நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" என்
கிற இலக்ஷணம் நமக்கு இருக்கும்படி பார்த்துக்கொள்ள
வேண்டும்.

அவருக்குக் கிளைகளாயிருக்கிற நம்மைப் பார்த்து அவர்
கொடுக்கிற கட்டளை ஒன்றேயொன்று; அது நாம் கனிகொ
டுக்கவேண்டும் என்பது. பிறருக்கு நன்மை செய்வதற்கு,
அதாவது, இயேசுவுக்குள் எப்பேர்ப்பட்ட ஜீவன், எப்போர்ப்
பட்ட அன்பு இருக்கிறது என்று பிறர் அறியச் செய்வ
தற்கு, பிழைப்போமாக. இயேசுகிறிஸ்து நம்மை எதற்குத்
தெரிந்துகொண்டார், அவர் நம்மை எதற்குக் குறித்துவைத்
தாரென்றால், கனிகொடுப்பதற்கு. விசுவாசமும் கீழ்ப்படிதலு
முள்ளவர்களாய் நாம் நமது முழு ஜீவியத்தையும் இதற்கே
கொடுப்போமாக. அவர் நம்மை இதற்காகவே தெரிந்து
கொண்டார் என்பதையும், இதற்காக நமக்கு எந்தெந்த இலக்ஷ
ணங்கள் இருக்கவேண்டும் என்கிறாரோ அதையெல்லாம்
அவரே நமக்கு எப்போதும் தருவார் என்பதையும் மனதில்
வைத்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபிரகாரம் செய்து
வருவோமானால், நிலைத்திருக்கிற திரள் கனிகொடுக்கிற ஜீவி
யம் நமக்குத் தப்பாமல் கிடைக்கும் என்கிற நிச்சயம் நம்மில்
வரவர முளைந்து உறுதிப்படும். அப்போது, பலிக்கிற ஜெபத்
திற்குக் கனி கொடுத்தலைத்தவிர வேறு வழி ஏனில்லை என்
பதை அறிந்துகொள்வோம். தேவனுடைய கிறிஸ்துவாகிய
தன் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தமே
தன் சித்தமாகக்கொண்டு நடக்கிறவன் கேட்டுக்கொள்வது
எதுவோ அதையே பிதா செய்வார்; "அவருடைய கற்பனை
களை நாம் கைக்கொண்டு, அவருக்கு முன்பாகப் பிரியமான
வைகளைச் செய்கிறபடியினால், நாம் வேண்டிக்கொள்ளுகிறது
எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்."

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஸ்தோத்திரிக்கப்பட்ட உபாத்தியாயரே! தேவசித்தமே
என் சித்தமாக ஏற்றுக்கொண்டு, அதையே நான் செய்யவேண்டு
மென்று தேவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். இந்த கட்
டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தால்மாத்திரமே அவர் அருளின்

வாக்குத்தத்தங்களில் தெரிவித்திருக்கிற அவருடைய சித்தம் என் கைக்கு அகப்படும். அதினால் மாத்திரமே அவைகளை நான் பண்ணும் ஜெபங்களில் பலிக்கப் பண்ணிக்கொள்ளலாம். இது இப்போது எனக்கு அரைகுறையாய்மாத்திரம் விளங்குகிறது. இதை நான் முற்றும் அறிந்துகொள்ளப்பண்ணும். கனி கொடுத்தல்வழியாகவே திராட்சக்கொடிச்சுச் செடியிலே பூரணமாய் வளரும் வளர்த்தி கிடைக்கும். அந்த வழியாகவே நாங்கள் பூரணமாய் உம்முடன் ஒன்றாகி நாங்கள் விரும்புகிறதைக் கேட்டு அடையப் பெறுவோம் என்பதை எனக்குப் போதியும்.

பூரண நற்சித்தமுடைமை தேவனுக்கு இருக்கிற உச்சி மகிமை. இந்த உச்சி மகிமையில் அவருடன் ஒன்றாகுதல் அவருக்குக் கீழ்ப்படிவதினால் எங்களுக்குக் கிடைக்கும். ஆதலால், தேவனுக்குக் கீழ்ப்படிதல் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய சிலாக்கியங்களிலெல்லாம் பெரிய சிலாக்கியம். இது பரத்தின் சேனைகளுக்கெல்லாம் தெரியும். இது குமாரனாகிய நீர் புவியில் வசித்தகாலத்தில் உமக்குத் தெரியும். இது இவ்வுலகில் உம்மை மகிமைப்படுத்தின எல்லா விசுவாசிகளுக்கும் தெரியும். ஆண்டவரே, இதை எங்களுக்கும் தெரியப்பண்ண உம்மை மன்றாடுகிறோம். உமது கற்பனைகளைக் கைக்கொண்டு உமது சித்தத்திற்குப் பொருந்தினபடி கனி கொடுப்பதினால் எங்களுடைய ஞானச்சுபாவம் பூரணவளர்த்தியடைந்து, தான் கேட்பதையெல்லாம் வாங்கிக்கொள்ள வல்லமையுடையதாகிற விதத்தை எங்களுக்கு விளக்கும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஆ, கர்த்தராகிய இயேசுவே! உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தும். உம்மையும் உம்முடைய வார்த்தைகளையும் முழுமையும் நம்பிக் கீழ்ப்படிகிற எல்லாருக்கும் நீர் அருளியிருக்கிற இந்த ஆச்சரியமான வாக்குகளை தினஅநுபவத்தில் சித்திக்கச் செய்வது உண்மையாகவே உமது உள்ளக்கருத்தாயிருப்பதையும் அப்படிச் செய்வதற்கு உமக்கு வல்லமையிருப்பதையும் நாங்கள் காணப்பண்ணும். ஆமென்.



# இருபத்துநான்காம் பாடம்.

## 'என் நாமத்தினாலே'

அல்லது,

## எல்லாம் வெல்லுகிற நியாயம்.

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, அதை நான் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார். மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்போது பெற்றுக்கொள்வீர்கள். அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள்." (யோவா. 14. 13, 14; 15. 16; 16. 23, 24, 26.)

'என் நாமத்தினால்' என்கிற சொல்லை இயேசு இதுவரையில் சொன்னதுமில்லை, இயேசுவின் நாமத்தினால் எதையும் சீஷர்கள் இதுவரையில் கேட்டதுமில்லை. "என் நாமத்தினால் கூடியிருந்தால்" என்றபோது ஒருவிசை அவர் அந்த வாசகத்தைச் சொல்லியிருக்கிறார். ஆனால், கடைசியாய் விடைபெற்றுப் பேச்சுப் பேசின சமயத்தில் அவர் அதை ஓயாமல் எடுத்தெடுத்து வழங்குகிறார். "நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ," "நீங்கள் எது கேட்டாலும்," "உங்களுக்குப் பிரியமானது எதுவோ," இப்பேர்ப்பட்ட வரைகளுக்குப் பிரியமானது எதுவோ," இப்பேர்ப்பட்ட வரையில்லா வாக்குகளை யொட்டி அவர் அப்படிப் பேசினதைப் பார்த்தால், நாம் சொல்லவேண்டிய ஒரே நியாயம் அவர் நாமமே, அது எல்லாவற்றிற்கும் போதுமான நியாயம், என்று அவர்களுக்கும் நமக்கும் அதினால் உணர்த்தினார் என்று தெரியும். நமது ஜெபத்திற்கு இருக்கிற வல்லமையும், கிடைக்

கிற உத்தரவும் நாமந்த நாமத்தைச் சரியாய் உபயோகிப்பதற்குத் தக்கபடியிருக்கும்.

ஒருவனுடைய நாமம் என்பது என்ன? அது அவனை நமது ஞாபகத்திற்கு முன் கொண்டுவந்து, நிறுத்தி, அவன் இன்னான் என்று நமக்கு அறிவூட்ட உதவும் சொல். ஒருவன் பெயரை வாயால் சொல்லும்போதும், காதால் கேட்கும்போதும் அவனுடைய முழு உருவம், அவனைக் குறித்து என் காதில் விழுந்திருக்கிற செய்திகள், என் மனதில் அவனைக் குறித்து உண்டாயிருக்கிற எண்ணம், இவையெல்லாம் என் ஞாபகத்திலே உதிக்கும். ஒரு அரசனுடைய நாமத்தை நினைத்த மாத்திரத்தில் அவனுக்குள்ள மகிமை, அவனுக்கிருக்கிற வல்லமை, அவனாளுகிற தேசம், இவையெல்லாம் நம் மனதிலே வரும். அவ்வாறே, தேவனுக்கிருக்கிற ஒவ்வொரு நாமமும் காணரிய பரம்பொருளாகிய அவருடைய மகிமைகளில் ஏதாவது ஒன்றை உருப்படுத்தி நமக்குக் காட்டும். கிறிஸ்துவின் நாமம் என்பது அவர் நமது மத்தியஸ்தராய் ஏற்பட்டுச் செய்ததையும் இன்னம் செய்து வருவதையும் அவருக்குள்ள மற்றக் குணாதிசயங்களையும் குறிக்கும்.

ஒருவன் நாமத்தில் ஒருவன் ஒன்றைச் செய்வது என்றால் அர்த்தமென்ன? ஒருவன் இன்னொருவனுக்குப் பதிலியாயும் பிரதிநிதியாயும் ஏற்பட்டு அவன் தனக்குக் கொடுத்திருக்கிற சம்மதத்தையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டு வருதல். இப்படி ஒருவன் இன்னொருவனுடைய நாமத்தில் வரும்போது இருவருக்கும் லாபநஷ்டம் பொது என்பது தானே தெரியும். தன் கனத்தையும் தன் லாப நஷ்டங்களையும் தன் கூட்டாளி தன்னைப்போலவே பழுதுவராமல் பேணுவான் என்று ஒருவன் நிச்சயமடைந்திருந்தாலொழிய தன் நாமத்தை அவன் தாராளமாய் உபயோகித்துக்கொள்ளச் சம்மதியான்.

இயேசு தமது நாமத்தைத் தடையற உபயோகித்துக் கொள்ள நமக்கு அதிகாரங்கொடுத்து நாம் அந்த நாமத்தினால் எதைக் கேட்டாலும் பெற்றுக்கொள்வோம் என்றால், அதற்கு அர்த்தமென்ன? ஏதோ ஒரு விசேஷித்த அவசரத்தில் தன்



நாமத்திலே வந்து ஒன்றைக் கேட்க ஒருவன் இன்னொருவனுக்கு உத்தரவுகொடுக்கிற உலக வழக்கம் இதை விளக்கக் கொஞ்சமேனும் உதவாது. ஏனெனில், இயேசு தமது எல்லாச் சீஷருக்கும், எல்லாக் காலத்திலும், எல்லா விருப்பங்களுக்கும் தமது நாமத்தைத் தடையில்லாமல் உபயோகித்துக்கொள்ள வரையறுக்காமல் பொது உத்தரவு கொடுக்கிறார். தமது லாப நஷ்டங்களும் தமது கனமும் நமது கையில் கெடாமல் பத்திரமாயிருக்கும் என்று அறிந்தாலொழிய அவர் இப்படி நமக்கு அதிகாரம் கொடுக்க முடியாது. தன் பெயரைத் தாராளமாய் உபயோகித்துக்கொள்ள ஒருவன் இன்னொருவனுக்கு உத்தரவு கொடுக்கும்போது, அது அவனுக்கு இவனிடத்தில் அளவற்ற நம்பிக்கை உண்டு என்பதையும், அவனுக்கும் இவனுக்கும் நெருங்கின நேசம் இருக்கிறது என்பதையும் காட்டும். இப்படி ஒருவன் இன்னொருவனை நம்பித் தன் பெயரைக் கையளிக்கும்போது, தான் விலகியிருந்துகொண்டு அவன் தன் காரியத்தைச் செய்ய விடுவான். அந்தப் பெயரைக் கையேற்று வாங்கினவனோ தன் சொந்தப் பெயரைக் கவ்வைக்கு உதவாது என்று விட்டுவிடுவான். இன்னொருவனுடைய நாமத்தில் நான் போகும்போது நான் என்னை நிராகரித்துவிடுகிறேன், அதாவது, நான் என் நாமத்தையும் என் கீர்த்தியையும் விட்டுவிட்டு, அவன் நாமத்தையும் அவன் பிரதாபத்தையும் எடுத்துக்கொள்ளுகிறேன்.

இப்படி ஒருவன் இன்னொருவனுடைய நாமத்தை வழங்கும் வழக்கம் * நைதீக ஒருமைக்கு உரியதாயிருக்கலாம். ஒரு வியாபாரி தன் தேசத்தையும் வர்த்தகத்தையும் சில காலம் விட்டுப் பரதேசம் போக நேர்ந்தால் தன் முக்கிய காரியஸ்தனுக்கு அதிகாரப்பத்திரம் கொடுத்துப் போவான். அதை வைத்துக்கொண்டு அவன் அந்த வர்த்தகன் நாமத்தினால் ஆயிரக் கணக்கான ரூபாய்களை வாங்கலாம். அப்படி வாங்கும்போது, அவன் அந்தப் பணத்தைத் தனக்

* நைதீகம் என்பது நீதிசம்பந்தமானது. தேசத்தில் வழங்கும் நீதிமுறைக்குப் பொருந்த ஒருவன் பெயரை இன்னொருவன் வழங்குதல் நைதீக ஒருமையாம். (Legal union.)

காக அல்ல, எஜமானுடைய வர்த்தகம் நஷ்டப்படாதிருக்கும்பொருட்டே வாங்குவான். காரியஸ்தன் லாபநஷ்டங்களைத் தன்னுடையதாய் எண்ணி வர்த்தகம் கெடாமல் பார்த்துக்கொள்வான் என்பதைச் சந்தேகமற அறிந்து, அவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறதினாலேயே வியாபாரி தன் பெயரையும் பொருளையும் அவன் கையில் கொடுக்கத் துணிகிறான். கர்த்தராகிய இயேசு பரலோகத்திற்குப் போனபோது, அவர் தமது வேலையை, அதாவது புவியிலிருக்கிற தமது இராஜ்யத்தைப் பரிபாலிக்கிற வேலையைத் தமது ஊழியர் கையில் விட்டுப்போனார். அவர்கள் தமது காரியத்தைச் சரிவர நடத்துவதற்குத் தேவையானதையெல்லாம் வாங்கிக்கொள்ளும்பொருட்டுத் தமது நாமத்தையும் அவர்கள் கையில் கொடுப்பது அவருக்கு அவசியமாயிருந்தது. அவர்கள் தங்கள் எஜமானுடைய லாபநஷ்டங்களைத் தங்களுடையதாய் நினைத்து, அவருடைய வேலை வாய்ப்பதற்காகவே உயிர் வாழவேண்டுமென்று நிருணயம்பண்ணி, எவ்வளவுக்குத் தங்களை அதற்கு ஒப்புவிக்கிறார்களோ அவ்வளவுக்கு இயேசுநாமத்தை உபயோகித்துக்கொள்ள அவர்களுக்கு ஞான அதிகாரப்பத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய நாமத்தை உபயோகித்துக்கொள்ளும்போதெல்லாம் நாம் அவருக்குப் பதிலிகளாயிருந்துகொண்டு நமது லாப நஷ்டங்களை அவர் பொறுப்பாய் விட்டுவிட வேண்டுமென்பது சொல்லாமல் தெரியும்.

ஒருவன் இன்னொருவன் நாமத்தை உபயோகித்துக்கொள்ளுதல் ஜீவஒருமைக்கு உரியதாயிருக்கலாம். வியாபாரிக்கும் காரியஸ்தனுக்கும் இருக்கிற ஒருமை கொஞ்சக்காலத்தில் நீங்கக்கூடிய ஒருமை. ஆனால், இரண்டுபேருக்கு உயிர்ப்பொதுமையினால் ஜீவஒருமை இருக்கும்போது அவ்விருவருக்கும் நாம ஒருமையும் இருப்பது அறிவோம். பிள்ளையின் உயிர் பிதாவின் உயிரிலிருந்து பிறந்ததாகையால், பிதாவின் பெயரையே பிள்ளையும் வைத்துக்கொள்ளுகிறான்.*

* இது ஐரோப்பியர் வழக்கம். நூலாசிரியர் ஐரோப்பிய வழக்கத்தை யொட்டி இங்கேயும் இதற்குப் பின்னும் உதாரணங் காட்டுகிறார்.



ஒரு பிதாவுக்கு நல்ல பேரும் சிறந்த யோக்கியமும் இருந்தால், அக்கம்பக்கத்தார் அவன் பிள்ளைகளுக்கு மரியாதை காண்பித்து உதவிபுரிவார்கள். ஆனால், பிதாவின் பெயர்ப்பெருமையே தவிர அவனுடைய குணப்பெருமை பிள்ளைகளுக்கு இல்லாதிருந்தால், பிறர் அவர்களை மதிக்கிற மதிப்புச் சீக்கிரத்திலேயே நீங்கிப்போகும். பெயரும் குணமும், அதாவது, வெளிப்பெயரும் உள் ஆவியும் ஒத்துப் பொருந்தியிருக்கவேண்டும். இப்படியிருந்தால், பிதாவின் சிநேகிதர் பிள்ளைகளை இரட்டிப்பாய் மதிப்பார்கள். முதலில் பெயர்ப்பெருமைநிமித்தமே உண்டான அன்பும் அபிமானமும் குணப்பெருமையினால் நிலைபெற்று வளரும். இயேசுவுக்கும் விசுவாசிக்கும் இவ்வித ஒருமையே இருக்கிறது. "நாமும் அவரும் ஒன்று; அவருக்கும் நமக்கும் ஒரே ஜீவனும் ஒரே ஆவியும் இருக்கிறது. இக்காரணத்தால், நாம் அவர் நாமத்தினால் வரலாம். நாம் அந்த நாமத்தை உபயோகித்து, தேவனிடத்திலும், மனிதரிடத்திலும், பிசாசுக்களிடத்திலும் வல்லமைசெய்கிற சக்தி நமக்கும் அவருக்கும் உள்ள ஞானஜீவ ஒருமையின் அளவுக்குத் தக்கபடி இருக்கும். நமக்கும் அவருக்கும் ஜீவ ஒருமை இருந்தால்மாத்திரம் நாம் அவர் நாமத்தை உபயோகித்துக்கொள்ளலாம். இயேசுவின் பெயரிலேயே இயேசுவின் ஆவி ஒருமித்து இருக்கிறது.*

* "நீங்கள் என் நாமத்தினாலே கேட்பது எதுவோ" என்றால், "என் உள்ளத்தின் இயற்கைக்கு ஒத்துப் பொருந்திக் கேட்பது எதுவோ" என்பது கருத்து. ஏனென்றால்: "தேவனுக்கு உரியதெல்லாம் அதனதன் இயற்கை எதுவோ அதின்படி பெயர்பெறும். நாம் எதாவது ஒரு மன்றாட்டைச் செய்து அதின் கடைசியில் 'இதை இயேசுவின் நாமத்தினால் கேட்கிறேன்' என்று சொல்லிவிட்டால், இயேசுவின் நாமத்தினால் ஜெபித்துவிட்டோம் என்று நினைக்கலாகாது. இயேசுவினுடைய சுபாவ இயற்கைக்கு ஏற்ற பிரகாரம் ஜெபிக்கும்போதுமாத்திரமே நாம் அவர் நாமத்தினால் ஜெபிக்கிறோம். அன்பே அவருடைய சுபாவ இயற்கை. அது தனக்கானதைத் தேடாமல், தேவனுக்குப் பிரியமானதையும் எல்லாச் சிருஷ்டிகளுக்கும் நன்மையானதையும் தேடும். அன்பே நமது இயற்கையாய் இருக்கப்பெற்று ஜெபிக்கும்போது, அது நம்முள்ளத்தில் இருக்கிற இயேசுவின் ஆவியே ஜெபிக்கிறதாயிருக்கும்." (யூகேசியார் இயற்றின புது மனுஷன் என்னும் நூல்.)

ஒருவன் பெயரை இன்னொருவன் உபயோகித்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கிற ஒருமை அன்பு ஒருமையாய் இருக்கலாம். தரித்திர ஜீவனம் செய்துகொண்டிருந்த பெண் சீமானுக்கு வாழ்க்கைப்பட்டால் அவள் இனித் தன் பெயரை விட்டுவிட்டுத் தன் புருஷன் பெயரை எடுத்துக்கொள்ளுகிறாள்.* இனி அவள் தன் புருஷன் பெயரைத் தாராளமாய் வழங்கிக்கொள்ளலாம். பண்டம்பாடிகளை வாங்கும்போது அவள் தன் புருஷன் பெயரைச் சொல்லி வாங்குவாள். அப்படிச் செய்வது தகாது என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். இதேனென்றால், அவள் தன் லாபநஷ்டங்களுக்குக் கரிசனமுள்ளவளாயிருப்பாள் என்பதைப் பூரணமாய் நம்பிப் புருஷன் அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டபடியினாலே, அவர்கள் இருவரும் இனி ஒன்றாயிருக்கிறார்கள். பரம மணவாளனும் இப்படியேதவிர வேறுவிதம் செய்யக்கூடாது. அவர் நம்மை நேசித்துத் தம்மோடொன்றாக்கிக்கொண்டார். அதினால் நாம் அவருடைய நாமத்திற்குச் சொந்தமுடையவர்களாயிருக்கிறோம். இனி அந்த நாமத்தைச் சொல்லி நமக்குத் தேவையானதையெல்லாம் பிதாவையாவது தம்மையாவது கேட்க நமக்கு அதிகாரம் கொடாமலிருக்கலாமா? இயேசுவின் நாமத்திற்குள் பிழைக்க உண்மையாகவே தன்னை யொப்புவித்தவன் தனக்குச் சித்தமானதையெல்லாம் அந்த நாமத்தினால் கேட்டு வாங்குகிற வல்லமை யில்லாமல் இருந்ததேயில்லை. நான் இன்னொருவர் நாமத்தை வாங்கிக்கொள்வது என்ன காட்டும்? நான் என் சுயநாமத்தை விட்டுவிட்டதுமல்லாமல் என் இஷ்டம்போல் எனக்கென்று பிழைக்கிற பிழைப்பையும் விட்டுவிட்டேனென்று காட்டும். ஆகிலும், என் நாமத்திற்குப் பதிலாய் எந்த நாமத்தை வாங்கிக்கொண்டேனோ அந்த நாமத்திற்குள்ளதெல்லாம் எனக்குச் சொந்தமென்றும் காட்டும்.

இயேசுவின் நாமத்தினாலே ஜெபிப்பது ஒரு ஆள் வந்து எஜமானுடைய பெயரைச் சொல்லி ஒன்றைக் கேட்பது

* இதுவும் ஐரோப்பியர் வழக்கம்.



போலவும், குற்றவாளி வந்து பிணையாளி பெயரைக் காட்டி எதுவும் மன்றாடுவதுபோலவும் இருக்கிறது என்று வழக்கமாய் உபதேசிக்கப்படுகிற உபதேசம் மிகவும் பழுதான உபதேசமென்று மேலே சொன்ன திருஷ்டாந்தங்களால் விளங்கும். அப்படி உபதேசிப்பது சரியேயல்ல, இயேசுவின் பெயரை நாம் அப்படிச் சொல்லிக் கேட்கிறதற்கு, பிதா வேறே இயேசு வேறேயாய் இருக்கிறதில்லை. இயேசு பிதாவிடத்திலேயே இருக்கிறார். நாம் யார்பெயரைச் சொல்லிக்கொண்டு வருகிறோமோ அவர் தூரவல்ல பிதாவோடு கூடவே இருக்கிறார். நாம் நேரே இயேசுவை நோக்கி ஜெபிக்கும்போதுகூட இயேசு நாமத்தினாலேதான் ஜெபிக்கவேண்டும். அவர் பெயர் என்பது அவரேயொழிய வேறல்ல. அவர் நாமத்தினாலே கேட்பது என்பது லாபநஷ்டங்களிலும் ஜீவனிலும் அன்பிலும் நாம் அவருடன் முழுமையும் ஒன்றாகி, அவருக்குள்ளும் அவருக்காகவுமே பிழைக்கிறவர்களாயிருந்துகொண்டு கேட்பதாம். என் உள்ளத்திலும் ஜீவியத்திலும் இயேசுவின் நாமம் வேறொன்றிற்கும் இடம்விடாமல் தானே ஆளத் தலைப்படத் தலைப்பட, அந்த நாமத்தினால் கேட்பதெல்லாம் கிடைக்கும் என்கிற நிச்சயம் என் விசுவாசத்திற்கு வந்துவிடும். அந்த நாமமும் துணிந்து கேட்கிற வல்லமையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திராமல் கூடியே இருக்கும். இயேசுவின் நாமம் என் ஜீவியத்தை ஆளுகிற வல்லமையாய் இருக்கத் துவக்கினபின் ஜெபத்தில் அது தேவனிடத்தில் செய்கிற வல்லமை அறியப்படும்.

நமக்கும் அந்த நாமத்திற்குமுள்ள அந்நியோந்நியத்திற்குத் தக்கபடி எல்லாம் நடக்கும் என்பது இனிச் சொல்லவேண்டுவதில்லை. அந்த நாமத்திற்கு என் ஜீவியத்தில் இருக்கிற வல்லமையே என் ஜெபங்களிலும் இருக்கும். இதை நமக்கு விளக்கிக்காட்டுகிற பல வேதவாக்கியங்களுண்டு. "நீங்கள் **எதைச் செய்தாலும்** கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்யுங்கள்" என்று வேதம் நம்மைப் பார்த்துச் சொல்லும்போது அது "நீங்கள் **எதையும்** என் நாமத்தினாலே **கேளுங்கள்**" என்ற சுருதியின் மறுபக்கமே. அவர் நாமத்தினாலே எல்லாவற்றையும் செய்வதும் எல்லாவற்றை

யும் கேட்பதும் தனித்தல்ல கூடியே இருக்கும். "நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தினாலே நடப்போம்" என்கிற திருவசனம் தேவநாமத்தின் வல்லமையே நமது முழு ஜீவியத்தையும் ஆட்கொண்டிருக்கவேண்டும் என்று தெரிவிக்கிறது. அப்போதுமாத்திரமே அது நமது ஜெபத்தில் வல்லமை செய்யும். தமது நாமத்தை நாமெப்படி மதிக்கிறோம் என்பதை அறிய தேவன் நமது உதட்டை அல்ல நமது ஜீவியத்தைப் பார்க்கிறார். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனை ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களையும்" "கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறவர்களையும்" பற்றிப் பேசும்போது நமக்கும் அந்த நாமத்திற்கும் எப்பேர்ப்பட்ட ஐக்கியம் இருக்கவேண்டுமென்று வேதம் நமக்குக் காட்டுகிறது. அந்த நாமம் எனக்குச் சகலத்திற்கும் சகலமாயிருக்கும்போது எனக்குச் சகலத்தையும் தரும். எனக்கு உள்ளதையெல்லாம் நான் அதற்குக் கொடுக்கும்போது தனக்கு உள்ளதையெல்லாம் அது எனக்குத் தரும்.

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ அதை நான் செய்வேன்." இந்த வாக்குத்தத்தத்தை நாம் உள்ளது உள்ளபடிக்கே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இயேசு சொல்லுகிறார். கிறிஸ்தவர்களோ அதற்கு ஒரு எல்லை கட்டி அந்த எல்லைக்குள் அதை அடைத்துவிடுகிறார்கள். ஏனென்றால், மானிடனுக்கு அவ்வளவு சுயாதீனம் கொடுக்கக்கூடாதாம்; மானிடனை நம்பி அவன் கையில் எல்லையில்லாத அவ்வளவு பெரிய வசக்கைக் கொடுத்தால் அதைச் சரியாய்க் கையாட அவனுக்குத் தெரியாதாம். "என் நாமத்தினாலே" என்னும் சொல்லுக்குள்ளேயே அந்த நாமத்தைத் தப்பாய் உபயோகிக்காமல் தடுக்கிறதற்குப் போதுமானது இருக்கிறது. இது நமக்குத் தெரியாதிருந்ததே நாம் அப்படி நினைத்ததற்குக் காரணம். அந்த நாமத்திற்குள்ளேயே இருக்கவும் பிழைக்கவும் பழகினாலன்றி அதை உபயோகித்துக்கொள்ளுகிற சக்தி வராது. அந்தச் சக்தி எவ்வளவு வந்திருக்கிறதோ அவ்வளவுக்குமேல் அதை உபயோகித்துக்கொள்ள எவனாலுமாகாது. அந்த நாமத்தை



மனிதருக்குக் காட்ட எவ்வளவு வல்லமை நமக்கு இருக்கிறதோ அவ்வளவே வல்லமை அதை தேவனுக்குமுன் உபயோகித்துக்கொள்ளவும் நமக்கு இருக்கும். அந்த நாமத்திற்குள்ள அர்த்தத்தையும் அதைச் சரியாய் உபயோகித்துக்கொள்ளுகிற விதத்தையும் நமக்கு உணர்த்த நாம் தேவாவியைப் பார்த்துக் கெஞ்சுவோமாக. தேவாவியின் உதவியினால் மாத்திரமே பரலோகத்திலிருக்கிற நாமங்களுக்கெல்லாம் மேலான அந்த நாமம் நமது உள்ளத்திலும் உயிர் வாழ்க்கையிலும் வந்திருந்து நம்மை ஆட்கொள்ளும்.

இயேசுவின் சீஷரே! இன்று நீங்கள் கற்ற பாடம் உங்கள் உள்ளத்திற்குள் ஆழமாய் இறங்குவதாக. என் நாமத்தினாலே கேளுங்கள், கேட்டதெல்லாம் கிடைக்கும் என்று நமது உபாத்தியாயர் நமக்குச் சொல்லுகிறார். பரலோகம் உங்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கிறது; உங்களைச் சூழ இருக்கிறவர்களுக்கு உபயோகமாக ஆவியுலகத்தின் திரவியங்களும் வல்லமைகளும் உங்கள் பொறுப்பாய் விடப்பட்டிருக்கின்றன. இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கக் கற்போம், வாருங்கள். அவர் அக்காலத்தில் சீஷரைப்பார்த்துச் சொன்னதுபோல் இக்காலத்தில் நம்மைப் பார்த்தும்: "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள்" என்கிறார். இயேசுவின் சீஷரெல்லாரும் தங்களுடைய இராஜரீக ஆசாரிய சிலாக்கியங்களை வியர்த்தமாக்காமல் அவர்களுடைய வசத்தில் விடப்பட்டிருக்கிற வல்லமையைத் தங்கள் உழைப்புக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கும் தாங்கள் செய்கிற வேலைக்கும் பிரயோஜனமாக்கிக்கொள்வார்களாக. கிறிஸ்தவர்களே, நீங்கள் உறக்கத்தை விட்டெழுந்து, உங்களுக்கு அறிவிக்கப்படுகிற செய்தியைச் செவியுற்றுக் கேளுங்கள்: அதென்னவெனில், மற்றப்படி கொடுக்கப்படாதது உங்கள் ஜெபத்திற்குக் கொடுக்கப்படும்; மற்ற ஏதுவும் செய்ய முடியாததை உங்கள் ஜெபம் செய்யும். ஆ விழியுங்கள்! மடிந்துபோகிற உலகத்திற்கு தேவலோகத்தின் திரவியங்களைத் திறந்துவிட இயேசுவின் நாமத்தை உபயோகியுங்கள். நமது இராஜாவுக்கு ஏற்ற ஊழியக்காராயிருந்துகொண்டு அவருடைய

நாமத்தினால் வல்லமை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். "நீங்கள் என் நாமத்தினால் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

போற்றுதற்குரிய ஆண்டவரே! நீர் தரும் ஒவ்வொரு பாடத்திலும் எப்பேர்ப்பட்ட நிறைவும் எப்பேர்ப்பட்ட ஆழமும் இருக்கிறது. ஒவ்வொருநாள் பாடத்தையும் செம்மையாய்க் கற்றுக்கொண்டால் சரியாய் ஜெபிக்கிற வித்தை எனக்குக் கைக்கூடும் என்று என் மனதில் பட்டுக்கொண்டேவந்தது. நாளொன்றுக்கு ஒரு ஜெபம் படித்தாலே போதும் என்றுதான் இன்றைக்கும் எனக்குத் தோன்றுகிறது. ஆண்டவரே! உமது நாமத்தில் ஜெபிக்கிற வித்தையை எனக்குப் போதியும். இயேசு நாமத்திற்குள்ளேயே குடியிருந்து வேலைசெய்யவும் அதற்குள்ளேயே நடமாடவும் பேசவும் எல்லாவற்றையும் செய்யவும் என்னைப் பழக்கி இனி நான் செய்யும் ஜெபம் அந்த இன்பநாமத்திற்குள் இருந்தேயொழிய மற்றப்படி புறப்படாதிருக்கவும் பண்ணும்.

ஆண்டவரே! நாங்கள் உமது நாமத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை நீர் செய்வீர், அதைப் பிதா கொடுப்பார், என்கிற அருமைத் திருவாக்கை உறுதியாய்ப் பிடித்துக் கொள்ள எனக்குப் போதியும். என் நாமத்தினாலே என்று நீர் சொல்லுகிறதிலிருக்கிற ஆச்சரியமான அருமை என் புத்திக்கு விளங்கினது கொஞ்சம்; அதை நான் அநுபவிக்கிறதோ அதிலும் கொஞ்சம். ஆகிலும் அந்தத் திருவாக்கு என் முழு உள்ளத்திலும் நிறைந்து, இயேசுவின் நாமத்தில் எது கேட்டாலும் பலிக்கும் என்கிற நிச்சயத்தை எனக்குள் சந்தேகமறப் பிறப்பிக்குமளவும் அதை ஸ்திரமாய்ப் பிடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆ ஆண்டவரே! உமதாவியானவர் இதை எனக்குப் போதிப்பாராக. "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற தேற்றரவாளன்" என்று நீர் அவரைக்குறித்துச் சொன்னீர். உமது நாமத்தினால் தேவலோகத்திலிருந்து அனுப்பப்படுவதாவது என்ன என்பது அவருக்குத் தெரியும்.



ஆதலால், அந்த நாமத்தின் வல்லமையை உமது ஊழியரிடத்தில் விளங்கப்பண்ணி மேன்மைப்படுத்தவும், உமது நாமம் ஒன்றையே உபயோகித்து உமக்கு மகிமை வருவிக்கவும் அவருக்குத் தெரியும். கர்த்தராகிய இயேசுவே! உமதாவியானவர் எனக்குள் வாசம்பண்ணி என்னை நிரப்புவாராக. அவரே ஆளவும் அவரே நடத்தவும் என்னை முழுமையும் மனப்பூர்வமாய் அவருக்குக் கையளிக்கிறேன். உமது நாமத்திலே உமது ஆவியானவர் ஐக்கியமாயிருக்கிறார்; அவர் மூலமாய் உமது நாமம் என் ஜீவனின் பெலனும் என் ஜெபத்தின் வல்லமையுமாகும். அப்போது, உமது நாமத்தினிமித்தம் எல்லாவற்றையும் விட்டுவிடவும் உமது நாமத்தினாலே மனுஷரோடும் தேவனோடும் பேசவும் அந்த நாமமே எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம் என்று ரூபிக்கவும் எனக்கு வல்லமை யுண்டாகும்.

கர்த்தராகிய இயேசுவே! உமது நாமத்தினால் ஜெபிக்க உமது பரிசுத்தாவியானவரைக் கொண்டு எனக்குக் கற்றுக் கொடும். ஆமென்.

## மேற்கோள்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறதென்றால் என்ன? இரட்சகருடைய பரிந்துபேசுகையில் நம்பிக்கை வைத்து நாம் தேவசந்நிதானத்தில் வந்து பேசுதல் என்னும் பொருள்மாத்திரம் அதற்கு இருக்கிறது என்று நாமெண்ணப்படாது. ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும் என்று சீஷர்கள் இயேசுவைக் கேட்டபோது, அவர் மன்றாட்டுகளை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார். பின்னிட்ட காலத்தில், இயேசு அவர்களைப் பார்த்து: "நீங்கள் இதுவரையில் என் நாமத்தில் எதுவும் கேட்டதில்லை" என்று சொன்னார். தேவாவி வருமட்டும், கர்த்தருடைய ஜெபத்தின் ஏழு மன்றாட்டுகளும் அவர்களுடைய உள்ளங்களில் புதைந்துகிடந்தன என்னலாம். தேவாவி மூலமாய்க் கிறிஸ்து அவர்களுடைய உள்ளங்களில் இறங்கினகாலத்தில் அவர்கள் அந்த மன்றாட்டுகளில் உள்ள நன்மைகளை விரும்பிக் கேட்கத் தலைப்பட்டார்கள். அந்த நன்மைகளைத்தான் நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து பிதாவினிடத்தில் தாம் மன்றாடி கேட்டு நமக்கு வாங்கித் தருகிறார். அவருடைய மன்றாட்டுகளுக்கு எப்போதுமே உத்தரவு கிடைக்கும். கிறிஸ்து கேட்கிறதைக் கொடுக்க

பிதாவுக்கு எப்போதும் பிரியமிருக்கிறது. நாம் செய்யவேண்டிய மாதிரியான மன்றாட்டுகளைச் செய்ய கிறிஸ்துவின் ஆவியே நமக்கு எப்போதும் போதித்து நம்மைத் தூண்டுகிறார். அப்படி நாம் செய்கிற மன்றாட்டுகளைக் கிறிஸ்து வாங்கி, உறுதிப்படுத்தி, பிதாவுக்குச் சொல்லுகிறார். ஆதலால், கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறது என்பதற்கு அர்த்தம் இது: ஜெபத்துக்காக நமக்குத் தேவையான நீதிக்கு கிறிஸ்துவே தஞ்சமென்று நாம் கிறிஸ்துவில் ஒன்றித்திருப்பதும், நமது விருப்பங்கள் வேறு அவருடைய விருப்பங்கள் வேறுதாமல், நம்முள் வாசஞ்செய்கிற தேவாவி மூலமாய்க் கிறிஸ்துவின் விருப்பம்போல நம் விருப்பங்கள் மாறிவிடுவதும்தான். ஆவியிலே வேண்டுதல் செய்கிறது—பிதாவின் சித்தத்தின்படி வேண்டுதல் செய்கிறது—கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுதல் செய்கிறது—இம்மூன்றும் ஒரே அர்த்தம் உள்ள வாசகங்கள். பிதா தாமே நம்மை நேசித்து நம் ஜெபத்தைக் கேட்கப் பிரியமுள்ளவராயிருக்கிறார். அவர் நம்மை நேசிக்கிற நேசத்தினால் தூண்டப்பட்டு இரண்டு பரிந்துபேசுகிறவர்களை நமக்குத் தந்திருக்கிறார்: ஒருவர் பரலோகத்தில் பரிந்துபேசுகிற கிறிஸ்து, இன்னொருவர் நம்முள் பரிந்து பேசுகிற பரிசுத்தாவி.

முதற்பார்வைக்கு, இந்த உரை பிரசித்தியாய் வழக்கப்பெற்றிருக்கிற உரையைவிட நமக்கு ஆறுதல் தருவதில் தாழ்ந்தது எனத் தோன்றும். பிரசித்தியான அந்த உரை என்னவென்றால், கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறது கிறிஸ்துவின் புண்ணியத்தை நம்பிக்கொண்டு ஜெபிக்கிறதே என்று சாதிக்கிற உரைதான். இப்படிப் போதிப்பதில் இருக்கிற குறைவு என்னவென்றால், அது இரட்சகருடைய மன்றாட்டு பிதாவின் சித்தத்துடனும் நம்முள் வசிக்கிற தேவாவியின் ஒத்தாசையுடனும் நாம் செய்கிற ஜெபத்தில் இசைந்து பொருந்தியிருக்கிறதைக் காட்டுகிறதில்லை. இதுவுந்தவிர, அது கிறிஸ்து நமக்காகச் செய்கிற மத்தியஸ்தத்தையும் உள்ளபடி வெளிப்படுத்துகிறதில்லை. ஏனெனில், கிறிஸ்துவின்நிமித்தம் பரிசுத்த பிதா என்னையும் என் ஜெபத்தையும் நோக்கிப் பார்க்கிறது மாத்திரமே அந்த மத்தியஸ்தம் அல்ல; என் மன்றாட்டுகளை கிறிஸ்து வாங்கி தாம் விரும்புகிற தம் மன்றாட்டுகளாக பிதாவுக்குத் தெரிவிக்கிறதுங்கூட அந்த மத்தியஸ்தத்தில் உட்பட்டதுதான். எனக்கு வேண்டிய சகல நன்மைகளையும் அவர் தமது அருமையான இரத்தத்தினாலே வாங்கியிருக்கிறபடியால், அவர் அப்படிக் கேட்கச் சுதந்தரர்.

எல்லா ஜெபத்திற்கும் அவசியமும் தவிர்க்கத்தகாத்துமான ஒரு நிபந்தனை இருக்கிறது. அது என்னவென்றால், நாம் பண்ணுகிற ஜெபத்தை இயேசுவின் நாமத்தில் பண்ணக்கூடிய சக்தி நமக்கு



இருக்கவேண்டும். அவர் நமக்காக விரும்புகிறபிரகாரமும் பிதாவின் சித்தத்திற்குப் பொருந்தினபிரகாரமும் பரிசுத்த ஆவி நமக்குப் போதிக்கிறபிரகாரமும் நமது ஜெபம் இருக்கவேண்டும். நமக்குத் தற்சோதனையும், சுயஜீவிய ஆராய்வும், சுயநயவெறுப்பும் இல்லாவிட்டால், அதாவது சுருக்கமாய்ச் சொன்னால், நமக்கு தேவாவியின் ஒத்தாசையில்லாவிட்டால், இப்படி நாம் கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்க முடியாது." — சபீர் ஆசிரியர் இயற்றின "கர்த்தருடைய ஜெப வியாக்கியானம்."

# இருபத்தைந்தாம் பாடம்.

## 'அந்த நாளிலே'

அல்லது,

## பரிசுத்தஆவியும் ஜெபமும்.

"அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள்: உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில், பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." (யோவா. 16. 23–26.)

"பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்." (யூதா. 20, 21.)

பிள்ளைகளுக்கு, வாலிபருக்கு, பிதாக்களுக்கு என்று பகுத்து, அவரவருக்கு யோவான் சொல்லியிருக்கிற வார்த்தைகளைப் பார்த்தால் (1 யோவா. 2. 12, 14.) கிறிஸ்தவ ஜீவியத்தில் மூன்று பெரிய அநுபவப் பருவங்கள் பெரும்பாலும் இருக்கின்றன என்று நினைக்கலாம். முதலாவது, புதிதாய்

பிறந்த பிள்ளைப்பருவம். இந்தப் பருவத்தில் பாவமன்னிப்புக் கிடைத்ததற்கு நிச்சயமும் சந்தோஷமும் இருக்கும். இரண்டாவது போரிட்டு வளருகிற பருவம். இது பிள்ளைப் பருவத்திலிருந்து பெயர்ந்து முதிர்ச்சிப் பருவத்திற்குப் போகிற வழி. இந்தப் பருவத்தில் போரும் அறிவிலும் பலத்திலும் வளருகிற வளர்த்தியும் இருக்கும். இதிலே வர வர பலசாலிகளாகிற வாலிபர்கள் இருப்பார்கள். தேவவசனம் அவர்களைப் பலசாலிகளாக்கி பொல்லாங்கனை ஜெயிக்கிற ஜெயத்தை அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கும். கடைசியாய், முற்றித்தேறின பருவம். இதிலே நித்திய பரப் பொருளை ஆழ்ந்தறிந்து அவருடன் ஞான உறவாடிக்கொண்டிருக்கிற பிதாக்கள் இருப்பார்கள்.

ஜெபத்தைப்பற்றிக் கிறிஸ்து போதித்ததிலும் ஏறக்குறைய அதுபோன்ற மூன்று பருவங்கள் ஜெபஜீவியத்தில் இருக்கின்றன. மலைப்பிரசங்கத்தில் ஆரம்பப் பருவம் அகப்படும். அதைப்பற்றி அவர் சொன்னதெல்லாம் பிதா என்கிற ஒரே சொல்லுக்குள் அடங்கியிருக்கிறது. “உங்கள் பிதாவை நோக்கி ஜெபியுங்கள், உங்கள் பிதா பார்க்கிறார், உங்கள் பிதா கேட்கிறார், உங்கள் பிதா அறிகிறார், உங்கள் பிதா பலனளிப்பார். பரலோகத்திலிருக்கிற பிதா பூலோகத்திலிருக்கிற எந்தப் பிதாவையும்விட எவ்வளவு மேலானவர்! நாம்மாத்திரம் பிள்ளைக்கொப்பாய் அவரை நம்பவேண்டும். அதற்குப்பின் ஒருவாறு முன்சொன்ன புடைபெயர்ச்சிப் பருவத்திற்கு ஒப்பான போரும் ஜெயமுமுள்ள பருவம் வரும். அதை வெளிப்படுத்துகிற சொற்களாவன: “இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது,” “தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?” அதற்குப்பின், அவர் விடைபெற்று வார்த்தை சொன்ன தருணத்தில், அதிலும் உயர்ந்த பருவம் அகப்படும். பிள்ளைப் பிராயத்திலிருந்தவர்கள் புருஷப்பிராயத்திற்கு வந்துவிட்டார்கள். அவர்கள் இனி எஜமானுக்குச் சிநேகிதர்கள்; அவர்களுக்கு மறைந்த இரகசியம் அவருக்கு



இல்லை; அவர்களைப்பார்த்து அவர் சொல்லுகிறதாவது: “என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.” அவர் திரும்பத் திரும்ப அவர்களுக்குச் சொன்ன “நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ” என்னும் சொல்லிலே தமது இராஜ்யத்தின் திறவுகோல்களைத் தூக்கி அவர்கள் கையிலே கொடுக்கிறார். இப்பொழுது தமது நாமத்திலே செய்யப்படுகிற ஜெபத்தின் வல்லமையைப் பரீக்ஷையில் கண்டறிகிற பருவம் அவர்களுக்கு வந்துவிட்டது.

இந்தக் கடைசிப் பருவத்திற்கும் அதற்கு முந்தின ஆயத்த பருவங்களுக்கும் உள்ள பேதத்தை நாம் இன்றைக்குக் கியானிக்க எடுத்துக்கொண்ட சுருதிவாக்கியங்களில் நமது இரட்சகர் திட்டமாய் விளக்கிக் காட்டுகிறார். “இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; அந்த நாளிலே நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள்.” “அந்த நாளிலே” என்பது எது என்று நமக்குத் தெரியும். அது தேவாவி ஊற்றப்பட்ட நாள். சிலுவையிலே இயேசு பெரிய வேலை செய்யப்போகிற காலம் கிட்டியிருந்தது. அவருடைய மகத்துவ வல்லமையும் பூரண ஜெயமும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் பரலோகப் பிரவேசத்திலும் ஜொலித்து விளங்கப்போகிற காலம் சமீபித்தது. அந்த வேலைக்கும் ஜெயத்திற்கும் ஒரு வல்லமை இருந்தது. அதென்னவெனில், தேவனுடைய மகிமையை முன் என்றுங்காணாதவிதமாய் மனிதருக்குள் வாசம்பண்ண அழைப்பிக்கிற வல்லமை. அந்த வல்லமை தேவலோகத்திலிருந்து இறங்கிவரப்போகிற காலம் நெருங்கியிருந்தது. மகிமையணிந்த இயேசுவின் ஆவி இறங்கி வந்து அவருடைய சீஷருக்கு உயிருக்கு உயிராகப்போகிற காலம் கிட்டிற்று. தேவஆவியின் ஆட்சிக்குரிய அந்தக் காலத்தில் காணப்படப்போகிற அடையாளங்களில் அதற்குமுன் அறியப்படாத ஜெபவல்லமை ஒன்று. அந்தக் காலத்திலே அவர்கள் இயேசுவின் நாமத்தினாலே தங்களுக்கு வேண்டியதையெல்லாம் கேட்டுத் தப்பாமல் வாங்கிக்கொள்வார்கள். தேவாவி தங்களுக்குள் வந்துவாசம் பண்ணுகிறதை அவர்கள் அந்தப் பிரத்தியட்சமான சாட்சியினால் அறிந்துகொள்வார்கள்.

தேவாவி வருகை ஜெபஉலகத்தில் எப்படி ஒரு புதுக்கால
ஆரம்பம் செய்ய விருந்தது என்றறிய, அவர் யார், அவருக்கு
இயல்பான தொழில் என்ன, இயேசு மகிமையணியுமுன்
அவரேன் கொடுக்கப்படவில்லை, இந்த விஷயங்களெல்லாம்
நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். தேவாவியே தேவனுக்கு
நிலை, ஏனெனில் அவர்தாமே ஆவி. தேவாவியிலேதான்
குமாரன் பிதாவினால் பெறப்பட்டார். தேவாவியின் ஒற்று
மையிலேயே பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறார்கள். சதா
நித்தியமாய் ஓயாமல் குமாரனுக்குக் கொடுத்துக்கொண்டே
யிருப்பது பிதாவின் முகத்துவ சிலாக்கியம். சதா நித்திய
மாய்க் கேட்டு வாங்கிக்கொண்டேயிருப்பது குமாரனுக்கு
இருக்கிற சுதந்தர பாக்கியம். இருவருக்கும் இருக்கிற இந்த
ஜீவ அந்நியோந்நியமும் அன்பு அந்நியோந்நியமும் பரிசுத்த
ஆவியினாலேதான் இடையறாமல் சதா நிலைபெற்றுவருகிறது.
சதாகாலங்களாய் இப்படியே இருந்திருக்கிறது. குமாரன்
மத்தியஸ்தராகி என்றும் ஜெபஜீவியம் செய்துகொண்டிருக்கிற
இக்காலத்தில் இன்னமும் விசேஷமாய் இப்படியிருக்கிறது.
இயேசு இப்பூவுலகில் இருக்கும்போது தொடங்கின பெரிய
வேலை தமது மானிட உடம்பில் தேவனையும் மனிதனையும்
உறவாக்கி வைத்தல். இதை அவர் தேவலோகத்தில் இன்னம்
தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார். இது கைகூடுவ
தற்கு, தேவனுடைய நீதிக்கும் நம்முடைய பாவத்திற்கும்
இருந்த விரோதத்தை அவர் தம்மேல் எடுத்துப் போட்டுக்
கொண்டார். அவ்விரண்டிற்கும் இருந்த விவாதத்தை அவர்
சிலுவையில் தமது சுயசரீரத்தில் தீர்த்து முடித்துவிட்டார்.
அதன்பிறகு அவர் பரத்திற்கு ஏறினார். எதற்காக அங்கு
போனார் என்றால், தமது உடலின் ஒவ்வொரு அவய
வத்திற்கும் தாம் சம்பாதித்த விடுதலையை அங்கிருந்து
கொடுப்பதற்கும் தாம் அடைந்த வெற்றி அந்த அவயவம்
ஒவ்வொன்றிலும் வெளிப்பட்டுப் பிரகாசிக்கச் செய்வதற்
குமே. இதை ஆகப்பண்ணுவதற்கே அவர் ஓயா ஜெபஜீவியம்
செய்துகொண்டிருக்கிறார். அவரால் மீட்கப்பட்டவர்கள்
செய்கிற ஓயா ஜெபத்திற்கு அவர் ஓயாமல் பரிந்துபேசுகிறதி
னால் அவர் தம்மை அவர்களுடன் உயிருள்ள ஐக்கியமுள்ள





வர்களாக்கிக்கொள்ளுகிறார். அதாவது என்னவெனில், அவர்
களுக்காக அவர் ஓயாமல் பரிந்துபேசுகிறது அவர்கள் செய்
கிற ஜெபங்களில் வெளிப்பட்டுத் தெரியும். எப்படியென்
றால், முன்னில்லாத வல்லமை அவர்கள் செய்கிற ஜெபங்
களுக்கு வந்திருக்கும்.

அவர்களுடைய ஜெபங்களுக்கு அவர் யார்மூலமாய்
இப்பேர்ப்பட்ட வல்லமை கொடுக்கிறார் என்றால், தேவாவி
மூலமாய். இயேசுதாமே மகிமையணிந்தவராகுமுன் பரிசுத்
தாவி மகிமையணிந்த இயேசுவின் ஆவியாய் இருந்ததில்லை,
இருக்கவுங்கூடாது, என்பது சொல்லாமலே தெரியும் (யோவா.
7. 39.). மகிமையணிந்த இயேசுவின் ஆவியாய் தேவாவி
யை பிதா இதுவரையில் கொடுத்ததேயில்லை. பழைய ஏற்
பாட்டுப் பரிசுத்தர்கள் தேவாவியை அப்பேர்ப்பட்ட ஆவி
யாய் அறிந்ததுமில்லை, அநுபவித்ததுமில்லை. கிறிஸ்து திரைக்
குள் பிரவேசித்தபோது அவருடைய இரத்தம் தேவலோகத்
தில் செய்து முடித்த வேலை இதற்குமுன் ஒருபோதும் செய்
யப்படிராத புது வேலை; அவருடைய உயிர்த்தெழுதலின் வல்
லமை, அவருடைய உயர்பதவி, அவருடைய மகிமை, இவற்
றுடன் ஐக்கியம் செய்வதற்கு நமது மானிட சுபாவத்திற்குக்
கிடைத்த மீட்பு மிக நெருங்கின அநுபவவுண்மை நிறைந்த
மீட்பு. கிறிஸ்துவுக்குள் நமது மனுஷீகம் திரியேக தேவனு
டைய ஜீவியத்தில் எடுத்து இசைத்துக்கொள்ளப்பட்ட சம்ப
வம் மனதிற்கும் எட்டாத நோக்கமாழ்ந்த சம்பவம். இத்தி
யாதி காரணங்களினாலே, உயர்பதவியில் வீற்றிருக்கிற கிறிஸ்
துவின் மனுஷீகத்திலிருந்து புறப்பட்டுவந்து, அவர் நமக்காக
முடித்து வைத்திருக்கிறது இன்னின்னதென்று நமது உள்ளங்
களில் சாட்சியிடுகிற தேவாவியானவர் நமக்குள் செய்கிற
வேலை அவர் பழைய ஏற்பாட்டாருக்குள் செய்த அதே
மாதிரி வேலையல்ல. "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்
தபடியால் பரிசுத்தாவி இன்னும் அருளப்படவில்லை" என்ற
வாசகம் எழுத்தாலுள்ளபடி உண்மையான வாசகம். மகி
மைப்பட்டவராகிய இயேசுவின் ஆவியாய் அவர் வந்தது
இதுதான் முதல்விசை. சதா நித்தியமாய் தேவனுகமாத்திர
மிருந்த திருக்குமாரனவர் புதிதாய் மானிடனாகவும் இருக்

கப் புகுந்து, அவருக்கு இதற்குமுன் இல்லாதிருந்த இந்தப் புதுச் சுபாவத்துடன் தேவலோகத்திற்குத் திரும்பி வந்தார். அவர் அப்படிப் பரமேறினபோது மகிமையணிந்த நமது மனுஷீகத்திலே வாழ்த்துக்குரிய தேவாவியை பிதாவினால் பெற்றுக்கொண்டார் (அப். 2. 33.). அதற்குப்பின் அந்தத் திருக்குமாரனுடைய மகிமையணிந்த மனுஷீகத்திலிருந்து புறப்பட்டு நமக்கு ஒரு புதிய ஜீவனைக் கொடுப்பதற்கு தேவாவியானவர் புவிக்கு வந்தார். அவர் அப்போது நமக்குக் கொணர்ந்த புதிய ஜீவன், அதற்குமுன் கொடுப்பதற்கு, அவருக்கு இருந்ததில்லை. பழைய ஏற்பாட்டார் அவரை தேவனுடைய ஆவியாகமாத்திரம் அறிந்து தங்களுக்கு அருள் புரியக் கூப்பிட்டார்கள். பெந்தெகொஸ்தேயில் அவர் மகிமையணிந்த இயேசுவின் ஆவியாய்ப் பூலோகத்திற்கு வந்தார். நிறைவேறி முடிந்திருந்த நமது மீட்பினால் விளைந்த பூரண பலனையும் வல்லமையையும் அவர் அப்போதுதான் நமக்குக் கொணர்ந்து கொடுத்தார்.

கிறிஸ்து நமக்காகப் பரிந்து ஜெபிக்கிற ஜெபமே அவர் நமக்குச் சம்பாதித்த மீட்பு இடையறாமல் நமக்குப் பலித்து உபயோகப்படுகிறதற்கு ஏது. கிறிஸ்துவிலிருந்து ஓயாமல் பெருக்கெடுத்துப் பாய்கிற அந்த ஜெபப் பேராற்று வெள்ளத்தில் நம்மை உயர இழுத்துச் சேர்க்கிற மூலியம் யார் என்றால், அவரிலிருந்து நமக்குள் இறங்கிவருகிற பரிசுத்த ஆவி. ஆவியானவர் நமக்காகச் சொல் என்பது இல்லாமலே ஜெபிக்கிறார். வேளாவேளைகளில் நமது நினைவுகள் உருப்பட்டுக் கிளம்பாமல் ஆழப் புதைந்துகிடக்கச் செய்கிற இயற்கை நம்முள்ளத்திற்கு உண்டு. அவ்வித இயற்கையுள்ள நம்முள்ளத்தின் அடியிலிருந்துகொண்டு ஆவியானவர் நம்மை திரியேக தேவனுடைய ஆச்சரியமான ஜீவிய ஆற்றுப்பெருக்கில் செலுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார். ஆவியானவர்மூலமாய்க் கிறிஸ்துவின் ஜெபங்கள் நமது ஜெபங்களாகும், நமது ஜெபங்கள் அவருடைய ஜெபங்களாக்கப்படும். நாம் வேண்டியதைக் கேட்போம், அது நமக்குக் கொடுக்கப்படும். "இதுவரையில் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. அந்த நாளிலே என் நாமத்தினால் கேட்பீர்கள்."



சகோதரனே! கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கவும் நமது சந்தோஷம் நிறைவுடையதாயிருப்பதற்குக் கேட்டது கேட்டபடி வாங்கவும் நமக்குத் தேவையானது என்னவென்றால், இந்த அநுக்கிரகம் செய்கிற பரிசுத்தஆவிக்குள் நாம் முழுகுவதே. இது பழைய ஏற்பாட்டாருக்குத் தெரிந்திருந்த தேவனுடைய ஆவியி[illegible] கிகம். இது பெந்தெகொஸ்தேக்குமுன் சீஷருக்கு[illegible] டைத்திருந்த மனந்திரும்புதல் மறுஜநநம் இவற்றை [illegible] ற ஆவியிலும் அதிகம். இது ஒரு வனாந்தரத்த எல்லை[illegible] வல்லமைகாட்டி வேலைசெய்த ஆவியிலும் அதிகம். [illegible] யர்பதவி வல்லமையுடன் மகிமையணிந்திருக்கிற இ[illegible] ன் ஆவியாகிய பரிசுத்தஆவி. அன்பர் உள்ளத்தைத் தி[illegible] கோவில் கொண்டிருக்கிற இயேசுவின் ஆவியாய் நம்மேல் [illegible] ங்கி அந்தத் திருக்குமாரனையும் பிதாவையும் நமக்குள் வெளிப்படுத்துகிறவர் இவர்தான் (யோவா. 14. 16–23.). இந்த ஆவி நமது ஜெபவேளைகளின் ஆவியாய் மாத்திரமல்ல, நம் முழு ஜீவியத்தின் ஆவியாய் இருந்துகொண்டு, இயேசு நமக்காக முடித்துவைத்திருக்கிற வேலையை நமக்குத் தெரியக்காட்டல், நம்மை முற்றும் அவரோடு ஒன்றாக்கல், நம்மை அவரைப்போலாக்கல், இவற்றால் அவரை நமக்குள் மகிமைப்படுத்தும்போது மாத்திரமே, அவர் நாமத்தில் ஜெபிக்கிற வல்லமை நமக்குக் கிடைக்கும்; ஏனெனில், அப்போது உள்ளபடிக்கே நாமும் அவரும் ஒன்றாயிருக்கிறோம். "உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்ளுவேன் என்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை" என இயேசு தெரிவிக்கிறபடி, பிதாவினிடத்தில் நேராகப் போக்குவரத்துச் செய்யத் தகுதியுடைமை அப்போதுதான் நமக்கு வரும். மகிமைப்பட்டிருக்கிறவருடைய ஆவியினால் நிறையப்பெறுதலே விசுவாசிகளாகிய தேவனுடைய ஜனத்திற்கு ஓரே யோவசியம் என்பதை நாம் விளங்க அறிந்து விசுவாசிக்கவேண்டும். அப்படிச் செய்தால்மட்டும் "அந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினால் ஜெபம்பண்ணுவது" இன்னதென்பதும் "பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி தேவனுடைய அன்பிலே நம்மைக் காத்துக்கொள்வது" இன்னது என்பதும் நமக்கு

அநுபவசித்தியாய் விளங்கும். "அந்தநாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள்."

நமது ஜெபவல்லமை நமது ஆத்தும நிலைக்கும் நமது ஜீவிய நிலைக்கும் தக்கபடி இருக்கும் என்கிற பாடமே இன்னொருமுறை இங்கு சொல்லப்படுகிறது. இயேசுவின் நாமத்திற்குள் பிழைக்கிற பிழைப்பே [illegible] இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறதற்கு வழி. ஆவிக்குள் [illegible]ன பிழைப்பே ஆவியில் ஜெபிக்கிறதற்குப் ப[illegible]ப்படுத்[illegible] கிறிஸ்துவில் நிலைத்திருக்கையே நாம் வி[illegible]து [illegible]வோ அதைக் கேட்க நமக்கு நியாயமும் திரா[illegible]. நிலைத்திருக்கையின் அளவு எதுவோ அதுவே ஜெப[illegible]மையின் அளவு. நம்முள் வாசம் செய்கிற ஆவியானவர் [illegible] ஜெபிக்கிறவர். அவர் ஜெபிக்கிறது எப்போதும் சொல்லாலும் நினைவுகளாலும் கட்டுப்பட்டல்ல, சொல்லுக்கு எட்டாமல் உள்ளத்தின் ஆழத்தில் இருந்துகொண்டு மூச்சுவிடுகையினாலும் நடைபெறும். நம்முள் கிறிஸ்துவின் ஆவி எவ்வளவு இருக்கிறாரோ அவ்வளவே நம்முள் நிஜமான ஜெபமும் இருக்கும். நமது ஜீவியம் கிறிஸ்து நிறைந்த ஜீவியமும் அவருடைய ஆவிநிறைந்த ஜீவியமுமாயிருக்கப்பெற்றால், அப்போது நமது ஜெபத்திற்கு அருளப்பட்டிருக்கிற வரம்பில்லாத வாக்குத்தத்தங்களைப் பார்த்து, இவை நமக்குக் கிட்டுமா என்கிற விபரீத நினைவு இனி நினைக்கமாட்டோம். "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே, பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்."

'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்.'

ஆ என் தேவனே! ஒருமையில் மூவரான உமக்குமுன் பரிசுத்த பக்திவிநயத்துடன் நான் தலைகுனிந்து பணிகிறேன். பரிசுத்தத் திரித்துவ இரகசியமே ஜெப இரகசியம்



என்பதை இன்னொருமுறை பார்த்துக்கொண்டேன். ஜெபத்தைக் கேட்டருளுகிற பிதாவையும் சதா ஜெபஜீவியமே செய்கிற குமாரனையும் பிதாவிலும் குமாரனிலுமிருந்து புறப்பட்டு அவர்கள் ஒருவருக்கொருவர் ஓயாமல் கொடுக்கல் வாங்கல் செய்கிற நித்திய இன்பஜீவியக் கூட்டுறவில் எங்களைத் தூக்கி வைக்கப்பார்க்கிற தேவஆவியையும் நான் வணங்குகிறேன். என் தேவனே! நீர் பரிசுத்தஆவி மூலமாய் எங்களையும் எங்கள் ஜெபங்களையும் உமது தெய்வஜீவியம், அந்த ஜீவியத்திற்குள்ள அன்புக்கூட்டுறவு, இவற்றுடன் எடுத்துச் சேர்த்துக்கொள்ளுகிற தயவைப்பார்த்து அதிசயப்பட்டு உம்மைக் கும்பிட்டுப் பணிகிறேன்.

ஆ என் இன்பமான கர்த்தராகிய இயேசுவே! உம்மிடத்திலிருந்து புறப்பட்டு எனக்குள் பாய்ந்து, எனக்குள் வாசம் செய்து, என்னை உம்முடன் ஐக்கியப்படுத்திக்கொண்டிருக்கிற ஆவியே ஜெபஆவி என்று நீர் எனக்குக் கற்றுக்கொடுக்கிற இந்தப் பாடத்தை நான் தெளிந்தறியப்பண்ணும். நான் என்னை வெறு உள்ளீடற வெறுமையாக்கி, அவரே முழுமையும் ஆட்கொண்டிருப்பதற்குப் பாண்டமாய்ப் படைத்து, நான் அவருக்கு உடலும், அவர் எனக்கு உயிருமாயிருக்கச் சம்மதிக்கவேண்டும் என்னும் விஷயத்தை எனக்கு விளக்குவீராக. அவர்மேல் நான் நம்பிக்கை வைத்து அவரைக் கனம்பண்ணுகிறேன் என்பதை ஜீவனுள்ள[illegible] அவரே என் ஜீவியத்தையும் என் ஜெபத்தையும் தம் கையில் பிடித்து நடத்தி விடுவதினால் காண்பிக்க என்னைப் பழக்கும். விசேஷமாய் ஜெபத்தில் அவரே தமது சொல்லிலடங்காத பரிந்துபேசுகையை எனக்குள் மூச்சுவிட்டுரைக்க இடங்கொடுத்து, நான் பரிசுத்த மவுனத்துடன் ஒதுங்கிக் காத்திருக்க என்னைப் பயிற்றும். குமாரனாகிய நீர் பிதாவுக்குமுன் எழுந்தருளி இடையறாமலும் கேட்டது தப்பாமலும் மானிடருக்காகப் பரிந்துபேசுகிற உம்முடைய ஜெபத்திலே எனக்குப் பங்கு கிடைக்கப்பண்ணுகிற அவருடைய சகாயத்தினாலே நானும் இடையறாமலும் கேட்டது தப்பாமலும் ஜெபிக்கக்கூடும் என்பதை என் அறிவுக்கு எட்டப்பண்ணும். "அந்தநாளிலே நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். மெய்

யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" என்று இப்படி நீரே வாக்கருளியிருக்கிறீர். இந்த வாக்கு எனக்குப் பலிக்கப்பண்ணும், ஆண்டவரே. ஆமென்.

## புறனடை.

பலர் ஜெபத்தை மூச்சுக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். இந்த உவமையைப் பிடித்து உறுப்பு உறுப்பாய்க் கிளறிப் பார்த்துக்கொண்டேபோனால் பரிசுத்தஆவி செய்கிற வேலை எப்பேர்ப்பட்ட ஆச்சரியமான வேலை என்று தெரியும். மூச்சுக்கு மூச்சு அசுத்த ஆகாயத்தை நம்முள்ளிருந்து வெளியே துரத்திவிடுகிறோம்; இல்லாவிட்டால் அது உள்ளிருந்துகொண்டு நமக்குச் சுறுக்காய்ச் சாவு உண்டாக்கிவிடும். மூச்சுக்கு மூச்சு சுத்த ஆகாயத்தை நம்முள் வருவித்துக்கொள்ளுகிறோம். இதுவே நமது பிராணனைக் காக்கிறது. இதுபோலவே, நாம் பாவ அறிக்கை செய்யும்போது நம்முள்ளிருந்து பாவத்தையும், ஜெபம் செய்யும்போது நமக்குள்ள குறைப்பாடுகளையும் நம்முள்ளம் விரும்புகிற விருப்பங்களையும் வெளியே புறப்படச் செய்கிறோம். திரும்ப உள்மூச்சு வாங்கும்போது, தேவ வாக்குத்தத்தங்களையும் கிறிஸ்துவுக்குள் நமக்கு வைத்திருக்கிற தேவஅன்பையும் தேவஜீவனையும் *உசுவாசித்துக்கொள்ளுகிறோம். இதெல்லாம் நாம் செய்வதெப்படியென்றால் பரிசுத்த ஆவியானவர் மூலமாய். அவரே நமது ஜீவனுக்கு மூச்சு.

அவர் நமது ஜீவனுக்கு மூச்சாயிருக்கிறது எதனால் என்றால், அவர் தேவனுக்கு மூச்சாயிருக்கிறதினாலே. பிதா அவரை நமக்குள் மூச்சுவிட்டுக்கொடுக்கிறார். எதற்காக என்றால், தம்மை நமது ஜீவனுடன் இணைத்துக்கொள்வதற்கு. தடவைக்குத் தடவை நாம் வெளிமூச்சு விட்டவுடன் உள்மூச்சு வாங்கிக்கொள்ளுகிறோம். அதுபோலவே தேவன் நமக்குள் விட்ட மூச்சைத் திரும்பத் தமக்குள் இழுத்துக்கொள்ளுகிறார். அதினால் ஆவியானவர் அவரிடம் திரும்பிப் போகிறார். அப்படி அவர் போகும்போது நமது உள்ளம் விரும்புகிற விருப்பங்களையும் தெரிவிக்கிற குறைப்பாடுகளையும் எடுத்துக்கொண்டு போகிறார். இவ்விதமாய், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஜீவனின் மூச்சாயுமிருக்கிறார் நம்முள்ளிருக்கிற புதிய ஜீவனின் மூச்சாயுமிருக்கிறார். அவரை தேவன் மூச்-

* உசுவாசிக்கிறது என்றால் மூச்சை உள்ளிழுத்துக்கொள்ளுகிறது.



சுவிட்டுக் கொடுக்கும்போது நாம் அவரை நமது ஜெபத்திற்குக் கிடைக்கிற உத்தரவாகப் பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் அவரை மூச்சுவிட்டுக் கொடுக்கும்போது அவர் நமது வேண்டுதல்களைத் தூக்கிக்கொண்டு பிதாவண்டை ஏறிப்போகிறார். அவர் தேவனுடைய ஆவியாயிருந்துகொண்டு பிதாவையும் குமாரனையும் தம்முள் ஒன்றாக்கி, குமாரனுடைய பரிந்து பேசுகையைப் பிதாவுக்குச் சேர்ப்பிக்கிறதினாலே அவர் நமக்கு ஜெபத்தின் ஆவியாயிருக்கிறார். தெய்வீகத்திலே பரிசுத்த திரித்துவம் இருக்கிறது உண்மை என்பதை அநுபவபூர்த்தியாய் நமது ஜீவியத்தில் அநுபவிப்பதே நிஜமான ஜெபம். ஆவியானவரின் மூச்சுவிடுகை, குமாரனின் பரிந்து பேசுகை, பிதாவின் சித்தம், இம்மூன்றும் நம்முள் ஒன்றாகின்றன.

# இருபத்தாறும் பாடம்.

## 'உனக்காக வேண்டிக்கொண்டேன்'
அல்லது,
## வேண்டுதல் செய்கிறவராகிய கிறிஸ்து.

"உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்." (லூக். 22. 32.)

"உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேன் என்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை." (யோவா. 16. 26.)

"வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர்." (எபி. 7. 25.)

ஞானஜீவியத்தில் நாம் வளருகிற வளர்த்தி இயேசுவுக்குள் நமக்கு இன்னின்ன நன்மை கிடைக்கும் என்பதை நாம் தெளிவாய் அறிகிற அறிவுக்குத் தக்கபடி இருக்கும். எனக்குத் தேவையான சமஸ்தமும் கிறிஸ்துவே, எனக்குள் எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கவேண்டியவர் கிறிஸ்துவே, என்பது எனக்குத் தெரியத் தெரிய, கிறிஸ்துவில் இருப்பதெல்லாம் என் பிரயோஜனத்திற்காகவே இருக்கிறது என்பது எனக்கு விளங்க விளங்க, நான் எனக்குச் செத்துச்

சமூலமும் கிறிஸ்துவில் நிலைக்கிற நிஜமான விசுவாச ஜீவியம் எனக்கு வரும். அதற்குமேல், நான் பரிசுத்தமாய்ப் பிழைக்கப்பட்ட பாடெல்லாம் இதுவரையில் வியர்த்தமானதுபோல் இனி வியர்த்தமாகாது. இனி என்னுடைய கிறிஸ்தவ ஜீவியம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி ஜெயிப்பதற்கு என் ஜீவனாகிய கிறிஸ்துவை நம்பி அவருடைய பலத்தைப் பெற்றுக்கொள்ளுதலாயிருக்கும். இது விசேஷமாய் ஜெபஜீவியத்திலே காணப்படும். ஜெபம் வருந்தி உழைக்கிற உழைப்பல்ல, உழைத்தும் பலன் காணாமல் ஏங்குகிற ஏக்கமுமல்ல. அது நமக்குள் கிறிஸ்து இருந்துகொண்டு நமக்காக அவர் செய்வதை அநுபவிக்கிற அநுபவிப்பு. அவர் பூமியிலிருந்தபோது அவருடைய ஜீவியம் ஓயா ஜெபமாயிருந்தது. இப்போது பரத்திலும் அவருடைய ஜீவியம் பிதாவை நோக்கிச்செய்கிற ஓயா ஜெபந்தான். அவருடைய இந்த ஜெபஜீவியத்திலே நம்முடைய ஜீவியம் கலந்துகொள்ளுதலே நாம் செய்கிற ஜெபம். இதுவுண்மை எப்போது நமக்குத் தெரியுமென்றால், நம்முடைய ஜெபஜீவியம் விசுவாசத்தின் இயற்கை நிறைந்ததாகி, நாம் ஜெபஜீவியம் செய்வதற்கு வேண்டியதெல்லாம் சம்பூரண நிறைவுடனும் குறைவில்லாமலும் இயேசுவுக்குள்ளேயே நமக்கு அகப்படுகிறது என்பதை நாம் அறியும்போது தெரியும். அப்போது நாம் இயேசுவின் புண்ணியங்கள்மேலும் நமது அபாத்திர ஜெபங்களுக்காக அவர் பண்ணுகிற சிபார்சின்மேலும் மாத்திரம் அல்ல, அவருக்கும் நமக்கும் ஏற்பட்டுள்ள நெருங்கின அந்நியோந்நிய ஐக்கியத்தின்மேலும் நம்பிக்கைவைத்து ஜெபிக்கத் தொடங்குவோம். அந்த ஐக்கியத்தின்மூலமாய் அவர் நமக்குள்ளிருந்து ஜெபிப்பார், நாம் அவருக்குள்ளிருந்து ஜெபிப்போம்.* இரட்சிப்புச் சமூலமும் கிறிஸ்துவே. அவர்

* நமக்காகப் பரிந்துபேசுகிற ஜீவனுள்ளவராய் கிறிஸ்து நமக்கு வெளியே இருப்பது வேறே. நம்மை அவருடன் இணைத்து ஒருமைப்படுத்துகிற பரிசுத்த ஆவியின் மூலமாய் நமக்கும் அவருக்கும் ஏற்பட்டிருக்கிற பரஸ்பர ஐக்கியத்தில் அவர் நம்முள்ளேயே இருப்பது வேறே. இப்படி அவர் நம்முள்ளேயே இருக்கிற காரணத்தினால் நாமே நேராய்ப் பிதாவண்டைக்கு வரலாம். அது வேறு இது வேறு என்பதை டீபிங்கனூர் பெக்கு வேத பண்டிதரிடம் படித்து இருக்கிற மேற்கோளால் அறிக.



தம்மையே நமக்காகத் தந்தார்; அவர்தாமே நமக்குள் வாசம் செய்கிறார். அவர் ஜெபிக்கிறவராயிருப்பதினாலேயே நாமும் ஜெபிக்கிறவர்களாயிருக்கிறோம். இயேசு ஜெபித்த மாதிரியை அவருடைய சீஷர்கள் பார்த்து அந்தமாதிரி ஜெபத்திலே தங்களையும் கூட்டாளிகளாக்க அவரை வேண்டிக்கொண்டார்கள். அதுபோலவே, அவர் இப்போது பரமாசனத்தில் இருந்துகொண்டு ஜெபிக்கிற தமது ஜெப ஜீவியத்திலே நம்மையும் உடந்தைக்காரர் ஆக்குகிறார் என்று அறிகிறோம்.

அவர் பூலோகவாசம் செய்த கடைசி இராவைக் கவனித்தால் இது வெகு தெளிவாய் வெளிப்படும். அவர் அப்போது செய்த பிரதான ஆசாரிய ஜெபத்தில் (யோவா. 17.), அப்போது மாத்திரமல்ல, பரமண்டலத்திற்குப் போனபின்னும் பிதாவிடத்தில் என்னவிஷயத்தைப்பற்றி எவ்விதமாய் அவர் மன்றாடுவார் என்று காண்பிக்கிறார். அப்படியிருந்தும், அவர்களிடத்தில் அவர் பேசின கடைசிப்பேச்சில், தாம் பிதாவினிடத்தில் போதலை அவர்கள் இனிச் செய்யவேண்டிய புதிய ஜெபஜீவியத்துடன் அடுத்தடுத்துச் சம்பந்தப்படுத்தியே பேசுகிறார். அவ்விரண்டும் இனி ஒன்றாய் இசைக்கப்படும். ஆதாவது, அவர் பரலோகப் பிரவேசம்செய்து அங்கே அவர் நித்திய பரிவுஜெபம் பண்ணுவதே அவர்கள் இனி அவர் நாமத்தில் செய்யப்போகிற புதிய ஜெபஜீவியத்திற்கு ஆரம்பமும் அதற்கு வல்லமையளிப்பதுமாயிருக்கும். இயேசு பரிந்து ஜெபிக்கிறதைப் பார்ப்பதே அவர் நாமத்தில் ஜெபிக்க நமக்குத் திராணியுண்டாக்கும். ஜெபிக்கிற உரிமையும் ஜெபத்திற்கு வல்லமையளிக்கிற உரிமையும் கிறிஸ்துவுடையது. அவர் செய்கிற பரிவுஜெபத்தில் அவர் நம்மையும் உடந்தைக்காரர் ஆக்கிக்கொள்ளுகிறார்.

இதை விளங்க அறிவதற்கு அவருடைய வேண்டுதலை நிதானித்துப்பார். வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர். பூமியில் இயேசு செய்த ஆசாரிய ஊழியம் துவக்கமேதவிர வேறல்ல. அவர் தமது இரத்தத்தைச் சிந்தியளித்தது ஆரோனையொத்துச் செய்த செய்கை. இப்பொழுது அவர் தமது ஆசாரியத்தொழிலைத் தொடர்ந்து நடப்பிக்கத் திரைக்குள் பிரவேசித்துப் பிழைக்

கிறது மெல்கிசேதேக்கை யொத்துச் செய்கிற செய்கை. அங்கே அவருக்கு இப்பொழுது நித்திய ஜீவவல்லமை இருக்கிறது. மெல்கிசேதேக்கு ஆரோனைவிட மகிமையுள்ளவன். அப்படிப்போலவே, அவர் ஆரோனையொத்து முடித்த ஒப்புரவாக்கல் அவர் இப்பொழுது மெல்கிசேதேக்கையொத்துச் செய்கிற வேண்டுதலிலேதான் உண்மையானபடி வல்லமையும் மகிமையு முடையதாகிறது. "கிறிஸ்துவே மரித்தவர்; அதிலும் அதிகமாக, அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." அவர் செய்கிற வேண்டுதல் அளவிடற்கரிய வாஸ்தவச்செயல். மேலும், அது இன்றியமையாத அவசியச்செயல். அதில்லாவிட்டால், அவர் முடித்திருக்கிற மீட்பு இடையறாமல் பலிக்காது. மானிடரை தேவஜீவனிலும் பாக்கியத்திலும் உடன்பங்காளராக்கிவைக்கிற ஒப்புரவாக்கல் அவருடைய மானிடவதாரத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் உண்டான அதிசயச்செயல். ஆயினும், தேவலோகத்தில் இருக்கிற சிரசாகிய அவரிலிருந்து தேவவல்லமை ஓயாமல் புறப்பட்டு வேலைசெய்தாலொழிய புவியிலிருக்கிற அவருடைய தனித்தனி அவயவங்களுக்கு அந்த ஒப்புரவாக்கம் தனித்தனி பலிக்காது. ஆத்துமநிலை மாறுகையும் பரிசுத்தமாக்கப் பெறும் நடக்கும் ஒவ்வொரு தடவையிலும், பாவத்தையும் உலகத்தையும் ஜெயிக்கிற ஒவ்வொரு ஜெயத்திலும், இரட்சிக்க வல்லோராகிய அவருடைய பலமே உள்ளபடிக்குப் புறப்பட்டுவந்து கிரியை செய்கிறது. அவரிப்படித் தமது வல்லமையைப் பிரயோகம் செய்கிற மூலியம் எதுவென்றால், அவர் செய்கிற ஜெபம். அவர் பிதாவைக் கேட்டு வாங்கிக்கொண்டேயிருக்கிறார். "வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர்;" ஆகையால் முற்றமுடிய இரட்சிக்க வல்லவராயும் இருக்கிறார். அவருடைய ஜனத்திற்கு உண்டாகும் அவசியங்களில் அவர் தேவனிடத்தில் கேட்டு வாங்கிக்கொடுக்கத் தேவையில்லாதது ஒன்றுமில்லை. அவர் சிலுவையில் செய்த மத்தியஸ்தம் எப்படியோ அப்படியே அவர் சிம்மாசனத்தில் செய்கிற மத்தியஸ்தமும் நிச்சயமும் அவ

141



சியமுமானது. அவருடைய வேண்டுதலில்லாமல் நடப்பது ஒன்றுமில்லை. வேண்டுதலிலேயே அவருடைய நேரமும் பெலன்களும் எல்லாம் செலவாகிறது. அதுவே அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் ஓயாமல் செய்கிற வேலை.

அவர் முடித்திருக்கிற வேலையால் விளைந்த நன்மைகளிலே மாத்திரமல்ல, இப்போது அவர் செய்கிற வேலையிலேயும் நமக்குக் கூட்டு இருக்கிறது. இதேன் என்றால், நாம் அவருடைய சரீரமாயிருக்கிறதினாலே. சரீரமும் அவயவங்களும் ஒன்று; 'தலையானது கால்களை நோக்கி நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை என்று சொல்லக்கூடாது.' இயேசு செய்கிற சகல வேலையிலும் அவருக்கு உள்ளது உரியது எல்லாத்திலும் நமக்கு உடன்பங்கு உண்டு. "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்." அவருடைய ஜீவியம், அவருடைய நீதி, அவருடைய வேலை, இவற்றிலெல்லாம் நமக்கு அவருடன் பங்கு உண்டு. அப்படியே அவர் செய்கிற வேண்டுதலிலும் அவருடன் நமக்குப் பங்கு இருக்கிறது. அது அவர் நம்மைத் தவிர்த்துவைத்து தாம்மாத்திரமே செய்கிற வேலையல்ல.

அவர் செய்கிற வேலையிலே நமக்குக் கூட்டு இருக்கிறது எதினால் என்றால், அவருக்கு இருக்கிற ஜீவனிலே நமக்கு உடன்பங்கு கிடைத்திருக்கிறபடியினாலே. "கிறிஸ்து நமக்கு ஜீவன்;" "இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்." அவருக்குள் இருக்கிற ஜீவனும் நமக்குள் இருக்கிற ஜீவனும் ஒரேமாதிரி ஜீவன்தான். இது வேறு, அது வேறு அல்ல. பரலோகத்தில் அவர் செய்கிற ஜீவியம் சதா ஜெப ஜீவியம். அது புவிக்கு இறங்கிவந்து நம்மை ஆட்கொள்ளும்போது, அதின் தன்மை மாறிப்போகாது; அது நமக்குள்ளிருக்கும்போதுகூட சதா ஜெப ஜீவியமாகவே இருக்கும். அதாவது, ஓயாமல் தேவனிடத்தில் கேட்டு வாங்கிக்கொண்டிருக்கிற ஜீவியமாகவே இருக்கும். அப்படியானால் அவரிலிருந்து ஒன்றும் அவருடையவர்களிலிருந்து ஒன்றுமாக இரண்டு ஜெபஆறுகள் புறப்பட்டு தேவசமுகத்தை நோக்கிப் பாய்கின்றனவா என்றால்; அப்படியல்ல. அவருக்கும் நமக்கும் உள்ள வாஸ்தவமான ஜீவ

ஐக்கியமே ஜெப ஐக்கியமாயிருக்கும். எப்படியென்றால், அவர் செய்கிற ஜெபம் நம்மூலமாய்ப் பாயும், நாம் செய்கிற ஜெபம் அவர் மூலமாய்ப் பாயும். தூபங்காட்டும் பொற்கலசத்தை வைத்திருக்கிற தூதன் அவரே. "பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவருக்குக் கொடுக்கப்பட்டது." அவர் செலுத்துகிற தூபவர்க்கமே நமது ஜெபம் பலிக்கிறதற்குக் காரணம். வேண்டுதல் செய்கிறவராகிய அவருக்குள்ளேயே நாம் பிழைக்கிறோம், நாம் நிலைத்திருக்கிறோம்.

தேவனுடைய ஏகபுத்திரனாயிருப்பவரே ஜெபிக்க அதிகாரமுடையவர்; "என்னைக் கேளும், அப்பொழுது உமக்குக் கொடுக்கப்படும்" என்பது அவருக்குமாத்திரமே சொல்லப்பட்ட வாக்கு. மற்ற சமஸ்த காரியங்களிலும் நமக்கு வேண்டியது அவரிலேயே நிறைந்திருக்கிறதுபோலவே, மெய்யான ஜெபத்திற்கு வேண்டிய நிறைவும் நமக்கு அவரிலேதான் இருக்கிறது. ஜெபவல்லமை அவருக்குமாத்திரம் உண்டு. நமக்குத் தேவையான பொக்கிஷங்கள் எல்லாம் அவருக்குள் இருக்கிறது. அந்தப் பொக்கிஷங்களிலிருந்து நமக்கு வேண்டிய மட்டும் எடுத்து அநுபவிக்க, அதாவது, கிருபையின்மேல் கிருபையைப் பெற்றுக்கொள்ள நாமும் அவருக்குள்ளேயே இருக்கிறோம் என்கிற மர்மம் நமக்கு மேலும் மேலும் தெளிவாய் வெளிப்பட வெளிப்பட, நமது ஞானஜீவன் வளரும். நமது ஜெபஜீவனும் இப்படித்தான் வளரும். இயேசுவின் வேண்டுதல்மேல் நாம் வைக்கும் நம்பிக்கை ஜெபிக்க முடியாமல் நாம் சும்மா இருக்கும்போது அவர் நமக்குப் பதிலாக ஜெபிக்கிறார் என்கிற நம்பிக்கையாய் மாத்திரம் இருப்பது போதாது. அவர் நமது ஜீவனையும் நமது விசுவாசத்தையும் உண்டாக்கினவராதலால் அவருக்குச் சரியொத்து நாமும் ஜெபிக்க நம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ளுகிறார் என்கிற நம்பிக்கையாயும் இருக்கவேண்டும். இயேசு தமது முழு ஜீவனையும் நமக்குள் பாய்விக்கிறதுபோலவே அவர் தமக்கேயுரிய ஜெப பரிபூரணத்திலிருந்து ஜெபஜீவனையும் நமக்குள் மூச்சுவிட்டுக் கொடுக்கிறார். நமது ஜெப ஜீவியம் இதை நம்பினதாயிருக்கவேண்டும்.



விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் நாம் உண்மையாய் நிலைத்திருப்பதற்கு கிறிஸ்துதாமே நமக்குப் பொறுப்பாளி. இதற்காக, உள்ளபடிக்கு அவரே நமக்கு ஜீவனாயிருக்கிறார். இந்த இரகசியம் பட்டப்பகல் வெளிச்சம்போல் அறிவில் உதிக்கத் துவக்கின நாளே அநேக விசுவாசிகளுடைய ஞான ஜீவியத்தில் ஒரு புதுச்சரித்திரம் ஆரம்பித்த நாளாயிற்று. அதுமுதற்கொண்டுதான் அவர்கள் விசுவாச ஜீவியம் செய்ய ஆரம்பம்பண்ணினார்கள். இவ்வாறே, நமது ஜெப ஜீவியம் உண்மையான ஜெப ஜீவியமாயிருப்பதற்கும் கிறிஸ்துவே நமக்குப் பொறுப்பாளி. சகல ஜெபத்திற்கும் அவரே நடுமையம். ஜெபம் எல்லாம் உருவெடுத்தால் அவர் வடிவமாகவே இருக்கும். பரிசுத்தஆவி மூலமாய் அவர் தம்மையே தமது ஜனத்திற்கு ஜெப ஜீவனாய்க் கொடுக்கிறார். இந்த இரகசியம் வெட்டவெளிச்சமாய் வெளிப்படுங்காலம் நமக்குப் பெருத்த நன்மை விளைக்கும் காலமாயிருக்கும். "வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர்." அவர் வேண்டுதல்செய்கிறது எப்படியென்றால், சரீரத்திலே தலையாயிருந்துகொண்டு, நமக்கு அவர் உண்டுபண்ணின புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நம்மை வழிநடத்துகிற தலைவராயிருந்துகொண்டு, நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருந்துகொண்டு, ஜெபிக்கிறார். அவர் தம்மால் மீட்கப்பட்டவர்களுக்குள் தம்முடைய சொந்த ஜீவனையே பாய்விக்கிறதினால் அவர்களுக்குச் சகலத்திற்கும் ஜீவன் கிடைக்கப்பண்ணுகிறார். அவர்களுக்கு ஜெப ஜீவன் கிடைக்கிறதற்கு அவர் செய்கிறதென்னவென்றால்: அவர்களைத் தமக்கு தேவலோகத்தில் இருக்கிற ஜெப ஜீவனுக்குள் எடுத்துச் சேர்த்துக்கொண்டு, தமது சொந்த ஜெப ஜீவனையே அவர்களுக்குள் பாய்வித்து, அதை அவர்களுக்குள் நிலைக்கச்செய்கிறார். "நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்," அதினால் உன் விசுவாசம் அவசியமற்றதாகும்படிக்கு அல்ல, "உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு." நமது விசுவாசமும் விசுவாசமுள்ள ஜெபமும் அவருடைய விசுவாசம், விசுவாசமுள்ள ஜெபம்; இவற்றிலிருந்து பிழைக்கும். வேண்டுதல் செய்கிற சிரஞ்சீவியாகிய

"என்னில் நிலைத்திருந்து," என்னுடனும் எனக்குள்ளும் நீங்கள் ஜெபம்பண்ணினால்: "நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."

இயேசுவின் வேண்டுதலிலே நமக்கு உடன்பங்கு உண்டு என்கிற சிந்தனை அவர் இதற்குமுன் பலமுறை நமக்குப் போதித்ததை நினைப்பூட்டுகிறது. அதென்னவென்றால், நமது ஜெபத்திற்கு அருளப்பட்டிருக்கிற பிரமிக்கத்தக்க வாக்குகளெல்லாம் தேவ இராஜ்யத்திலும் பாவிகளுடைய இரட்சிப்பிலும் தேவனுடைய மகிமை பிரஸ்தாபப்படுவதற்கேயொழிய மற்றப்படி பலிக்க நியாயமுமில்லை, பலிக்கவும்மாட்டா என்பதுதான். நமக்காக மாத்திரமாவது நம்மையே முக்கியமாய் நினைத்தாவது ஜெபிக்கும்போதெல்லாம் அவருடைய கடைசியிரவு வாக்குகள் நமக்குப் பலிக்காமல் பூட்டப்பட்டேயிருக்கும். அந்த வாக்குகள் யாருக்குப் பலிக்கும் என்றால், திராக்ஷையின் கனி கொடுக்கிற கொடிகளுக்கு—மாளுகிற மனிதருக்கு உபயோகமாய்ப் பிழைக்க அவரைப் பிதா அனுப்பினதுபோல் அவரால் உலகத்திற்கு அனுப்பப்படுகிற சீஷர்களுக்கு—அவர் விட்டுவிட்டுப்போன வேலையைத் தொடுச் செய்கிறவர்களும் தங்கள் ஆண்டவர் செய்தபிரகாரம் தன் ஜீவனைப் பலமடங்கு பெருக்கிக்கொள்வதற்காக அதை இழந்துவிடுகிற தானியவிதைக்கு ஒப்பானவர்களுமாகிய அவருடைய ஆப்த சிநேகிதர்களுக்கு—அவருடைய உண்மையுள்ள ஊழியர்களுக்கு—இவர்களுக்குத்தான் பலிக்கும். நமக்குத் தனித்தனியே அவரவர் பொறுப்புக்குக் கையளிக்கப்பட்டிருக்கிற வேலையையும் ஆத்துமாக்களையும் நிதானித்துக்கொண்டு, தேவனோடு நமக்குள்ள நேசஉறவு ஜீவியத்தை அந்த வேலைக்காகவும் அந்த ஆத்துமாக்களுக்காகவும் ஜெபிப்பதற்காகப் பிரயோகிக்கவேண்டும். அப்போது, நமது ஜெபம் வல்லமைசெய்யும் என்கிற வாக்கு நமக்குப் பலிக்கும். அதுவுந்தவிர, மானிடருக்கு நன்மை வழங்கி அவர்களை இரட்சிக்கிறதிலே இயேசுவின் உள்ளத்தில் ஜொலிக்கிற பேரானந்தம் நம்மில் அவரும் அவரில் நாமும் நிலைத்திருக்கையின் மூலமாய் நம்முள்ளத்திலும் வந்திருப்பதை நாம் முதன்முதல் அப்போதுதான் ருசிக்கறிவோம்.





ஆ எங்கள் ஸ்தோத்திரத்திற்குரிய ஆண்டவராகிய இயேசுவின் பிரமிக்கத்தக்க வேண்டுதலே! எங்களுக்கு கிடைத்திருப்பதெல்லாம் உன்னாலேயே கிடைத்திருப்பதுமல்லாமல் நாங்களும் நீ செய்கிற வேலையையே செய்ய அவருடன் கூட்டாளிகளும் உடன் வேலையாளருமாய் எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறோமே, இது என்ன அதிசயம்! இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறது இன்னது என்பதும் அதற்கு அப்பேர்க்கொத்த வல்லமை இருக்கிறது ஏன் என்பதும் இப்போதுதான் எங்களுக்கு விளங்குகிறது. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறது அவருடைய ஆவிக்குள் ஜெபிக்கிறதாம், அவரிலேயே இருந்து ஜெபிக்கிறதாம், அவருடன் பூரணஐக்கியஞ்செய்துகொண்டு ஜெபிக்கிறதாம்.

ஓ ஆச்சரியமும், இடையறா முயற்சியும், தப்பாமல் பலிக்கிறதுமாகிய மனுஷனை கிறிஸ்துஇயேசுவின் வேண்டுதலே! நாங்கள் உன்னிலேயே முழுமையும் இலகித்து, சதாகாலமும் உனக்குள்ளேயே இருந்துகொண்டு ஜெபிக்கிறகாலம் எப்போது வரும்?

**"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."**

இன்பமான ஆண்டவரே! மனத்தாழ்மையோடு கூடிய உள்ளக்கனிவுடன் நான் உமக்குமுன் விழுந்து பணிகிறேன். நீர் முடித்திருக்கிற இரக்ஷண்ணியக் கிரியை முழுமையும் இப்பொழுது ஜெபமயமாய்த் திரும்பியிருக்கிறது: உமது திருஉதிரத்தை விலையாய்க்கொடுத்துச் சம்பாதித்ததை இடையறாமல் நிலைநிறுத்தி மானிடருக்குக் கொடுப்பதற்கு நீர் இப்பொழுது செய்வதெல்லாம் ஜெபமேயொழிய வேறில்லை. எப்பொழுதும் ஜெபம்பண்ணுவதே உமது சதா ஜீவியவேலை. நாங்கள் உம்மிலேயும் நீர் எங்களிலேயும் நிலைத்திருப்பதினால் நேரே பிதாவண்டைக்குப் போகிற வழி எங்களுக்குத் திறந்திருக்கிறது, எங்கள் ஜீவியம் ஓயா ஜெபஜீவியமாயிருக்கக்கூடியதாயிற்று, எங்கள் ஜெபம் தப்பாமல் பலிக்கிற ஜெபமாயிருக்கிறது.

அன்புள்ள ஆண்டவரே! ஜெபஜீவியத்தில் உம்முடன் சேர்ந்து உழைக்க உம்முடைய ஜனத்தை அழைத்திருக்கிறீர்.

உம்மை உம்முடைய ஜனத்துடன் உடலில் தலைபோல இணைத்துக்கொண்டு நீர் செய்கிற வேண்டுதற் றொழிலில் அவர்களை உடன் பங்காளராக்குகிறீர். அந்த வேண்டுதலால் மாத்திரமே நீர் சம்பாதித்த இரட்சிப்பும் பிதாவின் மகிமையும் உலகில் பரிபூரணமாய் வெளிப்பட்டு பலிக்கும். என் ஆண்டவரே! முன்னிலும் அதிகமாய்த் துணிந்து உம்மையடுத்து ஜெபம் பண்ண எனக்குப் போதியும் என்று உம்மை வேண்டுகிறேன். உம்முடைய ஜீவியம் ஜெபஜீவியம், உம்முடைய ஜீவியமே என் ஜீவியம். ஆண்டவரே! உம்மிலே—உம்மைப்போலே—ஜெபிக்க எனக்குப் போதியும்.

ஆ என் ஆண்டவரே! நீர் பிதாவிலும் நான் உம்மிலும் நீர் என்னிலும் இருக்கிறதை எனக்கு விளங்க உணர்த்தும். அப்படி நீர் உணர்த்துவீர் என்று உம்முடைய சீஷருக்கு வாக்கருளியிருக்கிறீர். இந்த வாக்கை விசேஷமாய் என்னிடத்தில் நிறைவேற்றியருளும். இரண்டாயிருப்பதை ஒன்றாக்கி வைக்கிற தேவாவியானவருடைய வல்லமை எனக்குள் பாய்ந்து, என் முழு ஜீவியத்தையும் உம்மிலும் உம்முடைய வேண்டுதலிலும் ஒன்றித்து நிலைத்திருக்கிற ஜீவியமாக்குவதாக. அதினால் என் ஜெபம் உம்முடைய ஜெபத்தின் எதிரொலியாகும். மேலும் அதினால் என் பேச்சு உம்மிலும் உமது பேச்சு என்னிலுமிருந்து புறப்படுவதை பிதாவின் திருச்செவிகள் கேட்கும். கர்த்தராகிய இயேசுவே! சகலத்திலும் உமது சிந்தை எனக்குள் இருப்பதாக, என் ஜீவியம் சகலத்திலும் உமக்குள் இருப்பதாக. அதினால் உமது வேண்டுதலால் விளையும் நன்மைகள் உலகத்திற்குப் பாய்கிற வாய்க்காலாயிருக்க நான் பக்குவப்படுவேன். ஆமென்.

## மேற்கோள்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிற புதுயுகம் தேவாவியாகிய பரமமழை புவியிலே வருஷிக்கப்படுகிற நாள்முதல் ஆரம்பமாகும் என்று கிறிஸ்து குறித்துக் காட்டியிருக்கிறார். இந்த யுகத்திலேதான் இரக்ஷண்ணியமுறை மேலும் மேலும் வெளிச்சமாய்ச் சீஷருக்கு விளங்கும். இயேசு பிதாவோடு ஒன்றாயிருக்கிறதுபோலவே தாங்கள் இயேசுவோடு ஒன்றாயிருக்கிறதை இந்த யுகத்திலேதான் அவர்





கள் அநுபவசித்தியாய் அறிந்துகொள்வார்கள். இந்த யுகத்திலேதான் அவர்கள் இயேசுவின் நாமத்தில் வேண்டுதல் செய்ய நேரே பிதாவினிடம் போவார்கள். "அந்தநாளில், உங்களுக்காக பிதாவை நான் கேட்டுக்கொள்வேன் என்று உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை" என்று இயேசு விளம்புகிறார். இதற்குமுன் அவர் தேவாவி வருகைக்கு முந்தின காலத்தைக்குறித்து அவர்களோடு பேசினபோது: "நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அவர் தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருள்வார்" என்று சொன்னார். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிற ஜெபத்திலே நடுமைய நினைவு என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் நாம் தேவனோடு ஒன்றாக்கப்பட்டிருப்பதைக் கண்டுகொள்வது. தேவனுக்கும் நமக்கும் ஜீவனுள்ள உயிராயிருந்துகொண்டு இருவரையும் இணைக்கிறவர் அவரே (யோவா. 17. 23. "நான் அவர்களிலும் நீர் என்னிலும்."). நாம் இயேசுவில் இருக்கும்போது, பிதா நம்மோடும் நாம் பிதாவோடும் இணைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்போம். இயேசுகிறிஸ்து அறிவுக்குரியதோர் விஷயம்போல நமது புத்திக்கு மாத்திரமல்ல, ஆளை ஆள் அகம்கலந்து அறியும்பிரகாரம் நமது உள்ளானுக்கும் தெரியவேண்டும். தேவனுடைய பிதாத்தன்மையும் பிதாவன்பும் மனுஷீகத்துடனும் மனுஷீகம் தேவனுடனும் விரோதமின்றிச் சம்பூரணமாய்ப் பொருந்தியிருக்கும் ஆள் அவரொருவரே. அவரை நமது உண்மையான தேவனுக்கும் நமக்கும் உறவு உண்டாக்கிவைக்கிற ஜீவனுள்ள ஆளாக அறிந்திருக்கவேண்டும். பிதாவிடத்தில் நேருக்குநேராய்ப் போய் ஜெபிக்கிறகாலம் வரும்போது நமக்கு இனி கிறிஸ்துவின் மூலியம் அவசியமற்றதென்று நினைக்கலாகாது; அப்போதும் அது அவசியமே. ஆனால் அப்போது அவருடைய மூலியம் நமக்கு எப்படியிருக்குமென்றால், நமக்கு அந்நியமாய் நமக்குப் புறத்திலேயிருக்கிறதாய் அல்ல, நமக்குள்ளேயே இருக்கிற ஆவிக்குரிய மெய்யான, ஜீவ அநுபவமாயிருக்கும். ஆகவே, இதுவரையில் நம்மோடுகூட கிறிஸ்துவாயிருந்துகொண்டு நடுமூலியராயிருந்தவர் இனி நம்முள்ளேயே கிறிஸ்துவாயிருந்துகொண்டு நடுமூலியராயிருப்பார்.

கிறிஸ்துவில் இருக்கிற தேவனுக்கும் கிறிஸ்துவில் இருக்கிற நமக்கும் உள்ள இந்த ஒருமை இன்னும் நமது அநுபவத்திற்கு அகப்படாதிருக்கையிலும், குற்றமுள்ள மனச்சாட்சிவாதையிலே அது மங்கிப்போகும் வேளையிலும், விசுவாசிகளுடைய ஜெபம் புரிந்து பேசுகிறவராகிய நமது ஆண்டவருடைய உதவியை நோக்கிக்கொண்டிருக்கும். அந்தத் தருணங்களில் அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (யோவா. 16. 26 ஐ 14. 16, 17; 9. 20 ஒடு ஒத்துப்பார்.

லூக். 22. 32. 1 யோவா. 2. 1.). இப்படி நாம் கிறிஸ்துவை ஜெபத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறவராக வைத்துக்கொள்வதும் அவர் நாமத்தில் நாம் ஜெபிப்பதும் ஒன்றல்ல. இரண்டும் ஒன்றுதான் என்று சொல்வது யோவா. 16. 26-க்குப் பொருந்தவே பொருந்தாது. கிறிஸ்துவின் பரிந்துபேசுதல் எதற்காகவென்றால், அவருடனும் அவருள் இருக்கிற பிதாவுடனும் நாமே நேராய் உள்ளான ஜீவஐக்கியம் செய்தல் நமக்குக் கிடைப்பதற்கு. இந்த ஐக்கியம் நமக்குக் கிடைக்கிறதினால் கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மிடம் நெருங்கிவந்து நம்மோடு ஐக்கியம் செய்கிறார். நாமும் சகல விஷயத்திலும் நேருக்கு நேராய் கிறிஸ்துவுக்குள் அவரிடம் நெருங்கி நேச உறவாடுகிறோம். இவ்வாறே, இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிற ஜெபமும் அவருடைய கட்டளைப்படி ஜெபிக்கிற ஜெபமும் ஒன்றல்ல. "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்கிற ஜெபத்தைக் கர்த்தர் சொல்லித் தந்தநாள் முதற்கொண்டு அவருடைய சீஷர்கள் அவருடைய கட்டளைப்படிக்கே ஜெபித்து வந்தார்கள். அப்படியிருந்தும், அவர் அவர்களைப் பார்த்து: "இதுவரையில் நீங்கள் என் நாமத்திலே ஜெபிக்கவில்லை" என்று சொல்லுகிறார். கிறிஸ்து நமக்கும் தேவனுக்கும் நடுவிலிருந்து செய்கிற இருபக்கச் சமரசம் நம்முள்ளேயே நடைபெற்றுவருகிற ஜீவனும் வல்லமையும் ஆகவேண்டும். அதினால், அவருடைய வார்த்தையிலும் செய்கையிலும் வெளிப்பட்டுத் துலங்கின அவருடைய சிந்தை நமது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய உட்கரணங்களையெல்லாம் ஆட்கொண்டு அவைகளில் நிறைந்திருக்கும். அதினால், நம்மை வாஸ்தவமாகவே தேவனோடு ஒற்றுமைசெய்துவைத்திருக்கிற ஒப்புரவாக்கியராய் நமது விசுவாசத்தினாலும் அன்பினாலும் இயேசு வந்திருக்கிறதைப் பார்ப்போம். இப்படிப் பார்க்கக் கிடைக்கும்போது, அவருக்குரிய தன்மை, அவர் செய்திருக்கிற வேலை, இவ்விரண்டும் உட்பட்ட அவருடைய நாமம் (நம்பொருட்டு மாத்திரமல்ல) நம்முள்ளேயே வாஸ்தவமாக வந்து வல்லமை செய்யும். அப்போதுதான், நாம் துணிந்து நேரே பிதாவிடம் போகவும் தப்பாமல் பலிக்கிற வேண்டுதல் செய்யவும்கூடும். பிதாவிடத்தில் தாராளமாய் நெருங்கிப் பேச குமாரனுக்கு இருக்கிற சிலாக்கியமே இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிற ஜெபம். இயேசு முதற்பேறானவராதலால் அவருக்கு அந்தச் சிலாக்கியம் இருக்கிறது. அதே மாதிரி சிலாக்கியம் நமக்கு அவரால் வரவேண்டும். அது நமக்கு வந்தால், நாம் இயேசுவுக்குரிய இடத்திலிருந்து ஜெபிக்கிறோம். ஆனால் இனி இயேசு நமக்குத் தேவையில்லாமல் நாம் அவரிடத்-



தைப் பிடித்துக்கொள்ளுகிறதாய் நினைக்கக்கூடாது; எவ்வளவுக்கு நம்முள் அவரும் அவருள் நாமும் இருக்கிறோமோ அவ்வளவுக்கே நாம் அவருக்குரிய இடத்திலிருந்து ஜெபிக்கலாம். நாம் நேரே பிதாவண்டை நெருங்கிப் போகிறோம்; ஆனால், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து தனியே இருக்கிற பிதாவண்டை நாம் நெருங்குகிறதாய் நினைக்கலாகாது; பிதா கிறிஸ்துவுக்குள் இருக்கிறதினால் மாத்திரமே நாம் அவரண்டை நெருங்கிப் போகலாம். எங்கே இப்படி உள்மனுஷன் கிறிஸ்துவுக்குள்ளேயே குடியிருந்து அவரைத் தன் உயிர்த்தோழனாகப் பெற்றிருக்கவில்லையோ, எங்கே அவருடைய வசனம் அதற்குரிய தேவாவி வல்லமையைக் காட்டி உள்ளத்தில் ஆட்சி செய்கிறதில்லையோ, எங்கே அவருடைய சத்தியமும் ஜீவனும் நமது ஆத்துமாவுக்கு ஜீவனாகவில்லையோ, அங்கே "உமது நேசகுமாரன் மூலமாய் வேண்டுகிறோம்" என்கிற வாய்பாட்டு ஜெபம் பலிக்கும் என்று நினைப்பது விருதா.—[தீபிங்கன் கலாசாலை பெக்கு வேதபண்டிதர் இயற்றின கிறிஸ்தவ தருமநூல்.]

# இருபத்தேழாம் பாடம்.

## 'பிதாவே, நான் விரும்புகிறேன்'

அல்லது,

## பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து.

"பிதாவே, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே நீர் எனக்குத் தந்தவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்." (யோவா. 17. 24.)

தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வந்துவிட்ட பிறகு அதில் எப்பேர்ப்பட்ட புதிய ஜீவியம் செய்யவேண்டும் என்பதை இயேசு விடைபெற்றுப் பேச்சுப் பேசின சமயத்தில் தமது சீஷர்களுக்குத் தீர்க்கமாய் விளக்குகிறார். அவர்கள் தேவாவியைத் தங்கள் உள்ளங்களில் வாசம் செய்யப் பெற்-

றிருக்கவேண்டும்; பரம திராக்ஷையாகிய அவரில் அவர்கள் ஐக்கியப்பட்டிருக்கவேண்டும்; அவருக்காக அவர்கள் சாட்சிகொடுத்துப் பாடநுபவிக்கவேண்டும். இதுவே அவர்கள் செய்யவேண்டிய புதிய ஜீவியம். இதினாலேயே அவர்களுக்குப் பாக்கியம்வரும். இப்படி அவர்கள் இனிச் செய்யவேண்டிய ஜீவியத்தை விவரித்துக் காட்டும்போது அவர்களுடைய ஜெபத்திற்கு எப்பேர்ப்பட்ட வரம்பில்லாத வல்லமை இருக்கும் என்பதையும் ஆண்டவர் அவர்களுக்கு இடைக்கிடை திரும்பத் திரும்பத் தெரிவிக்கிறார். இப்போது அந்தப் பேச்சை முடிக்குஞ்சமயத்தில் அவர் தாமே ஜெபிக்கத் தலைப்படுகிறார். அவர் இனிப் பரலோகத்தில் பிரதான ஆசாரியராய் இருந்துகொண்டு தமது சீஷர்களுக்காகச் செய்யப்போகிற ஜெபம் என்னமாதிரி இருக்கும் என்று காட்டி அவர்களை உற்சாகப்படுத்தும்பொருட்டு அவர் இந்தத் தருணத்தில் பிதாவை நோக்கிப் பண்ணின ஜெபத்தை அவர்களுக்கு அருமையான பிதிர்தானமாய்க் கொடுக்கிறார். அவர் இப்படிச் செய்கிறதற்கு வேறொரு முகாந்தரமும் இருக்கிறது. அதென்னவெனில், அவர் இனிச் செய்யப்போகிற வேண்டுதற்றொழிலில் அவர்களும் உடந்தைக்காரராய் இருக்கப்போகிறவர்கள்; ஆகலால், இந்தப் பரிசுத்த வேலையைச் செய்யவேண்டிய மாதிரி இன்னதென்று அவர்களும் நாமும் அறிந்திருக்கவேண்டும். இந்தக் கடைசி இராவில் நமதாண்டவர் போதித்த போதகத்தில் ஜெபத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பிரமிக்கத்தக்க வாக்குகளெல்லாம் நமது சுயலாபத்திற்காக அல்ல, ஆண்டவருடைய காரியத்திற்காகவும் அவருடைய இராஜ்யத்தின் நன்மைக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிந்துகொண்டோம். ஆகலால், அவருடைய நாமத்தில் செய்யப்படுகிற ஜெபம் என்னமாதிரி இருக்கவேண்டும், அதற்கு என்னென்ன கைகூடும் என்பதை நாம் ஆண்டவரிடத்தில் மாத்திரமே கேட்டறியக்கூடும். அவருடைய நாமத்தில் ஜெபிக்கிறது என்பது முழுமையும் அவரில் ஒன்றித்திருந்து ஜெபிக்கிறதுதான் என்று அறிந்திருக்கிறோம். ஆகவே, இயேசுவின் நாமத்தில் செய்யப்படுகிற ஜெபத்திற்கு எதைக் கேட்டு வாங்க உரி



மையுண்டு என்று அவர் மொழிந்த இந்தப் பிரதான ஆசாரிய ஜெபத்திலே நாம் படிக்கலாம்.

இந்த ஜெபம் வழக்கமாய் மூன்று பிரிவாய் வகுக்கப்படும். முதலில் நமதாண்டவர் தமக்காகவும் (1–5. வச.), அதின்பிறகு தமது சீஷர்களுக்காகவும் (6–19.), கடைசியில் யுகமுடிவுமட்டும் எந்நாளும் இருக்கப்போகிற சகல விசுவாசிகளுக்காகவும் (20–26.) ஜெபிக்கிறார். பிறருக்காக மன்றாடுவதில் இயேசுவைப் பின்பற்றி, அவர் நாமத்தில் ஜெபிப்பதினால் அண்டை அயலாருக்கு எவ்வளவு நன்மையுண்டாகும் என்று பரீட்சித்துப் பார்க்க ஆசிக்கிறவன் தேவாவியைத் தாழ்மையாய் வணங்கி, ஜெபபாடசாலையில் முக்கிய பாடங்களுள் ஒன்றாகிய இந்த ஆச்சரியமான ஜெபத்தைத் தனக்கு விளக்கும்படி பிரார்த்திப்பான்.

பிதாவைத் தாம் மகிமைப்படுத்தும்படிக்கு அவர் தம்மை மகிமைப்படுத்த வேண்டுமென்று இயேசு எல்லாவற்றிற்கும் முந்தித் தமக்காக ஜெபிக்கிறார். "பிதாவே, உமது குமாரனை மகிமைப்படுத்தும். இப்பொழுது பிதாவே, என்னை மகிமைப்படுத்தும்." இப்படி ஜெபிக்கத் தமக்கு உள்ள முகாந்தரத்தையும் அவர் தெரிவிக்கிறார். தேவலோகத்தில் இதற்கு முன்னே பிதாவுக்கும் குமாரனுக்கும் ஒரு பரிசுத்த உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. பிதா அவருக்கு ஒரு கிரியையை நியமித்துக் கொடுத்து அதைச் சரிவர முடித்தால், அதற்குப் பிரதிபலனாக, மாம்சமான யாவர்மேலும் அவருக்கு அதிகாரங் கொடுக்க வாக்களித்திருந்தார். அவருக்கு நியமித்த கிரியையை அவர் செய்து முடித்துப் பிதாவை மகிமைப்படுத்திவிட்டார். இப்பொழுது, அவர் மனதில் பிதாவை இன்னம் அதிகமாய் மகிமைப்படுத்தவேண்டும் என்கிற ஒரே நோக்கமே குடிகொண்டிருக்கிறது. அதினால் அவர் துணிவின்மேல் துணிவுகொண்டு, தமது ஜனத்திற்குத் தம்மால் எதெது ஆகுமென்று சொல்லியிருந்தாரோ அதெல்லாம் இனி அவர்களுக்கு ஆகும்பொருட்டு பிதா தம்மை மகிமைப்படுத்தும்படி வேண்டுகிறார்.

இயேசுவின் சீஷா! நீ ஆசாரியன், நீ செய்யவேண்டிய தொழில் வேண்டுதல். அதெப்படிச் செய்யவேண்டும் என்

பதற்கு நீ படிக்கவேண்டிய முதல்பாடம் இங்கே இருக்கிறது. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறது அவரில் நாம் ஒன்றித்திருந்து, அவருள்ளத்தோடு நம்முள்ளம் ஒத்து ஜெபிக்கிறதுதான். குமாரன் ஜெபம் பண்ணத் தொடங்கின போது: பிதா தமக்குக் கொடுத்திருந்த வேலை, அதில் தாம் காட்டின கீழ்ப்படிதல், தம்முள்ளத்தில் பிதாவுக்கு மகிமையுண்டாக்கவேண்டுமென்றிருக்கிற ஆசை, இந்த முகாந்தரங்களைச் சொல்லி, பிதா காரியம் தம் காரியமென்று தெளிவாய்க் காண்பிக்கிறார். நீயும் அப்படிச் செய். கிறிஸ்துவிலிருக்கிற பிதாவண்டை போய் அவர் முகத்தைப் பார்த்து, கிறிஸ்து செய்து முடித்திருக்கிற வேலையினிமித்தமே நீ வந்திருக்கிறதாகச் சொல். அவர் முடித்திருக்கிற வேலையில் உனக்குப் பங்கு இருக்கிறதையும் அதை நம்பி அதிலேயே நீ பிழைத்திருக்கிறதையும் அவருக்குத் தெரிவி. நீயுங்கூட பிதா உனக்கு நியமித்துக் கொடுத்திருக்கிற வேலையைச் செய்து முடிப்பதற்கும் அவருடைய மகிமைக்காகவே பிழைப்பதற்கும் உன்னை ஒப்புவித்திருக்கிறாய் என்று அவருக்குச் சொல். அதற்குமேல், குமாரன் உன்னில் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்று துணிந்து கேள். இதுவே இயேசுவின் நாமத்தில், இயேசுவின் வாய்ச்சொல்லாலேயே இயேசுவின் ஆவிபிடித்து, இயேசுவிலேயே ஒன்றித்திருந்து, ஜெபம்பண்ணுவதாகும். இந்த ஜெபம் வல்லமைசெய்யும். நீ இயேசுவுடன்கூடிப் பிதாவை மகிமைப்படுத்தும்போது, பிதா இயேசுவை மகிமைப்படுத்தி, அவர் நாமத்தில் நீ கேட்பதைச் செய்வார். இதுவிஷயத்தில் பிதாகாரியம் தம்காரியமென்று இயேசு தெளிவாய் அறிந்திருந்ததுபோல, அவர் காரியம் உன் காரியம் என்று நீயும் தெளிவாய் அறிந்து, பிதாவை மகிமைப்படுத்துவதே சிந்தையாயிருந்து, அவரைப் பார்த்து நீ கேட்கிறதையெல்லாம் அவருடைய மகிமைக்காகவே கேட்டால், அப்போதுமாத்திரமே நீ பிறருக்காகப் பண்ணுகிற ஜெபம் கிறிஸ்துவுக்குப் பலித்தமாதிரி உனக்கும் பலிக்கும்.

பிறகு நமது ஆண்டவர் தமது சிஷ்யவட்டத்துள் இருக்கிறவர்களுக்காக ஜெபிக்கிறார். அவர்களைப் பிதா தமக்குத் தந்தவர்கள் என்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளைத் தள்ளா-



மல் ஏற்றுக்கொண்டதே அவர்களுக்கு இருந்த முக்கிய இலக்ஷணம். பிதா தம்மை அனுப்பினதுபோல தாம் அவர்களை இனித் தமக்கு பதிலாய் உலகத்தில் அனுப்புகிறதாக அவர் தெரிவிக்கிறார். அவர்களுக்காக அவர் பிதாவைப் பார்த்து இரண்டு காரியங்கள் கேட்கிறார்: தீயோனால் வரும் மோசத்திற்கு அவர்களைக் காக்கவும், அவர்களுக்காக அவர் தம்மைப் பரிசுத்தம் பண்ணுகிறபடியால் அவர்களையும் திருவசனத்தினாலே பரிசுத்தம் பண்ணவுமே.

ஆண்டவருக்கு இருந்ததுபோலவே ஒவ்வொரு விசுவாசிக்கும் அவனுக்கு நேரே அடுத்திருக்கிற ஒரு ஜெப வட்டம் இருக்கிறது. அவனதாகிய அந்த வட்டத்தில் இருக்கிறவர்களுக்காக அவன் முந்தி ஜெபிக்கவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக, உபாத்திமார் தங்கள் மாணாக்கருக்காக, ஞானஆயர்கள் தங்கள் ஞானமந்தைகளுக்காக, பற்பல ஊழியம் செய்கிறவர்கள் தங்கள் பொறுப்புக்கு விடப்பட்டிருக்கிறவர்களுக்காக, எல்லா விசுவாசிகளும் அவரவர் உரித்தாய்க் கவலைப்பட வேண்டியவர்களுக்காக, ஜெபிக்க வேண்டும். பிறருக்காக வேண்டுதல் செய்வோர் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது எதுவென்றால்: இன்னின்ன பேர்களுக்கு இன்னின்ன நன்மைகள் என்று வகுத்து குறித்துக் கேட்கவேண்டும். அவ்வாறு செய்கையிலும், நாம் எல்லாவற்றிற்கும் முந்தி எப்போதும் அவர்களுக்காகக் கேட்கவேண்டியது திருவசனத்தை ஏற்றுக்கொள்ளுகிற மனதுதான். ஆயினும் நமது ஆண்டவர்மாதிரி: "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" என்று நாமும் சொல்லத்தக்கதாயிருந்தாலொழிய மற்றப்படி இந்த ஜெபம் பலிக்காது. ஆத்துமாக்களுக்காக நாம் வேண்டுதல் செய்கையில் நமக்குத் துணிவும் வல்லமையும் தருவது இதுதான். நாம் அவர்களுக்காக ஜெபிப்பது மாத்திரம் போதாது, நாம் அவர்களுக்குப் படும்படி பேசவும் வேண்டும். நாம் பேசின வசனத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டபிறகு, அவர்கள் தீயோனுடைய மோசத்தில் சிக்கிக் கொள்ளாமல் காக்கப்படவும் அவர்கள் ஏற்றுக்கொண்ட வசனத்தினால் பரிசுத்தம் பண்ணப்படவும் நாம் வெகு அதிக

மாய் ஜெபிக்கவேண்டும். நமது ஜெபத்திற்கு உட்பட்டவர்கள் தவறி விழுந்து கெடுகிறதைப் பார்த்தால், நாம் அவர்களைக்குறித்து நம்பிக்கை யிழந்துவிடாமலும், அவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்த்துக்கொண்டிராமலும், நமது பொறுப்பைவிட்டு அவர்களை இனித் தள்ளிவிடாமலும்: “பிதாவே, உம்முடைய நாமத்திலே அவர்களைக் காத்துக்கொள்ளும்,” “உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்” என்று அவர்களுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கவேண்டும். இயேசுவின் நாமத்தில் செய்கிற ஜெபத்திற்குப் பெரிய வல்லமை இருக்கிறது: “நீங்கள் விரும்புகிறது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.”

அதற்கப்பால், இன்னம் பெரிய வட்டத்தில் உள்ளவர்களுக்காக நமதாண்டவர் செய்கிற ஜெபம் வருகிறது. “நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.” அவருடைய ஆசாரிய உள்ளம் விரிவாகி சகல இடத்தாரையும் சகல காலத்தாரையும் அணைத்துக்கொள்ளுகிறது. அவரைச் சேர்ந்தவர்கள் எங்கிருந்தாலும் ஒன்றாயிருக்கிற வரத்தை அவர்களுக்கு அருளும்படி வேண்டுகிறார். அவர்களுக்குள் உண்டாகிற இந்த ஒருமைப்பாடுதான் அவர் தேவனால் அனுப்பப்பட்டு வந்தவர் என்பதை உலகத்திற்கு ரூபிக்கிற சாக்ஷி. மேலும், அவருக்கு இருக்கிற மகிமையிலே அவருடனேகூட அவருடையவர்களும் இனி என்றைக்கும் வந்திருக்கவேண்டும் என்றும், அந்தப் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கும்வரையில்: “நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்தில் இருக்கும்படிக்கும் நானும் அவர்களிடத்தில் இருக்கும்படிக்கும் விரும்புகிறேன்” என்றும் பிதாவை மன்றாடுகிறார்.

தன் எல்லைக்குள் இருக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணி அது செய்கிற வல்லமையை வழக்கமாய் அநுபவித்துக் கண்ட இயேசுவின் சீஷன் இனி அந்தச் சிறு எல்லைக்குள்ளேயே கட்டுப்பட்டிருக்கமாட்டான். இனிமேல் அவன் உலகெங்கும் இருக்கிற திருச்சபைக்காகவும் அதின் பற்பல கிளைகளுக்



காகவும் ஜெபிப்பான். அப்படி ஜெபிக்கும்போது, திருச்சபைக்கு ஆவியொருமையும் அன்பொருமையும் கிடைக்க வேண்டுமென்பதே அவனுடைய முக்கிய வேண்டுதலாயிருக்கும். உலகத்தில் ஊடாடுகிற தற்பொழிவையும், மானிடரை ஒருவரோடொருவர் ஒட்டாமல் வெட்டிப் பிரிக்கிற பிரிவினையையும் தொலைத்து, சகல மானிடருள்ளும் அன்பே குடிகொண்டிருக்கப்பண்ணுகிற பேரதிசயச் சமர்த்துள்ள கிறிஸ்து தேவனாலே தேவலோகத்திலிருந்து அனுப்பப்பட்டுவந்த தேவகுமாரனாகிய அருள்மூர்த்தி என்று பரிஷ்காரமாய் உலகத்திற்கு ரூபிக்கிற ஒருமைப்பாட்டைத் திருச்சபைக்கு அருள வேண்டுமென்று அவன் வேண்டுவான். பலபல ஏற்பாடுகளினால் வெளிக்கட்டுக் கட்டி உண்டாகிற வெளியொருமை அல்ல, ஆவியிலும் உண்மையிலும் முளைக்கிற உள்ளொருமை திருச்சபையில் உண்டாகி உலகத்திற்குப் பிரஸ்தாபப்பட வேண்டுமென்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜெபிக்கவேண்டும்.

இதுவரையில் நமது ஜெபத்தில் இருக்கவேண்டிய உள்ளீட்டைப் பார்த்தோம். இனி அது நடக்கவேண்டிய மாதிரியைப் பார்ப்போம். இயேசு ஜெபித்தமாதிரி இது: “பிதாவே! நான் விரும்புகிறேன்.” பிதாவுக்கு அவர் குமாரனாயிருக்கையாலும் பிதா அவருக்குக் கொடுத்திருக்கிற வாக்கின் நிமித்தமும் அவர்தாமே முடித்திருக்கிற கிரியையை முன்னிட்டும் இப்படி ஜெபிக்க அவருக்கு உரிமை உண்டு. “என்னைக் கேளும் அப்பொழுது உமக்குக் கொடுப்பேன்,” என்று பிதா அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தார். பிதா அளித்திருந்த இந்த வாக்கையே அவர் மேற்சொன்னமாதிரி உபயோகித்துக் கொள்ளுகிறார். நமக்கும் இப்பேர்ப்பட்ட வாக்கை இயேசு அருளியிருக்கிறார்: “நீங்கள் விரும்புவது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.” இதினால் அவர் என்னைப் பார்த்து: நீ விரும்புகிறது எதுவோ அதை என் நாமத்தினாலே கேள் என்று சொல்லுகிறார். விசுவாசி தன் உள்ளத்தில் மானிடச் சேஷ்டையை அறத்தொலைத்து கிறிஸ்துவே சகலத்திற்கும் சகலமாகிற ஜீவ ஐக்கியம் செய்துகொண்டு கிறிஸ்துவில் நிலைத்திருந்தால், அவன் தன் பிரதான ஆசாரியர் ஜெபித்த அதே வார்த்தையால் ஜெபிக்கலாம். “நீ விரும்புகிறது என்ன?”

என்று பிதா கேட்கும்போது அவன்: "பிதாவே! நீர் வாக்கருளினதையெல்லாம் நான் விரும்புகிறேன்" என்று துணிந்து சொல்லலாம். எனக்குச் சித்தமானது இன்னது என்று சுட்டிக் கேட்கிற தைரியம் மெய்யாகவே தேவனுக்குப் பிரீதிதான் என்கிற நிச்சயம் உண்மையான விசுவாசமேயொழிய வேறல்ல; தேவனைக் கனம்பண்ணுகிற ஜெபமாதிரி அதுதான். ஆகிலும், அந்தமாதிரி ஜெபிக்க முதலில் நமது மனம் துணியாது; நமக்கு அதற்கு தைரியமும் வராது, வல்லமையும் இராது. ஆனால், தேவசித்தத்திலே நமது சுயசித்தம் சமூலமும் ஒடுங்கி நிற்கிற நிலை கிடைக்கும்போது, அப்படி ஜெபிக்கிற கிருபை நமக்கு அருளப்படும். எவனுடைய சுயசித்தம் அவனாண்டவருடைய சித்தத்திற்குள் ஒடுங்கி நிற்குமோ அவனுக்கு அப்பேர்ப்பட்ட கிருபை அளிக்கப்படும் என்பதற்குச் சந்தேகமே இல்லை. தன் சுயசித்தத்தை இழந்துவிடுகிறவன் அதை மறுபடியும் கண்டடைவான்; சுயசித்தத்தைக் கட்டோடே விட்டுவிடுகிறவன் புதுப்பிக்கப்பட்டு தெய்வீக வல்லமையால் பலப்படுத்தப்பட்டதாக அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வான். "பிதாவே! நான் விரும்புகிறேன்:" இந்தமாதிரியே நமது ஆண்டவர் தேவலோகத்தில் சதா நடைபெற்று வருகிறதும் தப்பாமல் பலிக்கிறதுமான நித்திய வேண்டுதல் செய்கிறார். அவருடன் ஒன்றித்திருப்பதினால் மாத்திரமே நமது வேண்டுதலுக்கு வல்லமை வரும்; அவரோடு ஒன்றித்திருக்கும்போது அதற்குள்ள வல்லமை பெரிது. நாம் அவருடைய நாமத்திற்குள்ளேயே பிழைத்து, நடந்து, சகலத்தையும் செய்து, அவரில் நிலைத்திருந்தால்;—நாம் செய்கிற ஒவ்வொரு வேண்டுதலையும் சரியான மாற்றுள்ளதா என்று அவருடைய வார்த்தையிலும் ஆவியிலும் உரைத்துப் பார்த்து, அதை அவரிலிருந்து உற்பத்தியாகிப் பாய்கிற ஜெபப்போற்று வெள்ளத்தில் கலந்து பிதாவின் சமுகத்திற்கு ஏறிப்போகப் பண்ணினால்;—அப்போது நாம் கேட்டது கிடைக்கும் என்கிற முழுநிச்சயம் நமக்கு இருக்கும். ஏனெனில், அப்போது: "பிதாவே! இதை நான் விரும்புகிறேன்" என்று சொல்லத்தக்க தைரியம் தேவாவியினாலே நமது உள்ளத்திற்குள் ஊதப்பட்டிருக்கும். நாம் ஒன்றுமற்று அவருக்குள் ஒடுங்கி இருக்கும்



தருணத்தில் நாம் பலவீனமாயிருந்துகொண்டே பலமுள்ளவர்களாகி ஜெபிக்கிறதைக் காண்போம்.

இயேசுவின் சீஷா! ஆசாரிய வேண்டுதல் செய்வதில் நீ உன் ஆண்டவருக்கொப்பாய் இருப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறாய். வீணாய் மடிகிற மனுஷருக்காக மன்றாடி மேற்கொள்ளுகிறது நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற இலக்கு. மனதிற்கும் எட்டாத இந்த மகிமையான இலக்கைக் கருத்தில் வைத்து நாம் பிழைக்கத் தொடங்குவது எப்போது? இதற்காக நமக்கு வேண்டியதை எல்லாம் தர தேவன் காத்துக்கொண்டிருக்கிறார். அவரை விடாப்பிடியாய்ப் பிடிக்கிற நமது சித்தத்திற்கே அவர் அதையெல்லாம் தருவார். அவர் தரக் காத்திருக்கிறது என்னென்ன என்று அறிய நமது சித்தத்திற்கு வெளிச்சமும் அவைகளை வாங்கிக்கொள்ள அதற்குப் பலமும் தேவை. இந்த வெளிச்சத்தையும் பலத்தையும் வேண்டுமளவு நமது சித்தத்திற்குத் தர தேவாவி காத்திருக்கிறார். ஆனால், தாழ்மைவேஷம் போட்டுக்கொண்டிருக்கிற சோம்பல் நம்மைப் பிடித்து அவரிடம் போகாதபடி தடுக்கிறது. இந்தச் சோம்பலை உதறித்தள்ளி, நம்மை முற்றும் நாம் தேவாவிக்கு ஆதீனப்படுத்திவிடுகிற காலம் எப்போது?

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஸ்தோத்திரிக்கப்பட்ட என் பிரதான ஆசாரியரே! பலிக்கிற வேண்டுதல் செய்கிற உம்முடைய வல்லமையிலே பங்கு வாங்கிக்கொள்ள நீர் என்னை அழைக்கிறதற்கு நான் எம்மாத்திரம்! இந்த ஆச்சரியமான சிலாக்கியத்தை அநுபவிப்பதற்கே நீர் உமது ஜனத்தை மீட்டுக்கொண்டீர். ஆ என் ஆண்டவரே! அதை அறிந்து, நம்பி, அநுஷ்டிக்கிறதற்கு நான் ஏன் இத்தனை அசடனாயிருக்கிறேனோ தெரியவில்லையே! ஆ ஆண்டவரே! இப்பூவுலகில் என் வட்டத்துள் அகப்பட்ட எல்லாருக்கும் தேவையான நன்மையை பரலோகத்திலிருந்து அழைத்துத்தர இடைவிடாமல் ஜெபிப்பதே என் ஜீவகாலத்து ஓயா வேலையாய் இருக்கவும் அது நாளுக்குநாள் அதிகரிக்கவும் நீர் கிருபை செய்வீராக.

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! நீர் எனக்குக் கொடுத்திருக்கிற இந்த வேலையை இப்போது ஒப்புக்கொண்டு செய்ய வருகிறேன். அதின்பொருட்டு நான் எல்லாவற்றையும் வெறுத்து உம்மைப் பின்பற்றுவேன். உம்மை நம்பி எனது ஆவியுடல் யாவையும் உமது கைவசத்தில் விட்டுவிடப் பிரியப்படுகிறேன். விழித்திருந்து ஜெபித்துப் போராடுகிறவர்களும், போராட்டத்தில் மேற்கொள்ள வல்லவர்களாகிய தேவப் பிரபுக்களான இஸ்ரவேல்களும் சேர்ந்திருக்கிற உமது ஜெபச்சேனையிலே நானும் ஒருவனாயிருப்பதற்கு நீர் என்னை உருப்படுத்திப் பழக்கி உற்சாகப்படுத்துவீராக. உமக்குப் பிதா கொடுத்தவர்களைக் கூட்டிச் சேர்த்து, பரிசுத்தமாக்கி, ஒருமைப்படுத்துவதில் வெளிப்பட்டுத் துலங்குகிற தேவ மகிமையை நாடுகிற ஓரே நாட்டத்தை என் உள்ளத்தில் நிரப்பி வைப்பதற்கு அதை நீர் ஒப்புக்கொள்ளும். என் புத்தியையும் நீரே ஒப்புக்கொண்டு நன்மை வரும்படி ஜெபிக்கிற வேளை இன்னது என்று அறிகிற ஞானத்தை அதற்குக் கற்றுக்கொடும். தேவனுடைய சமுகத்தில் நான் எப்பொழுதும் ஆசாரியனாக நின்று அவர் நாமத்தில் ஆசீர்வதிப்பதற்கு என்னை நீர் ஒப்புக்கொண்டு ஆளாக்குவீராக.

ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! ஞானஜீவியம் முழுமையிலும் நீரே சகலத்திற்கும் சகலம், நானோ ஒன்றுக்கும் உதவாதவன். இந்த அநுபவம் எனக்கு இங்கேயே கிடைக்கப்பண்ணும். மேலும், தனக்கென்று எதையும் தேடாமலும் வைத்துக்கொள்ளாமலும் இருக்கிறவனே எல்லாவற்றையும் தேவனிடத்தில் வாங்கிக்கொள்வான். உம்முடைய நித்திய ஜெப ஊழியத்திலே உம்மோடு உடன்பங்கு வாங்கிக்கொள்ளுகிற இருதயம் அவனுக்கே கிடைக்கும். இந்த அநுபவமும் இப்புவியிலேயே எனக்கு வாய்க்கப்பண்ணுவீராக. ஆமென்.



# இருபத்தெட்டாம் பாடம்.

## 'பிதாவே! என் சித்தத்தின்படி அல்ல'

அல்லது,

## பலியாகிய கிறிஸ்து.

"அப்பொழுது அவர்: அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்." (மாற். 14. 36.)

சில நாழிகைகளுக்குள் எவ்வளவு எதிர்நிலையான பாறுதல் உண்டாய்விட்டது! அவர் தமது கண்களை வானத்துக்கு ஏறெடுத்து "பிதாவே, நான் விரும்புகிறேன்" (என் சித்தம் இதுதான்) என்று மொழிந்தபோது அவர் எப்பேர்ப்பட்ட மனச் சமாதானமுள்ள உயர்வில் இருந்தார்! அதற்குப்பின் தரையிலே விழுந்து, மரணபரியந்தம் கன துக்கமாகி: "என் பிதாவே! என் சித்தத்தின்படி அல்ல" என்று ஓலமிட்டபோது, அவர் எப்பேர்ப்பட்ட தாழ்வுக்குள் பெயர்ந்து வந்துவிட்டார்! அந்த முந்தின காட்சியில், திரைக்குள் போயிருந்துகொண்டு தப்பாமல் பலிக்கிற வேண்டுதல் செய்கிற பிரதான ஆசாரியனைப் பார்க்கிறோம்; இந்தப் பிந்தின காட்சியில், பலிபீடத்தில் ஏற்றப்பட்டு, கிழியுண்ட திரைமூலமாய் வழியைத் திறக்கிற யாகபசுவை (பலி ஜெந்துவைப்) பார்க்கிறோம். "பிதாவே நான் விரும்புகிறேன்" என்ற அந்தப் பிரதான ஆசாரிய ஜெபம் முந்தியும் "பிதாவே, என் சித்தத்தின்படி அல்ல" என்ற யாக (பலிக்குரிய) ஜெபம் பிந்தியும் செய்யப்பட்டது மெய்தான். ஆகிலும், இந்தப் பிந்தின ஜெபத்தை அநுசரித்தே அந்த முந்தின ஜெபம் செய்யப்பட்டது. இப்படி, பிந்திச் செய்யப்படவேண்டிய ஜெபம் வரிசைமாறி முந்திச் செய்யப்பட்டதற்குக் காரணம் என்னவென்றால், ஆவசியகமான யாகம் (பலி) சரிவர நிறைவேறிவிட்டால், அதை அநுசரித்துச்

செய்யக்கூடிய வேண்டுதல் எம்மாதிரி இருக்கும் என்று காட்டுவதற்கு. உண்மையானபிரகாரம், "பிதாவே, என் சித்தத்தின்படி அல்ல" என்று பலிபீடத்தண்டை செய்யப்பட்ட அந்த ஜெபத்திலிருந்துதான் "பிதாவே, நான் விரும்புகிறேன்" என்று தேவராஜாசனத்தண்டை செய்யப்படுகிற இந்த ஜெபம் உற்பத்தியாயிற்று. அந்த ஜெபந்தான் இந்த ஜெபத்தை வல்லமையுள்ளதாக்கிற்று. கெத்செமனேயில் அவர் தமது சுயசித்தத்தை முழுவதும் பிடித்துக்கட்டி தேவனுக்கு பலியாய்ப் படைத்துவிட்டதினாலேயே இப்பொழுது அவர் தேவராஜாசனத்தில் பிரதான ஆசாரியராய் வீற்றிருந்து தமக்குச் சித்தமானதைக் கேட்டு வாங்க வல்லவராயிருக்கிறதும் தவிர, தம்முடையவர்களையும் தங்களுக்குச் சித்தமானதைக் கேட்டு வாங்கப்பண்ணுகிற உரிமையுடையவராயும் இருக்கிறார்.

இயேசுவின் ஜெபப்பாடசாலையில் ஜெபம்பண்ணக் கற்க விரும்புகிற யாவருக்கும் இந்த கெத்செமனேப் பாடம் அதிசயமும் அருமையுமான பாடங்களுள் ஒன்று எனச் சொல்லலாம். ஆழ்ந்து பார்க்காமல் மேல்படையைமாத்திரம் பார்க்கிற மாணாக்கனுக்கு இந்தப் பாடம் விசுவாசித்து ஜெபிக்கிற தைரியத்தைக் கெடுத்துவிடும் என்று தோன்றும். பிதாவின் திருக்குமாரனுடைய உட்கருத்தான வேண்டுதல்கூடக் கேட்கப்படவில்லையென்றால், பிதாவின் அன்புக்குள் இருந்த அவரே "என் சித்தத்தின்படி அல்ல" என்று சொல்வது அவசியமாயிருந்தால், எத்தனைக்கு அதிகமாய் நாம் அப்படிப் பேசுவது அவசியம். அப்படியானால், "நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது." "நீங்கள் விரும்புகிறது எதுவோ அது" உங்களுக்குச் செய்யப்படும் என்று ஆண்டவர் இதற்குச் சற்று முந்திச் சொன்ன வாக்குகள் நமக்கு உள்ளபடி பலிக்காவாகுமோ என்று மயங்குவோம். ஆனால், கெத்செமனேயின் அர்த்தத்தை ஆழ்ந்து உள்ளிட்டுப்பார்த்தால், நமது ஜெபம் கேட்டது கேட்டபடி பலிக்க உறுதியான காரணமும் தடையில்லாமல் திறந்தவழியும் அதிலேதான் இருக்கிறது என்று அறியலாம். ஆதலால், நம் மனதிலே அதிவிநய பக்தியையும் அஞ்சலிசெய்கிற ஆச்சரியத்தையும்



வைத்துக்கொண்டு தேவ திருக்குமாரனவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபமும் விண்ணப்பங்களும் பண்ணியும் கேட்டதை வாங்காமற்போன இந்த மகா காட்சியைக் கிட்டப்போய்ப் பார்ப்போம், வா. அவர் அப்போது செலுத்தின அந்தத் திருப்பலி இரகசியத்தை அவர் அத்தருணத்தில் செய்த அந்த ஜெபத்தைக்கொண்டே நமக்கு விளக்கி வெளிப்படுத்துவார்.

இந்த ஜெபத்தின் உட்பொருள் நமக்கு விளங்கும் பொருட்டு நமது ஆண்டவர் சற்று நேரத்திற்கு முன் இராஜரீக பிரதான ஆசாரியராய்ச் செய்த ஜெபத்திற்கும் தமது பலவீனத்தில் இருந்துகொண்டு செய்த இந்த ஜெபத்திற்கும் உள்ள அளவிறந்த தாரதம்மியத்தை நாம் கவனிக்கவேண்டும். அங்கே அவர் தமது பிதா மகிமைப்படுத்தப்படவேண்டும் என்றும் தமக்குத் தெளிவாய்க் கொடுக்கப்பட்டிருந்த வாக்குகளின்படியே தாமும் தம்முடையவர்களும் மகிமைப்படுத்தப்படவேண்டுமென்றும் ஜெபித்தார். பிதா கொடுத்திருந்த வாக்குக்கும் அவருடைய சித்தத்திற்கும் பொருந்தினதே என்று நிச்சயமாய் அறிந்திருந்ததை ஆண்டவர் அப்போது கேட்டார். அப்படிக் கேட்கையில்: "பிதாவே, நான் விரும்புகிறேன்" (அதாவது, பிதாவே, இதுதான் என் சித்தம்) என்று அவர் துணிந்து சொல்லலாம். இங்கே, அவர் கேட்கிறதைக் குறித்துப் பிதாவின் சித்தம் என்ன என்று அவருக்கு நிச்சயமாய்த் தெரியாது. அவருக்குத் தெரிந்திருந்தமட்டில், அவர் அந்தப் பாத்திரத்தைப் பருகிவிடவேண்டுமென்பதே பிதாவின் சித்தம். தாம் பருகவேண்டிய அந்தப் பாத்திரத்தைக் குறித்து அவர் தம்முடைய சீஷர்களுடனே சொல்லியிருந்தார். சில நாழிகைகளுக்குப் பின் "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தை நான் பருகாதிருப்பேனோ" என்று அவர் மனமொப்பி மொழிந்தார். இதற்காகவே அவர் இவ்வுலகில் வந்திருந்தார். ஆனால், அந்தகாரத்தின் வல்லமை அவரை எதிர்த்துவந்த நேரத்தில், பாவத்தைச் சீறுகிற தேவ சீற்றமாகிய மரணத்தின் முதற்றுளிகளை அவர் பருகத் துவக்கின வேளையில், சொல்லொணா மனவேதனைக் கலக்கம் அவரைப் பிடித்ததினால், அந்தச் சாபமாக்கப்பாட்டின் பயங்கரத்தைக்

கைக்கு மெய்யாய் அநுபவிக்கத் தாளாமல் நடுங்கி: "இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும்" என்று ஓலமிட்டு, அந்தப் பயங்கரமான பாத்திரத்தைத் தவிர்த்து வைத்து தேவனுடைய நோக்கம் நிறைவேற வழி இருந்தால் அந்த வழியைத் தமக்குத் திறக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். அவர் அப்படி விரும்பினது அவருடைய மனுஷீகம் அத்தியந்தம் உண்மையான மனுஷீகம் என்று ரூபிக்கிறது. "என் சித்தத்தின்படி அல்ல" என்ற சொல் அந்த விருப்பம் பாவமாகாமல் காத்தது. "எல்லாம் உமக்குக் கூடும்" என்கிற நியாயங் காட்டி அந்தப் பாத்திரத்தை நீக்கிவிடும்படி அவர் உட்கருத்தாய் மறுபடியும் வேண்டினபோதிலும் "என் சித்தத்தின்படி அல்ல" என்று அவர் மூன்றுமுறை உறுதியாய் மொழிந்தார். இதுதான் அவர் செலுத்தின பலியின் உட்சாரம்; இதுதான் அந்த பலியை மகா விலையுயர்ந்தியாக்கிற்று. இந்தத் தருணத்தில் அவர் கேட்டதைப்பற்றி: இது உம்முடைய சித்தம் என்று எனக்குத் தெரியும் என்று அவர் சொல்லக்கூடாதிருந்தது. தேவனுடைய வல்லமையையும் அன்பையும்மாத்திரம் சார்ந்து அவர் அப்படி மன்றாடினார். ஆகிலும், அந்த மன்றாட்டைப் பிடித்து அவர் கடைசியில் மொழிந்த "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்பதற்குள் இழுத்து வைத்துவிட்டார். பாத்திரத்தைத் தம்மிடத்திலிருந்து எடுத்துப்போட அவர் கேட்டது அவருக்கு அருளப்பட வழியிருந்ததில்லை. ஆனால், தேவனுடைய சித்தத்தின்படி ஆகச் சம்மதித்து அடங்குதல் தமக்கு வேண்டும் என்று அவர் ஜெபித்தது கேட்கப்பட்டது. அது முதலில் மரணபயத்தை வெல்லும் வெற்றியாகவும், பிறகு மரணவல்லமையை வெல்லும் வெற்றியாகவும் மகிமை[illegible]ரம் அவருக்கு அருளப்பட்டது.

இப்படி கிறிஸ்து சுயசித்த[illegible] விலக்கி பிதாவின் சித்தத்திற்குத் தம் சித்தத்தைப் பற்று பிடித்து ஒப்புவித்ததிலே அவருடைய கீழ்ப்படிவு உச்சிப்பூரணத்தை அடைந்தது. கெத்செமனேயில் அவர் செய்த சுயசித்தத் தியாகமே கல்வாரியில் அவர் செய்த சுயபிராணத் தியாகத்திற்கு விலைமதிப்பு உண்டாக்கிற்று. இங்கேதான், திருவசனம் கூறுகிறபடி



அவர் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு தமக்குக் கீழ்ப்படி
கிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரண
ரானார். இங்கே அவர் செய்த ஜெபத்தில் அவர் மரணபரியந்
தம், அதிலும் சிலுவையின் மரணபரியந்தம், கீழ்ப்படிந்தவ
ரானதினாலே தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக
உயர்த்தி, தமக்குச் சித்தமானதைக் கேட்கிற அதிகாரத்தை
அவருக்குக் கொடுத்தார். "பிதாவே, என் சித்தத்தின்படி
அல்ல" என்கிற இந்த ஜெபத்தினாலேயே, "பிதாவே, நான்
விரும்புகிறேன்" என்கிற அந்த ஜெபம் பலிக்கிற வல்லமை
அவருக்குக் கிடைத்தது. கிறிஸ்து கெத்செமனேயில் தமது
சுயசித்தம் செய்யப்படாமைக்குச் சம்மதித்து அடங்கினதி
னாலேயே "நீங்கள் எதைக் கேட்டாலும் கேளுங்கள்" (யோவா.
15. 7.) என்று தம்முடையவர்களுக்குச் சொல்லும் உரிமை
யைச் சம்பாதித்துக்கொண்டார்.

கெத்செமனே என் காட்சிக்கு வெளிப்படுத்துகிற ஆழ்
மான இரகசியங்களை நான் இன்னொருதரம் கவனித்துக்
கொள்வது நல்லது. முதலாவது, பிதா தாம் நேசிக்கிறவருக்
குக் கொடுக்கிற கோபபாத்திரம் இருக்கிறது. இரண்டாவது,
எப்போதும் கீழ்ப்படிவுள்ளவராகிய குமாரன் அஞ்சிப் பின்
வாங்கி அதைத் தாம் குடியாதிருக்க மன்றாடுகிறார். மூன்
றாவது, குமாரன் கேட்ட மன்றாட்டை பிதா அவருக்கு அரு
ளாமல் அந்தப் பாத்திரத்தையே கொடுக்கிறார். கடைசியாக,
குமாரன் தம் சித்தத்தை ஒப்புவித்துவிட்டு, அதாவது, தம்
சித்தம் செய்யப்படாதிருக்கச் சம்மதித்து, அந்தப் பாத்
திரத்தைப் பருகுவதற்குக் கல்வாரிக்குப் புறப்பட்டுப் போ
கிறார். ஆ கெத்செமனேயே! என் ஆண்டவர் என்னைப்
பார்த்து: உன் ஜெபம் தப்பாமல் [illegible] என்று எனக்கு
அளவுகடந்த நிச்சயம் [illegible], அது அவருக்குக் கூடிய
தாயிருந்தது [illegible]ப்படி [illegible]பது உன்னிடத்தில் வந்து பார்த்த
பின்பே எனக்குத் தெரிகிறது. எனக்குப் பொறுப்பாளியா
கிய அவர் தம் மன்றாட்டுப் பலிக்காதிருக்கச் சம்மதித்ததி
னாலே என் மன்றாட்டுப் பலிக்கிற சிலாக்கியத்தை எனக்குச்
சம்பாதித்தார்.

இது இரக்ஷண்ணிய உபாயம் முழுமைக்கும் பொருத்தமுடையதாகவே இருக்கிறது. எப்படியெனில், நமதாண்டவர் தாம் எந்த உத்தரித்தாரோ அதற்கு எதிர்மாறான நன்மையை எப்போதும் நமக்கு ஆக்குவிக்கிறார். நாம் விடுதலையடைய அவர் கட்டுண்டார். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு அவர் பாவமாக்கப்பட்டார். நாம் சிரஞ்சீவிகளாயிருப்பதற்கு அவர் மரித்தார். தேவனுடைய ஆசீர்வாதம் நமதாகும்பொருட்டு தேவனுடைய சாபத்தை அவர் தாங்கிக்கொண்டார். நமது ஜெபம் பலிப்பதற்கு அவர் தமது ஜெபம் பலியாமைக்குட்பட்டார். "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று நமக்குச் சொல்லக்கூடும்படி, அவர் "என் சித்தத்தின்படி அல்ல" என்று ஜெபித்தார்.

"நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்" என்னும் இந்தச் சொல்லை நாம் கவனித்துக்கொள்ளவேண்டியது. இங்கே, அதாவது, கெத்செமனேயில் இந்தச் சொல்லுக்குப் புது அர்த்தமும் புது ஆழமும் உண்டாகிறது. கிறிஸ்து நமது சிரசானவர். அவர் நமக்குப் பொறுப்பாளியாகையால், நாம் நிற்கவேண்டிய இடத்தில் அவர் வந்து நின்று, நாம் சதாகாலமும் தாங்கவேண்டியதை அவர் தாங்கிக்கொள்ளுகிறார். நமது கூப்பாட்டுக்கு தேவன் தமது காதை அடைத்துக்கொண்டு அதை யொருநாளும் கேட்கச் சம்மதியாமையே நமக்கு நாம் வருவித்துக்கொண்ட கேடு. கிறிஸ்து வந்து இதையும் நமக்காகச் சகிக்கிறார், அதாவது, நமக்கு நாம் வருவித்துக்கொண்டதை அவர் சகிக்கிறார்; நமது பாவங்களினிமித்தம் அவர் தமது ஜெபம் பலியாமையாகிய பாரத்தின்கீழ்க் கிடந்து நசுங்குகிறார். ஆனால் [illegible], அவர் இதைச் சகித்தது எனக்குப் பிரயோஜனமாய்ப் பலிக்கிறது. எப்படியெனில், அவர் எனக்காகத் தாங்கிக்கொண்டது என்னைவிட்டு நீக்கப்படுகிறது; நான் அவரில் நிலைத்திருந்தால், அவருடைய புண்ணியம் நான் செய்கிற ஒவ்வொரு ஜெபமும் பலிக்கிற வரத்தை எனக்குச் சம்பாதித்திருக்கிறது. கெத்செமனேயில் ஜெபித்துத் தலைகுனிந்திருக்கிற அவருக்குள் நான் நிலைத்திருப்பது அவ-



சியமே. என் சிரசாகிய அவர் எனக்காக ஒருதரம் பாடுபட்டதுமன்றி, என்றும் எனக்குள் பிழைத்தும் இருக்கிறார். அவர் எனக்குள் இருந்துகொண்டு தமது சுபாவகுணம் எனக்கும் வரும்படி அதை எனக்குள் ஊதி உற்பத்திபண்ணுகிறார். அவர் நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே தேவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். அந்த ஆவியானவரே எனக்குள்ளும் வாசம்பண்ணி அவர் தேவனுக்குச் செலுத்தின அதே கீழ்ப்படிவு, அதே சுயசித்தத் தியாகம், இவற்றில் எனக்கும் பங்கு கொடுக்கிறார். அந்த ஆவியானவர் என் சித்தத்தைச் சமூலமும் பிடித்து, அதை பிதாவின் சித்தத்திற்குத் தத்தம் செய்யவும், அதை மரணத்திற்கே ஒப்புக்கொடுக்கவும், கிறிஸ்துவுக்குள் அதற்கு மரித்திருக்கவும் எனக்குக் கற்றுக்கொடுக்கிறார். என் மனது, என் எண்ணம், என் சித்தம், இவை நோய்ப் பாவமல்லாத போழ்தும் அவற்றை அஞ்சி ஓட அவர் எனக்குப் போதிக்கிறார். பிரதிதினமும் பிதா என்னுடனே பேசவும் எனக்குப் பாடம் சொல்லவும் விரும்புகிறதை அத்தியந்த சாந்தத்துடனும் கற்கப் பிரியப்படுகிற மனதுடனும் காத்திருந்து கேட்க அவர் என் செவியைத் திறந்துவிடுகிறார். தேவனுடைய சித்தத்திலே வாஞ்சைவைத்து அதிலே நான் ஒன்றித்திருப்பது தேவனோடேயே நான் ஒன்றித்திருப்பதாம் என்று அவர் எனக்கு விளங்கக் காட்டுகிறதுமல்லாமல், தேவசித்தத்திற்கு என் சுயசித்தத்தைச் சம்பூரண தியாகம் செய்வதே பிதா என்னிடத்தில் தேடும் பொருள், குமாரன் எனக்கு வைத்தமாதிரி, என் ஆத்துமத்திற்கு மெய்ப்பாக்கியம், என்று நான் கண்டுகொள்ளவும் பண்ணுகிறார். அவர் என் சித்தத்தை எடுத்து அதைக் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ஐக்கியம் செய்விக்கிறார். அதினால் கிறிஸ்துவின் மரணத்திற்குள் என் சித்தம் கூட மரித்து அவர் உயிர்த்துப் பிழைத்திருக்கைக்குள் அதுவும் உயிர்த்துப் பிழைத்திருக்கிறது. அப்படிப் புதுப்பிக்கப்பட்டதும் உயிர்ப்பிக்கப்பட்டதுமான என் சித்தத்திற்குள்ளே, தேவனுடைய பரிபூரண சித்தத்தைக் களங்கமறக் காணும் பரிசுத்த காட்சி, அந்தத் திருச்சித்தம் செய்யப்பட்ட பணிமுட்டாயிருப்பதினால் வரும் பரிசுத்த சந்தோஷம், ஜெபம்

பலிக்கப்பண்ணுகிற தேவ சித்தத்தைக் கெட்டியாய்ப் பிடிக்கிற பரிசுத்த துணிவுடன்கூடிய வல்லமை, இவற்றை அவர் ஊதிக்கொடுக்கிறார். இனி தேவனுக்காகவும் அவருடைய ராஜ்யத்திற்காகவும் என் முழுச் சித்தத்தாலும் பிழைக்க, அதாவது, சிலுவையில் அறையுண்டு திரும்ப உயிர்த்திருக்கிற என் சித்தம் பிரபஞ்சத்திலும் ஜெபத்திலும், புவியிலும் பாதத்திலும், மனுஷரிடத்திலும் தேவனிடத்திலும், வல்லமை காட்டும்படி பிழைக்க, நான் பழகிக்கொள்ளுகிறேன். "என் சித்தத்தின்படி அல்ல" என்கிற கெத்செமனேத் திருவாக்கு எனக்கு எவ்வளவுக்குப் பலித்திருக்கிறதோ, அதைத் திருவாய்மலர்ந்தவருக்குள் நான் எவ்வளவுக்கு நிலைத்திருக்கிறேனோ, அவ்வளவுக்கு அவர் சொன்ன "பிதாவே, நான் விரும்புகிறேன்" என்கிறதும் எனக்குப் பலித்து வல்லமை செய்யும். தேவசித்தமே சகலத்திலும் சகலமாயிருக்கும்படி எவனுடைய சித்தம் சூன்யமாய் விடுகிறதோ அவனுடைய சித்தமே இனி தேவன் விரும்புவதையே தானும் விரும்பவும் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குகளெல்லாம் பலிக்க வேண்டுமென்று கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கவும் கூடிய தெய்வீகவல்லமை பூண்டிருக்கும் என்பதை இப்போது என் ஆத்துமா அநுபவசித்தியாய் அறிந்துகொள்ளுகிறது.

"நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று கிறிஸ்து சொன்ன வாக்கு நமக்குப் பலிக்க விரும்பினால், அவர் கெத்செமனேயில் திருவாய்மலர்ந்ததை நாம் செவியுற்றுக் கேட்கக்கடவோம். சகலத்தையும் தேவசித்தத்திற்கே விட்டுவிடுகிறதில் அவருக்கு இருந்த மனதும் அவருக்கு இருந்த ஆவியும் நமக்கும் இருக்கவேண்டும். பிதாவுக்கு அவர் கீழ்ப்படிந்தமாதிரி நாமும் கீழ்ப்படியவும், பிதாவுக்கு அவர் தம்மைத் தத்தஞ்செய்தமாதிரி நாமும் நம்மைத் தத்தம் செய்யவும்வேண்டும்; இதுதான் நாம் அவரில் நிலைத்திருக்கவேண்டிய விதம்; இதுதான் நமது ஜெபம் பலிக்கிறதற்கு வழி.



"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

போற்றுதற்குரிய ஆண்டவராகிய இயேசுவே! ஜெபிக்கவும் கீழ்ப்படியவும் நீர் படித்த பள்ளிக்கூடம் கெத்செமனேதான். உம்மைப்போல் கீழ்ப்படியவும் ஜெபிக்கவும் ஆசைப்படுகிற உமது சீஷர்களை நீர் இன்றைக்கும் அழைத்துப்போய் வைக்கிற பள்ளிக்கூடம் அதுவே. ஆண்டவரே! நாங்கள் சுயசித்தத்தைச் சாதிக்கிற இறுமாப்பை நீர் உத்தரித்துத் தொலைத்ததினால் உம்மைப்போல ஜெபிக்கிற வரத்தை எங்களுக்கு மெய்யாகவே கொடுக்க உம்மாலாகும். இதை நம்பி ஜெபிக்க எனக்குக் கற்றுக்கொடும்.

தேவாட்டுக்குட்டியே! நான் உம்மோடுகூட கெத்செமனேக்கு வந்து, நீர் அங்கே மரணபரியந்தம் உமது சித்தத்தைப் பிதாவுக்குக் கொடுத்துவிட்டதில் நான் உம்மில் ஒன்றித்து நிலைத்திருப்பேனாக. உம்மோடு, உம்மூலமாய், உம்முள் நான் என் சித்தத்தைக் கொஞ்சமும் மீதிவைக்காமல் பிடித்துப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புவிக்கிறேன். என் சித்தத்தை நானே அடக்க எனக்குப் பலமில்லை. அதைத் தொலைக்க நான் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அது எப்படியும் திருட்டளவாய் என்னுள் புகுந்து பழையபடி என்னை ஆளும். இது எனக்குத் தெரியுமாகையால், நீர் சுயசித்தத்தை வென்ற உமது வல்லமையை எனக்குத் தர உம்மை வேண்டுகிறேன். நீர் என் சுயசித்தத்தையும் ஜெயித்து என்னை அதின் வல்லமையிலிருந்து விடுவித்திருக்கிறீர். உமது மரணத்திற்குள்ளே நான் தினம் பிழைப்பேன்; உமது ஜீவனுக்குள்ளே நான் தினம் மரிப்பேன். என் சித்தம் உம்மிலே நிலைத்திருந்து உமது நித்திய ஆவியினால் சுதிகூட்டப்பட்ட வீணையாய் இருக்கக்கடவது. அப்போது அது தேவனுடைய சித்தம் விரும்புகிறபடியே இராகம் தந்துகொண்டிருக்கும். என் முழு ஆத்துமத்தாலும் நான் உம்மோடும் உம்முள்ளும் இருந்துகொண்டு "பிதாவே, என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று சொல்லுகிறேன்.

இதுவும்தவிர, ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவரே! தேவனுக்கு மனதாரக் கொடுத்த சித்தமே அவர் மனமுவந்து

தமது ஊழியத்திற்கு எடுத்து ஆளும் சித்தம் என்பதின் உண்மையை மகத்துவமாய் அறிவதற்கு நீர் என் உள்ளத்தையும் உம்முடையவர்களின் உள்ளத்தையும் திறந்தருள உம்மை வேண்டுகிறேன். அப்போப்பட்ட சித்தம் எங்களுக்கு இருந்தால்மாத்திரம் அது தேவனுடைய சித்தத்திற்குப் பொருந்தினதையே எப்போதும் விரும்பும், யோசிக்கும், நிர்ணயிக்கும், சிந்திக்கும். அந்தச் சித்தம்மாத்திரந்தான் அதற்குள் குடியிருக்கிற தேவாவியின் வல்லமையைக்கொண்டு, பாதாளத்திலும் புவியிலும் கட்டவிழ்க்கவும் கட்டவும், தனக்குப் பிரியப்பட்டது எதுவோ அதைக் கேட்டு அது செய்யப்படத்தான் வேண்டுமென்று சாதிக்கவும் கூடிய இராஜ அதிகாரம் செலுத்துகிற சித்தமாயிருக்கும்.

ஆண்டவராகிய இயேசுவே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும். ஆமென்.

## இருபத்தோன்பதாம் பாடம்.

### "நாம் அவருடைய சித்தத்தின்படி கேட்டால்"
### அல்லது,
### ஜெபத்தில் நமக்கு இருக்கிற தைரியம்.

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்றும் அறிந்திருக்கிறோம்." (1 யோவா. 5, 14, 15.)

அநேகர் நம்பிக்கை நிறைந்த ஜெபம் செய்யாமல் அவர்களைத் தடுக்கிற பெருந்தடைகளில் ஒன்று எதுவென்றால், அவர்கள் கேட்கிறது தேவசித்தத்திற்குப் பொருந்தினதோ அல்லவோ என்று அவர்களுக்குத் தெரியாமைதான். இதுவிஷ





யத்தில் அவர்களுக்கு இருக்கிற சந்தேகம் தெளியாதிருக்கும்
வரையில், தாங்கள் கேட்டது நிச்சயமாய்க் கிடைக்கும் என்
கிற உறுதியுடன் ஜெபிக்கிற தைரியம் அவர்களுக்கு இராது.
அவர்கள் ஒருதரம் தங்கள் மனதிலுள்ள விருப்பங்களை தேவ
னுக்குத் தெரிவித்து அதற்கு உத்தரவு காணாதிருந்தால் இனி
அதைக்குறித்து அவருடைய பிரியப்படி செய்யட்டும் என்று
சும்மா இருப்பதே உசிதம் என்று நினைத்துக்கொள்ளுகிறார்
கள். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி
கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்" என்று யோ
வான் சொன்னதை அவர்கள் அறிந்துகொள்ளுகிற விதம்
அவர்களுடைய ஜெபம் பலிக்கும் என்கிற உறுதி அவர்களுக்
குக் கிடைக்காதபடி பண்ணுகிறது. ஏனெனில், அவர்கள்
கேட்டதைக் குறித்து தேவனுடைய சித்தம் உள்ளபடிக்கு
எது என்று அறிகிற நிச்சயம் அவர்களுக்கு இல்லை. தேவ
னுடைய மனதிலிருக்கிற இரகசிய ஆலோசனையே அவரு
டைய சித்தம் என்று அவர்கள் நினைத்து சர்வஞானமுள்ள
தேவனுடைய மனதில் இருக்கிற ஆலோசனையை மனுஷன்
எப்படி அறியலாம் என்று சொல்லுகிறார்கள்.
இது யோவான் நமக்குச் சொல்ல விரும்புகிறதல்ல
[illegible] ஜெபம் பண்ணுவதற்கு வேண்டிய தைரி
யம், நம்பிக்கை, பூரண விசுவாச நிச்சயம், இவற்றை அவர்
நமக்குள் மூட்டிவிடப் பிரியப்படுகிறார். நீரும் தேவனைப்
பார்த்து, பிதாவே, நான் உமது மனதிற்குப் பொருந்தி
னபடிதான் கேட்கிறேன் என்பது உமக்கும் தெரியும், எனக்
கும் தெரியும்; நீர் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான்
அறிந்திருக்கிறேன்" என்று இப்படிச் சொல்லக்கூடியதாயி
ருப்பதே "அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்"
என்று யோவான் நமக்குச் சொல்லுகிறார். "நாம் எதையா
கிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்
குச் செவி கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம்
கொண்டிருக்கிற தைரியம்." இதின் நிமித்தமே அவர் பின்வ
ருவதை உடனே கூட்டிச் சொல்லுகிறார்:—"நாம் எதைக்
கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் என்று
நாம் அறிந்திருந்தோமானால்," நமக்கு இருக்கிற இந்த விசு

வாசத்தின் மூலமாய் நாம் ஜெபித்துக்கொண்டிருக்கிறபோதே "அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்றும் அறிந்திருக்கிறோம்." நாம் ஜெபிக்கிறபோது, முந்தி நமது ஜெபம் தேவனுடைய சித்தத்திற்குப் பொருந்தியிருக்கிறதை அறிந்துகொண்டே ஜெபிக்கிறோம் என்று யோவான் நினைக்கிறார். நாம் கேட்கிறவைகள் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றிருக்கலாம், ஆகிலும், அவைகள் உடனே கிடைக்காமல் இருக்கலாம், அதாவது, விடாமுயற்சியுள்ள விசுவாச ஜெபமில்லாமையினால் பலிக்காமலிருக்கலாம். விசுவாசத்தில் விடாமுயற்சியுடன் தரித்துத் திடன்கொண்டிருக்க நம்மைத் தூண்டி உற்சாகப்படுத்தும்பொருட்டு அவர் பின்வரும் வார்த்தைகளை நமக்குச் சொல்லுகிறார். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார். இதுவே ஜெபத்தில் நமக்கிருக்கிற தைரியம் அல்லது நிச்சயம்." நமது மன்றாட்டுகள் அவருடைய சித்தத்திற்குப் பொருந்தினவைகள்தான் என்பதைப் பற்றி நமக்கு நிச்சயமில்லாதிருந்தால், "நாம் அவரிடத்தில் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோம்" என்று அறிகிற ஆறுதலும் நமக்கு இல்லாதிருக்கும் என்பது பிரத்தியக்ஷம்.

ஆனால், இதைக் கஷ்டமுள்ளதாக்குவது எதுவென்றால், அநேக விசுவாசிகள் பேசுகிற இந்தப் பேச்சுதான்: "நான் தேவனிடத்தில் கேட்கிறது அவருடைய திருச்சித்தத்திற்குப் பொருந்தினதோ அல்லவோ என்பது எனக்குத் தெரியாது. தேவனுடைய சித்தம் என்பது அவர் தமது அளவில்லாத ஞானத்தில் யோசித்து நிருணயித்தது. ஆகவே, நான் கேட்கிறதைவிட வேறொன்று எனக்கு அதிக வாசியாகும் என்று அவர் நினைக்கலாம்; அல்லது, நான் கேட்டதைக் கொடாமலிருக்க அவருக்குக் காரணங்கள் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அவர் எனக்கு நிருணயித்திருப்பதை அறிய என்னாலாகாது." இந்த நினைவு இருக்கையில்: "எவனாகிலும் தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்திலே சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும்" என்று இயேசு குறித்துக் காட்டின விசுவாசம்நிறைந்த ஜெபம் பிறக்க வழியே இராது



என்று யாரும் அறியலாம். இப்படி நினைத்துச் செய்கிற ஜெபம் தேவ சித்தத்திற்கு அடங்கி தேவ ஞானத்தில் நம்பிக்கைவைக்கிற ஜெபமேயொழிய விசுவாசம்நிறைந்த ஜெபமல்ல. இதுவிஷயத்தில் தேவனுடைய பிள்ளைகள் செய்கிற பெரிய பிசகு என்னவென்றால், தேவ சித்தத்தை நாம் அறியக்கூடும் என்பதை அவர்கள் நம்பாமலிருக்கிறதுதான். நம்புகிறவர்களும் அதைத் திட்டமாய் அறிந்துகொள்வதற்கு வேண்டிய நேரமும் பிரயாசமும் செலவிடுகிறதில்லை. காத்திருந்து படிக்கப் பிரியமுள்ள தமது பிள்ளை செய்த ஜெபம் தமக்கு ஏற்றதுதான் என்று பிதா எந்த வழியாய் அவனை அறிந்துகொள்ளப் பண்ணுகிறார்? இதைத் தெளிவாய்ப் பார்த்துக்கொள்வது நமக்கு அவசியம். * நமது உள்ளத்திலும், ஜீவியத்திலும், சித்தத்திலும், நாம் வாங்கிக் காப்பாற்றி வைத்திருக்கிற தேவனுடைய திருவசனம் ஒருவழி; மானிட உள்ளத்தில் திருக்கோயில்கொண்டிருக்கை, மானிட உள்ளத்தை வழிகாட்டி நடத்துகை, என்னும் இவ்விரு செயல்களோடும்கூடிய பரிசுத்த ஆவியை நம்முள்ளத்தில் பெற்றிருத்தல் இன்னொரு வழி; இந்த இரண்டு வழிகளாலும் நமது மன்றாட்டுகள் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றிருப்பதை நாம் அறிந்துகொள்ளக்கூடும்.

திருவசனத்தின் வழியாய் நமது ஜெபம் தேவ சித்தத்திற்கு [illegible]தா என்று நாம் அறியலாம். தேவனுக்கு இரகசிய சித்தமும் இருக்கிறது. நமது ஜெபம் அவருடைய இரகசிய சித்தத்திற்கு விரோதமாயிருக்குமோ என்று நாம் அடிக்கடி பயப்படுகிறோம். ஜெபம் பண்ணுகிறபோது, தேவனுடைய இரகசிய சித்தத்தை அல்ல, திருவசனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிற அவருடைய வெளிப்படையான சித்தத்தைமாத்திரமே நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். அவருடைய இரகசிய சித்தம் என்ன நிருணயித்திருக்குமோ? அந்த நிருணயம் என் ஜெபம் பலிக்காமல் எப்படித் தடுக்

* இது இந்நூலநுபந்தமாகிய "விளக்கிக் காட்டியவில்" ஜெபமும் தேவ சித்தமும் என்னும் அங்கத்தில் சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருத்தல் காண்க.

குமோ? என்றிப்படி நாம் நினைப்பது பெரும்பாலும் மிகப் பிசகு நினைவு. தேவன் தம்முடைய பிள்ளைகள் விஷயத்தில் வைத்திருக்கிற மனப்பூர்வமான சித்தத்தைப்பற்றி நமக்குப் பிள்ளைக்கொத்த விசுவாசம் இருக்கவேண்டும். ஜெபத்தைக் கேட்கவும் தம்முடைய வார்த்தையை நம்பி, ஒருவன் கேட்டதைச் செய்யவும் அவருக்கு மனமுண்டு என்று பிதா சொல்லுகிற சொல்லுறுதியைப் பிள்ளைக்கொத்த விசுவாசம் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும். தம்முடையவர்கள் விஷயத்தில் தமது சித்தம் எந்தெந்தப் பாட்டைகளில் செல்லும் என்பதைப் பொதுப்பட்ட வாக்குத்தத்தங்கள் மூலமாய்ப் பிதா திருவசனத்தில் தெரிவித்திருக்கிறார். அவருடைய பிள்ளை செய்யவேண்டியதென்னவென்றால், அந்தப் பொதுப்பட்ட வாக்குத்தத்தங்களை எடுத்து, தன் ஜீவியத்தில் தனக்கு நேர்ந்திருக்கிற நேர்ப்பாடுகளுக்குப் பொருந்தினபடி உபயோகித்துக்கொள்ளவேண்டும். வெளிப்பட்டுத் தெரிந்திருக்கிற தேவ சித்தத்தின் எல்லைக்குள் எதைக் கேட்டாலும் அது தேவ சித்தத்திற்குப் பொருந்தினதென்று அவன் அறியக்கூடும். ஆதலால், அது தப்பாமல் கிடைக்கும் என்று அவன் உறுதியாய் நம்பியிருக்கலாம். தேவன் தமது திருவசனத்தில் நமக்கும் தம்முடையவர்களுக்கும் உலகத்திற்கும் செய்யத் தமது சித்தத்தில் நிர்ணயித்திருக்கிறதையும் அதைச் செய்ய அவர் குறித்திருக்கிற முறைகளையும் மகா அருமையான வாக்குத்தத்தங்களுடன் சேர்த்து வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் குறித்திருக்கிற முறைகளையும் வேலையையும் அவர் தம்முடையவர்களைக்கொண்டே செய்விக்கிறபடியால் அதற்காக அவர்களுக்கு வேண்டிய கிருபையையும் வல்லமையையும் அவரே அவர்களுக்குத் தருவதாக அந்த வாக்குத்தத்தங்களில் சொல்லியிருக்கிறார். தேவன் பொதுப்படச் சொல்லியிருக்கிற வாக்கு நமக்குண்டாகும் விசேஷ சந்தர்ப்பங்களில் பலிக்கவேண்டும் என்று கேட்கிற பலமும் துணிவும் நமது விசுவாசத்திற்கு வரும்போது, நமது ஜெபம் தப்பாமல் பலிக்குமென்று நாம் நிச்சயித்திருக்கலாம். ஏனெனில், அது தேவனுடைய சித்தத்திற்குப் பொருந்தின ஜெபம். இதற்குத் திருஷ்டாந்தமாக யோவான்



இந்தப் பாடத்தின் முகதலை வாக்கியத்திற்கு அடுத்த வாக்கியத்தில் சொல்லுகிறதை எடுத்துப் பார். "மரணத்திற்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவான், அப்பொழுது தேவன் அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்." இது ஒரு பொது வாக்குத்தத்தம். இந்த வாக்கைப் பற்றிக்கொண்டு விசுவாசி ஏதேனுமொரு விசேஷ சந்தர்ப்பத்தில் மன்றாடுகிறபோது அவன் தேவனுடைய சித்தத்தின்படிதான் ஜெபிக்கிறான். அப்பொழுது அவன் கேட்டது கிடைத்துவிட்டது என்றறிந்து தைரியத்துடன் இருக்கலாம் என்று யோவான் சொல்லுகிறார்.

ஆயினும், இப்படிச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளுதல் நமக்கு இயற்கையாய்க் கூடியதல்ல. அது ஆவிக்குரிய விஷயம். ஆதலால், அது ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படவேண்டும். தேவன் சொல்லியிருக்கிறார்; ஆதலால், இது எனக்குக் கிடைக்கவேண்டும்; இப்படித் தர்க்கித்து நாம் அதை அறிய முடியாது. இதுவுந்தவிர, கிறிஸ்தவனுக்கெல்லாம் ஒரேமாதிரி வாழும் ஒரேமாதிரி வேலையும் இருக்கிறதில்லை. எல்லாருக்கும் பொதுப்பட ஒரே தேவசித்தம் திருவாக்கில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், அது அவனவனுக்கு தேவன் குறித்திருக்கிற நோக்கத்திற்குத் தக்கபடி அவனவனுக்குத் தனித்தனி விசேஷித்த சித்தமாய் வேறுபட்டிருக்கும். இங்கேதான் பரிசுத்தவான்களின் ஞானம் விளங்கும். எப்படியெனில், அவர்கள் அவரவருக்குத் தனித்தனி அருளப்பட்டிருக்கிற கிருபை எவ்வளவென்று கண்டுகொள்ளவேண்டும்; அதற்குத் தக்கபடி அவரவர் விஷயத்தில் தேவனுக்கு இருக்கிற விசேஷித்த சித்தத்தை அவரவர் அறிந்திருக்கவேண்டும்; அதற்குமேல், எவரெவருக்கு எதெது கொடுக்கும்படி தேவன் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறாரோ அதைமாத்திரம் அவரவர் ஜெபத்தில் கேட்கவேண்டும். இதற்குத் தேவையான ஞானம் நமக்குக் கொடுக்கும்பொருட்டே தேவாவி நம்முள் வாசம் செய்கிறார். திருவசனத்தில் பொதுப்படச் சொல்லியிருக்கிற தேவ

வாக்குகளை நாம் அவரவர் நிம்தம் அவசியங்களுக்குத் தக்கபடி பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். இதில் நம்மை வழிகாட்டி நடத்துவதற்கே தேவாவி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார்.

இப்படித் திருவசனமும் தேவாவியும் ஒருமித்து நமக்கு உணர்வூட்டுவதை அநேகர் அறியாதிருக்கிறார்கள். ஆதலால், தேவசித்தத்தை அறிவதில் அவர்களுக்கு இரட்டிப்பான மலைவுண்டாகிறது. சிலர் தங்களுடைய உள்ளுணர்ச்சியிலேயாவது மனநிச்சயத்திலேயாவது தேவ சித்தம் தெரியும் என்றெண்ணி, திருவசனத்தைத் தவிர்த்துவைத்து, தேவாவிமட்டும் தங்களை நடத்தும்படி விரும்புவார்கள். வேறு சிலர் தேவாவியின் ஜீவனுள்ள நடத்துதலைத் தவிர்த்துவைத்து, திருவசனத்தினால் மாத்திரம் தேவ சித்தத்தை அறிந்துகொள்ளப் பார்க்கிறார்கள். இதெல்லாம் சரியல்ல; திருவசனமும் தேவாவியும் சேர்ந்திருந்தால்மாத்திரம் தேவ சித்தம் சந்தேகமில்லாத நிச்சயமாய் நமக்குத் தெரியும்; ஆதலால், அப்பொழுதுதான் நாம் தேவசித்தத்திற்குப் பொருந்தினபிரகாரம் ஜெபிக்க முடியும். திருவசனமும் தேவாவியும் ஒருமித்திருக்கவேண்டிய இடம் நமது உள்ளம். அந்த இரட்டையர்கள் நம் இருதயத்துள் வாசம்செய்தால் மாத்திரம் அவர்கள் சொல்லுகிறதை நாம் அறியலாம். திருவசனம் நம்முள்ளேயே வாசம்பண்ணி நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய உள்ளமும் ஜீவியமும் நாளுக்குநாள் அதினுடைய வல்லமையில் அகப்பட்டிருக்கவேண்டும். திருவசனம் வெளியிலிருந்து வந்து நம்முள்ளத்தில் பிரவேசிக்கும்போதல்ல, அது நம்முள்ளத்தில் தரித்திருக்கும்போதே தேவாவி அதை உயிர்ப்பித்து நமக்குள் வல்லமை காட்டப் பண்ணுவார். திருவசனமும் தேவ சித்தமும் சர்வாதிகாரம் செய்யும்படி தன் முழு ஜீவியத்தையும் பிடித்து அவற்றிற்கு ஒப்புவித்து விடுகிறவனே தனக்குண்டாகும் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் அந்தத் திருவசனமும் தேவ சித்தமும் எதைத் துணிந்து கேட்கச் சொல்லுகிறதென்று பகுத்தறியக்கூடும். திருவசனத்துக்குச் சொன்னதையே தேவாவிக்கும் சொல்லலாம். நான் ஜெபிக்கும்பொழுது தேவசித்தம் இன்னதென



தேவாவி எனக்கு உணர்த்தவேண்டுமென்று நான் பிரியப்பட்டால், என் முழு ஜீவியமும் அவர் கைவசத்தில் இருந்து நடத்தப்படவேண்டும். அப்படித்தான் என் மனமும் உள்ளமும் ஆவிக்குரியவைகளாகி தேவனுடைய சித்தத்தை அறியச் சக்தியுள்ளவைகளாகும். திருவசனத்தி னுதவியாலும் தேவாவியி னுதவியாலும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதே தொழிலாயிருந்து, தேவனுடைய சித்தத்திற்குள்ளேயே பிழைக்கிறவன் எவனோ அவன்தான் அவர் தன் ஜெபத்தைக் கேட்பார் என்கிற நிச்சயத்துடன் அவருடைய திருச்சித்தத்திற்கு ஏற்றவாறு ஜெபிக்கிறவன்.

எங்கள் ஜெபம் தேவசித்தத்திற்குப் பொருந்தவில்லையாக்கும், ஆகையால்தான் அது கேட்கப்படவில்லை என்று நினைத்துச் சும்மா இருக்கிறதினால் கிறிஸ்தவர்கள் தங்களுக்கே சொல்லரிய கெடுதி உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். இதை அவர்கள் பார்க்கக்கூடுமானால் தாவிலை. தகுந்த மாதிரி ஜெபிக்காமையே நமது ஜெபம் பலிக்காமைக்கு முக்கியகாரணம். இப்படித் திருவசனம் கூறுகிறது. "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." நாம் பண்ணுகிற ஜெபத்தில் ஏதோ தவறு இருக்கிறதென்று பிதா நமக்கு உத்தரவு அருளாமையினால் தெரிவிக்கிறார். நாம் செய்த தவறு இன்னது என்று நாமே கண்டு அறிக்கையிட்டு, உண்மையான விசுவாசம் நிறைந்ததும் பலிக்கிறதுமான ஜெபம் செய்ய நாம் படிக்கவேண்டுமென்றே பிதா நமக்கு இப்படிச் செய்கிறார். நமது ஜெபம் பலிக்காதது நமது சுயகுற்றமே என்று நமக்குக் காட்டுவதினால்தான் அவர் கொண்டிருக்கிற அந்த நோக்கம் வாய்க்கும். நாம் குறித்த இலக்கு, நமது விசுவாசம், நமது ஜீவியம், இவற்றுள் ஏதோ ஒன்று பழுதாயிருக்கிறது, அதை நாம் அறியவேண்டும். ஆனால், ஒருவன் தேவசித்தத்திற்குப் பொருந்தாததினாலே என் ஜெபம் பலிக்கவில்லையாக்கும் என்று நினைத்துச் சும்மா இருந்தால் தேவன் கொண்டிருக்கிற அந்த நோக்கம் வாய்க்காது. ஆகையால், நமது ஜெபம் பலிக்காவிட்டால், அந்தப் பழியை நாம் இனி யொருநாளும் தேவனுடைய இரகசிய

சித்தத்தின்மேல் சுமத்தாமல் நாம் ஜெபிக்கிற தகாத விதத்தின்மேல் சுமத்துவோமாக. "நீங்கள் தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." இந்தச் சொல்லை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற விளக்காக வைத்துக்கொள்வோமாக. அது நம்முள்ளத்தையும் ஜீவியத்தையும் சோதித்து, உங்கள் ஜெபம் தப்பாமல் பலிக்கும் என்று கிறிஸ்து சொன்ன வாக்குக்கு நாமும் உரியவர்கள்தான் என்று நமக்குச் சந்தேகமற ரூபிக்கும். நமது ஜெபம் தேவசித்தத்திற்குப் பொருந்தினதா அல்லவா என்பதை நாம் நிச்சயமாய் அறியக்கூடும் என்று நம்புவோமாக. நாம் நமது இருதயத்தை ஒப்புக்கொடுத்து, பிதாவின் வசனம் அதிலே பரிபூரணமாய் வாசம் பண்ணவும் கிறிஸ்துவின் வசனம் நம்மில் நிலைத்திருக்கவும் செய்வோமாக. சகலத்தையும் குறித்து நமக்குப் போதிக்கிற தேவ அபிஷேகமானவருடன் நாம் தினந்தினம் கூடியிருப்போமாக. கிறிஸ்துவில் நிலைத்திருக்கவும் பிதாவின் சமுகத்தில் வாசம் செய்யவும் நமக்குக் கற்றுக்கொடுக்க தேவாவி நம்மை அழைக்கும்போது எதையும் அவருக்கு மறைத்து வைக்காமல் நம்மை முழுவதும் அவருக்குக் கொடுத்துவிடுவோமாக. அப்பொழுது, தமது சித்தத்தைத் தமது பிள்ளைகள் தெளிவாய் அறிந்திருக்கவேண்டும் என்பதே பிதாவின் அன்புள்ளத்திலிருக்கிற விருப்பம் என்றும், நாம் அவரிடத்தில் கேட்கிற மன்றாட்டுகளை அவர் நிச்சயமாய்க் கேட்பார் என்றும் அறிந்துகொள்வோம். ஏனெனில், அவருடைய வல்லமையும் அன்பும் நமக்குக் கொடுக்க வாக்கருளினதெல்லாம் அவர் நமக்குத் தெளிவாய் வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய சித்தத்திற்குள்ளேயே இருக்கிறது. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்கிற இதுவே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்."

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

அருமையான உபாத்தியாயரே! தேவசித்தத்தின் வழியாய்ப் போவதே ஜெபத்திற்கு ஓயாமல் உத்தரவு கிடைக்



கிற வழி. இந்தப் பாடத்தை நீர் எனக்குச் சொல்லித் தந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே, நான் அந்த மேன்மையான தேவ சித்தத்தின்படி பிழைக்கிறதினாலும், அதில் மனப்பூர்வமாய்ப் பிரியம் வைக்கிறதினாலும், அதையே செய்கிறதினாலும் அது எனக்கு எப்போதும் தெரிந்திருக்கப்பண்ணும். அப்போது தேவ சித்தத்திற்கேற்ற ஜெபம்பண்ணவும் புகழ்தற்குரிய தேவ சித்தமும் என் ஜெபமும் ஒத்திருப்பதினால் துணிந்து ஜெபம்பண்ணவும் நான் பண்ணின ஜெபம் பலிக்கும் என்று நிச்சயித்திருக்கவும் நான் படித்துக்கொள்வேன்.

பிதாவே! உமது சமுகத்தையும் உமது ஆசீர்வாதத்தையும் உமது பிள்ளை அநுபவிக்கவேண்டும் என்பது உமது சித்தம். உம்முடைய பிள்ளை தன் ஜீவியத்தில் ஒவ்வொன்றையும் உம்முடைய சித்தத்தின்படிக்கே செய்து பிழைக்கவேண்டும் என்பதும் அப்படி பிழைப்பதை உம்முடைய ஆவியானவர் அவனுக்குள் உண்டாக்கவேண்டும் என்பதும் உமது சித்தம். உமது பிள்ளைக்கு உம்முடன் நெருக்கமான ஜீவனுள்ள ஐக்கியம் உண்டாயிருக்கும்பொருட்டு தினந்தோறும் அவன் ஜெபித்துக் கேட்டபடிக்கே உத்தரவு வாங்கி அநுபவிக்கவேண்டும் என்பது உமது சித்தம். உமது பிள்ளைகளிடத்திலும் அவர்கள் மூலமாயும் உமது நாமம் மகிமைப்படவேண்டும் என்பதும் உம்மை நம்புகிற பிள்ளைகளிடத்தில் அது மெய்யாகவே மகிமைப்படும் என்பதும் உமது சித்தம். ஆ என் பிதாவே, நான் கேட்கிற எல்லாவற்றிலும் இந்த உமது சித்தமே எனக்கு மன நிச்சயம் உண்டாக்குவதாக.

ஸ்தோத்திரிக்கப்பட்ட இரட்சகரே! இந்தச் சித்தத்தின் றகத்துவத்தை நம்பிப் பிழைக்க எனக்குப் போதியும். நித்திய அன்பே அந்தச் சித்தம். தன்னை அதின் வசப்படுத்திவிடுகிற ஒவ்வொரு மனுஷ சித்தத்திலும் அது தன் திவ்விய வல்லமையால் தன் நோக்கம் வாய்க்கச்செய்கிறது. ஆண்டவரே! இதை எனக்குப் போதியும். திருவசனத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் ஒவ்வொரு கட்டளை

யும் உண்மையாகவே தேவனுடைய சித்தம்தான. அது எனக்குப் பலிக்கும் என்பதற்கு தேவனே எனக்குப் பொறுப்பாளி. இதை எனக்குத் தெரியப்பண்ண உம்மாலாகும். இவ்வாறு, தேவசித்தமே என் ஜெபத்திற்கும் அது பலிக்கும் என்கிற நிச்சயத்திற்கும் உறுதியான அஸ்திபாரக் கல்லாயிருப்பதாக. ஆமென்.

## புறனடை.

தேவசித்தத்தைக் குறித்து மனுஷருக்குள் மிகவும் மலைவான நினைவுகள் இருக்கின்றன. தேவன் திருச்சித்தங்கொண்டது எவ்விதத்திலும் நடந்தேதீரும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அப்படி அல்லவே அல்ல. தம்முடையவர்களுக்கு ஏராளமான பற்பல ஆசீர்வாதங்கள் வரவேண்டுமென்று தேவன் சித்தமுடையவராயிருந்தும் அவைகள் அவர்களுக்குக் கிடைக்கிறதில்லை. அவருக்கு வெகு உட்கருத்தான சித்தந்தான் இருக்கிறது. ஆயினும் அவர்கள் அதை விரும்பாத சித்தமுடையவர்களா யிருப்பதால் அது அவர்களுக்குக் கிடைக்காது. மானிடன் சுயாதீன சித்தனாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதிலும் புதுப்பிக்கப்பட்ட சித்தனாய் இரட்சிக்கப்பட்டிருப்பதிலும் இருக்கிற பெரிய இரகசியம் என்னவெனில்: பலவிஷயங்களில், தேவன் தம்முடைய சித்தம் நிறைவேறுதலை மனுஷனுடைய சித்தத்திற்குக் கட்டுப்படுத்தியிருப்பதுதான். தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களில் வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய சித்தத்தில் நமது விசுவாசம் எவ்வளவு விரும்பி வாங்கிக்கொள்ளுகிறதோ அவ்வளவுதான் அந்தச் சித்தம் நிறைவேறும். அது நிறைவேறி[illegible]ச்செய்கிற வல்லமை ஜெபம்; மற்றப்படி அது பலிக்காது. தேவசித்தத்தில் எவ்வளவு நம்மிடத்தில் பலிக்கும் என்று அளவு தீர்த்துவிடுகிற வல்லமை விசுவாசம். நமது ஆத்துமாவுக்கு நாம் செய்ய விரும்புவதைத் தேவன் வெளியிட்ட பிற்பாடு அந்த விருப்பம் நிறைவேறப்பண்ணுகிற உத்தரவாதம் நம்முடையது.

இது மனிதன் கையில் அவனுக்கு மிஞ்சின வல்லமையைக் கொடுப்பதாகுமே என்று சிலர் பயப்படுகிறார்கள். ஆனால், கிறிஸ்து இயேசுவுக்குள் சகல வல்லமையும் மனுஷன் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா ஜெபத்திற்கும் எல்லா வல்லமைக்கும் திறவுகோல் அவருடையது. அவர் பிதாவுடன் எவ்வளவு ஒன்றாயிருக்கிறாரோ அவ்வளவு நம்முடனும் ஒன்றாயிருக்கிறார். மேலும், அவர் பிதாவுடன் எவ்வளவு ஒன்றாயிருக்கிறாரோ அவ்வளவு நாமும் அவரு



டன் ஒன்றாய் இருக்கிறோம். இது நமக்கு விளங்கும்போது, நாம் பிதாவில் நிலைத்திருக்கிறதுபோல் தம்மில் நிலைத்திருக்கிறவர்களுக்கு அவர் அப்பேர்ப்பட்ட வல்லமை கொடுப்பது சகஜமும், நியாயமும், நிர்விக்கினமுமானதுதான் என்பது நமக்கு விளங்கும். நாம் விரும்புகிறதைக் கேட்கிற உரிமை குமாரனாகிய கிறிஸ்துவுடையது. அவர் நம்மைக்கொண்டு கேட்டு வாங்க விரும்புகிறதை அவருடைய ஆவியானவர் நம்முள்ளத்தில் ஊதித்தெரிவிக்கிறார். இது நாம் கிறிஸ்துவிலும் கிறிஸ்து நம்மிலும் பரஸ்பரம் நிலைத்திருக்கையினால் தேவாவிக்குக் கூடியதாகிறது. இந்தத் திருச்செயல் வாஸ்தவமாய் நம்முன்னேயே நடக்கிறதாயிருந்தும் அது நமது கிரகித்தறிவுக்கு அகப்படாது. இதினால், நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிற ஜெபங்கள் நம்முடையவைகளாயுமிருக்கின்றன, அவருடையவைகளாயுமிருக்கின்றன.

வேறு சிலர் நமது ஜெபத்திற்கு அப்பேர்ப்பட்ட வல்லமை இருக்கிறதென்று நம்புவது தேவனுக்கு இருக்கிற சுயாதீனத்தையும் அன்பையும் எல்லையிட்டுக் குறைப்பதாகுமே என்று அஞ்சுகிறார்கள். ஆனால், அவர் நம்மைத் தம்முடைய கூட்டுறவில் சேர்த்துக்கொண்ட பிற்பாடு நமது ஜெபங்கள், நமது விசுவாசம், இவற்றின் வழியாயன்றி வேறு வழியாய்க் கிரியை செய்யப் பிரியப்படுகிறதில்லை. அவர் தாமாய்த் தெரிந்துகொண்ட இந்த ஒரேவழியில் தாராளமாய்ப் போய்ச் செயல் இயற்றல் ஆகாது என்று சொல்வதுதான் அவருடைய சுயாதீனத்தையும் அன்பையும் எல்லைகட்டிக் குறைப்பதாகுமேதவிர மற்றப்படியல்ல என்று நாம் அறிந்திருக்கவேண்டும். திருவூழியம் செய்கிற அன்பர் ஒருவர் ஒருநாள் இந்த விஷயத்தைப் பற்றி என்னுடன் சம்பாஷிக்கையில்: “இப்படிச் சொன்னால் அது நாம் பிறருக்குப் பாராட்டுகிற அன்பும் பிறருக்கு நன்மை செய்ய நமக்கு இருக்கிற மனப்பூர்வமும் புறப்பட்டுப்போய் தேவனைத் தட்டி எழுப்பி அவரும் அவர்களுக்கு நன்மைசெய்யவும் அன்பு பாராட்டவும் அவரைத் தூண்டுகிறது என்று சொல்லுகிற தேவ நிந்தையாகாதா” என்று கேட்டார். நாங்கள் போனவழியில் பெரிய நீர்பாய்குழாய்கள் போட்டிருந்தன. அந்தக் குழாய்கள் மேடுபள்ளங்கள் வழியாய்ச் சென்று ஒரு பெரிய மலையருவி நீரைக் கொஞ்சதூரத்திலிருந்து ஒரு பட்டணத்திற்குக் கொண்டுபோய்க் கொடுத்தன. நான் அவருக்குச் சொன்ன உத்தரவு இது:—“இந்தக் குழாய்களைப் பாரும். இவைகள் அந்த மலைத்தண்ணீருக்குப் பள்ளத்தாக்கில் இறங்கிவர மனதும் கொடுத்ததில்லை, ஜனங்களுக்கு நன்மைசெய்து அவர்களைச் சந்தோஷிப்பிக்க வல்லமையும் கொடுத்ததில்லை. மேட்டிலிருந்து பள்ளத்

தில் பாய்வதும் மனுஷருடைய விடாய் தீர்த்து அவர்களை முகமலரச்செய்வதும் தண்ணீர்க்குத் தானாய் உள்ள இயல்பு. இந்தக் குழாய்கள் செய்கிறதெல்லாம் என்னவென்றால், அவைகள் எந்தத் திசையை நோக்குகின்றனவோ அந்தத் திசையிலே அந்தத் தண்ணீர் பாயப்பண்ணுவது ஒன்றேதான். அந்த ஊர் ஜனங்கள் இந்தக் குழாய்கள் போட்டதினாலே என்ன சொன்னார்கள் என்றால், மலையில் இருக்கிற தண்ணீர் எங்களுக்கு வேண்டும் என்று சொன்னார்கள். இதுபோலவே, அன்பும் ஆசீர்வாதமும் வழங்குவது தேவனுக்குத் தானாய் உள்ள இயல்பு. தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்குத் தம்முடைய அன்பு அருவிகளாய்ப் பாய்ந்து மானிடரை உயிர்ப்பித்து அகமகிழச்செய்யவேண்டும் என்கிற பிரியம் அவருக்கு இயற்கையாகவே இருக்கிறது. ஆனால் அவர் கொடுக்க விரும்புகிற நன்மை எந்தெந்த இடத்திற்கு வரவேண்டும் என்று கேட்கிற உரிமையை அவர் நமது ஜெபத்திற்கு அருளியிருக்கிறார். அவர் தமது விசுவாசிகளை நம்பி, அவர்கள் எந்தெந்த வனாந்தரத்திற்கு அந்த ஜீவநதியைக் கொண்டுபோக விரும்புகிறார்களோ அந்தந்த வனாந்தரத்திற்குக் கொண்டுபோகிற சிலாக்கியத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். நன்மைசெய்ய வேண்டுமென்று தேவனுக்கு இருக்கிற சித்தம் அந்த நன்மை எந்தெந்த இடத்தில் கிடைக்கவேண்டுமென்று சொல்லுகிற மனுஷ சித்தத்துக்கு அகப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட கனம் அவருடைய பரிசுத்தவான்களுக்கு அருளப்பட்டிருக்கிறது."

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் வேண்டினவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்றும் அறிந்திருக்கிறோம்."



# முப்பதாம் பாடம்.

## 'பரிசுத்த ஆசாரியக்கூட்டம்'

அல்லது,

## ஜெப ஊழியம்.

"இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டம்." (1 பேது. 2. 5.)

"நீங்கள் கர்த்தரின் ஆசாரியர் என்று சொல்லப்படுவீர்கள்." (ஏசா. 61. 6.)

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; ஏனெனில், கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்." இவை ஏசாயா எழுதின இயேசுவின் வார்த்தைகள். அவர் செய்துமுடித்த கிரியைக்குப் பலன் இரட்சிக்கப்பட்ட எல்லாரும் ஆசாரியராய் இருந்துகொண்டு அவர் தமது பிரதான ஆசாரிய ஊழியத்துக்குப் பெற்றுக்கொண்ட தேவாவி அபிஷேகத்திலே அவர்களும் உடன்பங்கு அநுபவிப்பதுதான். "அது ஆரோனுடைய தாடியிலே வடிகிறதும் அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கு ஒப்பாய் இருக்கிறது." ஆரோனுடைய ஆண்மக்களுக்கெல்லாம் ஆசாரியராகும் உரிமை இருந்தது. அப்படியே, இயேசுவினுடைய அவயவங்களுக்கெல்லாம் ஆசாரியராகும் உரிமை இருக்கிறது. ஆனால், அவர்களெல்லாரும் அந்த உரிமையை அநுபவிக்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட உரிமை தங்களுக்கு உண்டென்பதே அநேகருக்குத் தெரியாது. ஆயினும், அதுதான் தேவனுடைய பிள்ளைகளுக்குக் கிடைத்திருக்கிற உச்சிச் சிலாக்கியம்; அதுதான் அவர்களுக்கும் "வேண்டுதல் செய்வதற்கு எப்பொழுதும் உயிரோடிருக்கிறவருக்கும்" அத்தியந்த அந்நியோந்நியமும் குணவொற்றுமையும் இருக்கிறது என்று காட்டுகிற அறிகுறி.

இது உண்மைதான் என்பதைக் குறித்து உனக்குச் சந்தேகம் ஏதேனும் உண்டானால், ஆசாரிய ஊழியத்தின் இயல்பை எடுத்துச் சோதித்துப்பார்.

முதலாவது, ஆசாரிய ஊழியத்திற்குக் குறிக்கப்பட்ட வேலை இருக்கிறது. இந்த வேலைக்கு இரண்டுபக்கம் உண்டு; ஒன்று தேவனை நோக்கின பக்கம், மற்றொன்று மனுஷனை நோக்கின பக்கம். "எந்த ஆசாரியனும் மனுஷருக்காக தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான்" (எபி. 5. 1.); அல்லது, மோசே சொல்லுகிறபடி (உபா. 10. 8. ஒத்துப்பார். உபா. 21. 5; 33. 10. மல். 2. 6.): "கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும், அவர் நாமத்தைக்கொண்டு ஆசீர்வதிப்பதற்கும், கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார்." ஆசாரியன் செய்த வேலையின் ஒரு பக்கத்தைப் பார்த்தால், தேவனண்டை சமீபித்துப் போகவும், அவருடைய வீட்டிலே அவருடன் வாசம்பண்ணவும், அவருடைய சந்நிதியிலே பலியிரத்தம், தூபப்புகை, இவற்றைச் செலுத்தவும் அவனுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், அவன் செய்த இந்த வேலை அவன் தனக்காகச் செய்ததல்ல; அவன் ஜனத்திற்குப் பிரதிகாரியாகையால் அவன் அதை ஜனத்திற்காகச் செய்தான். இதுவே அவனுடைய வேலையின் மறுபக்கம். அவன் ஜனங்கள் கொண்டுவந்த பலிகளை அவர்களிடத்தில் வாங்கி, தேவசமுகத்திற்குச் சென்று அவைகளை அவருக்குச் செலுத்தி, பிறகு வெளியேவந்து அவருடைய நாமத்தினால் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தயவு அவர்களுக்குக் கிடைத்தென்று அவர்களுக்கு நிச்சயம் சொல்லி, அவருடைய நியாயப்பிரமாணத்தை அவர்களுக்குப் போதித்தான்.

இதின்படி பார்த்தால், ஆசாரியன் தனக்கென்று பிழைக்கிறவனே அல்ல. அவன் தேவனோடும் தேவனுக்காகவும் பிழைக்கிறவன். இதுவிஷயத்தில், அவன் தேவனுடைய ஊழியனாய் இருந்துகொண்டு, அவருடைய வீட்டுக்காகவும், அவருடைய கனத்திற்காகவும், அவருடைய ஆராதனைக்காகவும் கவலைப்பட்டு அவருடைய அன்பையும் அவரு-



டைய சித்தத்தையும் மனிதருக்குப் பிரஸ்தாபித்தான். மேலும், அவன் மனிதரோடும் மனிதருக்காகவும் பிழைக்கிறவன் (எபி. 5. 2:). இதுவிஷயத்தில், அவன் அவர்களுடைய பாவங்களையும் ஆவசியங்களையும் அறிந்து, அவைகளை தேவசமுகத்தில் தெரிவித்து, அவர்களுடைய நாமத்தில் பலியும் தூபமும் செலுத்தி, அவர்களுக்காகப் பாவமன்னிப்பும் வேறு நன்மைகளும் வாங்கிக்கொண்டு வெளியே வந்து அவர்களை அவருடைய நாமத்தினால் ஆசீர்வதித்தான். ஒவ்வொரு விசுவாசியும் செய்யவேண்டிய மேன்மையான வேலை இதுவே. "இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாயிருக்கிறது." அவர்கள் இரட்சிக்கப்பட்டதற்கு ஒரே நோக்கம் இருக்கிறது. அது என்னவென்றால், மடிகிறவர்களாகிய இலக்ஷாதி இலக்ஷம் மானிடர் நடுவே அவர்கள் தேவனுடைய ஆசாரியர்களாய் இருந்துகொண்டு, பெரிய பிரதான ஆசாரியராகிய இயேசுவின் தன்மை பூண்டவர்களாய்த் தங்களுக்கு அக்கம் பக்கங்களிலுள்ள யாவருக்கும் தேவனுடைய கிருபையைப் பரிமாறுகிறவர்களும் அதற்கு உக்கிராணக்காரர்களுமாய் இருப்பதுதான்.

இரண்டாவது, ஆசாரிய ஊழியத்திற்குக் குறிக்கப்பட்ட ஜீவியமுறை இருக்கிறது. ஆசாரியருடைய வேலைக்கும் அவர்களுடைய ஜீவியத்திற்கும் பொருத்தம் இருக்கவேண்டும். தேவன் பரிசுத்தர். அதுபோல ஆசாரியன் சிறந்த பரிசுத்தனாய்ப் பிழைக்கவேண்டும். அவன் தீட்டானதைத் தொடாதிருக்கிற சுத்தனாய் மாத்திரமல்ல, கர்த்தருக்குப் பரிசுத்தனாய், அதாவது, தேவன் தம்முடைய இஷ்டம்போல் நடத்துவதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து அவருக்கு ஆதீனமானவனாய் இருக்கவேண்டும். அவன் உலக விவகாரங்களுக்கு அந்நியமான தெய்வாதீனப் பிராணி என்று பலபல விதங்களால் குறித்துக் காட்டப்பட்டது.

ஆசாரியருடைய உடை அதைக் குறித்துக் காட்டிற்று. தேவகட்டளைப்பிரகாரம் அவர்களுக்காகச் செய்யப்பட்ட வஸ்திரங்கள் அவர்கள் அவருடையவர்கள் என்று தெரிவித்தன (யாத். 28. அதி.). சாவு சம்பந்தமானது, தீட்டுச் சம்பந்தமானது, இவைகளில் எதையும் தொடாமல் விலகிச் சுத்த

மாய் இருக்கவேண்டுமென்று அவர்களுக்கு தேவன் இட்ட கட்டளை (லேவி. 22. அதி.) அதைக்குறித்துக் காட்டிற்று. இஸ்ரவேலருள் சாமானியருக்கு விலக்கப்படாத அநேக காரியங்கள் ஆசாரியருக்கு விலக்கப்பட்டன. ஆசாரியனுடைய தேகத்தில் எவ்வித மாசும் அங்கப்பழுதும் இருக்கலாகாது என்று தேவன் விதித்த விதி அதைக் குறித்துக் காட்டிற்று. மாசுமறுவில்லாத அங்கபூரணம் தேவஊழியத்தில் துலங்க வேண்டிய சம்பூரண பிரதிஷ்டை, பரிசுத்தம், இவற்றிற்கு அடையாளமாயிருந்தது. ஆசாரியக் கோத்திரத்தார் மற்றக் கோத்திரத்தாரைப்போல சுதந்தரம் பெறலாகாது என்கிற ஏற்பாடும் அதைக் குறித்துக் காட்டிற்று. தேவன்தாமே அவர்களுடைய சுதந்தரம். அவர்களுடைய ஜீவியம் தேவனை நம்பிப் பிழைக்கிற ஜீவியமாய் இருக்கவேண்டும். அவர்கள் தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டு அவருக்காகப் பிழைத்தார்கள். ஆதலால், அவர்கள் தங்களுடைய ஜீவனத்திற்கு வேண்டியதை அவரிடத்திலிருந்தே பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதெல்லாம் புதிய ஏற்பாட்டு ஆசாரியனுக்கு இருக்க வேண்டிய இலக்ஷணம் இன்னது என்று வெளிப்படுத்துகிற முன்னடையாளம். நமது ஜீவியத்திற்கும் நமது நடக்கைக்கும் தக்கபடிதான் நமது ஆசாரிய வல்லமை தேவனிடத்திற் பலிக்கும். “[illegible] தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாதவர்கள்” என்று இயேசு மெச்சினவர்களுடைய [illegible]க்கை நமக்கு இருக்கவேண்டும்.

அநுபவிக்கத் தகும் என்று பிறர் நினைக்கிறவைகள் தேவனுக்குப் பரிசுத்தமாயிருக்கிற நமக்குத் தகாதவைகளாயிருக்கும். அவைகளை வெறுத்து விலக்குவதில் நமக்கு இருக்கிற பிரியம் நாம் மனப்பூர்வமாய் நம்மை தேவனுக்கு ஒப்புவித்திருக்கிறோம் என்று ரூபிக்கவேண்டும். அக்காலத்து ஆசாரியனுக்குப் பழுதில்லாத அங்கபூரணம் இருக்கவேண்டியதுபோல இக்காலத்தில் நமக்கு மாசும் பழுதும் இல்லாத ஜீவியம் இருக்கவேண்டும். நாம் “தேவனுடைய மனுஷராய்த் தேறினவர்களாயும் எந்த நற்கிரியையையும் செய்யத் தகுதியுள்ளவர்களாயும், ஒன்றிலும் குறையுள்ளவர்களாயிரா



மல் பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கவேண்டும்” (லேவி. 21. 17–21. எபே. 5. 27. 2 தீமோ. 2. 7. யாக். 1. 4.). இவையெல்லாவற்றிற்கும் மேலாக, பூலோகத்திலே நாம் சகல சுதந்தரங்களையும் விட்டுவிடச் சம்மதியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். கிறிஸ்து செய்ததுபோல நாமும் சகலத்தையும் வெறுத்து தேவனைமாத்திரம் நம் பங்காக மதித்து அநுபவிக்கவேண்டும். நமக்கு உலக சம்பத்து இருந்தால் அதில் பற்றுவைக்காமல் எல்லாவற்றையும் தேவனுக்காகவே வைத்திருக்கிறவர்களாய்ப் பிழைக்கவேண்டும். தேவனுக்காகவும் பிறருக்காகவுமே பிழைக்கிறவனாகிய ஆசாரியனுக்கு இருக்கவேண்டிய இலக்ஷணம் இதுதான்.

மூன்றாவது, ஆசாரிய ஊழியத்திற்குள் பிரவேசிக்கிற ஊழியப் பிரவேசம் இருக்கிறது. தேவன் ஆரோனுக்குள் அவனுடைய புத்திரரையெல்லாம் ஆசாரியராய்த் தெரிந்துகொண்டிருந்தார். அவர்கள் ஒவ்வொருவனும், பிறப்பினால் ஆசாரியர்களேயானாலும் விசேஷ சடங்கில்லாமல், அதாவது அபிஷேகம் பெறாமல் ஊழியத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. அவ்வாறே, தேவனுடைய பிள்ளைகளும் பிறப்பினால் அதாவது, பெரிய பிரதான ஆசாரியருடன் இரத்த சம்பந்தமுடையவர்களாயிருப்பதினால் ஆசாரியர்கள்தான். ஆயினும், அது போதாது. அவர்கள் அபிஷேகம்பெற்று அதின் வல்லமையை அநுபவிக்கிறதற்குத் தக்கபடி அவர்களுக்கு வல்லமை இருக்கும்.

ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் பின்வருமாறு ஊழியப் பிரவேசச் சடங்கு நடந்தது (யாத். 29. அதி.): அவர்கள் மங்களஸ்நானம் செய்து திருவுடை புனைந்தபின் பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். பிறகு, அவர்களுக்காகப் பலி செலுத்தப்பட்டது. அந்தப் பலி இரத்தத்தினால் அவர்களுடைய வலதுகாது, வலதுகை, வலதுகால் இவை பூசப்பட்டன. அதின்பிறகு, அவர்கள்மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள்மேலும் அந்தப் பலி இரத்தமும் அந்த அபிஷேகத்தைலமும் இன்னொருமுறை தெளிக்கப்பட்டது. அவ்வாறே தேவனுடைய பிள்ளையான

வன். ஏற்கனவே பெற்றிருக்கிற பரிசுத்த இரத்தமும் பரிசுத்த ஆவியும் அவனுக்குள் அதிகப் பூரணமாய் வேலை செய்யும்போதுதான் அவனுக்குக் கிடைத்திருக்கிற ஆசாரிய ஊழியத்தின் வல்லமை அவனுக்குப் பலிக்கும். அந்தப் பரிசுத்த இரத்தம் நான் அபாத்திரன் என்று பயப்படுகிற பயத்தை அவனைவிட்டு எடுத்துப்போடும். அந்தப் பரிசுத்த ஆவி நான் இந்த ஊழியத்துக்குத் தகுந்தவனல்ல என்கிற நினைப்பை அவனைவிட்டு நீக்குவார்.

இரத்தம் ஆசாரியனுக்கு உபயோகிக்கப்பட்டதில் இருக்கிற விசேஷ முக்கியத்தைக் கவனித்துப் பார்ப்போம். அவன் தன் பாவத்தை நினைத்து மனஸ்தாபப்பட்டு, பாவமன்னிப்புத் தேடித் தனக்காக பலி செலுத்தினபோதெல்லாம் அந்தப் பலியின் இரத்தம் பலிபீடத்தின்மேல் தெளிக்கப்பட்டதேதவிர அவன்மேல் தெளிக்கப்படவில்லை. ஆனால், இப்போது ஆசாரியப் பிரதிஷ்டையை அவன் பெறும்பொருட்டு அவனுக்கும் இரத்தத்திற்கும் முன்னிலும் அதிக நெருங்கின ஐக்கியம் அவசியமாயிருந்தது; அவனுடைய காதும் கையும் காலும் ஒரு விசேஷித்த சடங்கினால் இரத்தத்தின் வல்லமைக்கு ஒப்புவிக்கப்பட்டன. அவனுடைய ஆவியும் உடலும் இரத்தத்தினால் தேவனுக்கு வசப்படுத்தப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்டது. அவ்வாறே விசுவாசியும் தன் பாவ மன்னிப்புக்காகக் கிருபாசனத்தண்டை தெளிக்கப்பட்ட இரத்தத்தை நினைவுகூர்வது போதும் என்று இருந்தான். ஆனால், அவன் இனித் தனக்குரிய ஆசாரிய ஊழியத்தைச் செய்ய தேவனிடத்தில் கிட்டிச்சேரத் தூண்டப்படும்போது, இரத்தத்தின் வல்லமையை முன்னிலும் அதிக பூரணமாயும் முன்னிலும் அதிகமாய் நிலைத்திருப்பதாயும் அநுபவிப்பது தனக்கு அவசியம் என்று உணருகிறான். அதாவது, இரத்தம் அவனுடைய இருதயத்திலே வாஸ்தவமாய்த் தெளிக்கப்படுவதினால் அங்கே துன்மனச்சாட்சி நீங்கி, "பாவத்தின் வர்தையை உணருகிற மனச்சாட்சி" அற்று (எபி. 10. 2.), இப்படி இரத்தத்தினால் அவனுள்ளம் எல்லாப் பாவமும் நீங்கிச் சுத்திகரிக்கப்பட்டிருப்பதை அநுபவிப்பது அவனுக்கு அவசியமாகிறது. இ-



பேர்ப்பட்ட அநுபவம் கிடைக்கும்போது, தேவனிடத்தில் அந்நியோந்நியமாய் நெருங்கி உறவாடத் தனக்கு உரிமை உண்டு என்றும், தான் செய்கிற வேண்டுதல்கள் அவருக்கு நிச்சயமாகவே பிரியந்தான் என்றும் அறிகிற ஞானம் அவனுக்கு உதிக்கும்.

விசுவாசமுள்ள வேண்டுதல் செய்ய இரத்தம் நமக்கு உரிமை கொடுக்கிறதுபோல தேவாவி நமக்கு வல்லமை கொடுத்து நம்மை அதற்குத் தகுதியுள்ளவர்களாக்குகிறார். தேவனுக்கு கனமும் ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பும் வரவேண்டுமென்று பற்றி எரிகிற ஆவலாகிய ஆசாரிய ஆவியை அவர் நமக்குள் ஊதி மூட்டிவிடுகிறார். அவர் நம்மை இயேசுவோடு அதிபூரணமாய் ஒன்றாக்கி விடுகிறதினால் இயேசுநாமத்தில் மன்றாடுவது நமக்கு வாஸ்தவமான அநுபவமாகிறது. விசுவாசத்துடன் கூடிய தளரா முயற்சியுள்ள ஜெபம்பண்ண அவர் நமக்கு வலுவேற்றுகிறார். கிறிஸ்தவனுக்குள் கிறிஸ்துவின் ஆவி எவ்வளவுக்கு நிறைந்திருக்கிறாரோ அவ்வளவுக்கு மன உற்சாகமாய் அவன் ஆசாரிய வேண்டுதல் செய்ய தன் ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பான். நேசிக்கப்பட்ட உடன் கிறிஸ்தவனே! தேவனை அணுகி, அவர் சந்நிதியிலே பிழைத்து, அவர் கிருபை பாய்ந்து தரும் நன்மைகளை வாங்கிப், புவியிலுள்ளவர்களுக்கு வழங்கும் ஆசாரியர்கள் அவருக்கு மகா தேவை. வீணாய் மாய்கிற மானிடருடைய பாரத்தைச் சுமந்து அவர்களுக்காக மன்றாடுகிற ஆசாரியர்கள் புவியிலுள்ளவர்களுக்கும் அத்தியாவசியம்.

இந்தத் திருப்பணிவிடைக்கு உன்னை ஒப்புவிக்க உனக்குப் பிரியமுண்டா? அதின்பொருட்டு நீ விட்டுவிடவேண்டியது இன்னது என்று உனக்குத் தெரியும். கிறிஸ்துவைப்போல நீ சகலத்தையும் விட்டுவிடவேண்டும். அப்படிச் செய்ய நீ சம்மதிப்பதினால் மானிடர் ஈடேறவேண்டுமென்று தேவனுடைய திருவன்புக்கு இருக்கிற நோக்கம் நிறைவேறும். நாங்கள் இரட்சிக்கப்பட்டால் போதும், எங்கள் ஜீவன் குளிர்ந்துபோகாமல் அதைக் காத்துக்கொண்டால் போதுமென்று

நினைக்கிறவர்களைப்போல் நீயும் நினைக்காதே. உன்னை முற்றும் ஆசாரிய வேலைக்கே ஒப்புவி. அதைத் தடுக்கிற எந்தத் தடைக்கும் இடங்கொடாதே. உன்னதமான தேவனுக்குச் செய்கிற ஆசாரியவேலைமேலேயே நாட்டம்வை. அதற்குக் குறைந்த எந்த வேலையையும் போதும் என்று நம்பாதே. அந்த வேலைக்கு நான் அபாத்திரன், நான் தகுதியற்றவன், என்று நினைத்துச் சும்மா இராதே. திரு உதிரத்தில், பரிபூரண இரட்சிப்பின் வல்லமை வந்து உனக்குள் வேலைசெய்கிறது; தேவ ஆவியில், அதை தேவஜீவனை உள்ளத்தில் அநுபவிக்கிற பூரண அநுபவம் உனக்கு அகப்படுகிறது. அந்தத் திரு உதிரம் தேவனுக்குப் பிரியமான வேண்டுதல் செய்ய உனக்கு அளவில்லாத பாத்திரம் தரும்; அந்த தேவாவி தேவசித்தத்திற்குப் பொருந்தின ஜெபம்பண்ணப் போதித்து, தெய்வீக தகுதியுடைமையை உனக்கு அருளுவார். பரிசுத்த ஸ்தலத்துக்குரிய விதிப்படி செலுத்தின பலி அங்கீகரிக்கப்படும் என்று ஒவ்வொரு ஆசாரியனுக்கும் தெரியும். திரு உதிரமும் தேவாவியும் உன்னை மூடுகிற திருக்கவசமாயிருப்பதினால், நீ இயேசுவின் நாமத்தில் செய்கிற ஜெபமெல்லாம் கைகூடும் என்கிற நிச்சயம் உனக்கு இருக்கிறது. பெரிய பிரதான ஆசாரியருடைய ஐக்கியத்தில் நீ நிலைத்திருக்கும்போது "நீ கேட்டுக்கொள்வது எதுவோ அது உனக்குச் செய்யப்படும்." மிகவும் பெலனுள்ளதாகிய நீதிமானுடைய ஊக்கமான வேண்டுதலுக்குரிய வல்லமை உனக்கு இருக்கும். உலகத்திற்காகத் திருச்சபை செய்கிற பொதுவான வேண்டுதல் மாத்திரமல்ல, உன்னுடைய தனிவட்டத்திற் கூட்டப்பட்டவர்களுக்காக விசேஷ ஜெபமும் செய்ய உனக்குத் திராணி இருக்கும். அதாவது, அவர்களுக்காக நீ ஆசாரியனாய் இருந்துகொண்டு, தேவனிடத்தில் ஜெபித்து உத்தரவு வாங்கி, அவர்களை அவருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கக் கூடியவனாயிருப்பாய். வா, சகோதரா, வந்து ஆசாரியனாயிரு; ஆசாரியனாய் மாத்திரம் இரு; சமூலமும் ஆசாரியனாய் இரு. பரிசுத்த ஜெப ஊழியத்திற்கு நீ பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதை மனப்பூரணமாய் உணர்ந்து, அதற்குத் தக்கபடி இப்போதே நடக்



கத் துவக்கு. தேவனுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருப்பதினால் உண்டாகும் உண்மையான பாக்கியம் இதுதான்.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆ ஸ்தோத்திரிக்கப்பட்ட என் பிரதான ஆசாரியரே! நீர் விளம்பரம்பண்ணின செய்தியைக் கேட்டு என்னுள்ளம் தன்னை உமக்கும் பிரதிஷ்டை பண்ணப் பிரியப்படுகிறது. அதை அங்கீகரிப்பீராக.

பரிசுத்தவான்களுக்கு ஆசாரிய ஊழியம் உண்டு, நானும் பிதாவின் சந்நிதியில் நிற்க அதிகாரம் பெற்ற ஆசாரியன் தான், என்னைச் சூழ வீணாய் மாய்கிறவர்களுக்கு நன்மை வரப்பண்ணுகிற மிகவும் பெலனுள்ள ஜெபம் செய்ய என்னாலாகும் என்று விசுவாசிக்கிறேன்.

சர்வ பாவமும் போகச் சுத்திகரிக்கவும், தேவன்மேல் பூரண நம்பிக்கையை எனக்கு உண்டாக்கவும், என் வேண்டுதல் கேட்கப்படும் என்கிற முழு விசுவாச நிச்சயத்தை என் நெஞ்சிலே தந்து தேவனண்டை என்னை நிறுத்தவும் உம்முடைய அருமையான திரு இரத்தத்திற்கு வல்லமை உண்டு என்று விசுவாசிக்கிறேன்.

என்னைப் பரிசுத்தமாக்கவும், என் ஆசாரிய ஊழியத்தை நடத்த எனக்கு உணர்த்தவும், ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டும் என்கிற ஆவலை என்னில் மூட்டவும், தேவசித்தத்திற்கு ஏற்றது எதெது என்றும் விசுவாசமுள்ள ஜெபம் செய்வது எப்படி என்றும் எனக்குப் போதிக்கவும் என் பெரிய பிரதான ஆசாரியராகிய உம்மிடமிருந்து தினந்தோறும் இறங்கிவருகிற திவ்விய ஆவியாகிய அபிஷேகம் உண்டு என்று விசுவாசிக்கிறேன்.

என் கர்த்தராகிய இயேசுவே, சகலத்திற்கும் நீரே என் ஜீவனாதலால், என் ஜெப ஜீவனுக்கும் நீரே பொறுப்பாளியாய் இருந்து, நீர் பரலோகத்தில் செய்கிற வேண்டுதற்றொழிலில் என்னையும் உயர்த்திக் கூட்டாளியாக்கிக்கொள்வீர் என்று விசுவாசிக்கிறேன்.

இப்படி விசுவாசித்து, என்னை தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியருள் ஒருவனாய் இன்றைக்கே அவருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். பாவிகளுக்காக வேண்டுதல் செய்ய நான் அவர் சந்நிதானத்தில் நிற்பேன், அவர் நாமத்தினால் அவர்களை ஆசீர்வதிக்க வெளிப்புறப்படுவேன்.

பரிசுத்தமுள்ள கர்த்தராகிய இயேசுவே, என்னை உமக்குப் பிரதிஷ்டை பண்ணுகிறேன். இந்தப் பிரதிஷ்டையை நீர் அங்கீகரித்து முத்திரிப்பீராக. ஆம், ஆண்டவரே! நீர் உமது கரங்களை என்மேல் வைத்து உம்முடைய திருப்பணிவிடைக்கு என்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வீராக. நான் உன்னதமானவருடைய ஆசாரியனாய் இருக்கிறேன் என்கிற நினைவுடனும் இலக்ஷணத்துடனும் மற்ற மனுஷர் நடுவில் சஞ்சரிப்பேனாக.

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவித் தம்முடைய பிதாவாகிய தேவனது சந்நிதியில் நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

# முப்பத்தோராம் பாடம்.

## 'இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்'

அல்லது,

## ஜெபஜீவியம்.

"எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்." (1 தெச. 5. 16, 17, 18.)

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதை நமக்குப் போதிக்க நமதாண்டவர் விதவையையும் அநீதியுள்ள நியாயாதிபதியையும் பற்றிய உவ-



மையைச் சொன்னார். அந்த விதவை ஒரு காரியத்தையே விடாமல் கேட்டு அலட்டினதினால், ஏதாவது ஒரு நன்மையை நாம் தேவனுக்குக் காட்டிக் கேட்கும்போது, அவர் அதைத் தரத் தாமதிக்கையிலும் தர மனதில்லாதவர்போல் காட்டுகையிலும் நாம் அவரை அலட்டிக் கேட்கவேண்டிய விடாமுயற்சியுள்ள ஜெபத்தை இந்த உவமை சுட்டிக் காட்டுகிறதாகத் தோன்றுகிறது. நிருபங்களில் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கவும், ஜெபத்தில் தரித்திருந்து அதன் பொருட்டு விழித்திருக்கவும், எக்காலமும் ஆவியினாலே ஜெபம்பண்ணவும், சொல்லுகிற வார்த்தைகளைக் கவனித்தால் நமது முழுஜீவியமும் ஜெபஜீவியமாய் இருக்கவேண்டுமென்று தெரிகிறது. நமக்கும் நம்மிலும் நம்மூலமாயும் நம்மைச் சூழவும் தேவனுடைய மகிமை வெளிப்படவேண்டும் என்கிற ஆவலும் அவர் தம்முடைய பிள்ளைகளின் ஜெபங்களைக் கேட்பார் என்கிற நிச்சயமும் நமது ஆத்துமாவில் நிரம்ப நிரம்ப, நம்முடைய ஆத்துமாவின் உள்ளுக்குள்ளான ஜீவன் மனக்கனிவும் விசுவாசமுமுள்ளதாய், அதாவது, பற்றுவைத்துக் கேட்கிற ஆவலும் கிடைக்கும் என்கிற நிச்சயமும் உள்ளதாய், ஓயாமல் உயர ஏறிக்கொண்டேயிருக்கும்.

நமது தியானங்களை முடிக்கப்போகிற இந்தச் சந்தர்ப்பத்திலே, அப்போர்ப்பட்ட ஜெபஜீவியம் செய்வதற்கு நமக்குத் தேவையானது என்ன என்று சொல்வது வருத்தமல்ல. அதற்குவேண்டிய முதற்காரியம் நமது முழுஜீவியத்தையும் தேவனுடைய இராஜ்யத்திற்காகவும் அவருடைய மகிமைக்காகவும் திருக்காணிக்கையாகப் படைத்துவிடுவதுதான். பெரிய தேவபக்தனும் நல்லவனும் என்று பெயரெடுக்க விரும்பி இடைவிடாமல் ஜெபிக்கிறவன் அந்த ஜீவியத்தை ஒருபோதும் அடையமாட்டான். நாம் நம்மை மறந்து, தேவனுக்காகவும் அவருடைய மகிமைக்காகவும் நமது ஜீவியத்தை ஒப்புக்கொடுத்த பின்புதான் நமது உள்ளம் விசாலிக்கும், நாம் எதையும் தேவன், தேவசித்தம், என்ற வெளிச்சத்தில் வைத்துப் பார்ப்போம், நம்மைச் சூழ்ந்திருக்கிற எதெதற்கு தேவ ஒத்தாசையும் ஆசீர்வாதமும் தேவை, எதெதில் அவருக்கு மகிமை வருவிக்கிற சமயம் கிடைத்திருக்கிறது, என்று ஒருவரும் சொல்-

லாமல் நாமாய் அறிந்துகொள்வோம். தேவனுக்கு மகிமையுண்டாகவேண்டும் என்கிற ஒரு சிந்தையே நம்முள்ளமெல்லாம் நிறைந்திருக்கையில் நாம் எதைச் செய்தாலும் அதை அந்தச் சிந்தையில் வைத்து நிறுத்திப் பரிசோதித்தே செய்வோம். மேலும், தேவனால் உண்டானதுமாத்திரமே தேவனுக்கும் அவருடைய மகிமைக்கும் உதவும் என்று நமது ஆத்துமா அநுபவசித்தியாய் அறிந்திருக்கும். ஆகையால், அப்போது நமது முழுஜீவியமும் தேவனை நோக்கி: ஆண்டவரே, உம்முடைய வல்லமையையும் அன்பையும் கைக்குமெய்யாய்ப் பலிக்கப்பண்ணி உமது மகிமையை வெளிப்படுத்தியருளும் என்று கூப்பிடுகிற கூப்பாடும் பரலோகத்தை ஏறிட்டு நோக்குகிற ஜீவியமுமாயிருக்கும். சீயோனின் மதில்கள்மேல் நிற்கிற சாமக்காரருள், அதாவது, அங்கள் மன்றாட்டிற்கேயன்றி மற்றப்படி அகப்படாத நன்மைகளைத் திருச்சபைக்கு அருளும்படி தேவலோக ராஜாவைத் தட்டியசைத்துக் கேட்க அவரால் உரிமைபெற்ற ஞான நினைப்பூட்டிகளுள், தானும் ஒருவன் என்கிற அறிவு விசுவாசிக்குள் மயக்கமறத் தெளிவாய் உதிக்கும். "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும், ஆவியினாலே ஜெபம் பண்ணுங்கள்," "எங்களுக்காகவும் வேண்டிக்கொண்டு இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்று பவுல் சொன்ன புத்தி அநுபவத்திற்கு ஒத்த உண்மைதான் என்று அவனுக்கு விளங்கும். மானிடர் நடுவில், தன்னை மறந்து தேவனுக்காகவும் அவருடைய இராஜ்யத்திற்காகவும் பிழைப்பதே இடைவிடாமல் ஜெபம்பண்ணப் படிக்கிறதற்கு வழி.

இப்படி நமது ஜீவியத்தை நாம் தேவனுக்குக் காணிக்கையாகப் படைத்துவிடுவதுடன் நமது ஜெபம் தப்பாமல் பலிக்கும் என்கிற ஆழமான நிச்சயமும் நமக்கு இருக்க வேண்டும். நமது அன்பிற்குரிய ஆண்டவர் நமக்குச் சொன்ன ஜெபப் பாடங்களில் பிதா நாம் கேட்கிறதை நிச்சயமாய்ச் செய்கிற தேவன் என்று வற்புறுத்திப் பேசினார். அவர் வேறெதையும் அதைப்போல அவ்வளவு வற்புறுத்தினதில்லை. "கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்;" உத்தரவு கிடைக்கவே கிடைக்கும் என்று நிச்சயமாய் நம்புங்கள். இதுவே



அவருடைய ஜெபஉபதேசத்தின் அடியும் முடியும் (மத். 7. 8 ஐ. யோவா. 16. 24 ஓடு ஒத்துப்பார்.). இந்த நிச்சயம் நமக்கு இருக்கிற அளவுக்குத் தக்கபடி, நமது ஜெபம் பலிக்கிறதும் நாம் கேட்டதை தேவன் செய்கிறதும் நமக்கு அநுபவம் ஆக ஆக, நம் கையில் கிடைத்திருக்கிற இந்த ஆச்சரியமான வல்லமையை அலட்சியம் செய்ய நமக்கு மனம்வராது: நமது ஆத்துமா முழுவதும் தேவன் பக்கமாகவே திரும்பியிருக்கும், நமது ஜீவியமே ஜெபமாகும். நாம் கேட்டதைச் செய்ய தேவனுக்குக் காலம் அவசியம் என்றும் அவருக்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வளவுகாலமும் நாம் காத்திருக்கவேண்டும் என்றும் நமக்குத் தெரியும்: ஏனெனில், நாமும் நம்மைச் சூழ்ந்திருக்கிற யாவரும் காலவிதிக்குட்பட்ட சிருஷ்டிகள்; நாம் வளர்ச்சிப் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்; ஆகிலும், விசுவாசமுள்ள ஒரே ஜெபங்கூடத் தப்பாது என்றும், சிலவேளை நமது ஜெபம் போய்ப் போய்க் குவியலாய்த் திரள ஏதோ ஒரு அவசியம் இருக்கிறது என்றும், விடாமுயற்சியுள்ள ஜெபம் தடுக்கப்படாத வல்லமையுள்ளது என்றும் நமக்குத் தெரியும். ஆகையால், ஜெபம் இனி நமக்கு நாம் விரும்பினதைக் கேட்டுக்கொண்டும் வாங்குவோம் என்று நம்பிக்கொண்டும் ஆத்திரப்படாமல் அமைதியாய் தேவனுடைய சந்நிதானத்தில் பிழைக்கிற ஓயாப் பிழைப்பாய் இருக்கும். ஜீவனுள்ள தேவன் நமக்குத் தந்திருக்கிற வாக்குகள் தடைக்குட்பட்டவைகளல்ல, நிச்சயமாய்ப் பலிக்கிறவைகள். அவைகளை நாம் நினைத்துக்கொள்ளுகிற ஏதாவது நியாயங்களைச் சொல்லி மட்டுப்படுத்திப் பலங் குறைந்துவிடலாகாது. அதினால் நாம் அவைகளை வல்லமையற்றவைகளாக்குவதுந் தவிர, அவைகளால் நம்முள் மூட்டிவிட தேவன் குறித்த ஆச்சரியமான நிச்சயத்தையும் அடையாமற்போவோம். நமது ஜெபம் பலிக்காமல் தடுக்கிற காரணம் தேவனிடத்தில் அல்ல, நமக்குத் தெரியாத அவருடைய இரகசிய சித்தத்தில் அல்ல, அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு ஏற்பட்டிருப்பதாய் நாம் நினைத்துக்கொள்ளுகிற வரையறைகளில் அல்ல, நமக்குள்ளே, நமக்குள்ளேதான் இருக்கிறது; எப்படியெ

னில், தேவ வாக்கு நமக்குப் பலிக்கிறதற்குத் தேவையான இலட்சணம் நம்மிடத்தில் இல்லை. நாமாய் எதையும் கூட்டிக் குலைக்காமல் தேவனுடைய வாக்குத்தத்த வார்த்தைகள் உள்ளது உள்ளபடி வந்து பிரவேசிப்பதற்கு நாம் நம்முடைய முழு இருதயத்தையும் திறந்துவைக்கவேண்டும்; அவைகள் வந்து நம்முடைய குறைவுகளை நமக்குக் காட்டி நம்மை வெட்கித் தாழச்செய்யும்; பின்பு அவைகள் நம்மைத் தலைநிமிரச் செய்து உற்சாகமும் பலமும் அடைந்திருக்கப்பண்ணும். கேட்டது கிடைக்கும் என்கிற உறுதியுள்ளவனுக்கு ஜெபம் ஒரு வேலையாகவும் தோன்றாது பாரமாகவுமிருக்காது; அது அவனுக்கு மகிழ்ச்சியும் பூரிப்புமாயிருக்கும்; அது அவனுடைய சுபாவத்தோடு சுபாவமாகி அவனுடைய ஆவசியங்களில் ஒன்றாய் இருக்கும்.

மேலும் இவ்வாறு நாம் ஏதேனும் ஒன்றைப் பலமாய் விரும்பிக் கேட்பதும் கேட்டது கிடைக்கும் என்று ஸ்திரமாய் நம்பியிருப்பதும் நம்முள்ளத்தில் இணைபிரியாமல் நடைபெறுவது தேவாவி நமக்குள் வந்திருந்து பிழைக்கிற பிழைப்பேதவிர வேறல்ல. பரிசுத்தாவி நமக்குள் வாசம்பண்ணி, நம்முள்ளிந்திரியத்தின் அடித்தலங்களில் மறைந்திருந்து, பரம வாஞ்சை, திவ்விய நாட்டம், இவைகளை, அதாவது, தேவன்மேல் ஆசையை, மூட்டிவிடுகிறார், ஓரோர் வேளை வாக்குக்கடங்காத பெருமூச்சுகள், ஓரோர் வேளை மயக்கமில்லாமல் நெஞ்சம் தெளிவாயறிந்த நிச்சயம், ஓரோர் வேளை முன்னிலும் ஆழமாய் கிறிஸ்துவை நம்முள்ளத்தில் உணர்த்த மன்றாடுகிற தீர்க்கமான விண்ணப்பங்கள், ஓரோர் வேளை ஒரு ஆத்துமாவுக்காயினும் ஒரு கிரியைக்காயினும் திருச்சபைக்காயினும் உலகத்திற்காயினும் சந்தர்ப்பப்படி செய்கிற வேண்டுதல்கள்—இப்படிப் பலபல மாதிரியாய் நாம் தேவன்மேல் தாகங்கொள்ளவும், அவரை வெளிப்படையாய் அறிந்து வாழ்த்தவும் நம்மை எப்போதும் தூண்டுகிறவர் பரிசுத்தாவியொருவரே. எங்கே தேவனுடைய பிள்ளை வாஸ்தவமாய் ஆவியிலே பிழைத்து நடக்கிறானோ, எங்கே அவன் மாம்சத்தானாய் இருப்பதை வெறுத்து ஆவியானாகவும், எல்லா



வித்தானாலும் கிறிஸ்துவின் ஜீவியத்தையும் கிறிஸ்துவையும் தேவாவி உலகத்திற்குப் பிரசித்தப்படுத்தத் தகுந்த கருவியாகவும் இருக்கப் பிரயத்தனப்படுகிறானோ, அங்கே புகழுக்குரிய தேவகுமாரனுடைய ஓயா ஜெபஜீவியம் அவனுடைய அநுபவத்திற்கு விளங்காமலும் அவனுடைய ஜீவியத்தில் மடித்து மடித்து வெளிப்படாமலும் இராது. நமக்குள் இருந்துகொண்டு கிறிஸ்துவின் ஆவியே ஜெபிக்கிறபடியால், நமது ஜெபம் அவசியம் கேட்கப்படும்; ஆயினும், தேவாவியில் இருந்துகொண்டு ஜெபிக்கிறவர்கள் நாமாகையால், சகல தடையும் நீங்கி தேவாவிக்கும் நமதாவிக்கும் சம்பூரணப் பொருத்தம் உண்டாகிறவரையில் வேண்டியகாலம் காத்திருக்கவும் ஆத்திரப்படாத அமைதியும் ஜெபத்தில் விடாமுயற்சியாய்த் தரித்திருக்கையும் நமக்கு இருக்கவேண்டும்.

இடைவிடாத ஜெபஜீவியத்திற்கு முக்கியமாய் வேண்டியது இயேசுதாமே நமக்கு ஜெபம்பண்ணப் போதிக்கிறார் என்று நாம் அறிந்திருப்பதுதான். அவர் போதிக்கிறது இன்னது என்று நாம் ஒருவாறு கற்றறிந்திருக்கிறோம். அவர் நமக்குப் புதுப்புது நினைவுகளையும் கருத்துகளையும் தந்தது மெய்தான்; நமது பழுதுகளையும் தவறுகளையும் நமக்கு எடுத்துக் காட்டினது மெய்தான்; நமக்குள் ஜெப ஆசையையும் விசுவாசத்தையும் மூட்டி எழுப்பினது மெய்தான். இவையெல்லாம் முக்கியமேயானாலும், இயேசு நமக்கு இவற்றிலும் அதிக நிசமாய்ப் போதிக்கிறவிதம் என்னவென்றால், அவர் பிதாவின் சந்நிதானத்தில் தாம் செய்கிற ஜெபஜீவியத்தில் நம்மையும் தூக்கியெடுத்துக் கூட்டாளிகளாக்கிக் கொள்வதினாலேதான். ஜெபிக்கிற இயேசுவைப் பார்த்தே அவருடைய சீஷருக்குள் ஆசையை மூட்டி ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும் என்று அவரைக் கேட்கப்பண்ணிற்று. ஜெபம்பண்ணுகிற வல்லமை முழுமையையும் தம்மிடத்தேயுடைய சதா ஜெப ஜீவியாகிய இயேசுவின் விசுவாசமே உள்ளபடி ஜெபிக்க நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இதேன் என்று நமக்குத் தெரியும்: ஜெபிக்கிறவராகிய அவரே நமக்குச் சிரசு, அவரே நமக்கு ஜீவன்; அவருக்குள்ளதெல்லாம் நம்முடையது; நாம் நம்மை முழுவதும் அவருக்குக் கொடுக்கும்போது அவரது எல்லாம்

நமக்குக் கிடைக்கும். அவர் தம்முடைய இரத்தத்தினால் நம்மை தேவனுடைய சந்நிதியில் சமீபமாய்க் கொண்டுபோய் விடுகிறார். அந்த உள்ளுக்குள்ளான தேவாலயமே நமக்கு உறைவிடம், அங்கேதான் நாம் குடியிருக்கிறோம். தேவனுக்கு அவ்வளவு சமீபத்தில் வாசம்பண்ணுவதற்குத் தான் அருகில் வந்தது அவருக்குத் தூரத்திலிருக்கிறவர்களை வாழ்வடைவிக்கும் பொருட்டேயென்று அறிந்திருக்கிறவன் ஜெபிக்காமல் இருக்க முடியாது. கிறிஸ்து தமக்குள்ள ஜெபவல்லமையிலும் ஜெப ஜீவனிலும் நம்மை உடன்பங்காளிகளாக்கிக் கொள்ளுகிறார். அவருடன் நாம் அந்தப் பங்கனுபவிக்கும்போது, நம்வேலையைப் பெரிதாய் மதித்து அது சரிவர நடக்க வேண்டுமளவு ஜெபிப்பது அல்ல, ஜெபத்தை அபரிமிதமாய்ச் செய்து அதனால் கிடைக்கிற வல்லமையும் வாழ்வும் நம் மூலமாய்ப் பிறருக்கு அகப்படப் பண்ணப் போதுமான அளவு வேலைசெய்வதே நமக்கு இருக்கவேண்டிய சரியான இலக்கு என்று விளங்கும். என்றும் ஜெபிப்பதற்குப் பிழைத்திருக்கிறவர் கிறிஸ்து. இரட்சிக்கிறவரும் ஆளுகிறவரும் அவரே. அவர் தம்முடைய ஜெபஜீவியத்தை நமக்குத் தருகிறார்; அவரை நாம் நம்பினால் அதை அவரே நம்மில் அற்றுப்போகாமல் காப்பாற்றுவார். நாம் இடையறாமல் ஜெபிப்பதற்கு அவரே பொறுப்பாளி. அவர் தாம் ஜெபிக்கிறவிதம் இன்னது என்று நமக்குக் காண்பித்தும், நமக்குள் இருந்து தாம் ஜெபித்தும், அவருக்குள் இருந்து அவரைப்போல் ஜெபிக்க நம்மைப் பழக்கியும், இப்படிப் பலவிதமாய் நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கிறார். சதா ஜெப ஜீவியத்திற்கு வேண்டிய சமஸ்தமும் கிறிஸ்துவே, அதற்கு உயிரும் பலமுங்கூட அவர்தான்.

ஓயா ஜெபஞ்செய்கிற கிறிஸ்துவே நமக்கு ஜீவனாயிருக்கிறதைக் காணுகிற இந்தக் காட்சி நம்மை இடையறாமல் ஜெபிக்க வல்லவர்களாக்குகிறது. அவர் இறந்து எழுந்து அடைந்திருக்கிற ஜீவன் ஒருநாளும் வாடாது, ஒருநாளும் பொய்க்காது. அவருடைய ஆசாரியப் பிழைப்பு அந்த சதா ஜீவனின் வல்லமையைப் பிரசித்தமாய் வெளிப்படுத்துகிற பிழைப்பாதலாலும் அவர் பிழைப்பே நம்பிழைப்பாதலாலும்



இடைவிடாமல் ஜெபிப்பது நமக்கு தேவலோக ஜீவிய சந்தோஷத்திற்கு நிகரானதாகக் கூடும். ஆதலால்தான் அப்போஸ்தலன்: "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்" என்கிறார். சோர்வு வாராமல் ஓயாச் சந்தோஷம் ஒரு பக்கத்திலும் ஓயாத் துதி மறுபக்கத்திலும் நம்மைத் தாங்கிக்கொள்ளுகிறபடியால் ஓயாஜெபம் நமக்கு லேசாயிருக்கும். இயேசு சதா ஜெபம் செய்துகொண்டிருக்கிற அந்த நித்திய ஜீவனின் வல்லமை மறைவிலிருந்து வெளிப்பட்டு உலகத்திற்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரிவதே ஓயா ஜெபம். திராக்ஷைச் செடிக்கும் கொடிக்குமுள்ள சம்பந்தம் உள்ளது உள்ளபடிக்கு ஜெப சம்பந்தமேதவிர, வேறல்ல. நமக்கும் கிறிஸ்துவுக்கும் இருக்கக்கூடிய உச்சி ஒற்றுமை, அவருடைய பரலோக ஜீவிய மகிமையில் நமக்குக் கிடைக்கத்தக்க அதியுச்ச இன்பமான உடன்பங்கு என்னவென்றால், அவர் செய்கிற ஜெபஊழியத்தை நாமும் அவருடன் செய்வதுதான். அவரும் நாமும் ஜெபிப்பதற்கே என்றும் பிழைத்திருக்கிறோம். அவருடன் நமக்குக் கிடைத்திருக்கிற ஐக்கியத்தை நாமனுபவிக்கையில், இடைவிடாமல் ஜெபிப்பது நமக்குச் சாத்தியமும், உண்மையும் தேவனோடு நாம் செய்கிற பரிசுத்தமும் இன்பமுமான கூட்டுறவில் அதிபரிசுத்தமும் அதியின்பமுமான பங்குமாகிறது. திரைக்கு உட்புறத்திலிருக்கிற பிதாவின் சந்நிதானமே நமக்கு உறைவிடம். பிதா சொல்லுகிறதை நாம் செய்கிறோம்; குமாரன் சொல்லுகிறதை பிதா செய்கிறார். இடைவிடா ஜெபமானது புவியில் நம்மிடம் வந்திருக்கிற மோக்ஷம் பிரத்தியக்ஷமாய் வெளிப்படுகிற வெளிப்பாடும், இரவும் பகலும் ஓய்வில்லாமல் பணிந்து தொழுது பாடுகிறவர்களுடைய ஜீவியத்தை நாம் முன்னநுபவிக்கிற அநுபவமுமாயிருக்கிறது.

"ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்."

ஆ என் பிதாவே, இடைவிடா ஜெபம், இடைவிடா ஐக்கியமுடைமை, இடைவிடா ஜெபஜெயம், வேண்டுதல் செய்வதற்கு என்றும் பிழைத்திருக்கிறவருடன் எனக்குள்ள

ஒருமையை அநுபவிக்கிற இடைவிடா அநுபவம், இவையெல்லாம் நிறைந்த இந்த ஆச்சரியமான ஜீவியத்திற்காக நான் உம்மை முழுமனதாலும் துதிக்கிறேன். ஆ என் தேவனே! நான் உம்முடன் பிழைக்கிற பிழைப்பு ஜெபமாய் வெளிப்படுவதற்கு என்னை உமது மகிமைச் சந்நிதியிலேயே சஞ்சரித்து நடக்கப்பண்ணும்.

இன்ப இரட்சகரே! உம்முடைய சர்வவல்லமையுள்ள வேண்டுதலில் எனக்குப் பங்கு கிடைக்கும்பொருட்டுப் புவியில் எனக்கு இருக்கிற குறைபாடுகள் கூப்பாடுகளில் என்னுடன் பங்கநுபவிக்க நீர் பரலோகத்திலிருந்து வந்ததற்காக உம்மை என் முழு உள்ளத்தாலும் துதிக்கிறேன். முற்றும் ஜெபமாகவே இருக்கிற ஜீவியத்தின் இன்பத்தையும் வல்லமையையும் எனக்குப் போதிக்க நீர் என்னை உமது ஜெபப் பாடசாலையில் ஏற்றுக்கொண்டதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். என்னைச் சூழ இருக்கிறவர்களுக்கு என் மூலமாகவும் உம்முடைய நன்மைகள் கிடைக்க உம்முடைய ஜெபஜீவியத்தில் நீர் என்னைக் கூடத் தூக்கி வைத்துக்கொண்டதற்காக உமக்கு எல்லாவற்றிலும் விசேஷமாக நன்றி பாராட்டுகிறேன்.

பரிசுத்தாவியே! நீர் எனக்குள் செய்கிற கிரியைக்காக நானுமக்கு அத்தியந்த விநயத்துடன் நன்றி செலுத்துகிறேன். பிதாவுக்கும் குமாரனுக்கும் இருக்கிற நேசக் கூட்டுறவில் பங்கநுபவிக்கவும் பரிசுத்த திரித்துவத்தின் ஜீவனையும் அன்பையும் அநுபவித்து அறியவும் நான் உம்மாலேதான் உயர்த்தி வைக்கப்பட்டிருக்கிறேன். தேவாவியே, உம்முடைய கிரியையை என்னில் பூரணப்படுத்தும். எனக்காகப் பரிந்து பேசுகிறவராகிய கிறிஸ்துவோடு எனக்குப் பரிபூரணப் பொருத்தம் உண்டாக்கும். நீர் எனக்குள் இடைவிடாமல் குடியிருந்துகொண்டு என் ஜீவியம் இடைவிடா ஜெபஜீவியமாயிருக்கப்பண்ணும். இப்படி என் ஜீவியம் இடைவிடாமல் பிதாவுக்கு மகிமையுண்டாக்குகிற ஜீவியமும் என்னைச் சூழ இருக்கிறவர்களுக்கு இடைவிடாமல் நன்மை வருவிக்கிற ஜீவியமுமாய் இருக்கப்பண்ணுவீராக. ஆமென்.



# விளக்கிக்காட்டியல்.

## ஜார்ஜ் முல்லரும்

## அவருக்கு ஜெப வல்லபம் வந்த வரலாறும்.

திருச்சபைக்கு விளங்காமலேனும் விளங்கியும் அநுஷ்டிக்கப்படாமலேனும் இருக்கிற ஒருவிஷயத்தை தேவன் அதற்கு மறுபடியும் போதிக்க விரும்பினால், அந்த விஷயம் எப்பேர்ப்பட்ட க்ஷேமகரமானது என்று வாக்கினாலும் செய்கையினாலும் ரூபித்துக் காட்டுகிற ஒருவனை உதிக்கச்செய்து அதை உணர்த்துகிறார். இப்படி அவர் 19-ம் நூற்றாண்டில் தாம் மெய்யாகவே ஜெபத்தைக் கேட்கிறவர் என்பதை உலகத்திற்கு விளம்பரப்படுத்துகிற சாட்சிகளுள் ஒருவராகிய ஜார்ஜ் முல்லரை உதிக்கப்பண்ணினார். திருவசனம் ஜெபத்தைக் குறித்துச் சொல்லுகிற முக்கிய விஷயங்களைப் பயன்பட விளக்கி வற்புறுத்துவதற்கு அவருடைய ஜீவிய விருத்தாந்தத்தையும் அவர் தம் ஜெப அநுபவங்களைப்பற்றிச் சொல்வதையும் சுருக்கமாய் எடுத்துக் காண்பிப்பதைத்தவிர வேறுவழி எனக்குத் தெரியவில்லை.

அவர் புருஷியாவில் 1805-ஆ செப்டெம்பர் மீ 25உ பிறந்தவர். ஆகவே, அவருக்கு இப்பொழுது *பிராயம் 80. அவருடைய வாலிப ஜீவியம், ஹாலே சர்வகலாசாலையில் அவர் வேதசாஸ்திர மாணாக்கனான பிறகும்கூட, வெகு துன்மார்க்க ஜீவியமாயிருந்தது. அவர் சரியாய் இருபது பிராயமடைந்தபின், ஒருநாள் சாயந்தரம் ஒரு சிநேகன் அவரை ஜெபக்கூட்டத்திற்கு அழைத்துப்போனபோது, அவருக்கு ஆழ்ந்த ஞானஉணர்ச்சி உண்டாயிற்று. அதன்பிறகு, அவர் சீக்கிரத்தில் இரட்சகரை அறிந்துகொண்டார். அதற்குமேல், அவர் மிசியோன் விருத்தாந்தப் பத்திரிகைகளைப் படிக்கத் தலைப்பட்டு, காலக்கிரமத்தில் யூதருக்கு கிறிஸ்துமார்க்கப் பிரபல்லியம் செய்கிற வேலைக்காக லண்டன் சொசைட்டிக்குத் தம்மை ஒப்புவிக்கப் பிரியப்பட்டார். அந்தச் சொசைட்டி அவரை அதற்குப் பயிற்றுவிக்க மாணாக்கனாய் அங்கீகரித்துக்கொண்டது. ஆயினும், அந்தச் சொசைட்டியின் விதிகளுக்குச் சகல விஷயங்களிலும் அமைந்து நடப்பது தமக்

* அதாவது, மரே ஆசிரியர் இந்நூல் இயற்றின 1885-ம் வருஷத்தில்.

குப் பொருந்தாது என்று சீக்கிரத்தில் கண்டார். ஏனெனில், அப்படிச் செய்வதினால், பரிசுத்தாவி காட்டின வழியில் போகப் போதுமான சுயாதீனம் இருந்ததில்லை. ஆதலால், இருதிறத்தாரின் சம்மதத்துடன் அந்தச் சம்பந்தம் 1830-ல் நீங்கிவிடவே, அவர் தேன்மது நகரில் ஒரு சிறு சபைக்கு மேய்ப்பரானார். 1832-ல் பிரிஸ்டல் நகரிக்குப் போனார். அங்கே பெதெஸ்தா ஆலயச் சபைக்கு மேய்ப்பனாய் இருந்தகாலத்தில் அவர் அநாத பிள்ளைகள் ஆதரிப்புச்சாலை ஏற்படுத்தினதுமல்லாமல், வேறு சத்கிரியைகளிலும் தலையிட்டுக்கொண்டார். அவர் அப்படிக் கையிட்டுச் செய்த அந்த நல்ல வேலைகளின் சம்பந்தத்திலே யிருக்கும்போது, ஆச்சரியமானபிரகாரம் தேவன் அவரைத் தம் திருவாக்கில் நம்பிக்கை வைக்கப்பண்ணி, தம் வாக்கை நிறைவேற்றுவதில் தாம் எவ்வளவு உண்மையுள்ளவர் என்று அநுபவ பூர்வமாய் அறியப்பண்ணினார்.

அவர் தம் ஞானஜீவனைக் குறித்து எழுதினவைகளுள் சிலவற்றை இங்கே எடுத்துச்சொன்னால் ஜெப அநுபவங்களைக்குறித்து நான் விசேஷித்துக் காட்ட விரும்புகிற விஷயங்கள் எளிதில் விளங்கும்.

“இது சம்பந்தமாய் நான் சொல்ல விரும்புகிற தென்னவென்றால், எனக்குள் தேவ ஜீவன் உற்பத்தியான முதல்நாள் துவக்கியே ஆண்டவர் எனக்கு ஞானகாரியங்களில் கபடில்லாமையும் பிள்ளைக்கொத்த சிந்தையும் சிறிது அருளியிருந்தார். அது என்னை, வேத அறிவுச் சிறுமையும் வேளாவேளைகளில் வெளியரங்க பாவங்களால் மேற்கொள்ளப்படுகையும் எனக்கு இருந்த காலத்திலுங்கூட, எல்லாவற்றிலும் அற்பவிஷயங்களையும் ஜெபத்தில் ஆண்டவரிடத்தில் தெரிவிக்க வல்லவனாக்கிற்று. “தேவ பக்தியானது, இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது” என்று நான் அறிந்துகொண்டேன். நான் மிகப் பலவீனனும் அறிவீனனுமாயிருந்தும் பிறருக்குப் நன்மை செய்யவேண்டுமென்கிற ஆவல் தேவகிருபையால் எனக்குள் இப்போது கொஞ்சம் பற்றியெரியத் தலைப்பட்டது. அதினால், ஒரு காலத்தில் சாத்தானுக்கு உத்தம தொண்டனாய் இருந்த நான் இப்பொழுது கிறிஸ்துவுக்கு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வருந்தி முயன்றேன்.”

அவர் தேன்மதுப் பட்டணத்தில் இருந்தகாலத்தில் தேவனுடைய வசனத்தை எப்படிப் படிக்கவேண்டும் என்றறிந்ததுமல்லாமல், அந்த வசனத்தைத் தெளிவாய் விளக்க தேவன் அருளின உபாத்தியாயர் தேவாவியானவரே என்றும் அறிந்து அவரை நம்பத் துவக்கினார். அவர் எழுதுகிறது வருமாறு:—



“ஞானகாரியங்களில் உண்மையளக்கிற அளவுகோல் திருவசனம் ஒன்றே; அதை வியாக்கியானம் செய்ய வல்லவர் பரிசுத்த ஆவியானவர் ஒருவரே; பண்டைக்காலத்தில் எவ்வாறோ அவ்வாறே இற்றைநாளிலும், தமது ஜனத்தைப் போதிக்கிற போதகர் அவரே என்னும் இவ்விஷயங்களை தேவன் இனி எனக்கு உணர்த்தத் துவக்கினார். தேவாவி செய்கிற வேலை இதற்குமுன் எனக்குச் சுயபரீக்ஷையினால் தெரியாதிருந்தது.

“நான் கடைசியில் சொன்ன விஷயத்தைத் திட்டவட்டமாய் அறிந்தது என்னுள் பெரும்பலன் செய்தது; ஏனெனில், வேத வியாக்கியானங்களையும் மற்றச் சமஸ்த நூல்களையும் ஒதுக்கிவைத்து, வேதம் ஒன்றையே படித்துச் சிந்திக்கிறதினால், அதை அநுபவ பரீக்ஷையாய் அறிந்துகொள்ள ஆண்டவர் எனக்கு ஒத்தாசை செய்தார்.

“இதினால் விளைந்த தென்னவென்றால், நான் என் அறைக்குள் புகுந்து, கதவை அடைத்துக்கொண்டு ஜெபிக்கவும் திருவசனத் தியானம் செய்யவும் துவக்கின முதனாள் சாயந்தரத்திலேயே முன் அநேக மாதங்களாய் வருந்திக் கற்றதைவிட அதிகமாய்ச் சில மணிநேரங்களுக்குள் கற்றுக்கொண்டேன்.

“அப்போதுக்கும் இப்போதுக்கும் இருந்த விசேஷ வித்தியாசம் என்னவென்றால், அப்படிச் செய்ததினால் என் ஆத்துமாவில் ஒரு நூதன பெலன் வந்திருந்தது. நான் முன் கற்றிருந்தவைகளை வேதத்தைக்கொண்டு பரீட்சித்து அளக்கத் துவக்கினேன். அந்தப் பரீட்சைக்கு இளைக்காமல் நின்றவைகள் மாத்திரமே உண்மையாய் எனக்கு உதவுவன என்று ஐயமற அறிந்துகொண்டேன்.”

திருவசனத்திற்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொண்டபின், அவர் தம் ஞானஸ்நானத்தைப் பற்றிப் பேசும்போது பின்வருமாறு எழுதுகிறார்.

“தேவன் அளவற்ற இரக்கத்தினால் என் மனதை வசியப்படுத்தி, திருவசனத்தில் எழுதியிருக்கிறது எதுவோ அதற்கு எதிர் ஒன்றும் சொல்லாமல் உள்ளபடிக்குக் கீழ்ப்படிந்து பிழைக்கிற நிலைமையில் என்னைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டார். “அவருக்குச் சித்தமானதையே செய்வேன்” என்று சொல்லக்கூடிய மனது எனக்கு இருந்தது. நான் நினைக்கிறபடி, இதையிட்டே எந்த “உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறது” என்று பகுத்தறிகிற அறிவு எனக்குக் கிடைத்தது. நான் இப்பொழுது எடுத்துக் காண்பித்த வேத வசனம் யோவா. 7. 17. இந்த வசனம் நமது மகா பரிசுத்த விசுவாசத்துக்குரிய அநேக உபதேசங்களையும் சன்மார்க்க விதிகளையும் விளக்கிக் காட்டுகிற வியாக்கியானமாய் எனக்கு உதவிற்று என்று பலரும் அறிய விளம்பரப்படுத்த விரும்புகிறேன். திருஷ்டாந்தமாக: “தீமையோடு எதிர்த்து

நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு; உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு நாழிகை வழி வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு நாழிகை வழி போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" (மத். 5. 39–44.). "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள்" (லூக். 12. 33.). "ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (ரோம். 13. 8.). "இந்த வேதவாக்கியங்களை எழுத்துப்பிரகாரம் அர்த்தம் பண்ணிக்கொள்ளலாகாது, அப்படிச் செய்தால் தேவனுடைய ஜனங்கள் உலகவாழ்க்கை செய்யக்கூடுவது எப்படி?" என்று சிலர் கேட்பார்கள். யோ. 7. 17-ல் தெரிவிக்கப்பட்டிருக்கிற மனநிலை ஒருவனுக்குக் கிடைத்தால் இப்பேர்ப்பட்ட ஆக்ஷேபங்கள் பறந்துவிடும். ஆண்டவர் சொன்ன இந்தக் கட்டளைகளை எழுத்துப்பிரகாரம் செய்ய எவனுக்கு மனது இருக்கிறதோ அவன் அவைகளை நான் எழுத்துப்பிரகாரம் கைக்கொள்வதே தேவனுடைய சித்தம் என்று என்னைப்போல் கண்டுகொள்வான் என நம்புகிறேன். அவ்வாறு செய்கிறவர்கள் அடிக்கடி மாம்சத்திற்குத் தாங்கரிய கஷ்டங்களுக்குள் பலகால் வந்து வருந்துவார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆயினும், இவ்வுலகு அவர்களுக்கு வீடு அல்ல, அவர்கள் இவ்வுலகில் அந்நியர்களும் பரதேசிகளுமாய் இருக்கிறார்கள் என்கிற நினைவை அவர்களுக்குள் ஓயாமல் மூட்டிவிடுவதற்கு அந்தக் கஷ்டங்கள் அனுகூலமாயிருக்கும். ஆதலால், அவர்கள் அந்தச் சங்கடங்களை தேவன்மேல் தூக்கிப்போட்டுவிடுவார்கள். நாம் அவருடைய திருவசனத்திற்குக் கீழ்ப்படிந்து செய்கிறதினால் நேருகிற எந்தச் சங்கடத்தையும் அவர் நிச்சயமாகவே நிவிர்த்திசெய்வார்."

இப்படி தேவசொல்லுக்கு எதிரே எப்பேச்சும் பேசாமல் அடங்கி நடக்கத் தலைப்பட்டதில் பணவிஷயமாய் அவர் மனதில் சில அபிப்பிராயங்கள் பிறந்து அவைகளுக்கு இசைய நடக்கும்படி அவர் தூண்டப்பட்டார். அந்த அபிப்பிராயங்கள் அவருடைய பிற்கால ஜீவியத்தை வல்லமையாய் ஆட்கொண்டிருந்தன. பணம் தேவன் ஒருவனுக்குக் கொடுக்கிற உக்கிராண ஊழியமாதலால், எவ்வகையாய்க்



கிடைக்கிற பணத்தையும் அவன் தேவனுடைய ஐக்கியத்திலிருந்துகொண்டே வாங்கிச் செலவிடவேண்டும் என்னும் நிலைவரம் அவருள்ளத்தில் குடிகொண்டிருந்தது. இந்த நிலைவரமே அவர் கொண்டிருந்த அந்த அபிப்பிராயங்களுக்கு மூலம். இதினால் அவர் பின்வரும் நான்கு பெரிய விதிகளைத் தம் நடக்கைக்குப் பிரமாணமாக்கிக்கொண்டார். 1. "நியமமான எவ்விதச் சம்பளமும் வாங்கமாட்டேன்." இதற்கு அவருக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. அப்படி ஒரு சம்பளத்தை வாங்குவதில் தேவனுடைய ஊழியம் நடைபெறுதற்கு அவசியமான மன உற்சாகம் பெரும்பாலும் தடைபடுகிறது. அதுவுந்தவிர, அதை வாங்குவதில் ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைப்பதைவிட மனுஷர் மூலியமாய் வருகிற வருமானத்தின்மேல் அதிக நம்பிக்கைவைக்கிற மோசம் நேரிட ஏதுவிருக்கிறது. 2. "ஒரு மானிடப் பிராணியையும் உதவி தா என்று கேளேன்." நேர்ந்திருக்கிற கஷ்டம் எப்பேர்ப்பட்ட பெருங் கஷ்டமாயிருந்தாலும் அதைத் தம் ஊழியருக்காகத் தாமே கவலைப்பட்டு அவர்களுடைய ஜெபத்தைக் கேட்க வாக்கருளியிருக்கிற தேவனுக்கேதவிர வேறொருக்கும் தெரியப்படுத்துவதில்லை. 3. "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்" என்னும் கட்டளையை எழுத்துப்பிரகாரம் கைக்கொள்வேன். பணத்தை மீதிபிடித்து வைப்பதில்லை. எனக்கு தேவன் நம்பிக்கொடுத்த பணத்தையெல்லாம் தேவனுடைய பிச்சைக்காரருக்கும் அவருடைய இராஜ்யத்தின் வேலைக்குமே செலவிடுவேன். 4. "ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என்னும் ரோ. 8, 13-ம் வசனத்தையும் எழுத்துப்பிரகாரம் கைக்கொள்வேன். நாணயத்தின்மேல் எதையும் வாங்குவதில்லை. எதற்காகவும் கடனுக்குட்படமாட்டேன். வேண்டியதுக்கு தேவனையே நம்பியிருப்பேன்.

இப்படி பிழைப்பது முதலில் எளிதாய் இருந்ததில்லை. ஆத்துமாவை தேவனில் அமர்ந்திருக்கப் பண்ணுவதும் அது அவரை விட்டுத் தவறும்போது முன்னிலும் அதிக நெருக்கமாய் அவரையொட்டிக்கொள்ளப் பண்ணுவதும் அவர் வெகு இன்பமாயிற்று என்று முல்லர் சாட்சி பகருகிறார். "பாவத்தில் பிழைத்துக்கொண்டிருக்கும்போதே தேவனோடே ஐக்கியமாயிருந்து, இப்போதிருக்கிற ஜீவியத்திற்குத் தேவையானதையெல்லாம் தேவலோகத்திலிருந்து வருவித்துக்கொள்ள முடியவே முடியாது."

பிரிஸ்டல் நகரில் அவர் நிலையாய் வாசம்பண்ணத் துவக்கினதற்குச் சிறிது காலத்திற்குள் உள்நாடு புறநாடுகளுக்காக "வேத அறிவுச் சங்கம்" என்று ஒன்று ஏற்பட்டது. பகற் பள்ளிக்கூடம், ஞாயிறு வாரப்பள்ளிக்கூடம், மிஷன் வேலை, வேதாகம வேலை,

இவற்றிற்கு உதவியாக இது தோன்றினது. இந்தச் சங்கத்தின் கிளையாக "அநாதர் சாலை" கிளம்பினது. இதன் சம்பந்தமாகவே முல்லர் பிரக்கியாதி பெற்றிருக்கிறார். 1834-ல் மேற்படி சங்கத்துப் பாடசாலைகள் ஒன்றில் படித்த ஒரு அனாத பையன் இரட்சகரை அறிந்துகொண்டான். அவனை ஏழைகள் ஆதரிப்புச்சாலைக்கு அனுப்ப நேர்ந்தது. அதிலே அவனுடைய ஞானஜீவனுக்காக ஒருவரும் கவலைப்படமாட்டார்கள் என்பதை நினைத்து முல்லருடைய உள்ளம் உருகிற்று. இதற்குச் சில நாட்களுக்குப்பின் பிராங்கே என்பவரின் ஜீவிய சரித்திரம் அவருக்குக் கிடைத்தது. அதைப் படித்து அவர் எழுதுகிறதாவது (நவெம். 20, 1835): "அநாதர் சாலை ஏற்படுத்தவேண்டும் என்பதை நினைப்பளவில் விட்டுவிடலாகாது. அதைத் தொடங்கிவிடவேண்டும் என்பது என் மனதில் ஆணித்தரமாய் விழுந்ததினால், அதைக்குறித்து ஆண்டவர் என்ன நினைக்கிறார் என்பதை அறிய வெகுநேரம் ஜெபித்தேன். தேவன் அதை எனக்குத் தெளிவாய் வெளிப்படுத்துவாராக." மறுபடியும் நவெம்பர் 25-ல் பின்வருமாறு எழுதுகிறார்: "அநாதர் சாலையைக் குறித்து நேற்றும் இன்றும் நெடுநேரம் ஜெபித்தேன். அதனால் இந்த தூண்டுதல் தேவனால் உண்டானதே என்று மேலும் மேலும் நிச்சயம் பெற்றேன். அவரே இரக்கமாய் எனக்கு வழிகாட்டுவாராக. இந்த வேலைக்கு என்னை உடன்படுத்தின காரணங்கள் முக்கியமாய் மூன்று:—1. இந்த வேலைக்கு வேண்டிய சாதனங்களை தேவன் எனக்குத் தந்தால், அவரை நம்புவது வீண்போகாது என்பது உலகத்திற்கு வெளிப்பட்டுத் தெரியுமாகையால், தேவனுக்கு மகிமையுண்டாகும்; மேலும், அவருடைய பிள்ளைகளின் விசுவாசம் பலப்படும். 2. பிதா மாதாக்களை இழந்து அநாதர்களான பிள்ளைகளுக்கு ஞானவாழ்வு உண்டாகும். 3. அவர்களுக்குப் புவிக்குரிய வாழ்வும் கிடைக்கும்.

சில மாதகாலம் ஜெபம்பண்ணி தேவ உத்தரவிற்குக் காத்திருந்தபின் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தப்பட்டது. அதில் முப்பது பிள்ளைகளுக்கு வசதியான இடமிருந்தது. காலக்கிரமத்தில் இன்னும் மூன்று வீடுகள் குடிக்கூலிக்குக் கிடைத்தன. இந்த எல்லா வீடுகளிலும் இருந்த பிள்ளைகளின் மொத்தத் தொகை 120. இந்தப் பிரகாரம் இவ்வேலை பத்து வருஷம் நடந்துவந்தது. பிள்ளைகளுக்கு வேண்டிய யாவும் தேவனிடத்தில்மாத்திரம் கேட்டு வாங்கப்பட்டது. அது பலமுறை மனவேதனைக்கிடமான குறைவுகளும் அதிக ஜெபமும் கூடின காலமாயிருந்தது. ஆயினும், பொன்னிலும் அருமையான விசுவாசம் புடமிடப்பட்டபோதெல்லாம், அது தேவனுக்குத் துதியும் கனமும் மகிமையும் வருவதற்கே ஏதுவாயிருந்தது. ஆண்டவர் தமது அடியானை இன்னும் பெரிய காரியங்களுக்குப் பக்குவப்



படுத்திக்கொண்டிருந்தார். முந்நூறு பிள்ளைகளை வைத்து ஆதரிக்க வசதியுள்ள ஒரு வீடு கட்டும்பொருட்டு, 15,000 பவுன் தருவேன் என்று தேவன் நிச்சயமான வாக்குக் கொடுக்குமட்டும் அவரிடத்தில் ஆவலுடன் காத்திருக்கும்படி முல்லர் பராமரிக்கிற தேவ அன்பினாலும் தேவ ஆவியாலும் தூண்டப்பட்டார். இந்த முதலாம் வீடு 1849-ல் திறக்கப்பட்டது. 1858-ல் இரண்டாம் மூன்றாம் வீடுகள் இன்னம் 950 அநாத பிள்ளைகளை ஆதரிக்கத் திறக்கப்பட்டன. இவைகளுக்குப் பிடித்த செலவு 35,000 பவுன். 1869, 1870-லும் நாலாம் ஐந்தாம் வீடுகள் இன்னம் 850 அநாத பிள்ளைகளுக்காகத் திறக்கப்பட்டன. இந்த வீடுகளுக்குச் சென்ற செலவு 50,000 பவுன். ஆக, மேற்படி வீடுகளில் ஆதரிக்கப்பட்ட அநாத பிள்ளைகளின் மொத்தத் தொகை 2,100.

இதுவுந்தவிர, அநாத சாலைகளைக் கட்டவும் அநாத பிள்ளைகளை ஆதரிக்கவும் தேவன் அவருக்கு எவ்வளவு கொடுத்தாரோ அவ்வளவு பள்ளிக்கூடங்களையும் மிஷியோனரிகளையும் ஆதரித்தல், வேதப்பிரதிகள் சன்மார்க்கச் சிறுநூல்கள் இவற்றை எளியோருக்கு சுலபமாய்க் கிடைப்பித்தல் முதலிய வேறு வேலைகளுக்காகவும் கொடுத்தார். கடந்த 60 வருஷங்களுக்குள் தேவன் தமது வேலைக்காக அவர் கையில் கொடுத்த மொத்த திரவியம் பத்து லக்ஷம் பவுனுக்கு அதிகம். திருவசனமும் தேவாவியும் காட்டின வழியில் போக வருஷம் 30 பவுன் சம்பளத்தை விட்டுவிடச் சம்மதித்துக் கீழ்ப்படிந்தகாலத்தில், அவருடைய கீழ்ப்படிதலுக்கும் விசுவாசத்திற்கும் பதிலீடாக தேவன் அவருக்குக் கொடுக்கக் காத்திருந்தது என்ன என்பது அவருக்குக் கொஞ்சமேனும் தெரியாதிருந்தது. இதை நாம் கவனிக்கவேண்டும்: "கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்" என்கிற வாக்கு அவர் விஷயத்தில் எத்தனை ஆச்சரியமாய்ப் பலித்தது!

இவைகளெல்லாம் நமக்குத் திருஷ்டாந்தங்களாகச் சம்பவித்தது. ஜார்ஜ் முல்லர் கிறிஸ்துவைப் பின்பற்றினார்; அதுபோல நாம் ஜார்ஜ் முல்லரைப் பின்பற்றுவதற்குத் தேவன் நம்மை அழைக்கிறார். அவருடைய தேவன் நம் தேவன்; அவருக்குப் பலித்த வாக்குகள் நமக்கும் பலிக்கும்; அவர் செய்த ஊழியம் அன்பும் விசுவாசமும் பொருந்தின ஊழியம், அந்த ஊழியத்தையே நாம் வந்து செய்ய வேண்டும் என்கிற கட்டாயம் எப்பக்கமும் புறப்படுகிறது. ஜெயப் பாடசாலையில் நாம் கற்றுக்கொண்ட பாடங்களையொட்டி ஜார்ஜ் முல்லருக்கு அவர் ஜெப ஜீவியாயிருந்ததினிமித்தம் தேவன் பெரிய வல்லமையளித்த விதத்தையும் படிப்போமாக. திருவசனத்திலே துதிக்குரிய ஆண்டவரிடத்தில் நாம் கற்றுக்கொண்ட பாடங்களுள்

சிலவற்றிற்கு அதிமனோகரமான விளக்கம் நமக்கு அதில் அகப்படும். அவர் படித்த பெரிய முதற்பாடம் நம் மனதில் விசேஷ வல்லமையுடன் பதியும்; அதாவது, இன்னின்னது தேவசித்தத்திற்குப் பொருந்தினதுதான் என்று திருவசனத்தின் மூலமாய் தேவாவி வெளிப்படுத்தத் தெரிந்துகொண்டு, இதிது வேண்டும் என்று வகையறுத்த விண்ணப்பங்களுடன் தேவன் காட்டின வழியில் நாம் அவரிடத்தில் வந்தால், நாம் கேட்டுக்கொள்வது எதுவோ அது நமக்குச் செய்யப்படும் என்று நாம் அதிநிச்சயமாய் நம்பியிருக்கலாம்.

## ஜெபமும் திருவசனமும்.

நாம் தேவ வாய்ச்சத்தத்திற்குச் செவிகொடுக்கிறதற்கு ஏற்றவாறே தேவன் நம் வாய்ச்சத்தத்திற்குச் செவிகொடுப்பதும் இருக்கும் என்று பலமுறை பார்த்தோம் (22, 23-ம் பாடங்கள் பார்க்க.) நாம் இன்னதைத் தாரும் என்று வகையறுத்துக் கேட்கையில், அதைக்குறித்து தேவன் கொடுத்திருக்கிற ஒரு வகையறுத்த வாக்கை அவருக்கு எடுத்துக் காட்டுவதுமாத்திரம் போதாது; நம் முழுஜீவியமும் திருவசனத்தின் ஆளுகைக் குட்பட்டிருக்கவேண்டும்; திருவசனம் நம்முள்ளத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி ஜார்ஜ் முல்லர் சொல்லுகிற சாட்சி நமக்கு நல்லறிவுறுத்தத்தக்கது. தேவனுடைய வசனத்திற்குக் கொடுக்கவேண்டிய சரியான மதிப்பையும் அதை தேவாவி உள்ளத்திற்குப் போதிக்கிறார் என்பதையும் அறிந்துகொண்டது முதற்கொண்டே தமது ஞானஜீவனில் ஒரு புதுக்காலம் ஆரம்பித்தது என்று அவர் வகுத்துச் சொல்லுகிறார். அதைப்பற்றி அவர் எழுதுவது வருமாறு:—

“தேவன் தாமே நமக்கொரு நூலியற்றித் தந்தது பெரிய தயவு. அவருடைய பரிசுத்த ஆவி தம் ஊழியராக் கருவியாய்க்கொண்டு எழுதித் தந்திருக்கிற அந்த அருமையான நூலை நான் அறியாமூடனாயிருக்கிறேன். நான் அறியவேண்டியது அதில் இருக்கிறது. அதை அறிவதினாலேயே நான் மெய்ப்பாக்கியமடையக் கூடும். புத்தகங்களுள் புத்தகமாகிய அந்த அருமையான நூலை மிகுந்த ஜெபத்துடனும் மிகுந்த தியானத்துடனும் திரும்பத் திரும்ப படிப்பது என் கடமை. இந்தப் பழக்கத்தை நான் என் ஆயுளுள்ளமட்டும் விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியவன். ஏனெனில், நான் அதில் படித்த கொஞ்சத்தைக்கொண்டு எனக்கு அதில் ஒன்றுமே தெரியாது என்று அறிந்திருந்தேன். ஆனால், இப்படிச் செய்வதைவிட்டு, திருவசனம் தெரியாதவனாயிருக்கிறேனே என்கிற ஆகுலத்துடன் அதை அதிகமதிகமாய்ப் படிப்பதற்கு பதிலாய், அது



எனக்கு விளங்குவது அரிதாயிருந்ததினிமித்தமும் அதைப் படிக்கிறதில் என் மனதிற்கு இன்பமுண்டாகாமையினாலும் அதை வாசிப்பதைக் குறித்து அசட்டையாயிருந்துவிட்டேன். (ஜெபத்துடன் திருவசனத்தை எவ்வளவுக்குப் படிக்கிறோமோ அவ்வளவுக்கு அது தெளிவுபடத் தெரிகிறதுமல்லாமல், அதைப் படிக்கப் படிக்க அதிகமதிகமாய் மனதிற்கு இன்பமும் பிறக்கும் என்பதைப் பின்னிட்டு அறிந்துகொண்டேன்.) இவ்வாறு, விசுவாசிகள் பலர் செய்கிற வழக்கப்பிரகாரம், நான் தேவனுடைய திருவசனத்தைப் படிக்கிறதற்குப் பதிலாய் தெய்வவிளக்கம் பெறாத மானிடர் எழுதின நூல்களைப் படித்தேன். எனக்கு ஞானஜீவன் உண்டானதற்குப் பின்னும் நாலு வருஷக்காலம் இப்படிச் செய்தேன். இதின் பயன் என்னவெனில், அறிவிலும் கிருபையிலும் நான் இந்தக் காலமெல்லாம் அறியாப் பாலகனைப்போல் இருந்துவிட்டேன். அறிவிலும் அப்படியிருந்தேன் என்று ஏன் சொல்லுகிறேனென்றால்: திருவசனத்திலிருந்து வருகிற சகல மெய் அறிவும் தெய்வாவி மூலியத்திலேயல்லாமல் வேறுவிதமாய் வரவே வாராதாகையால் திருவசனத்தை நான் அசட்டை செய்தபடியால், நாலு வருஷகாலமாய் நாம் விசுவாசிக்கிற பரிசுத்த சத்தியங்களின் அஸ்திபாரம்போன்ற விஷயங்களையும் தெளிவாய் அறிந்துகொள்ள மாட்டாத சின்மூடனாய் இருந்தேன். இப்படி எனக்குத் திருவசன அறிவுச்சூன்யம் இருந்ததினால், தேவனுடைய வழிகளில் உறுதியாய் நடக்கக் கால்வைக்க முடியாமலிருந்தேனென்று மிகவும் விசனப்படுகிறேன். ஏனெனில், 1829 ஆகஸ்டில் தேவன் என்னை உண்மையாய்த் திருவசனத்தில் மனங்கொள்ளும்படி செய்தபோது, என் ஜீவியமும் நடக்கையும் வெகு வித்தியாசமாயின. அதற்குப் பின் இந்நாளளவும், நான் அடைந்திருக்கவேண்டியதும் கூடியதுமான அவ்வளவு விருத்தியை இன்னம் அடைந்துகொள்ளவில்லை என்பது மெய்தானாலும், தேவ கிருபையினால் முன்னிலும் அதிக நெருக்கமாய் நான் அவர் சமீபத்தில் பிழைக்க சக்தியடைந்திருக்கிறேன். திருவசனத்தைப் பார்க்கிலும் வேறு ஞானநூல்களை அதிகமாய் மதித்து, தேவன் எழுதின புத்தகத்தைவிட மானிடர் எழுதின புத்தகங்களை அதிகப்பிரியமாய்ப் படிக்கிற விசுவாசிகள் யாரேனும் இதை வாசிக்க நேர்ந்தால், அவர்கள் நான் அப்படிச் செய்து அடைந்த நஷ்டத்தினால் எச்சரிப்படைவார்களாக. தேவன் தம் ஜனத்தில் சிலரையாகிலும் அவர்கள் மானிடர் நூல்களில் வைத்திருக்கிற பிரியத்தை எடுத்துத் திருவேத புஸ்தகத்தில் வைக்கும்படி தூண்ட இந்த நூலைக் கருவியாய்க் கொள்வாராயின், இந்நூல் பெரும்பயன் விளைவித்ததாகக் கருதுவேன்.

"இவ்விஷயத்தை விட்டுப் போகுமுன் இன்னுமொன்று நான் அதைப்பற்றிச் சொல்ல மனதாயிருக்கிறேன்: வேதத்தில் ஒருவனுக்கு விளங்குவது வெகு கொஞ்சமேயானாலும், அவன் அதை மிக அதிகமாய் வாசிக்கவேண்டும்; ஏனெனில், தேவாவி திருவசனத்தைத் திருவசனத்தினாலேயே விளக்குகிறார். ஒருவன் திருவசனத்தைப் படிக்கிறதில் இனிமை காணாதிருந்தால், அவன் இன்ன மதிகமாய் அதைப் படிக்கவேண்டும் என்பதற்கு அதுவே காரணம் என்பேன். ஏனெனில், வேதத்தை அடுத்தடுத்துப் பலமுறை வாசிப்பதினாலேயே நமக்கு அதின்மேல் பிரியம் பிறக்கும். அதற்குமேல், அது வாசிக்க வாசிக்க இனிமையாகி, இன்ன மதிகமாய் வாசிக்க நமக்கு ஆவல் மூட்டும்.

"எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன்மாத்திரமே தமது ஆவியைக்கொண்டு அதை நமக்கு விளங்கப்பண்ண வல்லவர் என்பதையும், நமக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் தம்மிடத்திலேயே கேட்கவேண்டும் என்று அவர் விரும்புகிறபடியால் நாம் வேதத்தை வாசிக்கு முன்னும் வாசிக்கும்போதும் தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தேடிக்கொள்ளவேண்டும் என்பதையும் ஒருவன் அசையாமல் கெட்டியாய்த் தன் மனதில் பதித்துக்கொள்ளவேண்டும்.

"மேலும், ஒருவன் தன் மனதில் இதுபோலவே உறுதியாய்ப் பதித்துக்கொள்ளவேண்டிய தென்னவென்றால்: தேவாவி எல்லாரிலும் சிறந்த உபாத்தியாயர், போதுமான உபாத்தியாயர்தான். ஆயினும் அந்த உபாத்தியாயர் எப்போதும் நாம் இஷ்டப்படுகிற நேரத்தில் உடனே பாடம் சொல்லுகிறவரல்ல. ஆதலால், வேதத்தில் நமக்கு விளங்காத பாகங்களை விளக்கும்படி நாம் அவரைத் திரும்பத் திரும்ப வருந்திக் கேட்கவேண்டியதாகும்; என்றாலும், நாம் ஜெபத்துடனும் பொறுமையாயும் தேவனுக்கு மகிமை வரும்பொருட்டுப் அவரை வெளிச்சம் கேட்டால், அவர் எப்படியும் கடைசியில் வெளிச்சம் நிச்சயமாய் நமக்குக் கொடுப்பார்."

முல்லர் தம்முடைய ஞானஜீவனைப் போஷிக்கிற வசனத்திற்காக அடிக்கடி இரண்டு மூன்றுமணி நேரங்களைச் செலவிட்டதாக அவருடைய நினைக்குறிப்புப் புஸ்தகத்திலே பார்க்கலாம். இதனால் விளைந்த பலன் என்னவெனில், ஜெபத்தில் அவருக்குப் பலமும் தைரியமும் தேவையாயிருந்தபோதெல்லாம் தேவன் அருளியிருக்கிற தனித்தனி வாக்குத்தத்தங்கள் ஒரு புஸ்தகத்திலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட நியாயங்களைப்போல் அல்ல, ஜீவனுள்ள பிதா அவருக்கு நேர் நேரே சொன்ன ஜீவனுள்ள வாய்ச்சொல்போலிருந்தது. ஆகவே, அவரதை ஜீவனுள்ள விசுவாசத்துடன் தேவனிடத்தில் கொண்டுவரக் கூடியவராயிருந்தார்.



## ஜெபமும் தேவனுடைய சித்தமும்.

விசுவாசத்தில் இளந்தைகளா யிருப்பவர்களுக்கு உண்டாகிற
பெருஞ் சங்கடங்களுள் ஒன்று தாங்கள் விரும்புவது தேவனுடைய
சித்தத்திற்குப் பொருந்தினது என்று எப்படித் தெரியும் என்பது.
சில விஷயங்களை நாம் கேட்கலாமா கேட்கலாகாதா என்று தெரி
யாமல், திருவசனம் அவற்றைக் குறித்து நமக்கு நேரே ஒன்றும் சொல்
லாமலிருக்கும்போது, அவற்றை நமக்குக் கொடுப்பது தமக்குப் பிரி
யந்தான், நாம் அவைகளைக் கேட்கலாம், என்பதைக் குறித்துச் சமயம்
போல் நமக்கு வெளிப்படுத்த தேவனுக்கு மனது உண்டு. ஜார்ஜ்
முல்லருடைய அநுபவத்தைக்கொண்டு தேவன் போதிக்க விரும்புகிற
அருமையுள் அருமையான பாடங்களில் இது ஒன்று என எனக்குத்
தோன்றுகிறது. திருவசனத்தைத் தவிர்த்தாவது எதிர்த்தாவது அல்ல,
அதற்கு மேற்பட்டும் அதை யொட்டியும் தேவாவி நமக்குப் போதிக்
கிறதுண்டு. அதில்லாமல் நாம் தேவசித்தத்தைத் தவறாமல் அறிய
முடியாது. இவ்வாறு போதிக்கப்படுவது ஒவ்வொரு விசுவாசிக்கும்
கிடைத்திருக்கிற சுதந்தரம். தேவ வசனத்தினாலேயே, தேவ வசனத்
தினால் மாத்திரமே, தேவாவி போதிக்கிறார். வசனத்தில் பொதுப்
படச் சொல்லியிருக்கிற நியாயங்களையும் வாக்குத்தத்தங்களையும் அவர்
நமக்கு நேர்ந்திருக்கிற விசேஷித்த அவசியங்களுக்குப் பொருந்தின
படி எடுத்து விளக்குவார். நாம் நடக்கவேண்டிய பாதை நாம் தினம்
செய்யவேண்டிய கடமைகள் என்கிற பாதையாயிருந்தாலும் சரி,
தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிற விசுவாசம் என்கிற
பாதையாயிருந்தாலும் சரி, அந்தப் பாதைக்குத் திருவசனத்தை நமக்கு
வெளிச்சமாக்க வல்லவர் தேவாவியே, தேவாவிமாத்திரமே. தேவ
னுடைய தாசனாகிய முல்லருக்கு தேவனுடைய சித்தம் அப்பேர்ப்
பட்ட நிச்சயமாயும் தெளிவாயும் வெளிப்படுத்தப்பட்டதற்கு அவரி
டத்தில் எப்பேர்ப்பட்ட பிள்ளைக்கொத்த கபடின்மையும் அறிவேற்
கும் பக்குவமும் இருந்திருக்கவேண்டும்! இதை நாம் கவனித்து மன
தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

முதலாம் அநாதர் சாலையைக் கட்டுவது தேவனுக்குச் சம்மதிதான் என்கிற நிச்சயம் அவருக்கு வந்திருந்ததைப்பற்றி, 1850, மேயீ-ல் அதைத் திறந்தபோது—அந்த வீடு கட்டி முடிப்பதற்கு இருந்த பென்னம்பெரிய சங்கடங்களையும் அந்தச் சங்கடங்கள் நீங்குவதற்கு இயற்கைப்பிரகாரம் எவ்வித ஏதுவும் இல்லாதிருந்ததையும் குறித்துத் தெரிவிக்கிற தறுவாயில் அவர் எழுதுகிறதாவது:—"இருந்த சங்கடங்களை இயற்கைப்பிரகாரம் பார்த்திருப்பேனேயானால் நான் முழுகிப்

பேயிருப்பேன் என்பது நிஜமே; ஆனால் நான் கையிட்ட கருமம் கடைபோக முடிவது எப்படி என்று ஒருமுறையேனும் கேட்கிறதற்கு தேவன் எனக்கு இடம் வைத்ததில்லை. ஏனெனில், இந்தப் பெரிய அநாதர் சாலையை தேவனுக்காகக் கட்டுவதை நான் ஒப்புக்கொண்டு செய்யவேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் எனத் துவக்கமுதலே நான் சர்வ நிச்சயத்துடன் அறிந்திருந்தேன். அதுபோலவே, நினைத்தவீடு நிறைவேறிப் பிள்ளைகள் நிறைந்திருக்கப் பார்த்தால் எப்படியோ அப்படிப்பட்ட நிச்சயம் அந்த வீடு முழுமையும் தடையுற முடிந்துவிடும் என்பதைக்குறித்து எனக்குத் துவக்கமுதலே இருந்தது.”

தேவசித்தத்தை அவர் தெளிவுற அறிந்தவிதம் இரண்டாம் வீட்டை அவர் கட்டின வரலாற்றைச் சொல்லும்போது விசேஷ தெளிவாய் நமக்கு விளங்குகிறது. அந்த வரலாற்றில் வருகிற பாடத்தைக் கூர்ந்து கவனித்துக்கொள்ள வாசிப்போரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்:—

“டிசம்பர், 5, 1850.—நேர்ந்திருக்கிற சந்தர்ப்பங்களைப் பார்த்தால், சாத்தான் என்னை மேற்கொள்ளவொட்டாமல் தேவன் காருண்யத்துடன் என்னைக் காத்தருளவேண்டுமென்று ஜெபிப்பதுமாத்திரமே என்னால் கூடும். தேவனுடைய கிருபையின் மகத்துவத்தால் என் உள்ளம் அவரைப் பார்த்து: ஆண்டவரே. இதுவிஷயத்தில் நான் முன்னேறிச் செல்லுவது உமக்குச் சித்தந்தான் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரிந்தால், நான் தைரியமாய் அப்படியே செய்வேன்; மறுபக்கத்தில், இவைகள் வீணும் மூடத்தனமும் பெருமையுமுள்ள நினைவுகளேதவிர வேறல்ல, இவைகள் உம்மால் உண்டானவைகளல்ல என்பது எனக்கு மயக்கமற விளங்கிவிட்டால், நானும் உமது கிருபையால் அவைகளை வெறுத்து முற்றும் தொலைத்துவிடுவேன் என்று சொல்லுகிறது.

“என் நம்பிக்கையை தேவன்மேல் வைத்திருக்கிறேன்; அவரே எனக்கு ஒத்தாசைபண்ணி எனக்குப் போதிப்பார். அவர் இதற்கு முன் என்னை ஆட்கொண்டு நடத்தின விதத்தைக்கொண்டு நிதானிக்கும்போது, இந்த வகையாய் இன்னும் அதிக விஸ்தாரமாய் உழைப்பதற்கு அவர் என்னை அழைப்பது விபரீதமுமல்ல, ஆச்சரியமுமல்ல.

“அநாத பிள்ளைகளுக்காக நான் செய்கிற வேலையை விஸ்தாரமாக்கவேண்டும் என்கிற நினைவு சமீபகாலத்தில் திரண்ட பணம் அதற்காக வந்ததினால் பிறந்ததல்ல; ஏனெனில், இப்போது சிலகாலத்திற்கு முன்னே சுமார் ஏழு வாரமாய்ப் பணத்திற்காக நான் தேவனிடத்தில் காத்திருக்கும்படி நேர்ந்தது; முன்காலத்தைவிட அக்கா-



லில் வெகு சொற்ப வரும்படிமாத்திரம் வந்துகொண்டிருந்தது; அதாவது, வரவைவிடச் செலவு நான்குமடங்கு இருந்தது. இதற்கு முந்தியே தேவன் பெருந்தொகைகளை எனக்கு அனுப்பியிராதிருந்தால் நாங்கள் மெய்யாகவே கஷ்டப்பட்டிருப்போம்.

“ஆண்டவரே, இதுவிஷயத்தில் உமது சித்தத்தை உமது அடியான் அறிவது எப்படி? அவனுக்கு நீரே தயைகூர்ந்து போதிக்க மாட்டீரா?

“டிசம்பர் 11.—முன் எழுதினதற்குப் பின்னிட்ட ஆறு நாட்களாய் இவ்விஷயத்தைக் குறித்து தேவ சித்தத்தை அறிய நான் ஒரு நாள் தப்பாமல் அவரிடத்தில் காத்திருக்கிறேன். அது பெரும்பாலும் ஒவ்வொரு பகல் முழுமையிலும் என் உள்ளத்தின்மேல் கிடக்கிறது. இரவில் விழிக்கும்போதெல்லாம் அது என் நினைவை விட்டுப் போகிறதில்லை. என்றாலும், இதெல்லாம் எவ்வித மனப்பதஷ்டமும் உண்டாக்காமலே நடந்துகொண்டிருக்கிறது. என் மனம் இதைக்குறித்து எவ்விதத் துடிதுடிப்புமில்லாமல் அமர்ந்திருக்கிறது. இந்த ஊழியத்தை நான் செய்யலாம் என்கிற பிரியம் தேவனுக்கு உண்டு என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியுமானால் என் ஆத்துமா பூரிப்புடனே அதில் தலையிட்டுக்கொள்ளும்; ஏனெனில் அப்போது, கணக்கில்லாத சங்கடங்கள் வருவது நிஜமானாலும் அவை யடங்கலும் நீங்கி, எல்லாம் நன்றாய் முடியும்; அதினால் அவர் நாமம் மகிமைப்படும்.

“ஆயினும், தேவன் எனக்கு இப்போது குறித்திருக்கிற ஊழிய இடத்திலேயே நான் திருப்தியடைந்திருக்க வேண்டும். அவர் எனக்குக் காட்டியிருக்கிற வேலையை அதிகரிப்பிக்கிறதைப் பற்றி நான் யோசிக்கலாகாது என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரிந்தால், அவருடைய கிருபையினால் எவ்வித மனச்சலிப்புமில்லாமல் சந்தோஷமாய் அதற்கு இணங்கிப்போகவும் எனக்குச் சக்தியுண்டு; ஏனெனில், இவ்விஷயத்தில் அவருடைய இஷ்டம்போல் மாத்திரம் செய்ய விரும்புகிற இருதய நிலையை அவர் எனக்கு அருளியிருக்கிறார். மேலும், இருபதுவருஷத்திற்கதிகமாய் என் சுகதுக்கங்கள், உழைப்புகள், இவைகளுக்கு உடந்தைக்காரியாயிருந்திருக்கிற என் நேச மனையாளுக்குங்கூட இக்காரியத்தைக் குறித்து இதுவரையில் நான் ஒன்றும் சொல்லவில்லை; இன்னும் கொஞ்சக்காலம்வரையில் நான் அப்படிச் செய்யவும் நிமித்தியம் இராது; ஏனெனில், புறத்தூண்டுதல்கள் எதினாலும் ஆட்கொள்ளப்படாமல் நான் தேவ ஒத்தாசையினால் லேசாய்க் காக்கப்படுவதற்கு இந்த விஷயத்தைப்பற்றி யாரோடும் சம்பாஷிக்காமல்; சும்மா தேவனிடத்தில்மாத்திரம் காத்திருக்கப் பிரியப்படுகிறேன். இந்தக்

காரியத்தைப்பற்றி நான் கர்த்தரிடத்தில் பண்ணுகிற விண்ணப்பத்தின் உள்ளீடு என்னவெனில், நான் தப்புச் செய்யாமல் தடுத்துத் தம் இஷ்டம் எதுவோ அதைச் செய்ய அவர் என்னைப் போதிக்கவேண்டும் என்பதே.

“டிசம்பர், 26.—மேலே எழுதியிருக்கிறதை பதிவுசெய்து இப்போது பதினைந்து நாளாய்விட்டது. அதற்குப் பின்னிட்ட ஒவ்வொரு நாளும் இந்த விஷயத்தைப்பற்றி ஓயாமல் ஜெபித்து வந்திருக்கிறேன். தெய்வ ஒத்தாசையால் நான் பண்ணிவருகிற ஜெபம் போதுமான அளவு ஊக்கம் பொருந்தினதாயுமிருக்கிறது. இந்த நாட்களிலெல்லாம், நான் உறங்காமல் விழித்திருக்கையில், இந்த விஷயம் கொஞ்சமாவது அதிகமாவது என் கண்ணெதிரே வராமலிருந்த ஒரு நாழிகையாவது இல்லை. ஆயினும், அது வரும்போது என் உள்ளம் சிறிதும் ஆத்திரப்பட்டுத் துடிக்கிறதில்லை. நான் அதைப்பற்றி எவருடனும் சம்பாஷிக்கிறதுமில்லை. இதுவரையில் என் பிரிய மனைவிக்குங்கூட அதைக்குறித்துச் சொல்லவில்லை. அப்படிச் செய்யாமல் தவிர்த்து, இக்காரியத்தை தேவன் ஒருவரிடத்திலேமாத்திரம் இன்னும் சொல்லிவருகிறேன்; ஏனெனில், புறத்திலிருந்து வருகிற எந்த ஆட்கொள்ளும் பலமும் புறத்திலிருந்து எழும்புகிற எந்தத் தூண்டுதலும் எனக்குள்ளே நுழைந்து நான் அவருடைய சித்தத்தைத் தெளிவாய் அறிந்துகொள்ளுவதைத் தடுக்க விடலாகாது என்பது என் நோக்கம். அவர் தம் சித்தத்தை மயக்கமற எனக்குக் காண்பிப்பார் என்பதைக் குறித்து எனக்குள் ஆத்திரமில்லாத தீர்க்க நிச்சயம் இருக்கிறது. தேவனுடைய திருவுளக்கருத்து என்னவென்று அறிய ஜெபிப்பதற்கு இன்று பிற்பகல் அடங்கமில்லாமல் அமர்ந்தநேரம் எனக்குக் கிடைத்தது. இவ்விஷயத்தில் நான் வழிதப்பி மோசம்போகவொட்டாமல் கர்த்தர் என்னைக் காக்கும்படி அவரை மன்றாடிக் கெஞ்சிக்கொண்டிருக்கும்போதே காரியம் என்னவிதமாய் முடியும் என்பதைப்பற்றி எனக்குள் யாதொரு சந்தேகமும் இல்லையென்று நான் சொல்லலாம். இதுவிஷயத்தில் நான் முன்னேறிப் போகலாம் என்கிற துணிவு பிறந்துகொண்டேயிருக்கிறது. ஆயினும், என் ஜீவகாலத்தில் நான் வைத்த அடிகளுள் இது ஒரு அதிமுக்கியம் பொருந்தின அடியாகையால், சர்வ ஜாக்கிரதையும் ஜெபமும் ஆலோசனையுமில்லாமல் நான் இதற்குத் துணியலாகாது என்கிற நினைவு எனக்கு இருக்கிறது. அதைப்பற்றி அவசரப்பட எனக்கு யாதொரு நிமித்தியமுமில்லை. நான் காத்திருக்கவேண்டும் என்கிற திருவுளம் தேவனுக்கு இருந்தால், அவருடைய கிருபையால் வருஷக்கணக்காய்க் காத்திருந்து, இந்தக் காரியத்தைக் குறித்து ஒரு அடிகூட வைக்காமல், எவரு-



னும் அதைப்பற்றி எப்பேச்சும் பேசாமல் இருக்க என்னாலாகும்; ஆனால் மறுபக்கத்தில், தேவன் உத்தரவு கொடுத்துச் செய் என்றால் நாளைக்கே வேலையாரம்பிக்கச் சித்தமாயிருக்கிறேன். இப்பேர்ப்பட்ட மனஅமைதியே, இவ்விஷயத்தில் என் சுய மனோபீஷ்டம் என்பது இல்லாமையே, இதில் என் பரமபிதாவின் இஷ்டப்படி மாத்திரம் நடந்துகொள்ள எனக்கு இருக்கிற அபிலாசையே, எனக்கல்ல அவருக்கே, அதினால் மகிமை வரவேண்டும் என்கிற நாட்டமே,—என் உள்ளம் அடைந்திருக்கிற இந்த நல்ல நிலையே—மாமிசத்திலிருந்து பிறந்த எந்தத் தூண்டுதலும் என் இருதயத்தை ஆட்கொண்டிருக்கிறதில்லை என்று எனக்கு நிச்சயம் உணர்த்துகிறது. இவ்வித நிலையிலேயே தரித்திருக்க என் உள்ளத்திற்கு தேவ ஒத்தாசை கிடைத்தால், தேவனுடைய திருவுளக்கருத்தை நான் பரிபூரணமாய் அறிந்துகொள்வேன் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆயினும், கர்த்தர் என்னைத் தம் கரத்தின் கருவியாய் மேலும் மேலும் எடுத்தாளுகிற கனமும் மகிமையான சிலாக்கியமும் எனக்குக் கிடைக்காதா என்கிற ஏக்கம் இதை எழுதும்போதே எனக்குள் இருக்கிறதென்று நான் ஒளிக்காமல் தெரிவிக்கவேண்டும்.

“300 அநாத பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, ஆயிரம் அநாத பிள்ளைகளுக்கு வேத அறிவு கிடைப்பிக்கவேண்டும் என்பது என் ஆசை. முந்நூறு அகதிப் பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, ஆயிரம் அகதிப் பிள்ளைகளுக்கு வேதத்தை விளக்கிக்காட்ட எனக்கு விருப்பம் இருக்கிறது. 700 அநாத பிள்ளைகளை ஆதரிக்கப் போதுமான இடம் செலவும் என் ஜெபத்துக்கு உத்தரவாக தேவன் எனக்குத் தருவாரேயானால், அதனால் அவர் முற்காலத்தில்போலவே இக்காலத்திலும் மானிடர் ஜெபத்தைக் கேட்டு உத்தரவருளுகிற தேவன்தான் என்பதும் அவர் முன் இருந்ததுபோலவும் இனி எக்காலமும் இருக்கப் போகிறதுபோலவும் இக்காலத்திலும் ஜீவனுள்ள தேவனாகவே இருக்கிறார் என்பதும் உலகப்பிரசித்தியாய்ப் பெருமிதமாய் வெளிப்பட்டுத் தெரியும். அப்படித் தெரியவேண்டும் என்கிற நாட்டம் எனக்கு இருக்கிறது. இந்த நாட்டமே என் மனதில் வேறெந்த நாட்டத்தையும்விட அதிகமாய் ஜொலித்துக்கொண்டிருக்கிறது. இந்த முழுவிஷயத்திலும் தேவனுக்கு மகிமையுண்டாகவேண்டும் என்பதே என் உள்ளத்தின் முக்கிய கருத்து; ஆதலால், நான் கருதியிருக்கிற இந்தக் கருமத்தை முடித்துத் தராமையினாலே அவருக்கு அதிக மகிமையுண்டாகுமென்று அவர் நினைத்தால், நான் அவருடைய கிருபையினாலே இன்னொரு அநாதர் சாலை சமர்ப்பிக்க வேண்டுமென்கிற நினைப்பைக் கட்டோடே விட்டுவிட மனப்பூர்வமாய் இணங்கிப்போகக் கூடியவனாய் இருக்கிறேன். ஆ என் பரம தகப்பனே,

மது பரிசுத்தாவி எனக்குள் உண்டாக்கியிருக்கிற இப்பேர்ப்பட்ட மனநிலையையுடைய உமது பிள்ளையாகிய என்னை வழிவிலகி ஏமாந்து போகவொட்டீர் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். இன்னபடி செய் என்று தேவன் எனக்குக் கட்டளையிடும்வரையில், நான் இந்த விஷயத்தைக்குறித்து நினைத்தப்புராமல் அவருடைய ஒத்தாசையினால் ஜெபத்தில் அவரிடம் இன்னம் காத்திருப்பேன்."

"ஜனுவரி 2, 1851. மேற்கண்ட பிரகாரம் பதிவுசெய்து ஒருவாரமாகிறது. இந்த ஒருவாரத்திற்குள் தினந்தினமும், ஒவ்வொரு தினத்திலும் ஒருமுறைக் கதிகமாயும் இன்னொரு அநாதர் சாலையைக் குறித்து தேவ நடத்துதலைத் தேட எனக்கு இன்னும் தேவன் உதவிசெய்து வந்திருக்கிறார். நான் செய்துவருகிற ஜெபத்தின் சாரம் இன்னும் முன்போலவே இருக்கிறது. அதென்னவென்றால், தேவன் இரக்கமாய் இதுவிஷயத்தில் என்னைத் தப்புச்செய்யாமல் காக்கவேண்டும் என்பதுதான். நான் வேதபுஸ்தகத்தை ஆகம வரிசைப்படி வாசித்துவருகிறதில் கடந்தவாரம் நீதிமொழிகள் ஆகமம் வந்தது. அதில் என் மனதிலிருக்கிற விஷயசம்பந்தமாய்ப் பின்வரும் வாக்கியங்கள் என் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்தன: "உன் சுயபுத்தியின்மேல் சாராமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாய் இருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" (நீதி. 3. 5, 6.). தேவகிருபையால், நான் பொதுவாய் என் வழிகளிலெல்லாம் மாத்திரமல்ல, விசேஷமாய் இந்தக் காரியத்திலும், கர்த்தரை நினைத்துக் கொள்ளுகிறேன். ஆதலால், நான் செய்ய நினைக்கிற இந்த ஊழியத்தை நான் செய்யலாமா வேண்டாமா என்பதைப்பற்றி அவர் என் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் என்கிற ஆறுதலான நிச்சயம் எனக்கு இருக்கிறது. மேலும்: "செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்" (நீதி. 11. 3.). தேவகிருபையால், இந்தச் செய்கருமத்தில் நான் செம்மையானவனாயிருக்கிறேன். என் செம்மையான இலக்கு தேவனுக்கே மகிமை வரவேண்டும் என்பது. ஆதலால், தவறாமல் காக்கப்படுவேனென்று நம்பியிருக்கிறேன். மேலும்: "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது, உன் யோசனைகள் உறுதிப்படும்." என் செய்கைகளைக் கர்த்தருக்குத்தான் ஒப்புவிக்கிறேன்; ஆதலால், என் யோசனைகள் உறுதிப்படும் என்று நம்பியிருக்கிறேன். அநாதர்களுக்காக நான் செய்கிற வேலையில் என்னை இன்னும் அதிகமாய் உபயோகித்துக்கொள்ளுகிற தயவைக் கர்த்தர் எனக்குச் செய்வார். இதைக்குறித்து அமர்ந்து தெளிந்து நிலைவரப்பட்ட நிச்சயத்தை அதிகயதிகமாய் என் உள்ளம் அடைந்து கொள்ளுகிறது. கர்த்தாவே, இதோ உமதடியான் இருக்கிறேன்."



பிற்பாடு, 4-ம், 5-ம் நம்பருள்ள வேறு இரண்டு வீடுகளைக் கட்டுவதற்குத் தீர்மானம்பண்ணினகாலத்தில் அவர் மறுபடியும் பின்வருமாறு எழுதுகிறார்:—

"கடைசிப் பதிவு செய்து இப்பொழுது பன்னிரண்டு நாளாகிறது. அநாதருக்காகச் செய்யப்படுகிற வேலையை விசாலிப்பிக்கிறதைக் குறித்து இன்னும் ஓயாமல் தினந்தினம் கர்த்தரிடத்தில் காத்திருக்க எனக்குப் பலமருளப்பட்டு வந்திருக்கிறது. இந்தக் காலமெல்லாம் என் மனம் சம்பூரணமாய் ஆத்திரமில்லாமல் அமைதியாயும் இருந்திருக்கிறது. தேவனுக்கு மகிமையையும் என் உடன் மானிடருக்கு இகபர நன்மையையும் மாத்திரமே நான் இவ்விஷயத்தில் நாடியிருக்கிறேனாதலால் இப்பேர்ப்பட்ட அமைதி எனக்குள் இருக்கிறது. இந்த முழுவிஷயத்தையும் நினைப்பிலுங்கூட எட்டிப்பாராதே என்று தேவசித்தமிருக்கிறதாக எனக்கு நிச்சயமாய்த் தெரிகிறபக்ஷத்தில், எவ்வித மனவேதனையுமின்றி அப்படியே செய்யக்கூடிய சக்தி எனக்கு தேவகிருபையினால் இருக்கிறது; ஆயினும், தளராமல் நினைத்தபடி செய் என்று தேவசித்த மிருக்கிறபக்ஷத்தில், உடனே வேலையைத் துவக்கிவிடுவேன். இதுவரையில் நான் இவ்விஷயத்தை என்மட்டிலேயே அடக்கி வைத்திருக்கிறேன். என் மனம் இதைக்குறித்து தினந்தினம் ஏறவாயினும் குறையவாயினும் ஆலோசிக்கத் துவக்கினது முதற்கொண்டும், நான் இதைப்பற்றித் தினந்தினம் விண்ணப்பம்பண்ணத் துவக்கினது முதற்கொண்டும், இப்பொழுது ஏழுவாரமாகியும் அது இன்னும் ஒரு மனுஷப் பிராணிக்காவது தெரியாது. பிறர் இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிற யோசனையினால் ஆட்கொள்ளப்படாமல் அமைதியாய் தேவனிடத்தில் காத்திருக்கக்கூடும்படி நான் இதை என் நேச மனைவிக்குங்கூடச் சொல்லவில்லை. இவ்விஷயத்தில் தவறாமலும் பிசாசினால் எத்தப்படாமலும் என்னைக் காத்தருளவேண்டும் என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதற்கு இன்று பிற்பகலை ஜெபத்திற்காகக் குறித்தேன். மேலும், இன்னொரு அநாதர் வீடுகட்டல் ஆகாது என்பதற்குள்ள நியாயங்களையும் ஆகும் என்பதற்குள்ள நியாயங்களையும் என் மனதின் முன்னே வந்துநிற்கும்படி [illegible] அவைகள் வேறாயறுத்துத் தெளிவாய் இருப்பதினாலேயே அவைகளைப் பதிவுசெய்கிறேன்.

* * * * * *

"மேற்கூறிய ஒன்பது நியாயங்களும் முக்கியமான நியாயங்களே என்பது என் மனதிற்குத் தெரிந்தும் இன்னொரு நியாயம் அவைகளுடன் கூடியிராவிட்டால் எனக்குத் துணிவு பிறக்காது. அது இது:— இவ்விஷயத்தைச் சில மாதங்களாய்த் தீரத் தெளிய ஆலோசித்து, அதனோடு சம்பந்தப்பட்ட சமஸ்த காரியங்களையும், அதற்குள்ள சகல

சங்கடங்களையும் ஒன்றும்விடாமல் பார்வையிட்டு, அதிக ஜெபத்துடனே இந்தச் செய்கரும விசாரிப்பைத் தொடங்கத்தான் வேண்டும் என்கிற தீர்மானம் உண்டானபின் என் மனதில் கலக்கமேயில்லாமல் சமாதானம் இருக்கிறது. தவறுன்றும் எந்துன்றும் அகப்படாமல் காத்தருள வேண்டுமென்று தன் பரம தகப்பனைப் பலகாலும் வேண்டிக்கொண்ட அவருடைய பிள்ளை மனதில் இந்தத் தீர்மானத்தைப் பற்றிச் சிறிதும் ஐயமில்லாமல் சமாதானம் குடிகொண்டிருக்கிறது. இதனால், அப்படிப் பல [illegible]களையும் வாரங்களையும் ஜெபித்தபின் செய்யப்பட்ட அந்தத் தீர்மானம் பரிசுத்த ஆவியானவரால் உண்டான தீர்மானமேதவிர வேறல்ல என்கிற நிச்சயம் அவனுக்கு இருக்கிறது. ஆதலால், எடுத்த காரியம் சிதறாமல் முடியும் என்கிற உறுதியான நம்பிக்கையுடன் அவன் வேலையைத் தொடங்கிவிட மனதாயிருக்கிறான். ஏனெனில், அவன் தேவனை நம்பியிருக்கிறான். அவனுக்கு வரும் சங்கடங்கள் அநேகமானவைகளும் பெரியவைகளுமாயிருக்கலாம்; அவன் ஜெபத்திற்குப் பூரண உத்தரவு கிடைக்கும்வரையில் ஆயிரம் பதினாயிரங்களான விண்ணப்பங்கள் தேவனிடத்தில் போக நேரும்; விசுவாசத்தையும் பொறுமையையும் அவன் வெகுவாய்க் கையாட வேண்டியதாகும்; ஆயினும், கடைசியாய், அவர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிற அவருடைய ஊழியன் வெட்கப்படுத்தப்படவில்லை என்று எல்லாரும் பார்ப்பார்கள்."

## ஜெபமும் தேவனுடைய மகிமையும்.

நமது ஜெபம் பலிக்காமைக்குக் காரணம் நாம் கேட்ட காரியம் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்காததினாலேயென்று வழக்கமாய் நினைக்கிறோம். இந்த நினைப்பு தப்பு, நம் ஜெபம் தவறுகிறதற்குக் காரணம் நம்மில் இருக்கிறது. எப்படியெனில், நமதுள்ளம் இருக்கவேண்டிய சரியான நிலையில் இருக்கிறதில்லை. அதாவது, நாம் சரியான ஆவியுள்ளவர்களாய்க் கேட்கிறதில்லை. இப்படி வேதம் நம்மை எச்சரிக்கிறது என்று நான் ஒருவிசைக் கதிகமாய் எடுத்துக் [illegible] கேட்டவிஷயம் தேவசித்தத்திற்கு முழுமையும் பொருந்தியிருக்கி[illegible]; ஆனால் கேட்கிற முறை, கேட்கிறவனுடைய ஆவி, அதற்குப் பொருந்தியிருக்காது; அப்போது நம் ஜெபம் பலிக்காது. சகல பாவத்திற்கும் ஆணிவேர் நான் என்னும் செருக்கு, தன்னய நாட்டம். ஆவிக்குரிய நமது விருப்பங்களிலும்கூடக் குறுக்கிட்டு நம் ஜெபம் கேட்கப்படாமல் தடுக்கிற தடைகளுள் அதை யொத்தது வேறில்லை: அது இருக்குமளவும் நமது சுய பிரியமாவது, சுய மகிமையாவது கைக்கூடுவதற்கு



ஜெபிப்போம். ஜெபம் வல்லமையுள்ளதாகிப் பலிக்கவேண்டுமானால், அது கேட்பதை தேவனுடைய மகிமைக்காகக் கேட்கவேண்டும். ஒருவன் தேவனுடைய மகிமைக்காகப் பிழைத்தால்மாத்திரமே தேவனுடைய மகிமைக்காகக் கேட்கக் கூடியவனாயிருப்பான்.

ஒருவன் தேவனுக்கு மகிமை வருவிக்கிறதையே தன் முக்கியமான ஒரே நோக்கமாகக்கொண்டு ஜெப ஜீவியம் செய்ய ஆரம்பித்தால், [illegible] தவறாமல் இடையறாத் தொடர்ச்சியாய் ஆட்கொண்டு நடத்துவார். இதை ரூபிக்கிற பல பெயர்போன சரித்திரங்கள் உண்டு. அவற்றுள் ஜார்ஜ் முல்லருடையது ஒன்று. அவர் சொல்வதைச் செம்மையாய்ச் சிந்தித்து அவர் மூலியத்தில் தேவன் நமக்கு உணர்த்த விரும்புகிற பாடத்தைப் படித்துக்கொள்வோமாக:—

"தேவனுடைய பிள்ளைகளுக்கு நம் காலத்தில் அதிமுக்கியமாய்த் தேவையாயிருப்பவற்றுள் ஒன்று அவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பலமுள்ளதாக்கிக்கொள்ளவேண்டும் என்பது. இது நான் அடிக்கடி பார்த்த பல திருஷ்டாந்தங்களால் எனக்குத் தெளிவாய் ரூபிக்கப்பட்டது.

"நம்முடைய தேவனும் பிதாவுமானவர் முன் எப்படி வாக்கை உண்மையாய் நிறைவேற்றுகிற தேவனாயிருந்தாரோ, அப்படி இப்போதும் வாக்குறுதியுள்ளவராகவே இருக்கிறார்; யார் அவர் சொல்லில் நம்பிக்கை வைத்து அவர்மேல் சார்ந்துகொள்ளுகிறார்களோ அவர்களெல்லாருக்கும் அவர் தம்மை எந்நாளிலும்போல இந்நாளிலும் ஜீவனுள்ள தேவனாக நுபிக்க மனமுடையவராயிருக்கிறார்; இதை என் சகோதரர்களுக்குக் கண்ணுக்கு மெய்யாய்த் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுகிற ஏதேனும் ஒன்று என் கைக்கு அகப்படாதா என்கிற போரவல் என்னில் மூண்டெரிந்தது.

"அவருடைய வாக்கே உறுதி என்று அவரை நம்பியிருக்கிறவல்லாருக்கும் அவரவர் வேண்டும்பிரகாரம் ஒத்தாசை செய்ய தேவனுக்கு மனமும் வல்லமையும் உண்டு என்பதைத் திருவசனத்திலிருந்து திருஷ்டாந்தங் காட்டுவதினால் மாத்திரமல்ல, அவர் நம் காலத்திலும் அப்போர்ப்பட்டவராகவே இருக்கிறார் என்று ரூபிக்கிற ரூபகாரங்களைக்கொண்டு காண்பிக்கிறதினாலும் அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்துகிற கருவியாய் நானிருக்கலாகாதா என்னும் அவா என் ஆவியில் பற்றி எரிந்தது. திருவசனம் ஒன்றே இதற்குப் போதுமானது என்று எனக்குத் தெரியும். தேவகிருபையால் அது ஒன்றே எனக்குப் போதுமானதாயிருந்தது. ஆயினும், என் சகோதரருக்கு இதுவிஷயத்தில் நான் கைகொடுத்து உதவவேண்டும் என்றே என் மனதில் மாறாமல் இருந்தது.

"ஆகையால் தேவன் எனக்கு இரக்கம் பாராட்டியிருக்கிற ஒரு விஷயத்தில் கிறிஸ்துவின் சபைக்கு ஊழியஞ்செய்ய நான் கடமைப் பட்டவன் என்று நிர்ணயம் பண்ணிக்கொண்டேன்; அந்தவிஷய மென்னவெனில், தேவன் சொன்ன வாக்கைப் பிடித்துக்கொண்டு அவர் அதை நிச்சயமாய் நிறைவேற்றுவார் என்று நம்பியிருக்கிற மனவு றுதி. அநாதர்களுக்காக நான் செய்துவருகிற வேலைக்கு என்னை முத லில் தூண்டினதும் [illegible] யிருக்கிறதுமான நோக்கம் என்னவெனில்: என் அநுசரணையிலிருக்கிற அநாத பிள்ளை களுக்கு அவசியமான யாவும், எந்த மனுஷனையும் கேட்டு வாங்கப்படா மல், ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும்மாத்திரமே தரப்படுவதைக் கொண்டு தேவன் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்பதுதான்; இதினால், தேவன் இந்நாளிலும்கூட சொன்னசொல் தவறாதவரும் ஜெபத்தைக் கேட்கிறவருமாயிருக்கிறார் என்று யாவரும் கண்டுகொள் ளலாம்.

"இந்த அநாதர் வீட்டை ஏற்படுத்தினது என் சுயவிருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கா என்பதைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி இப்போது சில நாட்களாய் நான் அதைப்பற்றி மறுபடியும் வெகுவாய் ஜெபித்து என் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். ஏனெ னில், நான் விரும்புவது தேவனுக்கே மகிமை வரவேண்டும் என்ப தாகையால், நான் செய்கிற வேலை தேவனால் உண்டானதல்ல என்று என் உடன் சகோதாருள் ஒருவன் எடுத்துக் காட்டினாலும் சந்தோ ஷப்படுவேன்.

"1835–ல் அநாத பிள்ளைகளுக்காக நான் வேலையாரம்பித்தபோது எனக்கிருந்த முக்கிய நோக்கம் தேவனுக்கே மகிமையுண்டாகவேண் டும் என்பது. எப்படி என்று கேட்டால், ஜெபம், விசுவாசம் என்ற கருவிகளைக்கொண்டு எப்பேர்ப்பட்ட பெரிய வேலைகளைச் செய்யலாம் என்பதைச் செய்துகாட்டி ரூபிப்பதினால். நாலாயிரம் வருஷங்க ளுக்குமுன் தேவன் எப்படி ஜீவனுள்ள தேவனாயிருந்தாரோ அப்படி இன்னும் இப்போதும் அவர் ஜீவனுள்ள தேவனாகவே இருக்கிறார் என்பதை [illegible] கருதியிருக்கிற இந்த வேலையைக்கொண்டு ரூபித்துக் காட்டினால், எங்குமுள்ள திருச்சபை[illegible] அதனால் நன்மையுண்டா வதுமல்லாமல் நிர்விசாரத்தில் அமுழ்ந்தியிருக்கிற உலகத்திற்கும் தெய்வ காரியங்கள் வெறுங் கனவல்ல வாஸ்தவமே என்பதும் தெரியும் என்று நினைத்தேன். இந்த என் நோக்கம் பரிபூரணமாய்ப் பலித்திருக்கிறது. நான் நினைத்தபடிக்கே இந்த வேலையைப் பார்த்து ஏராளமான பாவிகள் குணப்பட்டிருக்கிறார்கள், உலகத்தின் எப்பாகங்களிலும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகளில் மிகப் பலர் நன்மையடைந்திருக்கிறார்கள். இந்த வேலை பெரிதாய் வளரவளர, நான் எந்தவிதமாய் அது ஆசீ



வதிக்கப்படவேண்டுமென்று விரும்பினேனோ அந்தவிதமாகவே அது மேலும் மேலும் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறது; ஏனெனில், இலட் சாதி லட்சம்பேர் அதைக் கவனிக்கும்படியாயிற்று. அதைப் பார்ப்ப தற்கென்று ஜனங்கள் பதினாயிரக்கணக்காய் வந்து போயிருக்கிறார் கள். இதையெல்லாம் காணும்போது, கர்த்தருடைய நாமத்திற்கு இன்னும் அதிக மகிமை யுண்டாகும்பொருட்டு நான் இந்தத் துறை யிலேயே இன்னும் அதிகமதிகமாய் உழைக்க எனக்கு ஆசை மூளுகி றது. எக்காலத்திலும், [illegible] ஒருவரையே பார்க்க வேண்டும், அவரையே மகிமைப்படுத்தவேண்டும், அவரையே கண்டு அதிசயிக்கவேண்டும், அவரையே நம்பவேண்டும், அவ ரையே சார்ந்துகொள்ளவேண்டும்—இதுவே இந்த ஊழியத்தில் நான் தேடும் தேட்டம்; இந்த வேலையை விஸ்தரிப்பிக்க நினைப் பதில் விசேஷமாய் இதுவே என் மனதில் இருக்கிற எண்ணம். ஓரே ஏழை மனிதன் தேவனை நம்பி ஜெபத்தினால் எவ்வளவு நன்மை செய்யக்கூடும் என்று பார்த்து தேவனுடைய வேறு பிள்ளை களும் அவரை நம்பி அவரிட்ட வேலையைச் செய்யவும், அவரு டையவர்கள் எந்த நிலைமையிலே, எந்தச் சந்தர்ப்பங்களுக்குள்ளே இருந்தாலும் அவரையே அதிகமதிகமாய் நம்பியிருக்கவும் தூண்டுவ தற்கே நான் இந்த வேலையை இன்னும் விஸ்தரிப்பிக்கத் துணிந்தேன்."

## ஜெபமும் தேவன்மேல் வைக்கிற நம்பிக்கையும்.

முல்லருடைய சரித்திரத்திலிருந்து வேறு பல விஷயங்களை எடுத்துக்காட்ட எனக்குப் பிரியந்தானாயினும் இன்னும் ஒரேவிஷ யத்தை மாத்திரம் சொன்னால் போதுமென் றெண்ணுகிறேன். அதென்னவெனில், "விடாமுயற்சியுள்ள ஜெபம் செய்வதற்கு வழி தேவன் கொடுத்திருக்கிற வாக்கை அசையாமல் உறுதியாய்ப் பிடித் துக்கொள்வதே என்கிற பாடந்தான். திருவசனத்திலே தேவாவி போதிக்கிறதற்குக் கீழ்ப்படிய இசைந்து, தேவன் கொடுத்திருக்கிற வாக்கைப் பிடித்துக்கொண்டு, பிதா நம் ஜெபத்தை அங்கீகரித்துக் கொண்டார் என்கிற நம்பிக்கையும் அடைந்தபிறகு, நாம் கேட் டது வரத் தாமதிக்கிறதையும், அதற்குப் பிரதிகூலமான தோற் றங்கள் இருக்கிறதையாவது கண்டு விசுவாசத்தில் நாம் தளரலாகாது.

"நான் தினம் பண்ணின ஜெபங்களுக்குப் பூரண உத்தரவு கிடைக் காததுபோல் இருந்தது; ஆயினும், ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக் கக் கர்த்தர் எனக்கு மிகத் தைரியம் கொடுத்திருந்தார். எனக்கு அப் போது கிடைத்திருந்ததிலும் மிகக் குறைந்த உத்தரவு கிடைத்திருந் தால் நானென்ன செய்திருக்கவேண்டும்? அப்போதுங்கூட, நான்

வேத ஆதாரத்தை யொட்டி, மிகுந்த ஜெபத்துடனும் சுய உள்ளச் சோதனையுடனும் இது போகவேண்டிய வழிதான் என்று நிச்சயமடைந்திருந்தபடியினாலே, இதுவிஷயத்தைப்பற்றி விசுவாசத்தையும் பொறுமையையும் அநுசரித்துக்கொண்டு, மனஞ்சலிக்காமல் போன பாட்டையிலே போய்க்கொண்டுதான் இருக்கவேண்டும். இப்படியே, தேவனுடைய பிள்ளைகளெல்லாரும், அவர்கள் ஜெபம் பண்ணி தேவனைக் கேட்டது அவருடைய சித்தத்திற்குப் பொருந்தினதுதான் என்கிற நி[illegible]க்கு, கேட்ட நன்மை கிடைக்குமட்டும் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் ஜெபித்துக்கொண்டே யிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, நான் தானே இப்போது பத்தரை வருஷமாய் ஒருநாளாவது விடாமல் சில நன்மைகளைத் தரும்படி தினம் ஜெபம்பண்ணி தேவனிடத்தில் காத்துக்கொண்டிருக்கிறேன். சில பேர்வழிகளை மனந்திரும்பிக் குணப்படுத்தும்படி நான் தேவனைக் கேட்டதற்குப் பூரண உத்தரவு இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், இதற்கிடையில் நான் பண்ணின அநேகமாயிரம் வேறு ஜெபங்களுக்கு உத்தரவு கிடைத்திருக்கிறது. வேறு சிலபேர்களுடைய மனந்திரும்புதலுக்காக சுமார் பத்து வருஷமும், சிலருக்காக ஆறு, ஏழு வருஷமும், சிலருக்காக இரண்டு, மூன்று வருஷமும் இடையறாமல் தினம் ஜெபித்தும் அவர்களுடைய மனந்திரும்புதலைக் குறித்து இதுவரையில் எனக்கு உத்தரவு அகப்படாதிருக்கிறது. ஆயினும், இதற்கிடையில், நான் பண்ணின பல்லாயிரம் வேறு ஜெபங்களுக்கு உத்தரவு அகப்பட்டதுமன்றி, நான் விண்ணப்பம்பண்ணிக் கேட்ட வேறு ஆத்துமாக்கள் குணப்பட்டு மிருக்கிறார்கள். இந்தச் சங்கதியை நான் அவ்வளவு முக்கியமாய் ஸ்திரப்படுத்திப் பேசுகிறதற்குக் காரணம் என்னவென்றால்: நான் தேவனிடத்தில் ஒன்றைக் கேட்கிறதிலே தாமதமிருந்தாலும் அவரதைக் கொடுக்கிறதிலே தாமதமே யிருக்கிறதில்லை யென்றும், எதைக் குறித்தாகிலும் நான் பண்ணுகிற விண்ணப்பத்திற்கு உத்தரவு நிச்சயமாய் உடனே கிடைத்துவிடுகிறது என்றும் தப்பாய் நினைத்துக்கொள்ளுகிறவர்களுக்குப் பிரயோஜனம் வரும்பொருட்டு என்கிறேன். தேவனுடைய மனதிற்குப் பொருந்தியிருக்கிற விண்ணப்பங்களுக்குமாத்திரம் உத்தரவு கிடைக்[illegible]மென்று ஒருவன் நம்பியிருக்கலாம். அப்போதுங்கூட, நான் மேலே குறித்துக்காட்டின விஷயங்களில் என் விசுவாசத்தையும் பொறுமையையும் விடாமல் அநுசரித்துக்கொண்டிருக்க தேவன் என்னை விட்டதுபோலப் பிறரையும் பலவருஷங்களாய் அப்படிச் செய்துகொண்டிருக்க விடலாம். அப்படியிருந்தும் நான் பண்ணுகிற ஜெபத்தைத் தளரவிடாமல் தினம் பண்ணிக்கொண்டுதான் வருகிறேன். விசுவாசத்தையும்



பொறுமையையும் விடாமலிருக்கிறேனா என்று தேவன் இப்போது பத்தொன்பது வருஷமாய் எனக்கு இவ்விதமாய் அட்டிசெய்தும், உத்தரவு எப்படியும் அகப்படுமென்றே காத்திருக்கிறேன். அவர் நிச்சயமாகவே உத்தரவு கொடுப்பார் என்பது எனக்குத் தெரியுமாகையால் அந்த நிச்சயத்திற்காக அவரைப் பலமுறை ஸ்தோத்திரித்துமிருக்கிறேன். கிறிஸ்தவ நேசர்களே, நீங்கள் கேட்கிறவைகளை தேவனுடைய மகிமைக்காகவே கேட்கிறீர்கள் என்[illegible]நிச்சயம் உங்களுக்கு இருந்தால், சோர்ந்துபோகாமல் புது ஊக்கத்துடன் ஜெபித்துக்கொண்டேயிருக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

"ஆனால், எல்லாத்திலும் அதிகமாய்க் கவனிக்கத்தக்க விஷயம் இது. எதுவெனில், புது அநாதர் சாலைகளைக் கட்டவும் விருத்தி செய்யவும் என் கையில் கிடைத்திருந்ததெல்லாம், இப்போது என் ஞாபகத்திற் கெட்டினமட்டில், ஸ்கொத்லாந்திலிருந்து வந்த 6 பவுன் 6 ஷிலிங்கு 6 பென்சுதான். அநாத பிள்ளைகளுக்காக நான் செய்து வருகிற வேலையை இவ்வாறு விஸ்தரிப்பிக்க வேண்டும்பொருளைத் தரும்படி நான் கர்த்தரை நோக்கித் தினந்தினமும், தினந்தோறும் பல நாழிகையளவும், ஆறு வருஷமும் எட்டு மாதமுமாய்க் கேட்டிருக்கிறேன். இந்தக் கைங்கரியத்திற்குத் தேவையானது எவ்வளவென்றால், 1861-ஆம் வசந்தகாலத்தில் போட்ட உத்தேச மதிப்பின்படி ஐம்பதினாயிரம் சவரன்; பின்னிட்டு அதற்கு ஏறத்தாழ ஐம்பத்தெண்ணாயிரம் சவரன் செல்லுமென்று கணக்கு ஏற்பட்டது: இந்த முழுத்தொகையும் இப்போது எனக்குக் கிடைத்துவிட்டது. நான் செய்துவருகிற வேலையை இப்படி விசாலிப்பிக்கவேண்டுமென்கிற எண்ணத்தை என் மனதில் போட்டதற்காகவும் அதற்கு வேண்டிய தைரியமும் விசுவாசமும் எனக்குக் கொடுத்ததற்காகவும், விசேஷமாய் நாளுக்குநாள் தளராமல் என் விசுவாசத்தைக் காத்ததற்காகவும் நான் கர்த்தரைத் துதித்து மகிமைப்படுத்துகிறேன். இந்தப் பெருந்தொகை முழுவதும் அகப்படுவதைப்பற்றி, அதின் கடைசிப்பாகம் என் கைக்கு வந்தபொழுது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவே நிச்சயம் அதற்காக ஒரு சிறு நன்கொடையும் வராதிருந்தகாலத்திலும் எனக்கு இருந்தது. மிகுந்த பொறுமை, சுய உள்ளச்சோதனை, இவற்றின் வழியாய் தேவனுடைய திருவுளக் கருத்தை அறிந்துகொண்டபின், இந்த இரண்டு வீடுகளும் அவற்றின் நிறைந்த நூற்றுக்கணக்கான அநாத பிள்ளைகளும் என் கண்ணெதிரே இருந்தால் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் கர்த்தர் வாய்க்கப்பண்ணுவார் என்பதைப்பற்றி எனக்குத் துவக்கமுதலே இருந்தது. இந்த விஷயசம்பந்தமாய், விசுவாசத்தில் இளமையுடையவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும் பொருட்டு, சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்: 1. கர்த்தரு

டைய ஊழியமானாலும் சரி, உங்கள் ஜீவனார்த்த காரியமானாலும் சரி, உங்கள் குடும்ப விஷயமானாலும் சரி, எதிலும் புது அடி எடுத்து வைக்கிறதில் தீவிரப்படாமல் நிதானித்துச் செய்யுங்கள்: ஒவ்வொன்றையும் நன்றாய்ச் சீர்தூக்கிப் பாருங்கள்; திருவசனம், தேவனுக்குரிய பயபக்தி, என்னும் வெளிச்சத்தில் வைத்து எல்லாவற்றையும் நிறுத்துக்கொள்ளுங்கள். 2. நீங்கள் செய்ய விரும்புகிற பிரயத்தனங்களைக் குறித்து, தேவனுடைய மனதை அறியும்படிக்கு உங்கள் சுயசித்தம் என்பதை அடியோடே தவிர்த்துவைக்கவேண்டும்; அப்படிச் செய்தால்தான், தேவன் தமது சித்தத்தை உங்களுக்குத் தெரிவிக்கக் கிருபைகூரும்போது; தேவனே, உமது சித்தத்தையே செய்ய மனதாயிருக்கிறோம் என்று அவரைப் பார்த்து நீங்கள் மனதில் கபடில்லாமல் சொல்லலாம். 3. தேவனுடைய சித்தம் இன்னவிஷயத்தில் இதுவே என்று உங்களுக்குத் தெரிந்த பிறகு, அவருடைய சகாயத்தைத் தேடிக்கொள்ளுங்கள்; ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும், பொறுமையுடனும், விசுவாசத்துடனும், கிடைக்கும் என்கிற நிச்சயத்துடனும், நீங்கள் தெய்வ சகாயத்தைத் தேடவேண்டும்; அப்போது நிச்சயமாகவே அவருக்கேற்ற சமயத்திலும் விதத்திலும் அது உங்களுக்குக் கிடைக்கும்.

"பணக்குறைவால் மாத்திரமே எங்களுக்குச் சங்கடம் விளையக்கூடும் என்று நினைப்பது தப்பு; நூற்றுக்கணக்கான வேறு குறைவுகளும் சங்கடங்களும் எங்களுக்கு வருகின்றன. ஏதாவது சங்கடமும் குறைவுமில்லாத நாள் எங்களுக்கில்லை; அடிக்கடி ஒரேநாளில் பல சங்கடங்களும், பல குறைவுகளும் உண்டாகிறதுமல்லாமல் அவற்றையெல்லாம் அந்தந்த நாளிலேயே நிவிர்த்திக்க வேண்டியதாயுமிருக்கிறது. அவற்றையெல்லாம் ஜெபத்தின் மூலமாயும் விசுவாசத்தின் மூலமாயுமே நிவிர்த்திசெய்து கொள்ளுகிறோம். இவைதான் எங்களுக்கு எல்லாச் சங்கடமும் நீக்குகிற மருந்து; அதனால் நாங்கள் ஒருநாளாவது வெட்கப்பட்டுப் போனதில்லை. தேவனை நோக்கி கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் பொறுமையும் விடாமுயற்சியும் நம்பிக்கையும் நிறைந்த ஜெபம், ஏற்றவேளையிலோ சற்றுத் தாமதித்தாவது, எங்களுக்கு வேண்டிய நன்மையை எங்களுக்குக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. வாஸ்தவமாய் ஒரு நன்மையைக் கருதி தேவனுடைய மகிமைக்காக நான் ஒரு காரியத்தைக் கேட்கும்போதெல்லாம், தேவகிருபையால், அது கிடைக்கும் என்பதைப்பற்றி நானொருபோதும் அவநம்பிக்கைப் படுகிறதேயில்லை."

1 E.] S. P. C. K. Press, Vepery, Madras—1905. [2 M.

(267)